# இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 8.] சென்னப்பட்டணம் 1915வரு ஜனவரி மீ [நே. 1

## அடக்கம்.

பக்கம்.

பாகம் 1.

உருவப்படம்:—ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் ... ....
1. இந்தியசட்ட கெஜெட் என்கிற "நாம்" ... ... ... ....
2. ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் ... ... ... ...
3. சப் எடிட்டோரியல்கள்:— .. ... ... .... ... ...
   (a) ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டுகள் ... .... ... ...
   (b) ஒரு முக்கியமான தீர்ப்பு ... ... ... ... ...
   (c) காலேக்குடி .... ... ... .... ... ....
   (d) மலேயாளத்தில் குற்றங்கள் .... ... ... ... ...
   (e) கொச்சி .... ... .... .... ... ...
4. நாளது மீ சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு தீர்ப்புகள் ... .... ...
5. நடவடிக்கையிலிருக்கும் கேஸ்கள் ... ... ... .... ...
6. முக்கியமான தீர்ப்புகள் ... ... ... .... ... ....
7. சட்டங்களும் வியாக்கியானங்களும்—நரச்சோரம் ... ... ....
8. சட்ட சம்பந்தமான வேடிக்கை ... .... ... .... ...
9. நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம் .... ... .... ... ...

பாகம் 2.

10. இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் .... ... ... .... ... ...

## சந்தா விபரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருஷ சந்தா .... .... | ரூபா | 5 | 0 | 0 | மூன்று மாதத்திற்கு .... ரூபா |
| ஆறுமாதத்திய சந்தா .... | ,, | 3 | 0 | 0 | (தபால் சார்ஜ பிரத்தியேகம்.) |

சிங்கப்பூர் பினங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

## நோய்க்கிடங்கொடேல்.

சூரியனைக்கண்ட பனிபோல் சகலவித
நோய்களையும் பறக்கடிக்கும்
சஞ்சீவியான "பெயினலீன்"
பாம் தைலம்.

இடுப்புவலி, தலைநோய்; கழுத்திழுப்பு, தொண்டைநோய், மார்பு நோய், மார்புசளி, சுளுக்கு, பல்நோய், காதுநோய், முகஜன்னி, கை கால் பிடிப்பு, திமிர்வாய்வு, கப இருமல், ஜலதோஷம், பிடரிவலி, பார்ஸ்வாய்வு முதலிய நோய்களினால் உபத்திரவப்படுகிறவர்களுக்கு குணத்தையளிக்கும், மருந்து "பெயினலீன்" (தீ பெஸ்ட் பாம்) எனப் பெயர் பூண்ட தைலமே. இந்தப் "பெயினலீன்" தான் கொண்ட பெயருக்குத் தக்கபடி நோய்களை அதிசீக்கிரத்தில் நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து வேரோடு நிர்மூலமாக்குகிறது. இதை ஒரு முறை உபயோகித்தால் அதன் குணம் தெரியும்.

விலை புட்டி 1-க்கு பெரியது அணா 10.
சிறியது அணா 6. வி. பி. சார்ஜ் 4.

மாதிரி வேண்டுமானால் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

### வாந்திபேதி நிவாரணி.

இது வாந்திபேதிக்கும், அஜீர்ணபேதிக்கும் எடுத்த திராவகம் இதன் பரிமளமே பேதியைக் கிட்டணுகாதுகாக்கும் இதை ஒவ்வொருவரும் ஆபத்துக்குதவும் சஞ்சீவியாகக் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

### மூலிகைகளால் செய்த பற்பொடி.

இதை உபயோகிப்பதால் பல்லிலிருந்து ரத்தம் விழாது பற்கள் உறுதியாகும், பற்களைச் சுத்தப்படுத்தி முத்துபோல் பளபளப்பாக்கச்செய்யும் வாய்நாற்றம் நீங்கும், பல்வலிபோகும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 4.

### சுர சம்ஹாரி.

[illegible] முறைசுரம், தொந்தசுரம், விடாசுரம், [illegible]தலான எல்லாவிதசுரங்களுக்கும் சஞ்சீவி.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 8.

### படை சம்ஹாரி.

[illegible]கடி அல்லது படை என்று சொல்லப்ப[illegible]ய நோய்க்கு மருந்து நெடுநாளான படை[illegible]ாலும் போக்கடிக்கும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 4.

### வீரியவிர்த்தி பூஷணம்.

[illegible] நரம்பைப் பற்றினவும் சிரசைப்பற்றினவு[illegible]ர்ச்சிக்கு ஒப்புயர்வற்ற மருந்து இது எல் [illegible]பலஹீனர்களுக்கும், புஷ்டிக்கும் எடுத்த மருந்து. புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இன்னும் ஏதாகிலும் மருந்து தேவையிருந்தால் எங்களுக்கு எழுதி அதைப்பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

**M. C. AGENCY,**
**72, Nattu Pillayar Coil St.,**
**Sowcarpet Post Madras.**

---

கைவிடாதீர்கள்! ஏமாறாதீர்கள்!!

## சர்வ தேள் விஷ சஞ்சீவி.

குணமில்லாவிட்டால் ரூ. 100 இனாம்.



கதறிவந்தவன் களிப்புடன் செல்வான். விஷந் தீண்டினவன் நிமிஷத்திற் [illegible]ணமடைவான். நண்பர்[illegible]ளே! ஒவ்வொரு வீட்டி[illegible]லும் தேளி[illegible] உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படு[illegible]னை வரும் கண்டு விசனமுறுவதைப்பற்றி [illegible] பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்[illegible] இது அனேக ஐரோப்பிய டாக்டர்களாலும் [illegible] பண்டிதர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றது. எம[illegible] கண்ட வங்கர்மாற்குள்ள சர்வ தேள் விஷ சஞ்சீவியை தேள் கொட்டின விடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்துக்குள் குணமடையச் செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான்பாம்பு, நண்டு துறக்கா முதலிய எவ்வித விஷ செந்துக்கள் தீண்டின போதிலும் டைரெக்ஷனில் சொன்னபிரகாரம் உபயோகித்தால் குணமடையும். அப்படி குணமில்லாவிட்டால் பணம் வாபஸ். இவ்விஷ சஞ்சீவியை கைப்பற்றுங்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஒரு மனிதனை இரவில் 12-மணிக்கு தேள் கொட்டிவிட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட்டு அனேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா, அதற்காக இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை பாக்கெட் 1-க்கு 0—8—0,
டஜன் 1-க்கு ரூ. 5—0—0.

எம். ஆர். சாமி.
34, நமமாள்வார் தெரு,
மதராஸ்.

---

புதியதாய் கண்டுபிடித்த ரோமசங்கரிணி யென்னும்

## தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்த பாகத்திலும் இருக்கும் கூ[illegible] தலை இது பூசுவதனால் தேகத்தின் சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை யெடுத்துவிடும் ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான இடத்தைக் காப்பாற்றும் படியான சோதி இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.




வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 3-கேக் உள்ள பெட்டி 1-க்கு | 0 | 14 | 0 |
| ஓரேதடவையில் 2-பெட்டிக்கு | 1 | 10 | 0 |
| போஸ்டேஜ் பிரத்தியேகம் | 0 | 4 | 0 |

வி. எஸ். பாணி,
நெ. 3, இருளப்பன் தெரு, மதரா[illegible]

Z2m N06
N06.8
161193



THE HONORABLE MR. JUSTICE T. V. SESHAGIRI IYER, HIGH COURT, MADRAS.
ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள், சென்னை ஐகோர்ட் ஜட்ஜி.

# The Indian Law Gazette.

PART 1.

## இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

பாகம் 1.

வால்யம் 8.] சென்னப்பட்டணம், 1915ளு ஜனவரிமீ [நே. 1.

### OURSELVES.

### இந்திய சட்ட கெஜெட் என்கிற "நாம்.

—:o:—

நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் பிரஸ்தாப சஞ்சிகை புதிய இங்கிலீஷ் வருடத்தின் முதல் சஞ்சிகையானபடியால் நம்முடைய கெஜெட்டின் அபிவிருத்தி சம்பந்தமாக இவ்விடத்தில் இரண்டொரு வார்த்தைகள் எடுத்துச் சொல்லுவது அவசியமென்று எண்ணுகின்றோம். இந்திய சட்ட கெஜெட்டின் பிரஸ்தாப வால்யம் 8-வது வால்யம் அதாவது கடந்த 7-வருட காலங்களாக இந்த கெஜெட்டை நடத்திக்கொண்டு வருகிறோம் என்பது உலக மறிந்த விஷயம். இந்த 7-வருடத்திலும் நம்முடை யகெஜெட்விஷயத்தில் நாம்அடைந்திருக்கும் அநுபவத்தால் நம்முடைய கெஜெட், சென்னை ஐக்கோர்ட்டில் ஜட்ஜியாகவிருந்து சிறந்து பிரகாசித்து இப்போதுஉத்தியோகத்திலிருந்துநீங்கி பென்ஷன் பெற்றுக்கொண்டு இந்த விருத்தாப்பிய வயதிலும் தேச நன்மைக்காக அல்லும்பகலும் உழைத்துகொண்டுவரும் சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஆதியில் கொண்ட அபிப்பிராயப்படி "தென்னாட்டில் ஆங்கிலம் தெரியாத தமிழ் பாஷை பேசும் ஜனங்களுக்கு சட்ட விஷயங்களைப் போதித்து" உண்மையில் உழைத்துக்கொண்டு வருகிறதென்பதை உலகினர் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதில் சந்தேக முண்டோ?

ஆதியில் இந்த சட்ட கெஜெட்டின் முதல் சஞ்சிகையை அச்சிட்டு அக்காலத்தில் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாகவிருந்த கனம். சர். S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய பார்வைக்கும் அபிப்பிராயத்திற்கும் அனுப்பியபோது அவர்கள் மேலே கூறியபடி அபிப்பிராயப்பட்டதுமன்றி ரூ. 75-க்கு மதிராஸ் பாங்கியின்பேரில் ஒரு செக்கு நமக்கு அனுப்பி நம்முடைய முயற்சியை நன்குமதித்திருக்கிறார்கள். இன்னும் இவர்களைப்போல ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார் அவர்களும் இன்னும் அநேக பிரபுக்களும் நன்குமதித்திருக்கிறார்கள். இன்னும் பொது ஜனங்களாலும், வியாஜ்ஜியமாடும் கக்ஷிக்காரர்களாலும் நம்முடைய கெஜெட் நன்கு மதிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகின்றன. நம்முடையகெஜெட் இவ்வளவு ஆதரிப்பையும் நன்குமதிப்பையும் அடைந்து வந்திருந்தபோதிலும் நமக்கு குறை ஒன்றிருக்கிறது. அது யாதெனில் நம்முடைய இந்திய சட்ட கெஜெட் கடந்த 7-வருடமாக உழைத்து வருவதற்கு ஏற்றபடி ஆயிரக்கணக்காக சந்தாதாரர்கள் சேர்ந்திருக்க வேண்டியதிருக்க இன்னும் சந்தாதாரர்களுடைய எண்ணிக்கை நூற்றுக்கணக்காகவே கணக்கிடப்பட்டுவருவது நாம் விசனிக்கக்கூடியதாயிருக்கிறது. நம்முடைய ஜனங்களில் பெரும்பான்மையோர் லாடவுட்டுகளுடையவும் லா ஏஜண்டுகளுடையவும் பணத்திற் இச்சைப்பட்டு யோசனை சொல்லக்கூடியவர்களுடைய பேச்சைக்கேட்டு மதிமயங்கி வியாஜ்ஜியமாடி கையிலுள்ள பொருள்களை எல்லாம் தோற்று ஓட்டாண்டியாகப்போய் விடுகிறார்களே ஒழிய சட்ட ஞானத்தைப் போதிக்கக்கூடிய நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டைப் போலொத்த ஒரு சட்டப்பத்திரிகையை வாசித்து வியாஜ்ஜியத்திற்குப் போகாமலே தங்களுடைய தகரார்களைத் தீர்த்துக்கொள்ள தங்களுடைய மனதை உடன் படுத்துகிறதில்லை! வியாஜ்ஜியமாடும் ஜனங்கள் இப்படி மனதை உடன்படுத்துவார்களேயாகில் சட்டப் பத்திரிகைகளுக்கு பலமான பொதுஜன

ஆதரிப்பு இல்லாக்கும், கவர்ன்மெண்டாருக்கும் ஓய்ச்சல் ஒளிவில்லாமல் ஜில்லாகோர்ட்டுகளும் டெம்பரரி கோர்ட்டுகளும் ஸ்தாபிக்கும் சிரமமும் நீங்கிப்போகும். ஆகையால் பொதுஜனங்கள் பெரும்பாலும் கோர்ட்டிற்குப்போகாமல் தங்களுக்குள்ளேவே வியாஜ்ஜியங்களை பைசல் செய்துகொள்ளும்படியான பரிபக்குவமுடையவர்களாகும் பரியந்தம், நமக்கு இக்கெஜெட் மூலியமாக பெரியவருவாய் எதிர்பார்க்காமலும், சிறிதேனும் களைப்பில்லாமலும் உழைக்கத் தீர்மானித்திருக்கிறோம்; நிற்க, இதுவரையில் நம்முடைய கெஜெட்டில் வெளிவந்த சமாசாரங்களுடன் சென்னை மாகாணசட்ட சபையில் ஜனப்பிரதிநிதி ஆனரபில் மெம்பர்கள் கவர்ன்மெண்டாரை கேட்கும் கேள்விகளும் அதற்கு கவர்ன்மெண்டு ஆனரபில் மெம்பர்கள் சொல்லும் ஜவாப்புகளும் பிரசுரஞ்செய்யப்படும். மேலும் நம்முடைய சந்தாதார்களில் பெருப்பான்மையோர் நீண்டகாலமாக விரும்பினதற்கினங்க இந்த கெஜெட் நிகழ் ஜனவரிமீ முதல் பாகம் 1. பாகம் 2. என்று இருபாகமாக பிரிக்கப்பட்டு எப்போதும்போல ஒரே புஸ்தகமாக வெளிப்படுத்தப்படும். இரண்டாவது பாகம் கோர்ட்டார்களால் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறதும் கவர்ன்மெண்டாராலேயே அச்சிடப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டுவரும் இந்தியன் லா ரிப்போர்ட்டுகளின் கேஸ்களை ஒன்றுகூட விட்டுப்போகாமல் அடக்கிக்கொண்டிருக்கும்; முதல்பாகம் மற்ற சமாசாரங்களை அடக்கிக்கொண்டிருக்கும்; சென்ற வருடத்தில் நம்முடைய கெஜெட்டின் அபிவிருத்தியை நாடி நன்கொடை அளித்து அபிமானித்திருக்கும் போஷகர்களுக்கும் ஆதரித்த சந்தாதாரர்களுக்கும் விஷயதானம் செய்தருளிய நிருபநேயர்கள் முதலானவர்களுக்கும் மனமார வந்தனமளிக்கின்றோம். இக்கெஜெட்டு இன்னும் அனேக காலம் இவ்வுலகினில் நின்று பொதுஜன நன்மையைநாடி உழைக்கத் தேவையாயுள்ள வசதிகளை எல்லாம் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனாகிய எம்பெருமான் தந்தருளி ஆசீர்வதிக்க வேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபமஸ்து !!!

## THE HON'BLE Mr. JUSTICE T. V. SESHAGIRI IYER.

### ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர்.

சென்னை மாகாணத்தில் மகா பிரசித்திபெற்ற லாயராக விருந்த மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் கவர்ன்மெண்டாரால் சென்னபட்டணம் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக நியமிக்கப்பட்டபோது ஐக்கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்திற்கு அனேக யோக்கியதாம்சங்களை பொருந்தப்பெற்ற இக்கனவானை கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத்து நியமித்தார்கள் என்று பொது ஜனங்களும் கக்ஷிக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் அடங்கா மகிழ்ச்சி கொண்டார்கள். கனம் பொருந்திய அய்யர் அவர்கள்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறே கடந்த 6மாத காலமாக அவர்கள் ஜட்ஜி உத்தியோகக் கடமைகளைச் செய்து சட்ட விஷயங்களில் அவர்களுக்கிருக்கும் அகண்ட ஞானத்தையும் வியாஜ்ஜியங்களை விசாரணை செய்து நீதி பரிபாலனம் செய்வதில் அவர்களுக்கிருக்கும் அபாரசக்தியையும் சித்தாந்தப்படுத்தியிருக்கிறார்கள் என்று நாம் இவ்விடத்தில் எடுத்தெழுதியிருப்பதை எவரும் ஆக்ஷேபிக்க இயலாது என்று நம்புகின்றோம்.

விளையும் பயிர் முளையிலே என்பதற்கிணங்க கனம் பொருந்திய அய்யர் அவர்கள் பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் பயிலும்போதே பின்பு ஒரு காலத்தில் அவர்கள் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருந்து பிரகாசிப்பார் என்று எண்ணுவதற்கு அவர்களிடம் அறிகுறிகள் காணப்பட்டன. மேன்மை தங்கிய அய்யர் அவர்கள் பி. யல். பரிக்ஷையில் தேறி பட்டம்பெற்ற வருடத்தில் அப்பரிக்ஷையில் வெற்றி அடைந்த மாணவர்களுக்குள் பிரதம ஸ்தானத்தில் நின்று கீர்த்தி பெற்றனர். பி. யல். பரிக்ஷையில் தேறி பட்டம் பெற்றுக்கொண்ட பிறகு வக்கிலாக ஐக்கோர்ட்டில் தர்க்கல் செய்துகொண்டு தொழில் நடத்த ஆரம்பித்தார்கள். வெகு சீக்கிரத்தில் கனம் பொருந்திய அய்யர் அவர்களுடைய திருநாமம் ஜொலித்துப் பிரகாசிக்கத் தலைப்பட்டது. சென்னை முதல் கன்னியாகுமரி முனைவரையிலுள்ள கக்ஷிக்காரர்களுக்குள் அவர்களுடைய திருநாமத்தைக் கேள்விப்படாதாரிலர். லாயர் தொழிலின் உத்திரவாதத்தை மிகவும் உணர்ந்தவர். எப்பேர்ப்பட்ட முரணான கேசையும் ஜட்ஜிகள் கஷ்டமானது என்று எண்ணி அருவெறுப்புக் கொள்ளாதபடி அதை துண்டு துண்டாய்ப் பிரித்து ஒரு கதையைப் போல எடுத்துச் சொல்லுவார்கள். மிகவும் வாக்கு சாமர்த்தியம் உடையவர்கள்; நன் நடக்கையும் சாந்த குணமும் உடையவர்கள். பொருமையே கனம் பொருந்திய அய்யர் அவர்கள்போல உருவெடுத்து வந்ததோ என்று எண்ணப்படும்படியாக அவ்வளவு பொருமை குணாதிசயம் பொருந்தப் பெற்றவர்கள். இவ்வளவு சிலாக்கியமான குணாதிசயங்கள் பொருந்தப்பெற்று தொழில் நடத்தி கக்ஷிக்காரர்களாலும் ஜட்ஜியாலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தனர். மேன்மை தங்கிய அய்யர் அவர்கள் லாயர் தொழில் நடத்த ஆரம்பித்து சிலகாலம் சென்றபிறகு கவர்ன்மெண்டார் கனம்பொருந்திய அய்யர் அவர்களை உள்ளூர் சட்ட கலாசாலையின் புரொபசராக நியமித்தார்கள். இந்தப் பதவியை 1893-ம் வருடம் முதல் 1899-வரையில் நிர்வகித்துக்கொண்டு வந்தார்கள். சட்டக் கொள்கைகளை தெளிவாக எடுத்து விவரிப்பதில் மிஸ்டர் அய்யர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமுடையவர் என்று அவர்களிடம் மாணாககர்களாக விருந்தவர்கள் இப்போதும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். லாயர்த் தொழில் நடத்திவந்த காலத்தில் அத்தொழில் முறை சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்களிடத்திலும் சரி, மற்ற லாயர்களிடத்திலும் சரி ஆக எல்லாரிடமும் மிகவும் மரியாதை காட்டி நடந்துகொண்டு வந்தனர். இயற்கையிலேயே அன்பான குணமுடையவர்கள். லாயர் கூட்டத்திற்குள் மிஸ்டர் அய்யர் அவர்களுக்கிருக்கும் மதிப்பாலும் அந்தஸ்தாலும் அவர்கள் காலஞ்சென்ற சர் V. பாஷியமய்யங்கார், இப்போது ஐக்கோர்ட்டு ஜட்ஜியாகவிருக்கும் சர். C. சங்கரன்நாயர் போலொத்த ஜெகப்பிரசித்திப்பெற்ற லாயர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணப்பட்டு வருகிறார்கள்; சென்னை மாகாண சட்ட சபையில் கனம் பொருந்திய அய்யர் அவர்கள் பொது ஜனங்களுக்கு நேரே நன்மையை பயக்கக்கூடிய அனேக விஷயங்களைப்பற்றி கவர்ன்மெண்டாரை கேள்விகேட்டு அவர்களுடைய கவனத்தை இழுத்து தேசநன்மைக்காக உழைத்து வந்திருககிறார்கள். மிஸ்டர் அய்யர் அவர்கள் ஜட்ஜியாக நியமிக்கப்படுவதற்கு முந்தி சட்டமாக பாஸ் செய்விக்கப்பட்ட ஹிந்துதான மசோதா ஆக்டிற்கு இவர்களே பிதாவாகவிருந்து



அந்த வகையிலும் தேச நன்மைக்காக உழைத்து வந்திருக்கிறார் என்று சொல்லவேண்டும். இந்தியாவில் இந்த கனவான்தான் இந்துலாவைச் சீர்திருத்திசட்டமாக செய்துவைக்க முதலில் எத்தனித்தவர் என்று நாம்நினைக்கிறோம். இவ்வளவுபெருமைகளும் பொருந்தப்பெற்ற ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டாய் ஜட்ஜியாக யிருந்து கீர்த்திப் பிரகாசத்துடன் விளங்கி இந்தியர்களுக்கு இன்னும் அனேக நன்மைகளைச் செய்துகொண்டுவரும் பொருட்டு சர்வ வல்லமை பொருந்திய கடவுள் அவர்களுக்கு தீர்காயுளையும் திரண்ட செல்வத்தையும் புத்திரமித்திர பாக்கியாதிகளையும் தந்தருளி ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிராத்தித்துக் கொள்ளுகின்றோம்.

## PRESIDENCY SMALL CAUSES COURT.

### ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டுகள்.

சென்னை ஐக்கோர்ட்டு கட்டிடத்திற்குள் ளிருக்கும் ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டுகளுக்கு ஐக்கோர்ட்டிற்கு சமீபத்திலேயே பிரத்தியேகமாக ஒரு கட்டடம் கட்டவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள் இதற்காக கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் ஷை கோர்ட்டுகளையும் சிட்டி சிவில் கோர்ட்டையும் நிகழ் மாசம் வந்து பார்வையிட்டுப் போனார்கள்.

## AN IMPORTANT DECISION

### ஒரு முக்கியமான தீர்ப்பு.

நகைசெய்யும் பொருட்டு தட்டானிடத்தில் கொடுக்கப்பட்ட பொன் அவன் இன்சால்வெண்டாகப் போய்விட்ட போதிலும் நஷ்டப்படமாட்டாது ஏன் என்றால் தட்டான் நகையைக் கொடுத்தவனுக்கு டிரஸ்டி ஸ்தானத்திலிருக்கிறான் நகையைக்கொடுத்தவன் அந்தப்பொன் அபிகூபல் அசயினி கையிலிருக்கிற தென்று ருஜுப்படுத்தினால் அந்தப்பொன் அவனுக்கு வாப்பீஸ் செய்யப்படுமென்று சென்னப் பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## THE MORNING DRAUGHT.

### காலைக்குடி.

சென்னையில் இதுவரையில் கள்ளு சாராயக் கடைகள் உதய முதல் விற்பனை செய்யப்பட்டுவந்தன. ஆனால் இப்போது ரெவினியூ போர்டாரின் யோஜனையின்பேரில் கள்ளு சாராயக்கடைகள் காலை 9½-மணிக்குமேல்தான் திறக்கப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டார்விளம்பரித்திருக்கிறார்கள். 1912-ம் வருடத்தில் சட்டசபையில் ஒருஜனப்பிரதிநிதி மெம்பர், கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் அதிகாலையில் திறந்து வைக்கப்படுகிறபடியால் ஜனங்கள் கெட்டுப்போகிறார்கள் என்றும் ஆதலால் அவைகள் காலைகட்9-மணிக்கு மேற்பட்டு திறந்து வைக்கும்படி கவர்ன்மெண்டாரால் உத்திரவு செய்யப்பட வேண்டுமென்று பிரரேபித்தபோது ஆனரபில்மிஸ்டர் அட்க்கின்சன் என்கிற கவர்ன்மெண்டு மெம்பரும், ஆனரபில் மிஸ்டர் சிவசாமி அய்யரும் கவர்ன்மெண்டார் அப்படி ஏற்பாடு செய்வார்களேயாகில் பொது ஜனங்களுடைய சுதந்தரங்களில் பிரவேசித்ததாக எண்ணப்படுவார்கள் என்று பதில் கூறினார்கள். அப்படி பதில் சொன்ன கவர்ன்மெண்டாரே இப்போது முன்வந்து வலிய கள்ளு சாராயம் காலை 9½-மணிக்குள் விற்பனை செய்யப்படக் கூடாதென்று உத்திரவு செய்து பயிரங்கப்படுத்தி யிருக்கிறதைப் பார்க்க சந்தோஷமாயிருக்கிறது.

## CRIME IN MALABAR.

### மலையாளத்தில் குற்றங்கள்.

மலையாளம் ஏரநாடு தாலூக்காவிலும் வளுவநாடு தாலூக்காவிலு மிருக்கிற மாப்பிளா ஜாதியார்களுக்குள் பிரமாதமான குற்றங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று மதிராஸ் டைம்ஸ் பத்திரிகை கூறுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## COCHIN.

### கோச்சி.

கொச்சி ராஜா அவர்களுக்கு 62 வயதாய்விட்டபடியால் மருமக்கட்தாய சட்டத்தின்படியும் மலையாள வழக்கத்தின்படியும் தம்முடைய பங்காளிகளில் ஒருவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்துவிட்டு சிம்மாசனத்தையும் ராஜ்ஜிய பாரத்தையும் விட்டு நிகழ் மாசம் விலகிவிட்டார்கள்; இப்போது பட்டத்திற்கு வந்திருக்கும் ராஜா மிகவும் படிப்படைந்தவர் என்றும் ராஜ தந்திரமுடையவர் என்றும் எண்ணப்படுகிறது; சமஸ்தானத்திற்குப் பல நன்மைகள் அவர்கள் செய்துவைப்பார்கள என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# Current month's Madras High Court Decisions.

# நடை முதல் மாத மதிராஸ் ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 582 of 1912.

4-1-1915.

தீர்ப்பு:—ஒரு தேவஸ்தான கமிட்டியார் 1863-வது வருடத்திய 20-வது ஆக்டின்படி, தகுதியானதென்றும் ஒழுங்கானதென்றும் அபிப்பிராயப்பட்டால் ஒருஅடிஷனல் டிரஸ்டியைநியமிக்கஅதிகாரமிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தேவஸ்தானத்தின் நன்மைக்குப் பாதகமாக வஞ்சத்தை முன்னிட்டாகிலும் அல்லது வேறே எந்த சொந்தக் காரணத்தை முன்னிட்டாகிலும் அவர்கள் ஒரு அடிஷனல் டிரஸ்டியை நியமித்தால் அந்த நியமனத்தை, கமிட்டியார் தங்களுடைய அதிகாரத்தைத் துர்வினியோகப்படுத்தினார்கள் என்கிற காரணத்தை முன்னிட்டு கோர்ட்டார் அஸ்கூபியப்படுத்துவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C.V. அனந்தகிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் T ரங்காச்சாரியாரும் R. குப்புசாமி அய்யரும் ஆஜரானார்கள் 28. ம. ள். ஜெ. 22.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

**இரண்டாவது அப்பீல் நே. 102 of 1913.**

**9—1—1915.**

**தீர்ப்பு:**—ஐக்கோர்ட்டார் அசல் தரப்பில் ஒரு பாத்திதை மனுவின்பேரில் செய்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. V. சீனிவாசய்யங்காரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. வெங்கட்ட சுப்பராமய்யாவும் ஆஜரானார்கள் 28 ம. லா. ஜெ. 20.

---

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி

**இரண்டாவது அப்பீல் நே. 218 of 1912.**

**11—1—1915.**

**தீர்ப்பு:**—பிரதிவாதிகளின் இறந்துபோன பிதாவின் பேரில் வாங்கப்பட்ட கடன் டிக்கிரி பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்துமென்று கோர்ட்டார் கூறும்படியாக வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். பிரதிவாதிகளின்பேரில் டிக்கிரி கொடுக்கவேண்டுமென்று பிரியாதைச் சீர்திருத்த வாதி முயன்றான். பிரியாதைச் சீர்திருத்த வேண்டுமென்று வாதி மனு செய்துகொண்டபோது வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குட்பட்டிருக்கும் பிரியாதைச் சீர்திருத்தம் செய்ய செய்துகொள்ளப்பட்ட மனுவில் யாதொரு புதிய சமாசாரமும் சொல்லப்படாததாலும் யாதொரு புதிய வியாஜ்ஜிய மூலமும் சொல்லப்படாததாலும், ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்ட பரிகாரத்துடன் கூட வேறொரு பரிகாரம் மட்டிலும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிற படியாலும் பிரியாதைச் சீர்திருத்த கோர்ட்டார் அனுமதி கொடுத்திருக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது

**லாயர்கள்.**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் L. A கோவிந்த ராகவய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C. P. வெங்கடாச்சாரியும் ஆஜரானார்கள் 28 ம. லா. ஜெ. 20.

---

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.

**கிரிமினல் ரிவிஷன் கேஸ் நே. 73 of 1914.**

**19-1-1915.**

**தீர்ப்பு:**—குற்றவாளியின் பேரில் அக்கிரமமாய் பிரவேசித்த குற்றமும் அநியாயமாய் அடைத்துவைத்த குற்றங்களுக்கும் குற்றஸ்தாபனை செய்யப்பட்டு ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டது. அப்பீலில் அப்பீல் கோர்ட்டார் அநியாயமாய் அடைத்துவைத்த குற்ற ஸ்தாபனையை ரத்துசெய்துவிட்டு அபராததண்டனையை குறைக்காமல் உறுதிப்படுத்தினார்கள். அப்பீல் கோர்ட்டார் அபராததண்டனையைக் குறைக்காமல் உறுதிப்படுத்தினது சி. பு. கோ. 423-வது பிரிவின்படி தண்டனையை உயர்த்தினதாக எண்ணப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது. 28 ம. லா. ஜெ. 20.

ஒரு நிலத்தை வசப்படுத்திக்கொள்ளும் பொருட்டு ஒரு டிக்கிரி நிறைவேற்றப்பட்டது' நிலத்தின் சொந்தக்காரன் ஆக்ஷேபித்தான். ஆயினும் டிக்கிரிக்காரனுக்கு நிலம் டெலிவர் செய்யப்பட்டது. நிலம் டெலிவர் செய்யப்பட்ட இரண்டொரு நாள் சென்று நிலத்தின் சொந்தக்காரன் நிலத்தில் அக்கிரமமாய்ப் பிரவேசித்து மாசூல் அறுவடையாவதை தடைப்படுத்தினான். இதனால் அவன் அத்துமீறி பிரவேசித்தக் குற்றத்தைச் செய்தவனாகமாட்டான். இந்தியன் பீனல் கோட் 441-வது பிரிவில் சொல்லப்பட்ட எண்ணங்களில் ஒன்றுகூட அவனுக்கில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—மனுதாருக்காக வக்கீல் மிஸ்டர் A. ராமச்சந்திர அய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்காகப் பப்ளிக் பிராசிகியூட்டரும் ஆஜரானார்கள். 28 ம. லா. ஜெ. 21.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

**கிரிமினல் ரிவிஷன் மனு நே. 408 of 1913.**

**22—1—1915.**

**தீர்ப்பு:**—கிரிமினல் புரோசிஜர் கோடு 476-வது பிரிவின்படி ஒருவனைப் பிராசிக்கியூட் செய்யும்படி ஒரு சிவில் கோர்ட்டார் கொடுத்த சாங்கிஷன் உத்திரவைப் பரிசிலனை செய்ய கி. பு. கோட் 439-வது பிரிவின்படி ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை சி. பு. கோ. 115-வது பிரிவின்படி அதில் சொல்லப்பட்டிருக்கும் காரணங்களில் ஒன்றை முன்னிட்டு பரிசிலனை செய்ய ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—மனுதாருக்காக மிஸ்டர் T. S. ராமசாமி அய்யரும் எதிர் மனுதார்களுக்காக மிஸ்டர் K. ராமச்சந்திர அய்யரும், மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள். 28 ம. லா. ஜெ. 17.

---

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

**இரண்டாவது அப்பீல் நே. 444 of 1913.**

**24—1—1915.**

**தீர்ப்பு:**—ரிஜிஸ்டர் செய்யப்பட்ட குத்தகை ஆதாரமூலியமாக ஒரு நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டிருப்பவன் நிலத்தை வசப்படுத்திக் கொள்ளவாவது அல்லது அவனால் குத்தகை விட்டவனுக்கு அட்வான்ஸ் செய்யப்பட்ட பணத்தை வாப்பீஸ் பெற்றுக்கொள்ளவாவது கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியம் லிமிட்டேஷன் ஆக்ட் 116-வது ஆக்ட் தாற்பரியம்படி பரிகாரம் பணத்திற்காகக் கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியமாகும் நஷ்டத்திற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் என்று பிரியாதில் சொல்லப்படவேண்டிய தவசியமல்ல. குத்தகை பிறந்த 3 வருடம் சென்ற பிறகு பிரஸ்தாப வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதால் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்திற்குள்ளாகாது என்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. P. லக்ஷ்மண ராவ் அம்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. சுந்தர ராவும் ஆஜரானார்கள். 28 ம. லா. ஜெ. 18.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர்.
ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட் பீல்ட்.

**அப்பீல் வியாஜ்ஜிய நே. 302 of 1912.**

**26—1—1915.**

**தீர்ப்பு:**—ஒரு ஜமீன்தார் தம்முடைய பெண்சாதிக்கு ஜீவனாம்சம் கொடுப்பதற்குப் பதிலாக அவள்பேரில் ஒரு நிலம் எழுதிவைத்தார். ஆனால் இந்த ஆதாரவை ரெஜிஸ்டர் செய்யவில்லை. இந்த எஸ்டேட்டின் ஸ்பாவம் என்னவென்பதை ருஜூப்படுத்த இந்த ஆதாரவு சாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அந்த ஆதாரவில் அடங்கியிருக்கும் விஷயங்களும் சாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்று தீர்மானிக்கப்பட்டது. ஜீவனாம்சத்திற்காக ஒரு ஹிந்து ஸ்திரீக்கு ஒரு நிலம் கொடுக்கப்பட்டால் அவள் ஆயுளுள்ள பரியந்தம் அதை அனுபவிக்கும்படியான பாத்திதையுடன் மட்டிலும் சகஜமாக எப்போதும் கொடுக்கப்படுகிற வழக்கம் என்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. சீனிவாசய்யங்காருக்குப் பதிலாக மிஸ்டர் K. ராஜா அய்யரும் ஆஜரானார்கள். 28 ம. லா. ஜெ. 17.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

**இரண்டாவது அப்பீல் நே. 1691 of 1913.**

**தீர்ப்பு:**—ஒரு ஸ்வாதீன அடமானக்காரனுடைய பாத்திதையை ஜப்தி செய்யும் விதம் சி. பு. கோ. 21-வது ஆர்டர் 46-வது ரூலில் சொல்லப்பட்டிருப்பதே ஒழிய 21-வது ஆர்டர் 54-வது ரூலில் சொல்லப்பட்டிருப்பதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. முத்தய்யா முதலியாரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள். 28 ம லா ஜெ. 20.

---



# Current Cases.

## நடைமுதல் வியாஜ்ஜியங்கள்.

—:o:—

## MADRAS HIGH COURT.

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

---

### CIVIL SUITS.

### சிவில் அப்பீல்கள்.

---

(1)

**ஒரு சோரப் புத்திரனின் பாத்திதை.**

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் T. V சேஷகிரி அய்யர்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—மதுரை ஜில்லாவில் ஒரு நாட்டுககோட்டை செட்டியார் ஒரு தாசியை நீண்ட காலமாக வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருந்தார். அவருக்கு அந்த தாசி மூலியமாக ஒரு புத்திரன் பிறந்தான். செட்டியாருக்கு சொந்தப் பெண்சாதி மூலியமாக சில புத்திரர்களிருந்தார்கள். பிதாவினுடைய சொத்தை சொந்தப் புத்திரர்கள் பாகம் செய்துகொண்டார்கள். சோரப் புத்திரன் தனக்கு ஒரு பாகம் கிடைக்க பாத்திதையிருக்கிறதென்று சொல்லி மதுரை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். சோர புத்திரன் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

உத்திரவு:—சோர புத்திரனுக்குக் குடும்பச் சொத்தில் பாகம் உண்டா என்கிற பிரஸ்னை சம்பந்தமாக இதற்கு முந்தி ஜாரி செய்யப்பட்டிருக்கும் தீர்ப்புகள் ஒரே விதமாகவிராமல் ஒன்றுக்கொன்று முரணாகவிருக்கிறபடியால். இந்த அப்பீல் ஐக்கோர்ட்டு புல் பென்ச்சாருடைய விசாரணைக்கு அனுப்பப்பட வேண்டுமென்று உத்திரவு செய்தார்கள். (19—1—1914.)

---

(2)

**ஒரு உயில் கேஸ்.**

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— சென்னபட்டணத்தில் காடம்பாடி முதலியார் என்கிற ஒரு நிலஸ்வான்தார் ரூபாய் 5 ஆயிரம் பொருமானமுள்ள சொத்துக்களை விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார்.



இறந்து போவதற்கு முந்தியதினம் தம்முடைய சொத்துக்களை தம்முடைய இருதங்கைகளுக்கு உயில் மூலியமாகக் கொடுத்துவிட்டு இறந்துபோனார். லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் என்கிற வார்சு சர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ளுவதற்காக ஷை இரண்டு தங்கைகளும் ஐக்கோர்ட்டில் மனு செய்துகொண்டார்கள். உயில் கர்த்தாவின் தமையன் மகனாகிய நடேசமுதலி உயில் உண்மையான உயில் அல்லவென்றும், உயில் கர்த்தா இறந்துபோன தினத்திற்கு முந்தியதினம் சித்த ஸ்வாதீனமற்றவராயிருந்தார் என்றும் சொல்லி ஷை மனுவை ஆக்ஷேபித்தார். ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் ஆக்ஷேபனையை நிக்கிரகித்துவிட்டு உயிலை அங்கீகரித்துக் கொண்டார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக நடேச முதலியார் அப்பீல் செய்துகொண்டார்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—உயில் உயில்கர்த்தாவால் எழுதி வைக்கப்பட்டதென்று சாக்ஷியம் சொல்லியிருப்பவர்களுடைய வாக்குமூலங்கள் ஒத்தில்லாமலிருக்கிறபடியாலும் உயில் எழுதப்பட்ட சமயத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் சாக்ஷிகளில் பலர் சாக்ஷி விசாரணை செய்யப்படவில்லை என்றும் மனுதார்கள் வசம் இருப்பதாகச் சொல்லப்படும் உயிலின் நகல் ஆஜர்படுத்தப் படாததாலும் அப்பீலை ஏற்றுக்கொண்டு வார்சு சர்ட்டிபிக்கேட் பெறுவதற்காக உயில் கர்த்தாவின் இரு தங்கைகள் செய்துகொண்ட மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

---

(3)

**ஒரு அவதூறு வியாஜ்ஜியம்.**

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு நம்புரிஜாதி ஸ்திரீ விபசாரம் செய்ததாக சந்தேகப்பட்டு மேன்மை தங்கிய கொச்சி சமஸ்தானபதியின் உத்திரவின்பேரில் ஒரு கமிட்டியார் அவளை விசாரணை செய்தார்கள். அந்த கமிட்டியார் தாங்கள் செய்த விசாரணையைப் பற்றி மேன்மை தங்கிய ராஜாவுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பினார்கள். அந்த ரிப்போர்ட்டில் காணப்பட்டிருந்த 5 மனிதர்களை கோவில்களுக்குள் நுழையும்படி விடக்கூடாதென்று சர்வாதிகாரி மூலியமாக உத்திரவு பிறப்பித்தார்கள். சர்வாதிகாரி அந்த உத்திரவை ஒரு தேவஸ்தான டிரஸ்டிக்கு அனுப்பினார். தேவஸ்தான டிரஸ்டி அந்த உத்திரவை தேவஸ்தானத்தின் பூஜாரிக்கு அனுப்பினார். ஷை ரிப்போர்ட்டில் காணப்பட்ட 5-வர்களும் தேவஸ்தானத்திற்குள் விடப்படவில்லை. ஆகவே அவர்களில் ஒருவர் கமிட்டியின் பிரசிடென்டை முதல் பிரதி

வாதியாகவும், தேவஸ்தான தருமகர்த்தாவை 2-வது பிரதிவாதியுமாகச் சேர்த்து மான நஷ்ட தாவா கொண்டுவந்தார்.

கேசின் நடவடிக்கை:—இந்த வியாஜ்ஜியம் முன் ஒரு சமயம் ஐக்கோர்ட்டாருடைய விசாரணைக்கு வந்து முதல் பிரதிவாதி எந்த விதத்திலும் நிந்தனைக்குப் பாத்தியப்பட்டவரல்லவென்று தீர்மானிக்கப்பட்டு இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் கேசை விசாரணை செய்து பைசல் செய்யும்படியாகக் கீழ்க்கோர்ட்டிற்கு அனுப்பினார்கள்.

கீழ் கோர்ட்டார் தீர்ப்பு:— இரண்டாவது பிரதிவாதி சர்க்கார் முறையில் தமக்கு கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு அனுப்பியது நிந்தனையாகமாட்டாதென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக வாதி அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. P. M. மீனனும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:— இரண்டாவது பிரதிவாதிக்கு யாதொரு கெட்ட எண்ணமுமில்லை. சர்க்கார் முறையில் மேன்மை தங்கிய மகாராஜா அவர்களின் உத்திரவின்படி தம்முடைய கடமையைச் செய்திருக்கிறார். ஆகையால் யாதொரு பரிகாரமும் கொடுக்கப்பட மாட்டாதென்று சொல்லி இரண்டாவது அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். (19—1—1915)

---

(4)

## ஒரு மான நஷ்டதாவா.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமிசாஸ்திரி.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாயிருந்த மிஸ்டர் நாராயணமீனன் பயிரங்கமான கோர்ட்டில் பாரிஸ்டர் டாக்டர் அன்வாருடன் ஏன் ஏமாற்றின குற்றத்திற்காகப் பிராசிக்கியூட் செய்யப்படக்கூடாது? அவர் தமக்கு சட்டம் தெரியுமென்று கக்ஷிக்காரர்களை ஏமாற்றி அக்கிரமமாக அவர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணி வைத்து அநியாயமாய் சம்பாதிக்கிறபடியால் அந்தப் பிரிவின்படி பிராசிக்கியூட் செய்யப்படவேண்டியது என்று சொன்னதாக ஐக்கோர்ட்டு வக்கீலாயிருக்கும் மிஸ்டர் ஷாமாராவ், மிஸ்டர் அருமைநாதம்பிள்ளை என்கிற இன்னொரு ஐக்கோர்ட்டு வக்கீலிடம் சொன்னதற்காக பாரிஸ்டர் டாக்டர் அன்வாருடன் மிஸ்டர் ஷாமாராவின்பேரில் ரூபா 10,000-க்கு ஐக்கோர்ட்டில் ஒரு மான நஷ்ட தாவா தாக்கல் செய்தார்.

பிரதிவாதியின் எழுத்து வாக்குமூலம்:— பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் பயிரங்கமான கோர்ட்டில் மேலே சொன்னபடி டாக்டர் அன்வாருடனைப் பற்றிச் சொன்னதாக தாம் கேள்விப்பட்டு மிஸ்டர் அருமைநாதம் பிள்ளையிடம் சொன்னது உண்மை என்று ஒப்புக்கொண்டு, இப்படிச் சொன்னதால் வாதிக்கு நஷ்டம் நேரிட்டிருந்தால் அதற்காக தாம் ஒரு ரூபாய் நஷ்டம் கட்டிக்கொடுக்க தயாராயிருப்பதாக எழுத்து வாக்குமூலத்தில் பிரதிவாதி சொல்லியிருக்கிறார்.

கேசின் நடவடிக்கை:—கேசின் விசாரணை ஆரம்பமான பிறகு பிரதிவாதியை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள தயாராக விருப்பதாகவும் வாதி நேரிட்டிருக்கும் கோர்ட்டுச்செலவுகளையும் நஷ்டத்திற்காக ரூ 200-ம் கட்டிக்கொடுக்கத் தயாராக விருப்பதாகவும் பிரதிவாதி அறிவித்துக்கொண்டார் வாதி ஒப்புக்கொள்ளாமல் போகவே கோர்ட்டார் சாக்ஷி விசாரணை செய்தார்கள். பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் நாராயணமீனனும், ஐககோர்ட்டு வக்கீல் மிஸ்டர் அருமைநாதம் பிள்ளையும் சாக்ஷிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள். பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் நாராயணமீனன் தாம் டாக்டர் அன்வாருடனைப்பற்றி அப்படி யாதொன்றும் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். மறுநாள் பாரிஸ்டர் நரசிம்மம் வாதியின் சாக்ஷியாக விசாரணை செய்யப்பட்டார். அதன் பிறகு பிரதிவாதி வாக்குமூலம் அடியிற்கண்டபடி எழுதி வைத்தார்:—மாஜிஸ்டிரேட் டாக்டர் அன்வாருடனைப்பற்றி சொன்னது போல என்னையே சொல்லி யிருந்தால் நான் கவனித்திருக்கமாட்டேன். டாக்டர் அன்வாருடன் ஒரு அருகற்ற லாயர் என்றாவது கக்ஷிக்காரர்களை ஏமாற்றுகிறார் என்றாவது நாம் அபிப்பிராயப்படவில்லை.

தீர்ப்பு:—வாதி இனிமேல் முன்னுக்கு வரும்படியான பாரிஸ்டராக விருப்பதை முன்னிட்டு அவர் பேரில் பிரதிவாதியால் செய்யப்பட்ட நிந்தனை மகா கொடுமையானதா யிருக்கிறது. பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் நாருயணமீனன் வாதியைக்குறித்து அப்பேர்ப்பட்ட நிந்தனையான வார்த்தைகள் தாம் சொல்லவேயில்லை என்று வாக்குமூலம் எழுதி வைத்திருக்கிறார். இந்தக் கேசில் நிகழ்ந்திருக்கும் சகல விஷயங்களையும் நாம் சீர்தூக்கிப் பார்த்து நஷ்டத்திற்காக ரூ. 500-ம் வாதியினுடைய கோர்ட்டுச் செலவுகளையும் பிரதிவாதி கொடுக்கும்படியாகச் செய்தால் போதுமானதென்று நாம் அபிப்பிராயப் படுகிறோம், இதே பிரகாரம் பிரதிவாதிக்கு டிக்கிரி கொடுக்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

---



(5)

## போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்.

**கேசின் விபரம்:**—திருநெல்வேலி ஜில்லா சாடயம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் லக்ஷ்மிநாராயண அய்யர்மீது இம்சித்து லஞ்சம் வாங்கிய குற்றம் ஷேர்மாதேவி சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு 9 மாத கடுங்காவல் தண்டனையும் ரூ. 300 அபராதமும் விதிக்கப்பட்டார். இந்த தண்டனைக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப் பட்டதில், குற்றவாளிக்கும் அவருடைய சமீப எஜமானுகவும் இந்தக் கேசில் பிராசிக்கியூஷன் தரப்பு இரண்டாவது சாக்ஷியாக விருக்கும் போலீஸ் இனிஸ்பெக்டருக்குமுள்ள கூர்மையான விரோதத்தால் மேற்படி போலீஸ் இனிஸ்பெக்டருடைய முயற்சியாலேயே இந்தக் கேஸ் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடுமென்று சொல்லி கீழ்க்கோர்ட்டு தண்டனையும் குற்ற ஸ்தாபனையும் ரத்துசெய்து குற்றவாளியை விடுவித்து விட்டார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

தீர்ப்பு:— பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளுடைய வாக்குமூலம் முழுமையும் நம்பப்படக்கூடாததாக விருக்கிறதென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு செஷன் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு கவர்ன்மெண்டாருடைய அப்பீலை தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

லாயர்கள்:— பப்ளிக் பிராசிக்கியூட்டருக்காக மிஸ்டர் J. C ஆடம் கவர்ன்மெண்டு தரப்பிற்காகவும், மிஸ்டர் K. S. ஜெயராம அய்யருடைய உதவியுடன் மிஸ்டர் ரெங்காச்சாரியார் குற்றவாளியின் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

---

(6)

## வைத்தீஸ்வரன் கோவில் ஸ்கீம் வியாஜ்ஜியம்.

பொது ஜனங்களின் தரும டிரஸ்டு சொத்துக்களுக்கு டிரஸ்ட்டியாக விருக்கும் நிலைமையில் ஆனரபில் அட்வோக்கேட் ஜெனரல் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் முக்கியமான தேவஸ்தானங்களுக்குள் ஒன்றாக யிருக்கும் வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தானத்தின் மானேஜ்மெண்டை சீர்திருத்தி ஒரு தகுந்த ஏற்பாட்டைச் செய்யும்பொருட்டு மாயவரம் சப் கோர்ட்டில் மேற்படி தேவஸ்தானத்தின் டிரஸ்ட்டியாக விருக்கும் தருமபுர பண்டார சந்நிதானத்தின்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார். வியாஜ்ஜியம் நடவடிக்கையி லிருந்த போது மேற்படி பண்டார சந்நிதானம் அவர்கள் இறந்து போய்விட்டார்கள். அந்த பண்டார சந்நிதானத்திற்குப் பிந்தி வந்த பண்டார சந்நிதானம், முந்தியிருந்த பண்டார சந்நிதானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் அவர் இறந்துபோனவுடன் வியாஜ்ஜியம் முடிந்துபோய் விட்டதென்றும் ஆகையால் அந்த வியாஜ்ஜியத்தைக் கோர்ட்டார் இனி விசாரணை செய்யக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார்.

சப் கோர்ட்டார் உத்திரவு:—பிரஸ்தாப வியாஜ்ஜியம் தஞ்சாவூர் ஜில்லாவில் முக்கியமான தேவஸ்தானங்களுக்குள் ஒன்றாயிருக்கும் ஒரு தேவஸ்தானத்தைப் பற்றினதாக விருக்கிறபடியால் வியாஜ்ஜியம் தொடர்ந்தேர்த்தியாக விசாரணை செய்யப்படவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக இப்போதிருக்கும் பண்டார சந்நிதானம் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு:—சப் கோர்ட்டாருடைய தீர்ப்பு உறுதிப் படுத்தப்பட்டது.

---

(7)

## சிவகிரி ஜேமீன் கேஸ்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—சிவகிரி ஜெமீன்தாருடைய ஏஜண்டு மைசூர் சமஸ்தானத்தில் உத்தியோகம் செய்து பென்ஷன் பெற்றுக்கொண்டிருக்கும் E. R. சுப்பராய அய்யருக்கு ரூ. 44,020-க்கு ஒரு அடமானம் எழுதிக் கொடுத்திருந்தார். இந்த அடமான ஆதாரவின்பேரில் மேற்படி சுப்பராய அய்யர் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார்.

வியாஜ்ஜிய நடவடிக்கை:— பிரதிவாதி, தாயாசொத்து ஜமீன் சொத்தென்றும் ஜமீன் பாதிக்கப்படக்கூடாத ஜமீன் என்றும் எழுத்து வாக்குமூலத்தை சீர்திருத்த அனுமதி கேட்டார். அனுமதி கொடுக்கப்பட்டது.

லாயர்கள்:--வாதிக்காக மிஸ்டர் C. P. ராமசாமி அய்யரும், A. துரைசாமி அய்யரும், பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் T. நரசிம்ம அய்யங்காரும், A. சூரியநாருயண அய்யாவும் ஆஜரானார்கள்.

பிரதிவாதியின் வேண்டுகோள்:— தாவாத் தொகைக்கும் செலவு தொகைக்கும் பிரதிவாதி தம் பேரில் டிக்கிரி கொடுக்கப்படலாமென்றும், ஆனால் பணத்தைச் செலுத்த 4 மாதகால டயம் தேவை என்று பிரதிவாதி கோர்ட்டாரை வேண்டிக்கொண்டார்.

தீர்ப்பு:— ஐக்கோர்ட்டார் தாவாச் சொத்துகளின்பேரில் ரூ. 44,020-க்கு ஒரு அடமான டிக்கிரி

வாதிக்குக் கொடுத்து பணத்தைச் செலுத்துவதற்கு பிரதிவாதி வேண்டிக்கொண்டபடி நான்குமாத காலமும் கொடுத்தார்கள். பணம் செலுத்தப்படும் பரியந்தரம் 100-க்கு 9-மேனிக்கு வட்டி சேர்த்து செலுத்தவேண்டுமென்றும் டிக்கிரி கொடுத்தார்கள்.

(8)

## ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார் கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— ராமநாதபுரம் சப் கோர்ட்டில் ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார் ஒரு பாக வியாஜ்ஜியம் தாக்கல் செய்தார். வாதி தம்முடைய தகப்பனாரின் முதல் பெண்சாதி மூலியமாகப் பிறந்த புத்திரர். பிதாவுக்கு இரண்டாவது பெண்சாதி மூலியமாக 5-புத்திரர்களிருக்கிறார்கள். வாதி பிதாவையும் ஷை 5-புத்திரர்களையும் பிரதிவாதிகளாகச்சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரியாதில் அடியிற்கண்ட விபரங்கள் சொல்லப்பட்டிருந்தன:-(1) வாதி அடாங்குடி செட்டி வகுப்பைச் சேர்ந்தவர். (2) பிதாவின் முதல் பெண்சாதியின் மூலியமாக பிறந்த புத்திரனுக்கு ஒரு பிரத்தியேகமான தனிபாகம் கொடுப்பது இந்த ஜாதியில் வழக்கம். (3) பிதாவுக்கு எத்தனை பெண்சாதிகளிருக்கிறார்களோ அந்த எண்ணிக்கைப் பிரகாரம் சொத்து அத்தனை பாகமாகப் பிரிக்கப்படுவது இந்த ஜாதியின் வழக்கம். (4) பிதாவுக்குத் தனியே ஒரு பாகம் கொடுக்கப்படுவது வழக்கமில்லை. முதல் பெண்சாதியாலும் அவளுடைய புத்திரியாலும் ஆதரிக்கப்பட வேண்டியது இந்த ஜாதியின் வழக்கம். (5) பிதா இரண்டாவது பெண்சாதியை விவாகம் செய்துகொண்டது வாதிக்குத்தனியே ஒருபாகம் கொடுப்பதாக ஒரு எகிரிமெண்டு எழுதிக்கொடுத்திருக்கிறார்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:-வாதி தமக்கு ஒரு பாகம் தனியே கிடைக்கவேண்டுமென்று பாத்தியம் பாராட்டும் வழக்கத்தை சப்கோர்ட்டார் ஒப்புக்கொண்டு மூன்றில் ஒரு பாகத்திற்கு வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். பிதாவுக்கு ஒரு பாகத்திற்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக பிதாவும் மற்ற புத்திரர்களும் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் ரங்காச்சாரியாரும் K. V. கிருஷ்ணசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் K. சீனிவாசய்யங்காரும், K. N. அய்யா அய்யரும் ஆஜரானார்கள்.

அப்பீல் வாதிகள் சொன்ன கக்ஷி:—வாதி சொல்லும் அனுஷ்டான கக்ஷி போதுமானபடி ருஜூப்படுத்தப்படவில்லை. வாதி சொல்லும் வழக்கம் இந்த ஜாதியில் இருந்தபோதிலும் 1849-ம் வருடம் முதல் அது பெரும்பாலும் அனுஷ்டிக்கப் படுகிறதில்லை.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—வாதி சொல்லும் வழக்கம் ஹிந்துலாப் பிரகாரம் சாதாரணமாக அனுஷ்டிக்கப்படும் வழக்கத்திற்கு விரோதமாகயிருக்கின்றது. மேலும் அதை வாதி ருஜூப்படுத்தவில்லை. பிதா வாதிக்கு தனியே ஒரு பாகம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்திருக்கும் உடன்படிக்கை ரெஜிஸ்டர் செய்யப்படாததால் அது ஊர்ச்சிதப் படுத்தப்படக்கூடியதல்ல. ஆதலால் சப் கோர்ட்டாருடைய டிக்கிரியை மாற்றி சாதாரண ஹிந்துலாப்படி பாகப்பிரிவினை செய்துகொள்ளும்படியாக ஐக்கோர்ட்டார் டிக்கிரி கொடுத்தார்கள் (11-1-1915.)

(9)

## வடகலை தென்கலைச் சண்டை.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் வடகலையார் ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாளின் தேவஸ்தானத்திற்கு வெளியேயிருக்கும மூன்று மாடவீதிகளின் வழியாக வடகலை ஆழ்வார்களையும் வேதாந்த தேசிகரையும் ஊர்கோலம் விட்டுக் கொண்டு போகவும் பிரபந்த முதலியவைகள் சொல்லிக்கொண்டு போகவும் இன்னும் வடகலை ஆழ்வார்களுக்கு என்ன என்ன மரியாதைகள செய்யப்பட வேண்டுமோ அவைகளைச் செய்யவும் வடகலையார் பாத்திய முடையவர்கள் என்றும் தென்கலையார் அந்த பாத்திதைகளில் பிரவேசிக்க பாத்தியமற்றவர்கள் என்றும் கோர்ட்டார் கூறும்படியாக ஸ்ரீரங்கம் டி. மு. கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள். டி. மு. கோர்ட்டாரும் அப்பீலில் திருச்சினாப்பள்ளி ஜில்லா கோர்ட்டாரும் வாதி சொல்லும் பாத்திதையை ஏற்றுக்கொண்டு டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக தென்கலையார் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொண்டார்கள்.

அப்பீல் வாதிகள் சொன்ன கக்ஷி:— தாவாவில் கண்ட மூன்று தெருவுகள் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான தெருவுகள் அல்லவென்றும் ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்திற்குச் சொந்தமானவை என்று ருஜூப்படுத்தக்கூடிய ஒரு முக்கிய தஸ்தாவேஜியை ஜில்லா ஜட்ஜி அலக்ஷியப்படுத்தி கேசை பிசகாக முடிவு செய்திருக்கிறார் என்று சொன்னார்கள்.



அப்பீல் பிரதிவாதிகளின் கக்ஷி:- முனிசிபாலிட்டி ஸ்ரீரங்கத்தில் உற்பத்தியாவதற்கு முந்திய கால முதல் தாவாவில் காணப்பட்டதெருவுகள் மூன்றும் பொது ஜனங்கள் எப்போதும் போக்குவரவு செய்ய பாத்தியமுடைய தெருவுகளாக விருந்தன. ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்குத்தான் அந்தத் தெருவுகள் சொந்தமானவை மற்றவர்கள் அந்த தெருவுகளில் பிரவேசிக்கக்கூடாது என்பதை ருஜூ படுத்த யாதொரு தஸ்தாவேஜி சாக்ஷி ஆதாரமும் இல்லை என்று சொன்னார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் T. R. ராமச்சந்திர அய்யர், மிஸ்டர் T. ரங்காச்சாரியார், மிஸ்டர் K. பார்த்தசாரதி அய்யங்காரும் ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் K. சீனிவாசய்யங்காரும், N. ராஜகோபாலாச்சாரியாரும், C. பத்மநாப அய்யங்காரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:-அப்பீல் வாதிகள் சொல்லும் கக்ஷியைத் தள்ளிவிட்டு அப்பீல் பிரதிவாதிகள் சொல்லும் கக்ஷியை ஏற்றுக்கொண்டு கீழ் கோர்ட்டாருடைய தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

(11-1-1915)

(10)

## பெல்லாரி கொலைக் கேஸ்.

ஜட்ஜி மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— வீரப்பனக்கவுட், தோடனக்கவுட், சேனுவீரப்பனகவுட் முதலியவர்கள் பெல்லாரி செஷன் கோர்ட்டாரால் கலகம் செய்ததாகவும் கொலை செய்ததாகவும் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு ஜென்ம தீபாந்திர தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்து தங்களை ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று மனுசெய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—ஆனரபில் பாரிஸ்டர் மிஸ்டர் டி. ரிச்மெண்டும், மிஸ்டர் E. K. ஆஸ்பர்னும், மிஸ்டர் ரங்கனாதய்யர் ஆகிய இவர்கள் குற்றவாளிகளுக்காகவும், பப்ளிக் பிராசிக்கியூட்டர் கவர்ன்மெண்டு தரப்பிற்காகவும் ஆஜரானார்கள்.

அப்பீலின் நடவடிக்கை:— இந்த மனு முன்னொரு நாள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்டு கோர்ட்டிற்கு வந்தபோது பப்ளிக் பிராசிக்கியூட்டர் கேசின் வரலாற்றை அறிந்து கொள்ளும்பொருட்டு மனுவின் விசாரணை தள்ளி வைக்கப்பட்டது. கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டர் ஆஜராகி கோர்ட்டார் குற்றவாளிகளை ஜாமீன்பேரில் விடுவதை ஆக்ஷேபித்தார். மனுவில் இன்னொருபிரார்த்தனையும் குற்றவாளிகளால் செய்து கொள்ளப்பட்டிருந்தது. அதாவதென்னவென்றால் அப்பீல் முடிவடையும்பரியந்தம் தண்டனையை நிறுத்திவைக்க வேண்டுமென்பதே. இந்தப் பிரார்த்தனை சம்பந்தமாக பப்ளிக் பிராசிக்கியூட்டர் யாதொன்றும் பேசாமல் கோர்ட்டாருடைய இஷ்டத்திற்கு விட்டுவிட்டார். குற்றவாளிகளின் லாயர்கள், இந்தக் கேசில் ஒன்றாகச் சேர்த்து விசாரணை செய்யப்படாத குற்றங்கள் சேர்த்து விசாரணை செய்யப்பட்டிருக்கின்றன என்றும் ஆதலின் அது சட்டவிரோதமென்றும் ஆகவே இந்தக் கேஸ் புனர்விசாரணை செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

ஐக்கோர்ட்டார் உத்திரவு:—இந்தக் கேசின் விசாரணை ஆக்ஷேபிக்கப்படுகிறபடியாலும், குற்றவாளிகள் தேக அசௌக்கியமாயிருப்பதாய்ச் சொல்லப்படுகிறபடியாலும், அப்பீல் முடிவடையும் பரியந்தம் குற்றவாளிகள் விசாரணை செய்யப்படுவதற்காக காத்துக்கொண்டிருக்கும் கைதிகள் மாதிரியாக எண்ணப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்று கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

(11)

## ஒரு அடமான வியாஜ்ஜியம்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—பெல்காம் சமஸ்தானத்தில் வசித்துக்கொண்டுவரும் ஷாப்பூர் தர்மப்பா அப்பாஜி சுபேதார் என்பவர் தமக்கு ரூ. 31,000-க்கு ராஜாமுத்து கிருஷ்ண யெச்சேந்திர பகதூரால் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்த அடமானப்பத்திரத்தின்பேரில் ஐக்கோர்ட்டு அசல்தரப்பில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

பிரதிவாதியின் கக்ஷி:—அடமானம் ரூ. 31,100-க்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் வாதி ரூ. 4,200-தான் கொடுத்திருக்கிறார். பாக்கி ரூபா 15,800 வாதிகொடுக்கவேயில்லை. பிந்திய அடமானக்காரன் ராஜாவையும் இந்தக் கேசின் வாதியையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து முந்தி ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தபோது இந்த வியாஜ்ஜியத்தின் வாதிக்கு இந்த வியாஜ்ஜியத்தின் பிரதிவாதி எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று முந்திய வியாஜ்ஜியத்தில் ஒரு இஷியூ ஏற்படுத்தப்பட்டதென்றும் ஆனால் அந்த இஷியூ விசாரணை செய்யப்படவில்லை என்றும் ஆதலால் அந்த வியாஜ்ஜியம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கிறது.

கேசின் நடவடிக்கை:—பிரதிவாதி தாம் சொன்ன கக்ஷியை ருஜூப்படுத்த சாக்ஷி விசாரணை

செய்தார். வாதியும் சாக்ஷியாக விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

லாயர்கள்:— சொலிசிட்டர் கம்பெனியராகிய மெசர்ஸ் கிரானட் அண்டு குரோட்டரிக்ஸ் என்பவர்களுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ஷாமியர் வாதி தரப்பிற்கும், வக்கீல் மிஸ்டர் துரைசாமி அய்யர் பிரதிவாதிக்கும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:— பிரதிவாதி கொடுக்கவேண்டிய தொகைக்காக ரூ. 15,65 பெற்றுக்கொள்ள தயாராகயிருப்பதாக வாதி அறிவித்துக் கொண்டதின் பேரில் பிரதிவாதி சம்மதிக்க ஐக்கோர்ட்டார் ஷை கண்ட தொகைக்கு வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

(12)

## தாயார் கொலைக் கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

கேசின் விபரம்:— திருநெல்வேலி ஜில்லாவில் ராமசாமி தேவனுடைய பெண்சாதி துன்மார்க்க நடத்தை உடையவளாக விருக்கிறாள் என்று அவளுடைய ஜாதியார் அவளை ஜாதியைவிட்டு விலக்கி வைத்தார்கள். ராமசாமித்தேவன் தன்னுடைய தாயாரைக் கொலைசெய்து விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டான். பிராசிக்கியூஷன் தரப்பாருடைய கக்ஷி என்னவென்றால் ஜாதியாரை வம்பில் இழுத்து வைத்து அவர்களுக்குத் தொந்திரவு கொடுக்கவேண்டுமென்று கருத்துக்கொண்டு தாயாரைக் கொலை செய்விட்டான் என்பதே. செஷன் கோர்ட்டில் அசசர்கள் குற்றவாளி குற்றம் செய்யவில்லை என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஜட்ஜி அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் பிராசிக்கியூஷன் தரப்பார் குற்றவாளி அவனுடைய தாயாரைக் கொலை செய்வதற்குள்ள எண்ணத்தை ருஜுப்படுத்திவிட்டார்கள் என்றும் கொலைக்கு நேரான சாக்ஷியமில்லாமற் போனபோதிலும் அநுமான சாக்ஷியத்தைக் கொண்டு கொலை நடந்திருப்பதாக ருஜுப்படுகிறதென்று தீர்மானித்து குற்றவாளிக்கு மாண தண்டனை விதித்தார்கள்.

குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள்:—குற்றவாளிக்காக மிஸ்டர் கணபதி அய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராகியூட்டரும் பேசினார்கள்.

குற்றவாளியின் லாயர் பேசினது:— குற்றவாளி தன்னுடைய ஜாதியாருக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டுவதற்காக தன்னுடைய தாயாரைக் கொலை செய்துவிட்டான் என்று பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்லும் கக்ஷி நம்பப்படக்கூடியதாயில்லை என்றும் மேலும் கொலைக்குநேரான சாக்ஷியம் இல்லாதபோது குற்றவாளிக்கு செஷன் கோர்ட்டார் தண்டனை விதித்தது நியாயவிரோதமென்றுஎடுத்துப்பேசினார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் இருதரப்பு லாயர்கள் பேசினதையும் கேட்டுக்கொண்டு குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்துவிட்டார்கள்.

(13)

## போர்ஜரி கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

கேசின் விபரம்:— கிருஷ்ணா ஜில்லாவில் K. வெங்கய்யா என்பவனும் இன்னொருவனும் சேர்ந்து யூனியயிட்(Unitied)தபால் ஸ்டாம்புகளைப் பிரயோகப்படுத்தி ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்ததற்காக போர்ஜரி குற்றம் சாட்டப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்கள். செஷன் கோர்ட்டார் குற்றவாளிகளை விசாரணை செய்து 18-மாத கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். குற்றவாளிகள் இருவரும் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:— பாரிஸ்டர் மிஸ்டர் ஷண்முகம் பிள்ளை குற்றவாளிகள் தரப்பிற்கும், பப்ளிக் பிராசிக்கியூட்டர் கவர்ன்மெண்டு தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

குற்றவாளிகள் சொன்ன கக்ஷி:— புரோநோட்டு டி. மு. கோர்ட்டில் வெகு காலத்திற்கு முந்தி தாக்கல் செய்யப்பட்டதென்றும் அது கோர்ட்டாருடைய வசத்திலிருந்தபோது குற்றவாளிகளுடைய சத்துருக்கள் அதில் யூனியயிட் தபால் ஸ்டாம்பை வேணுமென்று ஒட்டி குற்றவாளிகளை வம்பில் இழுத்து வைக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் போர்ஜரி செய்திருக்கக்கூடுமென்று சொன்னார்கள்.

உத்திரவு:— கோர்ட்டார் அப்பீலை தாக்கல் செய்துகொள்ளும்படி உத்திரவு செய்தார்கள். குற்றவாளிகள் ஒவ்வொருவரிடமிருந்து ரூ. 1000-ம் ஜாமீனும், 500-ரூபாய்க்கு வேறு இரண்டு ஜாமீன்களும் பெற்றுக்கொண்டு குற்றவாளிகளை விடுவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

(14)

## மைத்துனியைக் கொலைசெய்த கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

கேசின் விபரம்:—திருச்சிறைப்பள்ளி ஜில்லா ஸ்ரீரங்கம் போலீஸ் ஸ்டேஷனில் கான்ஸ்டேபில் உத்தியோகத்திலிருந்த சிங்காரம்பிள்ளை என்பவன் தன்னுடைய மைத்துனியாகிய லக்ஷிமி என்பவளைக் கொலை செய்துவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டான். சிங்காரம்பிள்ளை என்பவன் கொலை நடப்பதற்குமுந்தி சில காலமாக லக்ஷிமியினுடைய தகப்பனுருடன் வசித்துவந்தான். கடந்த நவம்பர்மீ 19௳ சிங்காரம் பிள்ளை தன்னுடைய ஆபீஸ் கடமைகளைச் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவந்தவுடன் திண்ணையில்



உட்கார்ந்திருந்தான். லக்ஷிமியினுடைய தகப்பனும் மற்றும் வீட்டில் உள்ளவர்களும் வீட்டின் முன் தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். லக்ஷிமி அடுப்பாங்கரையிலிருந்தாள். சிங்காரம் பிள்ளை இருந்தாப்போலிருந்து அடுப்பாங்கரைக்குள் சென்று லக்ஷிமியினுடைய தலைமயிரைப் பிடித்து இழுத்து கத்தியால் குத்திக்கொண்டிருந்தான், தாழ்வாரத்திலிருந்த பெற்றோர்கள் கூச்சல்கேட்டு அடுப்பாங்கரைக்குள் ஓடோடிப்போய், சிங்காரம் பிள்ளை லக்ஷிமியை கழுத்தில் கத்தியால் குத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். சிங்காரம்பிள்ளை குத்திவிட்டு ஓடிப்போய்விட்டான். சில தினங்கள் சென்ற பிறகு வலியவே போலீஸ்டேஷனில் ஆஜரானான். இவன் ஸ்ரீரங்கம் சப் மாஜிஸ்டிரேட்டால் திருச்சிறைப்பள்ளி செஷன் கோர்ட்டு விசாரணைக்கு கமிட் செய்யப்பட்டான். குற்றவாளியினுடைய டிபன்ஸ் கக்ஷி என்னவென்றால் லக்ஷிமி துர்நடத்தை உடையவளாகவிருந்தாள் என்றும் அவளுடைய நடவடிக்கைகளைப்பற்றி ஊர் ஜனங்கள் கேவலமாக சொல்லிக்கொண்டிருந்ததை குற்றவாளி சிங்காரம் பிள்ளை பொறுக்க முடியாமல் அவளை கொலைசெய்துவிட்டான் என்பதே. பிராசிக்கியூஷன் தரப்பாருடைய கக்ஷி என்னவென்றால் குற்றவாளி தன்னுடன் புணரும்படியாக லக்ஷிமியை கூப்பிட்டதாகவும் அவள் கூச்சல்போட ஆரம்பித்ததாகவும் ஆதலால் அவளை கத்தியால் குத்தி கொன்றுபோட்டு விட்டான் என்பதே.

சேஷன் கோர்ட்டார் தீர்ப்பு:— பிராசிக்கியூஷன் தரப்பார் கக்ஷி ருஜுவானாலும்சரி, ருஜுபடாவிட்டாலும்சரி, கொலை நடந்திருக்கிறதென்பது சந்தேகமின்றி ருஜுப்பட்டிருக்கிறது. குற்றவாளி சொல்லும் டிபன்ஸ் கக்ஷி நம்பப்படக்கூடியதாயில்லை. அப்படி நம்பப்படக்கூடியதாக விருந்தபோதிலும் லக்ஷிமியைக் கொலை செய்தது கொஞ்சமேனும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதல்ல. இத்தியாதி சந்தர்ப்பங்களை முன்னிட்டு குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்தார்கள.

செஷன் கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட மரண தண்டனை ஐக்கோர்ட்டாரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதாக விருப்பதால் இந்தக்கேஸ் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:— குற்றவாளி முன்யோசனைசெய்து இந்தக் கொலையைச் செய்திருப்பதாக ருஜுப்படாததால் மரணதண்டனையை ஜென்ம தீபாந்திர தண்டனையாக மாற்றி விட்டதாக தீர்ப்பு சொன்னார்கள். (26-1-1915.)

(15)

## ஒரு பெண்சாதியின் தலைவிதி.

கேசின் விபரம்:— பெல்லாரியில் "ஓபிகாடு" என்பவனும் அவனுடைய வைப்பாட்டியாகிய "மல்லக்கா" என்பவளும், அவனுடைய பெண்சாதியாகிய நாகம்மா என்பவளும் ஒரே வீட்டில் வசித்துக்கொண்டு வந்தார்கள். சில காலமாக ஓபிகாடு என்பவனுடைய குடும்பத்தாருக்கும் அவனுடைய மாமனாருடைய குடும்பத்திற்கும் இருந்த மனஸ்தாபத்தை முன்னிட்டு நாகம்மாள் என்பவள் தன்னுடைய தகப்பனுருடைய வீட்டில் வசித்துக்கொண்டுவந்தாள். சில மத்தியஸ்தர்கள் ஏற்பட்டு இருகுடும்பங்களுக்குள்ள மனஸ்தாபத்தைத் தீர்த்துவைத்து நாகம்மாளை புருஷனுடைய வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள். நாகம்மாள் புருஷனுடைய வீட்டிற்கு வந்த 8-நாள்களுக்கு பிறகு குடும்பத்தில் ஒரு கலகம் உண்டானது. அதாவது என்ன கலகம்மென்றால் நாகம்மாள் "சட்னி" தயார் செய்யவில்லையாம். இதனால் மல்லக்காளுக்கு கோபம் பிறந்து அவளுடைய வயற்றின் இடதுபக்கத்தில் உலக்கையால் அடித்தாள். நாகம்மாள் "அய்யோ" "அய்யோ" என்று கூச்சல் போட்டுக்கொண்டு கதறினாள்; மல்லக்கா மறுபடியும் அவளை வயிற்றின் வலது பக்கத்தில் அதே உலக்கையால் அடித்தாள்; நாகம்மாள் பூமியில் புரண்டு அழுதுக்கொண்டிருக்கையில் ஓபிகாடு என்பவன் வெளியேயிருந்து வந்து அவளுடைய தலைமயிரைப்பிடித்து இழுத்து செருப்புக்காலுடன் அவளை உதைத்தான். நாகம்மாள் இறந்து போய்விட்டாள். ஆகவே நினையாமல் செய்த கொலைக் குற்றம் சாட்டப்பட்டு மல்லக்காவும், ஓபிகாடும் ஆகிய இருவர்களும் பெல்லாரி செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்கள். குற்றவாளிகள் என்ன டிபன்ஸ் சொன்னார்கள் என்றால் தாங்கள், கொலை நடந்ததாகச் சொல்லப்படும் தினத்தில், ஊரில் இல்லை என்றும், நாகம்மாள் ஏதோ ஒரு வலிப்புகண்டு இறந்துபோய்விட்டாள் என்றும் சொன்னார்கள்.

சேஷன் கோர்ட்டு த்தீர்ப்பு:-நாகம்மாளைக் கொலைசெய்துவிட வேணுமென்கிற எண்ணம் 1, 2, குற்றவாளிகளுக்குக் கிடையாதென்றும் ஆதலால் அபாயகரமான ஆயுதத்தை உபயோகப்படுத்தி நாகம்மாளுக்கு கடுங்காயம் விளைவித்த குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று குற்ற ஸ்தாபனைசெய்து இருவர்களையும் 7-வருடகடினகாவல் தண்டனைவிதித்தார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக ஓபிகாடு அப்பீல் செய்து கொண்டான்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:— 2 வது குற்றவாளியாகிய ஓபிகாடு என்பவன்பேரில் குற்ற ஸ்தாபனைசெய்து தண்டிக்கப்போதுமான சாக்ஷியமில்லை என்று தீர்மானித்து குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்து அவனை விடுவித்து விடும்படி தீர்ப்பு சொன்னார்கள். (21-1-1915.)

(16)

## தென் ஆற்காடு கொலைக் கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

கேசின் விபரம்:— (1) கிருஷ்ணசாமிப்பிள்ளை (2) வெங்கடபதிபிள்ளை—ஆகிய இருவர்கள் வெங்கடாசலபதி ரெட்டி என்பவனை கொலை செய்துவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு தென் ஆற்காடு ஜில்லா செஷன் ஜட்ஜியின் விசாரணைக்கு கமிட் செய்யப்பட்டார்கள்.

குற்றவாளிகள் கொலையைச் செய்வதற்கு பிராசிக்கியூஷன் தரப்பார் அடியிற் கண்ட காரணம் சொல்லியிருக்கிறார்கள்:—இறந்துபோனவன் பழனியிலிருந்து யாரோ ஒரு தாசி

யை வரவழைத்து குற்றவாளிகளுடைய வீட்டிற்குப் பக்கத்தில் குடியிருக்கச்செய்து அவர்களை அவமானப்படுத்துகிறதென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தான் (2) மூன்று வியாஜ்ஜியங்களில் இறந்துபோனவன் சாக்ஷி வாக்குமூலம் சொல்லியபோது குற்றவாளிகள் ஏதோ தஸ்தாவேஜியை போர்ஜரி செய்திருப்பதாக வாக்கு மூலம் எழுதிவைத்திருந்தான் (3) இறந்துபோனவன் கடைசியாக குற்றவாளிகளுடன் பார்க்கப்பட்டான். (4) குற்றவாளி காணாமற் போயிருப்பதைப்பற்றி போலீசார் குற்றவாளிகளை விசாரணை செய்தபோது குற்றவாளிகள் போலீசாரிடம் புரட்டான பதில் சொன்னதுமன்றி இறந்து போனவன் காணாமற்போயிருப்பதைப்பற்றி யாதொரு தகுந்த ஜவாப்பும் சொல்லவில்லை.

கேசின் நடவடிக்கை:—செஷன் ஜட்ஜி கேசை விசாரணைசெய்து போலீசார் 3, 4, குற்றவாளிகளை முத்துசெட்டி என்பவனுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் தூணில் கட்டிவைத்து அடித்து சாக்ஷியம் ஜோடித்திருக்கிறார் என்று ரிமார்க்செய்து ஆயினும் கொலை நடந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்து கொலையைக் கண்ணால் பார்த்த சாக்ஷியமில்லாதபோது தூக்குத்தண்டனை விதிப்பது தகாது என்று அபிப்பிராயப்பட்டு குற்றவாளிகளுக்கு ஜென்ம தீபாந்திர தண்டனை விதித்தார்கள்.

இந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:— அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் C. நரசிம்மாச்சாரியாருடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் E.R. ஆஸ்பர்னும், கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிகியூட்டருக்குப் பதிலாக மிஸ்டர் கிட்லி ஸ்மித்தும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டாருடைய தீர்ப்பு:— பிராசிக்யூஷன் தரப்பு சாக்ஷிவாக்கு மூலங்கள் ஒன்றுக்கொன்று முரணாயிருக்கிறதென்றும் கொஞ்சங்கூட நம்பத்தக்கதாயில்லை என்றும் கோர்ட்டார் தீர்மானித்து குற்ற ஸ்தாபனைக்குப் போதுமான சாக்ஷியமில்லை என்று சொல்லி குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்து குற்றவாளிகளை விட்டுவிடும்படி தீர்ப்பு சொன்னார்கள். (25-1-1915.)

# *Important Rulings.*
# முக்கியமான தீர்ப்புகள்.

—:o:—

## INDIAN COMPANIES ACT.
## இந்தியன் கம்பெனி சட்டம்.

ஒரு ஜாயிண்ட்ஸ்டாக் கம்பெனியின் பங்குதாரியிடமிருந்து பங்கை டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டிருப்பதால் கம்பெனியின் கடன்காரன் ஸ்தானத்திலிருப்பவன் கம்பெனியிடமிருந்து தனக்கு வரவேண்டிய பணத்தைக் கேட்டான். கடன்காரன் கேட்பது ஒரு மோசமானதாயிருக்கிறதென்று அந்த டிமாண்டு சட்டப்படி செலாவணியாக மாட்டாதென்றும் கம்பெனி உண்மையில் [illegible] கடனைக்கொடுக்க மறுதலித்து விட்டது. இதன்பேரில் கம்பெனியின் சமாசாரங்களை முடிவுக்குக்கொண்டு வந்து விடும்படியாக கடன்காரன் கோர்ட்டில் மனுகொடுத்தான். இந்த மனுவில் தனக்குச் சேரவேண்டிய பணத்தை முழுதிலும் கம்பெனி கொடுக்க சக்தியற்றதாயிருக்கிறதென்று சொல்லப்படவில்லை. கீழ்க்கோர்ட்டார் மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். கடன்காரன் அப்பீல் செய்துகொண்டான். மனுவை கீழ்க்கோர்ட்டார் தள்ளுபடி செய்தது நியாயம் என்றும் ஏனென்றால் கம்பெனி தன்னுடைய கடனை சீக்கிரமாகவும் தகுந்த விதிப்படியும் தீர்க்கும்பொருட்டு இன்சால்வென்டு நடவடிக்கை நடத்தும்பொருட்டு கம்பெனியை கட்டாயப்படுத்த வேண்டுமென்பது கடன்காரனின் கருத்தாயிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

கம்பெனி தன்னுடைய நியாயமான கடன்களைத் தீர்க்க சக்தியற்றதாகவிருந்தால் மட்டிலும், கடன்காரனுடைய மனுவின்பேரில் கம்பெனியை முடிவுக்குக்கொண்டு வந்துவிடக்கூடும். கம்பெனி கடனைச்செலுத்த சக்தியற்றதாயிருக்கிறதென்று எப்படி அறிந்துகொள்ள வேண்டுமென்றால் கடன்காரன் கடனை கிரமப்பிரகாரம் கேட்டும் கம்பெனி கடனைத்தீர்க்க அலக்ஷியமாகவிருந்தால், அது கடனைத்தீர்க்க வகையற்றதாக விருக்கிறதென்று எண்ணப்படவேண்டும். அந்த அலக்ஷியம் எப்போப்பட்டதென்று அந்தக் கேசின் விஷயங்களுக்குத் தகுந்தபடி தீர்மானிக்கப்படவேண்டும். கடன்காரன் டிமாண்டு செய்யும் கடன் ஆக்ஷேபிக்கக்கூடியதென்று கம்பெனி டிபென்ஸ் சொன்னால், அந்த டிபென்ஸ் உண்மையானதா அல்லது புரட்டானதா என்றும் கோர்ட்டார் ஆரம்பத்தில் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. Tulasidas Lalubhai v. Bharatrhand Cotton Mills Co. Ltd; 16 Bom. L. R. 692.

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு கம்பெனியின் மீது கொண்டுவந்த வியாஜ்ஜியம் அந்த கம்பெனி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு கடனைத்தீர்க்க ஆரம்பித்த பிறகு அதாவது லிக்குவிடேஷன் செய்ய ஆரம்பித்த பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது.

வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது, சர்க்காரால் நியமிக்கப்பட்ட லிக்குவிடேட்டர் முன்னில் அந்த வியாஜ்ஜியத்தில் கண்ட பாத்தியதையை ருஜுப்படுத்துவதை தடைப்படுத்தமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. Beary Lal v W. K. Porter, 24 Ind. Cas. 99.

—:o:—

## GUARDIAN & WARD ACT.
## மைனர் கார்டியன் சட்டம்.

ஒரு மைனர் புத்திரனுக்கு கோர்ட்டாரால் அவனுடைய தாயார் கார்டியனாக நியமிக்கப்பட்டாள். அந்த மைனர் புத்திரனுக்கு வயது 14. அவன் தகப்பன்வழி சிறிய பாட்டனுடன் வசித்துக்கொண்டு வந்தான். அவனைத் தன்னுடைய வசத்தில் ஒப்பு



விக்கும்படியாக கார்டியன் வார்டு ஆக்ட் 25-வது பிரிவின்படி தாயார் கோர்ட்டில் மனு செய்து கொண்டாள். மைனர் புத்திரன் அவனுடைய சிறிய பாட்டனுடன் இஷ்டப்பட்ட காலம்வரையில் வசித்துக்கொண்டு வரலாமென்று சொல்லி ஜில்லா ஜட்ஜி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த விஷயத்தைத் தீர்மானிப்பதில் மைனர் எந்தவிடத்திலிருந்தால் க்ஷேமப்படுவான் என்று ஆராய்ந்துப்பார்த்து தீர்மானிக்க வேண்டுமென்றும், ஆதலால் ஜில்லா ஜட்ஜி மனுவை தள்ளுபடி செய்தது நியாயமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் சுருக்கமாக விசாரணை செய்தது போதுமானதென்றும் நீண்டகாலம் விரிவாக விசாரணை செய்ய கட்டுப்பட்டவரல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. Mussammat Juggo Karur v. Durga Das, 249 P.L.R. 1914.

## PROVINCIAL SMALL CAUSE COURT ACT.
## வெளியூர் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்ட்.

வீட்டு குடிக்கூலியைத் தவிர மற்றப்படி தீர்வை சம்பந்தமான பாக்கிக்காகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களை ஸ்மால்காஸ்கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்யக்கூடாது. அப்பேர்ப்பட்ட வியாஜ்ஜியங்களில் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொள்ளுவதை சி. பு. கோ. 102-வது பிரிவு தடைப்படுத்தமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. Sahodora Murdial v. Sarabosobha Dasi, 20 C. L. J. 494.

## SUCCESSION CERTIFICATE ACT.
## வார்சு சர்ட்டிபிக்கேட் சட்டம்.

இறந்து போனவன்பேரில் எழுதிக்கொடுக்கப் பட்ட பிராமிசரி நோட்டின்பேரில் கொண்டுவரப் பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில், டிக்கிரி நிறைவேற்றப் படுவதற்கு முந்தி வார்சு சர்டிபிக்கேட் ஆஜர்படுத்தப்பட வேண்டுமென்று என்கிற நிபந்தனை அல்லது கண்டிஷன் (Condition) பேரில் டிக்கிரி பிறப்பிக்கக் கூடாது. எவன்பெயரால் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கப் பட்டதோ அவனுடைய விதவை அந்த நோட்டை டிரான்ஸ்பர்செய்து, டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டவன் அந்த நோட்டின்பேரில் வியாஜ்ஜியம்கொண்டுவந்திருந்தபோதிலும் அம்மாதிரியான டிக்கிரி பிறப்பிக்க கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாது. அராமுது அய்யங்கார் v. கலியப்பெருமாள், 24 இ.கே. 143; Aramudu Iyengar v. Kalia Perumal, 24 I. C. 143.



## INDIAN RAILWAY ACT.
## இந்தியன் ரயில்வே ஆக்ட்.

இந்தியன் ரயில்வே ஆக்ட்டின் விதிகளில் 74-வது விதியில் ஒரு ரிட்டர்ன் டிக்கட் பிறந்த மணிக்கும் அதே தினத்தின் நடு ராத்திரிக்கும் மத்தியில் உள்ள காலம் ஒரே நாளாகக் கணக்கிடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பது கிரமமற்றதுமல்ல சட்ட விரோதமானதுமல்ல. ரிட்டர்ன் டிக்கட்டிலேயே எந்தத் தேதியில் ரிட்டர்ன் டிக்கட்டின் வலிவு முடிவு அடைகிறதென்று அச்சிடப்பட்டிருப்பது அல்லது எழுதப்பட்டிருப்பது கம்பெனி பயிரங்கப்படுத்திருக்கும் போதுமான நோட்டீசாகும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தியா காரியதரிசி v. சாஹிஜ்ராம் ஆசன்மால், 25 இ. கே. 801; Secretary of State v. Sahijram Asanmal, 25 Ind. Cas 801.

## LAND ACQUISITION ACT.
## நிலம் சம்பாதிக்கும் ஆக்ட்.

நிலத்தின் விலை விஷயமாக நிலஸ்வான்தாருக்கும் குடிக்குமிருந்த தகராரில் கலெக்டர் பிரவேசித்து விலையை நிரணயித்தார். நிலஸ்வான்தார் நிரணயிக்கப்பட்ட விலையை அறிவித்து கோர்ட்டிற்கு மனுசெய்து கொண்டார். குடி மனுசெய்து கொள்ளவில்லை.

கலெக்டரால் நிரணயிக்கப்பட்ட விலையை குடி இனி ஆக்ஷேபிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. Maharali Walad Mitho v. Diwan Mustaksing, 25 I. C. 803.

## BENAMI TRANSACTIONS.
## பெயர் இரவல் விவகாரங்கள்.

ஒரு முகமதியன் தன்னுடைய பெண்சாதி பெயராலும் புத்திரிகளுடைய பெயராலும் சில சொத்துக்களை வாங்கினான். அந்த சொத்துக்களை அவர்களுக்குத் தானமாக கொடுக்கும் பொருட்டு அதை அப்படி வாங்கியிருக்கிறான் என்று பலமாக யூகிக்கப்படலாம். தானமாகக்கொடுக்கும் பொருட்டு அவைகளை வாங்கவில்லை என்று எவன் சொல்லுகிறானோ அவன் அதை ருஜுப்படுத்தவேண்டியது.

எந்த ஐவேஜியைக்கொண்டு இந்த சொத்துக்களை வாங்கியிருக்கிறானோ அந்த ஐவேஜி அவனுடைய சொந்த ஐவேஜி என்றும், அந்த சொத்துக்களை தன்னுடைய சொந்த சொத்துக்களாகப் பாவித்து நடத்திவந்தான் என்றும் அவைகளிலிருந்து வரும் வருமானத்தை அவனுடைய சொந்த கணக்கு புஸ்தகத்தில் வரவு வைத்து வந்தான் என்றும் சகல காரியங்களுக்கும் அச்சொத்துக்களுக்கு அவனே சொந்தக்காரனாக பொது ஜனங்

களால் எண்ணைப்பட்டு வந்தான் என்றும் ருஜூப்படுத்தப்பட்டபோது பெண்சாதிக்கும் புத்திரிகளுக்கும் ஜீவனங்கொடுப்பதற்காக அந்தச் சொத்துக்களை வாங்கவில்லை என்று தீர்மானிக்கப்படவேண்டும். அப்துல் ரஹிமான் நாச்சியாள் v. மீரத்தாயார் அம்மாள், 24 இ. கே. 10; Abdul Rahiman Nachiyal v. Mirathayar Ammal, 24 I C. 10.

## PRELIMINARY DECREE.

### ஆரம்படிக்கிரி.

பழைய சி. பு. கோவின் பிரகாரம் ஒரு ஆரம்ப டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளப்படாமற் போனபோதிலும் முடிவான டிக்கிரிக்கு விரோதமாக செய்துகொள்ளப்பட்ட அப்பீலில் ஆரம்ப டிக்கிரியையும் ஆக்ஷேபிக்கக் கூடுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு குமஸ்தா அல்லது ஏஜண்டு ஒரு எஜமானிடம் வேலையில் அமர்வதற்காக தன்னுடைய ஸ்தாபரசொத்தை ஜாமீனாகக்கொடுத்தான். ஏஜண்டு வேலை பார்த்து வந்தவகையில் அவருக்கும் எஜமானுக்கும் கணக்கு வழக்குதீர்த்தபோது எஜமானுக்கு ஏஜண்டு பணம் கொடுக்கவேண்டியதாயிருந்தது. ஆதலால் எஜமான் தன்னிடம் ஏஜண்டால் ஈடுவைக்கப்பட்ட ஸ்தாபரசொத்திலிருந்து தொகையை வசூல்செய்து கொள்வதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். லிமிட்டேஷன் ஆக்ட் முதலாவது ஷெடியூல் 131-வது பிரிவின் தாற்பரியப்படி இந்த வியாஜ்ஜியம், எந்த தொகைக்காக ஒரு ஸ்தாபரசொத்து ஈடுவைக்கப்பட்டதோ அந்தத் தொகையை வசூல் செய்ய கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமாகும். இப்பேர்ப்பட்ட வியாஜ்ஜியத்திற்கு காலாவதி தோஷம் எந்தத் தேதிமுதல் பணம் பாக்கிபட்டதோ அந்தத் தேதியிலிருந்து 12-வருடங்களுக்குப் பிறகு ஆரம்பமாகின்றது. அதாவது 12-வருடங்களுக்குள் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. Tirulokianath Mandal v. Abanish Chandra Roy, 24 I. C. 18.

### ஜப்தி.

1882-ம் வருடத்திய சி. பு. கோவின்படி விடுவிக்கப்படாத ஜப்தி ஊர்ச்சிதத்திலிருப்பதாக எண்ணப்படவேண்டும்.

ஒரு சொத்து இரண்டு கோர்ட்டுகளால் ஜப்தி செய்யப்பட்டது. கீழ்கோர்ட்டாருடைய ஜப்தியை முன்னிட்டு சொத்து ஏலம் போடப்பட்டது. இந்த ஏலவிற்பனையை ரத்து செய்யவேண்டுமானால் அந்த கோர்ட்டாரால்தான் ரத்து செய்யப்படவேண்டும். இந்த காரியத்திற்காக ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்படவேண்டியது அனுவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. Peetiyakkal Vattakke Pureyil Mallahi v. Marakkarakath Ahammad, [1914] M. W. N. 796.

### வியாஜ்ஜியம் முற்றுப்பெறுவது.

ஒரு வியாஜ்ஜியம் முடிவுபெற்றதென்று கோர்ட்டார் செய்யும் உத்திரவு, சி. பு. கோவில் "டிக்கிரி" என்கிற பதத்திற்கு தாற்பரியம் சொல்லப்பட்டிருக்கிறபடி, ஒரு டிக்கிரியாகமாட்டாது. வியாஜ்ஜியம் முடிந்துபோய் விட்டதென்று கோர்ட்டார் கூறும் உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் செய்துகொள்ளப்படக்கூடாத ஒரு கேசில் செய்துகொள்ளப்பட்ட ஒரு அப்பீலை முதல் கோர்ட்டார் ஏற்றுகொண்டு விசாரணை செய்த உத்திரவில் இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் பிரவேசிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது. Walayet Hussain v. Ramial, 12 A. L. J. 1113.

### முந்தி வியாஜ்ஜியம் பிந்திய வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்துவது.

இருகக்ஷிக்காரர்களும் ஆஜராகாததை முன்னிட்டு ஒரு வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டால் இந்த வியாஜ்ஜியத்தின் டிக்கிரி, பின்பு இதே வியாஜ்ஜிய மூலத்திற்காக இதே கக்ஷிக்காரர்களால் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்திற்குத் தடையாகவிருக்கமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு ஸ்தாபர சொத்தை உள்ளபடி கிரையம் பெற்றவன் எவன் பெயரால் சொத்தை வாங்கியிருக்கிருனோ அவனிடமிருந்து, சொத்தை தன்வசப்படுத்திக் கொள்ளும்பொருட்டு ஒரு சாசனம் எழுதிவாங்க வேண்டியதில்லை. Brij Nandan Singh v. Kailash Tewary, 24 I. C. 17.

### வியாஜ்ஜியத்தை மாற்றிக்கொள்ளுவது.

பிரதிவாதி அமரிட்சரில் வசித்து வருகிருர். அவருக்கு அந்த ஊரில் அனேகர் சாக்ஷி சொல்லுவார்கள். கராச்சியில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஒரு வியாஜ்ஜியத்தை அமரிட்சருக்கு மாற்றிக்கொள்ள மேலே சொல்லப்பட்ட இரண்டு காரணங்களும் போதுமான தகுந்த காரணங்களல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. The Firm of Shamsuddin Mehir Bux v. The Firm of Ali Mahomed Abdila, 8 S. L. R. 48.

### உயில் எழுதப்பட்டிருக்கும் நடை.

ஒருஉயிலில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களைக்கொண்டு ஒரு வியாஜ்ஜியம் உண்டானல் அந்த வியாஜ்ஜியத்தின் செலவு தொகைகளுக்கு எஸ்டேட்டின்பேரில் டிக்கிரி கொடுக்கப்பட வேண்டுமேயொழிய டிரஸ்டிகள்பேரில் கொடுக்கப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. Godavarthi Peria v. Godavarthi Lakshmi Devamma 24 I.C. 96.

### ஏலத்தில் வாங்கினவன்.

முந்திய அடமான பாத்திதையை உட்படுத்தி ஒரு அடமானம் வைக்கப்பட்டசொத்தை ஏலம் போடும்படியாக T. என்பவன் டிக்கிரி பெற்றுக்கொண்டான். சொத்து ஏலம் போடப்பட்டதில் T. என்பவனே அந்த சொத்தை எடுத்தான். T. என்பவன் கோர்ட்டு மூலியமாக சொத்தை வசப்படுத்திக்கொண்டான். முந்திய அடமானக்காரன் சொத்தை தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று கோர்ட்டில் மனுசெய்துகொண்டான். கோர்ட்டார் இந்த மனுவை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது. Tej Pal v. Tara Singh, 24 I. C. 93.



### ஏலவிற்பனை.

1859-ம் வருடத்திய சி. பு. கோ. ஊர்ச்சிதத்திலிருக்கும்போது ஒரு சொத்து ஏலம் போடப்பட்டது. வாதியின் முன்னோர் ஒருவர் பிரதிவாதியின் முன்னோர் பெயரால் சொத்தை ஏலத்தில் எடுத்தார். இந்த சொத்துயாருக்குச் சொந்தமானதென்பதைப்பற்றி கக்ஷிக்காரர்களுக்குள் ஒரு தகரார் உண்டானது. அந்த சமயத்தில் 1908-வருடத்திய ஆக்ட் ஊர்ச்சிதத்திற்கு வந்து விட்டது. 1908-ம்வருடத்திய ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி இந்த சொத்து சம்பந்தமான வியாஜ்ஜியம் பைசல் செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. Gaye Prasad v. Lareti Kuar, 12 A. L. J. 1145.

### மத்தியஸ்தர்கள்.

ஒரு லேவாதேவி கம்பெனியின் கூட்டுபாகஸ்தர்களுக்குள் வித்தியாசங்களும் தகரார்களுமுண்டாகி தங்களுடைய வித்தியாசங்களையும், சச்சரவுகளையும் மத்தியஸ்தர்களிடம் சொல்லி அவர்கள் ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தீர்மானம் சொல்லிவிட்டால் அந்த தீர்மானத்திற்குத் தாங்கள் கட்டுப்படுவதாகவும் எழுத்து மூலியமாக ஒப்புக்கொண்டார்கள். குறிப்பிட்ட தேதிக்குள்ளாக மத்தியஸ்தர்கள் தீர்ப்பு சொல்லிவரவேண்டிய நிலுவைகள் எல்லாவற்றையும் வாதி ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கிப்போட்டபடியால் அந்த நிலுவைகள் சம்பந்தமான கணக்குகளில் ஏதேனும் விடப்பட்டிருந்தாலும் அல்லது பிசகு ஏற்பட்டாலும் அவைகளுக்குப் பிரதிவாதியே ஜவாப்புதாரியாக விருக்கவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள். மத்தியஸ்தர்களுக்கு அறிவித்துக்கொள்ளப்பட்ட பிரஸ்னைகளை அவர்கள் முடிவாக தீர்மானிக்கவில்லை. ஏன் என்றால் கணக்கில் ஏதேனும் வேணுமென்றோ அல்லது அகஸ்மாத்தாகவோ, ஏதேனும் பிசகேனும் தவறுதலேனும் உண்டானல் வாதி பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடும்.

மத்தியஸ்தர்கள் ஒரு சமயம் செய்த தீர்மானத்தைப் பரிசீலனை செய்யும்படியாக கோர்ட்டார் பிரவேசிக்காமல் அவர்களுக்கு அனுப்ப சட்டத்தில் ஆதாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. P. L. M. சுப்பிரமணிய செட்டி v. K. R. V. நெல்லையன் செட்டி, 24 இ. கே. 132; P. L. M. Subramania Chetty v. K. R. V. Nellian Chetty, 24 I. C. 132.

### பரிசீலனை செய்ய மனு.

சி. பு. கோ. 115-வது பிரிவின்படி ஒரு உத்திரவு பரிசீலனை செய்யப்படும்படியாக மனுசெய்துகொள்ளப்பட்டது. எந்த உத்திரவிற்கு விரோதமான ரிவிஷன் மனுதாக்கல் செய்யப்பட்டதோ அந்த உத்திரவு பிறந்த தேதியிலிருந்து 8-மாதங்களுக்கு அதிகமாக ஆனபிறகும் கொஞ்சம்கூட மன்னிக்கப்படக்கூடாத 5-மாத காலத்திற்குப் பிறகும் மனுசெய்துகொள்ளப்பட்டது. இந்த மனுவை இவ்வளவு தாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருப்பதை மன்னிப்பு செய்ய போதுமான காரணமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. 24 I. C. 128

### ஐக்கோர்ட்டின் அதிகாரம்.

காலாவதி தோஷசம்பந்தமான பிரஸ்னை பிசகாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிற காரணத்தை முன்னிட்டு ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டின் புல் பென்சாருடைய தீர்மானத்தை சி. பு. கோ. 115-வது பிரிவின்படி பரிசீலனை செய்ய ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. N. C. குப்புசாமி அய்யங்கார் v. N. C. நாராயண அய்யங்கார், 16 ம. லா. டை. 438; N. C. Kuppusamy Iyengar v. N C. Narayana Iyengar, 16 M. L. T. 438.

### கோர்ட்டின் இயல்பான அதிகாரம்.

இரண்டாவது அப்பீலில், வாதி ரூ. 50 டிக்கிரி பிறந்த தேதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்குள்ளாக செலுத்திவிட்டதின்பேரில் சொத்து அவனிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்று ஐக்கோர்ட்டார் ஒரு டிக்கிரி பிறப்பித்தார்கள். வாதி ஷை குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தைச் செலுத்த தவறிப்போய்விட்டார். இன்னும் டயம் கொடுக்க வேண்டுமென்று வாதி ஐக்கோர்ட்டில் மனுசெய்துகொண்டான்.

டிக்கிரியில் முக்கியமான பாகம் காலம் என்றும் எதிர்கக்ஷியாருக்கு பதமாகவிருக்கும்படியாக அந்த காலத்தை விஸ்தரிக்கவாவது அல்லது கால சம்பந்தமாக டிக்கிரியை மாற்றவாவது ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மொய்தீன் குப்பாள் v. பொன்னுசாமிப்பிள்ளை; 16 ம. லா. டை. 430; Moideen Kuppal v. Ponnusamy Pillai, 16 M. L. T. 430.

### சீர்திருத்தம்.

பிசகு வெளிக்கு வந்து சிலகாலம் சென்ற பிறகு வாதி ஒரு பாகப்பிரிவினை வியாஜ்ஜியத்தில், ஆரம்படிக்கிரி கொடுக்கப்பட தயாராயிருந்தபோது சரியான சர்வே நம்பர்களை போட்டு பிரியாதை சீர்திருத்தும் பொருட்டு வாதி கோர்ட்டை அனுமதி கேட்டனர்.

வாதி ஆரம்பத்தில் அலக்ஷியமாகவும் அஜாக்கிறதையுமாகவிருந்துவிட்டான் என்கிற காரணத்தை முன்னிட்டு பிரியாதை சீர்திருத்த வாதிக்கு அனுமதி கொடுக்காமலிருக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. Syed Thrababchah v. Bibi Nagu, 8 S. L. R. 28.

### எஸ்க்பார்ட்டி டிக்கிரி.

ஒரு கடனாளியின்பேரிலும் அவனுக்கு மேலொப்பம் போட்டவன்பேரிலும் கொடுக்கப்பட்ட ஒரு எக்ஸ்பார்ட்டி டிக்கிரி சி. பு. கோ 9-வது ஆர்டர் 13-வது ரூலின் பிரகாரம் மேலொப்பம் போட்டவன் செய்துகொண்ட மனுவின்பேரில் இருவர்பேரிலும் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரி ரத்து செய்யப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டது. Mehamna Raya v. Musammat Barka, 24 I. C. 115.

### ரிவியூமனு.

ஒரு ஏலவிற்பனையை ரத்து செய்துவைக்கும் பொருட்டு சி. பு. கோ. 21-வது ஆர்டர் 90-வது ரூலின்படி ஒரு மனு செய்து கொள்ளப்பட்டது. மனுதாரான் விசாரணை தினத்தில் ஆஜராகாமலிருந்ததை முன்னிட்டு மனுதள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரான் மறுபடியும் மனுவை பயிலில் வைத்துக்கொள்ளும்படி மனுசெய்துகொண்டான். அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது. மனு விசாரணை செய்யப்பட குறிப்பிடப்பட்டிருந்த தேதியில் மனுதாரான் கோர்ட்டிற்கு வந்திருந்தான். அந்த சமயத்தில் கோர்ட்டார் வேறொரு கேசை விசாரணை செய்து

கொண்டிருந்தார்கள் ஆகவே மனுதாரன் சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடலாமென்று நினைத்து வேறொருகாரியமாக கோர்ட்டிற்கு வெளியே போனான். அவனுடைய பிளீடரிடமும் யாதொரு தகவலும் சொல்லாமல் போய்விட்டான். அவன் திரும்பிவருவதற்குள் கோர்ட்டார் இவனுடைய மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மனுதாரன் ஆஜராகாமலிருந்ததைப்பார்த்து மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தக் காரணங்கள் மனுவை மறுபடியும் பயிலில் வைத்துக்கொள்ளுவதற்குத் தகுந்த காரணமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. Cham Chandra Ghosh v. Chandi Charan Roy Chowdry, 19 C. W N. 25.

---

### உண்மையான சொந்தக்காரன்.

ஏலம் போடப்பட்ட சொத்தின் உண்மையான சொந்தக்காரன் என்று ஏலம் எடுத்தவனால் குறிப்பிடப்படுகிறவன் அந்த ஏலத்தை ரத்து செய்துவைக்க நடத்தப்படும் நடவடிக்கையில் சேர்ந்திருக்கவேண்டியது அவசியமல்லவென்றும் தனியாக அவன்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டியது கிரமமான வழி என்றும் தீர்மானிக்கப்பட்டது. கோயில் கந்தாடை அம்மன் ராமானுஜாச்சாரியார் v. காஞ்சிவரம் ஆடிசன்பேட்டை தனரக்ஷநிதி லிமிட்டெட், 24. இ. கே. 44; Koil Kandadai Amman RamanujaCharriar v. The Conjeeveram Hodsenpet Dhana Rakshaka Nidhi Ltd, 24 I. C. 44.

---

### ஈஸ்மெண்டு பாத்திதை.

பிரதிவாதிகளுடைய வீட்டிற்கு ஒட்டினாப்போல வாதிக்குச் சொந்தமான ஒரு கிணறு இருந்தது. இந்த தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு 9-வருடங்களுக்கு முந்தி பிரதிவாதிகள் தங்களுடைய வீட்டுச்சுவரில் ஒரு கதவுவைத்து வாதியினுடைய கிணற்றுக்கு அக்கிரமமாகப்பிரவேசிக்க ஆரம்பித்தார்கள். பிரதிவாதிகளுக்குச் சர்வசுதந்தரமான ஈஸ்மெண்டு பாத்திதை உண்டாகும் பரியந்தம் அவர்கள் அக்கிரமமாகப்பிரவேசித்த ஒவ்வொரு செய்கையாலும் வியாஜ்ஜியமூலம் ஒவ்வொரு சமயமும் புதிதாக உற்பத்தியாகின்றது. ஆகையால் வாதியின் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. Shes Prasad Sonar v. Mangar Manihar, 12 A. L. J. 1150.

---

### கார்டியன்,

"டிஜூரா" கார்டியனுயில்லாமல் "டிபாக்டோ" கார்டியனாகவிருக்கும்ஒருவரால் மைனருடையசொத்து பராதீனம் செய்யப்பட்டால் அந்தப் பராதீனம் ரத்து செய்யப்படக்கூடியதென்றுமட்டிலும் சொல்லுவது] போதாது. அந்தப் பராதீனம் துளிகூட செலாவணியாகமாட்டாது. பராதீனம் செய்யப்பட்ட சொத்தை வசப்படுத்திக்கொள்ளும் பொருட்டு மைனர் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டியது அனாவசியம் என்று தீர்மானிக்கப்பட்டது. லிமிட்டேஷன் ஆக்ட் 44-வது ஆர்ட்டிகில் இந்த வியாஜ்ஜியத்திற்குப் பொருந்துமேயல்லாமல் 44-வது ஆர்ட்டிகிள்ாவது அல்லது 91-வது ஆர்ட்டிகிலாவது பொருந்தாது என்று தீர்மானிக்கப்பட்டது. Hussain v. Rajaram, 10 N. L. R. 133.

---

### ஸ்வீகாரத்தாயாரின் பராதீனம்.

ஸ்வீகாரத்தாயார் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதற்கு முந்தி ஒரு ஸ்தாபரசொத்தைப் பராதீனம் செய்தனள். அந்தச் சொத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஸ்வீகாரப்புத்திரன் லிமிட்டேஷன் ஆக்ட் 144-வது ஆர்ட்டிகிலின்படி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து 12-வருடங்களுக்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டு வரலாமென்று தீர்மானிக்கப்பட்டது. அனந்தரவார்சு சம்பந்தப்பட்டவரையில் வியாஜ்ஜியமூலம் விதவை இறந்துபோனவுடன் உற்பத்தியாகின்றது என்று தீர்மானிக்கப்பட்டது. 24 I C. 76.

---

### சேர்ந்த முகமதிய குடும்பம்.

முகமதிய சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் சொத்துக்கள் சேர்ந்திருப்பதாக யூகிக்கப்படக்கூடாது என்றும் இந்த விஷயத்தில் இந்து குடும்பங்களும் முகமதிய குடும்பங்களும் பேதப்படுகின்றன என்று தீர்மானிக்கப்பட்டது. Imam Din v. Dalo, 144 P. W. R. 1914.

---

### புரோபேட்.

ஒரு உயிலுக்குப் புரோபேட் பெற்றுக்கொள்ள செய்துகொள்ளப்படும் மனுவில் ஒருவனுடைய பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. அவனைப் பிரதிவாதி யாக்கிவிடமாட்டார்கள். புரோபேட் அட்மினிஸ்டிரேஷன் (Probate & Administration Act) ன் 83-வது பிரிவின்படி கேஸ் மிகவும் விவாதத்திற்கு உள்ளானதாக விருக்கவேண்டும். புரோபேட்டில் சொல்லப்பட்டிருக்கிற மனிதன் பிரதிவாதி யாகுவதற்கு முந்தி வார்சு சர்டிபிக்கேட் கொடுக்கப்படுவதை ஆஜராகி ஆக்ஷேபிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. Abhoya Charan Basak v. Srimati Saroja Sundari Basak, 24 I. C. 27.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட்பீல்ட்.

மீனாக்ஷி வகையரா — வாதிகள்...அப்பீல் வாதிகள்.

vs.

முனியாண்டி மாணிக்கன் வகையரா--பிரதிவாதிகள் ....அப்பீல் பிரதிவாதிகள்.

கேசின் விபரம்:—மதுரை ஜில்லாவில் மூக்காயி என்கிற ஒரு ஹிந்து விதவையிருந்தாள். அவளுடைய புருஷனாகிய V. என்பவன் மூலியமாக அவளுக்கு M. பிரதிவாதி என்று பெயருடைய புத்திரன் இருக்கிறான். அவளுடைய புருஷன் இறந்துபோனபிறகு அவள் இரண்டாவது வாதியாகிய சோரபுருஷனுடன் வசித்து வந்தாள். இந்த சோரபுருஷன் மூலியமாக அவளுக்கு M. (முதல் வாதி) என்று பெயருடைய புத்திரி இருக்கிறாள். இரண்டாவது வாதியுடன் அவள் வசித்து வந்தபோது அவள் கொஞ்சம் பணம் மீர்த்துவைத்தாள். இந்த பணத்திற்கு யார் பாத்திதை உடையவர்கள் என்பதைப்பற்றித்தான் இந்த வியாஜ்ஜியம் உண்டாயிருக்கிறது. மூக்காயி இறந்து போனபின்பு அவளு



டைய சொந்தப் புத்திரனும் சோரப்புத்திரியும் தத்தம்க்கு அந்த ஸ்திரீதன சொத்து பாத்திய முடையது என்று கக்ஷி ஆடினார்கள். சோரப்புத்திரி 1-வது வாதியாகவும் சோரபுருஷன் இரண்டாவது வாதியாகவும் சேர்ந்து சொந்தப் புத்திரன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். கீழ்க்கோர்ட்டார்கள் சோரபுத்திரியைப்பார்க்கிலும் சொந்தபுத்திரன் தான் அதிக பாத்திதை யுடையவன் என்று தீர்மானித்தார்கள். சோரப்புத்திரியும் சோரப் புருஷனும் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:— அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. N. அய்யா அய்யரும் ஆஜரானார்கள்.

அப்பீல் வாதிகளின் வக்கீலுக்காக மிஸ்டர் P. S. நாராயணசாமி அய்யர் அடியிற்கண்ட பிரகாரம் பேசினார்:—இறந்துபோன மூக்காயி ஒரு வைப்பாட்டியல்ல. அவள் விவாகமான ஸ்திரீயானபடியால் அவள் அப்படி எண்ணப்படக்கூடாது. ஆகையால் அவள் ஒரு விபசாரியாகவாவது அல்லது தாசியாகவாவது எண்ணப்படவேண்டும். அவள் எப்படி எண்ணப்பட்டாலும் சரி, சோரபுத்திரி சொந்தப் புத்திரனைப்பார்க்கிலும் அதிக பாத்தியம் உடையவள். சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் விபசாரிக்கும் ஒரே சட்டம் தாசிக்கும் ஒரே சட்டமேயொழிய வெவ்வேறு சட்டமில்லை. விபசாரியாக யிருந்தாலும்சரி, தாசியாக யிருந்தாலும்சரி தாழ்த்தப்பட்ட பந்துக்கள் தாழ்த்தப்படாத பந்துக்களைவிட அதிக பாத்திதை உடையவர்கள்.

அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. N. அய்யா அய்யருக்குப் பதிலாக மிஸ்டர் P. R. கணபதி அய்யர் அடியிற் கண்டபிரகாரம் பேசினார்:—தாழ்த்தப்பட்ட பந்துக்கள் தாழ்த்தப்படாத பந்துக்களுக்குள் ஆகிய இவர்களுக்குள் யார் அதிக பாத்திய முடையவர்கள் என்கிற பிரஸ்னை இந்தக்கேசில் உண்டாகவில்லை. ஏன் என்றால் மூக்காயின் ஸ்திரீதன சொத்திற்குப் பாத்திதை பாராட்டும் இருதரப்பாரும் தாழ்த்தப்படாத பந்துக்கள். மூக்காயி இறந்து போனபோது அப்பீல் வாதி ஒரு விவாகமான ஸ்திரீ; ஆதலால் அவள் சோர புத்திரியாகயிருந்தபோதிலும் தாழ்த்தப்பட்ட பந்துவாக எண்ணப்படக்கூடாது. அவள் தாழ்த்தப்படாத பந்துவாக எண்ணப்பட்டால் அவள் சோர புத்திரியாக விருப்பதை முன்னிட்டு சொந்தப் புத்திரனைப்பார்க்கிலும் அதிக பாத்திதை உடையவளல்ல.

இறந்து போனவளுக்கு வார்சு இந்துலாப் பிரகாரம் வரவேண்டுமேயொழிய தாசிகளுக்குப் பொருத்தமான சட்டமல்ல. மூக்காயி ஒரு வைப்பாட்டியாக விருந்தாள். அவள் தாசியுமல்ல, விபசாரியுமல்ல. ஒருஹிந்து புருஷன் வைதீக ஆசார ஒழுங்குகளிலிருந்து நீங்கியிருந்தபோதிலும் அவனுக்குப் பொருத்தமான சட்டம் ஹிந்துலா என்றே இ. லா. ரி. 31 கல். 11-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுபோலவே ஒரு ஹிந்து விதவை சன்மார்க்க நடவடிக்கை யற்றவளாக விருந்தபோதிலும் அவள் ஒரு ஹிந்து அல்லவென்று சொல்லமுடியாது. அவள் இந்துலாவாலேயே பரிபாலிக்கப்படுகிறாள். அவளுடைய தகாத பழக்கவழக்கங்களை முன்னிட்டு இறந்து போனவள் தாழ்த்தப்பட்டவளாகமாட்டாள். இந்தக் காரணத்தை முன்னிட்டு அவள் ஜாதியைவிட்டு தள்ளப்படவுமாட்டாள். துன்மார்க்கமாக நடந்துகொண்டுவரும் ஒரு விவாகமான ஹிந்து ஸ்திரீ ஒரு தாசியல்ல. தாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சட்டம் அவளுக்குப் பொருந்தாது என்று 23 மதிராஸ் லா ஜெர்னல் 493-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சென்னை ராஜதானியில் தாசி வகுப்பார் பிரத்தியேகமான சட்டத்தால் பரிபாலிக்கப்படுகிறார்கள். அந்த வகுப்பைச் சேராதவர்களுக்கு அந்த சட்டம் பொருந்தாது. சோரபுத்திரி எந்த சட்டத்தின் பிரகாரமும் ஒரு வார்சாக எண்ணப்படமாட்டாள் என்று இ.லா.ரி. 32 பம். 562-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சொத்து சர்க்காருக்குச் சேர்ந்துபோவதை தடுக்க பாத்தியமுடைய பந்துவாக ஒருக்கால் எண்ணப்படலாம் என்று 18 கல். வீ. நோ. 1154-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பதிவிரதையாகவிருந்த ஒரு ஸ்திரீ பதிவிரதையாகவிருந்தபோது அவளுக்குப்பிறந்த புத்திரனுக்கு வார்சாக வருவதிலிருந்து விலக்கப்பட்டவளல்ல. அதுபோலவே சொந்தப் புத்திரன் அவளுக்கு வார்சாக வருவதிலிருந்து விலக்கப்பட்டவனல்ல.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:— "இந்துலாவின்படியும் அதை அனுசரித்து செய்யப்பட்டிருக்கும் தீர்ப்புகளின்படியும் ஒரு விபசாரியின் சோரபுத்திரர்களுக்கு சென்னை ராஜதானியில் வார்சு பாத்திதை கிடையாது. பிரதிவாதி மூக்காயினுடைய ஸ்திரீதன சொத்திற்குப் பாத்திதை யுடையவன். முதல் வாதிக்கு அந்த சொத்தில் யாதொரு பாத்திதையும் கிடையாது. ஆகையால் இரண்டாவது அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கிறோம்" என்று தீர்ப்பு சொன்னார்கள். 1. லா. வீ. 704; 1 L. W. 704.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜட்ஜி சர்ஜான் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

மைனர் ராஜீ என்கிற அய்யாரு நாய்க்கன் அம்மத்தாயி என்கிற கனகம்மாள் மூலியமாக—வாதி...அப்பீல் வாதி.

vs.

மைனர் ராமசாமி நாய்க்கன் இரண்டாவது அப்பீல் பிரதிவாதி மூலியமாக — பிரதிவாதிகள்...அப்பீல் பிரதிவாதிகள்.

கேசின் விபரம்:--தாவாச் சொத்துகளின் சொந்தக்காரனுகிய அய்யாரு நாய்க்கர் என்பவர் வெங்கடசாமி அய்யாசாமி என்கிற இரண்டு புத்திரர்களை விட்டுவிட்டு இறந்து போய்விட்டார். இருவர்களும் இறந்துபோகும்வரையில் சேர்ந்த குடும்பமாயிருந்து கொண்டிருந்தார்கள். அய்யாசாமி 1907-ல் ஒரு புத்திரனை விட்டுவிட்டு இறந்துபோனுன். இவன்தான் இந்த வியாஜ்ஜியத்தின் வாதி. வெங்கடசாமி ஒரு ஸ்வீகாரப்புத்திரனை விட்டுவிட்டு 1908-ல் இறந்து போய்விட்டான். இந்த ஸ்வீகாரப்புத்திரன்தான் இந்த வியாஜ்ஜியத்தின் முதல் பிரதிவாதி. அய்யாரு நாய்க்கன் ஜீவதிசையிலிருக்கும்போதே வெங்கடசாமி குஷ்ட வியாதியால் பீடிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான் என்றும் ஆகையால் இந்துலாப்பிரகாரம் வார்சு பாத்தியதையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தான் என்றும் ஆகையால் அய்யாசாமியும் அவருக்குப் பிறகு வாதியும் சொத்தை வார்சுக்கிரமப்படி அடையவேண்டியவர்கள் என்றும் முதல் பிரதிவாதி வெங்கடசாமியால் உண்மையில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டது உண்மையாகவிருந்தபோதிலும் அது செல்லுபடியுள்ளதல்லவென்றும் வாதி பிரியாதில் சொல்லி தாவா சொத்துக்களைப் பெறுவதற்காக மாயவரம் சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வெங்கடசாமி வார்சு பாத்தியதையிலிருந்து விலக்கப்படும்படியான அவ்வளவு பெரிய குஷ்டநோயால் பீடிக்கப்படவில்லை என்றும் முதல் பிரதிவாதி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டது சட்டப்படி செல்லும் என்று சப் கோர்ட்டார் தீர்மானித்து குடும்பச் சொத்தைப் பாகப்பிரிவினை செய்வதற்காக ஆரம்படிக்கிரி பிறப்பித்தார்கள். வாதி இதன் பேரில் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:— அப்பீல் வாதிக்காக ரைருநம்பியாருக்குப் பதிலாக மெசர்ஸ் T. R. ராமச்சந்திர அய்யரும், N. A. கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் T. ரெங்காச்சாரியாரும், T. நரசிம்ம அய்யங்காரும், V. K. வேணுகோபால நாயுடும் ஆஜரானுர்கள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—பூர்வீக ஹிந்து கிரந்தகர்த்தாக்களால் எழுதப்பட்ட வைத்திய சாஸ்திரங்களை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். ஒரு குஷ்டநோய் சீரீஸ்தப்படுத்தக்கூடாது என்று சொல்லவேண்டுமானுல் தேகத்தின்பேரில் புழுக்களிருக்கவேண்டும் ரணங்களிலிருந்து ஊன் தண்ணீர் வடிந்துகொண்டிருக்கவேண்டும் நெகங்கள் விழுந்து கொண்டிருக்கவேணும் கண்கள் இரத்தச் சிகப்பாயிருக்கவேண்டும். இந்தக் கேசில் ஏற்பட்டிருக்கும் வாக்குமூலங்களைக்கொண்டு வெங்கடசாமியின் குஷ்டநோயால் மேலேகண்ட குறிகள் காணப்பட்டிருந்தன என்று ருஜுப்படவில்லை. ஆகையால் வெங்கடசாமிக்கு உண்டாயிருந்த குஷ்டம் தீராக் குஷ்டமல்லவென்று தீர்மானிக்கின்றோம்.

ஆகையால், வெங்கடசாமி வார்சு பாத்தியதையிலிருந்து விலக்கப்படும்படியான அவ்வளவு குஷ்டத்தால் பீடிக்கப்பட்டிருந்தான் என்று ருஜுப்படுத்த வாதி தவறிப்போயிருக்கிறுர் என்று நாம் தீர்மானிக்கவேண்டும். ஆகையால் அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம். 1 லா. வீ. 715; 1 L. W. 715.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர்ஜான் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—பிரன்ச் இலாக்காவிலிருக்கும் ஒரு தேவஸ்தானத்திற்கு பிரிடிஷ் இலாக்காவில் நிலமிருந்து அந்த நில சம்பந்தமாக பிரன்ச் பிரஜைகள் பிரிடிஷ் கோர்ட்டில் வியாஜ்ஜிய மாடினுல் ஷை தேவஸ்தானத்திற்கு யார் டிரஸ்ட்டி என்பதை விசாரணைசெய்து தீர்மானிக்க பிரிடிஷ் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது. 1 லா. வீ. 724; 1 L. W. 724.

---

அடமானம்.

ஒரு சொத்தை அடமானம் வைத்தவன் அதை மீட்பதற்காக ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்து அபஜெயப்பட்டான். அடமானம் வைத்துக்கொண்டவனுக்கு இந்த வியாஜ்ஜியத்தில் நேரிட்ட கோர்ட்டுச் செலவை அடமானத் தொகையுடன் சேர்த்துக்கொள்ள பாத்தியதையுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

அடமானச் சொத்தைமீட்கும் பாத்தியதையை கிரயம் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒருவன் அடமானம் வைத்தவனுடன் ஒப்பந்தம் செய்தான். ஒப்பந்தம் செய்து கொண்டவன் அடமானச் சொத்தின் மூலதஸ்தாவேஜிகளை தன்னிடம் கொடுத்தால்தான் அடமானத் தொகையைச் செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ளத் தயாராகவிருப்பதாக சொல்லுவது சட்டப்பிரகாரம் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய "டெண்டர்" ஆகமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. வரதராஜலு செட்டி v. தனலக்ஷிமி அம்மாள், 16 ம. லா. டை. 865.

---

வாதியிடம் 1874-ம் வருடத்தில் ஒரு வீடும் சில தோட்டங்களும் சாதாரண அடமானம் வைக்கப்பட்டது. 1877-ல் அடமானம் வைத்தவர்களும் வாதியும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டார்கள். அதென்ன ஏற்பாடு என்றுல் தோட்டங்களை, அடமானம் வைத்துக்கொண்டவன் அடமானத் தொகையின் வட்டிககுப்பதிலாக அனுபவித்துக்கொண்டு வரவேண்டும் என்பதே. இந்த ஏற்பாடு ரெவினியு கோர்ட்டுகளுக்கு மனுக்கள் மூலியமாக அறிவிக்கப்பட்டு தோட்டங்கள் வாதிக்கு ஸ்வாதீனப்படுத்தப்பட்டன. 1877-ம் வருடத்தில் செய்யப்பட்ட ஏற்பாடு ரெஜிஸ்டர் செய்யப்படாததால ஸ்வாதீன அடமானமாகமாட்டாது வட்டிக்குப்பதிலாக தோட்டத்தில் வருமானத்தை அனுபவித்துக் கொள்ளுகிறதென்று செய்யப்பட்ட ஒரு சாதாரண ஏற்பாடாகும். 1874-ம் வருடத்தில் பிறந்த அடமான ஆதரவின்பேரில் அடமானம் வைத்துக்கொண்டவன் அடமானச்சொத்தை விற்பனைசெய்ய வியாஜ்ஜியம் கொண்டுவரபாத்திய முடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. Devchand v. Pearay, 12 A. L. J. 1133.

---

கூட்டு சேர்ந்து அடமானம் வைத்துக்கொண்டவர்களுக்குள் ஒருவன் முழுஅடமானத் தொகையையும் மற்றொரு அடமானக்காரனிடம் கொடுக்கக்கூடாதென்று அடமானம்வைத்தவனுக்கு நோட்டீஸ் கொடுத்தான். அடமானம் வைத்தவன் இந்த நோட்டீசை புறக்கணித்து மற்றொரு அடமானக்காரனிடம் முழுத்தொகையையும் செலுத்தி விட்டான். பிறகு எவன் நோட்டீஸ் கொடுத்தானே அவனுக்கு அவனுடைய பாகத்திற்குள்ள தொகையைச் செலுத்தும்படியாக அடமானம் வைத்தவன் கட்டாயப்படுத்தப்பட்டான். மற்றொரு அடமானக்காரனிடமிருந்து பணத்தை வாப்பீஸ் பெற்றுக்கொள்ள அடமானவைத்தவனுக்கு பாத்திதை கிடையாது என்று தீர்மானிக்கப்பட்டது. Dakhni Din v. Bhawani Prasad, 24 I. C. 88.

---

நிபந்தனைக் குட்பட்ட கிரயம்.

4-11-1892-ல் பிரதிவாதிகள் தங்களுடைய நிலத்தை வாதியின் தகப்பனுருக்கு ரூ. 300-க்கு கிரயம் செய்தார்கள். வாதியின் தகப்பனுர் அதே தினத்தில் பிரதிவாதிகள் ரூ. 300-யை 5-வருடத்திற்குள் திருப்பி செலுத்திவிட்டால் தான் சொத்தைப் பழையபடி கிரயசாசனம் செய்துகொடுத்து விடுவதாக சம்மதித்து ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார். 1895-ம் வருடம் முதல் பிரதிவாதிகள் ஷை நிலத்தில் வாதியினுடைய குடிகளாகவிருந்து ஒவ்வொரு வருடமும் ரூ. 18 தீர்வை செலுத்திக் கொண்டு வந்தார்கள். பிரஸ்தாப நிலத்திற்கு ரூ. 300 கிரையம் நிரணயிக்கப்பட்டது ஜனக்கிரயம் என்று தீர்மானிக்கப்பட்டது. வாதி 1910-ல் நிலத்தை வசப்படுத்திக்கொள்ள வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதிகள் 1892-ல் நடந்த நடவடிக்கைகள் அடமானமே ஒழிய விற்பனை அல்லவென்று சொல்லி சொத்தை அடமானத்திலிருந்து மீட்டுக்கொள்ள பாத்திதை பாராட்டினுர்கள். அசல் கோர்ட்டார் பிரதிவாதிகள் சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு அடமானத்தைக் மீட்டுக்கொள்ள பிரதிவாதிகளுக்கு டிக்கிரி கொடுத்தார்கள். ஆனுல் கீழ் அப்பீல் கோர்ட்டார் 1892-ல் நடந்த நடவடிக்கைகள் "கிரயம்" என்று தீர்மானித்து வாதியின் பாத்தியதையை ஏற்றுக்கொண்டார்கள். பிரதிவாதிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள். 1892-ல் நடந்த நடவடிக்கைகள் "நிபந்தனைக் குட்பட்ட கிரய ரூபமான அடமானம்" என்று ஐக்கோர்ட்டார் தீர்மானித்து அசல் கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்துவிட்டார்கள். Madhavrao Keshavarao v. Shahebrao Ganpatrao 16 Bom. L. R. 769.

---

# *Acts & Commentaries.*

## சட்டங்களும் வியாக்கியானங்களும்.

—:o:—

### INDIAN PENAL CODE S. 359.
### இந்தியன் பினல் கோட் பி. 359.

---

KIDNAPPING

நரச்சோரம்.

---

"நரச்சோரம்" இரண்டு வகைப்படும் அவையாவன:—(1) பிரிடிஷ் இந்தியாவிலிருந்து நரச்சோரம் செய்துகொண்டு போவது; (2) சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து நரச்சோரம் செய்துகொண்டுபோவது.

"நரச்சோரம்" என்னும் குற்றத்தில் அடியிற்கண்ட அம்சங்கள் அடங்கியிருக்க வேண்டும்:—ஒருவனுடைய சம்மதமின்றி அவனை அழைத்துக் கொண்டு போயிருக்கவேண்டும்; (2) அல்லது யார் அவனுக்கு கார்டியனுயிருக்கிறுரோ அவருடைய சம்மதமின்றி அவனை அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும்; (3) அல்லது அவனையாவது அல்லது அவனுடைய கார்டியனையாவது மோசப்படுத்தி அல்லது ஏமாற்றி முறையே அவனுடைய சம்மதத்

துடனாவது அல்லது அவனுடைய அனுமதியைப் பெற்றாவது அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும்.

ஒரு குழந்தையை அதனுடைய சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து விலக்கிக்கொண்டுபோய் குழந்தை சம்பந்தமாகவும் இந்த குற்றம் செய்யப்படலாம். ஒரு மனிதனை கம்பெனியின் ராஜ்ஜியங்களுக்கப்பால் கொண்டுபோய் அல்லது கம்பெனியின் ராஜ்ஜியங்களுக் கப்பால் கொண்டுபோகும் பொருட்டு கப்பலில் ஏற்றிக்கொண்டு புருஷர்கள் சம்பந்தமாகவும் இந்தக்குற்றம் செய்யப்படலாம்.

கம்பெனியின் ராஜ்ஜியங்களுக்குள் ஒருவிடத்திலிருந்து மற்றொரு விடத்திற்கு ஒரு மனிதனை அவனுக்குப் பொய்யும் புரட்டான நம்பிக்கை ஊட்டி அடித்துக்கொண்டுபோய் அவனை கம்பெனியின் ராஜ்ஜியங்களுக்குள்ளேயே அடிமையாக்கி ஊழியம் செய்யும்படி செய்வது சில சந்தர்ப்பங்களில் சிவில் தாவாவிற்குக் காரணமாயிருக்கும் சில சந்தர்ப்பங்களில் கிரிமினல் பிரியாதுக்குக் காரணமாயிருக்கும் ஆனால் இந்தச் செய்கை நரச்சோரமாகமாட்டாது.

ஆதியில் "நரச்சோரம்" என்பது குழந்தையைத் திருடிக்கொண்டு போவதற்கு குறிப்பிடப்பட்டுவந்தது. அதன்பிறகு வரவர ஆண்பிள்ளையையாவது அல்லது பெண்பிள்ளையையாவது திருடியாவது அல்லது பலாத்காரமாயாவது அடித்துக் கொண்டு போவதற்குக் குறிப்பிடப்பட்டு வந்தது. அதன்பிறகு அதாவது அப்போது 16-வயதிற்குட்பட்ட மைனர் ஆண்பிள்ளையையாவது அல்லது 14 - வயதிற்குட்பட்ட பெண்பிள்ளையையாவது பலாத்காரமாய் அடித்துக்கொண்டு போவதற்கும் ஒரு புருஷனை பிரிடிஷ் இந்தியாவுக்கு அப்பால் அடித்துக்கொண்டு போவதற்கும் குறிப்பிடப்பட்டு வருகிறது. இந்தப்பிரிவில் "நரச்சோரம்" இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பிரிடிஷ் இந்தியாவிலிருந்து நரச்சோரம் செய்துகொண்டு போவது. (2) சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து அடித்துக்கொண்டு போவது. இப்படி பிரிவினை செய்யப்பட்டிருப்பது ஒரு நிச்சயமான பிரிவினையல்ல. ஏன் என்றால் ஒரு மைனரை சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து பிரிடிஷ் இந்தியாவிலிருந்து நரச்சோரம் செய்துகொண்டு போகக்கூடும்.

நரச்சோர குற்றம் "அநியாயமாய் அடைத்து வைப்பது" அல்லது "அக்கிரமமாய் அடைத்து வைப்பது" என்று சொல்லப்படும் குற்றத்தைவிட கடுமையான குற்றம்; ஆதலால் "அநியாயமாய் அடைத்துவைப்பது" என்னும் குற்றத்தில் என்ன என்ன அம்சங்கள் அடங்கியிருக்கின்றனவோ அவைகள் எல்லாம் நரச்சோரக் குற்றத்திலும் அடங்கியிருக்கின்றன.

பிரிவு 360: எவன் ஒருவன், ஒருவனை அவனுடைய சம்மதமில்லாமல் அல்லது அவனை அழைத்துக் கொண்டு போவதற்கு சட்டப்பிரகாரம் யாருடைய சம்மதம் தேவையோ அப்பேர்ப்பட்டவனுடைய சம்மதமில்லாமல் அடித்துக்கொண்டு போவது அவனை பிரிடிஷ் இந்தியாவிலிருந்து நரச்சோரம் செய்துகொண்டு போவது என்று சொல்லப்படும்.

பிரிடிஷ் இந்தியாவிலிருந்து நரச்சோரஞ் செய்துகொண்டுபோகும் குற்றம் ஆண், பெண், மேஜர், மைனர் சம்பந்தமாக நடத்தப்படலாம். எந்த தேசத்தான் சம்பந்தமாகவும் செய்யப்படலாம்; எவன்நரச்சோரஞ் செய்யப்படுகிறானோ அவன் பிரிடிஷ் பிரஜையாக யிருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. ஆனால் என்ன அவசியமென்றால் குற்றவாளி (1) அடித்து அல்லது அழைத்துக்கொண்டு போகவேண்டும்; (2) பிரிடிஷ் இந்தியாவின் எல்லைக் கப்பால் அடித்துக்கொண்டு போகவேண்டும்; (3) நரச்சோரஞ் செய்யப்படுகிறவனுடைய சம்மதமின்றி அடித்துக்கொண்டு போயிருக்கவேண்டும் அல்லது அவனுக்கு எவன் கார்டியனாக விருக்கிறானோ அவனுடைய சம்மதமின்றி அடித்துக்கொண்டு போயிருக்கவேண்டும்.

அடித்து அல்லது அழைத்துக்கொண்டு போவதென்றால் எந்தவிடத்தைவிட்டுப் புறப்படுகிறார்களோ அந்தவிடத்திலிருந்து புறப்பட்டுப்போவது போதுமானதல்ல. எந்த அன்னிய ராஜ்ஜியத்திற்குப் போகவேண்டுமென்று புறப்படுகிறார்களோ அந்த ராஜ்ஜியம்போய்ச் சேர்ந்திருக்கவேண்டும். அப்போதுதான் குற்றம் பூர்த்திபட்ட குற்றமாகும்; அப்படிக்கல்லாமல் நடுவழியில் நரச்சோரஞ் செய்தவன் சிக்கிக்கொண்டால் அவன் நரச்சோரஞ்செய்ய "எத்தனித்த குற்றப்" ஸ்தாபனை செய்யப்படுவான். உதாரணமாக சென்னையிலிருந்து ஒருவன் ஒரு மைனர் பையனை நிஜாம் ராஜ்ஜியத்திலிருக்கும் ஐதராபாக்கத்திற்கு அடித்துக்கொண்டு போகிறான் போகும்வழியில் அவன் பிரிடிஷ் ராஜ்ஜியத்திலே அகப்பட்டுக்கொண்டால் அவன் நரச்சோரஞ்செய்ய எத்தனித்த குற்றத்திற்கு இலக்காகின்றான். நிஜாம் ராஜ்ஜியத்திற்குள் அவன் போய்ச் சேர்ந்துவிட்டால் அவன்பேரில் நரச்சோரஞ் செய்த குற்றம் ஸ்தாபனை செய்யப்படும். "பிரிடிஷ் ராஜ்ஜியத்தின் எல்லைக்கப்பால்" என்று சொல்லப்படுவதால் பிரிடிஷ் ராஜ்ஜியத்தின் எல்லையைத் தாண்டினவுடன் குற்றம் பூர்த்திப்படுகிறது. அன்னிய ராஜ்ஜியத்தில் எந்த நகரத்திற்குப் போகவேண்டுமென்று உத்தேசித்திருந்தானோ அந்த நகரை அவன் அடைந்திருக்க வேண்டுமென்பது அவசியமல்ல.

"பிரிடிஷ் ராஜ்ஜியத்திற் கப்பால்" என்று சொல்லப்படுவதால் அன்னிய அரசாங்கத்தாருக்குட்பட்ட தேசத்திற்கு என்று தாற்பரியம் செய்து கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒரு மனிதனை பிரிடிஷ் இந்தியாவிலிருந்து மோரிசுக்கு அடித்துக் கொண்டு போவதும் நரச்சோரம்தான்; பசிபிக் சமுத்திர தீவுகளுக்கு அடித்துக்கொண்டு போவதும் நரச்சோரம்தான்; சாதாரணமாக ஒரு மனிதன் மற்றொரு மனிதனுடைய சம்மதத்துடன் அவனை பிரிடிஷ் ராஜ்ஜியத்திற்கப்பால் அழைத்துக்கொண்டு போவது குற்றமாகாது. அவனுடைய சம்மதமில்லாமல் அழைத்துக்கொண்டு போவானேயானால் அது குற்றமாகும்.

"சம்மதம்" என்பதால் மனமாற சம்மதம் கொடுத்திருக்கவேண்டும்; அவனாவது அவனுடைய கார்டியனாவது பயமுறுத்தப்பட்டதை முன்னிட்டு சம்மதம் கொடுத்திருப்பது ஒரு சம்மதமாக மாட்டாது.

கார்டியன் சம்மதம் கொடுத்தால் எவனுக்காக அவன் சம்மதம் கொடுக்கிறானோ அவன் சம்மதம் கொடுப்பதற்குச் சமம்; ஆனால் இந்த சம்மதம்புரட்டு சொல்லி பெற்றுக் கொள்ளப்பட் டிருக்கக்கூடாது. பயமுறுத்தியும் பெற்றுக்கொண் டிருக்கக்கூடாது. உதாரணமாக அந்நிய தேசத்திலிருக்கும் ஒருவன் பிரிடிஷ் ராஜ்ஜியத்திலிருக்கும் ஒரு கார்டியனை நாடி மைனரை தன்னுடைய தேசத்திலிருக்கும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் வளர்ப்பதாக அன்புடன் சொன்னான். கார்டியன் அவன் சொன்னது உண்மை என்று நம்பி மைனரை அவனுடன் அந்நிய தேசத்திற்கு அனுப்பிவிட்டான். ஆனால் அவன் அந்த மைனரை அந்நிய தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போய் அவனை அடிமையாக்கி ஊழியம் செய்ய கட்டாயப்படுத்துகின்றான்; அந்த எண்ணத்துடன்தான் அவன் ஆதியில் பிரிடிஷ் ராஜ்ஜியத்திலிருக்கும் கார்டியனை நாடிவந்தது என்று ருஜுப்படுகிறது. இப்படி கார்டியன் நம்பி சம்மதம் கொடுத்திருந்தபோதிலும் அவன் இ. பி. கோ. 363-வது பிரிவின்படி நரச்சோரக் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவான். அதுபோல் ஒருவன் மேஜர் அடைந்த ஒருவனுக்கு பொய்யும் புரட்டான நம்பிக்கை ஊட்டி அந்நிய தேசத்திற்கு அழைத்துக கொண்டுபோய் அவனை விற்பனைசெய்து, வாங்கினவன் அவனை அடிமையாக்கி ஊழியம் செய்யச் சொன்னாலும் அவன்பேரில் நரச்சோரக் குற்றம் ஸ்தாபிக்கப்படும்.

பி. 361. சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து நரச்சோரம் செய்துகொண்டுபோவது.

சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து அவனுடைய சம்மதமில்லாமல் எவன் ஒருவன் 14 வயதிற்குட்பட்ட ஒரு மைனர் ஆண்பிள்ளையையாவது அல்லது 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணையாவது அல்லது சித்த சுவாதீனமில்லாத ஒரு மைனரையாவது வீண் ஆசைகாட்டி அழைத்துக் கொண்டு அல்லது அடித்துக்கொண்டு போனால் அது சட்டப்பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து நரச்சோரஞ் செய்வது என்று சொல்லப்படும்.

தாற்பரியம்:—இந்தப்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் "சட்டப்பிரகாரமுள்ள கார்டியன்" யார் என்றால் எவன் வசம் அந்த மைனர் அல்லது நபர் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறானோ அவன் என்று தாற்பரியம் செய்து கொள்ளவேண்டும்.

விலக்குவிதி:—எவன் ஒருவன் தான் ஒரு சோர குழந்தைக்குத் தகப்பன் என்று உண்மையில் நல்ல எண்ணத்துடன் நம்புகிறானோ அவனுக்காவது அல்லது அந்தக்குழந்தையைச் சட்டப்பிரகாரம் தன்னிடம் வைத்துக்கொள்ளத் தனக்குப் பாத்திதையிருக்கிறதென்று நம்பி அந்தக்குழந்தையையெடுத்துக் கொண்டு போகிறானோ அப்பேர்ப்பட்டவனுக்கு இந்தப்பிரிவு பொருந்தாது. ஆனால் அவன் துன்மார்க்க காரியத்தையாவது அல்லது சட்ட விரோதமான காரியத்தையாவது செய்யவேண்டுமென்று உத்தேசம் அவனுக்கிருக்கக்கூடாது.

"சட்டப் பிரகாரமுள்ள கார்டியனிடமிருந்து விலக்குவது" என்பதால் அந்த மைனரை கார்டியன் தன்னுடைய வசத்திலேயே வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பது தாற்பரியமல்ல. கார்டியனுடைய போஷணை, மேற்பார்வை, பராமரிப்பு, ஆதரிப்பு—ஆகிய இவைகள் இருந்தால் போதுமானது.

### மைனரை அல்லது சித்தபேதம் கொண்டவனை நரச்சோரம் செய்துகொண்டுபோவது.

பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி அடித்துக் கொண்டு போகப்படும் மைனர் ஆண்பிள்ளை 14 வயதிற்குட்பட்டவனாக விருக்கவேண்டும்; பெண்பிள்ளையாக விருந்தால் 16 வயதிற்குட்பட்டவளாக விருக்க வேண்டும். குற்றம் நடக்கும் சமயத்தில் இந்த வயதுடையவர்களாக விருக்கவேண்டும்; ஏறக்குறைய இந்த வயதிற்கு சமீபத்தில் வந்துகொண்டிருக்கும் மைனர்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுடைய வயது அப்படியிருக்கிறதென்று கண்டிப்பாய ருஜுப்படுத்தவேண்டும்; வயது சற்றேறக்குறைய முறையே 14, 16 ஆகிறதென்று ருஜுப்படுத்திவிட்டால் போதுமானது. நரச்சோரம் செய்யப்பட்ட மைனர்கள் 14, 16 வயதிற்குட்பட்டவர்கள் என்று தனக்குத் தெரியாதென்றும் அவர்களுடைய பார்வையால் அவர்களுக்கு அதிக வயதுடையவர்கள் என்று தாம் நினைத்ததாகவும் குற்றவாளி சுஷிசொல்லி விடப்படகூடாது. மைனர் பெண்ணே வலுவில் தன்னுடன் வருவதாக சம்மதித்துவந்தாள் என்றும் குற்றவாளி சுஷி சொல்லக்கூடாது. ஏன் என்றால் அவள் மைன

ராக விருப்பதால் அவள் சம்மதம் கொடுத்ததும் கொடுக்காததும் ஒன்றுதான். அந்த வயதில் சிறு பெண்களுக்கு தங்களை பாதுகாத்துக்கொள்ள திறமையில்லை என்பது சட்டத்தின் அபிப்பிராயம்; ஆகையால் நரச்சோரம் செய்யப்பட்ட பெண் சம்மதம் கொடுத்திருந்தாலும் அது பிரயோஜனப்படாது. அவளுடைய குடும்பத்தில் யார் அவளுக்கு கார்டியனாகவிருக்கிறானோ அவன் அவள் போவதற்கு சம்மதம் கொடுக்காமல்போனால் அவளை அழைத்துக்கொண்டுபோனவன் நரச்சோர குற்றத்திற்குள்ளாகுவான். நரச்சோரம் செய்து அடித்துக்கொண்டு போகப்பட்ட பெண் தன்னுடைய உண்மையான வயதை மறைத்து அதிக வயதைத் தனக்குச் சொன்னாள் என்று குற்றவாளி டிபன்ஸ் சொல்லுவதும் சரியான டிபன்சாகமாட்டாது.

ஒரு கேசில் கைதி 14 வயதுப்பெண்ணை அவளுடைய தகப்பனுடைய சம்மதத்திற்கு விரோதமாக அடித்துக்கொண்டு போய்விட்டான். அவளுக்கு வயது உண்மையில் 14ஆக விருந்தபோதிலும் 16 வயதுக்குமேல் உடையவளாகக் காணப்பட்டாள். கைதி அவளை அடித்துக்கொண்டு போவதற்கு முந்தி அவள் அவனிடம் தன்னுடைய வயது 18க்கு மேலாகிறதென்று சொல்லியிருந்தாள் என்று ருஜூப்பட்டது. கைதி உள்ளபடி அவள் சொன்னதை நம்பினான் என்று ருஜூப்பட்டது. அவன் அப்படி நம்பினது கிரமந்தான் என்பதற்கு தகுந்த காரணமிருக்கிறது. கைதி பெண் 16 வயதிற்கு மேற்பட்டவள் என்று நம்பியிருந்தும் அப்படி நம்பினது கிரமம் என்று ருஜூப்பட்டிருந்தபோதிலும் கைதியின் பேரில் நரச்சோரக் குற்றம் ஸ்தாபனை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டான். (Prince 44 J. M. C. 122.)

மைனரை எடுத்துக்கொண்டு போவதென்றால் என்ன.

அப்படியானால் கைதி பெண்ணை அடித்துக்கொண்டு போய்விட்டான் என்று சொல்லக்கூடுமோ? இரண்டுபேர்கள் ஒரு மனிதனும் ஒரு ஸ்திரீயும் நரச்சோர குற்றம் சாட்டப்பட்டார்கள். பெண் முதலில் குற்றவாளியாகிய ஸ்திரீயுடன் பழக்கம் செய்துகொண்டாள். அந்த ஸ்திரீயின் வீட்டில் குற்றவாளியாகிய மனிதனுடைய அறிமுகம் அவளுக்கு உண்டானது. அதன்பேரில் பெண் அந்த மனிதனை அந்த ஸ்திரீயின் வீட்டில் அடிக்கடி சந்தித்தாள். ஏதோ சிறிது தூரம் நடந்து போய்வருவதாகச் சொல்லிவிட்டு அவள் பிதாவினுடைய வீட்டைவிட்டுப் போய்விட்டாள். பிறகு அவள் திரும்பி வரவில்லை. பிறகு அவள் அந்த புருஷனுடன் புணர்ந்து கொண்டிருந்தபோது காணப்பட்டாள். இது தான் ஒரு கேசில் ருஜூப்பட்ட விஷயங்கள் இந்தக் கேசை விசாரணைசெய்த ஜட்ஜி மிஸ்டர் ரபிட்மான் அடியிற்கண்டபடி ஜூரிக்கு கேசின் சாராம்சத்தை எடுத்துச்சொன்னார்:—அந்தப்பெண் என்ன காரியத்திற்காக எடுத்துக்கொண்டு போகப்பட்டாள் என்பது புலப்படாமலேயே குற்றம் பூர்த்திப்பட்டிருக்கிறது. பெண் 16வயதிற்குட்பட்டவள் என்று நீங்கள் திருப்தி செய்துகொள்ளலாம். அவளுடைய தகப்பன் அவள் புறப்பட்டுப் போவதற்குச் சம்மத மற்றவனாகவிருந்தான். என்று நீங்கள் யூகித்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் பெண்ணாவது அல்லது நரச்சோர குற்றம் சாட்டப்பட்டவர்களாவது அவனுடைய சம்மதத்தைக்கேட்டிருந்தால் அவன் சம்மதம் கொடுத்திருக்கமாட்டான். இரண்டு குற்றவாளிகளில் ஒரு குற்றவாளி பெண்ணைத் தகப்பன் வீட்டிலிருந்து அழைத்துக்கொண்டு போயிருக்க வேண்டுமென்று நீங்கள் நம்பவேண்டும். அதற்காக பெண்ணை பலவந்தப்படுத்தி அழைத்துக்கொண்டு போயிருக்க வேண்டியதில்லை. அவளுடைய தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வரும்படியாக போதித்திருந்தால் போதுமானது. ஆனால் பெண் யாரொருவராலும் போதிக்கப்படாமலும் பலவந்தப்படுத்தப்படாமலும் முழுதிலும் வலியவே தானே பிதாவினுடைய வீட்டைவிட்டுப் போயிருந்தால் இந்தப்பிரிவின்படி குற்றவாளியின்பேரில் குற்றஞ்சாட்டப் படமாட்டாது.

[இன்னும் வரும்]

---

## FUN UPON LAW.

### சட்ட சம்பந்தமான வேடிக்கை

#### மாஜிஸ்டிரேட்டும் கூச்சல்போட்டவனும்.

கோர்ட்டில் இரைந்சி பேசிக்கொண்டிருந்த ஒருவனைப்பார்த்து மாஜிஸ்டிரேட் "நீர் என்வேலைக்கு ஓர் இடஞ்சல், தண்டிப்பேன்" என்றார்.

கூச்சலிட்டவன்:—இடஞ்சலைத் தண்டிக்க தங்களுக்கு அதிகாரம் கிடையாது.

---

#### லாயர் சம்பார்த்தனை.

ஒரு லாயர் இறந்துபோகும் தருவாயில் தமக்கிருந்த ஏதேஷ்டமான சொத்துகளுக்கு ஒரு உயில் எழுதிவைத்தார். அப்படி எழுதி வைத்ததில், வம்புகாரர்களாகவும் பைத்தியங்கொண்டவர்களாகவுமிருப்பவர்களாகப் பார்த்து எழுதிவைத்தார். அவருடைய பந்து ஒருவர் "பாடுபட்டுத்தேடின சொத்தை ஏன் அப்படி எழுதிவைக்கிறீர்" என்று கேட்டதற்கு அப்பேர்க்கொத்தவர்களிடமிருந்துதான் அச்சொத்துக்களை சம்பாரித்தேன் என்று சொன்னார்.

---



# Our Client's Page.

## நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம்.

நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் அபிப்பிராயங்களைக் கேட்கிறவர்கள் மாமூலான விதிகளை மறந்துபோயிருப்பதைப்பற்றி நாம் விசனிக்கிறோம். அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் எழுதும் போதே ரூ. 5 அட்வான்ஸ் மணியார்டர் செய்யவேண்டுமென்றும் இல்லேல் ரிக்கார்ட் கட்டை அவிழ்த்துப் பார்க்கப்பட மாட்டாதென்று பலமுறை நம்முடைய சஞ்சிகைகளில் எழுதி யிருந்தும் கக்ஷிக்காரர்கள் கவனிக்கிறதில்லை! இந்த காரணத்தை முன்னிட்டு சுமார் 35 அபிப்பிராயக் கடிதங்கள் முதலாவது உடைத்துப் பார்க்கப்படவில்லை. ஆதலால் இனி கக்ஷிக்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்கள் என்றும் நம்புகின்றோம்! நம்முடைய கெஜெட் கூறும் அபிப்பிராயம் ஏனோ தானோ என்று அலக்ஷியமாகச் சொல்லப்படும் அபிப்பிராயமல்ல. கூறப்படும் அபிப்பிராயம் ஒவ்வொன்றிற்கும் அதன் கடைசியில் லா ரிப்போர்ட் பிரமாணமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களையே வெளியூர்களில் உள்ள கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய சொந்த லாயர்களிடம் எடுத்துச் சொன்னால் கக்ஷிக்காரர்களிடமிருந்து லாயர்கள் அதிகப்படியான பீஸ் எதிர்ப்பார்க்க விடமில்லாமல் மேல் நடவடிக்கை நடத்திக்கொண்டு போவார்கள்

நம்முடைய கெஜெட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவர்களில் எவரும் அந்த அபிப்பிராயம் சரியா யில்லையே என்று நமக்கு எழுதி யிருப்பதை நாம் அறியோம்! நம்மால் இயன்றளவு நாம் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் கக்ஷிக்காரர்களுக்கு சாதகம் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு சுமார் 9-வருட காலமாக தொடர்ந்தேர்த்தியாக உழைத்துக்கொண்டு வருகிறோம் என்பது உலகமறிந்த விஷயம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் இந்த வகையில் கக்ஷிக்காரர்களுடைய முழு ஆதரிப்பையும் பெறுவோம் என்று நம்புகின்றோம்:—

---

### அபிப்பிராய ஜவாப்பு.

(1) கழனிவாசல்:—ஐயா! தங்களை நம்பி எங்களுடைய லாயர் கமிட்டியாருக்கு தங்களுடைய கடிதத்தை அனுப்பி அபிப்பிராயம் வாங்கியிருக்கிறோம் என்று தங்களுக்குத் தபால் மூலியமாக அறிவித்திருந்தும் தாங்கள் நாளது வரையில் கமிட்டியாருக்குச் சேரவேண்டிய பீசை அனுப்பாமல் வைத்திருப்பது விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. தங்களுடைய கடிதத்தில் கண்ட எல்லாம் லாப்பாயின்ட்டுகளையும் பற்றி அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயங்களைக்கொண்டு தங்களுடைய வியாஜ்ஜியத்தை நடத்துவதற்கு வெகுவாய் நடத்திவிடலாம் என்பது திண்ணம்.

(2) நாகப்பட்டணம் சங்கரய்யர்:—மோசடியாய் பெறப்பட்ட ஒரு சமாதான டிக்கிரியை ரத்து செய்துவைக்கத் தனிப்பட ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்பது அவசியமல்லவென்றும், அந்த சமாதான டிக்கிரி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் இதை ஆக்ஷேபிக்கலாமென்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் நிகழ் ஜனவரி மீ த்தில் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இந்த தீர்ப்பின் சுருக்கம் இவ்வருடத்திய மதிராஸ் லா ஜெர்னலில் ஜனவரி மீ சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதை தயவு செய்து பார்க்கவும்.

(3) திருவண்ணாமலை மிஸ்டர் வேணுகோபால் நாயுடு:-ஒரு அடிஷனல் டிரஸ்டி நியமிப்பது அவசியமென்று தேவஸ்தான கமிட்டியார் அபிப்பிராயப்பட்டால் அவர்கள் நியமிக்கலாம்என்பதில்சந்தேகமில்லை. ஆனால் அந்த நியமனத்தின் நன்மையை மட்டிலும் நன்மையைநாடிச் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(4) ஸ்ரீரங்கம் ரங்கநாயகி:-நீ பெண்பாலான படியால் உனக்கு கட்டாயமாக அபிப்பிராயம் கூறி உனக்கு உதவி செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு உன்னுடைய கடிதத்தை பலமுறை வாசித்துப்பார்த்தோம். நீ உன்னுடைய கேசை ஆதியோடந்தமாகவும் விபரமாகவும் எடுத்துச் சொல்லவில்லையே நாம் என் செய்வது.

(5)சோளவந்தான் பெருமாள் படையாச்சி:-அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் அனுப்பும்போதே ரூ. 5 மணியார்டர் அனுப்ப வேணுமென்பது எங்களுடைய ஆபீசின் ரூல். ஆகையால் உங்களுடைய கடிதம் இன்னும் திறந்து பார்க்கப்படவில்லை. அடுத்த மாத சஞ்சிகை வெளி[illegible]வதற்கு முந்தி மணியார்

டர் வந்து சேர்ந்தால் அந்த சஞ்சிகையில் உம்முடைய கடிதத்திற்குப் பதில் காணலாம்.

(6) நன்னிலம்நாகோஜிராவ்:-நீர் உம்முடைய கடிதத்தில் சொல்லியிருக்கும் மூன்று தஸ்தாவேஜிகளையும் சேர்ந்து வாசித்தால் வீடு அடமானம் வைக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதேயொழிய அது கிரயசாசனமாகமாட்டாது. நீர் அந்த வீட்டை அடமானத்திலிருந்து மீட்டுக்கொள்ளலா மென்பதில் சந்தேகமில்லை. தங்களுடைய கேஸ் மாதிரியாக சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் பைசல் செய்யப்பட்டிருக்கிற ஒரு கேசை லாரிப்போர்ட்டில் எடுத்துக்காண்பிக்க வேண்டுமென்று தாங்கள் நம்மைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். சமீபத்தில் அம்மாதிரியான யாதொரு கேசும் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டால் பைசல் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆயினும் பம்பாய் ஐக்கோர்ட்டில் தங்களுடைய கேசைப்போலவே ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டு பைசல் செய்யப்பட்டிருக்கிறது. அது 16 பம்.லா.ரி. 474-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பை தங்களுடைய நாகப்பட்டணம் லாயரை விட்டு சப் கோர்ட்டாருக்கு எடுத்து காண்பித்தால் வீட்டை அடமானத்திலிருந்து மீட்டுகொள்ள தங்களுக்கு உடனே டிக்கிரி கொடுத்து விடுவார்கள்.

(7) விருதுப்பட்டி லாயரோகணம்:வீண் வியாஜ்ஜியமாடி பணத்தை இழக்கவேண்டாம். வடிவேலு முதலியாரிடம் முழு அடமானத் தொகையை செலுத்தக்கூடாதென்று உங்களுக்கு ரெஜிஸ்டர் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதென்று நீங்களே ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அப்படியிருந்தும் நீர் அந்த நோட்டீசை மீறி பணம் கொடுத்திருக்கிறீர். அந்த பணத்தைக் கேட்க பாத்தியமில்லை என்று அலகபாத் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக் கேஸ் 24 இந்தியன் கேஸ் என்கிற லா ஜெர்னலில் 88-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் நஷ்டப்பட்ட பணத்துடன் நின்று விடுவதே நலம் என்பது எங்களுடைய அபிப்பிராயம்.


## JOLLY

(Registered) Scented Nut Slices.

The Public are hereby informed that the undersigned has found out a remedy for rooting out all dental diseases by manufacturing the famous "Jolly Scented Nut Slices" and Tobacco in accordance whith the best modern scientific principles. These slices prove an excellent remedy not only in destroying the germs but also in increasing considerably the power of digestion.

The public are therefore requsted to avail themselves of this golden opportunity without delay. It is sold at a rediculously low price to suit the convenience of the rich and the poor alike.

| | | |
|---|---|---|
| 4 lbs Tin | Rs. | 0—4—0 |
| 1 Box of 144 Packets | ,, | 0—5—0 |

Special quotation to traders and commission agents.

**Apply to:—** **K. KANNABIRAN PILLAY,**
**Snuff Merchant, Uppada Bazaar, Madras.**

## ஜாலி பரிமள பாக்குத்தூள்.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்:—அநேக வைத்திய சாஸ்திர முறைகளை அனுசரித்து நமது பற்களுக்குரிய பல நோய்களையும் போக்க இத்திவ்விய வாசனை பாக்குத்தூள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது நமது பற்களிலுள்ள கிருமிகளையெல்லாம் கொன்று பற்களை உறுதிபடுத்துவதுடன் ஜீரணசக்தியையும் விர்த்திசெய்கிறது. இத்தூளில் உயர்ந்த வாசனை திரவியங்களும் சேர்ந்திருப்பதினால் இதனை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் மனோரம்மியத்தை தரும். இதை ஏழைகளும் உபயோகிக்குமாறு மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஜாலி பரிமளபுகையிலையும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட என் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 4 பவுன் பாக்குத்தூள் டப்பி விலை | ரூபா | 0—4—0 |
| 144 பைகள் அடங்கிய பெட்டி | ,, | 0—5—0 |

க. கண்ணபிரான் பிள்ளை,
உப்பாடைக்கடை, மதராஸ்.


# இந்திய சட்ட கெஜட்.


உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்
பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 8.] சென்னப்பட்டணம் 1915ஹு பிப்ரவரிமீ [நெ. 2.


## அடக்கம்.

பாகம் 1.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஹிந்து சேர்ந்த குடும்பத்தின் பாகப்பிரிவினை | 25 |
| 2. | முக்கியமான தீர்ப்புகள் | 27 |
| 3. | சிவில் கிரிமினல் கேசுகள் | 28 |
| 4. | சென்னை சட்ட நிரூபணசபை | 30 |
| | கேள்வி கேட்ட கனவான்கள் | ,, |
| | ஆனரபில் மிஸ்டர் நரசிம்மய்யர் | ,, |
| | ,, மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் | ,, |
| | ,, மிஸ்டர் A. K. G. அகமத் தம்பி மரைக்காயர் | ,, |
| | ,, ராஜா ஸ்ரீ மதனமோகன சிம்மதேவ் | ,, |
| 5. | சென்னப்பட்டணம் ஐகோர்ட் கேசுகள் | ,, |


## சந்தா விபரம்.


| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூபா | 5 0 0 |
| ஆறுமாதத்திய சந்தா | ,, | 3 0 0 |
| மூன்று மாதத்திற்கு (தபால் சார்ஜ் பிரத்தியேகம்) | ரூபா | 1 8 0 |
| சிங்கப்பூர் பினாங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) | ரூபா | 6 0 0 |

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

## நோய்க்கிடங்கொடேல்.

சூரியனைக்கண்ட பனிபோல் சகலவித
நோய்களையும் பறக்கடிக்கும்
சஞ்சீவியான "பெயினலீன்"
பாம் தைலம்.

இடுப்புவலி, தலைநோய், கழுத்திழுப்பு, தொண்டைநோய், மார்பு நோய், மார்புசளி, சுளுக்கு, பல்நோய், காதுநோய், முகஜன்னி, கை கால் பிடிப்பு, திமிர்வாய்வு, கப இருமல், ஜலதோஷம், பிடரிவலி, பார்ஸ்வாய்வு முதலிய நோய்களினால் உபத்திரவப்படுகிறவர்களுக்கு குணத்தையளிக்கும், மருந்து "பெயினலீன்" (தீ பெஸ்ட் பாம்) எனப் பெயர் பூண்ட தைலமே இந்தப் "பெயினலீன்" தான் கொண்ட பெயருக்குத் தக்கபடி நோய்களை அதிக சீக்கிரத்தில் நோயின் மூலகாரணத்தைக் கண்டு பிடித்து வேரோடு நிர்மூலமாக்குகிறது. இதை ஒரு முறை உபயோகித்தால் அதன் குணம் தெரியும்.

விலை புட்டி -க்கு பெரியது அணா 10.
சிறியது அணா 6. வி. பி. சார்ஜ் 4.

மாதிரி வேண்டுமானால் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்

### வாந்திபேதி நிவாரணி·

இது வாந்திபேதிக்கும், அஜீர்ண பேதிக்கும் எடுத்த திராவகம் இதன் பரிமளமே பேதியைக் கிட்டணுகாதுகாற்கும் இதை ஒவ்வொருவரும் ஆபத்துக்குதவும் சஞ்சீவியாகக் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியம்

இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

### மூலிகைகளால் செய்த பற்பொடி.

இதை உபயோகிப்பதால் பல்லிலிருந்து ரத்தம் விழாது பற்கள் உறுதியாகும், பற்களைச் சுத்தப்படுத்தி முத்துபோல் பளபளப்பாக்கச்செய்யும் வாய்நாற்றம் நீங்கும், பல்வலிபோகும்

இதன் விலை டப்பி 1-க்கு அணா 4.

### சுர சம்ஹாரி.

இது முறைசுரம், தொந்தசுரம், விடாசுரம், மலைசுரம்முதலான எல்லாவிதசுரங்களுக்கும் சஞ்சீவி.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 8.

### படை சம்ஹாரி.

இது கடி அல்லது படை என்று சொல்லப்படும் கொடிய நோய்க்கு மருந்து நெடுநாளான படையாயிருந்தாலும் போக்கடிக்கும்.

இதன் விலை டப்பி -க்கு அணா 4.

### வீரியவிர்த்தி பூஷணம்

இது நரம்பைப் பற்றினவும் சிரசைப்பற்றினவுமான தளர்ச்சிக்கு ஒப்புயர்வற்ற மருந்து இது எல்லாவித பலஹீனர்களுக்கும், புஷ்டிக்கும் எடுத்த மருந்து புட்டி 1-க்கு விலை ரூபா 1.


இன்னும் ஏதாகிலும் மருந்து தேவையிருந்தால் எங்களுக்கு எழுதி அதைப்பெற்றுக்கொள்ளலாம், வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

M. C. AGENCY,
72, Nattu Pillayar Coil St.,
Sowcarpet Post Madars.

கைவிடாதீர்கள்! ஏமாறாதீர்கள்!!

## சர்வ தேள் விஷ சஞ்சீவி.

குணமில்லாவிட்டால் ரூ 100 இனாம்.



கதறிவந்தவன் களிப்புடன் செல்வான். விஷந் தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான். நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுறுவதைப்பற்றி யாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அனேக ஐரோப்பிய டாக்டர்களாலும் தமிழ் வைத்திய பண்டிதர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர்மார்க்குள்ள சர்வ தேள் விஷ சஞ்சீவியை தேள் கொட்டின விடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்துக்குள் குணமடையச் செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான்பாம்பு, நண்டு துறக்கா முதலிய எவ்வித விஷ செந்துக்கள் தீண்டின போதிலும் டைரெக்ஷனில் சொன்னபிரகாரம் உபயோகித்தால் குணமடையும். அப்படி குணமில்லாவிட்டால் பணம் வாபஸ். இவ்விஷ சஞ்சீவியை கைப்பற்றுங்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஒரு மனிதனை இரவில் 2-மணிக்கு தேள் கொட்டிவிட்டால் அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட்டு அனேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா, அதற்காக இது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது.

விலை பாக்கெட் -க்கு 0—8—0,
டஜன்க்கு ரூ 5—0—0

எம் ஆர் சாமி.
34, நமமாள்வார் தெரு,
மதராஸ்.

புதியதாய் கண்டுபிடித்த ரோமசங்கரிணி யென்னும்

## தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்த பாகத்திலும் இருக்கும் கூந்தலை இது பூசுவதனால் தேகத்தின் சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை யெடுத்துவிடும் ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள் தேகத்தின் காந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான திடத்தைக் காப்பாற்றும் படியான சோதி இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை



வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 3-கேக் உள்ள பெட்டி -க்கு | 0 | 14 | 0 |
| ஒரே தடவையில் 2-பெட்டிக்கு | 1 | 10 | 0 |
| போஸ்டேஜ் பிரத்தியேகம் | 0 | 4 | 0 |

வி எஸ் பாணி,
நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்



# The Indian Law Gazette.

PART I.

# இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

பாகம் 1.

வால்யம் 8.] சென்னப்பட்டணம், 1915௵ பிப்ரவரி௴ [நெ. 2.


## THE HINDU CO-PARCENERS' PARTITION.

## ஹிந்து சேர்ந்த குடும்பத்தின் பாகப்பிரிவினை.

மிதாக்ஷரா சட்டத்தின்படி ஹிந்து சேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாகஸ்தன் தன்னுடைய சேர்ந்த குடும்பத்திலிருந்து தன்னையும் தன்னுடைய பாகத்தையும் விலக்கிக் கொள்ளவேண்டுமென்று விரும்பினால் இப்போது ஜாரிசெய்யப்பட்டிருக்கும் தீர்ப்புகள் பிரகாரம் அடியிற் சொல்லப்பட்டிருக்கும்மூன்றில் ஒருகாரியத்தைச் செய்யவேண்டியதாயிருக்கிறது:—(1) அவன் மற்ற பாகஸ்தர்களுடன் கலந்து யோசனை செய்து அவர்கள் சம்மதித்தபிறகு குடும்பச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யும்படியாகச்செய்து தன்னுடைய பாகத்தை வாங்கிக் கொள்ளக்கூடும். (2) மற்ற பாகஸ்தர்கள் சம்மதிக்காவிடில் கோர்ட்டில் பாகப்பிரிவினை செய்துகொள்ள வியாஜ்ஜியம் கொண்டுவந்து தன்னுடைய பாகத்தை ஸ்தாபித்து தன்னுடைய பாகத்தை பிரிவினை செய்து கொடுக்கும்படி மற்ற பாகஸ்தர்களைக் கட்டாயப்படுத்தலாம். அல்லது (3) சேர்ந்த குடும்பத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தை ஒரு தொகைக்கு விற்பனை செய்யலாம். அந்த பாகத்தை வாங்கிய அந்நியன் மற்ற பாகஸ்தர்களுடைய சம்மதத்தின்பேரில் தன்னுடைய பங்கைப்பிரித்துப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கோர்ட்டில் பாகப்பிரிவினை நடத்தி தன்னுடைய பாகத்தைப் பிரித்து வாங்கிக்கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட முதலாவது வழியை அவன் அனுஷ்டித்தால் குடும்பத்தின் மற்ற மெம்பர்கள் பாகப்பிரிவினைக்குச் சம்மதம் கொடுக்கும் பரியந்தம் அவன் குடும்பத்தில் தொடர்ந்தேர்த்தியாக மெம்பராக விருந்தே தீரவேண்டியதாயிருக்கிறது. சேர்ந்த குடும்பத்திலிருந்து தன்னை நீக்கிக்கொள்ள ஒருவன் விரும்பினானேயானால் மற்ற பாகஸ்தர்கள் அதற்கு சம்மதம் கொடுக்கும் பரியந்தம் அவன் சில சந்தர்ப்பங்களில் கனத்த நஷ்டத்திற்கும் தொந்திரவுகளுக்கும் உள்ளாகவேண்டியதாயிருக்கிறது. மற்ற மெம்பர்கள் சம்மதிக்க அனேக காலம் பிடிக்கிறது, சில கேஸ்களில் வருடங்கள் சென்றுவிடுகின்றன. அவ்வளவு காலமும் தன்னை விலக்கிக்கொள்ள விரும்புகிறவன் குடும்ப மானேஜ்மெண்டிலும் குடும்பக் கடன் வாங்குவதிலும் சேராமலிருந்தபோதிலும் அவன் சேர்ந்த குடும்ப மெம்பராகவேயிருந்து அந்த கடன்களுக்கு கட்டுப்பட வேண்டியதாயிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட இரண்டாவது வழியை அவன் அனுஷ்டித்

தால் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்யவேண்டியதாயிருக்கிறது. அந்த வியாஜ்ஜியம் முடிவடையும் பரியந்தம் அவன் சேர்ந்த குடும்ப மெம்பராகவேயிருந்து வரவேண்டியதாயிருக்கிறது. ஆண் சந்ததியில்லாத ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை தன்னுடைய பெண்சாதிக்கேனும், தன்னுடைய புத்திரிகளுக்கேனும் அல்லது மற்ற பந்துக்களுக்கேனும் தானம் செய்யவிரும்பக்கூடும். அவன் கோர்ட்டில் ஒரு பாகப்பிரிவினை வியாஜ்ஜியம் கொண்டுவந்து தன்னுடைய பங்கைப் பெற்றாலொழிய அல்லது குடும்பத்தின் மெம்பர்கள் சம்மதித்தாலொழிய அவனுடைய எண்ணம் நிறைவேற மார்க்கமில்லாமலிருக்கிறது. தன்னை சேர்ந்த குடும்பத்திலிருந்து நீங்கிக்கொள்ள விரும்பும் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை பிரிவினை செய்து கொள்ளும்பொருட்டு கோர்ட்டில் வியாஜ்ஜியமாடினாலும், அவன் அவ்வியாஜ்ஜியம் முடிவடைவதற்கு முந்தி இறந்து போவானேயானால் அவனுடைய பாகம் இப்போதிருக்கும் சட்டப்படி மற்ற பாகஸ்தர்களுக்குச் சேர்ந்து போய்விடும். தன்னைச் சேர்ந்த குடும்பத்திலிருந்து நீக்கிக்கொள்ள விரும்பும் ஒருவன் மேலே சொல்லப்பட்ட மூன்றாவது உபாயத்தைப் பின்பற்றுவானேயாகில் அவன் அவனுடைய பங்கை ஒரு அந்நியனுக்கு விற்றுப் போடவேண்டும். அந்த அந்நியன் மற்ற குடும்பர்களிடமிருந்து தான் கிரயம்பெற்ற பாகத்தைப் பிரிவினைசெய்து வாங்கவேண்டும். இந்தப் பிரகாரம் ஒரு சேர்ந்த குடும்ப பாகஸ்தன் தான் இஷ்டப்பட்டால் மற்ற மெம்பர்களுடைய சம்மதத்தைக் கேட்காமலே தான் சேர்ந்த குடும்ப மெம்பராயிருந்து வருவதை முடிவு படுத்திவிடலாம்.

இதனால் ஒரு சேர்ந்த குடும்பத்திலிருந்து ஒருவன் தன்னை நீக்கிக்கொள்ள வேண்டுமானால் மற்ற மெம்பர்களுடைய சம்மதத்தைப் பெறவேண்டியது அவசியமில்லை என்று ஏற்படுகிறது. அவன் இஷ்டப்படுவானேயாகில் குடும்பத்தின் மற்ற மெம்பர்கள் இஷ்டப்படாமற் போனபோதிலும் அவன் தன்னை விலக்கிக்கொள்ளலாமென்று இதனால் ஏற்படுகிறது. அவன் சேர்ந்த குடும்பத்தில் தொடர்ந்தேர்த்தியாக மெம்பராகவிருந்து வருவதும் தன்னை ஷை குடும்பத்திலிருந்து விலக்கிக்கொள்ளுவது அவனுடைய இஷ்டத்தைப் பொருத்ததாகவிருக்கிறதென்று இதனால் நன்கு விளங்குகின்றது. வியாஜ்ஜிய மூலியமாகவேனும் அல்லது, ஒரு அந்நியனுக்குத் தன்னுடைய பாகத்தை விற்பனை செய்தேனும் அவன் தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளக் கூடுமானால் அவன் வியாஜ்ஜியம் கொண்டுவராமலும் ஒரு அந்நியனுக்குத் தன்னுடைய பாகத்தை விற்பனை செய்யாமலும் மற்ற பாகஸ்தர்களுக்கு அவனுடைய எண்ணத்தை அறிவித்து அவன் அவனுடைய குடும்பத்திலிருந்து நீங்கிக்கொள்ள விடப்படுவது நியாயமற்ற காரியமென்று சொல்ல முடியாது. வங்காளத்தில் ஒரு சேர்ந்த குடும்ப மெம்பர் தன்னை விலக்கிக்கொள்ள சந்தேகமில்லாதபடி பகிரங்கமாகக் கூறிவிட்டால் அதுவே பாகப்பிரிவினைசெய்து கொள்ளுவதற்கு போதுமானதென்றும் அன்றுதேதி முதல் அவன் சேர்ந்த குடும்பத்திலிருந்து விலக்கப்பட்டவனாகிறான் என்று கல்கத்தா ஐக்கோர்ட்டில் அனேக தீர்ப்புகள் ஜாரி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த தீர்ப்புகளின் சாராம்சத்தை ஜட்ஜி மிஸ்டர் பாஷியம்யங்கார் ஏற்றுக்கொள்ளாமற் போனபோதிலும், சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் தன்னைச்சேர்ந்த குடும்பத்திலிருந்து நீங்கிக்கொள்ளவிரும்பும் பாகஸ்தனுக்கு அசௌகரியமாக இருப்பதுமல்லாமல், அவனாவது அவன் எவனுக்கு அவன் பாகத்தை விற்பனை செய்தானோ அவனாவது அவனுக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரிவினை செய்துகொள்ள அதிகச் செலவும் செய்ய வேண்டியதாயிருக்கிறது.

மேலே எடுத்துக் கூறப்பட்டுள்ள கல்கத்தா ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தை இ. லா. ரி. 35 அல. 81-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற கேஸில் பிரிவி கவுன்சிலர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அத்துடன்கூட பிரிவி கவுன்சிலர்கள் கூறிய ஷை அபிப்பிராயத்தை ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரும், ஜட்ஜி மிஸ்டர் நேப்பியரும் (1915) மதிராஸ் வீக்லி நோட்ஸ் 17-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்திருக்கிற கேஸில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இத்தியாதி காரணங்களை முன்னிட்டு சென்னை ராஜதானியில் உள்ளவர்களும் மிதாக்ஷர சட்டத்தை அனுஷ்டித்துக் கொண்டுவரும் சேர்ந்த குடும்ப மெம்பர்களில் ஒருவன் குடும்பத்திலிருந்து தன்னை விலக்கிக்கொள்ள விரும்பினானேயானால் வியாஜ்ஜியம் கொண்டுவராமலும் அல்லது தன்னுடைய பங்கை ஒரு அந்நியனுக்கு விற்றுப்போடாமலும், மற்ற மெம்பர்களுக்கு அறிவித்து தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளும்படியாக The Hindu Co-parceners' Bill என்று சொல்லும்படியான சேர்ந்த குடும்ப பாகஸ்தர் பாகப்பிரிவினை மசோதா ஆக்ட் என்று சொல்லப்படும் மசோதா ஆக்ட் சட்ட சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா ஆக்ட் சட்டமாக செய்யப்பட்டால் சேர்ந்தகுடும்ப பாகப்பிரிவினை சம்பந்தமாக உற்பத்தியாகும் அனேக வியாஜ்ஜியங்கள் மட்டுப்பட்டுப்போகுமென்று நினைக்கின்றோம்.

---



# Important Rulings.

## முக்கியமான தீர்ப்புகள்.

### ஸ்திரீ தனம்.

வாரிசில்லாமல் இறந்துபோகும் அகம்படிய ஜாதி விதவையின் ஸ்திரீதனசொத்துக்களுக்கு அவளுடைய புருஷன்வழி பந்துக்களைப்பார்க்கிலும் பிதாவழி பந்துக்கள் அதிக பாத்தியமுடையவர்கள் என்று வெள்ளைச்சாமி சேர்வை v. மருதாட் சேர்வை கேஸில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 23 இ. கே. 126.

### விதவை செய்த பராதீனம்.

தன்னுடைய தாயாராலும் சிறிய தாயாராலும் பாட்டியாலும் செய்யப்பட்ட பராதீனத்தை வாதி ஆக்ஷேபித்தான். இரத்தக் கலப்பான வாரசுகள் இல்லாததினால்தான் எஸ்டேட்டிற்கு வாரசாக வந்திருப்பதாக கக்ஷி சொன்னான். அவன் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியமில்லை என்று கக்ஷி சொல்லப்பட்டபோது அவன் எஸ்டேட்டிற்கு வாரசாக வந்திருக்கிறபடியால் அவன் அப்பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியமுடையவன் என்று அவன் தரப்பில் பதில் சொல்லப்பட்டது.

எஸ்டேட்டிற்கு வாரசாக வந்திருப்பது, எல்லா சந்தர்ப்பங்களிலும் பராதீனங்களை ஆக்ஷேபிக்க ஒரு பாத்தியதையை உண்டாக்கிவிடமாட்டாது. இந்த எஸ்டேட்டிற்கு வாரசாக வருகிறவர்கள் பராதீனங்களை ஆக்ஷேபிக்க பாத்தியதை உடையவர்களாகவிருப்பது வழக்கம் என்று சொல்லப்பட்டால் அப்பேர்ப்பட்ட வழக்கத்தை ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு வாதியினுடையதென்று தீர்மானிக்கப்பட்டது. கோவிந்ட்ராம் v. ராணிராஜ், 131 ப. லா. ரி. 1914.

### சாஸ்வத உத்திரவு

சாஸ்வத உத்திரவிற்காகக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில் ஒரு கதவு எப்போதும் மூடப்பட்டிருக்க வேண்டுமென்று ஒரு டிக்கிரி கொடுக்கப்பட்டது. தீர்ப்புக் கடன்காரன் இந்த டிக்கிரியில் சொல்லப்பட்ட பிரகாரம் கதவைமூடி சிலகாலம் சென்று திறந்தான். டிக்கிரி பெற்றுக்கொண்டவன் டிக்கிரியை நிறைவேற்றி கதவை மூடும்படியாகக் கட்டாயப்படுத்தலாமென்றும் இதற்காக அவன் ஒரு புதிய வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டியது அனாவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. 12 அல. லா. ஜெ. 347.

### அதிகாரம்.

அதிகாரமில்லாமல் ஒரு டிக்கிரி பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா அல்லது சி. பு. கோ. 375 பிரிவுக்கு (Act X of 1882) விரோதமாக பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாவென்கிற பிரஸ்னம் அப்பீலில் ஆராயப்படவேண்டுமேயொழிய நிறைவேற்று நடவடிக்கையில் ஆராயப்படக்கூடாது என்று ரத்னசாமி செட்டி v. ரத்னம்மாள் கேஸில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர், ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் கூடிய கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1 லா. வீ. 446.

### பத்திரத்தில் கையெழுத்து செய்வது.

எழுதப் படிக்கத்தெரியாத ஒரு மனிதன் எழுதப் படிக்கத்தெரிந்தவனுடன் ஒப்பந்தம் செய்தான். ஒப்பந்தப் பத்திரத்தில் உண்மையான ஒப்பந்தம் எழுதப்படவில்லை. புரட்டாக எழுதப்பட்டு எழுதப்படிக்கத் தெரியாதவனுக்கு அது வாசித்துக் காண்பிக்கப்பட்டபோது உண்மையான ஒப்பந்தம் அந்த ஒப்பந்த ஆதாவில் எழுதப்பட்டிருப்பது போல வாசித்துக் காண்பிக்கப்பட்டது. எழுதப் படிக்கத் தெரியாதவன் அதில் கையெழுத்து போட்டதால் அதனால் அந்த ஆதாவுக்கு வலுவு உண்டாய்விட மாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால் புரட்டான ஒப்பந்தத்திற்கு அவன் கையெழுத்து போடுவதாக உண்மையில் நினைத்ததில்லை. அதே மாதிரியாக ஒரு ஆதாவு ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக இந்தியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 77-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில், படிக்கத்தெரியாத இரண்டு கோஷா ஸ்திரீகள் தங்களுடைய நிலங்களை விற்பனைசெய்ய ஒப்பந்தம் செய்தார்கள் என்றும், அந்த ஒப்பந்தத்தில் அவர்கள் விற்பனைசெய்ய உடன்படாத நிலங்களும் சேர்க்கப்பட்டிருந்தனவென்றும் ஷை ஸ்திரீகளின் சகோதரன் அப்பத்திரத்தை வாசித்துப்பார்க்காமலே அந்த ஸ்திரீகளுக்காக கையெழுத்து போட்டுவிட்டான் என்றும் ஆனால் படுதாவிற்குப் பின்னாலிருந்த ஸ்திரீகளுக்கு அந்த ஆதாவு வாசித்துக் காண்பிக்கப்பட்டபோது, அந்த ஸ்திரீகள் அந்த ஆதாவை ஆக்ஷேபித்தார்கள் என்றும் ருஜுப்பட்டது. ஆதலால் அந்த ஸ்திரீகள் ஆதாவு எழுதிக் கொடுத்ததாக எண்ணப்படமாட்டாதென்றும் அந்த ஆதாவை ரெஜிஸ்டர் செய்து வைப்பதற்காக கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 23 இ. கே. 10.

### அதிகாரப் பத்திரம்.

எஸ்டேட்டிற்கு வரவேண்டிய பணங்களை வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவர ஒரு [illegible]ணடிற்கு அதிகாரப்பத்திரம் கொடுக்கப்பட்டிருந்தது. எஸ்டேட்டிற்கு வரவேண்டிய நிலுவை என்றால் எஸ்டேட்டிற்கு வரவேண்டிய பணம் என்று மட்டிலும் தாற்பரியம் செய்துகொள்ளக்கூடாது

ஏற்கனவே எஸ்டேட்டிற்காக வாங்கப்பட்டிருக்கும் டிக்கிரியில் காணப்பட்டிருக்கும் தொகையையும் வசூல் செய்ய அந்த ஏஜண்டிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணப் படவேண்டும். ஸ்ரீனிவாசய்யங்கார் v. திருமலைசெட்டி, [1914] ம. வி. நோ. 327.

ஈஸ்மெண்டு பாத்திதை.

ஒரு ஈஸ்மெண்டு பாத்திதை உண்டாக வேண்டுமானால் 20-வருஷம் அல்லது அதற்கு அதிகமாக அனுபவித்துக்கொண்டு வந்திருக்கவேண்டும். அப்படி அவ்வளவு காலம் அனுபவித்துக்கொண்டு வந்திருக்கவேண்டும். பிரதிவாதி ஒருபாதையை அனேக வருடம் அனுபவித்துக்கொண்டு வந்தான். ஆனால் 16,17-வருடமாக அந்தப் பாதையை உபயோகப்படுத்திக்கொண்டு வரவில்லை. அந்தப்பாதை வழியாய் பிரதிவாதி போவதைத் தடைபடுத்த உத்திரவு கோர்ட்டாரிடமிருந்து பெற்றுக்கொள்ள வாதி பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. முகமத் மாரும் v. சுல்தான் அகமட், 12 அ. லா. ஜெ. 415.

மைனர் விதவை.

ஒரு ஹிந்து விதவை மைனராகவிருக்கும்போது அவளுடைய இறந்துபோன புருஷனுடைய எஸ்டேட்டிற்கு வார்சாக வந்தாள். அவளுடைய புருஷனுடைய எஸ்டேட்டிற்குஅனந்தரவார்சு பாத்தியமுடைய ஒருவனுக்கு அவள் மைனர் என்று தெரிந்திருந்தும் அவளுக்கு வியாபாரத்திற்காகப்பணம் கொடுக்கும்படி தூண்டினான். இவன் அந்த மைனரிடமிருந்து ஒரு அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கிறான். அவளுடைய வியாபாரத்திற்காக கடன் கொடுக்கப்படும் பணம் தன்னிடம் கொடுக்கப்படும்படியாகவும் கடன்காரனைத் தூண்டினான். வியாபாரத்திற்காகக் கடன் கொடுக்கப்பட்ட தொகையை வசூல் செய்துக்கொள்ளும்பொருட்டு கடன் காரனால் கொண்டு வரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் விதவை மைனர் என்று கக்ஷி சொல்லுவதிலிருந்து அந்த அனந்தரவார்சு விலக்கப்பட்டிருக்கிறான். என்று சவுத் இந்தியன் எக்ஸ்போர்ட்டு கம்பெனி v. விஸ்வநாதய்யர் கேசில் ஜட்ஜி மிஸ்டர் வாலிசால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சாக்ஷியம்.

ஒரு தேவஸ்தானம் யாருக்குச் சொந்தமென்றும் மகந்துவை நியமிக்க யாருக்குப் பாத்தியமிருக்கிறதென்று ஒரு கேசில் பிரஸ்னை உண்டானது. முந்தி கவர்ன்மெண்டு ஏஜண்டால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி அவர் உத்திரவின்படி இந்த தேவஸ்தானம் யாருக்குச் சொந்தமென்றும் யார் இதன் மகந்துவை நியமிப்பது வழக்கமென்று பகிரங்கமாக ஒரு விசாரணை நடத்தி அனுப்பிய ரிப்போர்ட்டு இந்த கேசில் சாக்ஷியமாக ருஜுப்படுத்தப்பட்டது. இந்த தஸ்தாவேஜி கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்ட விசாரணையைச் சேர்ந்தபடியால் இது சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப் படலாமென்று தீர்மானிக்கப்பட்டது. பால்டியோதாஸ் v. கோவிந்ததாஸ், 23 இ. கே. 18.

சர்க்கார் தஸ்தாவேஜி.

கிரிமினல் புரோசிஜர்கோடு 107-வது பிரிவின்படி அனுப்பப்பட்ட நோட்டீஸ் சாக்ஷிச்சட்டம் 74-வது பிரிவின்படி ஒருசர்க்கார் தஸ்தாவேஜியாகும். அது எந்தக்கேசில் பிறப்பிக்கப்பட்டதோ அந்த கேசில் ஒரு நில சம்பந்தமாக இருதரப்பாருக்கும் ஒரு தகரார் இருந்ததென்று ருஜுப்படுத்த அதை சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அந்த நோட்டீசில் காணப்பட்டிருக்கும் கக்ஷிக்காரர்கள், எந்தக் கேசில் இந்த நோட்டீஸ் சாக்ஷியமாக தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தக்கேசின் கக்ஷிக்காரர்களா என்று முதலில் ருஜுப்படுத்தப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஷேயிக் அம்ஜால் v. லக்ஷ்மி காலட்டஜா, 18 கல் வி.நோ. 644.

உண்டிகள்.

இரண்டு வியாபாரக் கம்பெனிகள் ஒன்றுடன் ஒன்று வியாபாரம் செய்துவந்த வகையில் உண்டிகள் உற்பத்தியான பிறகு அவைகள் பதிப்பிக்கப்பட்டன. பதிப்பிக்கப்பட்டபோது அவைகளுக்குப் போதுமான ஸ்டாம்பு ஒட்டப்படவில்லை. ஆயினும் கணக்கு புஸ்தகங்களை ஆஜர்படுத்தி ருஜுப்படுத்தி அசல் உண்டியின் தொகைக்கு டிக்கிரி பெற்றுக் கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது. ஜாகன் பிரசாத் v. இந்திரம்மாள், 12 அ. லா. ஜெ. 361.

மரணத்தோடு முடியும் விபத்து சட்டம்

1855-ம் வருடத்திய 13-வது சட்டத்தின்படி விபத்தால் இறந்துபோனவன் இறந்துபோனபிறகு அவனுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஸ்வீகாரம்அவனுடைய சொந்த புத்திரனாகமாட்டான் என்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 846.

# Civil & Criminal cases.

# சிவில் கிரிமினல் கேஸ்கள்.

ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்

ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

லாப்பாயின்ட்:—புருஷனுக்கு வரவேண்டிய கடனை வசூல் செய்ய விதவைக்குள்ளபாத்திதை.



கேசின் விபரம்:—ஒரு ஹிந்து விதவை அவளுடைய புருஷனுக்கு வரவேண்டிய கடன்களை வசூல் செய்ய வார்சு சர்டிபிக்கேட் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கோயமுத்தூர் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் மனுசெய்துகொண்டாள். இந்தமனு மனுதாரியின் புருஷனுடைய சகோதரர்களால் ஆக்ஷேபிக்கப்பட்டது.

ஜில்லா ஜட்ஜி உத்திரவு:—சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டிருப்பதாக ருஜுப்பட்டிருப்பதால் மனுதாரிக்கு வார்சு சர்டிபிக்கேட் பிறப்பிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக சகோதரர்கள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் S. I. ஸ்ரீனிவாச கோபாலாச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யரும் பேசினார்கள்.

அப்பீல் வாதியின் லாயர் பேசினது:—விதவை இறந்துபோன பிறகு அப்பீல் வாதிகள் இப்போது விதவையால் வசூல் செய்யப்படும் கடன்களுக்கு அனந்தர வார்சு பாத்திய முடையவர்களானபடியால் விதவை ஜாமீன் கொடுத்தாலொழிய அவளுக்கு வார்சு சர்டிபிக்கேட் பிறப்பிக்கக்கூடாதென்று சொன்னார்.

அப்பீல் பிரதிவாதிகள் லாயர் பேசினது:—எப்போது சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கிறதோ அப்போது அவள் ஜாமீன் கொடுக்கவேண்டியது அனுவசியமென்று சொன்னார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:— சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்துகொண்ட பிறகு அவர்கள் ஜீவதிசையிலிருந்த விதவை ஜாமீன் கொடுத்துவிட்டுதான் கடன்களை வசூல் செய்யவேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்படாதபடியால் நாங்கள் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பை உறுதிப்படுத்துகிறோம் என்று தீர்ப்பு சொனனார்கள்.

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்

ஒரு போர்ஜரி கேஸ்.

கேசின் விபரம்:—தஞ்சாவூர் ஜில்லா செஷன் கோர்ட்டில் 1. மாணிக்க ஆசாரி 2. வேம்பு அய்யர் ஆகிய இருவர்களும் ஒரு உடன்படிக்கையை போர்ஜரி செய்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டு ஒவ்வொருவருக்கும் 4-வருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது. கேசின் விபரமென்னவென்றால் 1-வது குற்றவாளிகளுக்கு இரண்டுபேர்கள் சேர்ந்து ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார்கள். இந்த உடன்படிக்கையை எழுதிக்கொடுத்தவர்களுடைய சம்மதமில்லாமல் 1-2-குற்றவாளிகள் கூஷரத்துகள்சேர்த்து ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக ரெஜிஸ்டிராருடைய ஆபிசில் ஆஜர்படுத்தினார்கள்.

குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்.

லாயர்கள்:—குற்றவாளிகள் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் பேசப்பட்ட வாக்கு மூலங்கள கொடுத்திருக்கிறபடியால் குற்றவாளிகள்பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்து ஜெயிலிலிருந்து அவர்களை விட்டுவிடும்படி உத்திரவுசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்

ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி ஐயர்.

கேசின் விபரம்:—நான்கு பேர்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் மரம் வெட்டுவதற்காக காட்டிற்குப் போயினர். திரும்பி வரும்போது காட்டு இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளைக்கண்டனர். இவர்கள் காட்டிற்குள் நுழைந்ததற்காக தங்கள்பேரில் கேஸ் கொண்டு வருவார்களோ என பயந்து அதிகாரிகளை கொன்றுவிட்டனர். மேற்படி நால்வரில் ஒருவன் அப்ரூவராக எடுத்துக்கொள்ளப்பட்டான் பாக்கி 1-2-3-குற்றவாளிகள் செஷன் கோர்ட்டில் விசாரணைசெய்து முதற் குற்றவாளியை விடுவித்துவிட்டு 2-3-குற்றவாளிகளுககு மரணதண்டனையை விதித்தார்கள்.

இவர்கள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்கள்.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் R. N. ஐயங்கார் அப்பீல் வாதிகளின் தரப்பிற்கும், கவர்ன்மெண்டு பிராசிக்கியூடர் கவர்ன்மெண்டின் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டில் விசாரணை ஒழுங்காக நடத்தப்படவில்லை என்று தெரிய வருகிறபடியால் குற்றவாளிகள் புனர் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று உத்தரவுசெய்தார்கள்.

# சென்னை சட்ட நிரூபண சபை.

—:o:—

சென்னை சட்ட நிரூபண சபை கூட்டம் ஒன்று கிழமீ 2உ போர்ட் செண்ட் ஜியார்ஜ் கோட்டைகுள்ளிருக்கும் கவர்ன்மெண்டு செக்ரேட்டரி ஆபிசில் கூடினது. அப்போது ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் கவர்ன்மெண்டு மெம்பர்களுக்கு அநேக கேள்விகள் போட்டார்கள். அவற்றில் முக்கியமான சிலவற்றையும் அவைகளுக்கு கவர்ன்மெண்டு மெம்பர்கள் சொல்லிய பதிலையும் அடியில் எடுத்துக்கூறுகிறோம்.

ஆனரபில் மிஸ்டர் நரசிம்மய்யர் கேட்ட கேள்விகள்.

(1) 1911,1912,1913-ம் வருடங்களில் சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் கிராம மாஜிஸ்டிரேட்டுகள் எத்தனைபேர்களுக்கு கிராம மேஜஸ்டிரேட்டுகள் தொழுக்கட்டை தண்டனை விதித்திருக்கிறார்கள்? அவர்களுள் எத்தனைபேர்கள் ஸ்திரீகள்?

சேலம்—கோயமுத்தூர்

| | | |
|---|---|---|
| 1911 | 13 | 25 |
| 1912 | 39 | 27 |
| 1913 | 29 | 15 |

தொழுக்கட்டை தண்டனை விதிக்கப்பட்ட ஸ்திரீகளின் எண்ணிக்கை கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது.

(2) ஆனரபில் மிஸ்டர் சீனிவாச சாஸ்திரியாரால் சட்ட சபையில் ஆலோஜனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் ருதுமதி விவாக மசோதா ஆக்ட் சம்பந்தமாகயாரேனுமாவது அல்லது எந்த கூட்டத்தாராவது கவர்ன்மெண்டாருக்கு அறிவித்துக்கொண் டிருக்கிறார்களா? அப்படி அறிவித்துக் கொண்டிருந்தால் அவர்கள் யார்? அவர்களில் எத்தனை பேர்கள் அந்த மசோதா ஆக்ட்டை ஆதரிக்கிறார்கள். எத்தனை பேர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள்.

25-1-1915 வரையில் அடியிற்கண்ட பேர்கள் கவர்ன்மெண்டாருக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்:—(1) 9-12-1914-ல கூடின கோப்பிசெட்டிபாளையத்தின் மகாநாட்டுக்குப் பிரசிடெண்டாயிருந்த புதுக்கரை மிஸ்டர் சீதாராமய்யர் அவர்கள், (2) சித்தூர் ஜில்லா சிருத்தனூர் ஸ்ரீமான், மாதவ சித்தாந்தோன்கினி சபையின் கௌரவ காரியதரிசி, (3) குண்டூர் ஜில்லா கோலூரில், 10-1-1915-ல்கூடிய பொதுக்கூட்டத்திற்குப் பிரசிடென்டாயிருந்த மிஸ்டர் J. லக்ஷ்மி நாராயண சாஸ்திரி அவர்கள், (4) திருவல்லிக்கேணியில் 10-1-1915-ல் கூடிய பொதுக்கூட்டத்தின் பிரசிடென்டாகிய மிஸ்டர் T. R. ராமச்சந்திரய்யர், (5) தென் ஆற்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்கா தச்சக்காடு கிராமத்தைச் சேர்ந்த மிஸ்டர் பண்டித R. நடேச சாஸ்திரியார் வகையரா, (6) மலையாளம் ஜில்லா பாலக்காட்டுத் தாலுக்கா ஆத்திதியபுரத்தில் கூடிய பொதுக் கூட்டத்திற்கு பிரசிடென்டாயிருந்த மிஸ்டர் R. நாராயண அய்யர் அவர்கள், (7) விசாகப்பட்டணம் சமாஜத்தின் பிரசிடென்டாயிருந்த மிஸ்டர் ஸ்ரீவிக்கிரம திருபாவர்மா, (8) 1915ஞு ஜனவரீ 13-14உகளில் நந்தியாலில் கூடிய பொதுக்கூட்டத்தின் பிரசிடெண்டு மிஸ்டர் B. ராமாசாஸ்த்துருலுகாரு, (9) கெஞ்சம் ஆரியசமாஜம் செக்ரேட்டரி, (10) 19 1-1915-ல் கும்பகோணத்தில் கூடிய பொதுக்கூட்டத்திற்குப் பிரசிடென்டாகவிருந்த மிஸ்டர் ராவ்பகதூர் N. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள். இவர்களுள் மேலே 6-ம் நம்பரில் சொல்லப்பட்டவர் ஆதரிக்கிறார். மற்றவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். 7-ம் நம்பரிலும் 9-ம் நம்பரிலும் சொல்லப்பட்டிருப்பவர்கள் முக்கியமாய் ஆரியா ஜாதியாருக்கு இந்த சட்டம் பொருந்தாதென்று அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(3) மெசர்ஸ் பின்னி கம்பெனியார் திண்டுக்கல், பாலக்காடு, பொல்லாச்சி, போதனூர், இருப்புப்பாதைகளை தாங்கள் போட அனுமதி கேட்டுக்கொண்டிருந்தார்களே அவர்களுக்கு கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்துவிட்டார்களா? சேலம் உளுந்தூர்பேட்டை இருப்புப்பாதையை சேலம் ஜில்லா போர்டாரும், தென் ஆற்காடு ஜில்லா போர்டாரும் சேர்ந்துபோட அனுமதி கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்றுக்கொண்டிருப்பதுபோல கோயமுத்தூர் ஜில்லா போர்டாரும் மதுரை ஜில்லா போர்டாரும் சேர்ந்து திண்டுக்கல் போதனூர் இருப்புப்பாதையைக் கட்ட கவர்ன்மெண்டாரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ள 30-11-1914-ல் கூடிய கோயமுத்தூர் ஜில்லா போர்ட்டு மீட்டிங்கிலே ஒரு தீர்மானம் செய்யப்பட்டதே அந்தத் தீர்மானம் கவர்ன்மெண்டாருக்கு வந்து சேர்ந்ததா? மதுரை ஜில்லா போர்டார் கோயமுத்தூர் ஜில்லா போர்டார் யோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? கவர்ன்மெண்டார் இந்த இருப்புப்பாதை சம்பந்தமாக ஏற்கனவே உத்திரவு பிறப்பித்து விட்டார்களா அல்லது கோயமுத்தூர் ஜில்லா போர்டாருடைய யோசனையை ஆதரிக்க இஷ்டப்படுவார்களா?

ஜ:—கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்தவரையில் ரெயில்வே போர்டார் இன்னும் பின்னி கம்பெனியாருக்கு முடிவான சாங்கிஷன் கொடுக்கவில்லை. கோயமுத்தூர் ஜில்லா போர்டாருடைய தீர்மானம் வந்து சேர்ந்தது. மதுரை ஜில்லா போர்டார் இந்த இருப்புப்பாதையில் தங்களுக்கும் பங்கு இருக்கவேண்டுமென்று தீர்மானம் பாஸ் செய்திருக்கிறது. கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம் சென்ற மீட்டிங்கில் அறிவிக்கப்பட்டது.



ஆனரபில் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ்.

(4) இந்த ராஜதானியில் எந்தெந்தவிடங்களில் கால்நடை ஆஸ்பத்திரிகள் திறக்கப்படவேண்டுமென்று சாங்கிஷன் கொடுக்கப்பட்டிருந்தும் அப்படி திறக்கப்படவில்லை. இப்பேர்பட்டவிடங்களில் எந்தவிடத்திலாயினும் சிறிய ஆஸ்பத்திரியாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? எந்தெந்தவிடங்களில் கால்நடை ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று சாங்கிஷன் செய்யப்பட்டிருந்தும் ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கப் படாமலிருக்கிறதோ அந்தந்தவிடங்களில் சிறிய ஆஸ்பத்திரிகளாவது திறக்கப்படும்படி உத்திரவு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

அமலாப்பூர், நெல்லூர், நந்தியால், ஹிந்துப்பூர், மதனப்பள்ளி, சேலம், ஈரோடு, உதகமண்டலம், மங்களூர் ஆகிய இந்த நகர்களில் கால்நடை ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தும்படியாக சாங்கிஷன் செய்யப்பட்டிருந்தும் திறக்கப்படவில்லை. இந்தவிடங்களில் எந்தவிடத்திலும் சிறிய ஆஸ்பத்திரிகூட கிடையாது. சாத்தியப்பட்டால் அப்படிச்செய்யும்படியாக ரெவினியூ போர்டார் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

(5) எந்தெந்த ஜில்லாக்களில் டிப்டி கலெக்டர்களுக்கு டிவிஷன் வேலை கொடுக்கப்படாமல் ஜில்லா கலெக்டர்களுக்கு உதவியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அப்படி எவர்களேனுமிருந்தால் அவர்கள் கிரிமினல் கேஸ்களையும் அப்பீல்களையும் விசாரணை செய்யும்படியாக அவர்களில் யாருக்கேனும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ? ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளால் டிரான்ஸ்பர் செய்யப்படும் கேஸ்களையும் அப்பீல்களையும் அவர்கள் விசாரணை செய்யும்படியாக அவர்களுக்கு அதிகாரம் கொடுக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—தென் ஆற்காடு, செங்கற்பட்டு, கோயமுத்தூர், கடப்பை, கெஞ்சம், கோதாவரி, குண்டூர், சேலம், திருச்சினப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இந்தவிடங்களில் டிப்டி கலெக்டர்கள் ஜில்லா கலெக்டருக்கு உதவியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த டிப்டி கலெக்டர்களுக்கு கிரிமினல் கேஸ்களையும் அப்பீல்களையும் விசாரணைசெய்ய அவர்களுக்கு ஏற்கனவே அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(6) நெல்லூர் ரயில் பிளாட்பாரத்திற்கு மூடு அல்லது கூறைப்போடவில்லை என்றும் ரயிலில் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களும் வெய்யிலாலும் மழையாலும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டிருக்கிறார்களா? நெல்லூர் ரயில் பிளாட்பாரம் ரயில்வே ஸ்டேஷனைவிட மேட்டிலிருக்கிறதென்பதும் ஜனங்கள் ஸ்டேஷனிலிருந்து பிளாட்பாரத்திற்கும் பிளாட்பாரத்திலிருந்து ஸ்டேஷனுக்கும் போகிறதற்கும் வருவதற்கும் கஷ்டப்படுகிறார்கள் என்பது கவர்ன்மெண்டார் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? இந்த குறைகளை கவனித்து அகற்றும்படியாக ரயில்வே அதிகாரிகளுக்கு அறிவிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—தெரியும். ரயில்வேஸ்டேஷனை விஸ்தரித்து பிளாட்பாரத்திற்கு ஒரு கூறை போடுவது ரயில் அதிகாரிகளுடைய ஆலோசனையிலிருந்து வருகின்றது. ஆனால் இந்த வருட பணக்கசாலில் யாதொரு ஏற்பாடும் செய்வது சாத்தியமல்ல.

(7) 1912, 1913, 1914-ஆகிய இந்த வருடங்களில் ஐக்கிய மாகாணங்கள், வங்காளம், பஞ்சாப் மத்திய மாகாணங்கள், பம்பாய், மதிராஸ் ஆகிய இந்த மாகாணங்களில் குற்றவாளிகள் செட்டில்மெண்டு எத்தனை ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அவைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வருடத்திலும் எத்தனை குற்றவாளிகள் அமர்ந்திருந்தார்கள்? அந்த செட்டில்மெண்டுகள் எவர்களால் மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வந்தன?

ஜ:—மதிராஸ் சம்பந்தப்பட்டவரையில் அடியிற் கண்ட ஜாபிதா அறிவிக்கும்:—

| செட்டில்மெண்டு பெயர். | ஜில்லா. | கைதிகளின் எண்ணிக்கை. 1912, 1913, 1914. | மானேஜ்மெண்டு செய்தவர்கள். |
|---|---|---|---|
| காளிச்சேடு | நெல்லூர் | 930-149 -1260 | மெசர்ஸ் பிராண்டனட் அண்டு கோ. |
| கால்வி | ஷை | 152-630-670 | அமெரிக்கன் பாப்டிஸ் ட்மிஷன். |
| சித்தாநகரம் | குண்டூர் | ,, 494-535 | ரக்ஷண்யசேனை. |
| பெத்தபுடி-யாப்பட்லா | ஷை | ,, 316-681 | ஷை |
| கம்மாபுரம் | தென் ஆற்காடு | ,, 135-359 | ஷை |
| பொம்மாளிகெட்டா | சித்தூர் | 550-393 | ஷை |

மற்ற மாகாணங்களிலிருக்கும் குற்றவாளிகள் செட்டில்மெண்டுகளைப்பற்றி கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது.

ஆனரபில் A. K. G. அகமத் தம்பி
மரக்காயர்.

8. கே. ஜியார்ஜ்டவுன் பாரிஷ் வெங்கடாசலய்யா தெருவிலிருக்கும் பள்ளிவாசலுக்கு அடுத்தாப்போலிருக்கும் நிலத்தை கார்போரேஷன் வாங்கி உபயோகித்துக்கொள்ள யோசனை செய்திருப்பதை ஆக்ஷேபித்து ஜியார்ஜ்டவுன் முஸ்லீம்கள் தரப்பில் மிஸ்டர் அப்தல்குவாடிர் சாகிப் ஒரு மகசர் கவர்மெண்டாருக்கு அனுப்பியிருப் து வாஸ்தவமா? அந்த காலி நிலத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு அதில் இப்போது கேவலமான கட்டடத்தில் வைக்கப்பட்டிருக்கும் கவர்மெண்டு முஸ்லீம் செக்கண்டரி பள்ளிக்கூடத்தை வைக்கவேண்டு மென்பது அந்த மகஜரில் சொல்லப்பட்டிருப்பது வாஸ்தவமா? அப்படியானல் கவர்ன்மெண்டார் மகஜரில் சொல்லப்பட்டிருக்கும் யோசனையை ஆதரிப்பார்களா?

ஜ:—இப்போதுதான் மகஜர் வந்து சேர்ந்தது மகஜர் தக்கபடி கவனிக்கப்படும்.

ஆனரபில் ராஜாஸ்டிரி மதனமோகன
சிம்மதேவு.

9. கே. ஆஸ்கா நகரில் சர்க்கரையும் சாராயமும் செய்யபட்டு வருவதை முன்னிட்டு கெஞ்சத்தில் ஒரு கைத்தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—காக்கி நாடாவில் ஒரு இன்ஜினிரிங் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கவும் விசாகப்பட்டணத்திலிருக்கும் கைத்தொழிற் பள்ளிக்கூடத்தை விருத்தி செய்யவும் கவர்ன்மெண்டார் யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்குமேல் அதிகமாக வட ஜில்லாக்களில் கைத்தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படுவது இப்போது கவர்ன்மெண்டாருடைய யோசனையிலில்லை.

10. கே:—மன்னார்குடி பின்னலெகலாசாலையில் பி. ஏ. வகுப்பு ஏற்படுத்த வேண்டுமென்று மன்னார்குடி, திருத்திரப்பூண்டி, திருவாலூர் முதலியவிடங்களிலிருந்தும் இந்தியன் கிறிஸ்தவர் சங்கத்திலிருந்தும் மகஜர் வந்திருப்பது வாஸ்தவம்தானு? கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்ய இஷ்டப்படுவார்களா?

ஜ:—ஆம். கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகிறது.

## MADRAS HIGH COURT CASES.
## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட் கேஸ்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரி அவர்கள்

கோடலாத்தி பேரய்யர்—அபபில் வாதி

vs.

கோடலாத்தி லக்ஷ்மி தேவம்மா } அப்பில் பிரதிவாதி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு அப்பிலை ஐக்கோர்ட்டார் புனர் விசாரணைக்கு கீழ்க்கோர்ட்டிற்கு அனுப்பியபோது "செலவு தொகை விசாரணையின் முடிவைப் பொருத்தது" என்று சொல்லியிருந்தார்கள் இப்படி ஐக்கோர்ட்டார் சொல்லியிருப்பதால் வெற்றி அடைந்த கக்ஷிக்காரனுக்குச்செலவு தொகைகொடுக்க கீழ்க்கோர்ட்டார் கட்டுப்பட்டவர்களல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. 28 ம. லா. ஜெ. 441. G. Periah vs. G. Lakshmidevamma, 28 M. L. J. 441.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

ஆதியப்பபிள்ளை—அப்பில்வாதி


vs.

நல்லெந்திர பிள்ளை—அப்பில் பிரதிவாதி.
லாப்பாயின்ட்:—கார்டியன்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—தகப்பனுவது புருஷனுவது கார்டியனுவது நியமிக்கபபடுவதற்குள்ள பாத்திதைக்கும் மற்ற பந்துக்கள் கார்டியனுக நியமிக்கப்படுவதற்குள்ள பாத்திதைக்கும் சட்டப்பிரகாரம் வித்தியாசமிருக்கிறது. முதல் கேசில் வேருருவரை கார்டியனுக நியமிப்பதற்குமுந்தி தகப்பனும் புருஷனும் கார்டியனுக நியமிக்கப்படுவதற்கு அருகற்றவர்கள் என்று கோர்ட்டார் திருப்தி அடையவேண்டும். பிந்தியகேசில் கோர்ட்டார் மனதிலிருக்கவேண்டிய முக்கிய எண்ணம் என்னவென்றால் மைனருடைய க்ஷேமம்.

தகப்பன் இரண்டாவது பெண்சாதியை விவாகம் செய்துக்கொண்டிருப்பதும் முதல் பெண்சாதியை அவன் கொடுமையாக நடத்திக்கொண்டு வந்ததும் ஆகிய இந்தக் காரணங்களால் அவன் முதல் பெண்சாதியின் மைனர் புத்திரர்களுக்கு கார்டியனுகவிருக்க அருகற்றவனுகயிருக்கிறுன் என்று சொல்லக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. 28 ம. லா. ஜெ. 412 Audiappa Pillai vs. Nallandran Pillai, 28 M. L. J. 442.

OFFICE OF THE REGISTRAR ... 5 SEP 1915 MADRAS





# இந்திய சட்ட கெஜெட்.

உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 8.] சென்னப்பட்டணம் 1915௵ ஜூலை௴ [நெ. 3.


## அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| | பாகம் I. | |
| 1. | தேவஸ்தான தரும சொத்து ஆக்ட் ... ... ... | 33 |
| 2. | சவுகார் சட்டம் ... ... .... ... | 34 |
| 3. | ஆனரபில் ஜட்ஜி சர். C. சங்கர நாயர் .... .... ... | 35 |
| 4. | ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் .... ... ... | 36 |
| 5. | சிவில் கிரிமினல் தாவாக்கள் ... .... ... ... | 37 |
| 6. | முக்கியமான தீர்ப்புகள் ... .... ... .... | 40 |
| 7. | ஹிந்துலா ... ... ... .... | 42 |
| 8. | சட்டங்களும் வியாக்கியானங்களும் ... ... ... | 45 |
| 9. | சென்னைப்பட்டண ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள் ... .... ... | ,, |
| 10. | சப்பர்ஷணை ... .... ... ... | 52 |
| 11. | நிகழ்ந்த சம்பவங்கள் ... .. ... ... | 54 |
| 12. | கக்ஷிக்காரர்கள் பக்ஷம் ... .... ... ... | 56 |
| | பாகம் II. | |
| 1. | இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் ... ... ... ... | 9 |



சந்தா விபரம்.

வருஷ சந்தா, 5 6 0: (வி. பி, தபால் செலவு 4-அணு பிரத்தியேகம்)
சிங்கப்பூர் பினங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 0
சந்தா தொகையை அட்வான்சாசவே சட்டவேண்டியது அவசியம்.

## இநதிய சட்ட கெஜட் ஆபீஸ்.

## மானேஜர் விளம்பரம்.

1. இதனல் சகலமான ஜனங்களுக்கும் அறிவிக்கிற தென்னவென்ருல் மிஸ்டர் R. சீனிவாசய்யங்கார் நம்முடைய இந்திப சட்ட கெஜெட்டிற்கு தஞ்சாவூர் ஜில்லா ஏஜெண்டாக நியமிக்கப் பட்டிருக்கிருர்சந்தாதாரர்கள் சேர்க்கவும் சந்தாதாரர்களிடமிருந்து சந்தாவசூலிக்கவும் சந்தாதாரர்களுக்கு ரசீதுகொடுக்கவும் எங்களால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. நம்முடைய கெஜெட்டின் அபிவிருத்தியை நாடி சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டு வக்கீலாகவும் இம்மாகான சட்ட நிருபண சபையில் மெம்பராகவுமிருக்கும் ஆனரபில் மிஸ்டர் T. R. ராமசந்திர அய்யர் பி. ஏ. பி. யல் அவர்கள் ரூ. 10ம் திருச்சினப்பள்ளி ஜில்லா பிச்சாண்டார்கோவில் மிருகதார் மகாா ாஸ்ரீ ஆவடியாபிள்ளை ரூ. 10ம் சென்னைத் தம்புச் செட்டிவீதியில் கலாந்தர் மகா-ா-ா.ஸ்ரீ கோதண்டராமசெட்டியார ரூ. 10ம் நன்கொடை கொடுத்தருளியிருப்பதர்காக அவர்கள்பால் நன்றி விஸ்வாசம் பாராட்டி வந்தனமளிக்கின்ருேம்.

மனேஜர்,

இந்திய சட்ட கெஜெட் ஆபீஸ்.

புதியதாய் கண்டுபிடித்த ரோமசங்கரிணி யென்னும்

## தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்த பாகத்திலும் இருக்கும் கூந்தலை இது பூசுவதனுல் தேகத்தின் சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை யெடுத்துவிடும் ஒரு தடவை வாங்கினுல் விடமாட்டீர்கள் தேகத்தின் காந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான திடத்தைக் காப்பாற்றும் படியான சோதி இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை



வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 3-கேக் உள்ள பெட்டி-க்கு | 0 | 14 | 0 |
| ஒரேதடவையில் 2-பெட்டிக்கு | 1 | 10 | 0 |
| போஸ்டேஜ் பிரத்தியேகம் | 0 | 4 | 0 |

வி எஸ் பாணி,


நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

## டாக்டர் சிலவை இனி நிவர்த்தி செய்யலாம்.

வைத்தியரும் வேண்டாம்! மருந்தும் வேண்டாம்!

சிலவில்லா வீட்டு வைத்தியர். மருந்தில்லா அனுகூல நண்பர்

## ஆக்ஸிடோனர்,



என்னும் சர்வவியாதி சம்ஹாரக் கருவியானது.

எக்காலத்திலும்
எத்தேசத்திலும் திரேகத்திற்கு
வலுவையும் நல்ல சுகத்தையும் தரும்.

சிறந்த வைத்திய சிரோன்மணிகளும் மற்று அனேக கனவான்களும் ஷை இக்கருவிக்கு சகலவியாதிகளையும் எளிதில் சுகப்படுத்தும் சக்தியுள் தென்றும், நம்பிக்கையுள்ளதென்றும், உலகத்தி இதற்கு சமானமானது கிடையாதென்றும் ஒப்பு கொண்டிருக்கிருர்கள்.

மானிட திரேகத்திற்கு ஏற்படும் யெல்லாவியாதிகளையும் அவிழ்தமன்னியிலும் ஆயுத யோக மன்னியிலும், வியாதியின் கால அளவு, மை, முன்பரிகாரங்களினுல் திராமை முதலிய காணங்கள் எவ்வாராயினும் கவலையன்னியில் கிர மாக உபயோகித்தால் ஆச்சரியகரமாக குண படுத்தும்.

### விலை. ரூபா. 80-ம், 100-ம்

சாக்கிரதையாக உபயோகித்துவந்தால் ஆக்ஸிடோனர் ஆயுள் பரியந்தம் கெடாமலிருப்பதுட குடும்பத்தில் உள்ள சகல வியாதிகளையும் சுகப்ப திவரும் சிருவர்களும் கையாளக்கூடிய அவ்வள எளிதான கருவி.

மதராஸ் ஏஜெண்டுகள்:—

கிருஷ்ணு அண்டு பிரதர்ஸ்,

23. குருவப்பசெட்டி தெருவு சிந்தாத்திரிபேட்டை



# The Indian Law Gazette.

PART 1

# இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

பாகம் 2.

வால்யம். 8]  சென்னப்பட்டணம், 1915ஸு ஜுலைமீ  [நெ. 3.


## RELIGIOUS ENDOWMENTS ACT.

## மதசம்பந்தமான தருமஸ்தாபனங்கள் சட்டம்

சென்னை மாகாண கவானர் மேன்மை தங்கிய லார்ட் பெண்ட்லாண்டு அவர்கள் நிகழ்மாசக் கடைசியில் திருப்பதிக்குப் போயிருந்தபோது மேற்படியூர் முனிசிபாலிட்டியாரும் வரிசெலுத்துவோரும் கனம்பொருந்திய கவர்னர் அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்தார்கள். இந்தப் பத்திரங்களில் ஒரு முக்கியமான குறைகள் எடுத்துக்கூறி அதை அகற்றி வைக்கவேண்டு மென்று கனம் கவர்னர் அவர்களை வேண்டிக் கொண்டார்கள். அந்தக் குறை என்னவென்ருல் திருப்பதி தேவஸ்தானத்தின் ஐவேஜி திருப்பதி நகர் நன்மைக்கான காரியங்களில் வினியோகப்படுத்தப் படாமல்மதசம்பந்தமான தரும ஸ்தாபன சட்டம் தடுத்திருப்பதே. திருப்பதி தேவஸ்தானம் சென்னை ராஜதானியிலிருக்கும் மகா பெரிய தேவஸ்தானங்களுள் ஒன்று என்று மதிக்கப்பட்டு வருகிறது. அந்த தேவஸ்தானத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவெங்கடேசப் பெருமாளை சைவவைஷ்னவர்கள் ஆகிய இருவகுப்பார்களாலும் ஆராதிக்கப்பட்டு வருகிறது. அது திவ்விய தேசங்களில் ஒன்று என்று வைஷ்னவர்களால் மதிக்கப்பட்டுவருகிறது. தேவஸ்தான திருவிழா காலங்களிலும் மற்றபடியுள்ள சாதாரண காலங்களிலும் யாத்திரிகர்கள் கூட்டம் கூட்டமாய் வந்து ஸ்ரீவெங்கடேசப்பெருமாளைத் தரிசனம் செய்து போகிருர்கள். பிரார்த்தனைக்காரர்கள் தங்களுடைய கிரகங்களில் உண்டி சேர்த்து கார்த்திருந்து இத்திவ்ய தேசத்திற்குப் புறப்பட்டு வந்து பகவானை தரிசினம் செய்து தாங்கள் சேர்த்து வைத்திருந்த உண்டிப்பணத்தை கொப்பரையில் போடுகிருர்கள். திருவிழா காலங்களில் பதிணயிரக்கணக்கான ஜனங்கள் அந்த ஸ்தலத்தில் கூடுகின்ருர்கள். சென்னை ராஜதானியில் பல பாகங்களிலிருந்து வருவதுமல்லாமல் கல்கத்தா பம்பாய் அலகாபாத் பினையாக் முதலிய தூரதேசங்களிலிருந்து வருகிருர்கள். திருப்பதி திருமலை தேவஸ்தானங்கள் இயல்பிலேயே மிகுந்த ஐவேஜியுடைய தேவஸ்தானங்களாக யிருப்பதுமல்லாமல் வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 4-லக்ஷத்திற்கு அதிகமாய் வருமானமுடையனவாக யிருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த தேவஸ்தானத்தின் முழுமானேஜமெண்டும் முந்தி மகந்துக்கள் மானேஜ்மெண்டிலிருந்து வந்தது. அந்த மகந்துக்கள் தேவஸ்தான சம்பந்தமான பணத்தை தாருமாறுமாகச் செலவு செய்து தேவஸ்தானத்தை சீர்கேடாக மானேஜமெண்டு செய்து வருகிருர்களென்று வட ஆற்காடு ஜில்லாவில் ஷை தேவஸ்தான பக்தர்களால் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. அந்த வியாஜ்ஜியம் பிரிவுகவுன்சிலுக்குக் கொண்டு போகப்பட்டு

கடைசியில் பிரஸ்தாப தேவஸ்தானம் வட ஆற்காடு ஜில்லாக் கோர்ட்டாருடைய மேற்பார்வையிலும் மானேஜ்மெண்டிலும் வைக்கப்பட்டது. அதன் ஐவேஜி சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் திருப்பதி தேவஸ்தானங்களின் ஐவேஜி அந்த தேவஸ்தானங்களின் காரியாதிகளில் மட்டிலும் வினியோகப்படுத்தப்பட வேண்டுமே யொழிய மற்றபடி தேவஸ்தானத்திற்கு சன்னிதான காரியங்களில் உபயோகப்படுத்தப்பட கூடாதென்றும் அப்படி மீறி உபயோகப்படுத்தப்பட்டு வந்தால் அப்படிசெலவு செய்யப்பட்ட பணத்திற்குத்தேவஸ்தானத்தின்டிரஸ்டிகள்ஜவாப்புசொல்ல கடமைப்பட்டவர்கள். என்று ஐக்கோர்ட்டார் தீர்மானித்து விட்டார்கள் திருப்பதிதேவஸ்தானம் மகிமையும் ஐவேஜியும் பொருந்தியதேவஸ்தானமாக விருந்தபோதிலும் திருப்பதி முனிசிபாலிட்டி உபாய வருமானமுடைய ஏழை முனிசிபாலிட்டி என்று சொல்லவேண்டும். தேவஸ்தான திருவிழா காலங்களில் கூட்டம் கூட்டமாகவரும் ஜனங்கள் கஷ்டப்படாதபடி கஸ்பாவை ஆரோக்கியமான நிலைமையில் வைத்திருக்கவேண்டிய வகையில் முனிசிபாலிட்டி அடிக்கடி அதன் சக்திக்கு மிஞ்சியபடி பெருவாரியாகச் செலவு செய்துவருகிறது. திருவிழா காலத்தில் தொத்து வியாதிகள் கஸ்பாவில் பரவவொட்டாமல் சுகாதார ஏற்பாடுகள் செய்வதில் பணத்தைச் செலவு செய்து வருகின்றது.

திருப்பதி தேவஸ்தானத்தில வருடத்திற்கு ஒரு முறை நடக்கும்தேர் திருவிழாவில் தேர் நகரைச் சுற்றிக்கொண்டு வரும்போது தேரின் பளுவான சக்கரங்கள் ரோடுகளை நசுக்கி சேதப்படுத்துகின்றன. இந்த ரோடுகளைச் செப்பனிடுவதிலும் முனிசிபாலிட்டியார் வருஷா வருஷம் பணம் செலவு செய்யவேண்டியதா யிருக்கிறது. இப்படி தேவஸ்தானத்தின் நன்மைக்காகவும் தேவஸ்தானத்திறகு வரும் ஜனங்களுடைய நன்மைக்காகவும் முனிசிபாலிட்டி வருஷா வருஷம் பணத்தைச் செலவிட்டு வந்தபோதிலும் திரண்ட ஐவேஜியையும் வருமானத்தையுடைய அந்த தேவஸ்தானம் முனிசிபாலிட்டியின் செலவுகளுக்காக சொற்ப பண உதவிகூட செய்கிறதில்லை. தேவஸ்தானத்தின் டிரஸ்டிகள் முனிசிபாலிட்டிக்குப் பண உதவி செய்யவிருப்ப மற்றவர்களாக யிருக்கிறார்கள் என்று எவரும் நினைக்கக் கூடாது. மேலே நாம் எடுத்துக் கூறியுள்ள ஐக்கோர்ட்டு தீர்ப்பு தேவஸ்தான ஐவேஜி தேவஸ்தானத்திற்குப் புறம்பான நகர் சுகாதார காரியங்களில் வினியோகப்படுத்தப்பட்டு வருவதற்கு இடஞ்சலாயிருக்கின்றது. அந்த தேவஸ்தானத்திற்கு முந்தியிருந்த மகந்துக்கள் திருப்பதி நகர் முனிசிபாலிட்டிக்கும் திருப்பதி சமஸ்கிருத பாடசாலைக்கும் பணஉதவி புரிந்துகொண்டு வந்தார்கள். மேலே சொல்லப்பட்ட ஐக்கோர்ட்டு தீர்ப்பை முன்னிட்டு தேவஸ்தான ஐவேஜியிலிருந்து முனிசிபாலிட்டிக்காவது அல்லது பாடசாலைகளுக்காவது உபகரிக்கப்படுகிறதில்லை.

திருப்பதியிலுள்ள சிலதனவந்தர்கள் சேர்ந்துபாடசாலையை மட்டிலும் நிர்வகித்துக்கொண்டு வருகிறார்கள். முனிசிபாலிட்டிக்கு உதவி செய்வார் யாருமில்லாத படியால் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறது. இம்மாதிரி கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டு வரும் தேவஸ்தானம் திருப்பதி தேவஸ்தானம் ஒன்றுமட்டிலும்மல்ல இன்னும் சில தேவஸ்தானங்களும் ஐவேஜியுடைய தருமஸ்தாபனங்களும் இதே கஷ்டமான நிலைமையாயிருந்து வருகின்றன. சென்னைபுரி அன்னதான சமாஜத்தின் வருஷாந்திரக் கூட்டத்தில், ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் "தம்முடைய அன்னதான சத்திரங்கள் தேசத்தில் இருப்புப் பாதைகள் போடப்படாத காலத்தில் கட்டப்பட்டனவென்று இப்போது அந்த சத்திரங்களில் யாத்திரிகர்களும் பிரயாணிகளும் தங்கிச்சாப்பிட சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறதில்லை என்றும் அனேக சத்திரங்களின் ஐவேஜி பெருக் தேசத்திற்கு நன்மையான வேறெந்தகாரியத்திலும் வினியோகப்படுத்தப்படக்கூடாமலிருக்கிறதென்றும் ஆதலால் அந்த ஐவேஜி தேசத்திற்கு நன்மையைப் பயக்கக்கூடிய வேறெந்த நன்மையான காரியத்திலும் வினியோகப்படுத்தப்படலாமா என்று நம்தேச ஜனங்கள் கூடி செய்ய வேண்டிய காலம் வந்து விட்டதென்று யோஜனை சொன்னார். தரும ஸ்தாபனங்கள் ஐவேஜிகள் எந்த நோக்கத்தை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்டனவோ அந்த ஒரு காரியத்தில் மட்டிலும் செலவிடப்பட வேண்டுமென்று தரும ஸ்தாபனங்கள். ஆக்டின் தாற்பரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காலவேற்றுமையால் ஆதிகாலத்தில் எந்தக் காரியங்களில் செலவிடப்பட வேண்டு மென்று ஐவேஜிகள் ஏற்படுத்தப் பட்டனவோ முதலாவது அந்தக்காரியங்களே தோன்றுகிறதில்லை. ஆதலால் அந்தப் பணத்தைகொண்டு என்னதான் செய்கிறதென்று பிரஸ்னை தானே உண்டாகின்றது. ஐக்கோர்ட்டார் தரும ஸ்தாபன சட்டத்தின் தாற்பரியத்தை அனுசரித்து மேலே சொன்னபடி தீர்ப்பு செய்திருக்கிறார்கள். ஆதலால் தரும ஸ்தாபகரின் நோக்கத்திற்கு சமீபமாயுள்ள காரியங்களிலாவது தரும ஐவேஜிகள் வினியோகப் படுத்தப்பட்டு வரும்படியாகச் சட்டத்தை கவர்ன்மெண்டார் சீர்திருத்தி வைக்கவேணுமென்று மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## THE MONEY LENDER'S ACT.

### சாவுகார் சட்டம்.

இந்தியாவில் ஹிமயகிரிபருவதமுதல் கன்னியாகுமரி முனைவரையிலுள்ள ஜனங்கள் மிதமிஞ்சின வட்டி வாங்கி கடன் வாங்குவோரை இம்சைப்படுத்தும் வருகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். கோர்ட்டார்களுக்கு மார்வாடி எழுதி வாங்கிக்கொண்டிருக்கும் வட்டி மிதமிஞ்சின வட்டியாக யிருக்கிறதென்று அறிந்துகொண்டபோதிலும் ஒப்பந்தச் சட்டத்திற்குக் கட்டுபட்டு அவனுடைய வட்டியின் பிரகாரமே டிக்கிரி கொடுத்துவிடுகிறார்கள். ஆதலால் இந்யாமுழுதிலும் லேவாதேவி செய்துவருகிறவர்கள் நிரந்தரமாக ஒரேவட்டி வாங்கிவருப்படியாக புதிதாக ஒருலேவாதேவிசச்சட்டம் பாஸ்செய்துவைக்க இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் கல்கத்தாவில் பிரசுரமாகும் காஸ்மாஸ் (Cosmos) என்னும் பத்திரிகையின் பத்திராசிரியையாகிய மேடம் கொலூன் என்னும் பிரான்ஸ்தேசஸ்திரி மார்வாடியின் அக்கிரமச் செய்கைகளுக்கு ஒரு உதாரணம் கூறி இந்தியா கவர்ன்மெண்டிற்கு ஒரு யோஜனை கூறியிருக்கிறார்கள். மேடம் கொலூன் அந்த யோஜனையை இநகர் பத்திரிகைகளுக்கு அடியிற்கண்டபடி அறிவித்திருக்கிறார்:— கல்கத்தாவிலிருந்து யுத்தகளத்திற்குப் புறப்பட்டுப்போன ஒரு சோல்ஜர் பொன்னால் செய்யப்பட்டிருந்த தன் கெடியாரச்சங்கிலியை ஒரு சாவுகாரிடம் ஈடுவைத்து மாதம் ஒன்றுக்கு ரூ 4-6 அதாவது மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு அணா வீதம் வட்டி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு ரூ. 70 கடன் வாங்கிக்கொண்டுபோனான். அப்படி அந்த சோல்ஜர் கடன் வாங்கிக்கொண்டுபோய் இப்போது 7-மாசங்களாகின்றன. அந்தப் பொன் சங்கிலியை சாவுகாரிடமிருந்து மீட்டுவைக்கும்படியாக அந்த சோல்ஜர் எனக்கு எழுதியிருக்கிறான். நான் சாவுகாரை வரவழைத்துக்கேட்டேன் அவன் 7-மாதங்களுக்கு ரூ. 70க்கு ரூ. 30-10-0 வட்டி கேட்டான். 7-மாத கடன் நீண்ட காலகடன் என்னும் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 4-6-0 வட்டிகேட்டது கிரமமல்லவென்றும் நான் சாவுகாருக்குச் சொன்னேன். அதற்கு அவன் மாதம் ஒன்றுக்கு 100-க்கு 10-வீதம் வட்டி வாங்குவது தன்னுடைய வழக்கமென்றும் ஆனால் யுத்தகளத்திற்குப்போன சோல்ஜர் பாலியனாயிருந்தபடியால் அவன்விஷயத்தில் இரக்கம் பாராட்டி மாதம் ஒன்றுக்கு ஒருரூபாய்க்கு ஒரு அணாவீதம் வட்டி பெற்றுக் கொள்ளுவதாக ஒப்புக்கொண்டதாய்ப் பதில்சொன்னான். இந்த மானக்கேடான தொழிலை ஒழித்துவிடவேண்டுமென்று நான் தீர்மானித்தேன். மார்வாடிகள் செய்துவரும் அக்கிரமங்களைப் பற்றி இதற்கு முந்தி நான் கேள்விப்பட்டிருக்கிறேன் நான் அவைகளை நம்பவில்லை. இப்படி மார்வாடிகள் வட்டி வாங்கி வருவதைக் கவர்ன்மெண்டார் பொறுத்துக்கொண்டிருப்பது பெரிய பிசகு. பிரான்ஸ்தேசத்தில் கவர்ன்மெண்டாரே ஒரு இலாக்கா ஏற்படுத்தி சாமான்களை ஈடுவைத்துக்கொண்டு சொற்ப வட்டிக்குக் கடன் கொடுத்து வருவதுபோல இந்தியாவில் ஏன் ஏற்பாடு செய்யககூடாது?



பிரான்ஸ் கவர்ன்மெண்டாரைப்போல இந்தியர் கவர்ன்மெண்டார் ஒரு லாவாதேவி இலாக்கா ஏற்படுத்த உடன்படுவார்கள் என்று நாம் நினைக்கவில்லை. ஆயினும் மேடம் கொலூன் சொல்லியிருக்கும் யோசனை லோகோபகாரமான யோசனையானபடியால், இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்திய ஜனத்தலைவர்களும் கலந்து யோசனை செய்து லேடி ஸ்திரீ பத்திராசிரியரின் யோசனையைப் பின்பற்றி மார்வாடியின் அக்கிரமவட்டியை அடியோடு ஒழித்துப்போட முயற்சி செய்வார்களென்று நாம் நம்புகின்றோம்.

## The Hon'ble Sir. C. Sankara Nair.

### ஆனரபில் சர். C. சங்கரநாயர் அவர்கள்.

சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டில் ஜட்ஜிகளில் ஒருவராயிருந்து சிறந்து விளங்கிய ஆனரபில் சர். C. சங்கரநாயர் அவர்கள் இந்தியா வைசிராயின் நிர்வாகசபையின் மெம்பர்களில் ஒருவராகநியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு நாம்மனப்பூர்வமான சந்தோஷமடைவதுபோல இந்தியாவில் உள்ள சகல ஜனங்களும் சந்தோஷப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர் அந்த உத்தியோகத்திற்குப் பொருத்தமுடையவராக விருப்பது மல்லாமல் இதற்கு முந்தி அந்த உத்தியோகம் இந்தியாவின் சுதேசிக்குக் கொடுக்கப் பட்டதில்லை. ஆனரபில் சர். சங்கரநாயர் அவர்கள் ஆதியில் சென்னை ஐக்கோர்ட்டில் வக்கிலாயிருந்தவர், விளையும்பயிர் முளையிலேயென்பது போலவக்கிலாயிருந்தபோதே இனி இவர்மகா உன்னதமான உத்தியோகத்தை அடைவார் என்று உலகத்தார் எண்ணும்படியாக, தொழில் அவ்வளவுசாமார்த்தியதத்துடன் நடத்திக்கொண்டு வந்தார். வக்கீல் தொழில் நடத்திகொண்டுவந்தபோது வக்கீல்களுக்குள் சிறந்த வக்கிலாயிருந்தார்கள். வியாஜ்ஜியங்களை ஆர்குமெண்டுசெய்து அவைகளை துண்டு துண்டாய் பிரித்து அவைகளில் சம்மந்தப்பட்ட ருஜூப்பாயின்ட்டுகளையும் லாப்பாயின்ட்டுகளையும் ஜட்ஜிகளுக்கு எடுத்துக் காண்பித்து அவர்கள் தம்முடைய சருத்திற்கு இசையும்படியாக செய்வதில் மிகவும் சாமர்த்திய முடையவர். இவர் மலையாள தேசத்தாரானபடியால் மலையாள சகூலிக்காரர்கள் இவருக்கு அநேகர் இருந்து வந்தார்கள். வக்கிலாயிருந்தபோது திரண்ட வருமானத்தையும் சம்பாதித்துக் கொண்டார். கவர்ன்மெண்டார் இவரை ஐக்கோர்ட்ஜட்ஜியாக நியமித்து அவர்கள் இவர்பால்வைத்திருக்கும் நன்குமதிப்பை வெளிப்படுத்திக்காண்பித்தார்கள். ஐக்கோர்ட் ஜட்ஜியாகவிருந்துவந்தபோது வக்கீல்களையும் மற்ற லாயர்களையும் மரியாதையாக நடத்திவந்தார். இவருடைய தீர்ப்புகளுக்கு விரோதமாக பெரும்பாலும் அப்பீல்கள் செய்துகொள்ளப் படுகிறதில்லை. என்

என்றால் அவைகள் அப்பீல் கோர்ட்டில் மாறுகிறதில்லை. ஆங்கிலேய ஜட்ஜியும் இந்திய ஜட்ஜியுமாகிய இருவரும் சேர்ந்து விசாரணை செய்தால் இந்திய ஜட்ஜி ஆங்கிலேய ஜட்ஜியின் அபிப்பிராயத்தைபெரும்பாலும் ஏற்றுக்கொண்டே போவதுண்டு. ஆனால் ஆனரபில் சங்கரநாயர் அவர்கள் தம்முடன் கூடவகிருந்து விசாரணை செய்யும் ஜட்ஜி ஆங்கிலேயஜட்ஜியாக யிருந்தபோதிலும் கொஞ்சம்கூட பின்வாங்காமல் தம்முடையபுத்தியில்பட்ட அபிப்பிராயத்தையே வெளியிடுவார். இவருக்கு அமைந்திருந்த மிகமுக்கியமான அநேக குணதிசயங்களுக்குள் தயவுதாக்ஷண்ணியததிற்குக் கட்டுப்படாமல் தம்முடைய அபிப்பிராயத்தில் பட்டதை அறிவிப்பதுண்டு. உள்ளதைச் சொன்னால் "ஊரெல்லாம் விரோதம்" என்பதுபோல இவர் தம்முடைய அபிப்பிராயத்தை பயரங்கமாக வெளிப்படுத்தியபோது இத்தேச ஆங்கிலேயப் பத்திரிகைகளுடைய கோபத்திற்குப் பாத்திரமான சமயங்களுமுண்டு. முன் ஒரு சமயம் "கன்டெம்பொரரி ரிவியூ" (Contemporary Review) என்னும்பத்திரிகையில் ஆங்கிலேயன் குற்றஞ் சாட்டப்பட்ட செஷன்ஸ் கேஸ்களில் ஆங்கிலேய ஜூரர்கள ஆங்கிலேய குற்றவாளி குற்றஞ்செய்யவில்லை என்று அபிப்பிராயங்கூறி விட்டுவிடுகிறார்கள் என்று எழுதியிருந்தார். இதற்காக அந்தசமயம் மதிராஸ் மெயில் இவருடைய அபிப்பிராயத்தைக் கண்டனம் செய்து எழுதினது நமக்கு செவ்வையாக ஞாபகமிருக்கிறது. நிற்க, இவர் காங்கிரஸ் அபிமானி. வக்கீலாக விருந்துவந்தகாலத்தில் ஒருவருடம் காங்கிரஸ்மகாசபைக்கு பாசநாயகராயிருந்து வாசாமகோசரமாக பிரசங்கமாரி பொழிந்தனர். சென்னை ஆசாரசீர்திருத்தசபையில் மெம்பராக விருந்து ஆசாரசீர்திருத்த விஷயங்களிலும் இந்தியாவை முன்னுக்குக் கொண்டுவரபிரயாசைபட்டு வருகின்றார். மகா உத்தமகுணமுடைய சீலர். தருமச்சிந்தையுடையர். இவர் உயர்ந்த உத்தியோகபதவியிலிருந்துவந்த போதிலும் பெருமையை பாராட்டார். கர்வம் டம்பம் ஆகிய இந்த தீயகுணங்கள் இவர்பால் அணுகுகிறதில்லை. மிகுந்தசரசி ஏழைகளின் நண்பர். இவர் இதற்கு முந்தி ஐக்கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்திலிருந்தபடி இப்பொழுது சென்னை நிர்வாக சபையில் இப்போது ஆனரபில் சர் P. S. சிவசாமி அய்யர் அவர்கள் பார்த்துவரும் உத்தியோகத்திற்கு புரமோஷன் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏதோ காரணத்தை முன்னிட்டு, ஆனரபில் மிஸ்டர் கிருஷ்ணசாமியய்யர் அவர்கள் காலஞ்சென்றபோது அந்த உத்தியோகத்தை அடைய இவருக்கிருந்த உரிமைகள் கவனிக்கப்படவில்லை. ஆயினும் இவர் வைசிராய் நிர்வாக சபையின் மெம்பராகத்தெரிந் தெடுக்கப்பட்டிருக்கிறபடியால் இவரை அந்த உன்னதமான பதவியில் வைக்கும்பொருட்டே கவர்ன்மெண்டார் அந்த சமயம் இவருக்கு சென்னை நிர்வாக சபையின் மெம்பர் ஸ்தானத்தைக் கொடுக்காமலிருந்தார்களென்று நினைக்கின்றோம். வைசிராய் நிர்வாக சபையில் படிப்பு இலாக்கா இவருடைய மானேஜ்மெண்டிலும் மேற்பார்வையிலும் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த பெரிய பதவியில் அநேக வருடகாலமிருந்து இந்தியாவுக்கு அநேக நன்மைகளைச் செய்து வைப்பார்களென்று நம்புகின்றோம்.

---

## The Honorable Justice Mr. K. Streenivasa Iyengar.

### ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் அவர்கள்.

ஐக்கோர்ட்டு வக்கீலாக விருந்து புகழ்பெற்று பிரசித்தமாய் விளங்கிவந்த மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் அவர்கள் ஆக்டிங் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக நியமனம் பெற்றிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு சந்தோஷமடைகின்றோம். இவர் 1812-ம் வருட முதல் லாயர் தொழிலை நடத்திக் கொண்டு வந்தனர். ஐக்கோர்ட்டு ஜட்ஜி ஆனரபில் சர் C. சங்கர நாயர் அவர்கள் கோடைகால ரஜாவுடன்சேர்ந்து நான்கு மாத காலம் ரஜா எடுத்துக் கொண்டபடியால் அவருடைய ஸ்தானத்திற்கு மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் அவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள், லாயர் தொழிலில் இவர் அபாரத்திறமை உடையவர். நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் ஜெமின்தார்கள் பண்டார சந்நிதிகளும் இவர்களுடைய கக்ஷிக்காரர்கள். இவர்களுக்கு ஐக்கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகம் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்டபோது இவர் பெருவாரியின் வருமானத்தைகொடுத்துக்கொண்டிருக்கும் அவருடையலாயர் தொழிலை விட்டுவிட்டு ஜட்ஜி உத்தியோகத்தை ஒப்புக்கொள்ள இணங்க மாட்டார் என்று எண்ணப்பட்டது; இவர் சென்னை ஐக்கோர்ட்டு வக்கீலகளுக்குள் பிரசித்தமானவரென்பது அவர் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறதினாலேயே நன்கு விளங்குகின்றது. இவர் ஐகோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்தையும லாயர் தொழிலைப் போல சாமர்த்தியமாக நடத்தி கவர்ன்மெண்டாருடையவும் லாயர்களுடையவும் பொது ஜனங்களுடையவுமான நன்கு மதிப்பை அடைவார்கள் என்பதில் சந்தேக மில்லை. ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர் அவர்கள் இந்தியா வைசிராய் சபையின் நிர்வாக மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறபடியால் ஒருக்கால் ஐக்கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்தில் மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் காயப்படுத்தப்படக் கூடுமென்று நினைக்கின்றோம்.

---



## CIVIL AND CRIMINAL SUITS.

### சிவில் கிரிமினல் வியாஜ்ஜியங்கள்.

(20-7-1915)

### தூக்கு தண்டனை ரத்து செய்யப்பட்ட கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸடர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி

---

கேசின் விபரம்:-(1) கே. வெங்கடப்பா (2) T. வெங்கடேசலு என்றும் பெயருடைய இவர்களும் இன்னும் 5 பேர்களும் 4-12-1914 ல் விப்பர கொண்டப்பா என்பவனைக் கொலை செய்து விட்டதாக குற்றஞ் சாட்டப் பட்டார்கள். கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் இரண்டு கக்ஷிகளில் ஒன்றிற்கு முதல் குற்றவாளிநாட்டாமைக்காரன். மற்றொரு கக்ஷிக்கு கொல்லப்பட்டவன் நாட்டாமைக்காரனாக விருந்தான். மேலும் கொல்லப்பட்டவனுக்கும் முதல் குற்றவாளியின் விதவைதங்கைக்கும் குற்றம்படும்படியான நேசமிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

குற்றம் நடந்த தினத்தில் இரண்டாவது குற்றவாளி இறந்து போனவனை, முதல் குற்றவாளியின் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனதாகவும், அவ்விடத்தில் ஏற்கனவே மற்ற எல்லாக் குற்றவாளிகளு மிருந்தார்கள் என்றும், கொண்டபாப்பா என்பவனை அடித்துக் கொன்றுவிட்டு அவனுடைய பிரேதத்தை ஒரு குளக்கரையில் விட்டெறிந்து விட்டார்கள் என்று பிராசிக்கியூஷன் தரப்பாருடைய கக்ஷி

பெல்லாரி சேஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—செஷன் கோர்ட்டார் நான்காவது குற்றவாளியை மட்டிலும் விடுவித்துவிட்டு மற்ற எல்லா குற்றவாளிகள் பேரிலும் குற்ற ஸ்தாபனை செய்து 1, 2, குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனையும் 3, 5, 6, 7, குற்றவாளிகளுக்கு ஜென்மதீவாந்திர தண்டனையும் விதித்தார்கள்.

இந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—குற்றவாளிகளுடைய தரப்பிற்கு பாரிஸ்டர் ஆனரபில் மிஸ்டர் ரிச்மாண்டும் கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டரும் பேசினார்கள்.

குற்ற வாளிகளின் லாயர் பேசினது:—இந்தக் கேசில் கொலையை நேரேபார்த்ததாகப் பிராசிக்கியூஷன் தரப்பு மூன்றாவது சாக்ஷி மட்டிலும் சொல்லியிருக்கிறான் என்றும் இவன் முதல்குற்றவாளியிடம் சேகவம் செய்கிறவன் என்றும் இவன் சொல்லியிருக்கும் சாக்ஷியம் நம்பப்படக் கூடாததாக விருக்கிறதென்றும் மேலும் கொலை நடந்து 19 தினங்களுக்குப் பிறகு அவன் வாக்குமூலம் எழுதி வைத்திருக்கிறான் என்றும் அவன் வாக்குமூலம் மற்ற சாக்ஷிகளால் பின்பற்றப்படவில்லை என்றும் பாரிஸ்டர் ஆனரபில் மிஸ்டர் ரிச்மெண்டு சொன்னார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினதையும் ஐக்கோர்ட்டார் கேட்டபின்பு எல்லா குற்றவாளிகள்பேரில் செய்யப்பட்டிருந்த குற்ற ஸ்தாபனையும் தண்டனையையும் ரத்துசெய்து குற்றவாளிகளை ஜெயலிலிருந்து விட்டுவிடும்படி உத்திரவு செய்தார்கள்.

---

(21- -1915)

### ஊத்துமலை எஸ்டேட்டு குமாஸ்தா கேஸ்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி
முன்பாக.

கேசின் விபரம்:—கோபாலய்யன் என்று பெயருடைய ஒருவன் ஊத்துமலை எஸ்டேட்டின் கணக்கப்பிள்ளை உத்தியோகத்திலிருந்து வந்தான். ஊத்துமலை ஜெமிந்தாரணிக்கு மாதம் ஒன்றுக்கு ஏற்பட்டிருக்கும் ரூ. 300 அலவன்ஸ் பணத்தை அவருக்கு அனுப்பி வைக்கவேண்டியது அவனுடைய கடமை. அந்த அலவன்ஸ் தொகையில் மூன்றில் இரண்டு பாகம் திருநெல்வேலி சப்கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டிருந்தது. இப்படி ஜப்தி செய்யப்பட்ட தொகையை அந்தக் கோர்ட்டாருக்கு அனுப்பி வரவேண்டியதும் அவனுடைய கடமை. 1909ம் வருடம்மேயீ முதல் 1912ம்ஸ்ரீ டிசம்பர்மீ வரையில் குற்றவாளியால் ரூ. 8 ஆயிரம் அனுப்பப்பட வேண்டியதாயிருக்க ரூ. 6 ஆயிரம் அனுப்பப் பட்டிருக்கிறது. பாக்கி ரூ. 2 ஆயிரத்திற்கு குற்றவாளி கணக்கைப் புரட்டி எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

குற்ற வாளியின் டிபன்ஸ்:—மோசம் திருநெல்வேலி சப்கோர்ட்டில் நடத்தப் பட்டிருக்கிறதேயொழிய ஊத்துமலை எஸ்டேட்டில் நடத்தப் படவில்லை என்று டிபன்ஸ் சொன்னான்.

சேஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—மோசடி திருநெல்வேலி சப்கோர்ட்டில் உற்பத்தியாயிருக்கிற தென்று நினைக்க காரணமில்லை என்றும் ஊத்துமலை எஸ்டேட்டில்தான் உற்பத்தியாயிருக்க வேண்டுமென்றும், அதன் பிறகு அந்த மோசடியில் சப்கோர்ட்டு சிப்பந்திகள் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லி குற்றவாளிக்கு இரண்டு வருட கடின காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் இன்னும் 6 மாத கடுங் காவல் தண்டனையும் விதித்தார்கள்.

இந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளியால் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—ஐக்கோர்ட்டார் குற்றவாளியின் லாயர் பேசினதையும் கவர்ன்மெண்டு தரப்பிற்காக பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக பாரிஸ்டர் மிஸ்டர் பெர்சிகிராண்ட் பேசினதையும் கேட்டுக்கொண்ட பின்பு குற்றவாளியின்பேரில் குற்றம் ருஜுப்படுத்தப் படவில்லை என்று தீர்மானித்து குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்து விட்டார்கள்.

(27-7-1915)

## குழந்தை கொலையாளிக்குத் தூக்கு தண்டனை.

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார் முன்பாக.

ரத்தனபத்தன்

VS.

சக்ரவர்த்தியார்.

கேசின் விபரம்:—தஞ்சாவூர் ஜில்லாவில் ரத்தனபத்தன் என்பவன் 7-வயதுடைய குழந்தையை கொலைசெய்து விட்டதாக செஷன் கோர்ட்டிற்கு கமிட் செய்யப்பட்டான்.

கேசின் விசாரணை:—கொலை நடந்தேறின தினத்தில் குழந்தை விளையாடிக்கொண்டிருந்த விடத்தில் குற்றவாளி காலையில் ஒரு வண்டியில் படுத்திருந்து பிறகு போனான் என்றும் அடுத்தநாள் காலையில் குற்றவாளி குழந்தைபேரில் போடப்பட்டிருந்த நகைகளுடன் கைதி செய்யப்பட்டான் என்றும் குழந்தையின் பிரேதம் ஒரு தடாகத்திலிருந்து எடுக்கப்பட்டதென்றும் ருஜுப்பட்டது.

செஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—குர்றவாளிக்கு தூக்குதண்டனை விதித்தார்கள்,

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள்:—பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக பாரிஸ்டர் மிஸ்டர் சிட்னி ஸ்மித் துரை கவர்ன்மெண்டு தரப்பிற்கு ஆஜரானார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு.—ஐக்கோர்ட்டார் குற்றவாளிக்கு கீழ்க்கோர்ட்டாரால் விதிச்சபபட்ட தண்டனையையும் குற்ற ஸ்தாபனையையும் உறுதிப்படுத்தினார்கள்.

## ஒரு மிராசுதார் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்ட கேஸ்.

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

கேசின் விபரம்:—குற்றவாளியும் பிரியாதியும் மேலப்பாளையத்தைச் சேர்ந்த ஐவேஜியுடைய மிராசுதார்கள். பக்கத்து பககத்து வீட்டுக்காரர்கள். பிரியாதியுடைய வீட்டுப் புழக்கடையில் பிரியாதியால் செங்கல் சுண்ணாம்பால் கட்டப்பட்டிருந்த ஒரு சாக்கடையை குற்றவாளி இடித்துவிட்டதாக குற்றவாளியின்பேரில் அத்து மீறி நிலத்தில் பிரவேசித்த குற்றமும் "விஷமம்" செய்த குற்றமும் குற்றஞ் சாட்டப்பட்டது.

குற்றவாளியின் டிபன்ஸ்:—சாக்கடை கட்டப்பட்டிருந்த நிலம் தன்னுடைய நிலம் என்று தான் உண்மையாய் நம்பியிருந்ததாக குற்றவாளி டிபன்ஸ் சொன்னான்.

கீழ்க் கோர்ட்டார்களுடைய தீர்ப்பு:—கீழ் இரண்டு கோர்ட்டார்களும் நிலம் பிரியாதியுடைய நிலம் என்றும், குற்றவாளி அதில் ஆக்கிரமித்துப் பிரவேசித்திருக்கிறான் என்றும் தீர்மானித்து குற்றவாளிக்குத் தண்டனை விதித்தார்கள்.

இந்தத்தீர்ப்பிற்கு விரோதமாக குற்றவாளி கிரிமினல் ரிவிஷன்மனு தாக்கல் செய்தான்.

லாயர்கள்:—வக்கில் மிஸ்டர் T. நாராயணசாமி அய்யருடைய உதவியுடன் வக்கில் மிஸ்டர் T. R. ராமச்சந்திர அய்யர் மனுதார் தரப்பிற்கும் வக்கில் மிஸ்டர் N. ராஜகோபாலாச்சாரியார் பிரியாதியின் தரப்பிற்கும் ஆஜரானார்கள்:

குற்றவாளியின் லாயர் பேசினது:—சாக்கடை கட்டப்பட்டிருந்த நிலம் தன்னுடைய நிலமல்லவென்று தெரிந்திருந்தும் அவன் அதில் கட்டப்பட்டிருந்த சாக்கடையை வேணுமென்று இடித்து பிரியாதிக்கு நஷ்டத்தை விளைவித்திருக்கிறான் என்று முதல் அப்பீல் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படாததால் அவன் விடுவிக்கப்பட வேண்டுமென்று குற்றவாளியின் லாயர் எடுத்துப் பேசினார்.

பிரியாதியின் லாயர் பேசினது:—குற்றவாளியின் பேரில் விஷமம் குற்றஸ்தாபனைசெய்யப்பட என்ன என்ன செய்கைகளை அவன் செய்திருக்க வேண்டுமோ அவைகளெல்லாம் அவன் செய்திருக்கிறான் என்றும் ருஜுப்பட்டிருக்கிறதென்றும் குற்றவாளி பிரியாதிக்கு நஷ்டம் விளைவிக்க எண்ணம்கொண்டு நஷ்டத்தை விளைவித்திருக்கிறான் என்று ருஜுப்படுத்தவேண்டியது பிரிவின்படி அனாவசியமென்றும் குற்றவாளி அந்த நிலத்தில் பிரவேசித்ததை ஒப்புக்கொண்டிருப்பதால், அந்த நிலம் அவனுடையதென்று நம்பியிருந்ததாக ருஜுப்படாததாலும் அத்துமீறி பிரவேசித்த குற்றமும் முழுதிலும் ருஜுப்பட்டுப் போய்விட்டதென்று எடுத்துப் பேசினார்.



ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—பிரியாதியின் லாயர் எடுத்துப் பேசின கக்ஷிவாதத்தை ஐக்கோர்ட்டார் கேட்டுக்கொண்ட பின்பு கீழ்க்கோர்ட்டு குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதிப்படுத்தி குற்றவாளி செய்துகொண்டிருந்த ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

(27-7-1915)

## ராஜமகேந்திரபுரம் செஷன் கோர்ட்டு.

பித்தாப்பூர் பாஷாணக் கேஸ்.

செஷன் ஜட்ஜி.—மிஸ்டர் J. J. காட்டன் முன்பாக.

கேசின் விபரம்:—பித்தாபுரம் ராஜாவின் இரண்டாவது புத்திரனுக்குப் பாலில் விஷம் கலந்து கொடுக்க எத்தனித்ததாக பித்தாபுரம் ராஜா அரண்மனையில் தாதி உத்தியோகத்தில் நியமிக்கப் பட்டிருந்த (1) புகப்லேடி கோலாயி (2) செல்லரம்மா (3) உடந்தைக் குற்றத்திற்காக செல்லெனி சீத்தாராமசாமி காடு ஆகிய இம்மூவர்கள்பேரிலும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

கேசின் விசாரணை:—இருதரப்பிலும் பல சாக்ஷிகள் நீண்ட நாள்கள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

செஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—குற்றவாளிகள்எல்லோரும் நிரபராதிகள் என்று தீர்மானிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்.

## ரெவினியூ இன்ஸ்பெக்டர் அடிக்கப்பட்ட கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி

சக்ரவர்த்தியார்.

Vs.

கோட்டகாடு வகையரா—குற்றவாளிகள்.

கேசின் விபரம்:—குற்றவாளிகள் மூவரும் ஒரு பெரிய மிராசுதாரின் வேலைக்காரர்கள். மேற்படி மிராசுதார் கிஸ்தி பாக்கியைச் செலுத்தத் தவறிப் போய் விட்டபடியால் அவருடைய பொருள்களை ஜப்தி செய்யும்பொருட்டு ஒரு முஸ்லிம் ரெவினியூ இன்ஸ்பெக்டர் அந்த மிராசுதாரினுடைய ஊருக்குப் போக புறப்பட்டார். குற்றவாளிகள் மூவரும் அவரை வழியில் மறித்துக் கொள்ளை அடித்து அபாயம் விளைவிக்கும்படியான ஒரு கத்தியைக் கொண்டு அவரைக்குத்திக் கடுங்காயம் விளைவித்து விட்டார்கள் என்பது பிராசிகியூஷன் தரப்பாருடைய கேஸ். அடிப்பட்ட ரெவினியூ இன்ஸ்பெக்டர் நான்குமாதம் வரையில் ஆஸ்பத்திரியிலிருந்து காயத்தைச் சொஸ்தப்படுத்திக் கொண்டிருப்பதாக ருஜுப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ் வட ஆற்காடு ஜில்லா செஷன்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டு முதல் குற்றவாளியாகிய கோட்டகாடுக்கு 10 வருட கடினகாவல் தண்டனையும் 2, 3, குற்றவாளிகளுக்கு தலைக்கு 7 வருட கடினகாவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் தங்கள்பேரில் செய்யப்பட்ட குற்ற ஸ்தாபனைக்கும் தண்டனைக்கும் விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

குற்றவாளியின் லாயர் பேசினது:—குற்றவாளிகள்பேரில் இ. பி. கோ. 373-வது பிரிவின்படி குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டது பிசகென்றும் மேலும் செஷன்ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜுரார்களுக்கு சரிவர எடுத்துச் சொல்லவில்லை என்றும் குற்றவாளிகளின் லாயர் எடுத்துப் பேசினார். பப்ளிக் பிராசிக்கியூட்டர் கவர்ன்மெண்டு தரப்பிற்கு பேசினார்.

ஐக்கோர்ட்டாருடைய உத்திரவு:—ஐக்கோர்ட்டார் குற்றவாளிகளுடைய லாயர் எடுத்துப் பேசினதைக் கேட்டுக்கொண்ட பின்பு குற்றவாளிகள்பேரில் செய்யப்பட்டிருந்த குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்து இந்தக்கேசை மறுபடியும் விசாரணை செய்யும்படியாக செங்கற்பட்டு ஜில்லா செஷன் கோர்ட்டாருக்கு உத்திரவு செய்தார்கள்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் முன்பாக.

## பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள மனு.

கேசின் விபரம்:—விசாகப்பட்டணத்தில் யூரட்டாலா எஸ்டேட்டின் குடிகளை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்த மேற்படி எஸ்டேட்டின் சொந்தக்காரர், குடிகள்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்ரிபெற்றுக்கொண்டார். இந்த டிக்கிரிக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் குடிகள் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐக்கோர்ட்டாருடைய உத்திரவு:—வாதியால் கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியங்களில் சம்பந்தப்பட்ட நிலங்கள் ரயத்துகளின் நிலங்களென்று ஐக்கோர்ட்டார் தீர்மானித்து வியாஜ்ஜியங்கள் ரெவினியூ கோர்ட்டில் கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லி வியாஜ்ஜியங்களின் பிரியாதுகளை

வாதியிடம் வாப்பீஸ் செய்யப்படவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக பிரிவி கவுன்சிலில் அப்பீல்செய்து கொள்ளும்பொருட்டு ஐக்கோர்ட்டாருடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு ஐக்கோர்ட்டில் வாதி மனுசெய்து கொண்டார்.

லாயர்கள்:—மனுதாருக்காக ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் B. நரசிம்மராவும், எதிர் மனுதாருக்காக பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாசும் ஆஜரானார்கள்.

மனுதார் லாயர் பேசினது:—பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமானால் வியாஜ்ஜியத்தின் மதிப்பு பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டிருக்க வேண்டுமென்றும் பிரஸ்தாப மனுவில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வியாஜ்ஜியமும் ரூபா பத்தாயிரத்திற்குக் குறைவாகவிருந்த போதிலும் எல்லா வியாஜ்ஜியங்களின் மதிப்பை ஒன்றுசேர்த்தால் ரூபா பத்தாயிரத்திற்கு மேற்பட்டிருக்கிறதென்றும் ஆதலால் பிரிவி கவுன்சிலில் மனுசெய்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

எதிர் மனுதார் லாயர் பேசினது:—பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாஸ் பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்து கொள்ளப்பட வேண்டிய ஒவ்வொரு வியாஜ்ஜியமும் ரூபா பத்தாயிரத்திற்கு மேற்பட்டிருக்க வேண்டுமென்று சொன்னார்.

ஐக்கோர்ட்டார் உத்திரவு:—ஒவ்வொரு வியாஜ்ஜியமும் ரூபா பத்தாயிரத்திற்கு மேற்பட்டதாகவிருந்தாலொழிய பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்பட மாட்டாதென்று சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

(27-7-1915)

பெண்ஜாதியைக் கொலைசெய்த கேஸ்.

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

கேசின் விபரம்:—செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு பஞ்சமக் கூலிக்காரன் அவனுடைய பெண்சாதியைக் கொலைசெய்து விட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு செஷன் கோர்ட்டிற்குக் கமிட் செய்யப்பட்டான்.

செஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—குற்றவாளிக்கு கோர்ட்டார் ஜென்ம தீபாந்திர தண்டனை விதித்தார்கள். இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

கேஸ் நடவடிக்கை:—குற்றவாளிக்கு ஏன் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டும்படியாக ஐக்கோர்ட்டார் குற்றவாளிக்கு ஒரு நோட்டீஸ் பிறப்பிக்கும்படி உத்திரவுசெய்தார்கள்.

லாயர்கள்:—குற்றவாளிக்காகப் பாரிஸ்டர் மிஸ்டர் R. N. அய்யங்காரும், கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானார்கள்.

குற்றவாளியின் லாயர் பேசினது:—கொலை சம்பவம் நடந்தேறுவதற்கு முந்தி குற்றவாளி சித்த ஸ்வாதீன மற்றவனாயிருந்தான் என்றும், மேலும் தன்னுடைய பெண்சாதியினுடைய நடத்தையின் சந்தேகம் கொண்டிருந்தானென்றும் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பமுடைய கேஸ்களில் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பது நியாய விரோதமென்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் என்றும் எடுத்துப்பேசினார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—ஐக்கோர்ட்டார் ஸெ கோர்ட்டாருடைய குற்ற ஸ்தாபனையும் தண்டனையையும் உறுதிப்படுத்தினார்கள்

---

# *Important Rulings.*

## முக்கியமான தீர்ப்புகள்.

### Contract.

### ஒப்பந்தம்.

ஒருவன்பேரில் கடுங்காயம் விளைவித்த குற்ற சாட்டப்பட்டது. எவனுக்குக் கடுங்காயம் விளைவிக்கப்பட்டதோ அவன் பிரியாது தாக்கல் செய்வதற்கு முந்தி இறந்து போய்விட்டான். இந்தக் கேஸில் குற்றவாளியிடமிருந்து பிரியாதி ஒரு தொகைக்கு ஒரு பிராமிசரிநோட்டு எழுதி வாங்கிக்கொண்டு கேசை ராஜிப் படுத்திக்கொண்டான். பிறகு நோட்டின் தொகையை வசூல் செய்யும்பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுவந்ததில் இந்தக் கேசை ராஜிபடுத்திக்கொள்ள பிராமிசரி நோட்டு எழுதிவாங்கியது சட்ட விரோதமென்றும் பிராமிசரி நோட்டு ஊர்ஜிதப் படுத்தப்படக்கூடாதென்றும் பிரியாதி தன் க்கு நேரிட்ட தீங்கிற்காக நஷ்டதாவா கொண்டுவர பாத்தியமுடையவனாகவிருந்த போதிலும் இந்தப் பிராமிசரிநோட்டு ஊர்ஜிதப்படுத்தப் படக் கூடியதல்லவென்றும் மோமீட v. தேனப்பாக் கேஸில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி. 37 சென். 385—I. L. R. 37 Mad. 385.

B. என்பவனுக்கு கடன் கொடுக்கலாமென்று A. என்பவன் சாதாரணமாக சிபார்சு செய்ததை முன்னிட்டு B. என்பவனுக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்கு A. என்பவன் ஜாமீன் கொடுத்தவனாக எண்ணப்படமாட்டான் என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் முத்து கருப்ப முதலி v. காத்தப்ப உடையான் கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 27 ம. லா. ஜெ. 249—27 M. L. T. 249.



வேறொரு ஊரில விற்பனை செய்யப்படும் சாமான்களை ஒரு தரகி அந்த சாமான்களின் சொந்தக்காரருக்குத் தந்தி அடித்து அவைகளினுடைய கடைசி விலையைக் கேட்டான். சொந்தக்காரன் ஒவ்வொரு சாமான்களின் கடைசி விலையை தரகிக்குத் தந்தி மூலியமாக அறிவித்து நாளையத்தினம் பதில் எதிர்பார்ப்பதாகவும் தந்தியில் சொல்லியிருந்தான். தரகிரி அந்த சாமான்களை வேறொருவரிடம் கிரையம் செய்து அட்வான்சு வாங்கிவிட்டான். இதன்பிறகு சொந்தக்காரன் ஒவ்வொரு சாமானையும் தனியே விற்க முடியாதென்றும் தரகிரி செய்த விற்பனையை உறுதிப்படுத்த முடியாதென்றும் சொல்லிவிட்டான்.

இது விஷயமாக நடந்த வியாஜ்ஜியத்தில் கடைசி விலையை சொந்தக்காரனுடன் தீர்த்துக்கொண்டது அந்த விலைக்கு அவன் விற்க ஒப்புக்கொண்டுவிட்டான் என்று எண்ணப்படக்கூடாதென்றும் தந்தியில் சொல்லப்பட்ட "நாளையத்தினம் பதில்" என்கிற பதங்களால் பதில் தந்தியை சொந்தக்காரன் பார்த்ததின்பேரில் அந்த சாமானை அந்த விலைக்கு விற்பனை செய்கிறதா இல்லையா என்று அவன் தீர்மானித்துக் கொள்ளும்பொருட்டு சொந்தக்காரன் தந்தி அடித்துக் கேட்டிருப்பதாக தாற்பரியம் செய்துகொள்ளப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கபபட்டது. 23 இ. கே. 322.

ஒரு தாயார் தன்னுடைய மேஜர் மைனர் புத்திரர்களுடைய நன்மைக்காக அவர்களுக்குச் சொந்தமான ஐவேஜியைக்கொண்டு சில சொத்துக்களைக் கிரையம் பெற்றனள். தாயாருக்கு கிரயம் செய்யப்பட்டது செலாமணியாகக்கூடாத கிரையம் என்று சொல்லப்படக் கூடாதென்று ஆண்டாளம்மாள் v. நரசிம்மாச்சாரியார் கேசில் சீப்ஜட்ஜி சர் ஆர்னல்ட் வொயிட்டும் ஜட்ஜி மிஸ்டர் ஒல்ட்பீல்டும் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1 லா. வீ. 37-1 L. W. 37.

வட்டி சம்பந்தப்பட்ட கேஸ்களில் மோசடிபாவது அல்லது தகாத செல்வாக்காவது பிரயோகப்படுத்தப்பட்டிருக்கிறதென்று தெரியவராவிட்டால் ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்டிருக்கும் வட்டி விகிதத்தில் பெரும்பாலும் கோர்ட்டார் பிரவேசிக்கக் கூடாதென்று சீப் ஜட்ஜி சர் ஆர்னல்ட் வொயிட்டும் ஜட்ஜி மிஸ்டர் ஒல்ட்பீல்டும் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் கேசவலு நாயுடு v. அகிரித்துலை அம்மாள் கேசில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 22 இ. கே. 769—22 I. C. 769.

யாதொரு மோசடி நடத்தப்பட்டிருக்கிறதாகவாவது அல்லது தகாத செல்வாக்காவது பிரயோகப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவராவிடில், 50 வருடம் சென்று சொத்தை அடமானத்திலிருந்து மீட்டுக் கொள்ளுவதாக அடமானப் பத்திரத்தில் ஒரு ஷரத்திருப்பது நியாய விரோதமான நிபந்தனையல்ல. அந்த நிபந்தனை ஊர்ச்சிதப் படுத்தப்படக் கூடியதென்றும் அடமானத் தொகையில் ஒரு பாகத்திற்கு 100 க்கு மாதத்திற்கு 1-4 வீதம் வட்டி போடப்பட்டிருப்பது நியாய விரோதமான வட்டியல்லவென்று எண்ணப்படக் கூடாதென்றும் தீர்மானிக்கப் பட்டது. 24 இ. கே. 926-24 I. C. 926.

ஒரு ஜெமீன்தார் தன்னுடைய இறந்துபோன குடிக்கு வாரசாக வந்திருப்பதாக கக்ஷி சொல்லுகிறவனை நிலத்தைவிட்டு அப்புறப்படுத்திவைக்க ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வியாஜ்ஜியம் நடவடிக்கையிலிருக்கும்போது ஜெமீன்தார் தன்னை அவருடைய குடியாக ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் தான் ஒரு தொகைக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுப்பதாக ஜெமீன்தாருடன் ஏற்பாடு செய்துகொண்டு ஜெமீன்தாருக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தான். இதன்பேரில் ஜெமீன்தார் தாம் குடியின்பேரில் கொண்டுவந்திருந்த வியாஜ்ஜியத்தை வாபீஸ் பெற்றுக்கொண்டார். பிராமிசரி நோட்டின் தொகையை வசூல் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில், குடியின்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் ஜெயமாகுமோ ஆகாதோ என்கிற சந்தேகத்தின்பேரில் குடி ஜெமீன்தாருக்குப் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து வியாஜ்ஜியத்தைச் சமாதானம் செய்துகொண்டிருக்கிறான் என்றும் இந்தப்பிராமிசரி நோட்டு சட்ட விரோதமான பிராமிசரி நோட்டல்லவென்றும் சட்டப்படி ஊர்ச்சிதப் படுத்தப்படக் கூடியதென்றும தீர்மானிக்கப் பட்டது. 25 இ. கே. 80—25 I. C 80.

ஒரு போலீஸ ஆபிசருக்கு லஞ்சம் கொடுக்கும்பொருட்டு பணம் கடன் வாங்கப்பட்டால் ஷை ஆபிசருக்கு லஞ்சம் கொடுக்கப்போகிறது கடன்காரனுக்குத் தெரிந்திருந்தும் அவன் கடன் கொடுத்திருந்தால் அவன் கடனை வசூல செய்யமுடியாது. வியாஜ்ஜிய அப்பீல் நடவடிக்கையில் இப்பேர்ப்பட்ட கக்ஷி புதிதாகச் சொல்லப்படக் கூடாது என்று தீர்மானிக்கப் பட்டது. 24 இ. கே. 692—I. C. 692.

தன்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாக ஏற்பாடு செய்தால் அப்படி ஏற்பாடு செய்தவனுக்குப் பணம் கொடுப்பதாக வாக்களிப்பது சட்-

டப்படி செலாவணியாகக்கூடிய வாக்கல்லவென்று ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர் ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டார் கோதண்டராம ரெட்டியார் v. தேசுரெட்டியார் கேசில் தீர்மானித் திருக்கிறார்கள். 1 லா. வீ. 928—1 L. W. 928.

ரூபா 130யை வசூல்செய்ய ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. அதற்கு தஸ்தாவேஜி ஆதாரமென்னவென்றால் ஒரு கடிதத்தில் ரொக்கம் ரூ. 25ம் முந்தி ரொக்கம் ரூ. 105 ஆக மொத்தம் ரூ. 125 என்று எழுதப் பட்டிருந்ததைத் தவிர வேறே சாக்ஷியமில்லை. அந்தக் கடிதம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதியில் பிந்தி சொல்லப்பட்ட தொகையில் பெரும்பாகம் காலாவதியாகப் போயிருந்தது. லிமிட்டேஷன் ஆக்ட் 64 வது பிரிவின்படி அந்தக் கடிதம் ஒரு கணக்கு என்று சொல்லப்படக் கூடாதென்றும் இந்தத் தொகையை வாதிக்குக் கொடுப்பதாக யாதொரு வாக்குமளிக்கப்பட்டிருப்பதற்கு யாதொரு அடையாளத்தையும் காணோமென்றும தீர்மானிக்கப்பட்டு வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. 25 இ. கே. 89—25 I. C. 89.

கடனைத் தனக்குக் கொடுக்கும்படி வாதி பிரதிவாதிக்கு எழுதியிருந்த ஒரு கடிதத்திற்குப் பிரதிவாதி அடியிற்கண்டபடி பதில் எழுதியிருந்தான்:— "என்னுடைய வீட்டில் சம்பவித்த விவாகத்தைமுன்னிட்டு பாக்கியை இப்போது அனுப்ப சௌகரியப்படாமலிருக்கிறது ஆயினும் இந்த மாதம் 3-வது வாரத்தில் அனுப்பிவிடுகிறேன்" இந்தக் கடிதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

இந்தக் கடிதத்தில் வாதிக்கு எவ்வளவு பாக்கிப்படுகிறதோ அந்தத் தொகையைப் பிரதிவாதி செலுத்த யாதொரு நிபந்தனையில்லாமல் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் இந்தக் கடிதம் வாதிக்கு எழுதப்பட்ட தேதியில் கடனின் ஒரு பாகம் காலாவதியாகப் போயிருந்த போதிலும் ஒப்பந்தம் ஒப்பந்தச் சட்டத்தின் 25-வது பிரிவின்படி செலாவணியாகக் கூடிய ஒப்பந்தம் என்று மிஸ்டிரஸ் C. சைமான் v ஆரோக்கியசாமிப் பிள்ளை கேசில் ஜட்ஜி சதாசிவய்யர் ஜட்ஜி சங்கரநாயர் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 16 ம. லா. டை. 122—16 M. L. T. 122.

சமீபகாலத்தில் விவாகமான பெண்சாதியின் தகப்பனார் புருஷனுடைய தகப்பனாருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். அதாவது என்னவென்றால் புருஷனைப் படிக்கவைக்க என்ன செலவாகினதோ அதைத் தான் கொடுத்து படிக்கவைப்பதாக பெண்ஜாதியின் தகப்பனார் ஒப்புக்கொண்டார். பெண்ஜாதியின் ஜீவதிசையில் புருஷன் வேறொரு மனைவியை விவாகம் செய்துகொண்டால் புருஷனைப் படிக்க வைத்ததால் பெண்ஜாதியின் பிதாவுக்கு என்ன செலவு நேரிட்டதோ அதை அவருக்குத் திருப்பிக் கொடுத்து விடுவதாக புருஷனுடைய தகப்பனார் ஒப்புக்கொண்டார்.

இந்த உடன்படிக்கை ஒப்பந்தச் சட்டம் 26-வது பிரிவின்படி விவாகத்திற்கு தேக்கமாக விருக்கிறபடியால் செலாவணியாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 24 இ. கே. 777—24 I. C. 777.

சிலர் சேர்ந்து ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள். குடிக்கூலிக்கு எல்லோரும் தனித்தனியாயும் சேர்ந்தும் பாத்தியப்பட்டவர்கள். ஆகையால் ஒருவன் வீட்டின் வாடகையைச் செலுத்திவிட்டு வீதாச்சாரத்திற்கு மற்றவர்கள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 20 க. லா. ஜெ. 492—20 C. L. J. 492.

அடமானம் வைத்துக் கொண்டவர்களில் ஒருவனிடம் மற்றவர்களுடைய சம்மதமில்லாமல் அடமானத் தொகையைச் செலுத்துவது கடன் செலுத்தப்பட்ட தாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 23 இ. கே. 8—23 I. C. 8.

கூட்டு வியாபாரத்தின் ஒரு பாகஸ்தன் இறந்துபோய்விட்டால் கூட்டு வியாபாரத்தின் நிலுவைகளை வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்திய முடையவர்கள் ஜீவதிசையிலிருக்கும் மற்ற பாகஸ்தர்கள். இவர்கள் வசூல்செய்ய மறுதளித்துவிட்டால் இறந்துபோன பாகஸ்தனுடைய வார்சு கூட்டுவியாபாரத்தை முடிவு படுத்தும்படி வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டும். இந்த வியாஜ்ஜியத்தில் ஏற்படும் ரிசீவரால் கூட்டு வியாபாரத்திற்கு வரவேண்டிய நிலுவைகள் வசூல் செய்யப்படும் என்று தீர்மானிக்கப் பட்டது. 24 இ. கே. 268—24 I. C. 268.

## *Hindu Law.*

### ஹிந்துலா.

### Adoption.

### ஸ்வீகாரம்.

ஒரு விதவையின் புத்திரன் விதவைக்கு முந்தி இறந்து போய்விட்டால் அவள் ஹிந்துலா பிரகாரம் அவளுடைய மாமியாருடைய சம்மதத்தின் பேரில் ஒரு ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமென்று தீர்மானிக்கப் பட்டது. 16 பம். லா. ரி. 663.

ஒருவன் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது ரத்து செய்யப்பட்டிருப்பது அவனுக்குச்



சேர்ந்த குடும்பத்திலுள்ள பாத்திதையைப் போக்கடிக்கமாட்டாதென்று வைத்திலிங்க முதலி v. முருகய்யன் கேசில் சீப் ஜஸ்டிஸ் ஜட்ஜி மிஸ்டர் பென்சன் கூடிய சென்னைப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 28 ம. லா. ஜெ. 189.

A. என்னும் ஒரு ஜெமின்தார் தனக்கு ஒரு புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாக தன்னுடைய மனைவிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு இறந்து போய்விட்டார். அவர் இறந்து போன பின்பு விதவை 1870ல் B. என்பனை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாள். B. என்கிற ஸ்வீகாரப் புத்திரன் 1907ல் இறந்து போய்விட்டான். அவனுக்கு R என்னும் விதவை இருந்தாள். B. என்பவன் இறந்து போனவுடன் A. என்பவனுடைய பாசப்பரிவினையாகாத சகோதரன் ஜெமினுக்குப் பட்டத்திற்கு வந்தான். இவனும் 1907ல் இறந்து போய்விட்டான். இவனுடைய இரண்டு புத்திரர்களும் பட்டத்திற்கு வந்தார்கள். இதே வருடத்தில் A. என்பவனுடைய விதவை இன்னொரு ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள். இந்த ஸ்வீகாரப் புத்திரன் ஜெமீனைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டு ஷை இரண்டு புத்திரர்கள்பேரிலும் வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். A என்னும் ஜெமின்தாரின் மனைவிக்கு இரண்டாம்தடவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள பாத்திதை உடையவளென்றும் ஆனால் இந்த வியாஜ்ஜியத்தில் B. என்பவனுடைய விதவை ஜீவதிசையிலிருப்பதால் A. என்பவனுடைய மனைவி இரண்டாவது தடவை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதென்றும் மதனமோகன் v புருஷோத்தமாக் கேசில் சீப் ஜஸ்டிஸ் ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் கூடிய சென்னை ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 27 ம. லா. ஜெ. 306.

முதல் மனைவி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப் பாத்திய முடையவள். அந்த பாத்திதை ஊர்ச்சிதத்திலிருக்கும்போது இரண்டாவது மனைவி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள பாத்திய மற்றவள் என்றும் இரண்டாவது மனைவி புருஷனுடைய பங்காளிகளுடைய சம்மதத்தைப் பெற்று ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டிருந்தபோதிலும் முதல் மனைவியினுடைய சம்மதத்தை பெற்றுக் கொண்டிராவிட்டால் அந்த ஸ்வீகாரம் செலாவணியாக மாட்டாதென்றும் K. செக்கம்மா v. K. புன்னம்மா கேசில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர் கூடிய சென்னைப் பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 16 ம. லா. ஜெ. 612.

துவிஜாதியாருக்குள், ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படும்போது ஸ்வீகாரப் புத்திரனும் ஸ்வீகார தகப்பனும் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக விருந்தால் தத்தஹோமம் செய்யப்பட வேண்டியதனவசியமென்று தீர்மானிக்சப் பட்டது. 20 க. லா. ஜெ. 319—20 C. L. J. 319.

கீழ் ஜாதியைச் சேர்ந்த ஒருவன் பிராமணகுலத்தைச் சேர்ந்த ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவதை ஹிந்துலா ஒப்புக் கொள்ளவில்லை. வார்சு பாத்திதைக்காக ஒவ்வொரு ஜாதியாரும் அந்தந்த ஜாதிக்குள் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 25 இ. கே. 45.

சேர்த்துக் கொள்ளப்பட்ட புத்திரன் என்றால் ஸ்வீகார சடங்கு யாதொன்றும் இல்லாமல் ஒரு பையனை வார்சாகச் சேர்த்துக் கொள்ளப்படுவது என்று சொல்லப்படுகிறது. சேர்த்துக் கொள்ளப்பட்ட புத்திரனுக்கு சேர்த்துக்கொண்டவன் தன்னுடைய சொத்தில் ஒரு பாகம் தானமாகக் கொடுக்கிறான். இந்த தானம் செல்லுபடியுள்ளது. பையன் வார்சாகச்சேர்த்துக் கொள்ளப்பட்டதும் செலாவணியாகக் கூடியதென்றும், சேர்த்துக் கொண்டவனுடைய மனைவி ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டது ஷை புத்திரனுக்கு செய்யப்பட்ட தானத்தை பாதிக்காதென்று செல்ல நரசிரெட்டி v. வீரரெட்டி கேசில் ஜட்ஜி மிஸ்டர் ஹானே ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் கூடிய சென்னைப்பட்டணம் ஐச்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 25 இ. கே. 893—25 I. C. 893.

ஒரு ஹிந்து தன்னுடைய தமையன் புத்திரனைத் தனக்கு வார்சாக எடுத்துக்கொண்டு அவனுக்குத் தன்னுடைய சொத்தில் ஒரு பாகத்தை தானம் செய்து அவனுடன் சேர்ந்து அந்த சொத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறான். இப்படி சேர்த்துக் கொள்ளுவது சட்ட விரோதமானவும் ஊர்ச்சிதப் படுத்தப்படக் கூடாத காரியமல்லவென்று தீர்மானிக்கப் பட்டது. 25 இ. கே. 893—25 I. C. 893.

புத்திரன் பிறப்பதற்குமுந்தி பிதிரார்ஜ்ஜித சொத்தை அடமானம் வைத்திருந்தால், எந்த நிமித்தத்திற்காக சொத்து அடமானம் வைக்கப்பட்டதோ அந்தக் காரியம் சேர்ந்த குடும்பத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய காரியமல்லவென்று நாராயணதாஸ் v. ஹார்டியால் கேசில் தீர்மானிக்கப்பட்டது. 21 இ. கே. 830.

பிதாவால் செய்யப்பட்ட பராதீனத்தை ரத்து செய்துவைக்க புத்திரர்களால் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் எந்தக்காரியத்திற்காக பிதா பராதீனம்செய்து கடன் வாங்கினாரோ அந்தக்காரியம் மிக அவசியமான காரியம் என்றும் குடும்பத்

தைக்கட்டுப் படுத்தக் கூடிய காரிய கடன் என்று ருஜூப்படுத்தவேண்டிய பொறுப்பு பராதீனத்தைப் பெற்றுக்கொண்டவர்களுடையதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 25 ம. லா ஜெ. 27—25 M. L. J. 27.

ஒரு குடும்பத்தார் சேர்ந்து ஒரு வீட்டைக்கிரையம் பெற்றார்கள். கிரையத் தொகையில் ஒரு பாகத்திற்கு அந்த வீடு ஷை குடும்பத்தின் மேஜர் மெம்பர்களுடைய சம்மதத்தின்பேரில் அடமானம் வைக்கப்பட்டது. இந்தக் கடன் குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் படியான கடன் என்று தீர்மானிக்கப்பட்டது. 25 இ. கே. 263—25 I. C. 263.

ஒரு தானப்பத்திரத்தில் எழுதப்பட்டிருப்பதைக்கொண்டு தானம் கொடுத்தவன் தானச் சொத்தை சர்வ சுதந்தரத்துடன் அனுபவித்து வரும்படியான பாத்தியதையுடன் கொடுத்திருக்கிறான் என்று நிச்சயமாகத் தெரியவருகிறது. தானம் செய்யப்பட்டவள் ஸ்திரியாக விருப்பதை முன்னிட்டு சர்வ சுதந்தரத்துடன் சொத்து தானம் செய்யப்பட்டிருக்க மாட்டாதென்று எண்ணப்படக் கூடாதென்று கொத்தம ராமானுஜ அய்யங்கார் v. சடகோபாச்சாரி கேசில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு ஹிந்து புருஷனும் அவனுடைய மனைவியும் சேர்ந்து ஒரு சொத்தைக் கிரையம் பெறுகிறார்கள். பெண்ஜாதி இறந்துபோகிறாள். பெண்ஜாதியின் ஸ்திரீதன சொத்திற்கு யார் பாத்திய முடையவர்களோ அவர்கள் வீட்டிலும் அவளுக்கிருக்கும் பாகத்திற்கு வார்சாக வருவார்கள் என்று ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் ஜட்ஜி மிஸ்டர் ஏப்லிங் கூடிய சென்னைப் பட்டணம் ஐக்கோர்ட்டாரால் முத்து ராமகிருஷ்ண நாய்க்கன் v. முத்துக் கவுண்டன் கேசில் தீர்மானிக்கப் பட்டது.

ஹிந்து லாப்பிரகாரம் பிதாவினுடைய கடனுக்குக் கட்டுப்பட்ட ஒரு ஹிந்து புத்திரன் தன்னுடைய தகப்பனார் இறந்துபோன பிறகு தகப்பனால் நடத்தப்பட்டுவந்த கூட்டு வியாபாரத்தில் தகப்பனாருக்கு வார்சாக வந்து சேர்ந்துகொண்டான். பிதாவின் கூட்டு வியாபாரக் கடன்களுக்கு அவன் கட்டுப்பட வேண்டுமென்று தெரிந்தே வார்சாக வந்தான் என்று யூகிக்கப் படவேண்டுமென்று சுப்பிரமணிய செட்டி v. சோமசுந்தர செட்டி கேசில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 24 இ. கே. 86—24 I. C. 86.

ஒரு ஹிந்து தகப்பன் வேறொருவன் கடன் வாங்குவதற்கு மேலொப்பம் போட்டிருந்தான். புத்திரன் தான் எவ்வளவு சொத்தை அடைந்திருக்கிறானோ அதற்குத் தக்கபடி அந்தக் கடனையும் தீர்த்து வைக்க வேண்டும் என்பது ஹிந்து லாவின் தாற்பரியம். 24 இ. கே. 86—24 I. C.

தன்னுடைய புருஷன் தன்னுடன் சேர்ந்து வசிக்கும்படி கட்டாயப்படுத்த பெண்ஜாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் அவள் நோயாயிருக்கிறாள் என்றும் முந்தி ஒரு சமயத்தில் அவளை தன்னிடம் அனுப்பிவைக்க அவளுடைய பெற்றோர்கள் மறுதளித்தார்கள் என்றும் புருஷன் கூறி சொல்லக்கூடாதென்று குப்பம்மாள் v. குப்பனாச்சாரி கேசில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 26 ம. லா. ஜெ. 363—26 M. L. J. 353.

தாயாருடைய ஸ்திரீதன சொத்திற்கு வார்சாகவரும் புத்திரி தன்னுடைய ஜீவதிசையுள்ள பரியந்தம் மட்டிலும் சொத்தை அனுபவிக்கப்பாத்தியப் பட்டவள் என்று தீர்மானிக்கப் பட்டது. 22 I. C. 518—22 இ. கே. 518.

R. என்பவளுடைய ஸ்திரிதன சொத்துக்கள் அவளுடைய இரண்டு புத்திரிகளாகிய N க்கும் M கரும் சேர்ந்தது. N என்பவள் ஒரு புத்திரியைவிட்டுவிட்டு இறந்துபோய்விட்டாள். இவளுடைய பாகம் இவளுடைய புத்திரிக்குப் போகாமல் அவளுடைய சகோதரிக்குச் சேருமென்று ஜட்ஜி மிஸ்டர் மில்லர் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் கூடிய கோர்ட்டாரால் சுப்பய்யா v. லக்ஷுமிதேவ்கேசில் தீர்மானிககப் பட்டிருக்கிறது. 16 ம. லா. டை. 297—16 M. L. T. 297.

தகப்பன் தன்னுடைய புத்திரியின் விவாகத்திற்கு முந்தி அவளுக்குச் சில சொத்து கொடுத்தான். இதற்கு சௌதாயக ஸ்திரீதனம் என்று பெயர். இவள் இந்தச் சொத்தை தன்னிஷ்டப்படி செய்ய பாத்திய முடையவளென்று முத்து கருப்பபிள்ளை v. செல்லத்தம்மாள் கேசில் சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலீஸ் ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் கூடிய சென்னைப் பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது 16. ம. லா. டை. 587.

தாயார் தன்னுடைய கன்னிகை புத்திரிக்கு ஒரு வரனைததேடி எடுக்க பாத்தியமுடையவள் என்றும் மிகவும் தகுந்த காரணங்களிருந்தாலொழிய அந்த பாத்தியதை பிரவேசிக்கப்படக கூடாதென்று மனிபாய் கேசில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது 15 ம. லா. டை. 146—15 M. L. T. 146.

கார்டியன் நியமிக்கப் பட்டிருக்கும் மைனருக்கு விவாகம் நடத்தி வைக்கவேண்டிய பொறுப்பு தங்களுக்கிருக்கிறதென்று ஜில்லாக்கோட்டார் யூகித்துக் கொள்ளக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. 98 P. R. 1914.



ஸ்விகாரம் எடுத்துக்கொள்ள விதவையினுடைய புருஷனுடைய சபிண்டர்கள் சம்மதம் வேணுமென்றும் கெட்ட எண்ணத்துடனும் கொடுக்காமல் போனால் அவள் அவளுடைய புருஷனுடைய தாராதனந்தரவார்சினுடைய சம்மதத்தைப்பெற்று ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமென்று N. காமேகனா v. N. பாச்சம்மா கேசில் ஜட்ஜி மிஸ்டர் வாலிசும் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டது. 24 இ. கே. 257—24 I. C. 257.

---

# *Acts with Commentaries.*

## சட்டங்களும் அவைகளின் வியாக்கியானங்களும்.

## THE HINDU CO-PARCENERS' PARTITION BILL.

## ஹிந்து சேர்ந்த குடும்ப பாகஸ்தர்களின் மசோதா ஆக்ட்.

---

ஹிந்து சேர்ந்த குடும்ப பாகஸ்தன் தன்னுடைய சேர்ந்த குடும்பத்திலிருந்து நீக்கிக் கொள்ளும்படியான ஏற்பாட்டைச் செய்வது அவசியமாக விருக்கிறபடியால் அடியிற் கண்டபடி சட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

1. அந்தச் சட்டம் ஹிந்து சேர்ந்த குடும்ப பாகஸ்தனின் பாகப் பிரிவினை மசோதா ஆக்ட் என்று சொல்லப்படலாம். சென்னை ராஜதானியின் எல்லைக்குள் வசித்து வரும்படியான எல்லா ஹிந்துக்களுக்கும் அந்தச் சட்டம் பொருந்தும்.

2. அதற்கு மாறிடையாக ஏதேனும் சட்ட விதி அல்லது வழக்க மிருந்தபோதிலும் குடும்பச் சொத்தைப் பாகப் பிரிவினை செய்துப் பெற்றுக் கொள்ளப் பாத்தியம் பாராட்டும் ஒரு ஹிந்து சேர்ந்த குடும்பத்தின் மெம்பர் ஒப்பந்தம் செய்வதற்குப போதுமான வயதை உடையவனாக விருந்தால், அவன் குடும்பத்தின் மற்ற மெம்பர்களை விட்டு நீக்கிக்கொள்ள அவனுக் கிருக்கும்படியான எண்ணத்தைப் பயரங்கப்படுத்தி அப்படி பயரங்கப் படுத்தினதுமுதல் அவனுடைய சொத்தை சேர்ந்த குடும்பத்திலிருந்து பிரித்துத் தனிப்படுத்தி வைத்துக்கொள்ளலாம்.

3. இப்படி அவன் பயரங்கப்படுத்திக் கூறினது இவனுக்கும் குடும்பத்தின் மற்ற மெம்பர்களுக்கும் செய்யப்பட்ட பாகப்பிரிவினை எவ்வளவு வலுவினையுடைய தாயிருக்குமோ அதுபோலவே வலுவினையுடைய தாயிருக்கும்.

4. பாகப் பிரிவினை செய்துகொள்ள விரும்பும் பாகஸ்தன் மற்ற மெம்பர்களிட மிருந்து தன்னுடைய பாகத்தைப் பிரித்துக் கொள்ள தனக்கிருக்கும் எண்ணத்தை ஒரு பத்திரத்தில்எழுதி 1908-ம் வருடத்திய இந்தியன் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட்டின் நிபந்தனைகளின்படி ரெஜிஸ்டர் செய்து வைக்கலாம்.

5. (a) இப்படி ஷை பத்திரம் ரெஜிஸ்டர் செய்து வைக்கப்பட்ட பின்பு அதன் நகல் ஷை சேர்ந்த குடும்பத்தின் மற்ற மெம்பர்களுக்கு ரெஜிஸ்டர்செய்து வைத்தவனுடைய செலவின்பேரில் ரெஜிஸ்டிராரால் தபால் மூலியமாக அனுப்பப்படலாம். குடும்பத்தில் எத்தனை பேர்களிருக்கிறார்கள் என்று அவர்களுடைய பெயர்களையும் ரெஜிஸ்டிராரிடம் எழுதி வைக்கலாம்.

(b) ரெஜிஸ்டர் செய்யும் ஆபீசர் அந்தப்பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்துவைப்பதற்கு முந்தி மற்ற மெம்பர்களுக்கு அந்தப்பத்திரத்தின் நகல் அனுப்பப்படுவதற்குள்ள செலவுகளைச் செலுத்தும்படி அவனுக்கு உத்திரவு செய்யலாம். அப்படி அவன் அந்தச செலவுகளைச் செலுத்தும் பரியந்தம் ரெஜிஸ்டர் செய்ய மறுதளித்துவிடலாம்.

(c) இந்தப்பிரிவின் நிபந்தனைகளின்படி அவன் செய்யாமல்போனது பத்திரத்தின் வலுவைக் குறைத்துவிடமாட்டாது.

சேர்ந்த ஹிந்து குடும்ப பாகஸ்தனின் பாகப்பிரிவினையைப்பற்றி நம்முடைய இந்திய சட்ட கெஜட்டின் பிப்ரவரிமீ சஞ்சிகையின் தலையங்கத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்போது அதன் தாற்பரியத்தை மட்டிலும் சொன்னோமே தவிர அந்த சட்டத்தின் நிபந்தனையையும் எடுத்தெழுதவில்லை. இப்போது அந்த மசோதா ஆக்ட்டின் நிபந்தனைகளை எடுத்துச் சொல்லி நம்முடைய கடமையை பூர்த்திசெய்து கொண்டிருக்கிறோம். அந்த மசோதா ஆக்ட் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து கொண்டு வருகிறது.

---

## MADRAS HIGH COURT DECISIONS.

## சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டு கேஸ்கள்.

### பிரிவி கவுன்சில்.

---

கவுன் சிலர்கள்:—லார்ட் ஷா
சர் ஜியார்ஜ் பேர்வல்
சர் ஜான் எட்ஜ்
மிஸ்டர் அமீர் ஆலி.

### பம்பாய் ஐக்கோர்ட்டுத் தீர்ப்புக்கு விரோதமாக பிரிவிகவுன்சிலில் செய்து கொள்ளப்பட்ட அப்பீல்.

அப்பீல் வாதிகள்:—பால கங்காதர திலகர் வகையறா.

vs.

அப்பீல் பிரதிவாதிகள்:—ஸ்ரீனிவாச பண்டிதர் வகையறா.

பிரிவு கவுன்சிலர் தீர்ப்பு:—பிராமண குலத்திற்குள் எந்தப் பையன் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படுகிறானோ அவன் ஸ்வீகாரப் பிதாவின் கோத்திரத்தை உடையவனாக விருந்தால், அவன் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படுவதை

செலாவணியாக்கச் செய்வதற்கு தத்த ஹோமம் ஸ்வீகாரச் சடங்கில் செய்யப்பட வேண்டியதுஅவசியமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு ஹிந்து தன்னுடைய எஸ்டேட்டிற்கு ஒரு உயில் எழுதி 5 டிரஸ்ட்டிகள் நியமித்துவிட்டு இறந்து போனான். இறந்துபோகும் முந்தி இந்த 5 டிரஸ்ட்டிகளுடைய சம்மதத்தையும் பெற்று தன்னுடைய பெண்சாதி ஒரு ஸ்வீகாரம் தனக்கு எடுத்துக் கொள்ளலாமென்று தன்னுடைய பெண்சாதிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு இறந்து போனான். அந்த 5 டிரஸ்ட்டிகளில் ஒருவன் டிரஸ்ட்டி ஸ்தானத்தை ஒப்புகொள்ள மறுதளித்து விட்டான். விதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள டிரஸ்ட்டி ஸ்தானத்தை ஒப்புக்கொள்ள மறுதளித்து விட்ட டிரஸ்ட்டியின் சம்மதம் அனுவசியமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக சொலிசிட்டர் கம்பெனியாராகிய டர்னரும் ஜான்சனும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக T. G. வில்சன் கம்பெனியாரும் எட்வர்டால் கோடாவும் ஆஜரானார்கள். 29. ம. லா. ஜெ. 34.

Bal Ganghadar Tilak V. Shri Shrinivasa Pandit, 29 M. L. J. 34.

---

ஜட்ஜி:— ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி.
அப்பீல்வாதி:—ஸ்ரீபூசபதி ராமச்சந்திர ராஜுகாரு.

v.

அப்பீல் பிரதிவாதிகள்.—ஸ்ரீராஜா வாச்சாவாயி வெங்கட சுப்பாயம்மா ஜெகபதி பகதூர்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு ஒப்பந்தம் ஊர்ச்சிதந்தி இருக்கிறதென்றும் செலாவணியாகக்கூடியதென்கிற ஆதாரத்தின்பேரில் அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகளை நிறைவேற்றி வைக்கும்படியாகக் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் கேசை விசாரணை செய்துமுடித்த பின்பும் இருதரப்பு வக்கீல்களும் அட்டிரஸ் பேசிமுடித்த பின்பும், பிரதிவாதிக்கு ஒரு உத்திரவு பிறப்பித்தார்கள். இந்த உத்திரவு என்னவென்றால் ஒப்பந்தம் நிறைவேற்றப்படக்கூடிய ஒப்பந்தமல்லவென்று இன்னொரு எழுத்து வாக்கு மூலம் தாக்கல் செய்யும்படியாக உத்திரவு செய்தார்கள். இம்மாதிரியாக கோர்ட்டார் செய்த உத்திரவு ஒழுங்கீனமான உத்திரவு என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு வியாஜ்ஜிய நடவடிக்கையில் கீழ்க் கோர்ட்டார்கள் செய்த உத்திரவு முழு ஒழுங்கீனம் என்று ஐக்கோர்ட்டாருக்குத் தெரிய வந்ததால் அப்பேர்ப்பட்ட உத்திரவில் பிரவேசித்து ஒழுங்கு படுத்திவைக்க ஐக்கோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. 29 ம.லா, ஜெ. 53 —Poosapthi Ramachandra Raju Garu V. Sri Rajah Vachavayi Venkata Subbayamma Jagapathi Bahadur Garu, 29 M. L. J. 53.

---

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T R. ராமச்சந்திர அய்யரும் மிஸ்டர் T. R. கிருஷ்ணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் T. அப்பா ராவ் T. ராமச்சந்திர ராவ் B. சோமப்பா ஆகிய இவர்களுடன் மிஸ்டர் P. நாராயண மூர்த்தி ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்
ஜட்ஜி மிஸ்டர் கோட்ஸ்டிராட்டர்.

மனுதார்கள்:—மரக்காரும் இன்னும் 5-வர்களும்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:-ரெவினியூ பாக்கிக்காக சொத்து ஜப்தி செய்யப்படுவதற்கு முந்தி சொத்தை ஜப்தி செய்கிறவன் நேரில் டிமாண்டு நோட்டீஸ் சொத்துக்குச் சொந்தக்காரனுக்குச் சார்வு செய்ய வேண்டுமென்று சென்னைப்பட்டணம் ரெவினியூ வசூல் ஆக்ட்டில் சொல்லப்படவில்லை ஆதலால் டிமாண்டு நோட்டீஸ் சார்வு செய்யாமல் சொத்தை ஜப்தி செய்தது சட்ட விரோதமான செய்கையாக மாட்டாதென்றும் அந்த ஜப்தியில் சொத்தை ஜப்தி செய்யவிடாமல் தடுப்பது குற்றமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதார்களுக்காக மிஸ்டர் K. பண்டாலேயும் சர்க்கார் தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக பாரிஸ்டர் மிஸ்டர் P. R. கிரான்ட்டும் ஆஜரானார்கள். 29ம. லா. ஜெ. 60—In the matter of P. Marakar, 29 M. J. 60.

---

புல் பெஞ்ச்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலீஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி

அப்பீல் வாதிகள்:—ராஜா சாகேப் மேகர்பான்.

v.

அப்பீல் பிரதிவாதிகள்:—ஞானிவெங்கட சுப்பாராவ்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—சென்னைப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் ஊர்ச்சிதத்திற்கு வந்த பிறகு ஜெமீன்தார் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். எதற்காக வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டதென்றால் டை சட்டம் பிறப்பதற்கு மூன்று வருடத்திற்கு முந்திய பசலிகளின் தீர்வை பாக்கியை வசூல் செய்து கொள்ளும்பொருட்டே. ஜெமீன்தார் மேஜாகி மூன்று வருடத்திற்குள்ளாக இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்.

மதிராஸ் பூஸ்திதி ஆக்ட் பாஸ் செய்யப்படும்போது இந்த வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலத்திற்கு உயிர் இருந்திருக்கிறது. ஆதலால் அந்த வியாஜ்ஜிய மூலத்தின் வலுவை அடக்கிப்போட டை ஆக்ட் 211-வது பிரிவின் பிரிவுக்கு அதிகாரமில்லை. ஆகவே வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பிற்கு ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அயபர் சம்மதமளிக்கவில்லை,

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் P. நாராயண மூர்த்திக்காக மிஸ்டர் B. சோமய்யாவும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் B. நரசிம்மராவும் ஆஜரானார்கள். 29 மா. ல. ஜெ. 2.

---

ஜட்ஜிகள்:—சீப்ஜட்ஜி சர் ஜான் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரி

N. ஸ்ரீனிவாசய்யங்கார்.—அப்பீல்வாதி

vs-

S. K. M. R. M. ராமசாமி செட்டியார்:—அப்பீல் பிரதிவாதி

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டாருடைய தீர்ப்பைப் பரிசீலனை செய்வதற்காக ஐக்கோர்ட்டில் ஒரு ரிவிஷன் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஐக்கோர்ட்டில் ஒரு ஜட்ஜி விசாரணைசெய்து கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பில் பிரவேசிக்க முடியாதென்று மனுவைத் தள்ளுபடிசெய்து உத்திர



வுசெய்தார். இப்படி அவர் உத்திரவுசெய்தது அப்பீல்கோர்ட்டாருக்கிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு அவர் உத்திரவு செய்திருக்கிறார் என்றும் லெட்டர்ஸ் பேட்டன்ட் ஆக்ட் 15வது கிளாசின்படி இந்த உத்திரவு ஒரு தீர்ப்பாக எண்ணப்படவேண்டுமென்றும், டை ஜட்ஜி எதிர்தரப்பிற்கு நோட்டீஸ் முதலியவைகள் கொடுக்காமல் உத்திரவு பிறப்பித்திருந்தபோதிலும் இந்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப்படலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது-

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S- T- சீனிவாச கோபாலாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் G-S- ராமச்சந்திரய்யரும் ஆஜரானார்கள்- 29 ம- லா- ஜெ- 12- R- Streeneevasa Iyengar, V- S- K- M- R- M- Ramasamy Chettiar, 29 M- L- J- 112-

---

புல் பெஞ்ச்:—சீப்ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட்பீல்ட்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயரும் ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட்பீல்டும் கூடிய கோர்ட்டார் ஒரு ஐக்கோர்ட்டு வக்கீலினுடைய சன்னதை மூன்றுமாதம் வரையில் ரத்துசெய்து வைத்தார்கள்- இந்த உத்திரவு லெட்டர்ஸ் பேட்டண்ட் ஆக்ட் 10வது கிளாசின்படி கொடுக்கப்பட்ட உத்திரவாயிருக்கிறபடியால் இந்த உத்திரவிற்கு விரோதமாக பிரிவிகவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் G- S- ராமசாமி அய்யர் ஆஜரானார்- 29 ம- லா- ஜெ- 16- A Vakil of the High Court V. President of the Vakil Association, 29 M- L- J- 16-

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஜான்வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் கோட்ஸ் டிராட்டர்

ராஜா தருமகுமார வெங்கடப்பா:—அப்பீல்வாதி.

vs

தரும ரெங்காராவ்:—அப்பீல் பிரதிவாதி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு ஹிந்து, புத்திரனில்லாமல் இறந்துபோய்விட்டார். இவருக்கு ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் பாத்திதை முதலில் அவருடைய முதல் மனைவிக்கு இருக்கின்றது. இரண்டாவதுமனைவி மூத்தமனைவியுடைய சம்மதத்தைப்பெறாமல் புருஷனுடைய சபிந்த பந்துக்களுடைய சம்மதத்தைப்பெற்று ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் இந்த ஸ்வீகாரம் செலாவணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் A. கிருஷ்ணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. V. வெங்கட்ராமய்யரும் ஆஜரானார்கள். 29 ம லா. ஜெ. 18- Raja Dharma Kumara V. Dharma Ranga Roa, 29 M. L. J. 18.

---

## பிரிவி கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட் டின்
லார்ட் அட்க்கின்சன்
சர் ஜியார்ஜ் பேர்வெல்
சர்ஜான் எட்ஜ்

பட்டுலால் வகையறா:—அப்பீல் வாதிகள்,

vs.

முசமட் பார்பதிகள்வார்:—அப்பீல் பிரதிவாதிகள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—விதவைஸ்விகாரம் எடுத்துக் கொள்ளுவது அவளுக்கல்ல அவளுடைய புருஷனுக்கு. புருஷன் ஜீவதிசையிலிருந்தால் எப்படி ஸ்விகாரம் எடுத்துக்கொள்ளப்படும் பையனை பரிக்ஷித்து தெரிந்தெடுத்திருப்பானோ அதுபோல அவன் இறந்துபோனபின்பும் ஸ்விகாரம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

ஒரு விதவை அவளுடைய புருஷன் கொடுத்துவிட்டுப் போன அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி அவளுடைய சகோதரபுத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டனள். இந்த ஸ்விகாரம் செல்லுபடியுள்ளதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தியாவில் சப்கோர்ட்டார் எந்த ஐக்கோர்ட்டாருக்கு ஐக்கியப்பட்டவர்களாக விருக்கிறார்களோ அந்த ஐக்கோர்ட்டாருடைய தீர்மானத்தைப் பின்பற்றவேண்டும். ஆனால் அந்தத் தீர்மானங்கள் பின்பு ரத்துசெய்யப்பட்டிருந்தாலாவது அல்லது அது சம்பந்தமான சட்டம் ரத்துசெய்யப்பட்டிருந்தாலாவது அந்தத்தீர்ப்பு பின்பற்றப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது 29 ம. லா. ஜெ. 63- Pattu Lal V. Musammat Parbathi, 29 M. L. J. 63.

---

கவுன்சிலர்கள்:—லார்ட்டுடின்
சர்ஜான் பேர்வெல்
சர்ஜான் எட்ஜ்
மிஸ்டர் அமிர் ஆலி

மகந்து லாஹர்பூரி:—அப்பீல்வாதி.

vs.

மகந்து பூரனநாத்:—அப்பீல் பிரதிவாதி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—தேவஸ்தானத்தை ஸ்தாபித்தவர் மகந்துக்கள் நியமிப்பதற்கு யாதொருவிதியும் ஏற்படுத்தாவிட்டால் மகந்துவின் ஸ்தானம் காலியானபோது முந்திய காலத்தில் கக்ஷிக்காரர்களுக்குள் மகந்துவை நியமிக்கும்விஷயத்தில் என்ன என்ன பழக்கங்களும் வழக்கங்களும் அனுஷ்டானத்திலிருந்தனவோ அவைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 29 ம. லா. ஜெ. 75. Mahant Lahar Puri V. Mahant Purna Nath, 29 M. L. J. 75.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர்ஜான் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

ஷாண்டென்கிற சீனிவாசபேய்:—அப்பீல்வாதி

Vs.

மேதாஜா பேவேர்ஜாரி வகையறா:—அப்பீல் பிரதிவாதிகள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு ஸ்வாதீன அடமானக்கடனின் ஒரு பாகம் 1910-ளு மார்ச்சு மாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டுமென்றும் பாக்கித்தொகை 1952 மார்ச்சுமாதத்திற்குள் செலுத்தப்பட வேண்டுமென்று ஸ்வாதீன அடமானப் பத்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

1952 மார்ச்சுமீ முடிவடைவதற்குள் எந்தக் காலத்திலும் சொத்து மீட்டுக்கொள்ளப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டது

சொத்தை மீட்டுக்கொள்ளுவதற்கு ஒரு தேதி குறிப்பிடப்பட்டிருப்பது அடமானம் ஸ்வத்தவன்

இஷ்டப்பட்டால் அதற்கு முந்தியே மீட்டுக்கொள்ளலாம் என்று அடமானம் வைத்துக்கொண்டவனுடைய எண்ணத்திலிருக்கிறதென்பதைக் காண்பிக்கின்றது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் B. சீத்தாராமராவ், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் K. Y. ஆடிகா ஆஜரானார்கள். 29ம. லா. ஜெ. 86 - 29 M. L. J. 86.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

சத்தியபாமா:—அப்பீல்வாதி.
கேசவாச்சாரியா:—அப்பீல் பிரதிவாதி.
லாப்பாயின்ட்:—ஜீவனாம்சம்.

கேசின் விபரம்: ஒரு ஹிந்து விதவை தனக்குச் சேரவேண்டிய ஜீவனாம்ச பாக்கிக்காக தன்னுடைய புருஷனுடைய தமையன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தனள். வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்கனவே நடந்த ஒரு உடன்படிக்கையில் பிரதிவாதிக்கு மாதம் ஒன்றுக்கு இவ்வளவு ஜீவனாம்சம் கொடுக்கப்பட்டு வரவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கை பிறந்தபிறகு வாதி துன்மார்க்க நடவடிக்கை யுடையவளாகவிருந்து வந்தனள் ஆனால் வியாஜ்ஜியசமயத்தில் அவள் அந்த நடத்தையை விட்டுவிட்டு நல்ல மார்க்கமுடையவளாகவிருந்து வந்தனள்.

வாதிக்கு உடன்படிக்கையில் சொல்லப்பட்டடி விகிதப்படி ஜீவனாம்சம் கொடுத்துவரப்படக்கூடாதென்றும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய ஜீவனாம்சம் மட்டிலும் கொடுத்துவரப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக H. பாலகிருஷ்ணராவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸடர் B. சீத்தாராமராவும் ஆஜரானாகள். 29 ம- லா- ஜெ-87- 29 M- L- J- 87.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டா சேஷகிரி அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி

ஆண்டிமூப்பன் வகையரு:—அப்பீல் வாதிகள்.

VS

முத்துவீரரெட்டி வகையரு:—அப்பீல் பிரதிவா[திகள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—தெருவின் வழியாக மத சம்பந்தமான ஊர்கோலங்கள் விட்டுக்கொண்டுவர ஒவ்வொரு மனிதனும் பாத்திய முடையவன். ஆனால் சிற்சிலவிடங்களில் பொது சாவதானத்திற்காக இந்த பாத்திதை நிபந்தனைக் குட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்த பாத்திதை நிபந்தனைக் குட்படுத்தப்படவேண்டுமென்று பாத்தியம் பாராட்டுகிறவர்கள் அந்த பாத்திதை நிபந்தனைக் குட்படுத்தப்பட்டே வந்திருக்கிறதென்று ரூஜுப்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:— அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் S. T. சீனிவாச கோபாலாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. சீனிவாச அய்யங்காரும் ஆஜரானார்கள். 29 ம- லா- ஜெ- 92- Andimoopan V- Muthu Veera Reddy, 29- M- L- J- 92.

---

புல்பென்ச்:—ஜட்ஜி மிஸ்டர் ஒல்ட் பீல்ட்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்

பப்ளிக் பிராசிக்கியூட்டர்:—அப்பீல்வாதி

VS

கொயாஹாஜி:—குற்றவாளி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு மாஜிஸ்டிரேட் குற்றவாளியின்பேரில் வெவ்வேறு குற்றங்கள் ஸ்தாபனை செய்து குற்றப்பத்திரிகை வாசித்துவிட்டு சாக்ஷிகளை இரண்டு குற்றங்களுக்கும் சேர்த்து குறுக்கு விசாரணை செய்யப்படும்படியாக அனுமதி கொடுத்தார். இப்படி மாஜிஸ்டிரேட் உத்திரவுசெய்தது சட்டவிரோதமென்று தீர்மானிக்கப்பட்டது. இப்படி சட்ட விரோதமாக விசாரணை நடத்தப்பட்ட கேசில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டான். விடுதலை செய்யப்பட்டதிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளப்பட்டது- ஐக்கோர்ட்டார் குற்றவாளியின்பேரில் குற்றஸ்தாபனை செய்யக்கூடாது ஆனால் குற்றவாளியை புனர்விசாரணை செய்யும்படியாக உத்திரவுசெய்யலாம் ஆனால் இந்தக்கேசில் குற்றம் நடந்து வெகுகாலமாய்விட்டதென்கிற காரணத்தை முன்னிட்டு கோர்ட்டார் குற்றவாளியைப் புனர்விசாரணை செய்யும்படியாக உத்திரவு செய்யவில்லை.

லாயர்கள்:— கவர்ன்மெண்டு தரப்பிறக்காக பாரிஸ்டா மிஸ்டர் நன்ஜான்ட் கிரான்ட்டும் குற்றவாளிதரப்பிற்கு பாரிஸ்டர் ஆனரபில் மிஸ்டர் ரிச்மாண்டும் ஆஜரானார்கள். 29 ம- லா- ஜெ- 102- Public Prosecutor V- Koya Haji, 29- M- L- J- 102.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்
ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்

தர்பா லிங்கய்யா:— அப்பீல்வாதி.

VS

தர்பா கனகம்மா:—அப்பீல் பிரதிவாதி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஹிந்து சேர்ந்த குடும்ப பாகஸ்தன் இறந்துபோய்விட்டான். இவனுடைய மனைவி தனக்கு ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று மற்ற பாகஸ்தர்கள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டு



வந்தாள். இவளுக்கு வேறே வருமான மிருக்கிறதென்றும் அதைக்கொண்டு ஜீவனாம்சம் செய்துவரலாமென்று பிரதிவாதிகள் கக்ஷி சொன்னார்கள். சேர்ந்த ஹிந்து குடும்ப விதவை அவளுடைய புருஷனின் சகோதரர்களிடமிருந்து ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ளும் பாத்திதை அவள் அந்த குடும்பத்தின் மெம்பர்களில் ஒருவராகயிருப்பதால் உண்டாயிருக்கும் பாத்திதை என்றும் அவளுக்கு வேறுவிதமான வருமானமிருப்பதால் அவள் ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ளப் பாத்திய மற்றவளல்லவென்றும் சொல்லமுடியாதென்றும் ஆதலால் குடும்பம் போதுமான ஐவேஜியில்லாத குடும்பம் என்றும் விதவைக்கு வேறுவிதமான வருமான மிருக்கிறதென்றும் ஆகையால் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்படவேண்டியதில்லை என்றும் கக்ஷி சொல்லப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. ருமேசன் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் P. நாகபூஷணமும் ஆஜரானார்கள். 29 ம- லா- ஜெ- 260- Dharba Linghayya V- Dharba Kanakamma, 29 M- L- J- 260.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவப்பர்
ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்

ஷங்கராஜு:—அப்பீல்வாதி

VS

ஸ்ரீராம தேசிகாச்சாரியார்:— அப்பீல் பிரதி[வாதி

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு கக்ஷிக்காரன் அவனுடைய வக்கீலுக்கு டிக்கிரியை நிறைவேற்ற அனுமதிகொடுத்திருப்பது எவன்பேரில் டிக்கிரி நிறைவேற்றப்பட்டதோ அவனிடமிருந்து கோர்ட்டிற்கு வெளியே பணம் வாங்கிக் கொள்ளும்படியான அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று எண்ணப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் V- ரத்தின சோமநாதன் அப்பீல் வாதிக்காகவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் W- விஸ்வநாதப்பரும் ஆஜரானார்கள- Sankara Raju V Streerama Desikachariar, 15 M- L- T- 162-

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்

ருமநாதன் செட்டி வகையரு:—அப்பீல் வாதி[கள்

VS

அருணாச்சலம் செட்டி:—அப்பீல் பிரதிவாதி[கள்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—கீழ்க்கோர்ட்டு ஏலவிற்பனையை நிறுத்தி வைக்கும்பொருட்டு ஐக்கோர்ட்டார் உத்திரவு செய்தபிறகும் அந்த உத்திரவை கீழ்க்கோர்ட்டாருக்கு வக்கீல் அறிவித்தபிறகும் கீழ்க்கோர்ட்டார் ஏலத்தை நிறுத்தாமல் சொத்தை ஏலம் போட்டு விற்பனை செய்திருந்தால் அந்த ஏல விற்பனை செலவாணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் L. A கோவிந்த ராகவய்யரும் மிஸ்டர் A. விஸ்வநாதய்யருக்குப் பதிலாக மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் M. O. பார்த்தசாரதி அய்யக்காரும் S. T. ஸ்ரீனிவாச கோபாலாச்சாரியாரும் ஆஜரானார்கள்- 15- ம- லா- டை. 151. Ramanathan Chetty V. Arunachallam Reddy, 15 M- L- T- 151-

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்

முததுக்கருப்ப முதலி:—வாதி

VS.

பி- மு- காத்தப்ப உடையான்:—பிரதிவாதிகள்

ஐக்கோர்ட்டுத் திர்ப்பு:— காண்ட்ராக்ட் ஆக்ட் இரண்டாவது பிரிவின் தாத்பரியப்படி சாதாரணமாக சிபார்சு செய்வது ஒரு பரிகாரமாக எண்ணப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது- ஒருவன் ஒரு மூன்றுவது மனிதனுக்குக் கடன் கொடுக்கும்படி சாதாரணமாக சிபார்சு செய்தால் அவன் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கட்டுப்பட்டவனாகமாட்டான் என்று தீர்மானிக்கப்பட்டது-

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் T. ரெங்காச்சாரியார் ஆஜரானார்; அப்பீல் பிரதிவாதிகளுக்கு லாயர் இல்லை. [1914] ம. வி. நோ- 706. Muthukaruppa V. Kathapa Odyan [1914] M- W. N. - 706-

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்

ஐக்கோர்ட்டுத் திர்ப்பு:—ஹிந்துலாப்பிரகாரமும் அதன்பேரில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களின்பிரகாரமும் ஒரு விதவையின் சொந்தப்புத்திரனும் அவளுடைய மாற்றாந்தாய்புத்திரனும் சேர்ந்து அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கப் பாத்தியப்பட்டவர்கள் என்றும் அவளுடைய ஜீவனாம்சம் அவளுடைய புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் அந்த சொத்தை வார்சு முறையில் அடைந்திருப்பவர்கள் அவளுக்குச் ஜீவனாம்சம் கொடுத்துவர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது- ஜீவனாம்ச காரியங்களுக்காக ஆக்

ட்டில் "தாயார்" என்று சொல்லப்பட்டிருப்பதற்கு மாற்றாந்தாயாரும் என்று தாற்பரியம் செய்துகொள்ளப்படவேண்டும்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. நாராயணமூர்த்தியும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. V. L. நரசிம்மமும் ஆஜரானார்கள். 16 ம. லா. டை. 547. 16 M. L. T. 547.

---

பிரிவி கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட்டேடின்
லார்ட் ஷா
சர் ஜான் எடஜ்
மிஸ்டர் அமீர் ஆலி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—A. என்பவனும் B. என்பவனும் சேர்ந்து சர்க்கரை வியாபாரம் செய்துகொண்டு வந்தார்கள். இவர்களுக்கு எதிரி ஒரு சர்க்கரை வியாபாரி யிருந்துகொண்டிருந்தான். இவனுக்கு அவர்கள் கூட்டு சேர்ந்து சர்க்கரை வியாபாரம் செய்துகொண்டு வருவது தெரியக் கூடாதென்பது இவர்கள் இருவருடைய கருத்து ஆகையால் இவர்கள் இருவரும் தனித்தனி வியாபாரிகள் போலிருந்து வந்தார்கள்; தனித்தனியே இன்வாய்ஸ்கள் தனித்தனியே எடுத்துக்கொண்டு வந்தார்கள். கடன்களும் தனித்தனியே கொடுத்து வந்தார்கள். ஆனால் அந்த வியாபாரத்தில் வரும் லாபத்தை மட்டிலும் சரிபாதியாக பங்கிட்டு எடுத்துக கொண்டு வந்தார்கள். இவாகள் இருவருக்கும் தனித்தனியே பாங்கியில் பத்து வரவு செய்து கொண்டிருந்தார்கள். பாங்கியில் இவர்களுக்குப் பணம் கொடுக்கத் தட்டுப் பட்டால் C. என்பவன் இவர்களுக்கு பாங்கியில் ஜாமீன் கொடுத்து பாங்கியார் இவர்களுக்குப் பணம் கொடுக்கும்படியாகச் செய்து வந்தான். A. என்பவன் பாங்கிக்குச் செலுத்த வேண்டிய கடன்களை எல்லாம் செலுத்தி விட்டான். B. என்பவன் பாங்கிக்குச் செலுத்த தவறிப் போய்விட்டான். B. என்பவனுக்கு பாங்கியில் ஜாமீன் கொடுத்த C. என்பவன் B பாங்கிக்கடனைச் செலுத்தாததற்காக அந்தக் கடனை வசூல்செய்து பாங்கிக்குக்கட்ட A என்பவனையும B என்பவனையும் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். A, B—இருவர்களும் கூட்டு வியாபாரம் செய்துகொண்டு வந்தார்கள் என்றும் இவர்களில் எவருக்குக் கடன் கொடுக்கப் பட்டாலும் அது கூட்டு வியாபாரத்திற்குக் கொடுக்கப் பட்ட கடனாகுமென்றும் ஆதலால் பாங்கிக் கடனை A, B ஆகிய இருவரும் செலுத்தப் பாத்தியப்பட்டவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக சொலிசிட்டர்களாகிய மெசர்ஸ் ஆஸ்ஹர்ட், மாரிஸ், கிரிஸ்ப் அண்டு கோ அப்பீல் பிரதிவாதிகளுக்காக பாய்டஸ் அண்டு ஹார்ட், 29 ம லா. ஜெ. 515—29 M. L. J. 515.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்

பசுமர்த்தி பாயிதானு—அப்பீல்வாதி

Vs.

காந்திலக்ஷ்மிநரசிம்மா வகையறா. } அப்பீல் பிரதிவாதிகள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தின் வாதியினுடைய இறந்து போன புருஷனுடைய சொத்து ஷை புருஷன்பேரில் வாங்கப்பட்ட டிக்கிரிக்காக ஏலம் போடப்பட்டது. அந்த சொத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வியாஜ்ஜியம் வாதியால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வாதியையும் இரண்டாவது பிரதிவாதியாகிய அவளுடைய சக்களத்தியையும் வாதியின் புருஷனுடைய சட்டப் பிரகாரமுள்ள வார்சுகளாக நிறைவேற்று நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிறகு சொத்து ஏலம் போடப்பட்டது. வாதி சட்டப் பிரகாரமுள்ள பிரதிநிதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதும் சொத்து ஏலம் போடப்பட்டபோதும் வாதி மைனராக விருந்தாள். இப்படி வாதி மைனராகயிருப்பது முதல் பிரதிவாதிக்கும் ஏலத்தில் சொத்தை வாங்கினவனாகிய 3-வது பிரதிவாதிக்கும் நன்றாய்த் தெரியும். அப்படியிருந்தும் அவள் மேஜரானவள் என்று சொல்லப்பட்டு நிறைவேற்று நடவடிக்கையில் புருஷனின் சட்டப் பிரகாரமுள்ள பிரதிநிதியாகச் சேர்க்கப்பட்டாள். 2-வது பிரதிவாதி மேஜராக விருந்தபோதிலும் அவனுக்கு அவனுடைய சொத்திலிருக்கும் பாத்தியதையை விட்டுவிட்டான். முதல் பிரதிவாதியின் வேறொரு டிக்கிரிக்காகச் சொத்து முதலில் ஏலம் போடப்பட்டது. அந்த ஏலத்தில் சொத்தை மூன்றாவது பிரதிவாதி ரூபா 100-க்குக் கேட்டார். வாதியின் புருஷனுடைய மற்ற கடன்காரர்களும் ஷை தொகையில் பங்கு கிடைக்க வேண்டுமென்று மனு செய்திருப்பதை முன்னிட்டு அந்த ஏலத்தை நிறுத்திவிடும்படி செய்தார். அதன் பிறகு பிரஸ்தாப டிக்கிரி நிறைவேற்றப் பட்டு சொத்து ஏலம் போடப்பட்டது. முந்திய ஏலத்தில் மூன்றாவது பிரதிவாதி இந்த சொத்தை ரூபா 600 கேட்டது கோர்ட்டாருக்கு அறிவிக்கப்படவில்லை. இப்போது போடப்பட்ட ஏலத்தில் முதல் பிரதிவாதி ரூபா 200 க்கு கேட்டார், 3-வது பிரதிவாதி ரூபா 201 க்குக் கேட்டார், ஆகவே ரூபா 201 க்குக் 3-வது பிரதிவாதிக்கு ஏலம் விடப்பட்டது.

இத்தியாதி சந்தர்ப்பங்களில் வாதி சட்டப்படி நிறைவேற்று நடவடிக்கையில் சேர்க்கப் படாத



தால் ஏல விற்பனை செலாவணியாக மாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த ஏலவிற்பனையை ரத்து செய்துவைக்க வாதி மேஜர் அடைந்து மூன்று வருடங்களுக்குள் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறபடியால் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரின் தீர்மானம்.—வியாஜ்ஜியத்தின் டிக்கிரி எந்தக் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்டதோ அந்தக் கோர்ட்டில் வாதி அவளுடைய புருஷனுடைய சட்டப் பிரகாரமுள்ள வார்சாகச் சேர்க்கப்படாமல் அந்த டிக்கிரி எந்தக் கோர்ட்டிற்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டதோ அந்தக் கோர்ட்டில் அவள் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது ஏல விற்பனையை ரத்து செய்வதற்குக் காரணமாகவிருக்க மாட்டாது ஏன் என்றால் அது சாதாரணமான ஒழுங்கீனம் (தம்புப்பிள்ளை v. ஸ்ரீராமலு நாயுடு 17 ம. லா. ஜெ. 300).

---

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் K. சீனிவாசய்யங்காரும் V. ராமேசனும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் B. N. சர்மார் ஆஜரானார்கள் 29 ம. லா. ஜெ. 25. Pasumarti Paidana V Ganti Lakshmi Narasima, 29 M. L. J. 25.

---

பிரிவி கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட்டேண்டின்
லார்ட்ஷா
சர் ஜியார்ஜ் பேர்வெல்
மிஸ்டர் அமீர் ஆலி

V. வெங்கட்டநாராயணபிள்ளை:—அப்பீல்வாதி

VS

V. சுப்பம்மாள் வகையறா:—அப்பீல் பிரதிவாதிகள்

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—விதவை இறந்துபோனதற்குப் பிந்தி எஸ்டேட்டிற்கு வார்சாக வரக்கூடிய ஒரு அனந்தர வார்சுவால் விதவை எடுத்துக்கொண்ட ஸ்வீகாரத்தை ரத்து செய்துவைக்கக் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு வரும்போது அவன் இறந்துபோய்விட்டால் அடுத்த அனந்தர வார்சால் அந்த வியாஜ்ஜியம் தொடர்ந்தேர்த்தியாக நடத்தப்பட்டு வரலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த விஷயத்தில் ஸ்வீகாரத்தை ரத்துசெய்து வைக்கக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமும் பராதீனத்தை ரத்துசெய்து வைக்கக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமும் ஒரே நிலைமையிலிருக்கின்றன என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக சர் ரூபர்ட்பின்லேயும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக டீகுருதியரும் ஆஜரானார்கள், 29 ம. லா. ஜெ. 535. V. Venkata Narayana Pillai V V. Subbamal, 29 M. L. J. 535.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்

அய்யாசாமி உடையான்:—அப்பீல் வாதிகள்

VS

அப்பாசாமி உடையான்:—அப்பீல் பிரதிவாதிகள்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—உயில் என்று சொல்லப்படும் ஒரு ஆதரவில் அடியிற் கண்டபடி சொல்லப்பட்டிருந்தது. எங்களுடைய இளைய குமாரத்தி B என்பவளை A என்பவனுக்கு விவாகம் செய்து கொடுத்து அவனை நம்முடைய வீட்டில் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அவன் நம்முடைய விவசாயத் தொழிலை நடத்தி நம்மை சம்ரக்ஷித்துக்கொண்டு வருகிறான். ஆதலால் A என்பவன் B என்பவளும் எங்கள் இருவரையும் நாங்கள் இறந்துபோகும் பரியந்தம் சம்ரக்ஷித்துக்கொண்டு வரவேண்டும். மேலே சொல்லப்பட்ட அந்த B என்பவளாவது அல்லது அவளுக்குப்பிறந்த புத்திரனாவது எங்கள் இருவருடைய தகனகாரியங்களைச் செய்யவேண்டும். மேலே சொல்லப்பட்ட அந்த B என்பவளாவது அல்லது அவளுக்குப்பிறந்த புத்திரனாவது எங்களுக்குச் சொந்தமான ஸ்தாவர சங்கம சொத்துக்களுக்கு வார்சாக வந்து சொத்துக்களை அனுபவித்துக் கொண்டுவர வேண்டும்.

இந்த ஆதரவு உயிலே ஒழிய செட்டில்மெண்டு ஆதாரமல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

உயில் கர்த்தாவையும் அவருடைய மனைவியையும A, B—ஆகிய இருவர்களும் ரக்ஷித்து வந்தால் தான் உயில் கர்த்தாவினுடைய சொத்துக்களை அடையலாமென்று யாதொரு ஒப்பந்தமும் அந்த ஆதரவி லிருப்பதாகத் தெரியவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் S. வரதாச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் T. R. வெங்கட்ராம சாஸ்திரியாரும் A. S. விஸ்வநாத அய்யரும் ஆஜரானார்கள். 29-ம. லா. ஜெ. 542. Aiyasamy Udyan V. Appasamy Udyan, 29. M. L. J. 542.

---

## A DIALOUGE.

### ஒரு சம்பாஷணை.

கனகம்—(தனக்குள்) அண்ணாமலையார் என் தலையில் என்னதான் எழுதியிருக்கிறாரோ தெரியவில்லை. பெரிய குடும்பத்தில் பிறந்தேன் பணக்கார புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டேன் கடைசியில் இன்று முழுதிலும் நான் பட்டினி கிடக்கும்படியான வயற்றெரிச்சலை நான் என்னென்று எடுத்துரைப்பேன் ?

வழிப்போக்கன்—ஏ ! பெண்ணே ! உன்னைப் பார்த்தால் நல்ல குடியில்பிறந்த பெண்போல் காணப்படுகிறாய் உனக்குவந்த கெதி என்ன ? ஏன் தனியே இந்த கோவில் பிரகாரத்தில் நின்று புலம்பிக்கொண்டிருக்கிறாய்? எனக்கு சொல்லக்கூடுமா ?

கனகம்—ஐயா! என் கதையைக்கேட்டால் என் துயரத்தை நீக்கி வைக்க உம்மால் சாத்தியப்படுமோ?

வழிப்போக்கன்—சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். ஆகையால் பெண்ணே ! என்னை அலக்ஷியமாக எண்ணிவிடாதே.

கனகம்—நான் சுருக்கிச் சொல்லுகின்றேன் கேளும். நான் இந்த ஊர்தான். என்னுடைய புருஷன் இறந்துபோய்விட்டார் எனக்கு மைத்துனர்களிருக்கிறார்கள். இவர்கள் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியதிருக்க மூன்று வருடகாலமாக ஒரு தம்படிகூட கொடுக்காமல் வாயில் இரத்தத்தை வார்க்கிறார்கள் ஆதலால் இந்த திருவண்ணாமலையில் திருக்கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் என் அப்பன் அண்ணாமலை நாதனிடம் என் குறைகளைச்சொல்லி அழுதவந்தேன் ஐயா!

வழிப்போக்கன்—ஆம் பெண்ணே ! புருஷனுடைய சகோதரர்கள்தான் அப்படிச் செய்கிறார்கள். உனக்கு பெற்றோர்களில்லையா அல்லது அவர்களுடைய சமீபபந்துக்களில்லையா ? அவர்கள்கூடவா உன்னைக் கொடுமையாக நடத்திவருகிறார்கள்.

கனகம்-ஐயா ! ஆம்.

வழி-போ-இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது இதுவரையில் நான் கேள்விப்பட்டதில்லையே!

கன-கேள்விப்பட்டிருக்கமாட்டீர்! நான் உலகத்திலில்லாத கொடிய பாவி!

வ-போ-என்ன பாவத்தைச் செய்தவளாகவிருந்தபோதிலும், தண்டனைபட்டு ஜெயிலுக்குப் போய்வந்தவளாக விருந்தபோதிலும் உன் பெற்றோர் பந்துக்கள் உன்னை இந்தக் கேவலமான நிலைமையில் பார்க்க இஷ்டப்படுவார்களோ ?

கனகம்-இப்போதுதான் பிரத்தியக்ஷத்தில் பார்க்கிறீர்களே! இனிமேலா பார்க்கப்போகிறீர்கள்?

வ-போ-தங்கையே ! கேள் ! இந்த உலகத்தில் ஒவ்வொரு சம்பவத்திற்கு ஒரு காரணமுண்டு. "நிமித்தமில்லாமல் எதுவும் உண்டாகமாட்டாது." "அள்ளாமல் குறையாது" "நெருப்புஇல்லாமல் புகை உண்டாகமாட்டாது." ஆதலால் பெரிய குடும்பத்தில் பிறந்த நீ இவ்வளவு கேவலமான நிலைமையில் வயிற்றுச் சோற்றுக்குக்கூட காற்றுப் பறந்து இந்தக் கோவிலில் பறதவித்துக் கொண்டிருப்பதற்கு காரணம் ஒன்றிருக்கவேண்டும் நீ சொல்லாமற் போனபோதிலும் உன் கதையைக் கேட்ட எனக்குத்தானே விளங்குகின்றது. பெண்ணே! பாதகமில்லை என்னிடம் மறைக்காமல் சொல்.

கனகம்-ஆம் முந்தி ஒரு மாதிரியாக இருந்தேன்.

வ-போ-பெண்ணே! பார்த்தாயா நான் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. நல்லது நான் வழிப்போக்கன் யாரோ எவரோ என்று நினைக்கவேண்டாம் என்னை உன் தமையனாக நினைத்துக் கொள். ஆகையால் சமாசாரத்தைவெளிப்படையாகச் சொல்லலாம். நான் ஒருக்கால் உனக்கு நல்ல யோஜனை சொல்லக்கூடும்.

கனகம்-என்னுடைய புருஷன் இறந்துபோனபிறகு வேறொருவன் சொன்ன ஆசை வார்த்தைகளுக்கிலங்காகிரங்கோனுக்குப்போய் அவனை அவ்விடத்தில் நாயகனாகக்கொண்டு ஒரு வருடமிருந்து அவனுக்கும் எனக்கும் உண்டான மனஸ்தாபத்தால் வந்தேன். திரும்பி புத்திகொண்டேன்! அடுத்த தெருவிலிருக்கும் என்னுடைய வீட்டிற்குச் சென்றேன். என்னை வா என்று கூப்பிடவாரில்லை. ஐயா ! ஐயா நான் என்ன செய்யப்போகிறேன் எனக்கும் இந்த. அவலக்கேடு வருமோ !

வ-போ-மங்காய்! நீ கவலைப்படாதே நீ முந்தி புத்திபிசகியிருந்தபோதிலும் அப்படி அதை உணர்ந்து சன்மார்க்கநெறியில் நடந்துவந்தால் கடவுள் மனமிரங்கி உன்னைக் காப்பாற்றுவார் எனபதில் சந்தேகமில்லை.

கனகம்-என்றையத்தினம் அவனை விட்டுப்பிறிந்தேனோ அன்றுமுதல் இந்த திருவண்ணாமலை ஈஸ்பரனறிய நான் ஒரு பாவத்தையும் அறியேன் இன்னும் என்னைப்போல் புத்தி பிசகிப்போன சகோதரிகளுக்கு புத்தி சொல்லக்கூடியஸ்தானத்திலிருக்கிறேன்.

வ-போ-பெண்ணே ! சந்தோஷம் ! ஆயினும் இது விஷயத்தில் உனக்கு யோஜனை சொல்லவாவது அல்லது உனக்கு ஒருவேளை சாப்பாடு போடவாவது எனக்கு இயல்பு கிடையாது. ஆயினும் இந்த ஊர் கடைத்தெருவில் ஒரு பணக்கார செட்டியார் யிருக்கிறார். அவரைப்போய் நீ



காண்பாயானால் உனக்கு நல்லகாலம் வந்துவிடும். அவர் உனக்கு யோஜனையும் சொல்லுவதுமல்லாமல் உனக்கும் அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிக்க இயல்புள்ளவர் அவர் செல்வாக்குடையவர், உன்னுடைய புருஷனின் சகோதரர்களை வரவழைத்து உனக்கு மாதம் ஏதேனும் ஜீவனாம்சம் கொடுத்துவரச் சொல்லி ஏற்பாடு செய்யக்கூடியவர் ஆகையால் நீ தாமதப்படாமல் நீ அவ்விடம் போ.

கன—ஐயா ! அவருடைய பெயர் என்ன ?

வ போ—அவர் பெயர் ரகுராம செட்டியார். பெரிய தனாட்டிகர். பட்டணம்சாமி. அவரைத் தெரியாதவர் இவ்வூரில் இல்லை. யாரைக் கேட்டாலும் அவருடைய வீட்டைக் காண்பிப்பார்கள். ஆனால் "அவன் அன்றி ஒரு அணுவும் அசையாது" என்பதுபோல நீ போதவற்கு முந்தி சந்நதியில் போய் பிரார்த்தனை செய்துகொண்டு போ. நாழிகையாய்விட்டது நான் போகின்றேன்.

கன—அண்ணாமலை ஈஸ்வரர் சந்நதிக்குப் போகிறாள். சந்நதியின்முன் நின்றுகொண்டு அப்பா ! நான் வேண்டுதல் கேட்டருள் புரியவேண்டும் ஆருயிருக்கு எந்நாளும் அன்பு புரியவேண்டும் தப்பேது நான் செய்யினும் நீ பொருத்தல் வேண்டும் என் அப்பனே நீ இந்த சமயம் முன்வந்து என்னை காப்பாற்ற வேண்டுமென்று அண்ணாமலை நாதனை வேண்டிக்கொண்டு ரகுராம செட்டியார் வீட்டிற்குச் சென்றாள்.

ரெகுராம செட்டியார் வீட்டில்.

வே—என்ன கோவிலுக்கு ஸ்வாமி தரிசினம் போனவாள் இவ்வளவு நாழி சென்று வந்தீர்களே !

ரெ—ஆம் கோவில் உட்பிரகாரத்தில் ஒரு சிறு பெண்ணும் ஒரு மனிதனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தார்களென்று கவனித்துக்கொண்டு வந்தேன் அதனால் தாமதப்பட்டுப் போய்விட்டது. சீக்கிரம் சாப்பாடு போடு ! வேதவல்லி ! யாரோ கதவைத் தட்டுகிறார்கள். போய் யார் என்று பார்த்து வா.

வே—நீ யார் அம்மா, அய்யா சாப்பிடுகிறார். உன் பெயரைச் சொல்லு.

கன—என் பெயர் கனகம்.

வே—ஐயா சாப்பிட்டுவிட்டு வந்து விடுவார் அதுவரையில் திண்ணையில் உட்கார்ந்திரு.

கன-உட்கார்ந்திருக்கிறேன் அம்மா தாங்கள் யார் ?

வே—வீட்டுக்கார செட்டியாரின் பெண்ஜாதி. ஐயாவும் இதோ வந்துவிட்டார்.

ரெ—கனகம் ! உன் கதையை எல்லாம் நான் அறிந்து கொண்டேன். நீ கவலைப்பட வேண்டாம். நாராயணசாமி ! நீ கையோடு போய் சித்திரை வீதியிலிருக்கும் நங்க புரம் ரெத்தினசாமிப் பிள்ளையை கையோடு கூட்டிக்கொண்டு வா. (கனகத்தைப்பார்த்து) அவர் தானே உன்னுடைய மைத்துனன்.

கன— ஆம்.

ரெ—ஒரு நிமிஷத்திற்குள் உன்னுடைய குறையை நிவர்த்தி செய்து வைக்கிறேன். வாருங்கள ரத்தனசாமிப்பிள்ளையவாள், என்ன இந்த அவலை ஸ்திரியை இந்த கெதிக்கு விட்டு விட்டீர்களே.

ரெ—தங்களிடம் நான் என்ன புதிதாய்ச் சொல்லப்போகிறேன். கப்பலேறி ரெங்கூனுக்குப் போனவளை நான் எப்படி குடும்பத்தில சேர்த்துக் கொள்ளக்கூடும், நான் எப்படி அவளுக்கு ஜீவனாம்சம் எடுத்து வைத்துக் கொள்ளக்கூடும் ? தாங்களே சொல்லுங்கள்.

ரெ--எல்லாம் சரிதான் ! ஏதோ அந்த சமயம் புத்திபிசகிப் போயிருக்கிறார்கள். அதன் பிறகு அவளுடைய நடவடிக்கையைப்பற்றி யாதொரு கெடுதலும்நீர் கேள்விப்பட்டதில்லையே !

ரெ—கேள்விப்பட்டதில்லை. அப்படியிருந்தாலும் பழைசி புதிதாய் விடுமோ, கெட்டபால் நல்ல பாலாய் விடுமோ ?

ரெ—கனகம் ஜீவனாம்சத்திற்குப் பிரியாது கொடுத்தால் அவளுக்கு கொடுத்துதானே தீரனும்.

ரெத்-சோரம்போனவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க எந்தக் கோர்ட்டார் டிக்கிரி கொடுக்கப் போகிறார்கள்.

ரெ-அது சரிதான். இப்போது அவள் நல்ல நடவடிக்கையிலிருக்கிறாளே.

ரெத்-அப்படி ருஜூப்பட்டால்கூட கொடுக்க மாட்டார்கள். எந்த வக்கீலையாவது கேட்டுப்பாருங்கள்.

ரெ-வக்கீலைக் கேட்பானேன், நாராயணசாமி அதோ பெட்ரூமில் கோட்ஸ்டாண்டில் சாவிக்கொத்து மாட்டியிருக்கிறேன் அலுமாரியைத்திறந்து இந்தியன் லா கெஜட்டு 7-வது வால்யுமை எடுத்துக் கொண்டுவா ?

ரெத்-சென்னைப்பட்டணம் மெசர்ஸ் N. ராதாகிருஷ்ண நாயுடு கம்பெனியாரால் போடப்பட்டும் இந்திய சட்ட கெஜட் தானே.

ரெ-நீரும் அந்த கெஜட்டைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர் போலிருக்கிறது.

ரெத்-நான் மட்டிலுமா என்னுடைய கிராமத்தில் இன்னும் அநேகம்பேர்கள் வாங்கி வாசித்து வருகிறார்கள். கிராமத்தில் உண்டான வியாஜ்ஜியங்களை அந்த சட்ட கெஜட்டைப் பார்த்தே தீர்த்துக் கொள்ளுகிறார்கள். அநேக ஜட்ஜிகளாலும் வக்கீல்களாலும் பெரிய மிராசுதார்களா

னும் போற்றப்படும் கெஜட். இதை வாசிப்பதால் வியாஜ்ஜியச் செலவுமில்லாமல் போகிறது கிராமத்தில் வீண் வழக்குகளும் கிளம்புகிறதில்லை. இதற்குப் பெயர் வியாஜ்ஜிய கோடரி என்று கிராமத்தில் பெயர் வைத்திருக்கிறார்கள். ஐயா! இந்த கெஜெட்டில் கனகம் போன்ற ஒரு பெண்ணுக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று ஐக்கோர்ட்டார் தீர்ப்பு செய்திருந்ததாகக் காண்பித்தால் நான் பதில் பேசாமல் நிமிஷமே கனகத்தின் கையைப்பிடித்துக்கொண்டு வீட்டிற்கு இழுத்துக்கொண்டு போகின்றேன்.

ரெ-இது உறுதியான பேச்சுதானே.

ரெத்-சந்தேகப்பட வேண்டாம்.

ரெ-இதே இருக்கும் இந்த சட்ட கெஜெட் 7-வது வால்யம் இதின்——பக்கத்தில் அடியிற்கண்ட சொல்லப்பட்டிருக்கிறது.

ரெத்-தயவு செய்துயெல்லாம் வாசியுங்கள்.

ரெ-"ஒரு குடும்பத்தின் விதவை மூர்த்தி அண்மார்க்கமாயிருந்து பிறகு தன்னுடைய புத்தியைச் சீர்திருத்திக் கொண்டு நல்ல நடவடிக்கையாயிருந்தால் அவள் அற்ப ஜீவனாம்சத்தையாவது அடைய பாத்தியப்பட்டவள். ஐயா இனி ஏதேனும் பேச்சுண்டா.

ரெத்-இனி என்ன பேச்சிருக்கிறது. கனகம் வீட்டிற்கு போ போவோம்.

---

# *Events of the Month.*

## நிகழ் மாத விசேஷ சம்பவங்கள்.

### Suicide.

### தற் கொலை

சாண்டிக தோலாவிலுள்ள உத்தரபாளாவுக்கு அருகாயிருக்கும் மாக்லாவிலிருந்து வருஞ் செய்தியால் ஒரு ஹிந்து மாது தற்கொலை புரிந்து கொண்டாளென கூறப்பட்டிருக்கின்றது.

### Prisoner and Constable.

### கைதியும் கான்ஸ்டேபிலும்.

தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு கைதிகளை இரண்டு கான்ஸ்டேபில்கள் கர்நூலிலிருந்து பல்லாரி ஜெயிலுக்குக்கொண்டு போய்க் கொண்டிருந்தபோது இரண்டு கைதிகளும் ஆமோராணச்சலத்தில் கான்ஸ்டேபிலை விட்டு விட்டுத்தப்பி ஓடி விட்டார்கள். அதன் பேரில் தனக்கு என்ன நேருமோ வென்று பயந்த கான்ஸ்டேபில்களில் ஒருவன் கோன்டபட்டணத்தில் தானே துப்பாக்கியினால் சுட்டுக்கொண்டு மாண்டு போனான்.

### Egg Eating Nambudri.

### முட்டையைத்தின்ற நம்பூதிரி.

மலையாளத்தில் ஒரு நம்பூதிரி பிராமணன் ஒரு கடைக்குள் சென்றிருந்த போது அவ்விடத்தில் ஒரு மேஜையின் பேரில் முட்டைகள் வாட்டமாக வேகவைக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்றான். அவற்றில் ஒன்றை ருசிபார்க்க வேண்டுமென்று இச்சைப்பட்டான். சுற்றுமுற்றும்பார்த்தான் எவருமில்லை. ஆகவே முட்டையையெடுத்து வாயில் போட்டுக் கொண்டான். முன் பின் முட்டை சாப்பிட்டறியாதவனானபடியால் முட்டையின்பேரிலிருந்த தோலைக்கூட உரிக்காமல் வாயில் போட்டுக்கொண்டு நரநரவென்று கடித்து விழுங்கினான். முட்டையின் பேரிலிருந்த ஓட்டுத்துணுக்கள் தொண்டையக்கிழி இரத்தம்பீறிட கூய்யோ முறையோவென்று கூக்குரல் போட்டான். தக்ஷணமே கூட்டம் கூடிவிட்டது. ஏன் இந்த பிராமணனுக்கு இந்த ஆசையோ? செய்வது சிவபூஜை, இடிப்பது சிவன் கோவில், ஓதுவது வேதாந்தம் கவர்வது பிறர் சொத்து! வெளிக்கு பிராமணன் என்று பெயர் வைத்துக்கொண்டு இந்த அக்கிரமத்தைச் செய்வானேன்?

### Vakil and Sub-Magistrate.

### வக்கீலும் சப் மாஜிஸ்டிரேட்டும்

பெரியகுளம் சப் மாஜிஸ்டிரேட்டாகிய மிஸ்டர் N. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் மிஸ்டர் T. P. நாகசுப்பிரமணிய அய்யர் என்கிற வக்கீலை பயரங்கமான கோர்ட்டில் "நீர் புத்தியில்லாமல் உளருகிறீர் உமக்கு வேலை யில்லாமற்போனால் கோர்ட்டை விட்டு வெளியே போகலாம்" என்று அவமதித்துப் பேசினாரென்று அவ்வூர் வக்கீல் சங்கத்தார் ஒரு கூட்டம் கூடி சப் மாஜிஸ்டிரேட்டின நடவடிக்கையைப்பற்றி கண்டனம்செய்து சென்னை கவர்ன்மெண்டாருக்கு ஒரு மகஜர் அனுப்பியிருப்பதாக அறிகிறோம்.

### Suicide of a Teacher,

### உபாத்தியாயரின் தற்கொலை.

குஞ்சுப்பிள்ளை என்னும் பெயர்கொண்ட ஒரு உபாத்தியாயர் மத்திய திருவாங்கூரில் உள்ள தாக்கழி என்னும் ஊரில் அவருடைய மைத்துனனுடைய வீட்டில் இறந்து போய்விட்டார். அவருடைய அங்கவஸ்திரத்தில ஒரு முடிச்சி காணப்பட்டது அதை அவிழ்த்துப் பார்த்தபோது அதில் ஒரு கடிதமிருந்தது. கடிதத்தில் தான் இறந்து போன தற்குக்காரணம் தம்முடைய பள்ளிக்கூடத்தில் தம்முடைய நாற்காலியில் தம்மால் வைக்கப்பட்டிருக்கும் கடிதத்தைப்பார்த்தால் தெரிந்து கொள்ளக்கூடும் என்று எழுதப்பட்டிருந்தது. அப்படியே அந்த நாற்காலியிலிருந்த கடிதத்தைப்பார்த்தபோது அதில் "நான் இன்று இறப்பேன் குஞ்சுப் பிள்ளை" என்று எழுதப்பட்டிருந்தது. உபாத்தியாயருக்கு ஒருவிதமான பயித்தியமோ என்னமோ தெரியவில்லை.



### Human Hair.

### மானிடர் தலை மயிர்.

விசாகப்பட்டணம் ஜில்லாவிலிருக்கும் சிம்மாசலத்தில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீநரசிம்ம தேவஸ்தானத்தில் 4-டன் தலைமயிர் ஏலம் போடப்பட்டு ரூ. 2,500க்கு ஒரு ஆங்கிலேயக் கம்பெனியாரால் ஏல மெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

### Governor's Tour.

### கவர்னருடைய சுற்றுப்பிரயாணம்

மேன்மைதங்கிய சென்னை கவர்னராகிய லார்ட் பென்ட்லாண்டு நிகழ்மாசக் கடைசியில் வட ஆற்காடுஜில்லா கடப்பை முதலிய ஜில்லாக்களுக்கு சுற்றுப் பிரயாணம் போவார்.

### Forest Report.

### காட்டு இலாகா ரிப்போர்ட்.

கவர்ன்மெண்டாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் காட்டிலாக்கா ரிப்போர்ட்டால் இந்தியாவில் கடுதாசி ஆலை ஒன்று ஸ்தாபிக்க கவர்ன்மெண்டாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று அறிகிறோம்.

### Maharaja of Baroda.

### பரோடா மகாராஜா.

மேன்மைதங்கிய பரோடா மகாராஜா அவர்கள் தம்முடைய பத்தினியுடனும் பரிவாரங்களுடனும் பரோடாவிலிருந்து நிகழுமீம் புறப்பட்டு மலையாளம் வந்துசேர்ந்து திருவாங்கூர் கொச்சி சமஸ்தானாதிபதிகளின் விருந்தினர்களாக விருந்துகுத்தாலம் முதலிய ஸ்தலங்களைப் பார்வையிட்டு பரோடாவிற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

### The Honorable Sir P. S. Sivasawmy Iyer.

### ஆனரபில் சர் சிவஸ்சாமி அய்யர் அவர்கள்.

சென்னை கவர்னர் நிர்வாக சபையில் மெம்பராகவிருந்து சென்னை ராஜதானியின் முனிசிபல் இலாக்காவை மேறபார்வை பார்த்துவரும் ஆனரபில் சர் P. S. சிவசாமி அய்யா அவர்கள் புதுக்கோட்டை முதலிய ஊர்களுக்குச் சென்று முனிசிபாலிடிகளைப் பார்வையிட்டு வருகிறார்கள்.

### Two Tigers.

### இரண்டு புலிகள்.

மலையாளத்தில் காலக்குடி என்னும் ஊரில் இரண்டு புலிகள் ஒரு கிருஸ்தவருடைய வீட்டில் புகுந்து அவ்வீட்டினுள் கட்டியிருந்த இரண்டு சன்றுக் குட்டிகளின்பேரில் பாய்ந்து அடித்துக்கொண்டு போக விருக்கும் தருவாயில் மனிதர்கள் கூடித்தடுக்க அப்புலிகள் மனிதர்கள்பேரில் பாய்ந்து அவர்களில் சிலரைக்காயப்படுத்தி விட்டன.

### பெண்சாதிக்கு பாஷாணமிட்ட புருஷன்.

சென்ற ஜூன்மாதத்தில் ஜியார்ஜடவுன் தியாகராய பிள்ளைத் தெருவில் தன்னுடைய பெண்ஜாதிக்கு காபியில் பாஷாணம் கலந்து அவளைக்கொலை செய்த வெங்கடராமய்யன் பிரசிடெண்சி மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டு செஷனுக்குக்கமிட் செய்யப்பட்டிருக்கிறான்.

### Malaria.

### குளிர் காய்ச்சல்.

கவர்ன்மெண்டாரால் இம்மாதம் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மலேரியா ஜுரரிப்போர்ட்டால் சென்னை நகருக்குள் குளிர் காய்ச்சல் மும்முரமாய் பரவி வருகிறதென்றும் அதன் வேகத்தை ஒடுக்க கவர்ன்மெண்டாரால் தனியாய் ஒரு இலாக்கா ஏற்படுத்தி அநேக உபாயங்களைச் செய்து வருகிறார்கள் என்று அறிகிறோம். மலேரியா ஜுர உற்பத்திக்குக் காரணம் கொசு பரவுவதென்றும் இக்கொசுக்களை அண்டவிடாமல் தண்டையார் பேட்டையில் சில கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் சில கிணறுகள் மூடப்பட்டன வென்றும் சில கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டு நீர் கோழிகளும் மீன்களும் மேயும்படியாக விடப்பட்டிருக்கின்றன என்று அறிகிறோம்.

### Devil Driver.

### பிசாசு ஓட்டுகிறவன்.

இம்மாதத்தில் சில தினங்களுக்கு முந்தி திருவல்லிக்கேணியில் ராமநாத அய்யர் வீட்டில் அவருடைய பெண்சாதிக்குப் பிடித்திருந்ததாக எண்ணப்பட்ட பிசாசை ஓட்டுவதாக ஒப்புக்கொண்டு ஸ்வாமிக்கு பூஜை போடுவதுபோல் போட்டு பேய் பிடித்ததாகச் சொல்லபபடும் அந்த அம்மாளுடைய ரூ. 2›0 நகைகளை பூஜை முகத்தில வைக்கும்படியாகச் செய்து தனியே பூஜை அறைக்குள் ஜெபம் செய்து கொண்டிருப்பது போலிருந்து அந்நகைகளைத் திருடிக் கொண்டுபோன சுப்பிரமணிய அய்யன் என்பவனுக்கு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் இரண்டு வருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

### Factories Report.

### தொழிற்சாலை ரிப்போர்ட்டு.

சென்னை தொழிற்சாலை ரிப்போர்ட் இப்போது வெளிவந்திருக்கிறது. இந்த ரிப்போர்ட் சென்ற சர்க்கார் வருடத்திய ரிப்போர்ட் அதாவது 1914-ம் வருடத்திய ரிப்போர்ட். 1913-ம் வருடத்தைவிட இந்த வருடத்தில் 32 தொழிற்சாலைகள் அதிகமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது சென்னை ராஜதானிக்குள் 1914-ல் 386 தொழிற்சாலைகளிருந்திருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 32 தொழிற்சாலைகளின் விபரம்:—15 அரிசி ஆலைகள், இரண்டு ரயில் வொர்க்கு ஷாப்புகள், 6 எண்ணெய மிஷன்கள், 7 பஞ்சடிக்கும் மிஷன்கள், ஒரு ஷணல் ஆலை, ஒரு தோல் பதனிடும் சாலை, தோல், ஷாப்பு 1 ஓடு செய்யும் சாலை, மூன்று அச்சாபீசுகள், 81,217 மனிதர்களும் 14 ஆயிரம் ஸ்திரீகளும் இரண்டாயிரம் பெண்களும 4 ஆயிரம் பையன்களும் சென்னை ராஜதானியிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்துவருகிறார்கள்.

## Cotton Substitute.
### பஞ்சுக்குப் பதில்.

ஜெர்மனியில் பஞ்சு அகப்படுகிறதில்லை. பீரங்கிக்காகமட்டிலும் மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் பொதிகள் தேவையாக விருக்கின்றது ஆகையால் ஜெர்மானியர் பஞ்சுக்குப்பதிலாக மரக்கூழை உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

## War Expenses
### யுத்தச் செலவு.

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் தினம் ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் வீதம் யுத்தத்திற்காகச் செலவு செய்து வருகின்றார்கள்.

## Gold Coins in Germany.
### ஜேர்மனியில் போன் நாணயம்.

ஜெர்மனியிலும் துருக்கியிலும் பொன் நாணயங்கள் அகப்படுகிறதில்லை. கவர்ன்மெண்டார் கைவசமிருந்த பொன் ஆயிப்போய் விட்டது ஆதலால் ஏராளமாக கரன்சி நோட்டுகளை அச்சடித்து உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

### ஆப்கான் ராஜ குமாரர்கள்.

இப்போது ஆப்கானிஸ்டான் தேசத்திற்கு அரசராயிருக்கும் அமீருக்கு முன்னிருந்த அவருடைய இரண்டு புத்திரர்களும் பிரிடிஷாரால் ஆப்கானிஸ்டான் சிம்மாசனத்தில் ஏற்றிவைக்கப்பட்டிருக்கும் அமீருக்கு விரோதமாக சண்டை செய்ய எத்தனித்தபடியால் அவர்கள் கைதி செய்யப்பட்டுபலவருடகாலமாக பிரிடிஷ் அரசாங்கக் கைதிகளாக பஞ்சாபில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் இம்மாத ஆரம்பத்தில் ஆப்கானிஸ்டானுக்கு யாருமறியாமல் ஓடிப்போக யோஜனை செய்து ஒரு மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்கள். இவர்கள் புறப்பட்டுப்போன சமாச்சாரம் இவர்கள் புறப்பட்டுப்போன ½-மணி நேரத்திற்கெல்லாம் வெளிவர இந்த இராஜ புத்திரர்களிருவரும் வழிமறித்து கைதி செய்யப்பட்டு புறப்பட்டவிடத்திற்கே கொண்டுவரப்பட்டார்கள். இப்போது இவர்கள் உதகமண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## OUR CLIENTS' PAGE.
### எங்களுடைய கக்ஷிக்காரர்கள் பக்கம்.

(1) ஜெயம்கொண்ட சோளபுரம்:—புத்திரிக்கு எழுதிக்கொடுக்கப்படும் தானப் பத்திரத்தில் புத்திரி சர்வசுதந்தரத்துடனும் சர்வபாத்தியதைகளுடனும் சொத்தை அனுபவித்துக் கொள்ளும்படியான பாத்தியதையுடன் சொத்து தானம் செய்யப்பட்டிருக்கிறதென்று விபரமாகச் சொல்லப்பட்டிருக்கவேண்டும். பெரும்பாலும் ஸ்திரிகளுக்கு முந்தியகாலத்தில் சர்வசுதந்தர பாத்தியதையுடன் சொத்துக்கள் தானம் செய்யப்படுகிறதில்லை. ஆயுசுவரையில் அனுபவித்துக்கொள்ளும்படியான பாத்தியதையுடன்தான் சொத்து தானம் செய்யப்பட்டுவந்தது. ஆகையால் உம்முடையபுத்திரிக்குசர்வ சுதந்தரபாத்தியதையுடன்சொத்தை தானம் செய்யவேண்டு மென்ற உமக்கு அபிப்பிராயப்பட்டால் நீர் தானப்பத்திரத்தில் அதை வெளிப்படையாகச் சொல்லிவிடவேண்டும். இருந்தபோதிலும் 1914 ம. வி. நோ. 387ம் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் போடி முத்தய்யா V. காவேரி கோதண்டராமய்யா கேசை உம்முடைய ஊர் லாயரைவிட்டுப்பார்க்கும்படி செய்து அறிந்துகொள்ளலாம்.

(2) மதுரை நன்னுபாகவதர்:— இறந்துபோன உம்முடைய தகப்பனார் செய்துகொண்டுவந்த கூட்டு வியாபாரத்தில் உம்மைச் சேரும்படியாகக் கட்டாயப்படுத்த ஜீவதிசையிலிருக்கும் மற்ற கூட்டாளிகளுக்கு பாத்தியமில்லை என்பதற்கு அனேக தீர்ப்புகள் எடுத்துச் சொல்லக்கூடும். ஆயினும் உமக்குச் சேர விருப்பமிருந்தால் சேர்ந்துகொள்ளலாம். மற்ற கூட்டாளிகள் உம்மைச் சேரும்படி கட்டாயப்படுத்த அதிகாரமற்றவர்களாயிருந்த போதிலும் கூட்டு வியாபாரத்தில் உம்முடைய தகப்பன்பட்ட கடனுக்கு உம்முடையகையிலிருக்கும் அவருடைய சொத்து பாத்தியப்படமாட்டாதென்று சொல்லமுடியாது.

(3) நாராயணதாஸ்! மைனர் சம்பந்தமான வியாஜ்ஜியங்களில் கார்டியன் நியமிக்கும் விஷயத்தில் ஒரு பொதுவானவிதி பின்பற்றப்படுகிறதில்லை. முக்கியமாய் மைனரின் க்ஷேமத்திற்கு யாரை கார்டியனை நியமித்தால் அனுகூலமாயிருக்குமென்கிற ஒரே ஒரு பிரஸ்தானம் கோர்ட்டாரால் கவனிக்கப்படுகிறது.

(4) ரெங்கசாமிக் கவுண்டன்! தங்களுடைய லெட்டர் வந்து சேர்ந்தது. ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைப்பதுபோல எங்களுடைய கம்பெனிக்கு நேரிட்ட அசந்தர்ப்பத்தால் உடனே பதில் எழுதக்கூடாமற்போய்விட்டது. இல்லாவிடில் முன்னமையே நாங்கள் பதில் எழுதியிருக்கக்கூடும். இப்போது இதுவரையில் அந்த வியாஜ்ஜியம் தீர்ந்துபோயிருக்குமானபடியால் இப்போது அபிப்பிராயம் கொடுப்பது உங்களுக்கு யாதொரு பிரயோஜனத்தையும் கொடுக்கமாட்டாதென்று நினைத்து இந்தப்பக்கத்தில் தங்களுடைய கேள்விக்குப் பதில் எழுதவில்லை.

(5) காளாஞ்சிமேடு! உம்முடைய கடிதத்தில் கண்ட விஷயங்களைக்கொண்டு விதவை புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டு சேர்த்துவைத்த சொத்து விதவையின் மிதன சொத்தாகமாட்டாது. அந்த சொத்து புருஷனுடைய எஸ்டேட்டின் ஒரு பாகமாகவே எண்ணப்படும். ஆதலால் உம்முடைய ஊர் லாயருடன் நீர் கலந்து யோஜனை செய்யவேண்டும்.

(6) "ரெங்கத்தம்மாள்":—ஜீவனாம்சனிலுவையைப் பெற்றுக்கொள்ள ஆக்ஷேபனையில்லாமல் வியாஜ்ஜியங்கொண்டு வரலாம். உன்னுடைய புருஷனுடைய தமையன் நீ துன்மார்க்க நடவடிக்கை நடத்திக்கொண்டிருந்தாய் என்றும் ஆகலால் உனக்கு ஜீவனாம்சம் கொடுக்கக்கூடாதென்று எதிர்வாதி சொன்னபோதிலும் நீ இப்போது துன்மார்க்க நடவடிக்கையைவிட்டு பரிசுத்தமாயிருப்பதால் எங்கிரிமெண்டு விதப்படி உனக்கு ஜீவனாம்சம் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யாமற் போனபோதிலும் உபாய ஜீவனாம்சத்திற்காவது டிக்கிரி கொடுப்பார்கள். ஆகையால் நீ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவேண்டாம் வியாஜ்ஜியம் கொடுக்கலாம். ஈஸ்வர சமயத்தில் ஏதேனும் நம்முடைய உதவி தேவையாயிருந்து எழுதினாலும் நாம் ஐக்கோர்ட்டு தீர்ப்புகளை குறிப்பிட்டு எழுதி அனுப்புகிறோம்.

(6) ரெங்கமன்னார் நாயுடு! சாதாரணமாக ஒருவனுக்குக் கடன் கொடுக்கும்படி சிபார்சு செய்வது கடன் வாங்கினவன் கடனைத் திருப்பிச் செலுத்தாவிடில் சிபார்சு செய்தவனிடமிருந்து அந்தக் கடனை வசூல்செய்ய முடியாதென்று ஒரு ஐக்கோர்ட்டு தீர்ப்பு ஜாரி செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் சிபார்சு செய்பவனை இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்ப்பதில் பிரயோஜனமில்லை.

ந. ராதாகிருஷ்ண நாயுடு கம்பெனியார்.

# இந்திய சட்ட கெஜெட்.
### உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

வால்யம் 8.] சென்னப்பட்டணம் 1915ளூ ஆகஷ்டுமீ [நெ. 4

## அபிப்பிராயங்கள்.

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள்:—**

" தமிழ் ஜில்லாக்களில் ஆங்கிலம் அறியாத ஜனங்களுக்கு தங்களுடைய ஜர்னல் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். ஆங்கிலய பிரசுரங்கள் மூலியமாக சட்டஞானத்தை அறிந்துகொள்ளக்கூடாத ஜனங்களுக்கு தாங்கள் அதை அறிவிக்க செய்துகொண்டுவரும் பெரும் முயற்சியை நான் உணராமல் இல்லை. "

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள்:—**

" சட்ட ஞானத்தைப் பரவச் செய்வதற்கு இந்தியசட்ட கெஜட் செய்துவரும் பிரயத்தினங்கள் சிலாகிக்கக் கூடியவை. அது அடயவேண்டிய ஜெயத்தைப் பெறுமென்று நம்புகிறேன். "

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார் அவர்கள்:—**

" வியாசங்கள் மிகவும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. சஞ்சிகைகள் சரியானவும் உபயோக முள்ளவுமான சமாசாரங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றன. சட்ட சம்பந்தமான விஷயங்களை பொதுஜனங்கள் அறிந்துகொள்ளுவதற்கு சட்ட கெஜட் ஒரு தகுந்த மார்க்கமாயிருக்கும் என்று நான் உறுதியாய் நினைக்கிறேன். "

**திவான் பகதூர் R. ரெகுநாத ராயர் அவர்கள், கும்பகோணம்:—**

" நீர் பிரசுரஞ் செய்துகொண்டுவரும் இந்தியசட்ட கெஜட் மிகவும் பிரயோஜனமுள்ளது. அது எப்படி ஆதரிக்கப் படவேண்டுமோ அப்படி ஆதரிக்கப் படுமென்று நம்புகின்றேன். "

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள்:—**

" கெஜெட்டில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் சரியாகவும் சுருக்கமாகவு மிருக்கின்றன. தங்களுக்கு அதிக சந்தாதாரர்கள் சேருவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. "

( இன்னும் பல அபிப்பிராயங்க ளிருக்கின்றன. )

## அடக்கம்.

### பாகம் I.


| | | பாகம். |
|---|---|---|
| 1. | பத்திரப்பதிவு இலாக்கா ... ... ... ... ... | 57 |
| 2. | இந்து லா:—பத்து சமஸ்காரங்கள் ... ... ... ... | 62 |
| 3. | பல ஐக்கோர்ட்டு தீர்ப்புகள்... ... ... ... ... | 64 |
| 4. | புருஷர்களிடமிருந்து வார்சு கிரமத்தில் அடையும் சொத்துக்களில் ஹிந்து விதவைகளுக்கிருக்கும் பாத்தியதை ... ... ... ... ... | 66 |
| 5. | நிகழ்மாசத் தீர்ப்புகள் ... ... ... ... ... | 70 |
| 6. | நானாவிதமான வியாஜ்ஜியங்கள்:—(1. பெரியபரச்சேரி கொலை.) (2. பெண்ஜாதி கொலை ) (3. துராக்கிரமாய் கூடுதல்.)... ... ... ... ... | 72 |
| 7. | முக்கியமான தீர்ப்புகள் ... ... ... ... ... | 75 |
| 8. | எங்களுடைய கக்ஷிக்காரர்களுடைய பக்கம் ... ... ... ... | 77 |
| 9. | ஐரோப்பிய மகாபெரிய யுத்தம் ... ... ... ... | 78 |
| 10. | ஒரு சம்பாஷணை .. ... ... ... ... ... | 79 |

### பாகம் II.

| | | |
|---|---|---|
| 1. | இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள் ... ... ... | 17 |


## சந்தா விபரம்.

வருஷ சந்தா, 5 6 0 (வி. பி, தபால் செலவு 4-அணா பிரத்தியேகம் )

சிங்கப்பூர் பினாங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 8 0

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

C. பரமசிவமுதலியாரால் இந்தியசட்ட கெஜட் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,

சென்னை - சிந்தாத்திரிப்பேட்டை- கிருஷ்ண அண்டு பிரதர்ஸ் அவர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றன,

# விஞ்ஞாபனம்.

சென்னை ராஜதானியில் சட்ட ஞானத்தைப் போதிக்கக்கூடிய தமிழ் பத்திரிகை இல்லாமலிருந்த குறைவை அகற்றும்பொருட்டு நான் முன்வந்து பிரஸ்தாப இந்தியசட்ட கெஜெட்டை ஸ்தாபித்து கடந்த 10-வருட காலமாக நடத்திக்கொண்டு வருகிறேன் என்பது உலகமறிந்த விஷயம். நான் தற்காலம் அனுஷ்டித்துக்கொண்டுவரும் வைதீக அனுஷ்டானங்களாலும் பின்பற்றிக் கொண்டுவரும் வைதீகக் கொள்கைகளாலும் எப்போதும்போல இந்தியசட்டகெஜெட்டில் சுறுசுறுப்பான கவனம் செலுத்திக்கொண்டுவர எனக்குசௌகரியப்படாமலிருக்கிறது. ஆயினும் அதனிடம் நான்வைத்துவந்த அபிமானம் எள்ளளவேனும் குறையவில்லை. மேலும் இந்தியசட்டகெஜெட் தோன்றினபிறகு ஜனங்கள் சட்டஞானத்தை அடைய விருப்பம்கொண்டு வர வர அதில் அக்கரைபாராட்டி அதை வாங்கிவாசிக்கத்தலைபட்டிருக்கிறார்கள். ஆதலால் என்னைவிட அதிக விமரிசையாக இந்தியசட்டகெஜெட்டை நடத்திவரக்கூடிய யோக்கிதாம்சங்கள் பொருந்தப்பெற்ற என்னுடைய நீண்டகால சிநேகர்களாகிய சென்னைப்பட்டணம் மெசர்ஸ் கிருஷ்ண அண்டு பிரதர்ஸ் என்னும் கம்பெனியாரிடம் இந்தியசட்ட கெஜெட்டையும் அதன் அச்சாபீசையும் ஒப்புவித்து அவைகளுக்கு அவர்கள் சுதந்தரதாரிகளாகவிருக்கும்படியாகவும் செய்துவைத்து இந்தியசட்டகெஜெட் எந்நாளும் நடைபெற்று வரும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறேன். மெஸர்ஸ் கிருஷ்ண அண்டு பிரதர்ஸ் இந்தியசட்ட கெஜெட்டை உலகினர் ஒப்புக்கொள்ளும்படியாக நடத்துவதற்கு தேவையான பொருளாதாரமும் மற்ற உரிமைகளும் பொருந்தப்பெற்றவர்கள். ஆதலால் என்னுடைய காலத்தில் இந்தியசட்ட கெஜெட்டை ஆதரித்துக்கொண்டுவந்த சந்தாதாரர்களுக்கும் போஷகர்களுக்கும் நிரூப நேயாசளுக்கும் இப்போது கடைசிமுறையாக நான் வந்தனமளித்து விடைபெற்றுக் கொள்ளுவதுடன் அவர்கள் அந்த ஆதரிப்பைத் தொடர்ந்தேர்த்தியாக தந்தருள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்பதற்கிணங்க மெசர்ஸ் கிருஷ்ண அண்டு பிரதர்ஸ்இந்தியசட்ட கெஜட்டை கீர்த்தியுடன் நடத்திக்கொண்டுவரச் செய்யும் முயற்சிகளுக்கு அகிலாண்டகோடி பிரமாண்டநாயகனுகிய எம்பெருமான் பக்கத்துணையாகவிருந்து அவைகள் சித்தி பெறும்படியாகச் செய்துவைக்கவேண்டுமென்று திருவருளைச் சிந்திக்கின்றேன்.

N. ராதாகிருஷ்ண நாயுடு.
லேட் புரேப்ரைட்டர்,
இந்திய சட்டகெஜட்.

---

உலகத்தை அறிமுகப்படுத்திக் கொள்ளவரும் ஒருவன் அவனுடைய பிரக்கியாதியை அவனே எடுத்து பயிரங்கப்படுத்திக்கொள்ளுவதைவிட அனுபோகத்தால் அவனுடைய உரிமைகளை ஜனங்களுடைய இருதயத்தில் ஸ்தாபிப்பதே மேலானகாரியம் என்னும் கொள்கை உடையவர்கள் நாங்கள்! ஆதலால் இந்திய சட்டசெஜட்டை நடத்துவதற்கு எங்களுக்குள்ள உரிமைகளை பொது ஜனங்களே அனுபோகத்தால் எளிதில் அறிந்துகொள்ளுவார்கள் என்கிற முழுநம்பிக்கையுடன் அவைகளைப்பற்றி இவ்விடத்தில் எடுத்தெழுத மனமிசையாமல் விட்டுவிட்டனம். ஆனால் இரண்டொரு வார்த்தைகள் மட்டிலும் எடுத்துச் சொல்லுவது தகுதியாயிருக்குமென்று எண்ணுகின்றோம்.

இந்திய சட்டகெஜட்-ஐக்கோர்ட்டு ஜட்ஜியாகவிருந்த சர். S. சுப்பிரமணிய அய்யர் என்ன! ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் என்ன! ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமிசாஸ்திரியார் என்ன! ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் என்ன! சட்டஞான சமுத்திரத்தின் கரையைக்கண்டு பிடித்திருக்கும் இன்னும் பல மகாமேதாவிகளால் நன்கு மதிக்கப்பட்ட கேஜெட். இப்போப்பட்ட பிரசித்திபெற்ற கெஜெட்டின் மூலியமாக உலக நன்மைக்காக நாம் உழைத்துவருவதற்கு நமக்கு வாய்ந்திருக்கும் இந்தசந்தர்ப்பத்தை நாம் ஒரு பெரும்பேராக எண்ணி அகமகிழ்கின்றோம். இந்தசந்தர்ப்பத்தை ஒருசெல்வமாகமதித்திருக்கிறோம் என்பதால் எவ்வளவு கவலையுடனும் எவ்வளவு விமரிசையுடனும் உழைத்து இந்தியசட்டகெஜட்டை விருத்திபடுத்திக் கொண்டுவர நாம் எண்ணிக்கொண்டிருக்கக் கூடுமென்று ஜனங்களே யூகித்து அறிந்துகொள்ளக்கூடும். ஆகவே சுறுக்கிச் சொல்லுவோமாயின் சட்டஞானத்தை சம்பூரணமாய் அடைந்திருக்கும் நிபுணர்களாகிய அனுபோகஸ்தர்களைக்கொண்டு சட்டகெஜட்டில் பிரசுரஞ் செய்யப்படும் விஷயங்கள் தயார்செய்யப்பட்டு வரும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் கடைசிவாரம் கெஜெட் நம் சந்தாதாரர்கள் கையிலிருக்கும்படியாக மிகவும் கண்டிப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எந்தவகையிலும் சந்தாதாரர்களுடைய மனோபீஷ்டத்திற்கு ஏற்றவாறு சட்டகெஜட்டை நடத்தி அவர்களுடைய நன்கு மதிப்புக்கும் ஆதரிபபிற்கும் நாங்கள் பாத்திரமானவர்கள் என்று அவர்களுடைய இருதயங்களில் பதிவு பெறும்படியாக நடந்துகொள்ளுவோம் என உறுதி கூறுகின்றோம்.

(2) டீ

உம்முடைய த.
வியாபாரத்தில் ட கெஜட் ஆபீஸ்,
பேட்டை, மதராஸ்.

கிருஷ்ண அண்டு பிரதர்ஸ்.
சொந்தக்காரர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- NOV 1915
MADRAS

DIEU ET MON DROIT

# The Indian Law Gazette.

PART .1

# இந்திய சட்ட கெஜட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.
பாகம் 1.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915௵ ஆகஸ்டு௴ [நெ. 4.

## Registration Department
## பத்திரப்பதிவு இலாகா.

சென்னை ராஜதானியினுடைய பத்திரப் பதிவு இலாக்காவின் 1914—ம் வருடத்திய ரிப்போர்ட்டு வெளி வந்திருக்கிறது. இந்த ரிப்போர்ட்டை நாம் பார்வையிட்டோம். ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம், ரயில், டிராம் வண்டி முதலியவைகளின் வருமானங்களைப் பாதித்திருப்பது போல பத்திரப் பதிவு இலாக்காவையும் பாதித்திருக்கிறது. 1914-15ம் வருடத்தில் செஞ்சம் ஜில்லாவில் (1) புகுடா கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாவில் (2) மூலனூர் தென்னாற்காடு ஜில்லாவில் (3) அன்னியூர் (4) சங்கராபுரம் மதுரை ஜில்லாவில் (5) பத்லக் குண்டு (6) சித்துப்பட்டி (7) உபாமம் (8) இளையான் குடி (9) போகலூர் (10) பண்டால் குடி (11) காரைக்குடி (12) சிங்கப்புனேரி செங்கற்பட்டு ஜில்லாவில் (13) அச்சரப்பாககம்—ஆகிய இந்த ஸ்தலங்கள் சர்க்கில் அல்லது வட்டங்களாகச் செய்யப்பட்டு அந்த வட்டங்களில் சில புதிய சப்ரெஜிஸ்டர் ஆபீஸ்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மதுரை ஜில்லாவில் நூதனமாக சில வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுப்போய் விட்டபடியால் ஏற்கனவேயிருந்த காமுடி, ராமநாதபுரம், திருப்பத்தூர், பரமக்குடி ஆகிய இந்த ஊர்களிலிருந்த ஜாயின்ட்-சப்ரெஜிஸ்டிரார் (Joint Subregistrar) உத்தியோகங்கள்எடுபட்டுப் போய்விட்டன. தென் ஆற்காடு ஜில்லா கள்ள்க்குரிச்சியிலிருந்த இரண்டு ஆபீஸ்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டன. தஞ்சாவூர் ஜில்லா திருக்காட்டுப்பள்ளியிலிருந்த இரண்டு சப்ரிஜிஸ்ட்டிரார் ஆபீஸ்களில் ஒன்று பூதலூரில் ஸ்தாபிக்கப்பட்டது. காக்கிநாடா, குண்ட்டூர் ரிஜிஸ்ட்டிரார் ஆபீஸ்களின் அதிகார எல்லை விஸ்தரிக்கப்பட்டு ஏற்கனவேயிருந்த சப்ரிஜிஸ்டிரார்கள் போதாமல் உதவிக்காக ஒரு புதிய சப்ரெஜிஸ்டிராரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். சென்னைப் பட்டணத்திலிருக்கும் ரிஜிஸ்டிரார் ஆபீசிலும் ஒரு புதிய சப்ரிஜிஸ்டிரார் நியமிக்கப்பட்டார். திருநல்வேலி பாளையங்கோட்டை சர்க்கில் ஒன்று சேர்க்கப் பட்டன. ஆகவே 1913-ம் வருடத்திலிருந்த மொத்த ரிஜிஸ்டர் ஆபீஸ்களின் எண்ணிக்கை 500 ஆக விருந்தது 1914ல் 513 ஆக ஏறினது. இவைகளில் 7 ஆபீஸ்கள் ரெவினியூ இலாக்காவின் பார்வையிலிருக்கின்றன. 1913ல் சப்ரிஜிஸ்டிரார்கள் 501 பேர்கள் இருந்தார்கள். இப்போது 513 பேர்களிருக்கிறார்கள். 1912, 1913 ம் வருடங்களில் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்குப் பத்திரங்கள் அதிகமாக வந்து கொண்டிருந்தது போலவே 1914 ஆரம்பத்திலும் வந்து கொண்டிருந்தன. ஆனால் ஐரோப்பா யுத்தம் ஆரம்பித்த பின்பு வியாபாரம் குறைந்து போய் விட்டபடியாலும் அதன் நிமித்தம் உண்டான பணமுடையை முன்னிட்டும் ரெஜிஸ்ட்

டர் செயயப்படுவதற்கு அதிகப்படியான பத்திரங்கள் வரவில்லை. 1913 ல் 1,368,653 பத்திரங்கள் ரெஜிஸ்ட்டர் செய்யப்படுவதற்கு வந்திருக்கிற போது 1914 ல் 1,322,810 பத்திரங்கள் தான் வந்திருக்கின்றன. 1913ம்வருடம்முடிவில்தென்னாற்காடுஜில்லாவில் வெள்ளம்உற்பத்தியானபடியாலும்தஞ்சாவூர் ஜில்லாவில் தொத்து வியாதி பரவியிருந்தபடியாலும் இந்த இரண்டு ஜில்லாக்களில் யுத்தம் ஆரம்பமாவதற்கு முந்தியே ரெஜிஸ்டர் சேய்யப்படுவதற்கு வரும் பத்திரங்களின் எண்ணிக்கை குறைந்து போய்விட்டது. கட்டாய ரிஜிஸ்டர் பத்திரங்கள் 1913ம் வருடத்தினுடைய எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 100க்கு 3½விதம் குறைந்து போய் விட்டது. 1913ல் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பத்திரங்களின் மொத்த மதிப்பு 41 கோடி ரூபாய் என்று கணக்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரஸ்தாப வருடத்தில் அந்த எண்ணிக்கை ஒரு கோடி குறைந்துபோய் விட்டது. பத்திரத்தின் சராசரி மதிப்பு 1913ல் 304 ஆக விருந்தது; 1914ல் 309க்குக் ஏறிப்போய் விட்டது. சராசரி ரெஜிஸ்டிரேஷன் கட்டணம் ரூ 1-6-11 லிருந்து ரூ 1-7-2 க்கு ஏறிப் போய் விட்டது. தபால் மூலியமாக அனுப்பப்பட்ட தஸ்தாவேஜிகளுடைய எண்ணிகை 90167 லிருந்து 87,072 க்கு குறைந்து பொய் விட்டது. ரெஜிஸ்டர் செய்யப்பட முடியா தென்று வாப்பீஸ் செய்யப்பட்ட தஸ்தாவேஜிகளுடைய எண்ணிக்கை 1986லிருந்து 1678க்குக் குறைந்து போய் விட்டது பத்திரங்கள். ரெஜிஸ்டர் செய்யப்பட முடியா தென்று சொல்லிவாப்பீஸ் செய்யப்பட்டதற்கு விரோதமாக செய்து கொள்ளப்பட்ட அப்பீல்கள் 669லிருந்து 642க்குக் குறைந்து போய் விட்டன. சர்ச்சி செர்ட்டிபிக்கேட்டுகள் பெற்றுக் கொள்ளுவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட மனுக்கள 18213லிருந்து 20108க்கு ஏறிப்போயிருக்கிறது. கொடுக்கப்பட்ட பத்திரங்களுடைய நகல்களுடைய எண்ணிக்கை 100374 லிருந்து 101238ககுக் ஏறியிருக்கிறது. ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஐக்கிய சர்ச்சிப் பத்திரங்களின் எண்ணிக்கை 8062லிருந்து 10514க்கு ஏறியிருக்கிறது. பத்திரப்பதிவு இலாக்காவால் கொண்டு வரப்பட்ட கிரிமினல் கேஸ்கள் 1914 ஆரம்பத்தில் 5 இருந்தன. 1914ம் வருடத்தில் 14 கேஸ்கள் கொண்டு வரப்பட்டன. ஆக மொதத கேஸ்கள் 19. இவற்றுள் 13 கேஸ்களில் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டது. 3 கேஸ்களில் குற்ற வாளிகள் விடுவிக்கப் பட்டார்கள். 3 வருட இறுதியில் நிலுவையி லிருந்தன. ஜில்லா ரிஜிஸ்டிரார்களால் எல்லா சப்ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் சோதனை செயயப்பட்டன. பெல்லாரி ஜில்லா ரெஜிஸ்ட்டர் ஆபீசைத்தவிர எல்லா ஜில்லா ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களும் பத்திரப்பதிவு இலாக்கா இன்ஸ்பெக்ட்டர் ஜெனரல் அவர்களால் சோதனை செய்யப்பட்டன. மேலும் 41 சப்ரிஜிஸ்டர் ஆபீஸ்களும் சோதனை செய்யப்பட்டன. 3 ரெஜிஸ்டிரார்களும், 9 சப்ரெஜிஸ்டிரார்களும் பென்ஷன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 5 ரெஜிஸ்டிரார்களும் 7 சப்ரிஜிஸ்டிரார்களும்இறநது போய் விட்டார்கள். ஷை இலாக்காவின் வருமானம் 1913ல் 23 லக்ஷமாக விருந்தது 22 லக்ஷரூபாய்க்குக் குறைந்து போய் விட்டது. செலவு 13.97 லக்ஷ ரூபாயாயிருந்தது. 1914ல் 13.63 லக்ஷமாகக் குறைந்து போய்விட்டது. இந்த வருடத்தில் புதியகட்டடங்கள் கட்டினதிலும் புதிய ஆபீஸ்கள் ஏற்படுத்தப் பட்டதிலும் செலவு அதிகரிப்பதற்குக்காரணமாகச் சொல்லப்படுகிறது.

---

## INTERESTED JUDGES.
## பாத்தியதைப் பெற்ற நியாயாதிபதிகள்.

---

ஒரு ஜட்ஜிக்கு ஒரு கேசில் பாத்தியதை யிருக்குமானால், அவர் அந்த கேசை விசாரித்துத் தீர்மானிப்பதற்குத் தகுதியற்றவ ராகின்றார். அவரை அவவாறு தகுதியற்றவராகச் செய்யும் பாத்தியதை மூனறு வகைப்படும். (1) ஒரு கேசில் அவரே வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராக இருப்பது, (2) அவருக்கு அந்த கேசின் தீரமானததில் ஏதாவது திரவிய சம்பந்தமான பாத்தியதை யிருப்பது, (3) பக்ஷபாதமாக முடியுமென்று பயப்படவும், அல்லது சந்தேகப்படவும் இடமாக யிருப்பது. வேறே எந்தவித பாத்தியதையானாலும் இருப்பது.

ஜட்ஜே வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராக யிருப்பது.

ஒரு ஜட்ஜியானவர் வாதி பிரதிவாதிகளில்ஒருவராக இருக்கக்கூடாது; ஒருவரே ஜட்ஜியாகவும்பிராது செப்பவராகவும் இருககக் கூடாது. ஒரு ஜட்ஜி வாதி அல்லது பிரதிவாதியாகவாவது, அல்லது பல வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராகவாவது, அல்லது பிராது செய்பவர் அல்லது குற்றவாளியாகவாவது ரிகார்டில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அவர் அந்த கேசை விசாரிப்பதற்குத் தகுதிபற்றவராகிறார். இதை அறிவதற்கு வேறே ஆதாரம் ஒன்றும் வேண்டியதில்லை. (a) ஆனால் ஆங்கிலேய தேசத்தின் ஒரு ஜட்ஜி வாதியாகவாவது அல்லது பிராது செய்பவராயாவது ரிகார்டில் பதிவு செய்யப் படாமலிருந்த போதிலும், உண்மையில் அவ்வாறு ஆனதாக எண்ணப்பட்டு, கேசை விசாரிப்பதற்குச் தகுதியற்றவரென்று நீக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் எததனையோ உண்டு. (b) ஒரு ஜட்ஜி நகர விஷயங்களை விசாரிக்கும் சங்கத்தில் ஒருவராக இருந்து அந்த சங்கமானது ஒருவன்பேரில் பிரியாது கொணர்ந்து, இவரும் அந்த பிராதுசெய்பவர்களில் ஒருவராக இருந்தால் இவர் அந்த கேசை விசாரித்துத் தீர்மானிக்கத் தகுதியற்றவ ராகின்றார். ஏனென்றால், இவரை பிராது செய்பவரென்று பிரத்தியேகமாக ரிகார்டில் பதிவு செய்யப்படாம லிருந்தாலும். உண்மையிலேயே இவரும் வாதி தரப்பில் சேர்ந்தவராகின்றார். (c) ஒருவர் ஒரு நகர மந்திராலோசனை சபையில் சேர்ந்தவராக இருந்து அந்த சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கலகக் குற்றத்திற்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்தால், அவர் ஜட்ஜியாகஇருந்துஅந்த கேசை விசாரிக்கக்கூடாது. ஏனென்றால், உண்மையில் அவரும் பிராதுகொண்டு வருபவர்களாகிய வாதிகளில் ஒருவராகின்றார். (d) இருதாரத்தாரில் ஒருவராக எண்ணி ரிகார்டில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அல்லது உண்மையிலேயே அவ்வாறாகவே யிருந்தாலும், ஒருவர் ஜட்ஜாகயிருந்து ஒரு கேசை விசாரிக்க தகுதியற்றவராகின்றாரென்பது விதி. ஒரு ஜட்ஜி குற்றஞ் சாட்டி சார்ஜி செய்கிறவரென்று பாவிக்கப்பட்டாலும், நிஜமாகவே அவ்வாறாக யிருந்தாலும், அவர் நியாய விசாரணை செய்ய சகதியறறவராகிறார், ஏதாவது ஒரு குறித்த கேசில் இருக்கும் சந்தர்ப்பங்கள் எப்படி ஊகிக்கப்படுகின்றனவென்று யோசிக்கவேண்டும். ஒரு கேசில் ஒரு ஜட்ஜிக்கு யாதானு மொரு பாத்தியதை இருந்து, அப்படி இருந்தபோதிலும் அவர் எநத விதத்தாலும் மனது கலக்கப்பட்டு பக்ஷபாதகமற்றவரென்று தெரியும் விஷயத்தில் அவர் அந்த கேசை விசாரிக்க ஆக்ஷேபனை ஒன்றுங் கிடையது. உண்மையிலே அவர் பக்ஷபாதகமாக நடக்க மனது கலக்கப்பட்டாரா அல்லது இல்லையா என்பதல்ல கோர்ட்டார் கேட்கவேண்டிய கேள்வி; இதைக் குறித்து அவர்கள் விசாரிக்கவே கூடாது (e) கிரிமினல் புரோசீஜர் சட்டம் 556-வது பிரிவின்படிக்கு ஒரு மாஜிஸ்டிரேட்டு ஒருவனை விசாரணைக்கு கொண்டுவரவேண்டிய முயற்சிகளைச் செய்திருந்து, ரிகார்டில் வாதியாக பதிவு செய்யப்படாமலிருந்த போதிலும், அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்க வேண்டிய சக்தியற்றவராகின்றார் என்று இந்தியாவிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 556 பிரிவில் சொல்லியிருப்பதாவது:—ஒரு ஜட்ஜாவது ஒரு மாஜிஸ்டிரேட்டாவது தான் பார்ட்டியாக இருக்கும் ஒரு கேசை விசாரிக்கவும் கூடாது. அல்லது அந்த கேசை விசாரணைக்குக் கொண்டு வரவும் கூடாது என்பது. (f) ரெயில் வண்டியில் ஒரு மாஜிஸ்டிரேட்டுபிரயாணம் செய்கையில் அவருடன் கூட பிரயாணம் செய்துக் கொண்டிருந்த சிலர், சுருட்டு பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவர்களை மாஜிஸ்டிரேட்டு சுருட்டுபிடிக்க வேண்டாமென்று சொன்னார். அதை அவர்கள் கேளாமல் அலக்ஷியமாக பிடிவாதத்துடன் விடாமல் சுருட்டுப் பிடித்துக் கொண்டே வந்தார்கள். அதன் பேரில் மாஜிஸ்டிரேட்டு அவர்களைப் பிடித்து விசாரித்து தண்டித்தார். அவர் அந்த கேசில் வாதியாக இருந்து அவர்களை தண்டித்தது, சட்டத்தின் படிக்கும், சன்மார்க்கத்தின் படிக்கும் பிசகென்றும் அவர் விசாரிக்க தகுதியற்றவ ரென்றும் தீர்மானிக்கப்பட்டது. (g) ஒருவன் தானாக வண்டியை ஓட்டிக் கொண்டு போய் பலர் போவதற்குக் குறுக்காய் வந்து தடை செய்தான். அவ்வாறு தடுக்கப்பட்டவர்களில் மாஜிஸ்டிரேட்டும் ஒருவர். அவர் அந்த வண்டியின் சொந்தக்காரனைப் பிடித்து விசாரித்து கண்டித்தார். பிறகு அந்த மாஜிஸ்டிரேட்டு தடுக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்து தடுக்கப்பட்டமையால் அவருக்கு அந்த கேசில் பாத்யதை இருந்ததென்றும், அதனால் அவருக்கு கேசை விசாரிக்க அதிகாரம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

### ஒரு ஜட்ஜிக்கு திரவிய சம்பந்தமாக உண்டாகும் பாத்தியதை.

(h) ஒரு ஜட்ஜிக்கு ஒரு கேசில் திரவிய விஷயமாக பாத்தியதை இருநது, அந்தப் பாத்தியதை அதிக அற்பமா யிருந்தபோதிலும், அவர் அந்த கேசை விசாரிக்க தகுதியற்றவராகின்றார். (i) ஒருமாஜிஸ்டிரேட்டு தனக்குப் திரவிய சம்பந்தமுள்ள கேஸ் ஒன்றை விசாரணை செய்தாவது, அல்லது அந்த கேசில் தீர்மானம் சொல்லி யிருந்தாலாவது, கோர்ட்டார் அவருக்கும் அந்த கேசுக்கும் உள்ள பாத்தியதை மிகவும் சிறிதா யிருந்த போதிலும், அவர் பக்ஷபாதகமாக இருந்தாரா இல்லையாவென்று தீர விசாரித்து அறியாமல் உடனே அவர் விசாரிப்பதற்கு தகுதியற்றவரென்று சொல்லி விடுவார்கள். ஏனென்றால் அவர் அவ்வாறு செய்தது பொது நன்மைக்கு விரோதமானது. (j) உண்மையாகவே திரவிய சம்பந்தமுள்ளவராக இருந்தால் ஒருவர் ஒரு கேசை விசாரிக்கக்கூடாது. அவருக்குச் சேரவேண்டிய திரவியம் ஒரு காசைவிட குறைந்திருந்தாலும் அவர் கேசை விசாரிப்பதற்கு வேண்டிய சக்தியற்றவராகிறார். ஆனாலும் பண சம்பந்தம் அதிக அற்பமா யிருந்து, அதனால் கேஸ் பக்ஷபாதகமாக முடியாது என்று தெரிந்திருந்தால், மாஜிஸ்டிரேட்டுகள் கேசுகளை விசாரிக்கலாம் என்றும் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த திரவிய பாத்யதையால் வரும் இலாபம் உடனே கிடைப்பதா யிருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. அது வெகுநாள் கழிந்துக் கிடைப்பதாயினும், அது ஒரு ஏற்பாட்டின்மேல் வருவதாயினும் போதும். அதனாலும் ஒரு மாஜிஸ்டிரேட்டு தகுதியற்றவ ராகின்றார். (k) பிராதைச் சேர்ந்த ஒரு பக்ஷத்தாருக்கு கோர்ட்டு சிலவுகளைக் கொடுப்பதாக வாக்குக் கொடுத் திருந்தாலும், (l) அவரே கோர்ட்டு சிலவுகளைக் கொடுக்க வேண்டி நேரிட்டாலும், (m) ஒரு பக்ஷத்தாருக்கு கோர்ட்டார் சிலவு சேரவேண்டியது என்று தீர்மா

னிக்காமையால் அவரே கொஞ்சம் கொடுக்கும்படி நேர்ந்தாலும், (n) கேசின் முடிவு இப்படித்தான் ஆகுமென்ற அவர் பந்தயம் கட்டியிருந்தாலும்,— இப்படிக்கொத்த விஷயங்களிலெல்லாம் ஜட்ஜி விசாரித்து தீர்மானிக்கக் கூடாது. (o) ஆனால் ஒரு பக்ஷத்தாருக்கு யாதொரு பாத்தியதையுமில்லாமல் தானே பணம் கொடுத்தாலும், அல்லது அவர்களைச் சேர்ந்தவராகயிருந்து, பணம் கொடுக்கும்படி தொந்தரவு செய்யப்பட்டதின் பேரில் பணம் கொடுத்தாலும், அந்த கேஸ் அதனால் கெடுதி யடையாதிருக்கும் பக்ஷத்தில் அந்த ஜட்ஜி அதை விசாரிக்கலாம். p) இவ்விதமாய் அதிக உதாரணங்கள் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு மாஜிஸ்டிரேட்டு பங்குக்காரராயாவது, அல்லது வரி கட்டுகிறவராகவாவது இருந்தால், அவர் விசாரிக்கலாமா ?

### ஜட்ஜி பங்குக்காரரா யிருப்பது.

ஒரு கம்பெனியில் ஒரு ஜட்ஜி பங்குக்காரராகயிருந்தால், அந்த கம்பெனியார் வாதி அல்லது பிரதிவாதியாக கொண்டு வரும் எந்த கேசையும், சிவிலானாலும், கிரிமினலானாலும், அந்த ஜட்ஜிவிசாரிக்கத் தகுதியற்றவராகின்றார். ஒரு ஜட்ஜி பங்குக்காரராக யிருந்து எவ்வளவுதூரப் பாத்தியப்பட்டிருக்கிறார் என்பதும், அவர் அப்படி பாத்தியதைப் பெற்றிருப்பதால் அவர்விசாரணை விஷயம்எவ்வளவு தூரம் மாற்றப்பட்டதென்பதும் ஆகிய இவைகளைப்பற்றி சில கோர்ட்டார் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் என்னவென்றால் ஏதாவது ஒரு ஜட்ஜியாவது அல்லது ஒரு நியாய ஸ்தலத்தைச் சேர்ந்த பல ஜட்ஜிகளாவது ஒரு கம்பெனியில் பங்குக்காரராக இருந்தார்களா என்பதும் ஆகும். பணம் வைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் பாங்கி முதலியவற்றில் கட்டிவைக்கும் வழக்கம் பரவியிருப்பதும், ஏறக்குறைய எல்லா கேசுகளிலும் பணத்தின் பாத்தியதையால், வரும் லாபம் மிகவும் சிறிதாக இருப்பதும், ஆகிய இந்த காலத்தில், மேற்குறித்த விதியானது காரணமில்லாமலே பிறப்பிக்கப் பட்டதாகத் தோன்றும்; ஆனாலும் இது இப்படிதான் இருக்கவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டஒருசாதாரண சட்டமாகும். ஏனென்றால், "திரவியபாத்தியதையால் வரும் லாபம் ஒரு காசைவிட குறைந்திருந்தாலுங்கூட அதுவும் ஒரு லாபந்தானே" ரெயில் வண்டியில் டிக்கட்டில்லாமல் பிரயாணம் செய்த ஒருவனை ஒரு மாஜிஸ்டிரேட்டு விசாரித்து தண்டித்தார். ஆனால் இவர்செய்த விசாரணையும், இவர்விதித்த தண்டனையும் மேல் கோர்ட்டாரால் ரத்து செய்யப் பட்டன. ஏனென்றால், அந்த ரெயிலவே கம்பெனியில் மாஜிஸ்டிரேட்டும் ஒரு பங்குக்காரராகயிருந்தால், அந்த ஜட்ஜிகள் அந்த கேசின் விஷயத்தில் நியாய மார்க்கமாக உண்டாக்கப் பட்டவரல்லவென்றும் அவர்கள் செய்யும் தீர்மானம், பணபாத்தியதையினால் நியாயம் தப்பி செய்யாமலிருந்தாலுங்கூட அவர்கள் செய்யும் விசாரணை சரியானது அல்லவெனவும் சொல்லப்படும். ஒரு கம்பெனியார் தங்கள் வேலைக்காரன்மீது ஒரு கேசை சீப் பிரஸிடென்சி மாஜிஸ்டிரேட்டு முன்பாகக் கொண்டு வந்தார்கள் ஆனால் அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால், அவரும் அந்த கம்பெனியில் ஒருவராக யிருந்தவர்.

### ஜட்ஜியின் மனதில் பக்ஷபாத முண்டாகப் பண்ணும் பாத்தியதை.

ஒரு ஜட்ஜி ஒரு கம்பெனியில் பங்குக்காரராகவும் அல்லது வாதிப் பிரதிவாதிகளில் ஒருவராகவும் அல்லது பண பாத்தியதை உள்ளவராகவும் இல்லாமல் இருக்கலாம். ஆனாலும், மேல் சொல்லிய இந்த விஷயங்களில் உண்டாகும் முடிவைப் போலவே முடிவைத் தரும் வேறொருவிதமான பாத்தியதையும் ஜட்ஜிக் குண்டாகலாம். ஒரு விஷயத்தின் சம்பந்தமாக ஒரு ஜட்ஜிக்கு பக்ஷபாதமாகிய எண்ணமுண்டென்று தெரியவந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிக்கவே கூடாது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், அவருக்கு மன விரோதமுள்ளதென்று தெரிந்தால் மாத்திரம் போதாது. அப்படியுள்ளதென்று நன்றாகத் தெரிய வேண்டும். உண்டாயிருக்கும் பாத்தியதை உண்மையானதாக விருந்து, அதனால் அவர் செய்திருக்கும் தீர்மானம் நியாய வழியுள்ளதாக விருக்குமென்று தெரிந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிக்கக் கூடாது. ஆனால் உண்டாயிருக்கும் பாத்தியதை மிகவும் சிறிதாக இருந்து அதனால் தீர்மானம் நியாயவழியாகாதென்று தெரிந்தால், அந்த ஜட்ஜி அந்த கேசை விசாரிப்பதில் யாதொரு பாதகமுமில்லை. ஒரு ஜட்ஜி தனக்குள்ள பாத்தியதையால் தீர்மானத்தைக் கெடுப்பாரென்று சந்தேகப்படத்தக்க காரணங்களிருந்தால், அவர் அந்த கேசை விசாரணை செய்யவே கூடாது. பக்ஷபாதமுள்ளவராயென்று ஒரு ஜட்ஜியைக் கண்டு பிடிப்பதற்கு வழி யென்னவென்றால், அவருக்கும் அந்த கேசுக்கும் உள்ள சம்பந்தம் இன்னதென்று கண்டு பிடிப்பதாகும்.

கிரிமினல் புரொஸிஜர்சட்டம் 556-வது பிரிவில் சொல்லியிருக்கும் விதி சுய பாத்தியதைப் பெற்ற ஒரு ஜட்ஜியாவது அல்லது மாஜிஸ்டிரேட்டாவது தனக்கு பாத்தியதையுள்ள கேசை விசாரிக்கக் கூடாதென்பது. இது இங்கிலாந்தின் சாதாரண சட்டத்திலிருந்து கிஞ்சித்தேனும் வேறுபட்டதன்று. இங்கிலாந்திலுள்ள பல ஜட்ஜிகள் இவ்வார்த்தைகளிலேயே தீர்மானம் சொல்லி



யிருக்கிறார்கள். இது நிற்க, மேற் சொல்லிய சுய பாத்யதை என்பது என்ன ? இது (a) பண பாத்தியதை (b) மனதில் கெடுதியான எண்ணத்தை யுண்டு பண்ணுவதற்குப் போதுமான வேறெந்த பாத்தியதையானாலும், ஈஷர் பிரபு சொன்னபடி கெடுதியான எண்ணத்தையுடையவர் என்றுஜட்ஜியின்மீது தக்க காரணங்களுடன் சந்தேகப் படும்படியான எந்த மாதிரி பாத்யதையானாலும் போதும். இது தன் மட்டும் பாத்தியதை யுடையது என்பதும், பொது மனிதனல்லாதவனுடைய பாத்தியதை என்பதும் மாத்திரம் அன்று. தன் முன்னிலையில்விசாரணையின் பொருட்டு கொண்டுவந்திருக்கப்பட்ட ஒரு குற்றவாளியை எப்படியோ தண்டித்து விடத்தக்க பாத்தியதை மாஜிஸ்டிரேட்டுக் குண்டாவது கூடவாகும். ஒரு சங்கத்தில் சேர்ந்து அதனிடத்திலிருந்து பீசு வாங்கும் ஒருவர் அந்த சங்கத்தின் விஷயமாக வரும் கேசுகளை விசாரிக்கக் கூடாது. ஏனென்றால், மாஜிஸ்டிரேட்டும் வாதியாகிய அந்த சங்கத்தில் ஓர் தொழில் பார்ப்பவராயிருப்பதால் அவர் பாத்தியதைப் பெற்றவராகின்றார்.

### பந்துத்வத்தால் உண்டாகும் பாத்தியதை.

ஒரு மாஜிஸ்டிரேட்டின் பெண்சாதி வண்டியில் ஏறிக்கொண்டு போய்க்கொண்டிருக்கையில், மற்றொருவன் அதிக வேகமாக இதற்கு எதிரில் தன் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான். அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கக் கூடாது. ஏனென்றால், மாஜிஸ்டிரேட்டு பந்துத்வத்தினால் உண்டான சுய பாத்தியதை யுடையவராகின்றார்.

### பாரிஸ்டராக யிருந்தவர் ஜட்ஜியாக வந்தது.

ஒருவர் ஒரு கேசில் வக்கீல் அல்லது பாரிஸ்டராகயிருந்து அந்த கேசை நடத்திவந்தவரானால், அவர் அந்த கேசில் பாத்தியதையுள்ளவரென்றும், அதனால் அவர் அந்த கேசை விசாரிக்கக் கூடாதென்றும் சொல்லக்கூடாது. ஆனால் பாரிஸ்டராகயிருந்து ஒருவர் பிறகு ஜட்ஜியாக வந்தால், அவர் பின் அந்த கேசை விசாரிக்கும் வழக்கம் இல்லை. ஆகையினால், அந்த கேசை விசாரிப்பதற்கு வேறே ஜட்ஜிகள் இருக்கும் பக்ஷத்தில், அவர்களை தொந்தரவு செய்யக்கூடாது. அப்படி பாரிஸ்டராக இருந்த்பிறகு ஜட்ஜியாக வந்த ஒருவர், வேறே ஜட்ஜிகள் யாரும் இல்லாத காலத்தில் தான் அந்த கேசை விசாரிக்கமாட்டேனென்றும் அப்படிச் செய்தால் அது வழக்கு விரோதமென்றும் சொல்வாரானால், அது பிசகாகும். ஏனென்றால் அப்படிச் சொல்வது ஒருவருக்கு நியாய விசாரணையே யில்லை என்று சொல்வதோ டொப்பாகும்.

ஒரு மாஜிஸ்டிரேட்டுக்கு ஒரு கேசில் சாக்ஷி சொல்வதற்காக சாக்ஷி சம்மன்ஸ் ஸார்வ் செய்தால், அதனால் அவர் தகுதியற்றவ ராகின்றார். அப்படியானால் ஒவ்வொரு ஜட்ஜிக்கும் சம்மன்ஸ் சார்வ் செய்துகொண்டே அவரை தகுதிபற்றவராகச் செய்துகொண்டே இருக்கலாம் என்று இங்கிலாந்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தானே விசாரித்து வரும் ஒரு கேசுக்குத் தானே சாக்ஷியாக இருக்கக் கூடாது என்று கல்கத்தாவில் தீர்மானமாயிற்று. அவர் செய்யும் தீர்மானம் பிசகாகும். ஏனென்றால், அவர் சாக்ஷியாக இருக்கையில் தானறிந்திருக்கும் விஷயங்களின் படிக்கே தான் தீர்மானம் செய்லார். தன் சாக்ஷி பிசகானதென்றும், தான் ரத்து சவால் பரீக்ஷையில் தோற்றுப் போனாரென்றும் சொல்லமாட்டார். ஆனால் ஒரு குற்றவாளியை ஒரு மாஜிஸ்டிரேட்டின் முன் கொண்டுவந்து, அந்த குற்றவாளித் தன் குற்றங்களைக் குறித்து வாக்குமூலம் சொல்கையில் மாஜிஸ்டிரேட்டு சட்டத்தில் சொல்லியிருப்பதுபோல் ரிகார்டில் பதிவு செய்துக்கொள்ளாமற் போனால், அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு சாக்ஷியாகக் கொண்டு வரப்படவேண்டுமென்றும், அதற்காக அந்த மாஜிஸ்டிரேட்டு அந்த கேசை விசாரிக்கத் தகுதி யற்றவரென்றும் சொல்லக் கூடாது.

### பொதுவாகிய பாத்தியதை.

ஒரு கேசை விசாரிப்பதில் ஒரு ஜட்ஜி தகுதியற்றவரென்று சொல்வது; அந்த ஒரு கேசில் மாத்திரம் அவருக்குள்ள பாத்தியதையாகும். ஜனானுகூல விஷயமாகவும், ஒரு முக்கிய சங்கத்தின் விஷயமாகவும் ஒருவர் பாத்தியதைப்பட்டு இருப்பாரானால் அவர் ஒரு கேசை விசாரிக்கவும் தகுதியற்றவராகமாட்டார். (உதாரணம்) மிருக ஹிம்சையைத் தடுக்கும் சங்கத்தாருக்கு மாஜிஸ்டிரேட்டு கருணை விஷயமாக சந்தா கொடுப்பவராக இருந்து, அந்த மாஜிஸ்டிரேட்டின் முன்பாக அச் சங்கத்தார் ஒரு கேசைக் கொண்டுவந்தால், அந்த கேசை அவர் விசாரிக்கலாம். விசாரிக்கதகுதியற்றவராகார். ஆனால், சந்தாதாரராக இருப்பதால் இவரே அந்த பிரா

துக்கு உத்திரவாதியாயிருந்தாலும் அல்லது அவ்வாறு அவர் கொண்டு வந்த பிராது இவர் சந்தாவைச் செலுத்துதலை நிறுத்திவிடும் என்று தெரிய வந்தாலும், இவர் அந்த கேசை விசாரிக்கக்கூடாது அப்படிக்கல்லாமல் சந்தாதாரராக மட்டுமிருந்தால் அது அவரை விசாரணைச் செய்வதில் தடுக்காது. ஏனென்றால், சந்தா கொடுப்பது கருணை விஷயமாகவே யல்லாமல் வேறே எந்த பாத்தியதையினாலும் அன்று. சந்தா கொடுப்பது மாத்திரம் போதும் ஒருவரைத் தகுதியற்றவராக்குவதற்கு என்றும் ஒருவர் சொல்லுகிறார்.

---

## HINDU LAW.

## இந்துலா.

### விவாகம்.

---

விவாகம் முக்கியம்:—

1. விவாகமென்பது இந்துக்களால் பல்லாண்டு பல்லாண்டாய் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சட்டப்பிரகாரமுள்ள உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் அதுவே மூலாதாரமாக விருக்கிறது. விவாகத்தால் ஸ்திரீ ஜாதிகள் அடிமைத் தன்மையிலிருந்து உயர்ந்த அந்தஸ்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்களென்றும் சொல்லலாம். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய துவிஜாதிகளில் பிறந்த ஆண்களுக்குப் புனர் ஜனன பரிசுத்த விசேஷத்திற்காக நடத்தப்படவேண்டிய பத்து சமஸ்காரங்களுக்குள் விவாகம் ஒன்று யிருப்பதாலும், பொதுவாய், சூத்திரர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் விவாகமென்கிற சமஸ்காரத்தைத் தவிர வேறே சமஸ்காரமில்லாததாலும் இந்துக்களுக்கு விவாக மென்பது மிக முக்கியமென்றேற்படுகிறது.

2. பத்து சமஸ்காரங்கள்:—முந்திய பாராவில் சொல்லப்பட்டிருக்கும் பத்து சமஸ்காரங்கள் அல்லது சடங்குடன் துவிஜாதி புருஷர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்படாவிடில் அவர்கள் காயத்திரி மந்திரத்தினின்று நீங்கினவர்களாயும், விராத்தியாளென்னும் பெயருள்ளவர்களாயும், பெரியோர்களாலே வைதீக காரியத்தினின்று நீக்கப்பட்ட அபரிசுத்தாளாகி விடுகிறார்களென்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றபடியால் அவற்றை எல்லோரும் தெரிந்துகொண்டிருப்பதுநலம். (1) சிசு கர்ப்பத்திலிருக்கும்போது நடத்தப்படும்சடங்கிற்குக்கர்ப்பாதானமென்றுபெயர் (2) பிறந்த சிசு ஆணாயிருந்தால் அதன்தொப்புள்கொடியறுப்பதற்கு முன் நெய்-தேன்-இவற்றில் சுவர்னத்தைமந்திரத்தோடிழைத்து அதன்நாவிற்றடவவேண்டியது; அல்லது பரிசுத்தஞ் செய்யப்பட்ட நவனீதத்தைத் தங்கக்கரண்டியால் அதற்கு ஊட்டவேண்டியது. இந்த சமஸ்காரத்திற்கு ஜட்கர்ம மென்றுபெயர் (3) குழந்தை பிறந்த பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவது அல்லது நூற்றி ஓராவது தினத்தில் புண்ணிய திதியில் நல்ல முகூர்த்தத்தில் சுப நட்சத்திரத்தில் அதற்கு நாமகர்ணஞ் செய்ய வேண்டியது. (4) குழந்தை பிறந்த நாற்பத்திரண்டாம் தினத்திலாகிலும் அல்லது மூன்றாவது நான்காவது மாசத்திலாகிலும் அந்த சிசுவைப் பிறந்த வீட்டினின்று வெளியில் கொண்டுவந்து முறையே மூன்றும் பிறைச்சந்திரனுக்காகிலும் சூரியனுக்காகிலும் காட்டவேண்டிய சமஸ்காரத்திற்குப் பெயர் நிஷ்கிரமணம். (5) குழந்தை பிறந்த 6-வது அல்லது 8-வது மாதத்தில் அல்லது அதற்குத தந்தம் உற்பத்தியானவுடனாவது அக்குழந்தைக்குச் சாதம் ஊட்டல் வேண்டும். இதற்கு அன்னப்பிராசனம் என்று சொல்லப்படும. இச்சடங்கு முதல் அக்குழந்தை குடும்பத்தில் ஒருஅங்கத்தினனாகப் பாவிக்கப்படுகிறபடியால் அனேக விடங்களில் இச்சடங்குமிகச்சம்பிரமமாய்நடத்தப்பட்டுவருகின்றது. (6) குழந்தை பிறந்தவருஷத்திலாவது அல்லது மூன்றாவது வருஷத்திலாவது வேதத்திற் சொன்னபடி தர்மமாக சௌளகர்மஞ் செய்ய வேண்டியது. (சௌளம், சிரமுண்டிதம், க்ஷவரம்.)

7. பிரமதேஜசை விரும்புகிற பிராமணனுக்கு ஐந்தாவது வயதிலும், பலத்தை விரும்புகிறக்ஷத்திரியனுக்கு ஆறாவது வயதிலும், பொருளை விரும்புகிற வைசியனுக்கு எட்டாவது வயதிலும் உபநயநஞ்செய்யவேண்டும். துவிஜாதி புருஷன் இந்த சமஸ்காரஞ் செய்யப்படாதவனானால் அவன்ஜாதிப் பிரஷ்டனாக எண்ணப்படுகிறான். (8) காயத்திரியால் பரிசுத்தஞ் செய்யப்படும் சமஸ்காரத்திற்குச் சாவித்திரி என்று பெயர். (9) குருவின் கிரகத்திலிருந்து சிஷியன் வந்தவுடன்நடத்தப்படும் சடங்கிற்குச் சாமவர்த்தன மென்று சொல்லப்படும் (10) விவாகம்:—இதுதான் துவிஜாதிகளின் புனர் ஜனனத்தைப் பூர்த்திசெய்கிற கட்சி சமஸ்காரம் ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் விவாகத்தைத்தவிர அன்னப்பிராசன சமஸ்காரத்தையுஞ் செய்யலாயென்று சில ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ஆகவே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு வருணத்தாருக்கும் முடிவாகப் புனர்ஜனனத்தைக் கொடுக்கிறசமஸ்காரம்விவாகமாயிருக்கிறது. இந்தச் சடங்கு முதல் புருஷன் எந்தக் குடும்பத்திற்பிறந்தானோஅந்தக்குடும்பத்தில்சேர்க்கப்பட்டவனாகிறான். பெண்ணை பாணிக்கிரகணஞ்செய்துகொள்ளுதல் கடைசி சமஸ்காரமா யிருக்கிறபடியால் அது ரத்துசெய்யப்படக் கூடாத ஓர் உடன்படிக்கையா யிருக்கிறது. இந்த சம்பவமுதல் பையன் பாலனத்தி லிருந்தும், தகப்பனின் பராமரிப்பிலிருந்தும் நீக்கி தானே தன் காரியாதிகளை நடத்திக்கொள்ள விவேகமுள்ள பக்குவியாகிறானென்றெண்ணப்படுகிறது. பையனுக்கு 16-வயது முடிநதவுடன் சுயேச்சை அடைகிறானென்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் வங்காளத்தில் மட்டிலும் 15-வது வயது முடிந்து 16-ம் வயது ஆரம்பத்தில் மைனர் பந்தம் நீங்குகிற தாகச் சொல்லப்படுகிறது. எப்படி யிருந்த போதிலும் 1875-ம் வருஷத்திய 9-வது ஆக்ட் அமுலுக்கு வந்த பிறகு மேற் சொல்லப்பட்ட விதிகள் மாறிப் போய் விட்டதால், பிரஸ்தாப ஆக்ட்டின் பிரகாரம்ஏறக்குறைய எல்லோருக்கும்பதினெட்டாவது வயது சம்பூர்ணமானவுடன் மைனர் பந்தம் நீங்குகின்றது. அந்த ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டொரு வகையாருக்கு மட்டிலும் மைனர் காலவரையரை இருபத்தொருவயதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஆக்ட், விவாகம் பரிதனம், சம்பந்தத்தை ரத்து செய்தல்-ஸ்வீகாரத்தின் காலத்தைப் பாத்திக்கமாட்டாது.



(3) இந்துக்களுக்கு விவாகம் அவசியம்:—புத்திரனில்லாதவர்களுக்குச் சுவர்க்காதி புண்ணியலோகமில்லை யென்றும், புத்திரனிருந்தால் பிதுர்க்களை நரகத்தினின்றும் தப்புவிககிறானென்றும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் புத்திரனைப் பெறுவதற்காகவே விவாகம் செய்துகொள்ள வேண்டியது இந்துக்களுக் கவசியமா யிருக்கிறது. இந்தியாவில் அப்போதைக் கப்போதிருந்த ஜனசாரத்திற்குத் தக்கபடி அனேகவிதமான விவாகங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. அவைகள் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாச முள்ளவைகளாகவுமிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றிலும் எட்டு விதமான விவாகங்கள் தான் இந்து லாவில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒன்று அல்லது பல எத்தனைவித விவாகங்க ளிருந்த போதிலும் ஒரு புருஷன், ஒரு ஸ்திரீயுடனாகிலும் பல ஸ்திரீகளுடனாகிலும்சேர்ந்து கொள்வதுதான் சமானிய விதமான விவாகம். புருஷன் இறந்தபிறகு பெண்சாதி ஜீவித்திருப்பாளேயாகில் அவள் உயிருள்ள பரியந்தம் வைதவ்வியத்திலிருக்கவேண்டும். இந்துக்களுடைய விவாகம், ஐரோப்பியர்களுடைய விவாகத்தைப்போல் கூட்டுறவையும் சிநேகசந்தோஷத்தையுமே உத்திதேசித்து துரையும் துரைசானியும் மனமொத்துச்செய்துகொள்ளும்உடன்படிக்கையைப் போலல்லாமல் மத சம்பந்தமானஓர் அவசியகர்மமாக விருப்பதால் இனனார்தான் விவாகஞ் செய்துகொள்ளலாம் இன்னார் விவாகஞ்செய்து கொள்ளக்கூடா தென்று நாகரீகம் அடைந்திருக்கும் தேசங்களின் சட்டங்களில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனை நம்முடைய இந்துலாவில் கிடையாது. பெண்ணைப்பெற்ற தகப்பன் அல்லது கார்டியன் கன்னிகைக்குத் தகுந்தவனைத் தேடி விவாகம்செய்துகொடுக்காவிடில் அவளே தனக்கு வரனைத்தேடிகொண்டு விவாகஞ் செய்து கொள்ளலாம். இந்த விவாகத்திறகுச் சுயம்வர விவாகமென்று பெயர்.

பெண்ணைப் பெற்ற தகப்பனாயினும் அல்லது கார்டியனாயினும் அவளுக்கு ஒருவரனைத்தேடி விவாகஞ் செய்துகொடுப்பது விவாகமாகப்பாவிக்கப்படுகிறது ஆகையால் அந்த சங்கதியில்ஒருகன்னிகையானவள் ஒருவரால் மற்றொருவருக்குக்கொடுக்கும்பொருளாயிருக்கிறாளே ஒழிய அதில் அவள் நேரான ஓர் கட்சிக்காரியல்ல.

ஜாதியைவிட்டு வேறேஜாதியில்விவாகம்செய்துகொள்ளுதல், ஒரே கோத்திரத்தில் விவாகம் செய்தல், விவாகம் செய்து கொள்ளக்கூடாத பந்துக்களை விவாகஞ்செய்துகொள்ளுதல் ஆகிய இந்த அசந்தற்ப விவாகங்கள் மட்டிலும் பொதுவாய் இப்போது கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டுவருகின்றனவே யொழிய, மற்றப்படி வேறுகாரணங்களைக்கொண்டு இதர அம்சத்தில் திருப்திகரமாய் முடிந்து போன விவாகத்தைப் பெரும்பாலும் ரத்துசெய்யமாட்டார்கள். அப்படி ஏதேனும் மேற்சொல்லப்பட்ட நான்கு காரணங்களைத் தவிர்த்து தக்க காரணமிருந்து தாவா நேரிடுமானால் விவாகத்தில் நஷ்டமடைந்தவர்களுக்கு எதிர்கக்ஷியார் நஷ்டம் கட்டிக் கொடுக்கும்படி உத்தரவாகுமே தவிர விவாகம் ரத்து செய்யப்பட மாட்டாது.

ஆகவே, விவாகத்தில் கொடுக்கப்படும்கன்னிகையினுடைய சம்மதம் விவாகத்திற்கு அனுவசியம். ஒரு புருஷன் எத்தனை பெண்களை வேண்டுமென்றாலும் தன் இஷ்டப்படி விவாகம் செய்துக்கொள்ளலாம். முந்திய தாரத்தினுடைய சம்மதம் வேண்டுமென்பதவசியமில்லை. அவளுக்கு யாதொரு காரணமுஞ்சொல்லாமலே விவாகஞ் செய்துகொள்ளலாம். ஆனால் புனர் விவாகஞ் செய்துகொண்ட நிமித்தம் முந்திய தாரத்தை விலக்க முடியாது.

# Decisions of the Various High Courts.

## பல ஐக்கோர்ட்டு தீர்ப்புகள்.

### Punjab Chief Court.

### பஞ்சாப் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் செலிஸ்

பிரம்சிங் வகையரு— மனுதார்கள்

VS.

முகந்துசிங்— அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—தேவஸ்தானத்திற்குள் அக்கிரமமாய் பிரவேசித்தல்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு தேவஸ்தானத்திற்கு மகந்து நியமிக்கப்படாம லிருக்கும் போது அதற்குள் அக்கிரமமாகப் பிரவேசித்த ஒருவனை அந்த தேவஸ்தானத்தை நியமித்தவன் வெளிப்படுத்திவிடக் கூடு மென்று தீர்மானிக்கப்பட்டது. சட்டத்தில் சொல்லப்பட்ட வருடத்திற்கு மேற்பட்டுப் போன ஒரு காலத்தில் தேவஸ்தானத்தை ஸ்தாபித்தவருடைய பாத்திதையைப் புறக்கணிக்கும்படியான செய்கையை மகந்துசெய்திருந்தாலொழிய தேவஸ்தான மகந்துவசமிருப்பது தேவஸ்தானத்தை ஸ்தாபித்தவருடைய பாத்திதைக்கு விரோதமாக விருந்து வருந்துகிற தென்று எண்ணப்படக் கூடா தென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 97 Premsisgh vs. Mukandsingh 20 I. L.J. 97.

---

### Oudh Commissioner Court.

### அயோத்தி கமிஷணர் கோர்ட்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் கெண்டால்

கைலாசம் வகையரு—அப்பீல் வாதிகள்.

VS.

ரகுராவ்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—ஜீவனும்சம்.

தீர்ப்பு:— ஒரு ஜீவனும்சக் கேசை விசாரணை செய்த மாஜிஸ்டிரேட் ஒருவனுக்கு ஜீவனும்சம் கொடுக்கப்படும்படி உத்திரவு செய்தார். இந்த உத்திரவை ஆதாரமாகக் கொண்டு பிரதிவாதி தன்னுடைய பேரப்பிள்ளையல்ல வென்று கோர்ட்டார் கூறும்படியாக வாதி ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். இந்த வியாஜ்ஜியம் செலாமணியாகக் கூடியதென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 114 Kailasa vs. Ragu Row 20 I. L. J. 114.

---

### Oudh Commissioner Court.

### அயோத்தி கமிஷணர் கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் J. C. ஸ்டுவர்ட்
ஜட்ஜி மிஸ்டர் கௌடால்.

வித்தியாசாகர்—எதிர் மனுதார்

VS.

ராட்டிப்பால்—மனுதார்.

லாப்பாயின்ட்:—அடமானம்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—Nisi டிக்கிரியால் சொல்லப்பட்டிருக்கின்றபடி அடமானப் பத்திரத்தின் தொகையை அடமானம் வைத்தவன் செலுத்துவதற்கு அவனுக்குள்ள பாத்திதை தொடர்ந்தோத்தியான பாத்திதை. முடிவான உத்திரவு பிறப்பிக்கப்படும் பரியந்தம் அவன் எப்போது வேண்டுமானாலும் அந்த பாத்திதையை பிரயோகித்துக் கொள்ளலா மென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 108. Vidya Sagar vs. Ratipal. 20 I. L. J. 108.

---

### Oudh Commissioner Court.

### அயோத்தி கமிக்ஷணர் கோர்ட்டு.

ஜட்ஜி·—மிஸ்டர் ஜஸ்டிஸ் கௌடால்

லாப்பாயின்ட்.—தஸ்தாவேஜிகள்

தீர்ப்பு:—பிரியாதுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தஸ்தாவேஜிகளிலாவது அல்லது எழுத்துவாக்கு மூலத்திலாவது சொல்லப்பட்டிருந்ததிலிருந்து (சொல்லப் பட்டிருப்பது தவறுதலாக செய்யப்பட்டிருந்தா லொழிய) ஒரு கக்ஷிக்காரன் தன்னை நீக்கிக் கொள்ள விடப்படக் கூடா தென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 136—Shev vs. Musst 90 I. L. J. 136.

---



### Allahabad High Court.

### அலகாபாத் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ரிச்சர்ட்ஸ்
ஜட்ஜி மிஸ்டர் பானர்ஜி.

அப்பீல் வாதி—தயாசங்கர்

VS

அப்பீல் பிரதி வாதி—ஹப்லால்

லாப்பாயின்டு:—ஹிந்துலா.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—யாதொரு மோசமும் நடத்தப்பட எண்ணப்படாத போது குடும்பத்திற்கு நன்மையை விளைவிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்காக மைனரை கட்டுப் படுத்த ஹிந்து குடும்ப மானேஜருக்கு அதிகாரமிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 140—Daya Shanker v Hablal 20 I. L. J. 140.

---

### ALLAHABAD HIGH COURT.

### அலகாபாத் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ரிச்சர்ட்ஸ்
ஜட்ஜி மிஸ்டர் பானர்ஜி.

அப்பீல் வாதிகள்—மங்கல் சென் வகையரு

vs.

அப்பீல் பிரதி வாதிகள்—முகமத் உஸ்மான் வகையரு.

லாப்பாயின்ட்:—ஒப்பந்தம்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒப்பந்தத்தில் சேராத ஒருவன் ஒப்பந்தத்துக்குக்கட்டுப்பட மற்றொருவன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடா தென்பது பொது விதி என்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 99-Mangal Sen and others v M. Hussain and another 20 I. L. J. 99.

---

### ALLAHABAD HIGH COURT.

### அலகாபாத் ஐக்கோர்ட்டு

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சர்ட்ஸ்
ஜட்ஜி மிஸ்டர் பானர்ஜி.

அப்பீல் வாதி—முகமட் ஹஷ்மாட் ஆலி வகையரு

vs.

அப்பீல் பிரதி வாதிகள்—கானிஸ்பட்டுனு.

லாப்பாயின்ட்:—பாராதீனச்சட்டம்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—உயிருடனிருப்பவன் இறந்து போன பிறகு அவனுடைய சொத்துக்கு பாத்தியம் பாராட்டுவதில்லை என்று போதுமான பரிகாரத்தொகை வாங்கிக்கொண்டு ஒருவன் ஒப்பந்தம் செய்வது பாராதீனச்சட்டம் 9-வது பிரிவின்படி சட்ட விரோதமான ஒப்பந்தமாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 123 Mohamed Hoshmat Ali v. Kanis Fatuna 20. I. L. J. 123.

---

### ALLAHABAD HIGH COURT.

### அலகாபாத் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ரிச்சர்ட்ஸ்
ஜட்ஜி மிஸ்டர் பானர்ஜி.



அப்பீல் வாதி—தியோநாரேன்சிங்

vs.

அப்பீல் பிரதி வாதி—கங்கப்பிரசாத் வகையரு.

லாபாயின்ட்:—தகப்பனால் செய்யப்பட்ட பாராதீனம்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—பிதிராஜ்ஜித சொத்து தகப்பனால் பாராதீனம் செய்யப்பட்ட போது புத்திரன் தாயாருடைய கர்ப்பத்திலிருந்த போதிலும் பிறந்து பின்பு ஆக்ஷேபிக்கலா மென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 125 Deo Naran Singh V. Ganga Prasad 20 I. L. J. 125.

---

### BOMBAY HIGH COURT.

### பம்பாய் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சீப் ஜஸ்டிஸ் ஸ்காட்
ஜட்ஜி மிஸ்டர் ஹெலார்ட்.

அப்பீல் வாதி—ராமதாஸ் கோபால்தாஸ் சாது

vs.

அப்பீல் பிரதி வாதி—பால் தேவதாஸ்

லாப்பாயின்ட்:—ஹிந்து லா.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—சன்னியாசியால் தன்னுடைய வார்சு என்று கூறப்பட்ட ஒருவன் மிதக்ஷரா சட்டத்தின்படி சந்நியாசியினுடைய சிஷியன் என்று எண்ணப்படுவோன் என்று தீர்மானிக்கப்பட்டது.

பிராமணர்கள் அல்லாதவர்களும் பைராகிகளாகக் கூடுமானபடியால் பைராகிகள் சந்நியாசி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடும் என்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜெ. 104—Ramdoss Gopoldoss V. Baldevados 20 I. L. J. 104.

---

### PRIVY COUNCIL.

### பிரிவி கவுன்சில்.

கவுன்சிலர்கள்:—லார்ட் டேன்டீன்
லார்ட் மவுல்டான்
சர் ஜான் எட்ஜ்
மிஸ்டர் அமீர் ஆலி.

அப்பீல் வாதி—P. C. E. பால்

vs.

அபபீல் பிரதி வாதி—வுல்லியம் ருப்ஸன்

லாப்பாயின்ட்:—ஈஸ் மெண்டு

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—நீண்ட கால மாக வெளிச்சத்தை அனுபவிக்க ஒருவனுக்கு உண்டாயிருக்கும் அநுபோக பாத்திதை அவன் எவ்வளவு வெளிச்சத்தை அநுபவித்துக்கொண்டு வந்தான் என்பதைப் பொருத்ததல்ல செய்யப்பட்ட செய்கை நியுசென்ஸான செய்கை என்று எண்ணப்படக் கூடாமலிருந்தால் அந்த வெளிச்சத்தில் ஆக்கிரமித்ததாக மட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 118-P. C. E. Paul V. William Robson 20 I. L. J. 118.

---

## MADRAS HIGH COURT.

மதராஸ் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
ஜட்ஜு மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

அப்பீல் வாதி—செல்லப்பள்ளி ஜெமீன்தார்

vs.

அப்பீல் பிரதி வாதிகள்—ராஜலப்பட்டி சோமய்யா.

லாப்பாயின்ட்:—பூஸ்திதி ஆக்ட்

ஐகோர்ட்டுத் தீர்ப்பு:—தாவா நிலம் தீர்வைக்குட்பட்ட நிலமல்ல வீட்டைச்சேர்ந்த சொந்த நிலமென்று ருஜூப்படுத்த வேண்டிய பொறுப்பு நிலஸ்வான் தாரைச் சேர்ந்தது தீர்வைக்குட் பட்ட நிலம் சொந்தமான வீட்டைச் சேர்ந்த நிலமாக மாற்றப்பட்டிருந்தால் அதை யாதொரு சந்தேகமில்லாமல் ருஜூப்படுத்த வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 139 Chellapelli Zemindar V. Rajolapati Somayya 20 I. L. J. 139.

---

மதராஸ் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

அப்பீல் வாதி—மலையாளம் கலெக்டர் மூலியமாக
இந்தியா காரியதரிசி

vs.

அப்பீல் பிரதி வாதி—A. காக்ரல்

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—கவர்ன்மெண்டார் தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி செய்யும் காரியத்தில் கவர்ன்மெண்டு வேலைக்காரர்களுடைய அலக்ஷியத்தால் உண்டாயிருக்கும் தீங்கிற்காக வாதி கொண்டு வந்திருக்கும் வியாஜ்ஜியத்திற்கு இந்தியா காரியதரிசி கட்டுப்பட மாட்டார் என்று தீர்மானிக்கப்பட்டது. 20 இ. லா. ஜே. 127 The Secretary of State for India Through the Collector of Malabar. Vs. A. Colkerale 20 I. L. J. 127.

---

மதராஸ் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்

அப்பீல் வாதிகள்—கும்பகோணம் முனிசிபல் கவுன்சில்

vs.

அப்பீல் பிரதிவாதி—வீரப்பெருமாள் படையாச்சி

கேசின் விபரம்:—முனிஸிபாலிடியில் விழும் குப்பை முதலிய செத்தைகளை எடுத்துப் போடுவதற்காக கவுன்சில் ஒரு கண்டிராக்ட்டரிடம் ஒப்பந்தம் செய்து கொண்டது. கண்டிராக்டர் முனிசிபல் கவுன்சிலுக்கு நோட்டீஸ் கொடுக்காமலே வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்.

ஐக்கோர்டுத் தீர்ப்பு:—பிரஸ்தாப கண்டிராக்ட் ஜில்லா முனிசிபல் ஆக்ட் 261-வது பிரிவில் சொல்லப்பட்ட கண்டிராக்டாக மாட்டாது. அந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட வேண்டிய நோட்டீஸ் கொடுக்கப்படாமற் போனதை முன்னிட்டு வியாஜ்ஜியம் தள்ளுபடி செயய்ப்படக் கூடாது. அப்பேர்ப்பட்ட வியாஜ்ஜியத்திற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 2-வது பிரிவு பொருந்தும். ஏன் என்றால் சட்டத்தில் சொல்லப்படாத ஒரு காரியத்தைச் செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியமாகும்.

ஒரு ஹிந்து குடும்பத்தின் மானேஜிங் மெம்பர் தம்முடைய பெயரால் ஒப்பந்தப்பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறார் குடும்பத்தின் மற்றமெம்பர்களை இந்த வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகச் சேர்த்துக் கொள்ளாமல் வியாஜ்ஜியத்தை நடத்தப்பாத்தியமுடையவன் ஒரு பிரதி வாதியாகச் செய்யப்பட்டபோது காலாவதி தோஷத்திற்கு வியாஜ்ஜியத் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டுமே யொழிய அவன் வாதியாகச் செய்யப்பட்ட தேதி முதல் கணக்கிடப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. S. கோவிந்தாச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் G. S. ராமச்சந்திர அய்யரும் ஆஜராகிறார்கள். 28 ம. லா. ஜே. 147—The Municipal Council, Kumbakonam v. Veeraperumal Padayachi. 28 M. L. J. 147.

---

ஜட்ஜிகள்:மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

அப்பீல்வாதிகள்-பஞ்சகாயலு ஜெகன்னாயகலு வகையரா.
அப்பீல் பிரதிவாதி—நந்திகாம் எஸ்டேட் மானேஜர்.

ஐக்கோர்ட்டுத்தீர்ப்பு:—சாஸ்வதத் தீர்வை விதிக்கப்பட்ட எஸ்டேட்டின் ஒரு பாகத்தை அடமானம் வைத்துக் கொண்டவன் ஆனால் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்யப்படாதவன் லோக்கல் போர்ட்டு ஆக்ட் 73-வது பிரிவின் படி நடுவாந்திர சொந்தக்காரனுகிறான் (Intermediate Holdar) அந்தப் பிரிவின்படி குடிகளிட மிருந்து வசூல் செய்யப்பட வேண்டிய செஸ்வரியை வசூல் செய்ய அவன் பாத்தியமுடையவனே ஒழிய அடமானம் வைத்தவன் அல்ல என்று தீர்மானிக்கப் பட்டது. 28 ம. லா. ஜெ. 152. Panchakayalu Jagannayakalu v. Manager Nandigam Estate. 28 M. L. J. 152.

---

## RIGHTS OF HINDU WIDOWS IN THE PROPERTIES INHERITED BY THEM FROM THEIR HUSBANDS.

### புருஷர்களிடமிருந்து வார்சுகிரமத்தில் அடையும் சொத்துக்களில் ஹிந்து விதவைகளுக்கிருக்கும் பாத்தியதை.

புருஷன் பெண்சாதிக்குத்தானமாகக்கொடுதத சொத்தை அவள் எப்படிப் பராதீனம் செய்தாலும் செய்யலாம். ஆனால் வார்சுக் கிரமத்தில் ஹிந்து விதவைகள் தங்களுடைய புருஷர்களிட மிருந்து அடையும் சொத்துக்களை அவர்கள் உயில் எழுதிவைக்கவும் பராதீனங்கள் செய்யவும் அவர்களுக்குப் பாத்தியதை கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஏனெனில், புருஷர்களுடைய சொத்தில் விதவைகளுக்கிருக்கும் பாத்தியதைக்கு இந்துலா ஒரு வரை ஏற்படுத்திவிட்டது. வார்சுக்கிரமத்தில் தங்களுடைய புருஷர்களிடமிருந்து அடையும் சொத்துக்களை ஹிந்து விதவைகள் அச்சொத்துக்களைத் தாங்கள் ஜீவதசையிலுள்ள பரியந்தம் அனுபவித்து மட்டிலும் வருவதற்குச் சர்வ சுதந்தர மிருக்கிறதென்பதற்கு அனேக ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளிருக்கின்றன. (இ. லா. ரி. 13 சென். 116).

ஹிந்து விதவைகள் அவசியமான காரியங்களை முன்னிட்டு, அச்சொத்துக்களைப் பெந்தகம், தானம், விற்பனை முதலிய பராதீனங்களும் செய்யலாம். தங்களுடைய புருஷர்களுடைய தாயாதிகளின் சம்மதத்தின் பேரில் பெந்தகம், விற்பனை தானம் முதலிய பராதீனங்கள் செய்யலாமென்றும் தீர்மானிக்கப்பட் டிருக்கின்றது.

ஆனால் அவர்களுக்குத் தங்களுடைய ஜீவதசை முடியும் பரியந்தந்தான் அச்சொத்தில் பாத்தியதையிருக்கின்றது. விதவை இறந்து போனபிறகு அச்சொத்திற்குப் பாத்திய முடையவர்கள் அவ்விதவைகளின் சமீப பந்துக்களல்ல; அச்சொத்து விதவையின் புருஷனுடைய சமீப வார்சுகட்குச்சேருமாகையால் விதவைக்கு இச்சொத்தில் ஆயுள்பரியந்தம் தான் பாத்தியதை யிருக்கிறது. அவள் இறந்து போனபின்பு அவளுக்கு அச்சொத்தில் பாத்தியதையில்லாமலிருப்பதால், இந்தச் சொத்தை அவள் இறந்து போனபிறகு தன்னிஷ்டப்பட்ட ஒருவர் அனுபவிக்கும்படியாக உயில் எழுதிவைக்கப்பாத்தியதையில்லை என்று எண்ணப்படுகின்றது.

அடியிற்கண்ட தீர்ப்புக்கள் புருஷனிடமிருந்து அடையும் சொத்தை உயில் எழுதி வைக்கக்கூடாதென்று கூறுகின்றன:—3 வீக்கிலி ரிப்போர்ட்டர் 49, 1.5, இ. லா. ரி. 7 சென் 93; 4 மதராஸ் லா ஜர்னல் 89, 1 பம்பாய் 690; 4 பம் 181.

இப்படி ஹிந்து விதவை உயில் எழுதிவைக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் ஹிந்து விதவை எழுதிவைக்கும் உயில் செலாமணியாகின்றது, விதவையின் புருஷனுடைய சமீப வார்சு அதாவது விதவை இறந்துபோனால் இந்தச் சொத்தை வார்சுக் கிரமத்தில் அடைய வேண்டிய புருஷனுடைய சமீபபந்து மேஷ் விதவை தன் இஷ்டப்பட்ட ஒருவருக்கு உயில் எழுதிவைப்பதற்குச் சம்மதம் கொடுத்திருந்தால், பிறகு அந்த உயிலை ஆக்ஷேபிக்க முடியாது; யாருக்கு விதவை உயில் எழுதிவைத்தாளோ அவர்களுக்கு அச்சொத்துசேரும். அவர்களிடமிருந்து புருஷனுடையவார்சுமேஷ் உயில் எழுதிவைக்கப்பட்டசொத்துக்களைப் பெறமுடியாது. உயில் எழுதிவாங்கியவர்கள் அச்சொத்துக்களை அனுபவிக்க விடாமல் வேறொருவருக்குப் பராதீனம் செய்யவும்புருஷனுடைய வார்சுகளுக்குப் பாத்தியமில்லை.

புருஷனுடைய தாயாதிகளிருந்தால், விதவை வார்சுக் கிரமத்தில் புருஷனிடமிருந்து அடைந்த சொத்தை மிகமுக்யமான காரியங்களுக்கன்றி யாதொரு பராதீனமும் செய்யக் கூடாது.

புருஷனுடைய ஆத்மாவிற்குச் சொர்க்காதி பதவிகள் உண்டு பண்ணி வைக்கும்படியான தர்ம காரியங்களுக்காகவும் வைதிககாரியங்களுக்காகவும் அவள் அச்சொத்தை அதிகமாகவும் பராதீனம் செய்யலாம். இவ்வுலககாரியங்களுக்காக அவள்செய்யும் பராதீனங்கள் செலாமணியாக வேண்டியதாயிருந்தால் அக்காரியங்கள் மிக முக்கியமானவை என்றும் அவசியமானவை என்றும் சொத்தைப் பராதீனம் செய்தாலொழிய அக்காரியங்களை நடத்த முடியாதென்றும் ருஜூப்படுத்த வேண்டும்.

அவள் செய்யும் பராதீனங்கள் செலாமணியாகாதவையாயிருந்தாலும், புருஷனுடைய வார்சின் அதாவது அவள் இறந்து போன பின் அச்சொத்தை அனுபவிக்கப் பாத்தியதையுடையவனுடைய சம்மதம் பெற்றுப் பராதீனம் செய்திருந்தால் அப்பராதீனங்கள் செல்லும்படி யுள்ளதாக எண்ணப்படும்.

ஹிந்துவிதவை தன்னுடையபுருஷனிடமிருந்து வார்சுக் கிரமத்தில் அடையும் சொத்துக்களைப் பராதீனம் செய்யக்கூடாதென்று ஒருவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அவள் இறந்த போனபின் அச்சொத்தை அனுபவிக்க வார்சுகளிருப்பதையும் இல்லாததையும் பொறுத்ததல்ல. அவள் இறந்துபோன பின்பு அச்சொத்தை அடைய வார்சுயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவள் அச்சொத்தைப் பராதீனம் செய்ய அவளுககுப் பாத்தியதை கிடையாது என்றும் அவள் பராதீனம் செய்யக்கூடாதபடி புருஷனிடமிருந்து அச்சொத்து அவளுடைய கைக்கு வந்தவுடனே அதற்கே அந்த சுபாவம் உண்டாய்விடுகிறதென்றும், முசிலிப்பட்டணம் கலெக்ட்டர் V. கலவே வெங்கடநாராயணய்யா கேசில் (8 மூர் இந்தியன் அப்பீல் 553) பிரிவி கவுன்சிலார்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக்கேசில் பிரதிவாதி புருஷனிடமிருந்து திரண்ட சொத்தை வார்சுக்கிரமத்தில் பெற்ற ஒரு ஹிந்து விதவை. இவர் தாம்பெற்ற எஸ்டேட்டைத் தம்மிஷ்டப்படி பராதீனம் செய்யத் தலைப்பட்டார். இந்த விதவை இறந்துபோனவுடன் இச்சொத்தை அடையவேண்டிய வார்சுகளுமில்லை வார்சுக்கிரமப்படி சொத்தையடையபாத்தியமுடையவன் இல்லாமற் போனால் கடைசியில் அச்சொத்து மஹாராஜனைச் சேரவேண்டுமென்று யாஞ்ஞவல்கிய முதலிய உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ...

மேற் கூறப்பட்ட கேசில் சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கு வார்சுகளில்லாததால் அச்சொத்து கவர்ன்மெண்ட்டாரைச் சேர வேண்டும். ஆகையால் விதவையிறந்துபோன பின் அச்சொத்தை அடைய வேண்டிய வார்சாகிய கவர்ன்மெண்டார் கிருஷ்ணா ஜில்லா கலெக்டர் மூலியமாக ஷை விதவை சட்ட விரோதமாகவும் தான் இஷ்டப்பட்டபடியும் பராதீனம் செய்ய பாத்தியதையில்லை என்று வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள். இந்த வியாஜ்ஜியம் பிரிவி கவுன்சிலுக்குச் சென்றுமுடிவடைந்தது. பிரிவி கவுன்சிலர்கள் ஹிந்து விதவை வார்சுக் கிரமத்தில் ஒருவனுடைய சொத்தை பெற்றவுடன் அவள் அதைத் தன்னிஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாதபடி, அச்சொத்திற்கே அந்த சுபாவம் உண்டாய்விடுகிறதென்றும், விதவை இறந்துபோனவுடன் அச்சொத்தை அனுபவிக்கப் பாத்தியதையுடைய வார்சுகளிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவள் அதைத்தன் இஷ்டப்படி பராதீனம் செய்யக்கூடாதென்றும் விதவை இறந்து போனபின்பு அச்சொத்தை அடைய வேண்டிய வார்சுகளுக்கு விதவைசெய்யும் பராதீனங்களை ஆக்ஷேபிக்கப் பாத்தியதையிருப்பதுபோல, இந்த வியாஜ்ஜியத்தின் சொத்துக்களுக்கு விதவை இறநது போனபின்பு வார்சாய் வரக்கூடிய கவர்ன்மெண்டாருக்கும் விதவைசெய்யும்பராதீனக்களை ஆக்ஷேபிக்கப் பாத்திடதை யிருககிறதென்றும் தீர்மானித்தார்கள்.

வங்காளத்தில் தாய்பாகப் பிரகாரமும், பாக்கி மூன்று ராஜதானிகளில் மிதக்ஷராப்பிரகாரமும் விபக்த ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்தவனுக்குஆண் வார்சில்லாவிட்டால் அவனுடைய விதவை புருஷனுடைய சொத்திற்கு வார்சாகிறாள். ஆனால் அவள் ஜீவதசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்கலாமே தவிர அதைப் பராதீனமும் செய்யக்கூடாது, உயிலும் எழுதிவைக்கக் கூடாதென்று பிரிவி கவுன்சிலர்கள் கிராட்சிங் V. ரூல்ஹால்சிங் (2 மூர் இந்தியன் அப்பீல் 331) வியாஜ்ஜியத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். முதலில் இந்த வியாஜ்ஜியம் பண்டைக் காலத்தில் பங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சாடார் திவானி அடவால்ட் (Sadder Dewany Adawalt) கோர்ட்டில் விதவையால் பராதீனம்செய்யப்பட்ட காசிககரிலிருந்த சொத்துக்களைப் பெறுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. அப்போது சாடார்திவானிஅடவால்ட் கோர்ட்டார் அப்போதிருந்த பிரக்கியாதி பெற்ற ஹிந்து சாஸ்திரியர்களைத் தருவித்து அடியிற்கண்ட கேள்வி கேட்டார்கள்.

கேள்வி:—ராஜா ஜெஸ் வெண்டு சிங்கின் முன்னோர்கள் அனேகவருஷகாலமாக ஆண்டு அனுபவித்து வந்த ஜெமீன் வார்சுக்கிரமத்தில் ராஜாஜெஸ்வெண்டு சிங்கிற்கு வந்து சேர்ந்தது. ஜெஸ்வெண்டு சிங்கோ ஆண்வார்சில்லாமல் இறந்து போய்விட்டார். ஆதலால் இந்த ஜெமீன், வார்சுக் கிரமத்தில் ராஜாஜெஸ்வெண்டு சிங்கின் விதவைக்குவந்துசேர்ந்தது. இந்த விதவை ஷை ஜமீனை கிராட்சிங் என்பவருக்கு உயில் எழுதிவைத்தால் அந்த உயிலும் பராதீனமும் இந்து சாஸ்திரங்கள் பிரகாரம் செல்லும்படியுள்ளவைவா அல்லவா?

சாஸ்திரிகளின் ஜவாப்பு:—சொத்தை வேறொருவருக்குக் கொடுப்பதற்கு ஹிந்து விதவைக்கு அதிகாரமில்லை. பிரஸ்தாப விதவை பிரஸ்தாப ஜமீனுக்கு மிகுந்த பாத்தியதையுடைய ஒருவனுக்குக் கொடுத்தபோதிலும், ஜமீனுக்கு, விதவை யிறந்தவுடன் "வார்சாக வரக்கூடியவர்களின்" சம்மத மின்றிக் கொடுக்கக் கூடாது.

ஆகையால் இந்த வியாஜ்ஜியத்தில் பிரிவிகவுன்சிலர்கள் இந்து சாஸ்திரிகளின் அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டு ஷை விதவைக்கு ஷை ஜமீன்வார்சுகளின் சம்மதமின்றி உயில் எழுதிவைத்துப் பராதீனம் செய்ய அதிகாரமில்லை என்று தீர்மானித்தார்கள்.

இத்தத் தீர்மானத்தால், ஹிந்து விதவை தான் இறந்தபின் தான் அனுபவித்து வரும் சொத்திற்கு சட்டப் பிரகாரம் வார்சாய் வரக்கூடியவர்களின்சம்மதத்துடன் ஷை சொத்தை உயில் எழுதிவைக்கலாமென்றும் ஏற்படுகின்றது. மற்றப்படி விதவை ஜீவதசையிலுள்ளபோது செய்துவரும் பராதீனங்கள், அவள் இறந்து போனவுடன் அச்சொத்தை அடையக்கூடியவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுச்செய்யலாமென்று இந்தியாவிலுள்ள எல்லா ஹைகோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் சில ஹைகோர்ட்டார் ஷை சொத்திறகுப் பாத்தியமுடையவும் ஜீவதசையிலிருக்கிறவுமான எல்லா வார்சுகளுடைய சம்மதத்தையும் விதவை பெற்றுப் பராதீனம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். சில ஹைகோர்ட்டார் மிகுந்த சமீபவார்சுவின் சம்மதத்தைப் பெற்றால் போதுமானதென்றும் அந்த சம்மதம் மற்ற வார்சுகளையும் கட்டுப் படுத்துமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

எப்படியிருந்த போதிலும் வார்சுகளின் சம்மதத்துடன் விதவை செய்த பராதீனத்தால் சொத்தைப் பெற்றுக்கொண்டவன் அச்சொத்தை அனுபவித்து வருவதை, விதவை இறந்து போனவுடன் வார்சுகள் ஆக்ஷேபிக்க முடியாது. ஏனென்றால் விதவைசெய்த பராதீனத்திற்கு வார்சுகள் சம்மதம் கொடுத்துவிட்டார்கள்.



ஒருதடவை சம்மதம் கொடுத்துவிட்டால்பிறகு ஆக்ஷேபிக்க முடியாது. இம்மாதிரி நடந்திருக்கும் வியாஜ்ஜியத்தையும் உதாரணமாகக் கூறுகின்றோம். A என்பவனும் B என்பவனும் விபக்த சகோதரர்கள். A. ஆண்வார்சில்லாம லிறந்து போய்விட்டான் அவனுடைய சொத்துக்கள் வார்சுக்கிரமத்தில் அவனுடைய விதவை M க்குக் கிடைத்தது. B க்குஆண் சந்ததியில்லை. ஆதலால் C என்பவனை ஸ்வீகாரமாக எடுத்துக் கொண்டான். M என்பவளும் B என்பவனும் சேர்ந்து தத்தம் சொந்த சொத்துக்களைத்தாங்கள் இறந்து போனவுடன் C அனுபவித்து வரும்படியாக உயில் எழுதிவைத்தார்கள். அப்போது C மைனர், M என்பவளுடையவும் B என்பவனுடைய பராமரிப்பிலிருந்து வந்தான்; இப்படியிருக்கும் போது M இறந்து போய் விட்டாள். M இறந்து போன பின்பு அவள் B என்பவனின் சம்மதத்துடன் C க்கு உயில் எழுதிவைத்த சொத்துக்களில் சிலவற்றை B என்பவன் D என்பவனுக்கு கிரயம் செய்தான். C மெஜாரட்டி அடைந்தவுடன் M எழுதிவைத்த உயிலை ஆதாரவாக வைத்துக் கொண்டு D கிரயம் பெற்ற சொத்துக்களைப் பெறுவதற்கு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

விதவை M க்குப்பின் அவளுடைய புருஷனுடைய சொத்துக்களை அடையவேண்டிய வார்சு B யைத்தவிர வேறொருவருமில்லை. அந்த ஒரே வார்சுடைய சம்மதத்தை ஏற்று M என்பவள் C என்பவனுக்கு உயில் எழுதி வைத்தாள். B அப்போது சம்மதம் கொடுத்து விட்ட பிறகு எப்படி அந்த சொத்தை D க்குக் கிரயம் செய்யக் கூடும்?

ஒரு ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்துக்களைத்தான் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் அனுபவிக்கப் பாத்திய மிருக்கிறது. இந்த பாத்தியதையை அவள் இறந்து போனபிறகு அச்சொத்துக்கு வார்சாகவரக் கூடியவனுக்காகிலும் அல்லது அவனுடைய சம்மதமேற்று ஒரு அன்னியனுக்காகிலும் அவள் ஜீவதிசையிலிருக்கும் போதே கொடுத்து விடலாமென்று சென்னைப்பட்டணம் ஹைகோர்ட்டு புல்பென்சார் தீர்மானித்திருக்கிறார்கள்.—I. L. R. 21. Mad. 128.

---

ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் அடைந்த சொத்துக்களைத் தன்னுடைய காலக்ஷேபச் செலவுகளுக்காக விற்பனை செய்வது அவ்வளவு அவசியமில்லாமலிருந்த போதும் பம்பாய் ஹைகோர்ட்டார் அந்த விற்பனை செலாமணியாகு மென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக கேசிற்குத் தீர்ப்பு சொன்ன ஜட்ஜிகள் ஒரு குடும்ப மானேஜருக்கு நியாயமாக எவ்வளவு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமோ அவ்வளவு அதிகாரம் ஒரு ஹிந்து விதவைககுக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவள் இறந்து போன பின்பு அந்தச் சொத்துக்களை அடையவேண்டிய வார்சுகளுக்கு எவ்வளவு பாத்தியதை யிருக்கின்றனவோ அவ்வளவு பாத்தியதை தானம் பெற்றவனுக்கிருககிறதென்றும் அலகபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித் திருக்கின்றார்கள்.—10. All. 407.

அவசியமான செலவுகளுக்காக ஒரு ஹிந்து விதவை தனக்குப் பின் அச்சொத்திற்கு அப்போது (for the tlme being) பாத்தியமுடைய ஒரு வார்சுவின் சம்மதத்தை ஏற்று பெந்தகம் விற்பனை முதலிய பராதீனம் செய்திருந்தால் எந்த வார்சு பாத்தியதை யுடையவன் சம்மதங் கொடுத்தானோ அவனைவிட அதிக பாத்தியதை யுடையவனாகவும் உள்ளபடியே விதவை இறந்தவுடன் அவளுக்குப் பின் அச்சொத்தை அடைய வேண்டியவனும் அப்பராதீனங்களை ஆக்ஷேபிக்கக்கூடாது. அவன், பிறகு அச்சொத்துக்கள் தனக்குச் சேர வேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டு வந்தாலும் அப்பராதீனங்கள் செல்லுபடி யுள்ளது தான் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.-10. கல். 1102.

ஆதியில் இந்து லாவில் உயில் என்பது கிடையாது. இப்போது தான் சிற்சில விஷயங்களில் ஹிந்துக்களில் உயில்கள் செல்லுமென்று தீர்மானித்து வருகின்றார்கள். உயில் ஏற்பாடு இங்கிலாண்டைச் சேர்ந்தது. அந்த வழக்கத்தையும் ஏற்பாட்டையும் இப்போது நம் தேசத்திலுள்ளவர்களும் அனுஷ்டித்து வருகின்றார்கள். இத்தேசத்தில் ஜனங்கள் தாங்கள் இறந்துபோனபின் அனுபவிக்கும்படியாக யாருக்கேனும் கொடுத்து ஏற்பாடு செய்வதற்கு ஆதியில் "உயில்" என்கிற பெயர் வழக்கில் வராமற்போனபோதிலும் அது தானம் என்கிற பெயருடன் வழங்கிவந்தது.

எப்போது ஹிந்து விதவை தன்னுடைய புருஷனிட மிருந்து வார்சுக்கிரமத்தில்அடைந்தசொத்தை அவள்இறந்து போன பின்பு அச்சொத்தை அனுபவிக்கவேண்டிய வார்சுக்களின் சம்பதத்துடன் பராதீனம் செய்தால் அப்பராதீனம் செல்லுபடியுள்ளதென்று ஏற்பட்டிருக்கிறதோ அப்போதே அவள் ஷை வார்சுகளுடைய சம்மதத்துடன் உயில் எழுதிவைக்கவும் அவளுக்கு அதிகாரமிருக்கிறதென்றும் அவள் சட்டப்படிப் பராதீனம் செய்யக்கூடிய சொத்தை உயில் எழுதிவைக்க அவளுக்கு அதிகாரமில்லை என்று இதற்கு முன் எந்த ஹைகொர்ட்டாரும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவில்லை என்றும் ஆகையால் சட்டப்படி பராதீனம் செய்யவும் சட்டப்படி பராதீனம் செய்யக்கூடிய சொத்தை அவள்

உயிலும் எழுதிவைக்கலாமென்றும் ஆகவே இரண்டு பாத்தியதைகளும் அவளுக்கிருக்கிறதென்றும் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.—20. Mad. 162.

ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடையும் சொத்தைத் தன்னுடைய சொந்தப் பந்துக்களுக்குத் தானம்செய்வதை ஹிந்துமத சாஸ்திரங்கள் கண்டித்தபோதிலும் புருஷனுடைய பந்துக்களுக்குத் தானம் செய்வதை ஒப்புக்கொள்ளுகின்றன.

ஒரு ஹிந்து விதவை வார்சுக்கிரமத்தில் தன்னுடைய புருஷனிடமிருந்து அடைந்த சொத்தைத் தன் பந்துவால்லாதவும், தன்னுடைய புருஷனின் பந்துவல்லாதவுமான ஒரு அன்னியனுக்குத் தானம் செய்தாலும் அவள் இறந்துபோன பிறகு அச்சொத்தை அனுபவிக்கவேண்டிய வார்சுவின் சம்மதத்துடன் அச்சொத்தைத் தானம் (gift) செய்திருக்கிறபடியால் அத்தானம் செல்லும் என்றும் விதவைக்கும் வார்சுகளுக்கும் அச்சொத்தில் எம்மட்டில் பாத்தியதை யிருக்கின்றதோ அம்மட்டில் பின்புவரும் வார்சுகளுக்குப் பாதகமின்றி அச்சொத்தை மானேஜ்மெண்டு செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.—இ. லா. ரி. 18 பம். 534.

ஹிந்து விதவை தன்னுடைய சீதனச்சொத்தை உயிலில் எழுதிவைக்கலாமென்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—I. L. R. 1 Mad. 281, 166, 307.

ஒரு ஹிந்து விதவை தனக்குத் தன் புருஷனும் அல்லது இன்னும் யாராலேனும் தானமாகக் கொடுக்கப்பட்ட சொத்தை உயில் எழுதிவைக்கலாமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—1. பம. 155. 491 ; 21. பம். 170.

ஒரு ஹிந்து குடும்ப மானேஜருக்கு எவ்வளவு அதிகாரமிருக்கிறதோ அவ்வளவு அதிகாரமும் புருஷனிடமிருந்து வார்சுக்கிரமத்தில் சொத்தடைந்திருக்கும் ஒரு ஹிந்து விதவைக்கிருக்கின்றது என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—33. கல். 845.

புருஷனால் பட்ட கடன்கள் காலாவதியாகப் போயிருந்தாலும் அவைகளைத் தீர்க்கும்பொருட்டு ஹிந்து விதவை செய்யும் பாராதீனங்கள் செல்லுபடியுள்ள வென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கின்றார்கள்.—I. L. R. 11. Bom 320.

ஆகவே மேற்கூறிய தீர்மானங்களால் வார்சுக்கிரமத்தில் புருஷனுடைய சொத்தை அடையும் ஒரு ஹிந்து விதவை தான் இறந்துபோன பிறகு அச்சொத்திற்கு வார்சாக வரக்கூடியவர்களின் சம்மதத்தை ஏற்றுப் பாராதீனமும் செய்யலாமென்றும், உயிலும் எழுதி வைக்கலாமென்றும் முடிவு செய்யலாம்.

---

# CURRENT MONTH DECISIONS.
# நிகழ்மாசத் தீர்ப்புகள்.

## சென்னபட்டணம் ஹைக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்,
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 23789—1913.

லாப்பாயிண்ட்:—ஹிந்து லா.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—பெண் தேவதை அல்லது அம்மனுக்காக மட்டிலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு கோவிலில், கோவில் டிரஸ்டிகளில் சிலர் சேர்ந்து விக்நேஸ்வரர்செலயை ஸ்தாபித்தது நம்பிக்கைமோசமாக மாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் G. S. வெங்கடராம அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் V. புருஷோத்தம அய்யரும் ஆஜரானார்கள். (3-8-1915)

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் எயிலிங்,
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 1045 of 1907.

லாப்பாயிண்ட்:—பாத்திதையை ஸ்தாபிப்பது.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—பிரதிவாதிகள் ஜீவ திசையிலுள்ளவரையில் குடியிருக்கும்படியான பாத்திதையுடையவர்கள் என்றும் சொத்து வாதியின் வகுப்பாருக்குச் சொந்தமானதென்றும், வாதியின் வகுப்பாருக்குள்ள பாத்தியதையை ஸ்தாபிக்க வாதிகள் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள். இப்பேர்ப்பட்ட வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் எப்படி கணக்கிடப்பட வேண்டுமென்றால் தாவாவில் சம்பந்தப்பட்ட சொத்துக்கு வாதிகளுக்குப் பாத்தியதை கிடையாதென்று பிரதிவாதிகள் சொன்னது எந்தத் தேதியில் வாதிகள் கேள்விப் பட்டார்களோ அந்தத் தேதி முதல் 6 வருடங்களுக்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்க வேண்டும். பிரதிவாதிகள் வாதிகளுடைய பாத்தியதையை ஆக்ஷேபிக்கிறார்களென்று வாதி வகையராவின் பெரும்பான்மையோருக்குத் தெரிந்திருந்து அப்படி எந்தத் தேதியில் அவர்களுக்குத் தெரிய வந்ததோ அந்தத் தேதி முதல் 6 வருடங்கள் சென்ற பிறகு வாதி வகையராவின் சிறுபான்மையோரால் பாத்தியதையை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்று ருஜூப்பட்டால் ஸ்பெசிபிக் ரிலிப் ஆக்ட் (specific relief act) 42-வது பிரிவின்படி பாத்தியதையை ஸ்தாபிக்க கோர்ட்டார் மறுதளித்துவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.



லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் G. S. ராமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் T. R, ராமச்சந்திர அய்யரும் ஆஜரானார்கள், (5-8-1915)

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் எயிலிங்,
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெம்பர் 3 & 28 of 1915.

லாபாயிண்ட்:—கிரிமினல் கேசில் சமாதானம்.

ஐக்கோர்ட்டுத்தீர்ப்பு:—தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி தான் அடைந்த தண்டனைக்கு விரோதமாக ஐகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டான். ஐகோர்ட்டில் அப்பீல் நடவடிக்கையி லிருக்கும்போது குற்றவாளி பிரியாதியுடன் சமாதானம் செய்து கொண்டான். இந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ள ஐகோர்ட்டாருக்கு கி. பு. கோ. 345-வது பிரிவின்படி அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதார்களுக்காக மெஸர்ஸ் T. ராமச்சந்திர ராயரும், ராவ்சாகேப் V. வெங்கடராமய்யாவும், கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூடரும் ஆஜரானார்கள், (9-8-1915)

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்ஸர்,
ஜட்ஜி குமாரசாமி சாஸ்திரியார்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 2649 of 1913.

லாப்பாயிண்ட்:—விரோத அனுபவம்.

ஐக்கோர்ட்டுத்தீர்ப்பு:—1871, 1877, 1908-ஆகிய இந்த வருஷங்களில் பாஸ் செய்விக்கப்பட்ட காலாவதி தோஷ சட்டங்களின்படி ஒரு ஹிந்து விதவைக்கு விரோதமாக சொத்து அனுபவிக்கப்பட்டு வந்தது. அனந்தர வார்சுகளுக்கு விரோதமாக அனுபவிக்கப்பட்டு வந்ததாக எண்ணப்பட மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது,

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் B. சீதாராம ராவ், அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல் மிஸ்டர் K. சுந்தர ராவ் ஆஜரானார்கள், (10-8-1915)

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்,
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

சிவில் மிசிலேனியஸ் அப்பீல் நெம்பர் 2 of 1915.

லாப் பாயிண்ட்:—ஸ்வீகாரம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—A என்பவனும் B என்பவனும் பாகப் பிரிவினை யாகாது சேர்ந்த ஹிந்து குடும்ப சகோதரர்கள். A என்பவன் தனக்கு ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படி தன்னுடைய மனைவிக்கு அதிகாரம் கொடுத்துவிட்டு புத்திரனில்லாமல் 1907-ல் இறந்து போய்விட்டான். B, என்பவன் ஒரு புத்திரனை விட்டு விட்டு 1909-ல் இறந்து போய்விட்டான். 1911-ல் A என்பவனுடைய விதவை C என்பவனை ஸ்வீகாரமாக எடுத்துக்கொண்டாள்.

இந்த ஸ்வீகாரம் செல்லுபடி யுள்ளதென்றும் B என்பவனுடைய புத்திரனுடைய வகையி லிருக்கும் சொத்தில் C என்பவனுக்கு ஒரு பாகம் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் G. S. ராமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் A. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள். (10-8-1915)

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 2355 of 1913.

லாப்பாயிண்ட்:—நில சுவான்தாரும் குடியும்.

ஐகோர்ட்டு தீர்ப்பு.—தென் கன்னடத்தில் முல்ஜெரி (Mulgeri) குடிகள், குத்தகை எடுத்த நிலத்தின் குடிகளாகவிருந்து வரும்போது குத்தகை எடுத்த நிலத்தின் பேரில் அவர்களால் பயிர் செய்யப்பட்ட மரங்களையும் தானே வளர்ந்த மரங்களையும் வெட்டி அவைகளைத் தங்களுடைய சொந்த காரியங்களுக்கு உபயோகித்துக்கொள்ள பாத்திய முடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. ராமநாதசேநேயும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் B. சீதாராம ராவ் ஆஜரானார்கள் (10-8-1915.)

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 1989 of 1913.

லாப்பாயிண்ட் :—குத்தகை.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—குத்தகை அல்லது குடிக்கூலி பத்திரத்தில் தீர்வை அல்லது வாடகை செலுத்த ஒரு தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் தேதியில் செலுத்தத் தவறுதல் ஏற்பட்டால் வேறொரு தேதி குறிப்பிடப்பட்டு அந்தத் தேதிக்குள் செலுத்திவிட வேண்டுமென்று மிகவும் கண்டிப்பாய் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஆதரவில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் நிலுவை வாடகை அல்லது தீர்வையை முழுதிலும் வியாஜ்ஜியகாங்கி தேதியில் செலுத்திவிட்டால் கோர்ட்டார் அந்த ஆதாரவில் ரத்து செய்யாமல் அதற்கு உயிர் கொடுக்கலாம்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜ் மிஸ்டர் ஸ்பென்ஸர்.
ஜட்ஜ் மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 646 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு அடமான டிக்கிரி நிறைவேற்றப்பட்டு அடமானச் சொத்து ஏலம் போடப்பட்டபோது அந்தச் சொத்தை ஒருவன் வாங்கி

வைத்துக் கொண்டிருக்கிறான். அந்த சொத்தின் பேரிலிருக்கும்படியானவும் ஊர்ஜிதப்படுத்தப் படப்போகிறதாகச் சொல்லப்படும் மற்றொரு அடமானம் பரிகாரமற்ற அடமானம் என்றும் ருஜுவபடுத்த அவன் பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த அடமானம் சரியான அல்லது பரிகாரத்துடன் கூடிய அடமானம் என்று ருஜுவப்படுத்த வேண்டிய பொருப்பு எவன் அந்த அடமானத்தை ஊர்ச்சிதப்படுத்த எத்தனிக்கிறானோ அவனுடையது, பரிகாரமற்ற அடமானம் பிரயோஜனமற்றது. அடமானம் வைத்துக்கொண்டவனுக்கு அதனால் யாதொரு பாத்தியதையும் உண்டாகமாட்டாது என்று தீர்மானிககப்பட்டது.

லாயர்கள்:—அப்பில் வாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் அப்பில் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் T. V. முத்து கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள். (20-9-1915.)

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யா,
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 2523 of 1913.

லாப்பாயிண்ட்:—சென்னப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட்.

ஐகோர்ட் தீர்ப்பு:—குடியன் வசத்திலிருந்த நிலத்திற்குச் சேத முண்டானதை முன்னிட்டு நிலச்சுவான்தாருக்கு சென்னபட்டணம் பூஸ்திதி ஆக்ட் 151, 152-வது பிரிவுகளின்படி செய்யப்பட வேண்டிய பரிகாரம் விவசாயத்திற்கு நேரிட்ட சேதத்திற்காக மட்டிலும் நிலத்தில் நிலச்சுவான்தாருக்குள்ள பாத்தியதையின் மதிப்பும் பரிகாரமும் நிர்ணயிக்கப்படும்போது சேர்க்கப்படக் கூடாது. அப்படி நிலச்சுவான்தாருக்கும் பரிகாரம் செய்யப்படுவது நிலச்சுவான்தாருக்கும் குடிக்குமுள்ள சம்பந்தத்தைப் போக்கடிக்கமாட்டாது. அவர்கள் இருவருக்குமுள்ள சம்பந்தம் முன்னிருந்தது போல தொடர்ந் தோத்தியாக யிருந்து கொண்டு வரும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நில சுவான்தாருக்காக வக்கீல் மிஸ்டர் N. ராஜகோபாலாச்சாரியாரும் குடிக்காக மிஸ்டர் C. S. வெங்கடாச்சாரியாரும் ஆஜரானார்கள். (3-8-1915.)

---

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டா சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்கார்.

அப்பீல் வியாஜ்ஜிய நெம்பர். 82 of 1913.

லாப்பாயிண்ட் :—கோர்ட் பீஸ் ஆக்ட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—கோர்ட்டு பீஸ் ஆக்ட் 7-வது பிரிவின்படி கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் வாதி பரிகாரத்திற்கு மதிப்புப்போட்டு மஜர் பெற்றுக்கொண்டிருந்தால் (அந்தக் கேசில் ஆரம்ப டிக்கிரி) பிரதிவாதி முழு டிக்கிரிக்கி விரோதமாக அப்பீல் செய்து கொண்டிருந்தால் பிரயாதில் சொல்லப்பட்ட மதிப்புக்கு பிரதிவாதி கட்டுப்பட்டவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் K. பாஷியம், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. V. வெங்கட்ராமய்யர்.

---

## MISCELLANEOUS SUITS.

## நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

(4—9—1915)

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்கார்.

இரண்டாவது அப்பீல் நெ 1098 of 1914.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—தீர்வை பாக்கிக்காக மாமூல் அல்லது சங்கம சொத்துக்களை அக்கிரமமாக ஜப்தி, செய்ததற்காக ரயத்வாரி நிலத்தின் குடி அல்லது குடிக்கி உட்பட்ட குடி கொண்டுவரும் வியாஜ்ஜியம் ரெவினியு கோர்ட்டாரால் மட்டிலும் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்.—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் N. ஸ்ரீனிவாசாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும் ஆஜரானார்கள்

---

ஐக்கோர்ட்டு கிரிமினல் சேஷன்ஸ்.

செஷன் ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் டிராட்டர்.

பெரிய பரச்சேரி கொலைக்கேஸ்.

குற்றம்:—இந்தக் கேசில் சிங்காரம் என்பவன் கந்தசாமி அல்லது ஆரோக்கியம் என்னும் பெயருடையவனைக் கொலைசெய்து விட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான்.

லாயர்கள்:—குற்றவாளி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாசும் கவர்ன் மெண்டு தரப்பிற்குப் பப்ளிகபிராசிக் கியூட்டரும் பேசினார்கள்.

கேசின் வரலாறு:—ஜூரார்கள் நியமிக்கப்பட்ட பின்பு கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டர் மிஸ்டர் J. C. ஆடம் கேசின் வரலாற்றை அடியிற்கண்டபடி ஜூரார்களுக்கு எடுத்துச் சொன்னார்:—

இந்தக் கேஸ் சென்னைப்பட்டணம் ஜியார்ஜ் டவுன் பெரிய பரச்சேரிக்கிச் சமீபத்தில் 15-5-1915-ல் மத்தியானம் பட்டப்பகலில் நடந்தது. ஜியார்ஜ் டவுன் பெரிய பரச்சேரிக்கி சமீபத்தில் அம்மன்கோவில் தெருவில் ஒரு கள்ளுக்கடை யிருக்கிறது. 15-5-1915 மத்தியானம் கந்தசாமி அல்லது ஆரோக்கியம் என்று பெயருடையவன் தன்னுடன் இன்னும் இருவர்களையும் அழைத்துக் கொண்டு போய் கள் வாங்கிக் குடித்தான்.

ஒரு அரைமணி நேரத்திற்குப் பிந்தி குற்றவாளி சிங்காரம் என்பவன் தன்னுடைய இரண்டு சினேகிதர்களை அழைத்துக்கொண்டு அந்தக் கள்ளுக்கடைக்குள்ளவே புகுந்தான். சிங்காரம் கந்



சாமிக்கும் அவனுடைய சினேகிதனுக்கும் செலாம் போட்டான். கந்தசாமி சிங்காரத்தைப் பார்த்து ஐயா! நாங்கள் உங்களுக்கு இளையவர்களாயிற்றே எங்களைப்பார்த்து நீங்கள் செலாம் போடுவது நியாயமா என்று கேட்டான். அதற்கு சிங்காரம் "நீங்கள் பெரிய பரச்சேரியைச் சேர்ந்த பெரியமனுஷாளான படியால் உங்களுக்குச் செலாம் போட்டேன்" என்று சொன்னான்.

கந்தசாமி அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் தன்னுடன் வந்திருந்த இருவர்களையும் அழைத்துக்கொண்டு கள்ளுக்கடையை விட்டு வெளியே புறப்பட்டான், அப்போது சிக்காரம் கந்தசாமி என்பவனுடன் கூட வந்திருந்த இருவர்களில் அந்தோணி என்பவனை கையினால் ஒரு குத்து குத்தினான். குத்துப் பட்டவனுக்குப் பரிந்து கந்தசாமி சிங்காரத்துடன் சண்டைக்குப் போனான். சிங்காரம் தன்னுடைய இடுப்பிலிருந்த பிச்சுவாவைப் பிடுங்கிக் கந்தசாமியின் மார்பில் குத்தினான். கந்தசாமி என்பவனுடன் வந்திருந்த மற்றொருவனாகிய விஜயநகரம் என்பவன் சிங்காரத்தைத் திட்டினான். சிங்காரம் அவனையும் குத்தி காயப்படுத்தினான்.

சிங்காரம் போலீசாரால் கைதி செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுவரப் பட்டான். கொலை செய்யப்பட்ட கந்தசாமி வண்டியில் ஏற்றப்பட்டு பரச்சேரியிலிருக்கும் அவனுடைய வீட்டிற்கு கொண்டுபோகப்பட்டான். போனவுடன் இறந்து போய்விட்டான். பெரிய பரச்சேரியி லிருக்கும் பறையர்களுக்கும் செக்குமேடு பறையர்களுக்கும் விரோதமுண்டு.

இந்தப்பிரகாரம் பப்ளிக் பிராசிக்கியூட்டர் கேசின் வரலாற்றை ஜூரார்களுக்கு எடுத்துச் சொன்னதின் பேரில் பிராசிகியூஷன் தரப்பு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

சாக்ஷி விசாரணை:—பிராசிகியூஷன் தரப்பிற்குப் பிரேத பரிசோதனை செய்த டாக்டரைச் சேர்த்து 6 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். டிபன்ஸ்தரப்பிற்கு மூன்று சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—சாக்ஷி விசாரணை முடிந்த பின்பு இருதரப்பு லாயர்களால் அட்டிரஸ் பேசினார்கள். அதன்பிறகு ஜட்ஜி கேசின் சாராம்சத்தையும் அதில் அடங்கியிருக்கும் சட்டப் பாயின்ட்டையும் ஜூரார்களுக்கு எடுத்துச் சோன்னார்.

ஜூரார்களுடைய அபிப்பிராயம் :—ஜூரார்கள் ஆலோசனை அறைக்கு சென்று ஒரு அரைமணி நேரத்திற்குப் பிறகு திரும்பிவந்து குற்றவாளி சிங்காரம் சட்டப்படி கோபமென்று சொல்ல முடியாத கொலைகுற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். ஜட்ஜி ஜூரார்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் தண்டனை சொல்லுவதற்கு முந்தி குற்றவாளி இதற்கு முன் நல்லநடத்தை உடையவனாக விருந்ததாக ஏதேனும் அவனுக்கு சர்ட்டிபிகேட் யிருக்கிறதா என்று அவனுடைய பாரிஸ்டரை விசாரித்தார்கள்.

அவர் குற்றவாளி நல்ல நடத்தை உடையவன் என்று சொல்ல அவன் வேலையில் அமர்ந்திருந்த மெஸ்ஸர்ஸ் ஒக்ஸ் கம்பெனியார் இன்னும் தகுந்த மனுஷாளைக்கொண்டு ருஜுவப் படுத்தினார்.

தீர்ப்பு.—குற்றவாளி நல்ல நடத்தையுடையவனென்று ருஜுவப்பட்டிருப்பதால் மிகுந்த குறைந்த தண்டனை விதிக்க கோர்ட்டாருக்கு விருப்பமாயிருந்தபோதிலும் இவன் யாதொரு கோபமும் மூட்டப்படாமல் ஒரு மனிதனுடைய உயிரை எடுத்துவிட்டபடியால் குற்றவாளிக்கு 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கவேண்டியதா யிருக்கிறதென்று கோர்ட்டார் தீர்ப்பு சொன்னார்கள்.

---

## WIFE MURDER.

பாஷாணமிட்டு பெண்ஜாதியைக் கொலை
செய்த கேஸ்.

குற்றம்.—7-7-1915-ல் சென்னை ஜார்ஜ் டவுனில்வெங்கட்ராமய்யா என்கிற பிராமணன் ராஜாம்பாள் என்னும் தன்னுடைய பெண்ஜாதிக்கு காபியில் பாஷாணம் கலந்து கொலை செய்துவிட்டதாக கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டு செஷனுக்குக்கமிட் செய்யப்பட்டிருந்தான்.

லாயர்கள் :—கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் J. C. ஆடமும் குற்றவாளிக்கி ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் திருநாராயணச்சாரியாரும் ஆஜரானார்கள்.

கேசின் வரலாறு:—இந்த கேசை விசாரணை செய்ய ஜூரிகள் நியமிக்கப்பட்ட பின்பு பப்ளிக் பிராசிக்கியூட்டர் பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடம் ஜூரிகளைப் பார்த்து இந்த கேசின் வரலாற்றை ஆதியோடந்தமாக இந்தக் கேசின் பிராசிக்கியூஷன் தரப்பு மூன்றாவது சாக்ஷியாகிய சீத்தம்மாளுடைய வாக்கு மூலத்தைக்கொண்டு அறிந்து கொள்ளக் கூடியதாயிருப்பதால் தாமெடுத்துச் செப்பவேண்டிய தனுவசியமெனக் கூறி சாக்ஷிகளை விசாரணை செய்ய ஆரம்பித்தார்.

முதல் சாக்ஷியின் வாக்குமூலம் :—இவர் முனிசிபாலிட்டி ஓவர்சியர். இவர் கொலை நடந்த ஸ்தலத்தின் பிளானைத் தாக்கல் செய்து சாக்ஷி சொன்னார்.

இரண்டாவது சாக்ஷியின் வாக்குமூலம் :—இறந்துபோன ராஜம்மாளுடைய பிரேதத்தைப் பரிசோதனை செய்தவர். பிரேதத்தில் காணப்பட்ட சின்னங்களைப்பற்றி சாக்ஷியம் சொன்னார்.

மூன்றாவது சாக்ஷியின் வாக்குமூலம்:—என் பெயர் சீதம்மாள். நான் இறந்துபோன ராஜம்மாள் வீட்டில் நீண்ட காலமாக குடியிருந்து வருகிறேன். எனக்கு குற்றவாளியை நன்றாகத் தெரியும். குற்றவாளிகளும் அவனுடைய பெணஜாதி ராஜம்மாளுக்கும் நீண்டகாலமாக மனஸ்தாபமாக விருந்தார்கள். குற்றவாளி இதற்கு முந்தி ரூபாய் லக்ஷம் மதிப்புடைய ஸ்திதிவந்தனயிருந்தான் இவன் அவனுடைய சொத்துக்களை எல்லாம் விரயம் செய்துவிட்டான். குற்றவாளி இதற்கு முந்தி தன்னுடைய மனைவியின் விட்டிற்கு வருகிறதில்லை இப்போதுதான் இரண்டு மூன்று மாதகாலமாக அவனுடைய மனைவியின் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தான் நான் குடியிருக்கும் வீடு ராஜம்மாளுடையது. ராஜம்மாளுக்கு அவளுடைய தாயாரால்கொடுக்கப்பட்ட வீடு. குற்றவாளி ராஜாம்பாளைப் பார்க்க வந்த போதெல்லாம் அவளைப் பணமும் வேஷ்டியும் கேட்பதுண்டு. அவள் கையிலிருந்தால் கொடுப்பாள். இல்லாவிட்டால் கொடுக்கமாட்டாள். கொலை நடந்த தினம் காலை 11 மணிககு குற்றவாளி ராஜாம்பாளுடைய வீட்டிற்கு வந்தான். வெகு நாழி வரையில் ராஜாம்பாளுடன் பேசிக்கொண்டிருந்தான் குற்றவாளி பிறகு தான் போய் வருகிறேன் என்று ராஜாம்பாளிடம் சொல்லிக்கொண்டான். சாப்பிட்டுவிட்டுப் போகலாமென்று ராஜாம்பாள் சொன்னாள். குற்றவாளி தனக்கு சாப்பாடு தேவையில்லை காபி தேவை என்று சொன்னான். காபி தயார் செய்ய தன்னிடத்தில் துட்டு இல்லை என்று ராஜாம்பாள் சொன்னாள், குற்றவாளி தான் தருவதாகச் சொன்னான். ஆனால் காபி தயார் செய்கிறேன் என்று ராஜாம்பாள் பதில் சொன்னாள். குற்றவாளி காசு ராஜாம்பாளிடம் கொடுத்தான். "நீ காபி தயார் செய்தால் சரியானபடி பாலும் ஊத்துகிறதில்லை. சரியானபடி சக்கரையும் போடுகிறதில்லை ஆதலால் இன்றையதினம நானே காபி தயார் செய்கிறேன் என்று குற்றவாளி ராஜாம்பாளைப்பார்த்துச் சொன்னான். குற்றவாளி ராஜாம்பாளைப் பால் வாங்கிவரும்படி அனுப்பிவிட்டு அடுப்பாங்கரைக்குப் போனான், ராஜம்பாள் பால்வாங்கிக்கொண்டு வந்தாள். குற்றவாளி அந்தப் பால் போதாது இன்னும் பால் தேவை என்று இன்னொருமுறை பால் வாங்கிவரும்படியாக அவளை அனுப்பினான். அவள் இரண்டாம்முறையும் பால் வாங்கிக்கொண்டு வந்தாள். அவள் பால் வாங்கிக்கொண்டு வந்தவுடன் குழந்தைகளுக்கு பலகாரம வாங்கிக்கொண்டு வரும்படியாக குற்றவாளி ராஜாம்பாளிடம் துட்டு கொடுத்து அனுப்பினான். ராஜாம்பாள் பலகாரங்களை வாங்கிக்கொண்டு வந்தாள். இதர்குள் காபி தயார் ஆய்விட்டது. இதற்குள்ளாக சொரணம்மாள் என்னும் ஒரு ஸ்திரிவந்து சேர்ந்தாள். இவள் குற்றவாளியின் சினேகிதி. இவள் தனக்கும் ஒரு டம்ளர் காபி தேவை என்று குற்றவாளியைக் கேட்டாள். குற்றவாளி இவளுக்கு ஒரு டம்ளர் காபி கொடுத்தான். தான் ஒருடம்ளர் காபி சாப்பிட்டான். அதன்பிறகு ராஜாம்பாளுக்கும் ஒரு டம்ளரில் காபிஊத்திக்கொடுத்தான். குழந்தைக்கும் அப்படியே கொடுத்தான். இருவர்களும் காபி சாப்பிட்டார்கள், குற்றவாளி போய்வருகிறேன் என்று சொல்லிக்கொண்டு வீட்டைவிட்டு புறப்பட்டு எங்கேயோ போய்விட்டான். 5 நிமிஷத்திற கெல்லாம் குழந்தை வாந்தி யெடுத்துவிட்டது. ராஜாம்பாளுக்கு மயக்கம் கண்டது. என்னமோ மாதிரியாக வருகிறதே என்று ராஜாம்பாள் கூப்பாடு போட்டாள். என்னைக் கூப்பிட்டு அந்த தெருவிலிருக்கும் வைத்தியனைக் கூப்பிட்டுவரும்படி ராஜாம்பாள் எனக்கு சொன்னாள். அதற்குள்ளாக குற்றவாளி வீட்டிற்கு மருபடியும் வந்து சேர்ந்தான். ராஜாம்பாள் நோயும் பாயுமாய் கிடப்பதைப் பார்த்தான், வேகமாய்ப்போய் வைத்தியனைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான். வெண்மையாயுள்ள பஸ்பத்தை தண்ணீரில் கரைத்து ராஜாம்பாளுக்குக் கொடுத்தான். குற்றவாளி என்னை ஒரு ரூபாய் கேட்டான் என்னிடம் பணமில்லை என்று நான் பதில் சொன்னேன். குற்ற



ளி போய்விட்டான். "ஐயோ இந்த பாபி கொடுத்த காபியை நான் தெறியாமல் சாப்பிட்டு விட்டேன். ஏதேனும் அவன் அதில் கலந்திருப்பான்" என்று ராஜாம்பாள் என்னிடம் சொன்னாள். கடையில் ராஜாம்பாளுக்குப் பிராணன் போய்விட்டது.

மூன்றாவது சாக்ஷியின் வாக்கு மூலம்:—இவளும் இரண்டாவது சாக்ஷியைப்போல ஒரு பிராம்மண ஸ்திரீ. 2 வது சாக்ஷி சொன்னதுபோலவே சொன்னாள்.

பிராசிக்யூஷன் தரப்பில் இன்னும் சில சாக்ஷிகளும் விசாரணை செய்யப்பட்டார்கள்.

கடைசியில் கவர்ன்மெண்டு ரசாயன சோதகர் இறந்துபோனவளுக்கு காபி கொடுக்கப்பட்ட லோட்டாவிலிருந்த அடிமண்டைப் பரிசோதனை செய்து அதில் பாஷாண மிருக்கிதென்று கொடுத்திருக்கும் சர்ட்டிபிகேட் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளியின் வாக்குமூலம்:—குற்றவாளி தான் குற்றம் செய்யவில்லை என்றும் தனக்குத் தன்னுடைய பெண்ஜாதியைத தவிர வேறேபந்துக்கள் இவ்வுலகத்திலில்லை என்றும் இப்பேர்ப்பட்ட நிலைமையிருககும் நான் தன்னுடைய பெண்ஜாதியைக் கொலை செய்ய தன்னுடைய மனதை உடன் படுத்தச் சாத்தியப்பட மாட்டாதென்றும் சீத்தம்மாளே தனக்கும் தன்னுடைய பெண்ஜாதிக்கும் விரோதமுண்டாக்கி வைத்தாளென்றும் அவளிடமே ராஜாம்பாளுடைய பணமெல்லாமிருக்கிற தென்றும் அவளே ராஜாம்பாளுக்கு பாஷாணமிட்டுக் கொலையைச் செய்திருக்கக்கூடுமென்றும் கோர்ட்டாருக்குச் சொல்லிக்கொண்டான்:

குற்றவாளியின் லாயர் பேசினது :—ராஜாம்பாள் பாஷாணத்தால் கொல்லப்பட்டிருக்கிறாள் என்று ருஜூப்பட்டிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை யாயினும் பாஷாணமிட்டது இன்னாரென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை என்றும் மேலும் தன் சொந்த பெண்ஜாதியைக் கொல்லுவதற்குக் காரணம் ருஜூவாகவில்லை என்று சொன்னார்.

அதன் பிறகு ஜட்ஜ் ஜூரிகளுக்குக் கேசின் சாராம்சத்தையும் அதில் அடங்கியிருக்கும் சட்டப் பாயிண்டையும் எடுத்து சொன்னார்.

ஜூரிகள் அபிப்பிராயம்.—ஜூரிகள் ஆலோசனை அரைக்குக் கூட செல்லாமல் வீற்றிருந்தபடி குற்றவாளி கொலை செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—ஜூரிகள் கூறிய அபிப்பிராயத்தைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்துவிட்டார்கள்.

## RAPE CASE.

### துராக்கிருதப் புணர்ச்சிக் கேஸ்.

10 வயதுள்ள ருக்மணி என்னும் பெயர்கொண்ட ஒரு பெண்ணுடன் துராக்கிரதமான புணர்ச்சி செய்தா னென்று தங்கவேலுமுதலி என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டு செஷனுக்குக் கமிட்டி செய்யப்பட்டான். கிரவுன் பிராசிக்கியூட்டர் பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடமும் பாரிஸ்டர் மிஸ்டர் R. N. அய்யங்காரும் பிராசிக்கியூக்ஷன் தரப்புக்கு ஆஜரானார்கள். குற்றவாளிக்கு பாரிஸ்டர மிஸ்டர் ரெத்தின சோமநாதன் ஆஜரானார். வாதி தரப்பு விசாரணை முடிந்ததும் மறு நாள் எதிரி தரப்பு சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றம் நடந்ததாகச் சொல்லப்படும் சமயத்தில் எதிரி ஊரிலில்லையென்று டிபன்ஸ்தரப்பில் சாக்ஷி சொல்லப்பட்டது. ஜூரிகள் தங்கவேலு முதலி பலவந்த புணர்ச்சி என்னும் குற்றத்தை செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூற கோர்ட்டார் அதை ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு 10 வருட தீபாந்திரத் தண்டனை விதித்தார்கள்.

# *Important Rulings.*

# முக்கியமான தீர்ப்புகள்.

## HINDU LAW.

### ஹிந்து லா.

ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனுடைய எஸ்டேட்டின் ஒரு பாகத்தை எஸ்டேட்டைச் சட்டபடி கட்டுப்படுத்தும்படியான கடன்களுக்காகப் பராதீனம் செய்து கிரய ஆதரவு எழுதிக் கொடுத்தாள். இந்த ஆதரவில் எஸ்டேட்டில் தனக்குள்ள பாத்திரையைகிரையம் செய்திருப்பதாகச் சொல்லப்பட் டிருந்தது. அவசியமான கடன்களுக்காக எஸ்டேட் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட தென்றும் சொல்லப்பட் டிருந்தது. அந்த அவசியங்கள் இன்ன இன்னவை என்றும் எடுத்துச் சொல்லப்பட் டிருந்தது. கிரையம் பெற்றுக் கொண்டவன் கிரையம் அடமானம் முதலிய பராதீனங்கள் செய்யும்படியான சர்வசுதந்தரங்களுடன் எஸ்டேட்டை பாரம்பரியமாக அனுபவித்துக் கொண்டு வரவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. இந்தப் பராதீனத்தைப்பற்றி ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்ட போது கிரைய ஆதரவில் எஸ்டேட்டில் விதவைக் கிருந்த பாத்தியதை மட்டிலும் கிரையம் செய்யப்பட்டிருக்கிறதே யொழிய சர்வசுதந்தரங்களுடன் எஸ்டேட் கிரையம் செய்யப்படவில்லை என்று கக்ஷி சொல்லப்பட்டது.

எஸ்டேட் சர்வசுதந்தரங்களுடன் கிரையம் செய்யப்பட்டிருக்கிறதே யொழிய விதவை பாத்திதை மட்டிலும் கிரையம் செய்யப்பட்டிருப்பதாக எண்ணப்படக் கூடாதென்று பிரிவிகவுன்சிலர்களால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. 29 ம. லா. ஜெ. 130—Thakur Vasonji vs- Musamat Chanda Bibi. 29 M. L. J. 130

## Suits Valuation Act.
### வியாஜ்ஜிய மதிப்புத் தொகை ஆக்ட்.

அடமானத்தை மீட்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் அடமானத் தொகை எவ்வளவோ அதை கவனித்து அந்தத் தொகைக்கு மதிருஸ் சிவில் கோர்ட்ஸ் ஆக்ட்டின்படி எந்தக்கோர்ட்டில் தாக்கல் செய்யப்படவேண்டுமோ அந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஒரு சொத்து ரூபா 3899-4-0 க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்தது. இந்த அடமானத்தை மீட்பதற்காக சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்டது. அடமானத் தொகையும் வட்டியும் கூடி ரூபா 7,218-8.11 ஆயிருக்கிறது. கூடுதலான இந்தத் தொகைக்கு எவ்வளவு கோர்ட்டு ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டுமோ பிரியாதில் அவ்வளவும் ஒட்டப்படவேண்டுமென்று சப் கோர்ட்டார் தவறுதலாக வாதியைக் கட்டாயப் படுத்தினர்கள், வாதி சப் கோர்ட்டார் உத்திரவின்படி பாக்கிப்பட்ட ஸ்டாம்பை பிரியாதில் ஒட்டினர் இதனல் இந்த வியாஜ்ஜியத்திலிருந்து உண்டான அப்பீலைப் பிடித்து விசாரணை செய்ய ஜில்லாக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று சொல்ல முடியாதென்று சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ், ஜட்ஜி மிஸ்டர் ஹானே கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 29 ம. லா. ஜெ. 142—Mchamed Jnlladeen MareKayar vs. Muthu Vijaya Raghunatha Annasami Tbever. 29 M. L. J. 142

---

## ADOPTION.
### ஸ்வீகாரம்.

ஒரு ஹிந்து எழுதிவைத்த உயிலில் ஒரு குறிப்பிட்ட பையனை தனக்கு ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும்படியாக தன்னுடைய மனவிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. விதவையும் அந்த உத்திரவின்படி குறிப்பிடப்பட்ட அந்தப் பையனையே ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டாள். ஆனல் அந்த பையன் இறந்து போய் விட்டான்.

புருஷன் கொடுத்த அனுமதியைப் பிரயோகப்படுத்தி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பையன் இறந்து போனல் விதவை இரண்டாவது முறை வேறொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமென்றும் ஆனல் அனுமதி கொடுக்கப்பட்டிருந்த உயிலில் இரண்டாவது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படக் கூடாதென்று சொல்லப்பட்டிருந்திருக்கக் கூடாதென்றும் ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட பையனை ஸ்விகாரம் எடுத்துக் கொள்ளும்படி அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற போது இரண்டாவது முறை ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று யூகித்துக் கொள்ளப்படக் கூடாதென்று ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட் பீல்டால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 29. ம. லா. ஜெ. 144—M. Chenga Reddi ve. Vasudeva Reddi. 29 M. L. J- 144.

---

## ATTESTATION.
### சாக்ஷிக் கையெழுத்துப் போடுதல்.

இரண்டு கோஷாஸ்திரிகள் ஒரு அடமான ஆதாவு எழுதிக் கொடுத்தார்கள். இவர்கள் கோஷாஸ்திரிகளானபடியால் சாக்ஷிக் கையெழுத்து அந்த ஆதாரவில் போட்டவர்கள், அவர்களைப் பார்க்க முடியாது. அந்தஅடமான சம்பந்தமாக வியாஜ்ஜியம் உண்டான போது அடமானம் எழுதிக் கொடுத்த கோஷா ஸ்திரிகள் அடமான ஆதாரவில் கையெழுத்து செய்ததை சாக்ஷிகள் நேரில் பார்த்திருக்க முடியாதானபடியால் அந்த அடமான ஆதாவு செலாவணியாக மாட்டாதென்று கக்ஷி சொல்லப்பட்டது. ஸ்திரிகளுக்கும் சாக்ஷிகளுக்கும் மத்தியில் ஒரு படுதாப் போடப்பட்டிருந்ததென்றும் ஸ்திரிகளுடைய முகத்தைப் பார்க்க முடியாமற் போன போதிலும் சாக்ஷகள் அந்த ஸ்திரிகள் கையெழுத்து செய்ததைக் கண்ணல் பார்த்தார்கள் என்றும் அவர்களுடைய தொனியைக்காதினல் கேட்டார்கள் என்றும் சாக்ஷி விசாரணையில் ருஜுப்பட்டது. அந்த சந்தர்ப்பங்களுடன் சாக்ஷிகள் சாக்ஷிக் கையெழுத்து செய்தது சட்டப்பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்படகூடியதென்று பிரிவிகவுன்சிலர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 29 ம. லா. ஜெ. 159—Padarett Helwai vs. Pandit Ram Narain. 29 M. L. J. 159.

---

## DIVORCE ACT.
### விவாகப் பிரிவினை ஆக்ட்.

தன்னுடைய பெண்ஜாதி சம்சாரத்திற்கு யோக்கிதைபற்றவள் என்றும் அவளுடன் செய்து கொண்டு வந்த விவாகத்தை கோர்ட்டார் ரத்து செய்து வைக்க வேண்டுமென்று ஒரு கிறஸ்தவன் தன்னுடைய பெண்ஜாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். பிரதி வாதியை விவாகம் செய்த காலத்திலும் வியாஜ்ஜியத் தேதியிலும் அவள் சம்சாரத்திற்கும் அருகற்றவளாக விருந்தாள் என்று கண்டிப்பாய் ருஜுப்படுத்தப் பட்டாலொழிய வாதி கேட்டுக் கொண்டபடி டிக்கிரி கொடுக்கப்படமாட்டாதென்று சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் சீனிவாசய்யங்கார் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.—29 ம. லா. ஜெ. 183. Edward Charles Dawson vs. Matty Dawson. 29 M. L. J. 183.

## WIDOW S ALIENATION.
### விதவை பராதீனம்.

ஒரு ஹிந்து விதவை சட்டப்படி அவசியமான செலவுகளுக்காகத் தான் தன் புருஷனுடைய எஸ்டேட்டைப் பராதீனம் செய்திருக்கிருள் என்று ருசுப் படுத்த வேண்டிய பொறுப்பு அந்த எஸ்டேட்டைப் பராதீனம் செய்துக்கொண்டவனுடையது. எஸ்டேட் கிரய ஆதாவில் சட்டப்படி அவசியமான கடன்களுக்காகத்தான் எஸ்டேட் பராதீனம்செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருப்பதை அவன் நம்பிக் கொண்டிருந்தால் அவன் தவறிப் போய்விடுவான்.

கிரயம் அல்லது அடமானப் பத்திரத்தில் சட்டப்படிஅவசியமான செலவுகளுக்காகத்தான் பராதீனம் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டிருப்பது சாக்ஷியமாகமாட்டாது. கிரயப் பத்திரத்தில் இப்படி சொல்லப்பட்டிருப்பதை ருசுப்படுத்த வேறே சாக்ஷியமும் அவசியம் வேண்டியதென்று பிரிவி கவுன்சிலர்களால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. 15. ம. லா. டை 395-Lala Beij Lal V. Musammunt India Kunwar. 15 M. L. T. 395.

---



உபாயமான சொத்துடைய ஒரு குடும்பத்திற்குத் தகப்பனர் மானேஜராக விருந்து வருகிறர். அந்த தகப்பனர் பெயரால் சில சொத்துக ளிருக்கின்றன. அந்தச் சொத்துக்கள் தகப்பனருடைய குடும்பச் சொத்துக்கள் என்றும் பிதுர்ரார்ஜித சொத்தினுடைய உதவி யில்லாமல் அந்தச் சொத்துக்கள் வாங்கப்பட்டன வென்றும் கக்ஷி சொல்லப்பட்டது அந்தச் சொத்துக்கள் தகப்பனருடைய சுயார்ஜிதம் என்று ருசுப்படுத்த வேண்டியது யார். அவைகள் சுயார்ஜிதம் என்று யார் சொல்லுகிறர்களோ அவர்களுடையதென்று தீர்மானிக்கப்பட்டது. தாசியிலும் தாசிக்குள் ளிருக்கும்படியான ஒரு கட்டி உடன் பிறந்த வியாதியாக விருந்த போதிலும் சொத்திற்கு வார்சாகவரும் பாத்திதையை போக்கடிக்கக் கூடிய வியாதிகளில் சேர்ந்த நோயல்ல வென்றுதீர்மானிக்கப்பட்டது. 15. ம. லா. டை 418 Subba Naidu V. Venkatrama Naidu 15 M. L. T. 418.

---

சொந்தகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் மற்ற மெம்பர்களைச் சேர்த்துப் பாகப் பிரிவினை வியாஜ்ஜியம் கொண்டு வந்து டிக்கிரி பெற்றுக் கொண்டான். இந்த வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட்ட மற்ற பாகஸ்தர்களுக்குள் ஒருவன் மற்றவர்களை பிரதிவாதிகளாகச் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டு வந்தால் இந்த வியாஜ்ஜியத்தை முந்திய வியாஜ்ஜியம் தடைப்படுத்தும். குடும்பத்தைச் சேர்ந்த மெம்பர்கள் ஒருவனைத்தவிர மற்றவர்கள் தனித்தனியே வியாஜ்ஜியம் செய்து டிக்கிரி பெற்று அவரவர்களுடைய பாகத்தைப் பிரித்துப் பெற்றுக் கொண்டார்கள். பாகஸ்தர்கள் மற்ற பாகஸ்தர்களைப் பிரதிவாதிகளாக்கித் தனித்தனியே கொண்டு வந்த வியாஜ்ஜியங்களில் கக்ஷிக்காரனக விருந்த ஒரு பாகஸ்தன் பாகப் பிரிவினை செய்யப்படாமலிருக்கும் பாகம் அதாவது எல்லோருக்கும் பிரித்துக் கொடுத்தது போக மீந்திருக்கும் பாகம் தனக்குக் கிடைக்க வேண்டிய பாகத்தை விட குறைந்துபோயிருக்கிறதென்று கக்ஷி சொல்லுவதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறன் என்று தீர்மானிக்கப்பட்டது. 16 ம லா டை 544 Wabri Kanta Lahiri V Surnamoyi Debya 16 M. L. Γ. 544

---

அப்பீல் வாதியும் அவனுடைய சிறிய தகப்பனகிய R என்பவனும் சேர்ந்த குடும்ப மெம்பர்களாக விருந்தார்கள். R என்பவன் பேரில் வாங்கப்பட்ட ஒரு டிக்கிரி நிறைவேற்றப்பட்டு தாவாச் சொத்து 19-8.1902-ல ஜப்தி செய்யப்பட்டு 28–10-1902-ல் ஏலம் போடப்பட்டதற்கு டிக்கிரி பெற்றவனுடைய புத்திரனல் வாங்கப்பட்டது. இவனிடமிருந்து அப்பீல் வாதி அந்த சொத்தைக் கிரயம் பெற்றுக் கொண்டான். முதல் அப்பீல் பிரதிவாதி தன்னுடைய புருஷனிடமிருந்து தனக்கு ஜீவனும்சம் கிடைக்க வேண்டுமென்று R என்பவன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்து குடும்பச் சொத்து முழுமையும் பாத்தியப்படுத்தி 19-9-1902ல் ஒரு டிக்கிரி பெற்றுக் கொண்டாள். முதல் அப்பீல் பிரதிவாதி தான் பெற்ற டிக்கிரியை நிறைவேற்றி குடும்பச் சொத்தை ஜப்தி செய்தாள். அப்பீல் வாதி சொத்து தன்னுடையதென்று பாத்திதை மனு கொடுத்தான். கோர்ட்டார் அவனுடைய பாத்திதையையும் ஏற்றுக்கொண்டார்கள். சொத்தின் பேரில் தனக்கு ஜீவனும்ச டிக்கிரி கொடுக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு சொத்தை ஏலம் போட தனக்கு பாத்திதை யிருக்கிறதென்று தன்னுடைய பாத்திதையை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள். அப்பீல் வாதி தன்னுடைய பாத்திதைக் குட்பட்டு சொத்தைக் கிரயம் பெற்றிருப்பதாகவும் கக்ஷி சொன்னன். தன்னுடைய சக்களத்தி யாகிய இரண்டாவது அப்பீல் பிரதிவாதியையும் பிரதிவாதியாகஅந்த வியாஜ்ஜியத்தில் சேர்த்துக் கொண்டாள். அப்பீல் பிரதிவாதி என்ன கக்ஷி சொன்னன் என்றல் தான் ஏலத்தில் சொத்தை எடுத்தவனிடமிருந்து யாதொரு பாத்திதைக்கும் உட்படுத்தப்படாதபடி சொத்தை வாங்கின படியால் ஜீவனம்ச டிக்கிரி குடும்பச் சொத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கக் கூடாதென்பதே.

முதல் அப்பீல் பிரதிவாதியின் ஜீவனும்ச பாத்திதைக் குட்பட்டு அப்பீல் வாதி சொத்தை வாங்கியிருப்பதாக ஜட்ஜ் மிஸ்டர் டையாப்ஜி, ஜட்ஜ் மிஸ்டர் ஸ்பென்ஸர் கூடிய சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது I6 ம. ல. டை 551: S Krishna Bather V Ramasawmy Bather 16 M. L. T. 551

---

## OUR CLIENTS' PAGE.
### எங்களுடைய கக்ஷிக்காரர்களுடைய பக்கம்.

மதுரை பாலசுப்பிரமணிய அய்யர்:—தங்களுடைய கடிதம் எங்களுக்கு ஜூன்மாசத்தில் கிடைத்திருந்த போதிலும் தாங்கள் கேட்ட கேள்விக்குப் பதில் எழுத இதுகாறும் தாமதப்பட்டது. ஆயினும் தங்களுடைய கேசைப் போலவே ஐக்கோர்ட்டிற்கு ஒரு இரண்டாவது அப்பீல் வந்து ஒருவனுக்கு ஒரு சொத்தின் பேரில் இரண்டு அடமான பத்திரங்களிருந்தால் முதல் அடமான பாத்திதையை உட்படுத்தி இரண்டாவது அடமானதார் அடமானத்தின் பேரில் சொத்தை ஏலம் போட வியாஜ்ஜியம் கொண்டு வரப்படலாமென்று சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஏய்லிங் கூடிய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தங்களுடைய இரண்டாவது அடமானத்தின் பேரில் வியாஜ்ஜியமெடுத்து சொத்தை ஏலத்திற்குக் கொண்டு வந்து விடலாம். 29 ம. லா. ஜெ. 195 ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேசை தங்களுடைய ஊரிலுள்ள லாயரைக் கொண்டு பார்த்து அறிந்து கொள்ளலாம்.

திருப்புரம்குன்றம் ரெகுநாத ரூபர்:—விவாகப் பிரிவினை கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டதேயொழிய ஹிந்துக்களுக்கு ஏற்பட்டதல்ல. ஆதலால் விவாகம் பிரிவினை ஆக்ட்டைக் கொண்டு யாதொரு நடவடிக்கையும் நடத்த சாதகியப் படாது. என்பது நம்முடைய அபிப்பிராயம்.

கோயமுத்தூர் மீனக்ஷி அம்மாள்:—தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது ஆயினும் எங்கள் ஆபீசால் அது கவனிக்கப்படவில்லை.ஏன் என்றல் அபிப்பிராயம் கேட்கும் கடிதத்துடன் ரூ 5 எங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்பது எங்களுடைய ஆபீசின் விதிகளில் ஒன்று.

சோளவந்தான் மாசிலாமணி முதலியார்:—அடமானத்தை மீட்பதற்காக கொண்டு வரப்படும் வியாஜ்ஜியம் எந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படவேண்டு மென்பதற்கு அடமானத் தொகை எவ்வளவென்று கவனித்து அந்த தொகை சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியம் எந்த கோர்ட்டில் தாக்கல் செய்யப்படத் தகுதி உடையதோ அந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டும், அடமானத் தொகையும் வட்டியும் சேர்ந்து கூடுதலான தொகையின் பேரில் கோர்ட்டு ஸ்டாம்பு போடப்படக் கூடாது.

மனமேல் குடி பண்டாரம்.—நீண்ட காலத்திற்கு தேவஸ்தான நிலத்தை குத்தகை விட்டது டிரஸ்ட்டியை மானேஜ்மெண்டிலிருந்துநீக்கப்போதுமான காரணமல்ல. ஆகையால் வியாஜ்ஜியம் கொண்டு வர உமக்கு அபிப்பிராய மிருந்தால் இன்னும் சில காரணங்களைச் சொல்ல வேண்டும்,

திருநெல்வேலி ருக்மணி அம்மாள்:—இரண்டாவது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாமா கொள்ளக் கூடாதா என்பது உம்முடைய பர்த்தா எழுதிவைத்து விட்டுப் போன உயிலைப் பார்த்துச் சொல்ல வேண்டுமே யொழிய பார்க்காமல் நாங்கள் சொல்ல சாத்தியப்படாது. ஆகையால் உயிலை எங்களுடைய ஆபீசிற்கு ரெஜிஸ்டர் தபாலில் அனுப்பிவிடவேண்டும். தங்களுடைய கேசைப் போல ஒரு கேஸ் சில தினங்களுக்கு முந்தி சென்னை ஐக்கோர்ட்டிற்கு வந்து ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர் இரண்டாவது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலா மென்றும் ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட் பில்ட் எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும் பேதப்பட்ட அபிப்பிராயம் கூறியிருக்கிறது. ஆகையால் உயிலை எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சென்னை கிருஷ்ணய்யங்கார்:—இன்னும் தங்களுடைய கேஸ் தஸ்தா வேஜிகள் அச்சிடப்படவில்லை.

## ஐரோப்பா மகா பெரிய யுத்தம்.

யுத்தம் ஆரம்பமானவுடன் அது சம்பந்தமான சமாச்சாரங்களை நம்முடைய கெஜட்டில் பயிரங்கப் படுத்திக்கொண்டு வந்தோம். ஆனால் இரண்டு மூன்று மாதங்களாக கெஜட்டில் இடம் அகப்படாததை முன்னிட்டு அவைகளைப் பிரசுரிக்கவில்லை. ஆயினும் யுத்தவிஷயங்களை நம்முடைய நேயர்களுக்கு சிறிதேனும் அறிவிக்காம லிருப்பது தகாதென்று அபிப்பிராயப்பட்டு இம்மாத கெஜட்டில் பிரசுரிக்கத் தீர்மானித்தோம். மேலும் நிகழ் மாதம் 4-ந்தேதி யுத்த வருஷபூர்த்தி விசேஷம்பிரிட்டிஷ் ராஜ்ஜியமுழுவதிலும் நடத்தப்பட்டது. நம்முடைய சென்னையிலும் செனட்ஹால் என்று சொல்லும்படியானகட்டடத்தில் மேன்மைதங்கிய கவர்னர் அக்கிராசனத்தின்கீழ் ஒருமீட்டிங் நடத்தப்பட்டது. ஆதலால் நம்முடைய சட்ட கெஜட்டில் யுத்தத்தைப் பற்றி பிரசுரிக்க அவசியம் ஏற்பட்டு விட்டது.

இந்த யுத்தம் இதுகாலபரியந்தம் நடக்காத மஹா பெரிய யுத்தம் என்று எல்லோராலும் சொல்லப்பட்டு வருகிறது. இது மகா பெரிய அற்புதமான யுத்தமாகவும் எண்ணப்பட்டு வருகிறது. ஏன் என்றால் இதுகால பரியந்தம் பூமியிலும், சமுத்திரத்திலும் மட்டிலும் யுத்தம் நடந்து கொண்டு வந்தது. இப்போது ஆகாயத்திலும் பூமிக்குள்ளும் யுத்தம் நடத்தப்பட்டு வருகின்றது. ஆனால் யுத்தம் ஆரம்பமாகி இப்போது ஒருவருடம் ஒருமாதமாகியும் எங்கக்ஷிமுழுதிலும் வெற்றி அடைந்திருக்கிறதென்று சொல்லக்கூடவில்லை. ஜெர்மனியர்கள் இங்கிலீஷ் துருப்புகள், பிரான்ஸ், பெல்ஜயம் எல்லை ஓரத்திற்கு வருவதற்கு முந்தி பெல்ஜியத்திற்குள் முன்னேறி வந்துவிட்டார்களல்லவா அந்த நிலையிலேயே கடந்த 8 மாதங்களாக நிற்கின்றார்கள். கலே நகரையும் பாரிஸ் நகரையும் ஜெர்மானியர்கள் பிடிக்கப் பல பிரயத்தனம் செய்தும் சாத்தியப்படாமற் போய்விட்டது. மேற்கு யுத்த களத்தில் கடந்த 8 மாதகாலமாக யுத்தம் ஒரே நிலமையிலிருந்துகொண்டிருக்கிறது. கிழக்கு யுத்த களத்தில் ருஷ்யர்கள் யுத்ததந்திரத்தை முன்னிட்டு பின்வாங்கிக்கொண்டு போகிறார்கள், போலண்டு தேசம் ஜெர்மானியர் கையில் விழுந்திருக்கிறது. பால்டிக் மாகாணத்திலும் ஜெர்மானியர்கள் முன்னேறிக்கொண்டு போகிறார்கள். ருஷ்யர்களுக்குப் போதுமான யுத்த ஆயுதங்களும் யுத்த மருந்தும் வந்து சேர்ந்து விட்டன. ஜார்ஜ் சக்கிரவர்த்தியார் தாமே சேனைக்குத் தலைவரா யிருந்து அதை நடத்திக்கொண்டு வருகிறார். ருஷ்யர்கள் ஜெர்மானியரை ருஷியாவைவிட்டு விரட்ட பலத்த பிரயத்தனங்கள் செய்துகொண்டு வருகிறார்கள். டார்டினல்சில் நேசப்படை மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டு வருகின்றது. இப்போது அலிபாச்சா என்னும் விடத்திற்குச் சமீபத்தில் வந்து விட்டது. அந்த விடத்தை கூட்டுப் படை பிடித்து விட்டால் டார்டினல்ஸ் முழுதிலும் கூட்டுப்படையின் கையில் விழுந்ததற்குச் சமம் என்று சொல்லப் படுகிறது. கான்ஸ்டான்ட்டி நோப்பிலில் துருக்கியர்கள் ஜெர்மனியாரைக் கணடால் சுட்டு வருகிறார்கள். துருக்கியர் நேச அரசாங்கத்தாருடன் சமாதானம்செய்து கொள்ள சில பிரதிநிதிகளை இம்மாதம் ஆர்மீனியாவிற்கு அனுப்பி யிருக்கிறார்கள். இட்டாலிக்கும்



ஆஸ்டிரியாவுக்கும் மும்முரமான சண்டை நடந்து கொண்டு வருகிறது. இட்டாலியர் இஜான்ஜோ நதியைத் தாண்டி ஆஸ்டிரியாவின் எல்லையில் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். ஜெர்மனியர் ஆசியா கண்டத்திலும் ஆப்ரிக்கா கண்டத்திலும் தங்களுக்குச் சொந்தமாயிருந்த தேசங்களை இழந்துவிட்டார்கள். நேசப்படை ஜெர்மனிக்குள் ஆகார சாமான்கள் நுழைவதைத் தடுத்து வருகிறபடியால் ஜெர்மனியில் ஆகார சாமான்களும் மற்றுமுள்ள இயற்கைப் பொருள்களும் அகப்படாமல் ஜெர்மனியர் கஷ்டப்பட்டு வருகிறார்கள். இருதரப்பாரும் ஏராளமான பணத்தை வாரி இறைத்து யுத்தத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஜெர்மன் சக்கிரவர்த்தியாகிய கேய்சர் 45 வருடகாலமாக யுத்தத்திற்கு ஆயுத்தம் செய்துகொண்டு வந்திருக்கிறார். நேச அரசாங்கத்தார் யுத்தம் ஆரம்பிக்கும் வரையில் யாதொரு ஆயுத்தமும் செய்யாம லிருந்திருக்கிறார்கள். ஆகையால் இருதரப்பாரும் நடத்தியிருக்கும் சண்டையை சீர்தூக்கிப்பார்த்தால் கூட்டு அரசாங்கத்தாரே நாளது வரையில் நடந்த சண்டையில் வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்றும் இனிமேல் வெற்றி அடையப் போகிறவர்களும் மன்னாதி மன்னன் பிரிட்டிஷ் மன்னன் தலைமையாயுள்ள நேச அரசாங்கத்தார்களே என்பதில் சந்தேகமில்லை.

## A DIALOGUE.

### ஒரு சம்பாஷணை.

தஞ்சாவூர் ஜில்லா திருக்கண்ணமங்கையில் ஒரு நில சுவான்தாருக்கு ருக்மனி, வேதவல்லி என்றும் இரண்டு பெண்ஜாதியிருக்கிறார்கள். நில சுவான்தார் புத்திரபாக்கியமில்லாமல் இறந்து போய்விட்டார். ஒரு நாள் சூரியன் உதயமாகி மறைந்து போனாலும் போகக்கூடும். இரண்டுவிதவைகளுக்கும் சச்சரவு உற்பத்தியாக மறந்து போகமாட்டாது. ஆதலால் இளையாளாகிய வேதவல்லி அடுத்த கிராமத்திலிருந்த தன்னுடைய தமையனார் பிள்ளையை தன்னுடைய புருஷனுக்கு ஸ்வீகாரம் எடுத்துககொண்டாள். ஸ்வீகாரக் கலியாணமும் மிகவும் சம்பரமாக நடந்தேறியது. கலியாணத்திற்கு ரூபாய் ஆயிரம் செலவானது. கலியாணம் முடிந்து போனவுடன் வேதவல்லிக்கும் அடுத்த வீட்டு ரெங்கநாயகிக்கும் அடியிற்கண்டபடி சம்பாஷணை நடந்தேறியது.

ரே.—வேதவல்லி! நல்லகாரியம் செய்தாய்! நல்ல யோஜனை செய்தாய்! நீ மட்டிலும் உன் தமையன் மகனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளாமற் போனால்! வேதவல்லி! உன் கெதி அதோ கெதியாய் விடுமல்லவோ ?

வே.—ஆம்! அது மெய்தான். அவள் (புருஷன்) இறந்து போனவுடன் அப்பப்பா என்ன பாடு படுத்தி வைத்தாள். தெய்வம் தான் சகிக்குமோ? சண்டாளித் தட்டுவாணி. அவளும் ஒரு மனுஷியா!

ரே.—இறைஞ்சி பேசாதே! ருக்மணி காதில் விழப் போகிறது!

வே.—காதில் விழுந்தால் விழட்டுமே! அவள் இனிமேல் என்ன செய்யக்கூடும் ?

ரே.—அப்படிச் சொல்லக்கூடாது! எப்படி யிருந்தாலும் அவள் உன் புருஷனுக்குப் பட்டஸ்திரியல்லவா ? உன் புருஷனுடைய சொத்திற்கு முதலில் பாத்தியமுடையவள் அவள் தானே!

வே:—அவள் பட்ட ஸ்திரீயாயிருந்த போதிலும் நானல்லவோ ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டிருக்கிறன்.

ரே—ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டிருந்தாலென்ன?

வே—என் புருஷனுடைய சொத்துக்கள் எல்லாம் என்னுடைய ஸ்வீகாரப் பிள்ளைக்குப் போய்விடும். அப்போது எனக்கும் ருக்மணிக்கும் எங்களுடைய புருஷனுடைய சொத்திலிருந்து ஜீவனும்சம் பெற்றுக் கொள்ளும் பாத்தியதையைத் தவிர! வேறெ எங்களுக்கு என்ன பாத்தியதை யிருக்கிறது. ஆதலால்! ருக்மணி ஜபம் இனிமேல் பலிக்கமாட்டாது.

(ஸ்வீகாரப் புத்திரனைப் பார்த்து) வாடா என்கண்மணி, சீராளா என் செல்வமே! இன்றைய சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் டி "டீ" சாப்பிட்டாயா? ரெங்கசாமி; அம்மா சாப்பிடவில்லையே!

வே:—அடடா ஏன்? இப்போது மணி 6 ஆயிற்றே? விளக்கு வைக்கப் போகிறதே! சமையல்காரி அலமேலு அடுப்பங் கரையிலிருப்பாள்! உடனே ஓடிப் போய் அவளை டீ கேள்! அவள் கொடுப்பாள்! நீ வாங்கி சாப்பிட்டு விட்டு வந்து விடு! என் கண்ணே. அது தாண்டா என் கண்ணிற்கு முக மெல்லாம் சோம்பிப் போயிருக்கிறது. போ போ சீக்கிரம். ஓடு ராஜா?

ரெ:—இன்னொரு முறை கேட்க வேணுமோ? இப்போது தான் அடுப்பங் கரையில் அரைமணி நேரம் காத்திருந்து விட்டு. வருகிறேன் டீயையும் காணோம்! டோவையையும் காணோம்.

வே:—அலமேலு அடுப்பங் கரையில் இல்லையோ?

ரெ:—இருக்கிறாள்.

வே:—என்ன சொன்னாள்?

ரெ:—பெரிய அம்மா ருக்மணி டீக்கு பால் இல்லை என்று சொன்னாளாம்.

வே:—என்ன வேடிக்கையா யிருக்கிறது? பாலாவது இல்லையாவது! மாடா 4 கறக்கிறது. நீ ரெங்கா ஓடிப் போய் அலமேலைக் கையோடு கூப்பிட்டுக் கொண்டு வந்துசேரு.

(பையன் ஓடிப்போய் அழைத்துக் கொண்டு வந்து விட்டான்)

வே:—அலமேலு ஏன் என் சீராளனுக்கு இன்று டீ கொடுக்கவில்லை.

அல:—அம்மா உரலுக்கு ஒரு புரம் இடி. மத்தளத்திற்கு இரண்டு புரமும் இடியாயிருக்கிறது. உங்களுக்கும் ருக்மணிக்கும் வந்திருக்கிற சண்டையில் என்பாடு துன்பமாயிருக்கிறது. நான் என் வேலையை விட்டு விட்டு ஓடிப் போய் விட்டாலும் பாதகமில்லை போலிருக்கிறது.

வே:—என்னடி நான் குழந்தைக்கு ஏன் டீ கொடுக்க வில்லையென்று கேட்டால் என்ன கம்பராமாயணம் எல்லாம் சொல்லுகிருயே.

அல:—வீட்டுக்கதையே கம்பராமாயணமா யிருக்கிறது. டீக்குப் பால் வார்க்க ருக்மணியிடம் போய் பால் கேட்டேன். அவள் பாலுமாச்சு கீலுமாச்சு ஸ்வீகாரப் புத்திரனுமாச்சு ஸ்வீகாரப் புத்திரனைச்சு மாடு மேய்க்கச் சொல்லு போ. கொட்டத்தில் கறக்கிறமாடு அவன் அப்பன் வீட்டுச் சொத்தோ? பால் கிடையாது போ என்று பதில் சொல்லி என்னை ரொம்பவும் கண்டித்தாள்.

ஆண்டி:—நந்த வனத்திலோர் ஆண்டி அவன் நாளாருமாதமாய் (என்று பாட ஆரம்பித்தான்)

வே:—ஆண்டி பரம்பரை பிச்சைக்காரனு? பஞ்சத்துப் பிச்சைக்காரனு? பிச்சைக்காரர்கள் காலை வேளையில் வருவார்கள் என்று பெயர்! போ போ இப்போது ஒன்றும் போட முடியாது.

ஆண்டி:—குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி அம்மா அமுதுபடி போடுங்கள்.

வே:—ஆண்டி நாங்கள் என்னமோ கவலையாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். நீ ஏன் நிற்கிருய்? போய் விடு.

ஆண்டி:—ஆஞ்சி ஓஞ்சி பாராத காரியம் தான் சாவக்கெடும். "வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" இந்த இரண்டு வாக்கியங்களும் அம்மா உங்கள் மனதில் இருக்க வேண்டும்.

வே:—அலமேலு என்ன ஆண்டி இப்படி சொல்லி விட்டுப் போகிறான்.

அல:—பிச்சை போட வில்லை. ஆதலால்! புலம்பிக் கொண்டு போகிறான். இது ஒரு அதிசையமா? நல்லது! அம்மா ருக்மணிக்கும் உங்களுக்கும் எப்போதும் ஓயாச் சண்டையாயிருக்கிறதே! ஸ்வீகாரம்தான் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களே! இதற்கு ஒருவழி செய்து கொள்ளக்கூடாதா?

வே:—ஆம் அது தான் இன்று முதல் அதுதான் வேலை. என் பிள்ளைக்கு பால் இல்லை யென்று சொன்ன குச்சுக்காரியை நான் சும்மா விடவா போகிறேன் பார்க்கிறேன். ஒரு கை அலமேலு! நீ போய் அடுத்த தெரு சொக்கநாத பிள்ளையை கையுடன் கூப்பிட்டுக் கொண்டு வா? வழியிலே வள்ளுவக் குழந்தைவேலுவை வரச் சொல்லி விட்டுப்போ-போகிறாள்.

சொக்க:—அம்மா ஏன் கூப்பிட்டனுப்பினீர்கள்?

வே:—தீபம் வைக்கிற சமயமாக விருக்கிறது. ஒரு ஜோசியம் கேட்க வேண்டியதா யிருக்கிறது. அதற்காக உன்னை வரவழைத்தேன்.

சொக்க:—உங்களுடைய குடும்ப சமாசாரங்கள் எல்லாம் கிராமமுழுதிலும் தெரிந்த விஷயந்தான். விபரமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. என்ன கேட்க உத்தேசித்திருக்கிறீர்களோ அதை சீக்கிரம் கேட்டுக் கொள்ளவும்.

வே:—ஸ்வீகாரப் பையன் ருக்மணியின் பேரில் வியாஜ்ஜியம் போட்டால் ஜெயிக்குமா? பக்லிக் கூட அப்போது சொல்லுகிறது.

மகன்:—உச்சியில் பல்லி சொன்னல் உயர்ந்தவன் கெடுவனுவான்! வைத்தவன் மறந்து போய் விட்டால் எடுத்தவன் கொடுக்கமாட்டான்.

வே:—அதோ சொக்கநாதபிள்ளை கூட வந்து விட்டார்.

சொக்க:—அம்மா எதற்காக என்னை வரவழைத்தீர்கள்.

வே:—நாகப்பட்டணம் போ.

சொக்க:—வக்கீலிடமோ.

வே:—ஆம்.

சொக்க:—ஸ்வீகாரப் பையனை விட்டு கேஸ் எடுக்கத்தானே?

வே:—ஆம் ருக்மணி ரொம்பவும் இம்சை படுத்துகிறாள்.

சொக்க:—அதற்கு நாகப்பட்டணம் போக வேண்டியதில்லை. அது இவ்விடத்திலாக வேண்டிய காரியம்.

வே:—இந்த கிராமத்தில் லாயர் இல்லையே.

சொக்க:—இப்போது 6 மாதமாக சென்னப்பட்டணம் இந்திய சட்ட கெஜெட்டை சந்நிதிவீதி எழுத்துக் கூலி ருமய்யங்கார் வாங்கி யிருக்கிறார் சட்டப்பாயின்ட் கேட்கிறவர்கள எல்லாம் அவரிடம் போய் கேட்கிறார்கள். அவர் அந்த கெஜெட்டைப் பார்த்து பொட்டுத் தட்டினது போல் சொல்லி விடுகிறார். அவர் சொல்லும் ஜவாப்பும் சரியாயிருக்கிறது ஆதலால் கிராமத்தில் இப்போது எவரும் லாயரிடம் போகிறதில்லை. இதோ நல்ல வேளையாய் இந்திய சட்ட கெஜெட்டுடன் தெரு வழியாகப் போகிறாரே.

வே:—ஆனால் கூப்பிடுங்கள்.

ரும:—சொக்கநாதபிள்ளை என்ன விசேஷம்.

சொக்க:—ஸ்வீகாரப் புத்திரன் வியாஜ்ஜியம் எடுத்தால் செல்லுமா?

ரும:—அந்த குடும்ப சமாசாரம் கிராமமுழுதிலும் தெரியும். எனக்கும் தெரியும். நானும் இதைப் பற்றி ஏற்கனவே பார்த்து வைத்திருக்கிறேன். ஆனால் எனக்குக் கொடுக்க வேண்டியதைச் கொடுத்தால் பார்த்துச் சொல்லிவிடுகிறேன்.

சொக்க:—வேதம்! ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு ரூபாய் 5 கொடுப்பது வழக்கம். அதை இப்போது கொடுத்து விடு. (கொடுத்தாள்)

ரும:—ஆய்ந்து ஓய்ந்து பாராத காரியம் தான் சாகக் கடவது. ஸ்திரி ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளுவதாக விருந்தால், பலமாக முன் யோஜனை செய்திருக்க வேண்டும். இரண்டாவது, விதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டால் மூத்த விதவையினுடைய சம்மதத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தப் புஸ்தகம் 76-ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வே:—ஐயோ என்ன செய்வேன். அடுப்பு அணைந்து போனது மல்லாமல் வாய்த்த வீடும் போய் விட்டதே.

சொக்க:—ஸ்வாமி இது நல்ல புஸ்தகம். இதை வாங்கின பிறகு 6 மாதத்திற்குள் ஒரு வேலி நிலம் வாங்கி விட்டீர்களே.

ரும:—ஆம் இன்னும் நான் பட்டண பாகங்களி லிருந்தால் இன்னொரு வேலி நிலம் கூட வாங்கி யிருப்பேன்.

சொக்க:—இந்த புத்தக கம்பெனியாரின் விலாசம் என்ன, வருஷ சந்தா என்ன

ரும:—இதை இதற்கு முந்தி பிரசுரம் செய்து கொண்டுவந்த மெஸர்ஸ் ராதாகிருஷ்ண கம்பெனியார், மெஸர்ஸ் கிருஷ்ண அண்டு பிரதர்ஸ் என்கிற கம்பெனியாரிடம் விற்றுப் போட்டார்கள். இந்த கம்பெனியார் சென்னப்பட்டணம் சிந்தாதிரிப் பேட்டை குருவப்ப செட்டிவீதி 23-வது நெம்பர் வீட்டிலிருக்கிறார்கள்.

சொக்க:—இந்தப் புஸ்தகத்தை மடடிலும் ஒருவன் கையில் வைத்துக் கொண்டால்! அவனுக்குப் பண வருமையே உண்டாக மாட்டாது. லக்ஷ்மி அவன் வாயிலில் நிர்த்தனம் செய்து கொண்டிருப்பாள்.

ரும:—அதில் என்ன சந்தேகம்? நடந்து நான் போய் வாரேன்.

---

OFFICE OF THE REGISTRAR OF ... 23 NOV 1915 MADRAS.

DIEU ET MON DROIT

(1906-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.)

# இந்திய சட்ட கெஜெட்.

## உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

வால்யூம் 8.] சென்னப்பட்டணம் 1915ஹு செப்டம்பர்—அக்டோபர்மீ' [நெ. 5

## அபிப்பிராயங்கள்.

**ஆனரபில் ஜட்ஜி சர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள்:—**

"தமிழ் ஜில்லாக்களில் ஆங்கிலம் அறியாத ஜனங்களுக்கு தங்களுடைய ஜர்னல் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். ஆங்கிலய பிரசுரங்கள் மூலியமாக சட்டஞானத்தை அறிந்துகொள்ளக்கூடாத ஜனங்களுக்கு தாங்கள் அதை அறிவிக்க செய்துகொண்டுவரும் பெரும் முயற்சியை நான் உணராமல் இல்லை."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள்:—**

"சட்ட ஞானத்தைப் பரவச் செய்வதற்கு இந்தியசட்ட கெஜட் செய்துவரும் பிரயத்தினங்கள் சிலாகிக்கக் கூடியவை. அது அடயவேண்டிய ஜெயத்தைப் பெறுமென்று நம்புகிறேன்."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார் அவர்கள்:—**

"வியாசங்கள் மிகவும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. சஞ்சிகைகள் சரியானவும் உபயோக முள்ளவுமான சமாசாரங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றன. சட்ட சம்பந்தமான விஷயங்களை பொதுஜனங்கள் அறிந்துகொள்ளுவதற்கு சட்ட கெஜட் ஒரு தகுந்த மார்க்கமாயிருக்கும் என்று நான் உறுதியாய் நினைக்கிறேன்."

**திவான் பகதூர் R. ரெகுநாத ராயர் அவர்கள், கும்பகோணம்:—**

"நீர் பிரசுரஞ் செய்துகொண்டுவரும் இந்தியசட்ட கெஜட் மிகவும் பிரயோஜனமுள்ளது. அது எப்படி ஆதரிக்கப் பட வேண்டுமோ அப்படி ஆதரிக்கப் படுமென்று நம்புகின்றேன்."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள்:—**

"கெஜெட்டில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் சரியாகவும் சுருக்கமாகவு மிருக்கின்றன. தங்களுக்கு அதிக சந்தாதாரர்கள் சேருவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை."

( இன்னும் பல அபிப்பிராயங்க ளிருக்கின்றன. )

## அடக்கம்.

பாகம் I. — பக்கம்.

1. மத்தியஸ்தம் செய்துவைக்கும் கோர்ட்டுகள் ... ... ... 81
2. காலஞ்சென்ற சர் ஆர்தர் காலின்ஸைப்பற்றி ... ... ... ... 83
3. ஐக்கோர்ட்டில் பிரஸ்தாபம் ... ... ... ... ... ,,
4. மூன்று முக்கியமான தீர்ப்புகள் ... ... ... ... 84
5. செப்டெம்பர் மாதத் தீர்ப்புகள் ... ... ... ... 84 (a)
6. ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் ... ... ... 84 (a)
7. நிகழ்மாதத் தீர்ப்புகள்...... ... ... ... ... .. 85
8. ஹிந்து லா பேரில் தீர்ப்புகள் ... ... ... ... ... 90
9. நானுவிதமான வியாஜ்ஜியங்கள் (காந்தர்வ விவாகக் கேஸ்) ... ... ... 92
10. வியாக்கியானத்துடன் சட்டங்கள், இ. பி, கோ. 318 ம் பிரிவு... ... ... 94
11. பொது வர்த்தமானங்கள் ... ... ... ... ... ... 98
12. இங்கிலாண்டு தேசத் தீர்ப்புகள் ... ... ... ... ... 99
13. பொய் சாக்ஷி ... ... ... 100

பாகம் II.

1. இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள் ... ... ... 25

## சந்தா விபரம்.

வருஷ சந்தா, 5 6 0 (வி பி, தபால் செலவு 4-அணு பிரத்தியேகம்)

சிங்கப்பூர் பினங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 8

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

C. பரமசிவமுதலியாரால் இந்தியசட்ட கெஜட் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, சென்னை - சிந்தாத்திரிப்பேட்டை கிருஷ்ண அண்டு பிரதர்ஸ் அவர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றன.

உ

## விஞ்ஞாபனம்.

---

(1.) நம்முடைய இந்தியசட்ட கெஜட்டின் ஆகஸ்டுமீ சஞ்சிகையைப் பார்வையிட்டு ஆடர் அனுப்பியிருக்கும் கனவான்களுக்கும் நன்கொடை அளித்திருக்கும் போஷகர்களுக்கும் அனேக வந்தன மளிக்கின்றோம்.

(2.) இந்தியசட்ட கெஜட்டை சர்க்காரில் நம்முடைய பெயரால் பதிவுசெய்துவைத்து அதைப் பிரசுரிக்க மேன்மைதங்கிய கவர்ன்மெண்டாருடைய அனுமதியைப்பெற்றுக்கொள்ளுவதில் ஒண்ணரைமாத காலம் தாமதப்பட்டுப்போய்விட்டதை முன்னிட்டும் சந்தாதாரர்களுடைய கையில் அந்தந்த மாதத்தில் அந்தந்தமாத சஞ்சிகை யிருக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்கிற விதியை நாம் கண்டிப்பாய் பின்பற்றி வருவதை முன்னிட்டும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கு ஒரே சஞ்சிகையாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பது மல்லாமல் நவம்பர்மீ சஞ்சிகையும் அந்த மாதக்கடைசியிலேயே வெளிவரும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(3.) இந்திய சட்ட கெஜட் தோன்றி இப்போது சுமார் 10-வருடகால மாகின்றது. இது மாதமொருமுறை வெளிப்படுவதைவிட மாதம் நான்குமுறையாகவாவது அல்லது இரண்டுமுறையாகவாவது வெளிப்படும்படியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானித்து முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் எவ்வளவு மூலதனத்தைச் செலவிட்டு இந்தியசட்ட கெஜட்டை விருத்திபடுத்திவைக்க வேண்டுமென்று எண்ணி அதை நாடி உழைத்துவந்தபோதிலும் சந்தாதாரர்களுடைய ஆதரிப்பும் நன்குமதிப்பும் இல்லாமற்போனால் எங்களுடைய எண்ணம் பலிதப்படாதென்பது திண்ணம். ஒரு குழந்தை வளர்ந்து முன்னுக்குவருவது அதனுடைய பெற்றோர் அதன்பால் அன்புகாட்டி பாரமரித்துவருவதைப் பொறுத்தது அதுபோல இந்த உலகத்தில் எத்தேசமாயிருந்தாலும் சரி, அதில் ஒரு பத்திரிகை அல்லது சஞ்சிகை தோன்றி சிறப்புற்று பிரகாசிப்பது அதன் சந்தாதாரர்களுடைய ஆதரிப்பைப் பொறுத்தது. ஆகையால் இந்தியசட்ட கெஜட்டை மாதம் இருமுறையாகவேனும் அல்லது நான்குமுறையாகவேனும் வெளிப்படும்படியாகச் செய்யும்படி நாம் செய்துகொண்டுவரும் முயற்சியில் அதன் சந்தாதாரர்களும் கலந்துகொண்டு இந்தியசட்ட கெஜட்டில் அன்பு பாராட்டி அவர்களுடைய பந்துமித்திரர்களை அதற்குச் சந்தாதாரர்களாகச் சேரும்படியாக செய்யும் சொற்ப சிரத்தையை வகித்துக்கொள்ள இணங்குவார்களேயாகில் நம்முயற்சியும் கைகூடும் அவர்கள் செய்யும் உபகாரம் இந்தியசட்ட கெஜட்டிற்கு மட்டிலும் செய்யப்பட்டதாக எண்ணப்படாமல் அதன் மூலியமாக உலகத்திற்கேசெய்த உபகாரமாக எண்ணப்படும்.

இந்திய சட்ட கெஜட்
ஆபீஸ்,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

கிருஷ்ண அண்டு பிரதர்ஸ்,
ப்ரோப்ரைட்டர்ஸ்.


# The Indian Law Gazette.

PART I

# இந்திய சட்ட கெஜட்.

பாகம் I.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915ளு செப்டம்பர்மீ [நெ. 5.


## ARBITRATION COURTS.

### மத்தியஸ்தம் செய்துவைக்கும் கோர்ட்டுகள்.

---

நம்முடைய பிரிடிஷ் இந்தியாவில் நியாயம் பரி
ிக்கப் படுவதற்காக் கவர்ன்மெண்டார் தக்க ஏற்
டுகள் செய்துவைத்திருக்கிறார்கள். தேச முழுதி
ம் ஆங்காங்கு சிவில் கோர்ட்டுகளும் கிரிமினல்
ார்ட்டுகளும் ஸ்தாபித்திருக்கிறார்கள். கிராமங்
ில் கிராமக் கோர்ட்டுகளும் ஸ்தாபித்திருக்கிறார்
. கக்ஷிக்காரர்களுடைய கக்ஷியை எடுத்து கோர்
ுகளின்முன் வாதித்து தங்களுடைய கக்ஷிக்காரர்
நக்கு கோர்ட்டார் நியாயத்தைச் செய்துவைக்கும்
ாருட்டு கவர்ன்மெண்டார் தேசத்தில் சட்ட கலா
லைகள் ஸ்தாபித்து பிரதிவருடமும் லாயர்களைத்
ார்செய்து தேசமுழுதிலும் லாயர்மயமா யிருக்
ும்படியாகச் செய்திருக்கிறார்கள். பிரிடிஷ்கோர்ட்டு
ில் பக்ஷபாதமற்ற நியாயம் பரிபாலிக்கப்பட்டுவரு
து ஜெகப்பிர சித்தத்தை அடைந்திருக்கின்றது.
ப்பேர்ப்பட்ட பாரபக்ஷமற்ற நியாயம் மற்ற எந்த
ரசாங்கத்திலும் கிடைக்காதென்றும் சொல்லப்
கின்றது. கவர்ன்மெண்டார் இப்படி மிகக் கண்
ான நியாயம் பரிபாலிக்கப்பட்டு வரும்படியாக
ந்த நன்னோக்கத்துடன் செய்திருக்கும் அந்த
மகா சிலாக்கியமான ஏற்பாட்டால் ஒரு தீமையும் உற்பத்தியாகி வளர்ந்துகொண்டு வருகின்றதென்று விசனிக்கின்றோம். அதென்னவென்றால் பெரும்பாலான ஜனங்கள் வியாஜ்ஜிய மாடுவதில் அமர்ந்து தங்களுடைய பொருள்களை விரையம் செய்துவருகிறார்கள். டி. மு. கோர்ட்டுமுதல் ஐக்கோர்ட் பிரிவிக்கவுன்சில் வரையில் வியாஜ்ஜியமாடி கையிலிருந்த பொருளையெல்லாம் வாறி இறைத்துச் செலவுசெய்து ஒட்டாண்டிகளாய்ப்போய் கஞ்சிக்குக்கூட காற்றாய்பறக்கும் அனேகரை நாங்கள்கூடப் பார்க்கின்றோம். கோர்ட்டுகளில் தாங்கள் செய்யப்படும் வியாஜ்ஜியங்களின் எண்ணிக்கை அனுமார் வால்வளர்ந்ததுபோல ஒரு எல்லைக்குள் அடங்காதபடி ஒருவருடம்மற்றொரு வருடத்துடன் போட்டிபோட்டு ஏறிக்கொண்டு வருகிறது. அதற்கேற்றபடி கோர்ட்டுகளும் புதிது புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு முந்தி ஒரே ஒரு டிஸ்ட்டிரிக்ட் முனிசிப்கோர்ட்டு இருந்த விடங்களில் இப்போது இரண்டு அல்லது மூன்று கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்தி ஒரே ஒரு சப்கோர்ட்டு விருந்த விடங்களில் இப்போது சில அடிஷனல் சப்கோர்ட்டுகளும் சில தற்கால (Temporary) சப்கோர்ட்டுகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குமுந்தி நம்முடைய சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டில் 5-ஜட்ஜிகளிருந்தார்கள். இப்போது 12-ஜட்ஜிக ளிருக்கிறார்கள். நம்முடைய விசாலமான ஐக்கோர்ட்டில் ஜட்ஜிகள்

அமர்ந்திருந்து கச்சேரி நடத்த விடம்போதாதபடி ஐக்கோர்ட்டு விஸ்தரித்து புதிப்பிக்கபபட்டுவருகிறது ஆகவே இத்தியாதி காரணங்களை முன்னிட்டு ஜனங்கள் தங்களுடைய பொருள்களை எல்லாம் வியாஜ்ஜியமாடி தோற்றுவருகிறார்கள் என்று நன்குவிளங்குகின்றது. ஜனங்கள் வியாஜ்ஜியமாடிவருவதில் அமர்ந்திருப்பது அவர்கள் பொருள் ஆதாரத்தில் குறைவுபட்டுவருவதற்கு அரிகுறியாக விருக்கின்றது. இப்படி ஜனங்கள் வியாஜ்ஜியமாடுவதால் பொருளாதாரத்தில் பல ஈனப்பட்டுவருவது மல்லாமல் ஒற்றுமை உணர்ச்சியிலும் குன்றிவருகிறார்கள். வாதிக்கும்பிரதிவாதிக்கும் மனஸ்தாபம் வாதி சாக்ஷிகளுக்கும் பிரதிவாதி சாக்ஷிகளுக்கும் விரோதம். வாதி தரப்பு பந்துக்களுக்கும் பிரதிவாதி தரப்பு பந்துக்களுக்கும் விரோதம். ஒரு வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட பலபேர்கள் வேற்றுமைபட்டுப் போய்விட்டால் இப்போது வருடாவருடம் தாக்கல் செய்யப்படும் எண்ணிறந்த வியாஜ்ஜியங்கள் எத்தனைபேர்கள் ஒற்றுமையை இழந்து ஒருவரிடமிருந்து ஒருவர் வேற்றுமைபட்டிருக்கக் கூடும் என்றும் அன்னோர்களுடைய தொகை எவ்வளவா யிருக்கக்கூடுமென்று நம்முடைய கெஜெட் நேயர்களே யூகித்துக் கொள்ளக் கூடும். கவர்ன்மெண்டார் தேசமுழுதிலும் கோர்ட்டுகள் ஸ்தாபித்திருந்தபோதிலும், "ஓ! ஜனங்களே! நீங்கள்வந்து எங்களுடைய கோர்ட்டுகளில் வியாஜ்ஜியமாடுங்கள்" என்று சொல்லி தாம்பூலம் வைத்து ஜனங்களை வருந்தி அழைக்கவில்லை. ஜனங்களே, பலாப்பழத்தில் ஈமொய்த்துக் கொள்ளுவதுபோல கோர்ட்டுகளை மொய்த்துக்கொள்ளுகிறார்கள் நிற்க, 1914ஹ-ஜூலைமாதத்தில் உதகமண்டலத்தில் கூடிய சட்ட சபையில் ஆனரபில் மிஸ்டர் V. K. ராமானுஜாச்சாரியார் அவர்கள் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டு சம்பந்தமாக ஒரு பிரேரபனை செய்திருந்தார். அதாவது ஐக்கோர்ட்டில் வியாஜ்ஜியங்கள் கணக்கு வழக்கு இல்லாதபடி தாக்கல்செய்யப்பட்டுவருவதை பரிசீலனைசெய்து அதிகச்செலவிற்கிடம் கொடுக்காதபடி நீதிபரிபாலனம்செய்யக்கூடிய ஒரு உபாயத்தைக்கண்டு பிடிக்கும்படியாக உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தர்களு மல்லாதஒரு கமிட்டி ஐக்கோர்ட்டாருடன் கலந்து யோஜனைசெய்து நியமிக்கப்பட வேண்டுமென்று பிரேரபனை செய்தார்.

ஐக்கோர்ட்டாருடைய நடவடிக்கையைப் பரிசீலனைசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்படுவது ஐக்கோர்ட்டிற்கு கௌரவமாக விருக்காதென்றும் மேலும் நிலுவை வியாஜ்ஜியங்கள் கூடிய சீக்கிரம் பைசல் செய்து ஒழித்துப்போடுவதாக ஐக்கோர்ட்டார் வாக்களித்திருப்பதால் கமிட்டி நியமிக்கப்படவேண்டிய அவசியமென்று கவர்ன்மெண்டார் பதில் கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் V. K. ராமானுஜாச்சாரியாருடைய பிரேரபனையை ஆதரித்துப்பேசின ஆனரபில் டாக்டர் T. M. நாயர் அவர்கள் ராஜதானியில் வியாஜ்ஜியங்கள் விசேஷமாக உற்பத்தியாய் வருவதற்குச் சில காரணங்களை எடுத்துச்சொன்னார். அவைபாவன:—

(1) ஒவ்வொரு ஜட்ஜியும் இதற்குமுந்தி எவ்வளவு வியாஜ்ஜியங்களைப் பைசல்செய்து வந்தார்களோ அவ்வளவு வியாஜ்ஜியங்களை இப்போது முடிவு செய்ய முடிகிறதில்லை. ஏன் என்றால் வக்கீல்கள் சொன்ன கக்ஷிவாதத்தையே மடக்கி மடக்கிச்சொல்லி காலங்கழிக்கிறார்கள் என்று ஜட்ஜிகள் சொல்லுகிறதாகப் பிரஸ்தாபமாயிருக்கிறது. அப்படி மடக்கி மடக்கிச்சொன்ன கக்ஷியைத் திருப்பிச்சொல்லாவிடில் இப்போதிருக்கும் ஜட்ஜிகள் மனதிற்குப் படுகிறதில்லை என்று வக்கீல்கள் சொல்லுகிறதாக பிரஸ்தாபமாயிருக்கிறது

(2) சில ஜனங்கள் அந்நியர் வியாஜ்ஜியங்களையே விலைக்குவாங்கி வியாஜ்ஜிய மாடுவதையே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(3) வக்கீல்களுக்குள் போட்டி உண்டாயி அவர்களுடைய வருமானம் குறைந்துபோய் விட்டது. ஆதலால் கக்ஷிக்காரர்கள் இலகுவான செலவில் அப்பீலை நடத்தி விடலாமென்று நினைக்கின்றார்கள்.

(4) ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள் ஒரேசட்ட அம்சத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று முரணாக விருக்கிறபடியால் தன்னுடைய கக்ஷி ஜெயம்பெறாது என்று நினைக்கும் கக்ஷிக்காரர்கூட அப்பீல் செய்துகொண்டால் ஜெயம்பெறலாம் என்று நினைப்பதற்குத் தூண்டுதலா யிருக்கின்றது.

இப்படி வியாஜ்ஜியங்கள் தேசத்தில் அதிகரித்துக்கொண்டு வருவதற்குப் பலகாரணங்கள் சொல்லப்படுகின்றன. அந்தக்காரணங்கள் சரியானவையாக விருந்தாலும்சரி, சரிதப்பினவைகளாக விருந்தாலும்சரி, ஜனங்கள் வியாஜ்ஜியமாடுவதில் பொருளை இழந்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. வியாஜ்ஜியமாடும் கக்ஷிக்காரர்களுக்கு பிடித்திருக்கும் பேயை ஓட்டி ஜனங்களைப் பொருளாதாரமுடையவர்களாகச் செய்யவேண்டுமானால் கவர்ன்மெண்டார் பரோடா சமஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுபோல (Arbitration Courts or Conciliation Courts) என்று சொல்லும்படியான மத்தியஸ்தர்கள் கோர்ட்டுகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று மிகவும் வணக்கமாய் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

---



## THE LATE SIR ARTHUR COLLINS.

## காலஞ்சென்ற சர் ஆர்தர் காலின்ஸ்.

சென்னை ஐக்கோர்ட்டிற்கு 1889 - ஹ முதல் 1899-ஹ வரையில் பிரதமஜட்ஜியாயிருந்து கீர்த்தியானபெயர் சம்பாதித்துக்கொண்டு இங்கிலாண்டிற்குப்போன சர் ஆர்தர் காலின்ஸ் அவருடைய சுதேசத்தில் 15-9-1915-ல் இறந்துபோய்விட்டார் என்று கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். இவர் பிரதம ஜட்ஜியாக விருந்தகாலத்தில் சர். T. முத்துசாமி அய்யர் அவர்கள் ஐகோர்ட்டு ஜட்ஜியாக விருந்து வந்தார்கள். இவர்களுடைய சட்ட ஞானத்தின் பெருமையைப்பற்றி சர் ஆர்தர் காலின்ஸ் அடிக்கடி சொல்லி சிலாகிப்பதுண்டு. ஐகோர்ட்டு வக்கீல்களை மிகவும் மரியாதையுடன் நடத்திவந்தது மல்லாமல் அவர்கள் உற்சாகத்துடன் லாயர்தொழிலை நடத்திக்கொண்டு வரும்படியாகச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் புத்திமதி சொல்லிக்கொண்டுவருவார். வக்கீல்கள் சீனியர் வக்கில்களாக விருந்தாலும் சரி ஜூனியர் வக்கீல்களாக விருந்தாலும் சரி பாரிஸ்டர்கள் இந்தியர்களாயிருந்தாலும் சரி ஐரோப்பியராயிருந்தாலும் சரி சர் ஆர்தர் காலின்ஸ் அவர்கள் எல்லோரையும் யாதொரு வித்தியாசம் பாராட்டாமல் மரியாதையாக நடத்திக்கொண்டு வந்தார். இவருடைய குணாதிசயங்களில் முக்கியமான குணாதிசயம் என்னவென்றால் சுயர்க்ஷை நிர்வாக கவர்ன்மெண்டார் ஐகோர்ட்டாருடைய அதிகாரங்களில் பிரவேசிக்க எத்தனிப்பார்களேயானால் அதற்கு சர் ஆர்தர் காலின்ஸ் சிறிதேனும் இடங்கொடுக்கமாட்டார். மிகவும் நற்குணங்கள் பொருந்தப்பெற்றவர். தம்முடைய அபிப்பிராயத்தில் பட்டதை மறைக்காமல் வெளியிட்டுச் சொல்லக்கூடியவர். மிகவும் கம்பீரமான தோற்றமுடையவர். இவர் இறந்துபோனதைப்பற்றி ஐக்கோர்ட்டுவக்கீல் சங்கம் ஒரு கூட்டம் கூடி துக்கம்பாராட்டித் தீர்மானங்கள் செய்திருக்கிறது. இப்போது ஐகோர்ட்டு இருக்கும்படியான விசாலமான உன்னதமாளிகை சர் ஆர்தர் காலின்ஸ் காலத்தில்தான் கட்டப்பட்டு அவராலேயே திறக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட சிறந்த ஜட்ஜி இறந்துபோனதற்கு அவருக்கு மரியாதை பாராட்டும் பொருட்டு ஐக்கோர்ட்டு மூடப்பட்டிருக்கவேண்டிய தவசியமாக விருந்தபோதிலும் வக்கீல் சங்கத்தார் அன்றுதினம் ஐக்கோர்ட்டை மூடிவைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டிருந்தும் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்படவில்லை.

---

## REFERENCES IN THE HIGHCOURT.

## ஐகோர்ட்டில் பிரஸ்தாபம்.

சீப் ஜஸ்டிசும் ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்காரும் 16-9-1915 - முதல் அப்பீல் கோர்ட்டில் வீற்றிருந்தார்கள். கேஸ்களை விசாரணைசெய்ய ஆரம்பிப்பதற்குமுந்தி சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்தர் காலின்ஸ் இறந்துபோனதைப்பற்றி விசனம்பாராட்டிப் பேசினார்கள். அவர்முன்னில் ஆஜரான அனேக லாயர்களுக்கு அந்த துக்க சமாசாரம் விசனத்தை உண்டு பண்ணுமென்று தாம் நினைப்பதாகச் சொன்னார். அப்பேர்ப்பட்ட துக்ககாரியங்களுக்காக கோர்ட்டு மூடப்படுகிற வழக்கமில்லை என்று சொல்லி இறந்துபோனவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபம் பாராட்டிப் பேசிவிட்டு வழக்கம்போல கேஸ்களை விசாரணைசெய்ய ஆரம்பித்தார்கள். லாயர்கள் தரப்பிற்கு அட்வக்கேட் ஜெனரல் எழுந்திருந்து சர் ஆர்தர் காலின்ஸ் மரணத்தைப்பற்றித் துக்கம்பாராட்டிப் பேசிவிட்டு இறந்துபோனவர் ஜட்ஜியாகயிருந்த காலத்திலிருந்த பழையலாயர்கள் யாதேனும் இந்த சமயம் அவரைப்பற்றிப்பேச விரும்பினால் பேசலாம் என்று சொன்னார்.

அதற்கு சீப் ஜஸ்டிஸ் அனுமதி கொடுக்காதபடியால் எவரும்பேச முன் வரவில்லை.

---

## MADRAS VAKILS ASSOSIATION.

## மதிராஸ் வக்கீல் சங்கம்.

சென்னையில் உள்ள ஐக்கோர்ட்டு வக்கீல்கள் எல்லாம் 16-9-1915 பகல் 2-மணிக்கு ஐகோர்ட்டில் அவசரமாக ஒருமீட்டிங்குகூடி சர் ஆர்தர் காலின்ஸ் மரணத்தைப்பற்றித் துக்கம்பாராட்டிப்பேசி தீர்மானங்கள் செய்தார்கள். சர் ஆர்தர் காலின்ஸ் கீர்த்தி பொருந்தப்பெற்ற ஜட்ஜியாகவிருந்தும் தற்காலம் ஐகோர்ட்டிற்குச் சீப் ஜட்ஜியாகவிருக்கும் சர்ஜான் வாலிஸ் இந்த துக்கத்தைக் கொண்டாடும்பொருட்டு புல் பெஞ்ச் கூடும்படியாகவும், இறந்துபோன பிரதமஜட்ஜிக்கு மரியாதை பாராட்டும்பொருட்டு அன்றுதினம் ஐக்கோர்ட்டை மூடிவைக்கவும் ஏற்பாடு செய்ய மனமிசையாமல் போனதற்காக விசனித்துப் பேசி தீர்மானங்கள் செய்தார்கள். ஐக்கோர்ட்டு கட்டடத்திற்குள் சர் ஆர்தர் காலின்ஸ் எண்ணெய் உருவப்படம் ஒன்று மாட்டப்பட ஏற்பாடுசெய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்த மீட்டிங்கிற்கு

மிஸ்டர் J. L. ரொஜோரியோ சேர்மேனாகவிருந்தார் மிஸ்டர் T. R. ராமச்சந்திர அய்யர், மிஸ்டர் S. சீனிவாசய்யங்கார், மிஸ்டர் S. சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் V. C. சேஷாச்சாரியார், மிஸ்டர் K. N. அய்யா அய்யர், மிஸ்டர் C. வெங்கட்ட சுப்பராமய்யா, மிஸ்டர் K. R. சுப்பிரமணியசாஸ்திரியார் ஆகிய இந்த வக்கீல் பேசினார்கள்.

---

## JUSTICE MR. ABDULRAHIM.

## ஜட்ஜி மிஸ்டர் அப்துல்ரகீம்.

---

ராயல் கமிஷனில் மெம்பராக நியமிக்கப்பட்டிருந்த சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜியாகவிருக்கும் ஜட்ஜி மிஸ்டர் அப்துல்ரகீம் திரும்பி சென்னைக்கு வந்து அவர்களுடைய ஜட்ஜி உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

---

## THREE IMPORTANT DECISIONS.

## மூன்று முக்கியமான தீர்ப்புகள்.

---

நிகழ் செப்டெம்பர் மாதத்தில் மூன்று முக்கியமான தீர்ப்புகள் ஜாரிசெய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—

(1) சூத்திரர்களுக்குள் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பின்பு சொந்தப்புத்திரன் பிறந்தால் ஸ்வீகாரப்புத்திரன் 5-ல் ஒரு பாகத்திற்குத்தான் பாத்தியமுடையவன் என்று சீப் ஜஸ்டிஸ் ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யரும் கூடிய கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த அப்பீல்வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. ராமதாசும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல்கள் மெசாஸ் P. நாராயணமூர்த்தியும் மிஸ்டர் B. நரசிம்மராவும் ஆஜரானார்கள்.

(2) இன்னொரு வியாஜ்ஜியம் என்னவென்றால் A என்னும் வீட்டிற்குச் சொந்தக்காரன் அவனுடைய வீட்டை B என்பவனுக்கு குடிக்கூலிக்கி விட்டான். B என்பவன் அந்த வீட்டிலிருந்த அறைகளை C என்பவனுக்கும் D என்பவனுக்கும் குடிக்கூலிக்கி விட்டான். B என்பவன் வாடகை உடன்படிக்கையின்படி A என்பவனுக்குச் செலுத்தவேண்டிய வாடகையைச் செலுத்தவில்லை ஆகவே வீட்டை காலிசெய்து விடும்படியாக A என்பவன் B என்பவனுக்கு நோட்டீஸ் கொடுத்தான். அந்த நோட்டிஸ்படி B என்பவன் C. D. என்பவர்களுக்கு குடிக்கூலிக்கி விட்டது முடிவடைந்து போகிறதென்றும் B. C. D. என்பவர்களைப் புறப்படுத்தி வீட்டைக்காலிசெய்யும் பொருட்டு A. என்பவன் கொண்டுவந்த இஜகட்மெண்டு வியாஜ்ஜியத்தில் C. D. என்பவர்கள் தாங்கள் B இடம் அட்வான்சு வாடகை செலுத்தியிருப்பதாகவும் ஆதலால் அறைகளை காலிசெய்ய கோர்ட்டார் உத்திரவுசெய்யக் கூடாதென்றும் சுஷூசொல்லக் கூடாதென்று ஜட்ஜி மிஸ்டர், சதாசிவய்யர், ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர் கூடிய கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல்வாதிக்காக மிஸ்டர் S துரைசாமிஅய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

(3) மூன்றாவது வியாஜ்ஜியம் என்னவென்றால் அசல்கோர்ட்டு தீர்ப்பிற்கு விரோதமாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டபோது அப்பீல் மனுவுடன் அசல்கோர்ட்டு தீர்ப்பின் அச்சுக் காப்பியைச்சேர்த்து ஆஜர்படுத்தாமல் கையில் எழுதப்பட்ட காப்பியைச்சேர்த்து அப்பீல் வாதி ஆஜர்படுத்தினான். அச்சடிக்கப்பட்ட காப்பி ஆஜர்படுத்தப்படவில்லை என்கிற காரணத்தைகொண்டு ஜில்லா ஜட்ஜி அப்பீலைத் தள்ளுபடிசெய்துவிட்டார். ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல்செய்துகொள்ளப் பட்டபோது ஜட்ஜி மிஸ்டர், சங்கரநாயர் அப்பீலைத் தாக்கல் செய்யும்படியாக விடாமல் அப்பீல் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக அப்பீல் வாதி ஐகோர்ட்டில் லெட்டர்ஸ் பேடெண்ட் அப்பீல் தாக்கல் செய்தான். சீப். பு. கோ. நிபந்தனைகளின்படி முதல் அப்பீல் கோர்ட்டில் செய்துகொள்ளப்படும் அப்பீல் மனுவுடன் அசல்கோர்ட்டுத் தீர்ப்பின் அச்சுக்காப்பிதான் சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டுமென்ப தவசியமில்லை என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர், ஜட்ஜி மிஸ்டர் நேப்பியரால் தீர்மானிக்கப்பட்டது. அந்த வியாஜ்ஜியத்தில் அப்பீல் வாதிக்கு வக்கீல் மிஸ்டர் C. S. வெங்கடாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர், M. D. தேவதாசும் ஆஜரானார்கள்.

---



## SEPTEMBER DECISIONS.

## செப்டம்பர் சட்டத் தீர்ப்புகள்.

---

### 29-9-1915.

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

கிரிமினல் ரிவிஷன்கேஸ் நெ. 583 of 1915.

லாப்பாயின்ட்:—ஒப்பந்தம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு முனிசிபாலிட்டியின் டோல்கேட் கண்டிராக்ட்டர் ஒப்பந்தப்படி முனிசிபாலிட்டிக்கிச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தத் தவறிப்போய்விட்டான்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு.—இந்தப்பணத்தை வசூல் செய்வதற்கு முனிசிபாலிட்டியார் ஜில்லா முனிசிபாலிட்டி ஆக்ட்டின்படி வியாஜ்ஜியங் கொண்டுவரக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் நரசிம்மராவும் கவர்ன்மெண்ட்டு தரப்பிற்காகப் பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானார்கள்.

---

### 24-9-1915.

ஜட்ஜிகள்:— ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

சிவில் மிசெலேனியஸ் அப்பீல் நெ. 2161 of 1915.

வியாஜ்ஜியச் சுருக்கம் —காஞ்சீபுரம் வரதராஜப் பெருமாள்கோவில் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் சாதாரணமாக சுவாமி தரிசனார்த்தமாக கோவிலுக்குள் வரும் பக்தர்கள் அவர்களுடைய சொந்தப் பிரபந்தங்களைச் சொல்லாதவரையில் அவர்களுடைய பாத்திதைகள் ஆக்ஷேபிக்கப்படமாட்டா என்று ஐகோர்ட்டார் தீர்ப்புசெய்திருக்கிறார்கள்.

சாதாரண பக்த்தர்களுடைய பாத்திதைகள் இந்தத்தீர்ப்பினால் குறைக்கப்பட்டிருக்கிறதென்று காரணம் காண்பித்து பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள ஐக்கோர்ட்டில் அனுமதி கேட்கப்பட்டது.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—தீர்மானிக்கப்படவேண்டிய பிரஸ்னை முக்கியமான தாகவும் எல்லோருக்கும் அவசியமானதாகவுமிருந்தால் மட்டிலும் பிரிவிகவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்படும். இந்த வியாஜ்ஜியத் தீர்ப்பால் சாதாரண பக்த்தர்கள் அவர்களுடைய சொந்த வேதபாராயணத்தைச் சொல்லாதவரையில் அவர்களுடையபாத்திதைகள் குறைக்கப்படவில்லை. ஆதலால் ஐகோர்ட்டாருடைய தீர்ப்பிற்கு விரோதமாக பிரிவிகவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் T. நரசிம்மய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. நரசிம்மாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

---

### 24-9-1915.

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 1009 of 1914.

லாப்பாயின்ட்:—தஸ்தாவேஜுகளை அச்சிடும் விதிகள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—தங்களுடைய விசாரணைக்காகவும் அப்பீல் வியாஜ்ஜியங்களின் தஸ்தாவேஜுகளை அச்சிட விதிகள் ஏற்படுத்தவும் அந்தவிதிகள் அனுஷ்டிக்கப் படாவிட்டால் அப்பீல்களைத் தள்ளுபடி செய்யவும் ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளாக மெஸர்ஸ் B. நரசிம்மராவும T. K. கோவிந்தஅய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் T. R. ராமச்சந்திரய்யரும் ஆஜரானார்கள்.

---

### 24-9-1915.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல்.

இரண்டாவது அப்பீல் நெ. 2373 of 1913.

லாப்பாயின்ட்:—ஈஸ்மெண்டு ஆக்ட்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—வியாஜ்ஜியங் கொண்டுவந்து டிக்கிரி பெற்றுக்கொண்டாலொழிய ஈஸ்மெண்டு ஆக்ட் 15-வது பிரிவின்படி பூர்த்திபெற்ற ஈஸ்மெண்டு பாத்திதை உண்டாகமாட்டாதென்றும், ஈஸ்மெண்டு பாத்திதைக்கு 20-வருடம் தொடர்ந் தேர்த்தியாகவும் யாதொரு இடஞ்சலும் இல்லாமல் அனுபவித்துக்கொண்டு வரவேண்டும். ஈஸ்மெண்டு பாத்திதை உண்டாகவில்லை என்று ஆக்ஷேபிக்கிறவன அந்த அனுபவத்தை வாய்மொழியாகவும் சண்டை சச்சரவுகள்செய்து ஆக்ஷேபித்ததாகவும் அனுபவித்துக்

## THE HONOURABLE MR. JUSTICE T. V. SHESHAGIRI IYER.

## ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரிஅய்யர்.

ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள் இந்தியா வைசிராய் நிர்வாகசபை மெம்பர்களில் ஒருவராக நியமனம் பெற்றிருப்பதால் சென்னை ஐகோர்ட்டில் நேரிட்டிருக்கும் காலி ஜட்ஜி ஸ்தானத்திற்கு அதுவரையில் ஆக்டிங் ஜட்ஜியாகவிருந்த ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரிஅய்யர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டுச் சந்தோஷமடைகின்றோம். சென்னையில் மகா சிறந்த லாயர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டுவரும் மிஸ்டர் T. V. சேஷகிரிஅய்யர் அவர்கள் சென்னை ஐகோர்டிற்கு ஆக்டிங் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டபோது அவர்களுடைய திருவுருப் படத்தையும் அவர்களுடைய மேன்மையான குணாதிசயங்களையும் தொழில் திறமையையும் நம்முடைய இந்தியசட்ட கெஜெட்டில் எடுத்துப் பிரசுரித்திருக்கிறது. அந்த ஜட்ஜி உத்தியோகத்தில் அவர்கள் காயப்படுத்தப்படும்படியான உரிமைகளை அவர்கள் பொருந்தப் பெற்றிருக்கிறார்கள் என்றும் எடுத்துச்சொல்லயிருந்தோம். நாமும் மற்ற பொதுஜனங்களும் எதிர்பார்த்தபடியே அவர்கள் நம்முடைய ஐக்கோர்ட்டில் ஆக்டிங் ஜட்ஜியாகவிருந்த சொற்ப காலத்திற்குள் இவாள் பொதுஜனங்கள் கக்ஷிக்காரர்கள் லாயர் வகுப்பார்கள் ஆகிய இவர்களுடைய நன்குமதிப்பை அடைந்துவிட்டார்கள். ஐகோர்ட்டு ஜட்ஜி உத்தியோகதிற்குத் தேவையான உரிமைகள் எல்லாம் அவர்களிடம் சிறந்து பிரகாசித்தன. அவர்களுடைய விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியங்கள் எவ்வளவு சிக்கலானவைகளாக விருந்தபோதிலும் அவைகளின் சிக்கை அறுத்துவைத்து தீர்மானிக்கப்படுவதற்கு இலகுவான வியாஜ்ஜியமாக விருக்கும்படியாகச் செய்வார்கள். சட்டத்தின் சாரம்சங்களையும் கொள்கையையும முழுதிலும் அறிந்தவர்கள், வியாஜ்ஜியங்களில் காணப்படும் சிக்கல்களைப்பார்த்து அவர்கள் வெறுப்படைகிறதில்லை பொறுமையுடன் அவைகளை அணு அணுவாகப்பிரித்து நியாயம் பரிபாலித்து வருகிறார்கள். அவசரப்பட்டு கேஸ்களை பைசல்செய்து விடுகிறதில்லை. கூடியமட்டில் நிதானமாக விசாரணைசெய்து வருகிறார்கள். அந்த குணாதிசயங்கள் எல்லாம் இந்ததேசத்தில் ஜட்ஜி உத்தியோகத்திலிருக்கிறவர்களிட மிருக்கவேண்டியதவசியமானபடியால் கவர்ன்மெண்டார் இவர்களை ஐகோர்ட்டு சாஸ்வத ஜட்ஜியாக நியமித்து விட்டார்கள். இந்த நியமனம் எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்திருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரிஅய்யர் அவர்கள் இந்த உயர்ந்த உத்தியோகத்தை நீண்டகாலம் அனுபவித்து தேசத்திற்கும் தேசத்தார்களுக்கும் தேவையான நன்மைகளைச் செய்துவைக்கும்படியான தீர்காயுசையும் நோயற்றவாழ்வையும் அவர்களுக்குத் தந்தருளும்படியாக இப்பூவுலகு ஜட்ஜிகளுக்கெல்லாம் மகாமேலான ஜட்ஜியாகவிருக்கும் எம்பெருமானைப் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றோம். ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரிஅய்யர் அவர்கள் இந்திய சட்ட கெஜெட்டைப் பார்வையிட்டு இந்தக் கெஜெட்டின் அட்டையில் இங்கிலீஷிலும் உள்பக்கத்தில் தமிழிலுச் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள் என்று இந்தசமயம் நாம் எடுத்து எழுதாவிட்டால் நாம் "தன்னைத்தான் மறந்துபோன குற்றத்திற்கு" இலக்காக வேண்டும். என்று அஞ்சி எழுதியிருக்கின்றோம்.

## ACCIDENT TO HIS MAGESTY.

## அரசருக்கு அற்ப விபத்து.

மாக்ஷிமை தங்கிய ஜியார்ஜ் சக்ரவர்த்தியார் அவர்கள் அவர்களுடைய சைனியத்தைப் பார்க்கும் பொருட்டு பிரான்சிற்குப் போயிருந்தவிடத்தில் அவர்கள் மிகுந்த ஆரவாரத்துடன்வரயேற்கப்பட்டு அவர்களுக்கு நடத்தப்பட்ட கொண்டாட்டத்தில் அவர்கள் ஏறியிருந்த குதிரை மிரண்டு சக்கரவர்த்தியார் அவர்களுக்கு உபாயகாயம் உண்டானதென்று கேள்விப்பட்டு விசனப்படுகின்றோம். ஆயினும்மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்கள் தேக சௌக்கியத்துடனிருக்கிறார்கள் என்று பின்புவந்த தந்தி சமாசாரம் விசனத்தைப்போக்கி நமக்குசந்தோஷத்தைக் கொடுத்திருக்கின்றது.



## CURRENT DECISIONS.

## நிகழ் மாதத் தீர்ப்புகள்.

ஜட்ஜிகள் —சீப் ஜஸ்டீஸ் சர் ஜான் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார்.

அப்பீல் நெ. 93 of 1911.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு ஜமீனின் ஒரு பாகம் வாதியால் கிரயம்பெற்றுக் கொள்ளப்பட்டது. மற்ற ஒரு பாகம் ஜெய்ப்பூர் மகிருஜாலாலால் கிரயம் பெற்றுக் கோள்ளப்பட்டது. ஜமீனின் பேஷ்குஷ் சர்க்காருக்குச் செலுத்தப்படாமல் நிலுவைப்பட்டுப் போயிருந்தப்படியால் வாதி கிரையம் பெற்ற கிராமங்கள் ஜப்தி செய்யப்பட்டன. வாதி நிலுவைப் பேஷ்கூஷைச் செலுத்தி விட்டு விதாச்சாரம் பணத்தை வசூல் செய்து கொள்ளும் பொருட்டு ஜேய்ப்பூர் மகாராஜாவையும் ஜெமீன்தாரையும் சேர்த்து அவர்கள் பேரில் விசாகப்பட்டணம் சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

ஜேய்ப்பூர் மகாராஜா சம்பந்தப்பட்ட வரையில் அவர் விசாகப்பட்டணம் ஜில்லா ஏஜன்சி மாகாணத்தில் வசித்து வருகிறபடியாலும் அவர் கிரையம் பெற்றிருக்கும் ஜமீன் நிலம் நிலுவைத் தீர்வையைச் செலுத்த கட்டுப்பட்டிருந்தபோதிலும் அவர் நேரே ஜவாப்புகாரியாக யில்லாமலிருக்கிறபடியால் அவர் பேரில் டிக்கிரிக் கொடுக்கக்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் வாதியே நிலுவைத் தீர்வையைச் செலுத்தி வைப்பதில் பாதி பற்றுடையவராக விருப்பதால் ஜெமீன்தாரும் நிலுவை தீர்வையைச் செலுத்தப் பாத்தியப்பட்டவரல்லவென்றும் அது காரணம் பற்றி இந்தியன் ஒப்பந்தச்சட்டம் 69 வது பிரிவு இந்தக் கேசிற்குப் பொருந்தாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக ஆனரபில் மிஸ்டர் B. N. சர்மாவும், மிஸ்டர் O. அப்பாராவும் அப்பில் பிரதிவாதிகளுக்காக மெஸ்ஸர்ஸ் S. சீனிவாசய்யங்காரும் வி. ரமேசனும் ஆஜரானார்கள்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் டிராட்டர்,
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்ஸர்.

இரண்டாவது அப்பீல் நெ. 400 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—வாதிக்கும் அவனுடைய சகோதரர்களாகிய பிரதிவாதிகளுக்கும் நடந்த பாகப்பிரிவினை நடவடிக்கையில் செய்துகொள்ளப்பட்ட வாய்மூலியமான உடன்படிக்கையை ஆதாரமாக கோண்டு வாதி அவருடைய சகோதரர்கள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். கீழ்க்கோர்ட்டார்களும் அந்தவாய்மூலமான உடன்படிக்கையைப் பற்றிசாக்ஷிவிசாரணைசெய்யாமல் பிரியாதையும் எழுத்து வாக்குமூலத்தை மட்டிலும் பார்வையிட்டுவிட்டு வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் சாக்ஷி விசாரணை செய்யாமல் பிரியாதையும் எழுத்து வாக்குமூலத்தை மட்டிலும் பார்த்துவிட்டு வியாஜ்ஜியத்தை தள்ளுபடி செய்யும் பழக்கம் துர்வழக்கமென்று கோர்ட்டாரால் கண்டனம் செய்யப்பட்டு வியாஜ்ஜியத்தை தள்ளுபடிசெய்த உத்திரவை ரத்து செய்யப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் N. ராஜகோபாலாச்சாரியாரும், அப்பீல்பிரதிவாதிகளுக்காக மெஸ்ஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யரும், T. R, கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் எய்லிங்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 2557 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—A என்பவன் B என்று சொல்லப்படும் போலீஸ் இன்ஸ்பெச்டரிடம் C என்பவன் பேரில் புகார் சொன்னான். B என்னும் இன்ஸ்பெக்டா C என்பவன் பேரில் கிரிமினல் கேஸ் கொண்டுவந்தார். அந்தக் கேஸ் பொய்க்கேஸ் என்றுதள்ளுபடி செய்யப்பட்டது. ஆதலால் A எனபவன் B என்பவரிடம் சொல்லிக் கொண்ட புகார் பொய்ப்புகார் என்று தீர்மானிக்கப்பட்டது. A என்பவன் தன் பேரில் பொய்யான சமாச்சாரம் தெரிவித்ததற்காக C என்பவனால் பிராசிகியூட் செய்யப்பட்டான். அது சம்பந்தமான கிரிமினல் அப்பீல் ஐக்கோர்ட்டிற்கு வந்ததில் பொய் சொன்னதற்காகவாவது அல்லது மானநஷ்டத்திற்காகவாவது, நஷ்டத்திற்காக A என்பவனைக் கட்டுப்படுத்தக் கூடியதாக விருந்த போதிலும் C என்பவனைப் பிராசிகியூட் செய்தவன் அவனாகமாட்டான். மேலும் C என்பவனுக்கு நஷ்டம் கட்டிக் கொடுக்க கட்டுப்பட்டவனுமாக மாட்டான் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. நரசிம்மாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும் ஆஜரானார்கள்

ஜட்ஜிகள்—சீப் ஜஸ்டிஸ் சர் ஜான் வாலிஸ்,
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

அப்பீல் நெம்பர் 198 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு—ஒரு மிட்டாவி லிருக்கும் இனாம்தார் தம்முடைய இனாம் நிலத்திற்குத் தீர்வை மிட்டாதாருக்குச் செலுத்த வேண்டியதாயிருந்தது. அந்த இனாம் நிலம் வேறொரு ஜெமீன்தாரிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது மிட்டாதார் தீர்வை பாக்கிக்காக இனாம்தார் பேரில் வியாச்சியம் கொண்டு வந்து தம்முடைய தீர்வை பாக்கிக்கு முதலில் இனாமை கட்டுப்படுத்தி டிக்கிரி கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டாரை வேண்டிக் கொண்டார்.

அந்த இனாமை அடமானம் வைத்துக் கொண்டிருப்பவருடைய பாத்திதையைப் பார்க்கிலும் மிட்டாதாருக்கு முந்திய பாத்திதை கிடையாதென்றும் ஆதலால் தீர்வைக்காக இனாமை முதலில் கட்டுப்படுத்தி டிக்கிரி கொடுக்கப்பட மாட்டாதென்று தீர்மானிக்கபபட்டது.

லாயர்கள்—மெஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யர், T. R. கிருஷ்ணசாமி அய்யர், N. A கிருஷ்ணய்யர் ஆகிய இந்த வக்கீல்கள் அப்பீல் வாதிக்காகவும், மெஸாஸ் S. சீனிவாசய்யங்கார் K. V. கிருஷ்ணசாமி அய்யர் C. S. வெங்கடாச்சாரியார் N. C. விஜயராகவாசாரியார் A. சீனிவாசய்யங்கார் அப்பீல் பிரதிவாதிகளுக்கும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் ஏயிலிங்,
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார்.

இரண்டாவது அப்பீல் நெ. 37/ of 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—குடி தன்னால் சாகுபடி செய்யப்பட்டு பயிருக்கு விதிக்கப்பட்டிருக்கும் வீதப்படி தீர்வையைச் செலுத்திக்கொண்டு வரும்போது இரண்டாவது சாகுபடிக்கும் நஞ்சைபோல் புஞ்சை சாகுபடிக்கும் நில சுவான்தார் ஜலத் தீர்வை விதிப்பதிலிருந்து சென்னபட்டணம் பூஸ்திதி ஆக்ட் (I of 1908)29-வது பிரிவின்படி நிலஸ்வான்தார் விலக்கப்பட்டவன் என்றும் அப்படி விதிப்பது அவனுடைய நிலத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் தீர்வையை உயர்த்துவதற்கு மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கவர்ன்மெண்டார் தனக்கு (நிலஸ்வான்தாருக்கு)தீர்வை விதிக்குப் பக்ஷத்தில் தான் குடியினிடமிருந்து அதை வசூல் செய்ய தனக்குப் பாத்திதையிருக்கிறதென்கிற நிபந்தனையை பட்டாவில் சேர்க்க நிலஸ்வான்தார் பாத்தியமுடையவனல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிகளுக்காக பாரிஸ்டர் மிஸ்டர் M. D. தேவதாசும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. சினிவாசய்யங்காரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர் ஏயிலிங்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 1409 of 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு:— முந்திய வியாஜ்ஜியத்தில் சட்ட சம்பந்தமாகச் செய்யப்பட்ட தவறுதலான தீர்மானம் அதே வியாஜ்ஜிய மூலத்திற்காக அதே வாதியால் அதே பிரதிவாதியின்பேரில் கொண்டு வரப்படும் பிந்திய வியாஜ்ஜியத்தைத் தடைப்படுத்த மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் G. வெங்கடராமய்யா அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. நரசிம்மாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் எயிலிங்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. H 731 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு வியாபாரக் கம்பெனிக்காக வோட்டுக் கொடுக்கும் பாத்திதை அந்தக் கம்பெனியின் குறிப்பிட்ட மெம்பருக் கிருக்கிறதென்று ரெஜிஸ்டர் செய்துகொள்ளப் படுவது வோட்டர்களுடைய ஜாபிதாவை மாற்றுவதாக மாட்டாது என்றும் எலக்ஷன் நடத்தப்பட்டு வரும்போது கூட அப்படிப் பதிவு செய்துகொள்ளப் படலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு வியாபாரக் கம்பெனியார் தங்களுடைய தரப்பில் வோட்டுக் கொடுக்க இன்னாருக்குப் பாத்திதை யிருக்கிறதென்றும் அவருடைய பெயரை வோட்டர் ஜாப்திாவில் பதிவு செய்துகொள்ளும்படியாக முனிசிபாலிடி சேர்மெனுக்கு மனு செய்துகொண்டார். சேர்மென் அந்த மனுவை விசாரணை செய்யக் கட்டுப்பட்டவர். அந்த மனுவை உடனே தள்ளுபடி செய்வது சட்ட விரோதமான நடவடிக்கை யாகுமென்றும் அவருக்கு நல்ல எண்ண மிருப்பதற்கு அடையாளமாக மாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.



அது நல்ல எண்ணத்துடன் தள்ளுபடிசெய்யப்படாமல் போயிருந்தால் ஒரு கம்பெனி தரப்பில் ஒரு குறிப்பிட்ட மனிதன் ஓட்டுக் கொடுக்கப் பாத்தியமுடையவன் என்று ரெஜிஸ்டர் செய்துகொள்ள சேர்மன் மறுதளித்ததற்காக அவர் நஷ்டம் கொடுக்கக் கட்டுப்பட்டவர் என்றும் சேர்மன் மேற்படி குறிப்பிட்ட மனிதன்பேரில் வெளிப்படையான விரோதம் கொண்டிருந்தார் என்று ருஜூப்படுத்தப்படாமற்போன போதிலும் அவர் நஷ்டம் கொடுக்கக் கட்டுப்பட்டவர் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யரும், V. S. கோவிந்தாச்சாரியாரும், V. S. கண்ணபிரான் அய்யங்காரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸர்ஸ் J. L. ரோஜேரியோவும், V. ஸாருநம்பியாரும், K. V. கிருஷ்ணசாமி அய்யரும் R. கிருஷ்ணமாச் சாரியாரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்,
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

சிவில் மிஸ்லேனியாஸ் அப்பீல் நெ. 19 of 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு.—டிக்கிரியை நிறைவெற்றும் நடவடிக்கையில் சொத்து ஜப்தி செய்யப்பட்ட பிறகு டிக்கிரி பெற்றவன் மேல்நடவடிக்கை நடத்தாமல் போய்விட்டால் கோர்ட்டார் நிறைவேற்று மனுவைத் தள்ளுபடி செய்யலாம் அல்லது தகுந்த காரணங்களை முன்னிட்டு மனுவின் விசாரணைத் தேதியைத் தள்ளிவைக்கலாமென்று சி. பு. கோ. ஆர்டர் 21 ரூல் 57-ல் சொல்லப்பட்டிருக்கிறது. டிக்கிரி பெற்றுக் கொண்டவன் மேல்நடவடிக்கை நடத்த தவறிப்போகாத கேஸ்களுக்கு மேலே சொல்லப்பட்ட ரூல் பொருந்ாது.

டிக்கிரி நிறைவேற்றப்படுவதை நிறுத்திவைக்கும் பொருட்டு அப்பீல் கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். அந்தக் காரணத்தை முன்னிட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. டிக்கிரி பிறந்த தேதியிலிருந்து 12 வருடங்கள் சென்ற பிறகுகூட அந்த டிக்கிரிக்கு உயிர் கொடுத்துப் புதுப்பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யருக்குப் பதிலாக மிஸ்டர் P. S. நாராயணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் S. ரெங்கநாதய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேபியர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1257 of 1913

ஐகோர்ட்டுத் தீர்ப்பு—விடுதலை ஆதரவு என்று சொல்லப்பட்ட ஆதரவு சாதாரண விடுதலை ஆதரவா அல்லது எவனுக்கு விடுதலை ஆதரவு எழுதிக் கொடுக்கப்பட்டதோ அவனுக்கு விட்டு விடப்பட்ட சொத்தில் எழுதிக் கொடுத்தவனுக்கிருந்த பாத்திதைப் போய்விட வேண்டுமென்று கருத்துக் கொண்ட ஆதரவா என்கிற பிரஸ்னை ஒரு வியாஜ்ஜியத்தில் உண்டானது. விடுதலை ஆதரவு எழுதிக்கொடுத்தவன் ரூ 2000ம் பரிகாரம் பெற்றுக்கொண்டு சொத்தில் தனக்கிருந்த பாத்திதையை விட்டு விட்டதாகவும் விட்டுவிடப்பட்ட சொத்தை எவனுக்கு விடப்பட்டதோ அவன் அனுபவித்துக்கொண்டுவரவேணுமென்றும் ஆதரவில் எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்களால் தெரியக் கூடியதாயிருக்கிறது. இப்போபட்ட ஆதிரவு சாதாரண விடுதலை ஆதரவல்ல, கிரைய ஆதரவு என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. நாராயணமூர்த்திக்குப் பதிலாக மிஸ்டர் B. சோமய்யாவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் G. வெங்கட்ராமய்யாவும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்கார்.

இரண்டாவது அப்பீல் நெ. 19 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—அடமானத்திற்குட்பட்ட சொத்தை ஒரு அன்னியன் பன்னிரண்டு வருடங்களுக்கு அதிகமாக அனுபவித்துக்கொண்டு வருவது அடமான பாத்திதையை அடித்துப்போட மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் G. S. ராமச்சந்திரய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C பத்மநாப அய்யங்காரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்,
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

நெ. 1. of. 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—சி. பு. கோடில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகள் கி. மு. கோர்ட்டிற்கு

பொருந்தா. ஒரு வியாஜ்ஜிய மூலத்தில் வரவேண்டிய தொகையின் ஒருபாகத்திற்கு ஸ்ரீ. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வியாஜ்ஜிய மூலத்தை ஆதாரமாகக்கொண்டு சிவில்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவரப் படுவதை சி. பு. கோ. ஆர்டர் நெ. 2. ரூல். 2. தடுக்க மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரிஅய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 237. of 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு எஸ்டேட்டைக்குத்தகைக்கு ஒப்புக்கொண்டு குத்தகைகாலம் முடியும் பரியந்தரம் நிலஸ்வான்தாராக விருந்தவன் குத்தகை காலம் முடிந்துபோன பின்பு தான் நிலஸ்வான்தாராக விருந்தகாலத்தில் தனக்கு ரயத்தினிடமிருந்து வரவேண்டிய தீர்வை பாக்கிக்காக ரயத்தின் நிலத்தை விற்பனைசெய்யக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர். M. D. தேவதாசும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர். S. ருமசாமி அய்யரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ்.

நெ. 3 of 1914.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு தீர்ப்புக்கடனாளி இன்சால்மென்ட்டு என்று கிரமமாகக் கோர்ட்டாரால் கூறப்பட்டபிறகு ஒரு டிக்கிரிக்காரன் டிக்கிரியை நிறைவேற்றி வாரண்டில் பிடித்தால் அவனை ஜாமின் கொடுக்கும்படியாக உத்திரவுசெய்ய ஸ்மால் காஸ் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக மிஸ்டர், P. வெங்கட்ட ரமணராவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர், W. V. ரெங்கசாமி அய்யங்காரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி ஐயர்

அப்பீல் நெ. 98. of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஹிந்துலாப் பிரகாரம் சூத்திரர்களுக்குள்கூட ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பிறகு ஒளரசப்புத்திரன் (Aurasa) பிறந்திருந்தால் ஸ்வீகாரத் தகப்பனுடைய எஸ்டேட்டில் ஐந்தில் ஒருபங்கிற்குதான் பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. பாகப் பிரிவின டிக்கிரியில் விவாகமாகாத ஆண் மெம்பர்களுடைய விவாசச் செலவுகளுக்காக பிரத்தியேகமாகப் பணமெடுத்து ஏற்பாடு செய்து வைக்கப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டது.,

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் V. ருமதாஸ், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் P. நாராயணமூர்த்தியும் பேசினூர்கள்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர், சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர், நேப்பியர்.

லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் நெ. 16 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு—ஜில்லாக்கோர்ட்டில் செய்து கொள்ளப்படும். அப்பீலில் கீழ்கோர்ட்டுத் தீர்ப்பின் சர்ட்டிபிக்கேட் செய்யப்பட்ட நகலை அடக்கம்செய்து அதை ஆஜர்படுத்துவது செலாமணியாகாத காரியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக மிஸ்டர், G. S. வெங்கடாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக பாரிஸ்டர் M. D. தேவதாசும். ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜி மிஸ்டர், சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர், நேப்பியர்.

லெட்டர்ஸ் பேடென்ட் அப்பீல் நெ. 258 of 1914

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ரூ 100-க்குக் குறையாத ஸ்தாவர சொத்து சம்பந்தமான கிறய ஆதரவு ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. இந்த ஆதரவை ஆதாரமாகக்கொண்டு வாங்கினவன் சொத்தை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டிருக்கிறன். இப்பேர்ப்பட்ட ஆதரவு கிறையம் செய்வதற்கு ஏற்பட்ட உடன்படிக்கையையும் சொத்து தனக்கு ஸ்வாதீனப்பட்டிருப்பதையும் ருஜுப்படுத்த சாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.



லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர், T. பிறகாசமும். அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர், P. நாருயணமூர்த்தியும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர், டையாப்ஜீ.
ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்.

இரண்டாவது அப்பீல் நெ. 2423 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—மத்தியஸ்தர்களைக்கொண்டு வியாஜ்ஜியத்தைப் பைசல் செய்துகொள்ளுவதற்கு சம்மதம் கொடுத்தவர்களுக்குள் பிரதிவாதி சேரவில்லை இவன் மத்தியஸ்தர் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டவனுகமாட்டான். அந்த தீர்மானத்தை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட டிக்கிரியும் இவனைக் கட்டுப்படுத்தாது. ஆதலால் அந்த டிக்கிரியை ரத்து செய்துவைக்க அந்தப் பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்:—வியாஜ்ஜிய நடவடிக்கைகளை நடத்திவைக்கும் பொறுப்பை ஒரு பிரதிவாதி மற்றபிரதிவாதிகளிடம் ஒப்புவித்திருந்து மற்ற பிரதிவாதிகள் அந்த வியாஜ்ஜியத்தை மத்தியஸ்தர் மூலியமாக பைசல்செய்து கொண்டிருந்தால் மத்தியஸ்தர் தீர்மானத்திற்கு அந்தப் பிரதிவாதி கட்டுப்பட்டவனுவன் என்றும் அந்தத் தீர்மானத்தை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட டிக்கிரியும் அவனைக்கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. R. வெங்கட்ரும சாஸ்திரியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. V. கோபாலசாமி முதலியாரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்கார்.

சிவில் மிசிலேனியஸ் மனு 16 of 1915.

ஐகோர்ட்டுஅப்பீல்:—அசல்கோர்ட்டில ஸ்தாபர சொத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காகக்கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியத்தின் மதிப்புத்தொகை ரூ பதினுயிரத்திற்கு கம்மியாயிருந்தது அசல்கோர்ட்டு டிக்கிரிக்கு விரோதமாக ஐகோர்ட்டில்அப்பீல்செய்து கொள்ளப்பட்டதில் நடை முதல் லாபத்தையும் சேர்த்து டிக்கிரி கொடுக்கப்பட்டது. ஐகோர்ட்டார் டிக்கிரி கொடுத்ததைக் கணக்கிட்டால் ரூபா பதினுயிரத்திற்குமேலாகின்றது சி. பு. கோ. 110-வது பிரிவின்படி ஐகோர்ட்டு டிக்கிரிக்கு விரோதமாக பிரிவிகவுன்சிலில் அப்பீல்செய்துகொள்ள அனுமதிகொடுக்கப்பட மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனு தாருக்காக மெசர்ஸ் T. R. ருமச்சந்திர அய்யரும் G. S. ருமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் R. குப்புசாமி அய்யரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு தேவஸ்தான கமிட்டியில் காலியிருந்த ஸ்தானத்தை நிறப்புவதற்காகதரும சொத்துக்கள் ஆக்ட் (Religious Endowments Act) 10-வது பிரிவின்படி ஜில்லா ஜட்ஜி நடத்தும் நடவடிக்கைகளை சாக்ஷி வாக்குமூலத்தைத் தாக்கல் செய்ய கடமைப்பட்டவரல்ல, ஜில்லா ஜட்ஜிசெய்த நியமனத்தில், சாக்ஷி வாக்குமூலத்தை ஜில்லா ஜட்ஜி தாக்கல் செய்து கொள்ளவில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு ஐகோர்ட்டார் பிரவேசிக்கத் தகுதியுடையவர்களல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :—மனுதாருக்காக மிஸ்டர் T. R. ருமச்சந்திர அய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மெசர்ஸ் S. சீனிவாசய்யங்காரும் K. ருஜா அய்யரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் கோட் ஸ்டிராட்டர்.
ஜட்ஜி மிஸ்டர் சீனிவாசய்யங்கார்.

அப்பீல் வியாஜ்ஜிய நெ. 98 & 223 of 1910.

ஐகோட்டு தீர்ப்பு :—தகப்பனுலாவது அல்லது பாட்டனுலாவது வைக்கப்பட்ட அடமானத்தை துன்மார்க்க வினியோகம் என்கிற காரணத்தைமுன்னிட்டு ரத்துசெய்து வைப்பதற்காக புத்திரனுலாவது அல்லது பேரனுலாவது கொண்டுவரப்படும் வியாஜ்ஜியத்தில் பிரதிவாதிக்கும் அந்த துன்மார்க்கத்திற்கும் சம்பந்த மிருப்பதாக ருஜுப்படுத்தக் கட்டுப்பட்டிருப்பது மல்லாமல் வாங்கப்பட்ட கடன் துன்மார்க்கச் செலவிற்காக வினியோகப் படுத்தப்பட்டதென்றும் கடன்காரனுக்குத் தெரியுமென்றும்ருஜுப்படுத்தவேண்டும்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் N. ருஜகோபாலாச்சாரியாரும் அப்பீல் பிரதி வாதிக்காக மெசர்ஸ் M. U. பார்த்தசாரதி அய்யங்காரும் T. ரெங்காச்சாரியாரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் எய்லிங்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல நெ. 1192 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு மைனர் வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரனாக யிருக்கின்றான். அந்த வியாஜ்ஜியத்தின் கக்ஷிக்காரர்கள் எல்லாம் சம்மதித்து அந்த வியாஜ்ஜியத்தை மத்தியஸ்தர்கள் மூலியமாய் பைசல் செய்து கொள்ளுகிறார்கள். அந்த மத்தியஸ்தர்கள் செய்த தீர்மானத்தின் பிரகாரம் கொடுக்கப்பட்ட டிக்கிரிக்கு அந்த மைனர் கட்டுப்பட்டவனாக மாட்டான் என்று ஆனால் கோர்ட்டாருடைய அனுமதியைப்பெற்று அந்த வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்பட்டிருந்தால் அந்த டிக்கிரிக்கு அவனைக் கட்டுப்படுத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. ருமதாசும் அப்பீல் பிரதிவாதிக்காகமிஸ்டர் P. நாக பூஷணமும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெ. 2672 of 1913

ஐகோர்ட்டு தீர்ப்பு:—A. என்பவன் யாதொரு பாத்தியமில்லாமல் வீட்டை சொற்பகாலம் வரையில் அனுபவித்துக்கொண்டு வருகிறான் இவனை B. என்பவன் பலாத்காரமாய் ஆக்கிரமித்து அப்புறப்படுத்திவிட்டு வீட்டிற்குள் நுழைந்து அனுபவித்துக் கொண்டு வருகிறான். இந்த வீட்டை A. என்பவன் வியாஜ்ஜியங் கொண்டுவந்து ஸ்வாதீனம் படுத்திக் கொள்ள பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல வாதிக்காக மிஸ்டர் S. துரைசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. வெங்கடநாதய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 2859 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு ஸ்தாபரசொத்து புருஷனால் பெண்ஜாதிக்குத் தானம் செய்யப்பட்டால் அவள் அந்த சொத்தை ஆயுசுள்ளபரியந்தம் அனுபவிக்கும் சுதந்தரத்துடன் மட்டிலும தானம் செய்திருப்பதாக ஹிந்துலா யூகிக்கின்றது. மற்றசந்தர்ப்பங்களைக்கொண்டு சர்வ பாத்திதைகளுடன் சொத்து தானம் செய்யப்பட்டிருக்கிறதென்று ருஜூப்படாதபோது தான ஆதரவில் "சர்வ சுதந்தரமாய்" என்று சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு புருஷன் அந்த சொத்தை சகல பாத்தியதைகளுடன் தானம் செய்திருக்கிறான் என்று எண்ணப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. கிருஷ்ணமாச்சாரியரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. V. கோபாலசாமி முதலியாரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.
ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

இரண்டாவது அப்பீல் நெ. 2726 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—அடமானம் வைத்தவன் அடமானத் தொகையைக் கோர்ட்டில்கட்டி அடமானம் வைத்துக் கொண்டவர்களுக்கெல்லாம் நோட்டீஸ் அனுப்ப மனு செய்துகொண்டான். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் நோட்டிஸ் சார்வ் செய்யப்படுவதற்கு முந்தி மனுவை வாப்பிஸ் பெற்றுக் கொண்டான். சட்டப் பிரகாரம் அடமானத்தொகை டெண்டர் (Tender) செய்யப்பட்டதாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை வட்டி ஏறுவதைத் தடுக்கமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காகமிஸ்டர் B. நரசிம்மராவ் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் P. சோமசுந்திரமும் ஆஜரானார்கள்.

---

## RULINGS ON HINDU LAW.

## ஹிந்து லாவின் பேரில் தீர்ப்புகள்.

பாகப்பிரிவினை செய்யப்படக் கூடாத எஸ்டேட்டிற்கு ஜேஷ்ட குமாரனே வார்சாகவருகிறான். அந்த ஜேஷ்ட புத்திரன் மற்ற சகோதரர்களிடமிருந்து உள்ளபடி பிரிந்திருந்து ஆண் வார்சில்லாமல் இறந்துபோய்விட்டால் அவனுடைய விதவை விரோதமான பழக்கம் அனுஷ்டானத்தில் இல்லாதபோது வார்சாக வருவதிலிருந்து விலக்கப்பட்டவளல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

காசியில் அனுஷ்டானத்திலிருக்கும் ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்திற்கு ஒரு புராதீனமான ஜெமீனிருந்தது. அது பாகப் பிரிவினை செய்யப்படக் கூடாத ஜெமீன். மூத்த சகோதரனுடைய ஜேஷ்ட புத்திரர்களே அந்த ஜெமீனுக்குப் பட்டத்திற்கு வருவது அந்தக் குடும்பத்தில் வழக்கம். அந்த ஜமீன் குடும்பத்தின் இளய மெம்பர்கள எல்லோரும் ஜெமீனிலிருந்து ஜீவனாம்சம பெற்றுக்கொள்ள மட்டிலும் பாத்திய முடையவர்கள். அந்த ஜெமீனுக்குக் கடைசியாக ஜெமீன்தாரா



யிருந்தவர் ஆண் வார்சில்லாமல் இறந்துபோய்விட்டார். அவருக்கு தாரா குமாரபாய் என்கிற விதவையிருந்தாள். அவருடைய சிறியதகப்பனாகிய பூபத் நாராயன் என்பவருடைய புத்திரனும் பேரப்பிள்ளைகளுமிருந்தார்கள். ஆதலால் கடைசி ஜெமீன்தார் இவர்களை விட்டுவிட்டு இறந்துபோய் விட்டார். ரும் நாருபன் என்னும் ஜமீன்தாருடைய தகப்பனார் தன்னுடைய சகோதரனாகிய பூபத் நாராயனுடைய நடத்தையில் அதிருப்தி அடைந்து அவருடைய ஜீவனாம்சத்திற்காக ஜமீனின் ஒரு பாகத்திற்கு "மொக்காரிபட்டா" கொடுத்து அந்த எஸ்டேட்டை அவர் பராதீனஞ் செய்யும்படியான அதிகாரம் கொடுக்காமல் அவருடைய அனுபவத்திற்கு விட்டிருந்தார். பூபத் தனக்காக குடும்பத்தின் வீட்டிற்கு சமீபத்தில் பிரத்தியேகமாக ஒரு வீடு கட்டி வசித்துக்கொண்டு வந்தார். அந்த வீட்டில் சாப்பிட்டுப் பூஜை நடத்திக் கொண்டு வந்தது மல்லாமல் பூபத் அவருடைய பேத்தியின் விவாகத்தை அவருடைய செலவிலேயே அந்த வீட்டிலேயே நடத்தி வைத்தார்.

இத்தியாதி விஷயங்களால சகோதரர்கள் ஆசாரத்திலும், பூஜையிலும், எஸ்டேட்டிலும், தனி தனியே யிருந்து வந்திருக்கிறார்கள் என்று ருசுப்பட்டிருக்கிறதென்றும் ஆதலால் ஜெமீன்தாருக்கும் மற்ற சகோதரருக்கும் பூர்த்திப்பட்ட விபக்தம் நடந்திருக்கிறதென்றும், அது காரணமாக சிறிய தகப்பனாருடைய புத்திரனைக் காட்டிலும் விதவை தன்னுடைய புருஷனுடைய ஜெமீனுக்கு வார்சாக வர அதிக பாத்தியதை யுடையவள் என்றும் பிரிவி கௌன்சிலர்களால் தீர்மானிக்கப் பட்டது. 2. லா. வீ. 843 Thakwari Tarakumari Vs. Chatturbuja Narayan Singh 2. L. W. 843.

---

பிரதிவாதியின் புருஷனுடைய சிறிய தகப்பனாகிய S என்பவரால் 1830 ல் ஒரு கோவில் கட்டப்பட்டு அதில் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் கொண்டிருக்கும் படியாகச் செய்யப்பட்டது. கோவிலுக்குவேண்டிய விக்கிரகங்களும் அதில் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பேர்ப்பட்ட கோவில்களிலிருக்கும்படியான அர்ச்சகர்கள் வேத பாராயணம் செய்கிறவர்கள். அத்தியாபாக்கம் பாத்திதை உடையவர்கள் ஆகிய இவர்கள் எல்லோரும் இதில் நியமிக்கப்பட்டார்கள். பூஜைகள் நைவேத்தியங்கள முதலியவைகள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தக் கோவிலுக்கும் மற்ற கோவில்களுக்கும் வித்தியாசங்கள் கிடையா. பிரஸ்தாப கோவில் கட்டப்பட்ட கால முதல் அது பிரதிவாதியினுடைய மானேஜ்மெண்டிலும் அதற்கு முந்தி தருமகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டவர்களுடைய மானேஜ்மெண்டிலும் இருந்து கொண்டு வந்தது. பொது ஜனங்கள் அந்தக்கோவிலுக்குள் போகவும் சுவாமியைக் கும்பிடவும் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் தாராளமாய் விடப்பட்டார்கள். இப்படிச் செய்வதற்கு ஜனங்கள தருமகர்த்தாக்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒரு விதியிருந்ததாக எண்ணுவதற்கு யாதொரு காரணமுமில்லை. அந்த தேவஸ்தானங்களின் நிலங்களுக்கு ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டபோது இனாம் பட்டாக்கள அந்த தேவஸ்தானத்திற்குள் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமியின் பேரில் பிறப்பிக்கப்பட்டது. அந்த தேவஸ்தான சம்பந்தமாக ஏற்பட்டிருந்த உயிலில் பிரதிவாதியின் புருஷன் தர்மகர்த்தா என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களைக்கொண்டு அந்த தேவஸ்தானம் பொது ஜனங்கள் தெய்வத்தைக் கும்பிடுவதற்காக விடப்பட்ட தேவஸ்தானம் என்று ருஜூப்படுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

கோவில சமையல்செய்யப்பட்டு கோவிலிலிருக்கும் தெய்வத்திற்கு நைவேத்தியம் செய்யப்பட்ட பிரசாதத்தைப் பிரதிவாதி உபயோகப்படுத்திக்கொண்டு வந்ததும் தேவஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் காரியஸ்தர்கள் வேலைக்காரர்கள் முதலானவர்கள் பிரதிவாதிக்கு வேலைசெய்து வந்ததும், உயிலில் தேவஸ்தான மானேஜ்மெண்டைப்பற்றி அனேக நிபந்தனைகள் சொலலப்பட்டிருப்பதும் தேவஸ்தான சொத்துக்களுக்காவது அல்லது வருமானத்திற்காவது பிரதிவாதியும் அவருக்கு முந்தி தருமகர்த்தாக்களாக இருந்தவர்களால் கணக்கு வைக்கப்படாமலிருப்பதும்—ஆகிய இந்த விஷயங்கள் எல்லாம் தேவஸ்தானம் பொது ஜனங்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட தேவஸ்தானம் என்று எண்ணப்படுவதை சிறிதேனும் மாற்றமுடியாதவைகள் என்றும் அந்த தேவஸ்தானம்பிரதிவாதியின் சொந்த சொத்தென்று ருஜூப்படுத்துவதற்குப் போதுமான சாக்ஷியங்களாகமாட்டா என்றும் தீர்மானிக்கப்பட்டது என்று சீப் ஜட்ஜிமிஸ்டர் சர் ஜான் வாலிஸ், ஜட்ஜி மிஸ்டர் ஸ்ரீனிவாச அய்யங்காரும கூடிய சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 2. லா. வீ. 858 Peesapathi Seetha Ramanujachari Vs. Kanduri Vellamma 2 L. W. 858.

---

## MISCELLANEOUS SUITS.
## நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

## MADRAS HIGH COURT.
சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.
ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்.

### திருடன் போலிஸ் காரனைக் கொன்ற கேஸ்

கிரிமினல் அப்பீல்.

பழனிக் கொறவன்.
*vs*
சக்ரவர்த்தியார்.

**கேசின் விபரம்:**—திருச்சினாப்பள்ளி ஜில்லா வாங்கல் ரோட்டில் கடந்த ஜூன்மீ ஒரு தீவர்த்திக் கொள்ளை நடந்தது. எல்லாக்கேடி (K. D.) களும் வாங்கல் கிராமத்தில் அன்றிரவு இருந்தார்களா என்று அறிந்துகொண்டு வரும்படியாக போலிஸ் சப் இன்ஸ்பட்டரால் சீனிவாசலுநாயுடு என்பவனையும் இன்னொரு கான்ஸ்டேபிலையும் வாங்கல் கிராமத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள், வாங்கல் கிராமத்தில் அந்த கான்ஸ்டேபில்கள் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்து உரங்கி சிறிதுநாழிகைசென்று இரண்டுகிராமத்தார்களுடன் தீவற்றிக் கொள்ளைகளைப்பற்றியும் கேடிகளைப்பற்றியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்ச்ள். அந்த நடு இரவில் கிராமத்தில் ஒரு வீட்டில் சப்தம் உண்டானது. இரண்டு கான்ஸ்டேபில்களும் ஓடிப்போய்பார்த்தார்கள். அந்த வீட்டில் இந்தக்கேசின் குற்றவாளியாகிய பழனிக்கொரவனும் இன்னும் சில திருடர்களும் புகுந்து நகைகளையும் ரொக்கப்பணத்தையும் இன்னும் சில சாமான்களையும் திருடி தடையங்களை எடுத்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். கான்ஸ்டேபில் சீனிவாசலுநாயுடு திருடர்களை ஒரு பர்லாங்வரையில் பின் தொடர்ந்து ஓடிப்போய் பழனிகொரவனைப்பிடித்தான். பழனிக்கொரவன் சீனிவாசலு நாயுடுவை தன்னுடைய கையிலிருந்த ஈட்டியால் குத்தினன். சீனிவாசலுநாயுடுச்குக் காயம்பட்டது. அதுகாரணமாக அவன் ஆஸ்பத்திரிக்கிக் கொண்டுபோகப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டான். 10-நாள் சென்ற பிறகு ஆஸ்பத்திரியிலேயே மாண்டு போனன். அதன் பிறகு பழனிக்கொரவன் பிடிக்கப்பட்டு கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு திருச்சினாப்பள்ளி செஷன் கோட்டிற்கு கமிட் செய்யப்பட்டான்.

**கேஸ் நடவடிக்கை:**—கேசை விசாரணைசெய்த அசசர்கள் குற்றவாளி சட்டப்படி கோபம் என்று சொல்லப்படக்கூடாத கொலைக்குற்றத்தைச் செய்திருக்கிருன் என்று அபிப்பிராயப் பட்டார்கள் ஜட்ஜி அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு. குற்றவாளியின்பேரில் கொலை குற்றம் ஸ்தாபனை செய்தார்.

**செஷன் ஜட்ஜி தீர்ப்பு:**—"குர்றவாளி தன்னைத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு சீனிவாசலுநாயுடுவை ஈட்டியின் தலையால் அடித்தான் கான்ஸ்டேபிலைக் கொல்லவேண்டுமென்று கருத்துக்கொண்டு அடித்தானு அல்லது அல்லவா என்று நமக்குத் தெரியவில்லை. அனேகமாய் தன்னுடைய செய்கையால் மடிந்துபோனவன் மாண்டுபோவான் என்று யோஜனை செய்திருக்கமாட்டான். ஆகையால் குற்றவாளி அவனைக் கொன்றுவிட்டான். ஆயுதபாணிகளாக் விருக்கும் திருடர்கள் தங்களைத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு அவர்களைப் பிடித்தவர்களைக் கொன்றுபோட தாமதிக்கிறதில்லை. பொது ஜனங்கள் அப்பேர்ப்பட்ட திருடர்களிடமிருந்து பாது கார்க்கப்படவேண்டிய தவசியமென்று நான் நினைக்கிறேன். இவன் ஆயுதபாணியாகச் சென்று கன்னம்வைத்து வீட்டிற்குள் நுழைந்து திருடினன். இவன் ஒரு போலிஸ்காரனுல் பிடிக்கப்பட்டபோது அவனைப் பிடித்தவனைக் கொன்றுவிட்டான்." என்று செஷன் ஜட்ஜு நியாயஞ்சொல்லி குற்றவாளிக்கு தூக்குதண்டனை விதித்தார்கள்.

தூக்குதண்டனை ஐக்கோர்ட்டாரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். குற்றவாளியும் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

**லாயர்கன்:**—கவர்ன்மெண்டு தாப்பிற்கு பப்ளிக் பிராசிகியூட்டர் பேசினர்.

**ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:**—பப்ளிக் பிராசிக்கியூட்டர்பேசினதை கோர்ட்டார் கேட்டுக்கொண்டபிறகு கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதிப் படுத்தினர்கள்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்,
ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்.

கிரிமினல் அப்பீல்.

கிருஷ்ணம்மாள்.
*vs.*
சக்ரவர்த்தியார்.

### பெண்ஜாதி புருஷனுக்குப் பாஷாணமிட்ட கேஸ்.

**கேசின் விபரம்:**—செங்கற்பட்டு ஜில்லா புத்தூரில் கிருஷ்ணம்மாள் என்னும் பெயருடையவள் கடந்த ஜனவரி மாதத்தில் ஒருநாள் நடு இராத்திரியில் தன்னுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போய் அடுத்தநாள் காலையில் வீட்டிற்குத் திரும்பிவந்தாள், அவளுடைய புருஷன் அவள்பேரில் சந்தேகங்கொண்டு அவளைத் தண்டித்தான். இரண்டு மூன்று நாட்கள் சென்றபிறகு பெண்ஜாதியால் போடப்பட்ட சாப்பாட்டை புருஷன் சாப்பிட்டபிறகு புருஷன் நோய்கொண்டு வாந்தி எடுத்தான். அவன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு சொஸ்தப்படுத்தி வைக்கப்பட்டான். வாந்தி யெடுக்கப்பட்ட வஸ்து சென்னை கவர்ன்மெண்டு ரசாயன பரிசோதகருக்கு அனுப்பப்பட்டது அதில் வெண்மையான பாஷாண மிருந்ததாகக்கண்டு பிடிக்கப்பட்டது. ஆதலால் கிருஷ்ணம்மாள் பேரில் கேஸ்கொண்டுவரப்பட்டு செங்கர்பட்டு செஷன்கோர்ட்டிற்குக் கமிட் செய்யப்பட்டாள்.

**ஃ செஷன் கோர்ட்டார் தீர்ப்பு:**—கிருஷ்ணம்மாள் தன்னுடைய புருஷனைக் கொல்லவேண்டுமென்று நினைத்திருக்கமாட்டாள் என்றும் மேலும் பாஷாணத்தால் இன்ன தீமை



தன்னுடைய புருஷனுக்கு உண்டாகக்கூடுமென்று கிருஷ்ணம்மாளுக்கு தெரிந்திருக்காது என்று செஷன்ஜட்ஜிசொல்லி குற்றஸ்தாபனைசெய்து அவளுக்கு மூன்றுவருட கடினகாவலில் தண்டனை விதித்தார்கள். அந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டாள்.

**ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:**—கீழ்க்கோர்ட்டு குற்றஸ்தாபனையிலும் தண்டனையிலும் பிரவேசிக்க முடியாதென்று ஐக்கோர்ட்டார் தீர்ப்பு சொன்னர்கள்.

### 23-9-1915.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்

சிவில்மனு.

### சிவகிரி எஸ்டேட் வியாஜ்ஜிய சம்பந்தம்.

**வியாச்சியச் சுருக்கம்:**—சிவகிரி எஸ்டேட் வியாஜ்ஜியத்திலிருக்கிறது. சிவகிரி ஜெமீன்தாரனி சிவகிரி எஸ்டேட்டிற்கு ரிஸீவராக விருந்து வரும்படியாக ஐக்கோர்ட்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிருர். ஆகவே திருநெல்வேலி சப்கோர்ட்டார், ஜெமீன்தாரனி ரிஸீவராகவிருந்து வருவதற்காக லக்ஷரூபாய் கோர்ட்டில் ஜாமீன்கட்ட வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக ஜமீன்தாரனியார் ஐக்கோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனு தாக்கல் செய்யப்பட்டது. சப்கோர்ட்டாருடைய உத்திரவை ரத்துசெய்யவேண்டும் அல்லது ஜாமீன் தொகையை குறைக்கவேண்டு மென்பது ஜமீன்தாரினியின் பிரார்த்தனை.

**மனுதார் லாயர் பேசினது:**—ஜமீன் தாரனியை சிவகிரி எஸ்டேட்டிற்கு ரிஸீவராக நியமித்தது ஐக்கோர்ட்டார் ஆதலால் ஜாமீன் தொகை கட்டும்படி ஜமீன்தாரினிக்கி உத்திரவுசெய்ய சப்க்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. எப்படியிருந்தாலும் கட்டப்படும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கும் ஜாமீன் தொகை மிகவும் அதிகமாயிருக்கிறது. ரூ 2200-க்கு மேல் ரிஸீவர் கையிருப்பு வைத்துக்கொள்ளக் கூடாதென்று ஐக்கோர்ட்டார் உத்திரவு செய்திருக்கிருர்கள். ஆதலால் ஜாமீன் தொகை குறைக்கப்படலாம் என்று எடுத்துப்பேசினர்.

**ஐகோர்ட்டார் தீர்ப்பு:**—இந்தக்கேசிற்குச் சி. பு. கோ. 155-வது பிரிவு பொருந்தாது. ஆதலால் சப்கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று சொல்ல முடியாது. சப்கோர்ட்டாரால் கட்டும்படி உத்திரவு செய்யப்பட்ட ஜாமீன் தொகை மிகவும் அதிகமானதாயிருக்கிறது. ஆதலால் சாட்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி அந்த உத்திரவில் பிரவேசிக்க ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது. சப்கோர்ட்டாரால் கட்டும்படி உத்திரவு செய்யப்பட்ட ஜாமீன் தொகையை ரூ 60-ஆயிரத்திற்குக் குறைத்திருக்கிறோம் என்று உத்திரவு செய்தார்கள்.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. சீனிவாசய்யங்காரும், மிஸ்டர் A சூரியநாராயணய்யாவும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் A கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானர்கள்.

### 29-9-1915.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர். ஸ்பென்சர்,
ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்.

கிரிமினல் அப்பீல்.

### கும்பகோணம் நரச்சோரக் கேஸ்.

**கேசின் விபரம்:**—கும்பகோணத்தில் படையாச்சி ஒருவன்தான் தன்னுடைய வீட்டில் இல்லாதபோது முருகேசமுதலி என்பவனும், பாலே என்னும் ஸ்ரீயும் ஆக இருவரும் சேர்ந்து தன்னுடைய பெண்ஜாதியைத் திருடிக்கொண்டுபோய் விட்டார்கள் என்றுசொல்லி அவர்கள்பேரில் நரச்சோரக்குற்றஞ்சாட்டினன் கும்பகோணம் சப்மாஜிஸ்டிரேட் இந்தக்கேசை விசாரணைசெய்து முருகேசமுதலிக்கு 6-மாத கடுங்காவல் தண்டனையும், பாலே என்பவளுக்கு 4 - மாத கடும் காவல் தண்டனையும் விதித்தார்கள்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக குற்றவாளிகள் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

**சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு:**—அசல் கோர்ட்டு குற்றஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதிப் படுத்தப்பட்டது.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

**லாயர்கள்:**—குற்றவாளிகள் தரப்பிற்கு அட்வோக்கேட் மிஸ்டர் S. T. ஸ்ரீனிவாச கோபாலாச்சாரி ஆஜரானர்

**குற்றவாளியின்லாயர் பேசினது:**—குற்றவாளிகள பிரியாதியினுடைய பெண்ஜாதியை சீர்காழிக்கி அழைத்துக்கொண்டு போனது அவளைத் திருடினதாக மாட்டாதெனினும் அவர்களுக்கு கெட்ட எண்ணமிருந்ததாக ருஜுப்படுத்தப் படவில்லை என்றும் எடுத்துக்சொன்னர்.

**ஐகோர்ட்டார் உத்திரவு:**—ஐக்கோர்ட்டார் அப்பீல் தாக்கல்செய்துகொள்ளப் படும்படியாக உத்திரவுசெய்து அப்பீல பைசல் செய்யப்படும் பரியந்தம் குற்றவாளிகளை ஜாமீன்பேரில் விட்டுவைக்கப் படவேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

## CITY CIVIL COURT.

சிட்டி சிவில் கோர்ட்டு.

காந்தர்வ விவாகக் கேஸ்.

21-9-1915.

T. S. R. வரதராஜமுதலியார்—வாதி

*vs.*

1. அம்முபாய் என்கிற ஞானம்பாள்.
2. அமிருதலிங்கமுதலியார்வகையரு

} பிரதி வாதிகள்.

வியாச்சியச் சுருக்கம்:—வாதியினிருப்பிடம் திருச்சினுப்பள்ளி தொழுகவேளாள ஜாதியைச்சேர்ந்தவர். பிரதிவாதிகளும் அதே ஜாதியார். 1-வது பிரதிவாதி ருயப்பேட்டை ருஜரத்தின முதலியாருடைய புத்திரி 2-வது பிரதிவாதி சென்னைப் பத்திரப்பதிவு இலாக்கா இன்ஸ்பெக்டா ஜெனரல் ஆபீசில்கிளர்க் உத்தியோகத்திலிருக்குறர். வாதி 1-வது பிரதிவாதியை காந்தர்வவிவாகம் செய்துகொண்டார். அந்த விவாகத்திற்கு ஏற்ற ஹோமச்சடங்கும் நடத்தப்பட்டது வாதியும் 1 - 2 - பிரதிவாதிகளும் இஞ்ஜினீரிங் காலேஜ் புரோபசராகிய மிஸ்டர் மாணிக்கநாய்க்கருடைய புத்திரி அகிலாண்டத்தம்மாள் ஆகிய எல்லோரும் சென்னையில் ஒரேவீட்டில் கடந்த 7-மாத காலமாகவசித்துக்கொண்டுவந்தார்கள். 1-வது பிரதிவாதி தன்னுடன் கூடச்சேர்ந்து வாழும் பொருட்டு கட்டாயப்படுத்த வாதி இநதவியாஜ்ஜியத்தைக்கொண்டுவந்திருக்கிறர். 2-வது பிரதிவாதி முதல் பிரதிவாதியின் தமையன் அவர் 1-வது பிரதிவாதியைத் தன் வசம் வைத்துக்கொண்டு வாதியிடம் அனுப்ப இஷ்டப்படாமலிருப்பதால் அவரும் இந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறர்.

பிரதிவாதியின் ஆக்ஷேபணை:—வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் காந்தர்வ விவாகமாவது அல்லது வேறெந்த விவாகமாவது நடக்கவில்லை என்றும் அப்படி காந்தர்வவிவாகம் நடந்திருந்தபோதிலும் அது செலாமணியாகக் கூடிய விவாகமல்லவென்று பிரதிவாதி தரப்பில் கக்ஷி சொல்லப்பட்டது.

லாயர்கள்:—வாதிக்காக வக்கீல் மிஸ்டர் K. S. கணேஸஅய்யரும், முதல்பிரதிவாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் M. D. தேவதாசும் ஆஜரானுர்கள்.

கோர்ட்நடவடிக்கை:—கோர்ட்டார் சாக்ஷிவிசாரணை செய்வதற்குமுந்தி காந்தர்வவிவாகம் இந்தக் காலத்தில் செலாமணியாகுமா என்கிறபிரஸ்னையைப் பற்றி ஆருய ஆரம்பித்தார்கள்.

மிஸ்டர் கணேசய்யர் பேசினது:—சூத்திர ஜாதியாரும் க்ஷத்திரிய ஜாதியாரும் செய்துகொள்ளலாமென்று ஹிந்துலாவால் ஒப்புக்கொள்ளப்பட்ட 8-வகை விவாகங்களுக்குள் காந்தர்வவிவாகம் ஒன்று இப்போது அந்த ஜாதியர்கள் அந்த விவாகத்தைப் பின்பற்றும விருப்பமை முன்னிட்டு அந்த விவாகம் செலாமணியாகமாட்டாதென்று சொல்லமுடியாது. அந்த விவாகம் இப்போது செலாமணியாக மாட்டாதென்று எண்ணிக்கொண்ட போதிலும் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் உள்ளபடி விவாகம் நடந்து அவர்கள் புருஷனும் பெண்ஜாதியாகவும் எண்ணப்பட்டு வநதிருக்கிறபடியால் அந்த விவாகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோபாலசந்திர சர்க்கார் ஹிந்துலாவில் சொல்லப்பட்டிருப்பதையும் 12 சென்னை 72-ம் ரிபபோர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் ஜட்ஜி மிஸ்டர் முத்துசாமி அய்யருடைய தீர்ப்பையும் இன்னும் சில பிரமாணங்களையும் எடுத்துக்காண்பித்தார்.

பாரிஸ்டர் மிஸ்ட்டர் தேவதாஸ் பேசினது :—காந்தர்வவிவாகம் இப்போது அனுஷ்டானத்திலில்லை. இந்தகாலத்தில் அந்த விவாகமுறைப்படி விவாகம் செய்துகொண்டால் அது சட்டப்படி செலாவணியாகமாட்டாது என்று கக்ஷிசொல்லி தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாக, இந்தவிவாகம் ஒருவைப் பாட்டி அமர்த்திக் கொண்டதற்குச் சமம் என்று அலகபாத் ஐக்கோர்ட்டாரால் செய்யப்பட்டிருக்கும் ஒரு தீர்ப்பை பிரமாணமாக எடுத்துக்கூறினர்.

முடிவு:—இன்னும் தீர்ப்பு சொல்லப்படவில்லை.

## ACTS WITH COMMENTARIES

வியாக்கியானத்துடன் சட்டங்கள்.

## INDIAN PENAL CODE.

இந்தியன் பினல் கோட்.

பிரிவு 318.

குழந்தை பிறப்பதற்கு முந்தியாகிலும் அல்லது பிந்தியாகிலும் அல்லது பிறக்கும்போதாகிலும் இறந்துபோய்விட்டால் அந்தக் குழந்தைபிறந்த சம்பவத்தை மறைத்து வைக்கும்பொருட்டு அக்குழந்தையின் பிரேதத்தை ரகசியமாகப் புதைத்து அல்லது வேறுவிதமாக அந்தப பிரேதத்தைப் பைசல்செய்து அந்தக் குழந்தை பிறந்ததை மறைத்துவைத்தாலும் சரி அல்லது மறைத்துவைக்க எத்தனித்தாலும்சரி அவனுக்கு இருவகை ஜெயில் தண்டனைகளில் எந்த தண்டனையாவது அல்லது அபராததண்டனையாவது அல்லது ஜெயில் தண்டனையும் அபராத தண்டனையும் சேர்த்தாவது விதிக்கப்படும்.



### குறிப்புகள்.

குற்றம்செய்த நபரை போலிசார் வாரண்டில்லாமல் கைதி செய்யலாம். குற்றவாளிக்கு முதலில்வாரண்டு பிறப்பிக்கப்படவேண்டும், குற்றவாளியை ஜாமின்பேரில் விடலாம் ஆனல் கக்ஷிக்காரர்கள் சமாதானமாகப்போக முடியாதகேஸ். அந்தக் குற்றவாளி செஷன் கோர்ட்டாராவது அல்லது பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாவது அல்லதுமுதல் கிளாஸ்மாஜிஸ்டிரேட்டாலாவது அல்லது இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாலாவது விசாரணை செய்யப்படவேண்டும்

ரகசியமாக குழந்தை புதைக்கப்பட்ட கேசிற்கு மட்டிலும் அந்தப்பிரிவு பொருந்துமேயொழிய பிண்டம் ரகசியமாகப் புதைக்கப்பட்டிருந்தால் அந்தக் கேசுக்கு இந்தப் பிரிவு பொருநதாது. பிண்டம் ரகசியமாய் புதைக்கப்பட்டால் குற்றவாளி இ. பி. கோ. 312-வது பரிவின் தண்டனைக் குட்படுத்தலாம். பிறக்கவேண்டிய காலத்திற்குமுந்தி ஜெனித்தால் புதைக்கப்பட்டது குழந்தையா அல்லது பிண்டமா என்று பிரஸ்னை உண்டாகும் அப்போது டாக்ட்டர் சாக்ஷியம் முக்கியமாய் வேண்டியதாயிருக்கும் ஆயினும் தாயார் ஏழுமாத கர்ப்பவதியாக யிருந்திருந்தால் ரகசியமாகப் புதைத்ததற்காக குற்றவாளி இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படுவான். 5-மாதம் அல்லது 6-மாத கர்ப்பத்தில்கூட குழந்தை ஜெனித்து ஜெனித்தபின்பு சிலகாலம் வரையில் குழந்தை ஜீவதிசையிலிருப்பது முண்டு. ஆதலால் சென்னைப்பட்டணம் ஐகோர்ட்டார் 6-மாத கர்ப்பத்தில் பிறந்த குழந்தையை ரகசியமாக புதைத்ததாக இநதப் பிரிவின்படி குற்றஸ்தாபனை செய்யப்பட்டு ஒருமாத தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன் அப்பீல் செய்துகொண்டபோது அந்த குற்றஸ்தாபனையையும் தண்டனையையும் ஆக்ஷேபிக்கவில்லை, இந்தப் பிரிவின்படி உண்டாகும் கேஸ் கொலைக்கேசாகப் பலப்பட்டாலும் பலப்படும். ஒரு குழந்தை பிறந்தபிறகு அது கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிறது. எவன் அந்தப பிரேதத்தை ரகசியமாகப் புதைத்தானே அவன் அந்தக் குழந்தையை கொலை செய்தான் என்பதற்கு தெளிவான சாக்ஷியமிருந்தாலொழிய அவன்பேரில் கொலைக்குற்றம் ஸ்தாபனை செய்யப்படக்கூடாது ஆனல் அவன்பேரில் இந்தப் பிரிவின் குற்றம் ஸ்தாபனை செய்யப்படவேண்டும்.

இந்தப் பிரிவின் குற்றஸ்தாபனை செய்யப்படுவதற்கு அடியிற்கண்ட விஷயங்கள் ருஜுப் படுத்தப் பட்டிருக்கவேண்டும்:—

(1) குழந்தையின் பிரசவம்.

(2) பிரசவிக்கப்பட்டது குழந்தையேயொழிய பிண்டமல்ல.

(3) பிரசவமாவதற்கு முந்தியா அல்லது பிரசவமாகையிலா அல்லது பிரசவமானதற்குப்பிந்தியா இறந்துபோயிற்று.

(4) குற்றவாளி பிரேதத்தைப் புதைத்தான் அல்லது வேறுவிதமாக பைசல் செய்தான்.

(5) அப்படி புதைக்கப்பட்டது அல்லதுபைசல் செய்யப்பட்டது ரகசியமாக நடத்தப்பட்டது.

(6) அப்படி ரகசியமாக புதைத்ததில் அல்லது பைசல் செய்ததில் அவனுடைய எண்ணம் அது பிறந்ததை மறைக்கவேண்டுமென்றிருந்தது.

### சில உதாரணங்கள்.

1. ஒரு ஸ்திரீ சோரபுருஷனுக்குப்பெற்ற குழந்தையை படுக்கைக்கும் அடிமெத்தைக்கும் மத்தியில் மறைத்தாள். இவள் இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படவேண்டியவள் என்று தீர்மானிக்கப்பட்டது.

2. இன்னெரு ஸ்திரீதான் சோரபுருஷனுக்கு ஈன்ற குழந்தை இறந்துபோனபின்பு அதை தன்னுடையபடுக்கை அறையிலிருந்த மேல்மூடி இல்லாத ஒரு பெட்டியில் மறைத்துவைத்தாள். அந்த அறை வீட்டி லிருப்பவர்கள் எல்லோரும் வந்துபோகக் கூடியவிடம் ஆதலால் இறந்துபோன குழந்தையை மறைத்துவைக்க வேணுமென்கிற எண்ணம் அவளுக்கில்லை என்று எண்ணப்பட்டு விடுவிக்கப்பட்டாள்.

(3) ஒருஸ்திரீ கடைக்குப்போனபோது அவளை அறியாமல் குழந்தை வெளியேவந்து விழுந்து மண்ணில் கலந்து மூட்சுதிணரி இறந்துபோய்விட்டது. இவள் குழந்தை பிறந்ததை ஒப்புக்கொள்ளாமற் போனபோதிலும் இவள் இந்தப்பிரகாரம் தண்டிக்கப்படமாட்டாள். இவள் தண்டிக்கப்படுவதற்கு பிரேதத்தை மறைத்துவைக்க வேண்டுமென்று ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்திருக்கவேண்டும்.

(4) ஒரு ஸ்திரீ சோரபுருஷனுக்குப்பெற்று இறந்துபோன குழந்தையை தன்னுடைய வீட்டுச்சுவருக்கப்பாலுள்ள ஒரு கொல்லையில் விட்டெறிந்து விட்டான். அந்தக் கொலலைக்குப்போக வழிகிடையாது. இவள்குழந்தையின் பிரேதத்தை ரகசியமாக பைசல்செய்ய எத்தனித்தபடியால் இவள் இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட குற்றத்தை செய்திருக்கிருள் என்று தீர்மானிக்கப்பட்டது.

5- ஒரு ஸ்திரீக்கி அவளுடைய வீட்டு காம்பவுண்டில் ஒரு குழந்தைபிறந்தது அவ்விடத்திலேயே போட்டுவிட்டு வந்துவிட்டாள். அந்தப் பிரசவத்தைப்பற்றி அவள் யாரிடமும் சொல்லவில்லை. இவள் அந்தப்பிரிவின்படி குற்றத்தைச் செய்தவளாகமாட்டாள் என்று தீர்மானிக்கப்பட்டது.

(6) ஒரு ஸ்திரீ தன்னுடைய வீட்டுக்காம்பவுண்டுக்குள் ஒதுப்புறமாயிருக்கும் ஒரு வீட்டில் குழந்தையைப் பிறசவித்து அதை எவரும்பார்க்க முடியாதபடி ஏற்பாடு செய்துவிட்டு பிறகு சிறிதுநாழிகை சென்றபின்பு குழந்தையை வந்துபார்த்துவிட்டு அது இறந்துபோனவுடன் எடுத்துக்கொண்டு போனாள். இவள்குழந்தைபிறந்ததை மறைத்துவைத்தபடியால் இவள் அந்தப்பிரிவின் குற்றத்தைச்செய்திருக்கிறாள் என்று தீர்மானிக்கப்பட்டது.

7. ஒரு ஸ்திரீ தனக்குப்பிறந்த சோரக்குழந்தையை ஒரு ஏரியில் விட்டெறிந்து விட்டாள். இவள் தன்னுடைய தகப்பனுக்குப்பயந்துவிட்டெறிந்துவிட்டதாக டிபன்ஸ் சொன்னாள். அந்த டிபன்ஸ் உண்மையென்று ருஜுப்பட்டது. இந்தப் பிரிவின்படி பிரசவத்தையும் குழந்தையையும் உலகத்தாரிடமிருந்து மறைத்துவைக்கவேண்டுமென்று குற்றவாளிக்கி எண்ணமிருந்திருக்கவேண்டும் ஆதலால் இவள் அந்தப் பிரிவின் குற்றத்தைச் செய்தவளாக மாட்டாள் என்று தீர்மானிக்கப்பட்டது.

மேலே எடுத்துக் கூறப்பட்ட தீர்மானங்கள் எல்லாம் இங்கிலீஷ் கேஸ்கள்.

## THE WAR.

### ஐரோப்பா யுத்தம்.

நிகழ் செப்டம்பர்மாதத்தில் மேற்கு யுத்தகளத்தில் யாதொரு விசேஷசம்பவம் நடந்தேறவில்லை. இருகக்ஷியாரும் பீரங்கிகளைப் பிரயோகித்து ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டார்கள். ஆரோகன், சம்பேன், லொரேயின் மாகாணங்களில் கூட்டுப்படை முன்னேறியிருக்கிறது பிரன்ச் ஆகாயக்கப்பல்கள் கூட்டம் கூட்டமாக ஜெர்மன்படை நின்றுகொண்டிருக்கும் விடங்களில் வட்டமிட்டுப்பறந்து பாம் வெடிகுண்டுகள் போட்டன. ஜெர்மனியர்கள் உயிரை இழந்தாலும் இழந்துவிடுகிறதென்கிற தீர்மானத்துடன் கோபாவேசத்துடனும் தலைவிரிகோலமாயும் யுத்தஞ்செய்து வந்தபோதிலும் ஒரு அங்குலங்கூட கூட்டுப்படையை பின்புறத்தில் தள்ளவில்லை. கிழக்கு யுத்தகளத்தில் ஜெர்மனியர் பால்டிக் மாகாணத்தில் முன்னேறிக்கொண்டுவந்து கால்நாநகரைப் பிடித்துக்கொண்டார்கள். அதன்பிறகு "லென்ஸ்க்" நகரைநோக்கிச்சென்றிருக்கிறார்கள். லென்ஸ் நகருக்குள்ளும் லெனியிலும் ருஷியபடைகள் பலமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் ஜெர்மனியர்கள் இலேசில் குவின்ஸ் நகருக்குள் நுழைய முடியாது என்று எண்ணப்படுகிறது. ருஷியர்கள் சிலகாலமாக பின்வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை அது யுத்த தந்திரமேயொழிய மற்றப்படி தோல்வியென்று எண்ணப்படக்கூடாது. இப்படி பின்வாங்கிக்கொண்டு போனால் ஜெர்மனியர்களும் பின் தொடர்ந்துகொண்டு வருவார்கள் என்றும் அப்படி பின்தொடர்ந்துகொண்டு வந்தார்களேயாகில் ருஷியா உள் நாட்டில் அவர்களை வளைத்துக்கொண்டு அடிக்கலாமென்று ருஷியர்கள் நினைத்து பின்வாங்கிக்கொண்டு போகிறார்கள். தெற்கே கலேஷியாவில் ருஷியபடை ஆஸ்டிரோ ஜெர்மன்படையை பின் தள்ளிக்கொண்டு போகின்றது. ருஷியர்களுக்கு இதுவரையில் சிலகாலமாக பீரங்கிக்குண்டுகள் கைவசமில்லாமலிருந்தன. இப்போது அவைகள் போதுமானவரையில் சப்ளை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் ருஷியர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக்கொண்டுவந்த மாரிகாலம் வந்துவிட்டது. ஆகையால் ருஷியர்கள் இன்னொருமுறை பலப்பட்டு ஜெர்மனியார்களை எதிர்த்து முன்னேறுவார்களென்று நம்பப்படுகிறது. டார்டினில்ஸ்சண்டையில் நிகழ் மாதத்தில் யாதொரு விசேஷமில்லை. கூட்டுகப்பல்படை மெதுவாக முன்னேறிக்கொண்டுபோகின்றது. காலிம்போலி பெனின்சுலாவில் உபாயமாக துருக்கிப்படைக்கும் கூட்டுப்படைக்கும் சிற்சில தினங்களில் சண்டை நடந்துவந்திருக்கிறது. ஆஸ்டிரியா, இட்டாலி, யுத்தகளத்திலும் இந்தமாதம் யாதொரு முக்கியமான சம்பவமும் நடந்தேறவில்லை.

நடந்துகொண்டு வரும் பால்கன் மாகாணங்கள் இப்போது படபடப்பாய் நிற்கின்றன. இதுவரையில் நடுநிலைமையாகவிருந்துவந்தன. இப்போது அந்த நடு நிலைமையை நீக்கி எந்தக் கக்ஷியிலாவது ஒரு கக்ஷியில் சேர்ந்துவிடும்போல் தோற்றுகிறது. பல்கேரியா ஜெர்மனியுடன் சேர்ந்துகொள்ள நோக்கங்கொண்டிருப்பதாக அறிகுறிகள் காணப்படுகின்றன. ருமேனியாவினுடைய நோக்கமும் கிரீஸ்வினுடைய நோக்கமும் இன்னும் வெளிப்படத் தெரியவில்லை, பல்கேரியா அரசருடையபெயர் முதல்பெர்டினண்ட் (Ferdinand 1) இவருடைய தகப்பனார் ஜெர்மனியர் தாயார் பிரன்சுஸ்திரீ. இவர் ஆஸ்டிரியா பிரதான பட்டணமாகிய வியானாவில் பறந்தவர்



ஆஸ்டிரியாதேசத்தில் சிலகாலம் ராணுவ உத்தியோகஸ்தராகவிருந்து வகித்திருக்கிறார். ஆகையால் பிறப்பாலும் வளப்பாலும் இவர் ஜெர்மன்சார்புடையவர் பல்கேரியா ஜனங்களில் உள்ள சில பிரபுக்கள்கூடி அரசனைக்கண்டு அவாள் கக்ஷியில் சேர்ந்தால் பல்கேரியாவிற்கு நன்மை உண்டாகுமென்றும் ஜெர்மனி கக்ஷியில் சேர்ந்தால் தீமை உண்டாகுமென்று அவருக்கும் போதித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போது ஜெர்மன், ஆஸ்டிரியா, ஆபீசர்கள், பல்கேரியா ராணுவத்தில் உத்தியோகங்களில் அமர்ந்து பல்கேரியத் துருப்புகளை யுத்தத்திற்குத் தயார்செய்துகொண்டு வருகிறபடியால் பல்கேரியா ஒருக்கால் ஜெர்மனியின் கக்ஷியில் சேர்ந்துவிடுமென்று எண்ணப்படுகிறது. ருமேனியா அரசர் முழுதிலும் ஜெர்மனியர் என்று சொல்லவேண்டும். இவருடைய பெற்றோர்களும் பெண்ஜாதியும் ஜெர்மனியர்கள் ஆதலால் இவர் ஜெர்மனி கக்ஷியில்சேர விருப்பம்கொள்ளுவது இயற்கை, ஆயினும் அவர் அப்படி ஜெர்மனிகக்ஷியில் சேராமலிருக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறார். ஏனென்றால் ருமேனியா ஜனங்கள் ஆதிமுதல் அவர், கக்ஷியில் அனுதாபம் பாராட்டி வருகிறார்கள். ருமேனியர் படைதிரட்டி யுத்தத்திற்கு ஆயுத்தமாயிருக்கிறது. ஆனால் எந்தக்கக்ஷியில்சேர தீர்மானிக்கப்போகிறதென்று இப்போது நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. கிரீஸ் தேசத்தில் அரசரும் மந்திரி வேனுஜுலாவும் செர்வியாவிற்கும் கிரீசிற்கும் இதற்குமுந்தி நடந்திருக்கும் உடன்படிக்கை விஷயமாக அபிப்பிராய பேதப்பட்டிருக்கிறார்கள். கிரீஸ் அந்த உடன்படிக்கையின் நிபந்தனைப்படி செர்வியாவை பாதுகாக்க வேண்டுமென்று மந்திரிகக்ஷி சொல்லுகின்றார். அந்த உடன்படிக்கையை அனுசரித்து நடக்க இரண்டு தடவைகளில் செர்வியா தவறிப்போய் விட்டபடியால் அந்தஉடன்படிக்கைக்கு உயிர் இல்லை என்று கிரிஸ் அரசர் கக்ஷிசொல்லுகிறார். இப்படியாக கிரீஸில் கக்ஷிவாதமுண்டாயிருக்கிறது. கிரீஸ் அரசர் ஜெர்மனியர் ஜனங்கள் அவர் கக்ஷியில் அனுதாபமுடையவர்கள். யுத்தத்தில் கிரீஸ் கலந்துகொண்டால் அவாள்கக்ஷியில்கலந்துகொள்ளும். இல்லேல் நடுநிலைமையாகவிருக்கும்.

இந்தயுத்தம் மகாபெரியயுத்தம். இதற்குமுந்தி இம்மாதிரியானயுத்தம் நடந்ததில்லை. இனிமேலும் இம்மாதிரியானயுத்தம் நடக்காதவண்ணம் ஐரோப்பாவில் பரசுகள் ஏற்பாடுசெய்து வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த யுத்தத்தில் சண்டைகள் ஆகாயத்தின்பேரிலும் பூமியின்பேரிலும் பூமிக்குள்ளும் சமுத்திரத்தின் பேரிலும் சமுத்திரத்திற்குள்ளும் நடத்திவரப் படுகின்றன. இப்போது பிரன்ச் ஆகாயக்கப்பல்களும் பிரிட்டிஷ் ஆகாயக் கப்பல்களும் கூட்ட கூட்டமாகப் புறப்பட்டு பிரதிதினமும் ஜெர்மனி எல்லையோரத்தை ஆகாயத்தில் பறந்துபோய் தொட்டுவிட்டு யாதொரு அபாயத்திற் குட்படாமல் திரும்பிவந்து விடுகின்றன. ஜெர்மனியர்கள் ஜப்பலேன் என்று சொல்லும்படியான பெரிய ஆகாயக் கப்பல்களைச்செய்து ஆகாயத்தில் பறக்கும்படியாகச் செய்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அவைகள் பிரிடிஷ் ஆகாயக் கப்பல்களுடன் எதிர்த்துச் சண்டைபோட முடியவில்லை. ஜெர்மனியர்கள் தங்களுடைய ஜப்பலேன்களைவிட்டு லண்டன் நகரை தும்சம்செய்யப் போகிறதாக பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

மேலும் அவர்களுடைய சப் மாரேன்களைவிட்டு பிரிடிஷ் ஸ்டீமர்களையும் பிரிடிஸ் வியாபாரத்தையும் நாசஞ்செய்து விடுவதாக பயமுறுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடையஜபம் ஒன்றும் பலிக்கவில்லை இன்னும் விபரமாகச் சொல்லப்போனால் ஜெர்மனியருடைய கப்பல்படைவெளிவராதபடி நீர் கால்வாயில் பிரிடிஷ்கப்பல்படையால அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மன் சப்மாரேன்கள் நம்முடைய கப்பல்களில் சிலவற்றைச் சேதப்படுத்தியிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அந்தச் சேதம் பிரிடிஷ் கப்பல்படையில் ஒருபொருட்டாக எண்ணப்படவில்லை. ஆனால்நம்முடைய பிரிடிஷ் கப்பல்படை ஜெர்மனிக்குள் ஆகாரசாமான்கள் நுழையாதபடி தடுத்துவிட்டன. ஆதலால் ஜெர்மனியில் பெரும்பாலும் ஜனங்கள் ஆகார சாமான்களுக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். பஞ்சு ஜெர்மனியில் அகப்படுகிறதில்லை. ஜனங்கள் அதற்கு பதிலாக மரக்கூழை உபயோகப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அனேக சாமான்கள் ஜெர்மனியாருக்கு அகப்படுகிறதில்லை ஜெர்மனி 45-வருடகாலமாக ரகசியமாய் யுத்தத்திற்குத் தயார்செய்துவந்தபோதிலும் அது யுத்தத்திற்காக சேகரித்துவைத்திருந்த சாமான்களெல்லாம் கரைந்துபோய்விட்டன ஜெர்மன்படையிலிருந்த பெயர்போன போர்வீரர்கள் எல்லாம் மாண்டுபோனது மல்லாமல் பத்து லக்ஷக் கணக்கான மனிதர்களும் மாண்டுபோய்விட்டார்கள். பொதுவாக ஜெர்மனியில் பொதுஜனங்களும் யுத்தகளத்திலிருக்கும் சோல்ஜர்களும் யுத்தத்தில் களைப்படைந்து அதை வெறுக்கிறார்கள் என்று யுத்தகளத்திலிருக்கும் சோல்ஜர்கள் ஜெர்மனிதேசத்திலிருக்கும் அவர்களுடைய பந்துக்களுக்கு எழுதியிருக்கும் கடிதங்களால் தெளிவாய்த் தெரியவருகிறது.

ஜெர்மனியில் சமாதான கக்ஷிக்காரர்கள் தோன்றி யுத்தத்தை சமாதானப்படுத்திக் கொள்ளும்படியாக கெய்சருக்கு யோஜனை சொல்லிக்கொண்டிரு

க்கிறார்கள். கூட்டு அரசாங்கத்தார்கள் யுத்தத்தில் ஜெர்மனி களைப்படைந்திருப்பதுபோல களைப்படையவில்லை. இங்கிலாண்டு அதனுடைய கூட்டாளிகளுக்குத் தேவையானபோது பொருள் உதவியையும் பண உதவியையும் புரிந்துகொண்டு வருகின்றது. யுத்த ஆரம்பத்தில் இங்கிலாண்டிற்கு சைனியமும் யுத்த தளவாடங்களும் குறைவாக விருந்தபோதிலும் யுத்தம் நடந்துகொண் டிருக்கும்போதே இங்கிலாண்டு அந்தக் குறைவை நிரப்பிவிட்டது ஆதலால் இப்போது மனிதர்களும் யுத்த தளவாடங்களும் இங்கிலாண்டுவசம் ஏராளமாகவும் ஏதேஷ்டமாகவு மிருக்கின்றன. ஜெர்மனி யுத்தத்தில் களைப்படைந்து வர வர இங்கிலாண்டிற்கு உற்சாகம் ஏறிக்கொண்டே போகின்றது. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு கடைசியில் இந்த யுத்தத்தில் கூட்டு அரசாங்கத்தார்களே வெற்றிபெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜெர்மனி தன்னுடைய ராஜ்ஜியத்தை விஸ்தரித்துக் கொள்ளும்பொருட்டு இந்த பெரிய யுத்தத்தை உற்பத்திசெய்து சண்டைசெய்து வருகிறது. இங்கிலாண்டு இந்த யுத்தத்தில் கலந்துகொள்ள விருப்பமேயில்லை. ஆயினும் பெல்ஜியத்தை பாதுகாப்பதாக அதனுடன் ஜெர்மனியும் இங்கிலாண்டும் செய்துகொண்ட உடன்படிக்கையை புறக்கணித்து ஜெர்மனி பெல்ஜியத்திற்குள் ஆக்கிரமித்து பிரவேசித்து அதை சின்னாபின்னப் படுத்திவைத்திருந்தபோதிலும் இங்கிலாண்டு தான் கொடுத்தவாக்கை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்றும் பெல்ஜியத்திற்காகப் பரிநதும் கனத்த பொருள் விரயத்திற்கும் லக்ஷக்கணக்கான தன்னுடையமக்கள் தேசத்திற்கும் உட்பட்டு இந்த யுத்தத்தை நடத்திக்கொண்டு வருகிறபடியால் சகல வல்லமையுடைய ஆண்டவன் கூட்டு அரசாங்கத்தார் கக்ஷியிலிருந்து அவர்களே இதில் வெற்றிமாலை அணிந்துகொண்டு வரும்படியாக கருணைபுரிவார் என்பதில் சந்தேகமில்லை.

## GENERAL NEWS.

## பொது வர்த்தமானங்கள்.

ஜோட்பூர் சமஸ்தானத்திலுள்ள பாபோடி ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த இரண்டு பெண்குழந்தைகளிருக்கின்றன. அவைகள் பிறந்து சுமார் ஆறுமாதமாகின்றது. அவைகள் இரண்டும் தொப்புளுக்குப் பக்கத்திலும அதற்குப் பக்கமாயுள்ள அடிவயிற்றிலும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளுடைய மற்ற அவயவங்கள் ஒன்றோடொன்று சேராமல் தனியா யிருக்கின்றன. அவைகளில் யாதொரு ஊனமும் கிடையாதாம். அந்தப் பெண்களின் தாயார் ஒருமுகம்மதிய ஸ்திரியாம். குழந்தைகள் பிரஸவமானபோது தாய் ரொம்பவும் வேதனைப்பட்டாளாம். முதலில் ஒரு குழந்தையின் தலையும் பிறகு இன்னொரு குழந்தையின் தலையும் பிறகு குழந்தைகளின் மற்ற அங்கங்களும் வெளி வந்தனவாம் அவைகளின் பெற்றோர்கள் இந்த விநோதப் பிறவியை ஜனங்களுக்குக் காட்டி பணம் ஸம்பாதித்து வருகிறார்களாம்.

## FIVE CHILDREN IN A BIRTH.

## ஒரு பிரசவத்தில் 5 குழந்தைகள்.

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு ஊரில் ஒரு மஹாராஷ்டிர ஸ்திரீக்கு சமீபத்தில் இரண்டு ஆண்குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தன வென்றும் அக்குழந்தைகளின் அங்கங்களெல்லாம் நல்ல ஸ்திதியி லிருக்கின்றன வென்றும் பம்பாய் கிரானிகல் பத்திரிகை கூறுகின்றது. அதே ஸ்திரிக்குச் சென்றவருடம் ஓரே தடவையில் மூன்று குழந்தைகள் பிறந்தனவாம். அவைகள் ஜனித்த மூன்று மாதங்களுக்குள் இறந்துவிட்டனவாம். தற்போது ஜனித்த குழந்தைகளெல்லாம் இன்னும் உயிரோ டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## ANONYMOUS LETTERS.

## மொட்டைக் கடிதங்கள்.

சிலநாட்களுக்கு முன் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அம்பாலா என்னு மிடத்தில் அட்டர் பஜாரிலுள்ள ஒரு கம்பெனியின் அதிபரான லஷ்மால் நிகால் சந்தர் என்பவருக்கு ஒரு மொட்டைக்கடிதம் வந்தது. அக் கடிதத்தில் அவரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில் ரூபாய் 5 ஆயிரம் டிபாசிட் செய்து வைக்கும்படிக்கும் அவ்வாறு செய்யத் தவறினால் அவரை கொலை செய்யப்படுவதன்றி அவரதுசொத்துக்களும்க்கிரையதீாக்கப்பட்டு பூமிமட்டத்திற்கு கொண்டுவந்து வைக்கப்படுமென பயமுறுத்தி எழுதி யிருந்தது.

இதற்கு முன்னால் டில்லியில் ஒரு மோட்டார் கம்பெனி வியாபாரியை பயமுறுத்தி ஒரு மொட்டைக் கடிதம் வந்ததாம். அவர் அக் கடிதத்தை



அசட்டை செய்து அதன் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட தொகையை கள்வர்களுக்குப் போய்ச் சேருவதற்கான மார்க்கத்தைச் செய்யாததினால் அவரது வீட்டில் மறுநாள் பெருத்த தீ விபத்து நேர்ந்ததாம்.

அம்பாலாவில் கிடைத்த மேற்படி கடிதத்திற்கும் டில்லிவாசிக்கு கிடைத்த கடிதத்திற்கு முள்ள வித்தியாசங்களைப் போலீசார ஆராய்ந்து வருகிறார்களாம்.

## FOOD OF INSETCS.

## பூச்சிகளுக்கு உணவு.

உருளைக்கிழங்கு பயிரைத் தாக்கும் வண்டுக்கு எவ்வளவு பசியுண்டோ அவ்வளவு பசி ஒரு குழந்தைக்கு மிருக்குமானால் அது ஒரு நாளுக்கு 50 ராத்தல்முதல் 100 ராத்தல்வரையில் ஆகாரம் சாப்பிடும் ஒரு கம்பளிப்பூச்சிக்குள்ள பசி குதிரைக் கிருக்குமானால் குதிரை தினம் ஒருடன் காய்ந்த புல் தின்னும். (ஒருடன் என்பது 2240) ராத்தலாகும். ஒரு கம்பளிப் பூச்சி தினந்தோறும் தனது நிறைக்கு இரண்டு மடங்கு இலை தின்னுகிறது. ஒரு உருளைக்கிழங்கு வண்டு தினந்தோறும் தனது நிறைக்கு 5 மடங்கு நிறையுள்ள இலைகளைத் தின்னுகிறது. இவ்வளவு பெருந்தீனி யுடைய பூச்சிகள் பயிரில் தோன்றினால் பயிர் சீரழிந்து போகுமென்பதில் என்ன சந்தேகம். பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்ல நம் சென்னை விவசாய இலாகாக்காரர்கள் உபாயங்கள் கண்டு பிடித்து அச்சிடப்பட்ட பிரசுரங்கள் மூலியமாகப் பயிரங்கப்படுத்துகிறார்கள். கிருஷிகர்கள் அவைகளை கவனித்து அவைகளில் சொல்லப்படும் முறைகளை கைக்கொள்ள வேண்டும்.

## DECISIONS IN ENGLISH CASES.

## இங்கிலாண்டு தேசத் தீர்ப்பு.

ஒரு லிமிடெட் கம்பெனியை ஸ்தாபிக்கிற ஒரு டைரெக்டர் தாம் பிரசுரிக்கும் விளம்பரத்தில் தவறுதலான சமாச்சாரங்களைச் சொல்லி யிருந்து அந்த சமாச்சாரங்களை உண்மை என்று ஒருவன் அந்த கம்பெனியில் பங்கு எடுத்துக்கொண் டிருந்தால் அவனுக்கு நேரிட்ட நஷ்டத்தைச் செலுத்த மேற்படி டைரெக்டர் பாத்தியப்பட்டவனாவான் என்று தீர்மானிக்கப்பட்டது. Adams V. Thrift (1915) Ch 21 (C. A.

ஒரு புத்திரன் தன்னுடைய தகப்பனையும் சகோதரனையும் கொலை செய்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சகோதரனைக் கொலை செய்துவிட்டதாக குற்றஞ்சாட்டி அவன் விசாரணைசெய்யப்பட்டபோது அவன் சித்தபேத முடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆதலால் அவன் தகப்பனைக் கொன்றுவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படவில்லை.

இப்பேர்ப்பட்ட ஒரு புத்திரனுக்கு தகப்பனுடைய சொத்தில் பாகம் கிடைக்குமா என்று ஒரு கேசில் கேள்வி யுண்டானது.

புத்திரன்பேரில் தகப்பனைக் கொலை செய்த குற்றம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு பங்கு கிடைக்காது என்று தீர்மானிக்கப்பட்டது. Hongh ten V. Houghten (1915) 2 Ch. 173.

ஒரு ரோட்டு லோகல்அதிகாரிகளால் விஸ்தரிக்கப்பட்டது. அந்த அதிகாரிகளுடைய வேண்டுகோளுக் கிணங்கி தபால் இலாகா அதிகாரிகள் அந்த ரோட்டில் நின்றுகொண் டிருந்த தந்திக் கம்பத்தைப் பிடுங்கி வேறோரிடத்தில் நட்டார்கள். பழைய குழி தூர்க்கப்படவில்லை. வாதியினுடைய வண்டி அந்தக் குழியில் விழுந்து சேதப்பட்டுப் போய்விட்டது. ஆகவே வாதி ரோட்டுக்குச்சொந்தக்காரராகிய கார்பொரேஷன் பேரிலும் தபால் இலாக்காவின் பேரிலும் நஷ்ட வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

ரோட்டை போக்கு வரத்திற்கு யோக்கியதையாயிருக்கும்படிச் செய்துவைக்க வேண்டிய பொறுப்பு கார்பொரேஷனுடைய தானபடியாலும் குழியை அறைகுறையாகவும் அலக்ஷியமாக தூர்த்ததாலும் தபால் இலாக்காவும் ஆகவே இரண்டிலாக்காக்காரர்களும் வாதிக்கு நஷ்டம் கட்டிக் கொடுக்கப் பாத்தியப்பட்டவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒருவன் ஒரு வேலையைச் செய்யக் கடமைப்பட்டவனாக வில்லாமற் போன போதிலும் அவன் அந்த வேலையை அலக்ஷியமாகச் செய்திருந்தால் அதனால் உண்டாகும் நஷ்டத்திற்குப் பாத்தியப்பட்டவனாவன் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

Thompson V. Bradford, Corporation 1915 IV K. B. 13.

பிரதிவாதி, வாதிக்கி ஒரு அவதூர் கடிதம் எழுதி அதை ஒரு லகோடாவில் வைத்து ஒட்டாமல் தபாலில் அனுப்பிவிட்டான். வாதி இதற்காக பிரதிவாதிபேரில் மானநஷ்ட தாவா கொண்டு வந்தான்.

பிரதிவாதி நஷ்டம் கட்டிக்கொடுக்கப் பாத்தியப்பட்டவனல்ல வென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால் கடிதத்தில் எழுதப்பட்டிருந்த அவதூர் யாருக்கும் தெரியாது. லக்கோடா ஒட்டப்படாததால் வாதியின் வேலைக்காரர்கள் அதைத் திறந்து வாசித்துப் பார்த்திருக்கக்கூடுமென்று வாதி சொல்லும் கக்ஷியை ஏற்றுக்கொள்ள முடியாது. எஜமானுக்கு வரும் கடிதத்தை திறந்து பார்ப்பது வேலைக்காரனின் கடமையல்ல. வேலைக்காரன் திறந்து பார்த்திருப்பான் என்று யூகிக்கப்படக் கூடாதென்றும் ஒரு லகோடா போஸ்ட்கார்டு மாதிரியாக எண்ணப்படக் கூடா தென்றும் தீர்மானிக்கப்பட்டது. HUTH V. HUTH 1915 III K.B 32 (C.A).

---

## FALSE WITINESS.

### பொய் சாக்ஷி.

லாயர்:—நல்லது குற்றவாளி ஆடு திருடினதை நீ கண்ணால் பார்த்தாயா?

சாக்ஷி:—ஆம் பார்த்தேன்.

லாயர்:—திருடினவன் குற்றவாளிதான் என்று உனக்கு நன்றாய்த் தெரியுமா?

சாக்ஷி:—நன்றாய்த் தெரியும்.

லாயர்:—எப்படித் தெரியும்?

சாக்ஷி:—நிலவில் திருடினான் ஆதலால் குற்றவாளியினுடைய அடையாளம் தெரிந்தது.

லாயர்:—குற்றம் நடந்து இப்போது எத்தனை நாளாகிறது?

சாக்ஷி:—மூன்றுமாத மாகிறது.

லாயர்:—திருடினவன் குற்றவாளிதான் என்று உனக்கு ஞாபக மிருக்கிறதா?

சாக்ஷி:—ஞாபக மிருக்கிறது.

லாயர்:—அந்த நடு இரவில் திருட்டுபோன கொல்லைக்கு போவானேன்?

சாக்ஷி:—அடுத்தக் கிராமத்திற்குப்போன பிராமணனுக்குத் துணையாகப் போனேன்.

லாயர்:—பிராமணன் யார்?

சாக்ஷி:—புரோகிதன்.

லாயர்:—உன்னுடைய கிராமத்திற்கு ஏன் வந்தான்?

சாக்ஷி:—அம்மாவாசைக்குத் தருப்பணம் செய்துவைக்க.

லாயர்:—நல்லது சரி, அன்றையத்தினம் தானே ஆடு திருட்டுப் போனது?

சாக்ஷி:—ஆம்.

லாயர்:—அம்மாவாசை தினம் தானே திருட்டுப் போனது?

சாக்ஷி:-ஆம் எனக்கு பேஷாக ஞாபகமிருக்கிறது

லாயர்:—ஆதலால் அம்மாவாசை தினம் சந்திரி கையில் குற்றவாளி திருடினதை நீ கண்ணால் பார்த்தாயா? நீ நிச்சயமாய் சொல்லக் கூடுமா?

சாக்ஷி:—கண்ணால் பார்த்தேன் என்று பிரமாணங்கூட செய்யத் தயாராயிருக்கிறேன்.

லாயர்:—நல்லது நீ சொல்லுவதை யெல்லாம் ஒப்புக்கொண்டேன். ஆனால் அம்மாவாசை தினம் சந்திரன் புறப்படுமா?

சாக்ஷி:—(ஐயோ) மோசம் வந்தது என்று சொல்லிக்கொண்டுத் தலையைக் குனிந்துக்கொண்டான்.

இதைகேட்டு கோர்ட்டில்கூடியிருந்த மற்ற வக்கீல்களும் கக்ஷிக்காரர்களும் முழு பூசணிக்காயை சோற்றிலேமறைக்க முயலும் பெரும் புரட்டன் இவன் என்று ஆஸ்சரியப்பட்டு நகைத்தார்கள்.

மாஜிஸ்டிரேட்டு தீர்ப்பு:—சாக்ஷிசொன்ன வாக்குமூலம் எல்லாம் பொய்யென்று தீர்மானித்து குற்றவாளிக்கு திருட்டுக் குற்றத்திற்காக மூன்றுமாதகாவலும் சாக்ஷி சொன்னவனுக்கு பொய்சாக்ஷிசொன்ன குற்றத்திற்காக 6-மாத காவலும் விதித்தார்.

---



THE HONORABLE MR. JUSTICE T. V. SESHAGIRI IYER, B.A., B.L., HIGH COURT, MADRAS.
ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள், மதராஸ் ஐகோர்ட் ஜட்ஜி.

MADRAS.
161193
சென்னை-600 008.

(1906-ஷ ஸ்தாபிக்கப்பட்டது.)

# இந்திய சட்ட கெஜெட்.

## உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

வால்யம் 8.] சென்னப்பட்டணம் 1915ஷ நவம்பர்—டிஸம்பர்மீ [நெ. 6

## அபிப்பிராயங்கள்.

**ஆனரபில் ஜட்ஜி சர் சுப்பிரமணிய அய்யர் அவர்கள்:—**

"தமிழ் ஜில்லாக்களில் ஆங்கிலம் அறியாத ஜனங்களுக்கு தங்களுடைய ஜர்னல் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். ஆங்கிலய பிரசுரங்கள் மூலியமாக சட்டஞானத்தை அறிந்துகொள்ளக்கூடாத ஜனங்களுக்கு தாங்கள் அதை அறிவிக்க செய்துகொண்டுவரும் பெரும முயற்சியை நான் உணராமல் இல்லை."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் அவர்கள்:—**

"சட்ட ஞானத்தைப் பரவச் செய்வதற்கு இந்திய சட்ட கெஜட் செய்துவரும் பிரயத்தினங்கள் சிலாகிக்கக்கூடியவை. அது அடயவேண்டிய ஜெயத்தைப் பெறுமென்று நம்புகிறேன்."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியார் அவர்கள்:—**

"வியாசங்கள் மிகவும் நன்ருய் எழுதப்பட்டிருக்கின்றன. சஞ்சிகைகள் சரியானவும் உபயோக முள்ளவுமான சமாசாரங்களை அடக்கிக்கொண்டிருக்கின்றன. சட்ட சம்பந்தமான விஷயங்களை பொதுஜனங்கள் அறிந்துகொள்ளுவதற்கு சட்ட கெஜட் ஒரு தகுந்த மார்க்கமாயிருக்கும் என்று நான் உறுதியாய் நினைக்கிறேன்."

**திவான் பகதூர் R. ரெகுநாத ராயர் அவர்கள், கும்பகோணம்:—**

"நீர் பிரசுரஞ் செய்துகொண்டுவரும் இந்திய சட்ட கெஜட் மிகவும் பிரயோஜனமுள்ளது. அது எப்படி ஆதரிக்கப்பட வேண்டுமோ அப்படி ஆதரிக்கப் படுமென்று நம்புகின்றேன்."

**ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள்:—**

"கெஜெட்டில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் சரியாகவும் சுருக்கமாகவு மிருக்கின்றன. தங்களுக்கு அதிக சந்தாதாரர்கள் சேருவார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை."

(இன்னும் பல அபிப்பிராயங்க ளிருக்கின்றன.)

## அடக்கம்.

பாகம் I. பககம்.

உருவப்படம்:—ஆனரபில் மிஸ்டர ஜஸ்டிஸ் T. V. சேஷகிரிஐய்யர் அவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | வியாஜ்ஜியம். ... ... ... | 101 |
| 2. | ராஜதானியில் கிரிமினல் கோர்ட்டுகள். ... ... ... | 102 |
| 3. | கிராமக் கோர்ட்டுகள். ... ... ... ... | 103 |
| 4. | ராஜதானியில் ஜூரி ஏற்பாடு. ... ... ... ... | 104 |
| 5. | நாஞவிதமான வியாஜ்ஜியங்கள் ... ... ... ... | 106 |
| 6. | நிகழ்மாதத் தீர்ப்புகள். ... ... ... ... | 107 |
| 7. | ஐகோர்ட்டு செஷன் கேஸ்களின் பூராரிப் போர்ட்டுகள் ... ... | 110 |
| 8. | கிரிமினல் சட்டங்கள் பேரில் ஜாரிசெய்யப்பட்ட தீர்ப்புகள். ... ... | 114 |
| 9. | ஹித்துவா:— வார்சு பாத்திதையி லிருந்து விலக்கப்பட்டவர்கள், ... ... | 115 |
| 10. | எங்களுடைய சந்தாதாரர்கள் பக்கம் ... .. ... ... | 117 |
| 11. | மதராஸ் சட்ட நிருபணச் சபை:—கேள்விகளும் ஜவாப்புகளும். ... ... | 119 |

பாகம் II.

| | | |
|---|---|---|
| 1. | இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலுள்ள கேஸ்கள் ... ... ... | 33 |

## சந்தா விபரம்.

வருஷ சந்தா, 5 8 0 (வி. பி, தபால் செலவு பிரத்தியேகம்)

ரெங்கப்பூர் பினங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 8 0

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

C. பரமசிவமுதலியாரால் இந்தியசட்ட கெஜட் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை - சிந்தாத்திரிப்பேட்டை கிருஷ்ணு அண்டு பிரதர்ஸ் அவர்களால் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றன.

JL
Z. 8r m N06 N06.8

## விஞ்ஞாபனம்.

(1.) நாம் சென்ற நவம்பர் மாதத்திலும் கிழ் டிசம்பர் மாதத்திலும் அனுப்பிய வி. பி. க்களை கௌரவப்படுத்தி சந்தாத் தொகையைச் செலுத்தியிருக்கும் கனதனவான்களுக்கு மனமார வந்தனமளிக்கின்றோம்.

(2) ஆர்டர் பெற்றுக்கொள்ளாமல் வி பி. அனுப்புவது சட்டத்திற்கு விரோதமாக விருப்பது மல்லாமல் எங்களுடைய ஆபீஸ் விதிகளுக்கும் கொள்கைகளுக்கும் விரோதமான காரியம். ஆதலால் ஆர்டர் பெற்றுக்கொள்ளாமல் நாங்கள் வி. பி. அனுப்புகிறதில்லை. அப்படியிருக்க சிலர் வி. பி. யை, வாப்பீஸ் செய்தது விந்தையாயிருக்கிறது! ஆதலால் வி. பி. யைத் திருப்பி அனுப்புகிறவர்களுடைய பெருமையை உலகமறிந்து கொள்ளும்படியாக அவர்களுடைய பெயர், தொழில், கிராமம், போஸ்ட் முதலிய விலாசத்தை நம் கெஜட்டில் பயிரங்கப் படுத்தும்படியாக நாங்கள் கட்டாயப் படுத்தப்பட்டவர்களாகவிருக்கிறோம் என்பதை நாம் விசனத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

(3) சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டில் அந்தந்த மாதத்தில் ஜாரி செய்யப்படும் தீர்ப்புகளை அந்தந்த மாதத்திலேயே நம் கெஜட்டில் வெளிவருவதை நம் நேயர்கள் கவனிக்கவேணும். சென்னை சட்ட சபையில் ஆனரபில் ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் கேட்ட கேள்விகளையும், அவைகளுக்கு ஆனரபில் கவர்ன்மெண்டு மெம்பர்கள் சொல்லியிருக்கும் பதில்களையும் நம் நேயர்கள் கவனிப்பார்களென்றும் நம்புகின்றோம். நம் சட்டகெஜட்டில் இப்போதுபிரசுரிக்கப்பட்டுவரும் சட்டசமாச்சாரங்களல்லாமல் இன்னும் ஜனங்களுக்கு உபயோகமான நூதன விஷயங்களும் பிரசுரிக்கப்பட்டு வரும்படியாக செய்வதும் கெஜட் கூடிய சீக்கிரத்தில் மாத மிருமுறையாகப் பிரசுரிக்கப்பட்டு வரும்படியாகச் செய்வதும் ஆகிய இவைகள் மொத்தத்தில் சந்தாதாரர்களுடைய ஆதரிப்பையும் உற்சாகத்தையும் பொருத்தனவாயிருக்கின்றன.

(4) நமக்கு நிகழ்மாதத்தில், நம் கெஜட்டின் அபிவிருத்தியை நாடி நன்கொடை அனுப்பியிருக்கும் போஷகர்பால் நன்றி பாராட்டி வந்தன மளிக்கின்றோம்.

(5) 1916-ஞு ஜனவரிமாச சஞ்சிகை அந்தமாதம் கடைசிக்குள் சந்தாதாரர்களுடைய கையிலிருக்குமென்பது நிச்சயத்திலும் நிச்சயம். அவ்வாறே பின் சஞ்சிகைகளும் காலந்தவராமல் அந்த அந்த மாதத்திலேயே சந்தாதாரர்களுக்கு கிடைத்துக்கொண்டுவருமென்று திருவருளை பிரார்த்திக்கின்றனம்.

(6) மேன்மை தங்கிய கனவான்களே! இந்திய சட்ட கெஜெட்டு பல தேசங்களிலும் பல ஊர்களிலும் நடக்கும் கேசின் விபரங்களை எடுத்துக் கூறி, உங்களுடைய குடும்பத்திலுள்ள விவகாரங்களை நீங்களே தீர்த்துக்கொள்ளும்படியான உபாயங்களைச் சொல்லும் ஆப்த மித்திரனாயிருக்கிறபடியால் இந்த ஆப்த மித்திரனை உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு போஷித்து வருவதை நீங்கள் உங்களுடைய கடமையாக எண்ணவேண்டுமென்றும் மிக வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இந்திய சட்ட கெஜட்<br>ஆபீஸ்,<br>சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

கிருஷ்ணா அண்டு பிரதர்ஸ்,<br>ப்ரோப்ரைட்டர்ஸ்.


# The Indian Law Gazette.

PART I.

# இந்திய சட்ட கெஜட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் I.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915ஞு நவம்பர்மீ [நே. 6.


## LITIGATION.

### வியாஜ்ஜியம்.

சென்ற மாதம் நம் இந்திய சட்ட கெஜட்டில் நம் ராஜதானியில் வியாஜ்ஜியங்கள் வருஷத்திற்கு வருஷம் அதிகமாய் உற்பத்தியாய்க் கொண்டு வருகிறபடியால் கக்ஷிக்காரர்கள் வியாஜ்ஜிய மாடுவதில் பணத்தையும் காலத்தையும் விருதாவாகச் செலவுசெய்து கெட்டுப் போகிறார்கள் என்றும் ஆதலால் பரோடா சமஸ்தானத்தைப் போல நம்முடைய ராஜதானியில் மத்தியஸ்தம் செய்யும் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருந்தோம். கவர்ன்மெண்டார் சென்ற மாதம் பிரசுரித்திருக்கும் சிவில் தாப்பு நியாய இலாக்கா ரிப்போரட்டை பார்வையிட்டால் நாம் அபிப்பிராயப்பட்டதுபோலவே வியாஜ்ஜியங்கள் 1914-ல் 1913 ஐ விட இந்த ராஜதானியின் கோர்ட்டுகளில் அதிகப்படியாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன என்று நன்கு அறிந்து கொள்ளலாம். 1914-ல் சென்னை ராஜதானியில் மொத்தத்தில் 488979 வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. 1913 ல் 482940 வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறபடியால் 1914-ல் 6039 வியாஜ்ஜியங்கள் அதிகப்படியாய் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. 1912, 1913, 1914-ஆக இந்த வருடங்களின் எண்ணிக்கைகளை சீர் தூக்கிப் பார்ப்போமாகில் 1912 ஐ விட 1913 ல் அதிகப்படியாகவும் 1913 ஐ விட 1914 ல் அதிகப்படியாகவும் வியாஜ்ஜியங்கள் தாக்கலாய் வந்திருக்கின்றன என்று அறிந்து கொள்ளலாம். மேலும் வியாஜ்ஜியங்கள் மட்டிலும் 1914 ல் அதிகரித்திருக்கிறதென்று எண்ணிவிடக்கூடாது. நிறைவேற்றுமனுக்களுடைய எண்ணிக்கையும் 1913 ஐ விட 1914 ல் அதிகரித்திருக்கின்றது.

மொத்தத்தில் பிரஸ்தாப ரிப்போர்ட்டில் செய்யப்பட்டிருக்கும் கணக்கு வழக்குகளை கவனித்துப் பார்ப்போமாகில் ஜனங்களுக்குக் கெடுதியை விளைவிக்கும்படியான அவ்வளவு வியாஜ்ஜியங்கள் இப்போது தாக்கல் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் வியாஜ்ஜிய மதிப்பும் வர வர குறைந்துகொண்டு வருகிறதென்றும் நிறைவேற்று மனுக்களால் வசூல் செய்யப்படும் தொகையும் குறைந்துகொண்டு வருகிறதென்றும் ஆகவே அற்பத் தொகைக்காகவும் அற்ப லாபத்திற்காகவும் ஜனங்கள் அதிகப்படியான சிரமத்தையும் அதிகப்படியான தொந்திரவையும் அடைந்துகொண்டு வருகிறார்கள் என்று அறிந்துகொள்ளக் கூடும். எப்படியிருந்தபோதிலும் வியாஜ்ஜியங்கள்

சம்பந்தப்பட்ட வரையில் நம்முடைய ராஜதானியின் நிலைமை கவலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறதென்றும் அந்த நிலைமை அதிக சீக்கிறத்தில் சீர்திருத்தப்பட வேண்டியதாயிருக்கிறதென்றும் சொல்லப்பட வேண்டும்.

சிவில் தரப்பு நியாயபரிபாலன இலாக்காவால் உள்ளபடி உலகத்திற்கு நன்மை விளையவேண்டுமானால் வியாஜ்ஜியங்கள் கூடியமட்டிலும் விரைவில் பைசல் செய்யப்பட்டுவர வேண்டுமென்று ஐகோர்ட்டு ஜட்ஜிகளே சொல்லியிருக்கிறார்கள். ஆக்ஷேபனைக்குட்பட்ட வியாஜ்ஜியம் டி. மு. க் கோர்ட்டாரால் பைசல் செய்யப்படுவதற்கு 345 நாட்களும் ஸ்மால்காஸ் கோர்ட்டாரால் 66 நாட்களும் சப் கோர்ட்டுகளிலும் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டுகளிலும் 386 நாட்கள் முதல் 472 நாட்கள் வரையில் பிடிக்கிறதென்றும் சிட்டி சிவில்கோர்ட்டில் 465 நாட்கள் முதல் 485 நாட்கள் வரையில் பிடிக்கிறதென்று பிரஸ்தாப ரிப்போர்ட்டில் சொல்லப்படுகிறது. ஆனால் இப்படி வியாஜ்ஜியங்கள் தாமதமாக பைசல் செய்யப்படுவதற்குக் காரணம் அந்த ரிப்போர்ட்டில் செய்யப்படவில்லை. கோர்ட்டில் வியாஜ்ஜிய மாடுவதைவிட பணத்தை இழந்து விடுவதே மேலான காரியமென்று கக்ஷிக்காரர்கள் வரவர உணர்ந்துகொண்டு வருகிறார்கள். 100 க்கு 17 மனுக்களுக்கு மட்டிலும் பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறதென்று அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருப்பதால் பாக்கி 83 மனுக்களுக்கு பணம் வசூல் செய்யப்படுவது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதென்று யூகிக்கப்பட வேண்டும். ஆகவே கோர்ட்டு கடனாளிக்கு பெரும்பாலும் சார்பாக விருப்பதாக எண்ணம் உற்பத்தியாயிக்கொண்டு வருகிறது. கடனாளி தன்னுடைய கடனைச் செலுத்த வகையில்லாமற் போனாலும் அல்லது தாமதித்துச் செலுத்த விரும்பினாலும் ஏதாவது ஒரு ஆக்ஷேபனையைச் சொல்லி ஒரு மனுவைத் தாக்கல் செய்தால் அவனுடைய எண்ணம் நிறைவேறிப் போகிறதென்று நினைக்கிறான். நிற்க தற்போது ஐரோப்பாவில் நடந்துகொண்டுவரும் யுத்தம் மற்ற இலாகாக்களைப்போல நியாய பரிபாலன இலாக்காவையும் பாதித்திருக்கிறது. லாவாதேவி செய்கிறவர்கள் கடன் கொடுத்திருந்த பணங்களை எல்லாம் வசூல் செய்ய எத்தனித்திருப்பதால் 1914-ல் ரொக்கப்பணத்தை வசூல் செய்துகொள்ளுவதற்காக அதிகப்படியான வியாஜ்ஜியங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ராஜதானியில் வரவர வியாஜ்ஜியங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதற்குப் பல காரணங்களுக்குள் நம் ஜனங்கள் நம் சட்ட கெஜட்டைப்போலொத்த சட்ட ஞானத்தைப் போதிக்கும் சட்டசஞ்சிகைகளை வாங்கி சட்ட ஞானத்தை அடையப் பிரயாசைப் படாததால் பெரும்பாலும் சட்ட ஞான சூனியர்களாக விருப்பதும் ஒரு காரணம் என்றும் சொல்லப்பட வேண்டும்.

---

## CRIMINAL COURTS IN THE PRESIDENCY.

### ராஜதானியில் கிரிமினல் கோர்ட்டுகள்.

1914 ம் வருடத்தில் கிரிமினல் கோர்ட்டுகள் திருப்திகரமாய் வேலை செய்ய வில்லை என்று கவர்ன்மெண்டாரே மேற்படி இலாக்கா ரிப்போர்ட்டில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சப் மாஜிஸ்டிரேட்டுகள் 1913 ல் எத்தனைக் கேஸ்கள் விசாரணைச் செய்தார்களோ அவைகளைவிட குறைவாகவே 1914 ல் விசாரணை செய்துவந்திருக்கிறார்கள். ஆனால் 1913 ல் ஒரு கேசை விசாரணை செய்து பைசல் செய்வதற்கு எத்தனை நாட்கள் பிடித்தனவோ அதைவிட 1914 ல் அதிக நாட்கள் பிடித்திருக்கின்றன. ஒரு கேசை விசாரணை செய்வதற்கு சாக்ஷிகள் மூன்று நாட்களுக்கு அதிகமாக நிறுத்தி வைக்கப்படக் கூடாதென்கிற விதிக்கு விரோதமாக 1914 ல் அதிகப்படியான நாட்களுக்கு சாக்ஷிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். சொற்பகால ஜெயில் தண்டனை விதிக்கப்படவேண்டிய குற்றவாளிகளுக்கு மாஜிஸ்டிரேட்டுகள் அபராததண்டனை விதித்துவர வேண்டுமென்பது கவர்ன்மெண்டாருடைய விருப்பம். இந்த அம்சத்திலும் 1914 ல் யாதொருவிருத்தியைக்காணோம். ஜனங்கள் கிரிமினல் கோர்ட்டுகளில் சாக்ஷி சொல்ல முன்வர இஷ்டப்படுகிறதில்லை. பிரஸ்தாப ரிப்போர்ட்டில் குண்ட்டூரில் 87 சாக்ஷிகள் ஒரே தினத்தில் வரவழைக்கப்பட்டு பொங்கல் பண்டிகைக்கு கோர்ட்டு மூடப்பட்டிருந்ததை முன்னிட்டு மூன்று நாட்களுக்கு அதிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நிறுத்தி வைக்கப்பட்டால் எந்த சாக்ஷிதான் சாக்ஷியம் சொல்ல இஷ்டப்படக் கூடும். ஒரு கேசில் சாக்ஷியம்சொல்ல வேண்டியவர்கள் அதிகமாயிருந்தால் வரிசைக்கிரமமாக சிலபேர்களை மட்டிலும் ஒரு குறிப்பிட்டதினத்தில் வரவழைத்து அவர்களை விசாரணைசெய்து அனுப்பிவிட்டு மறுபடியும் சிலபேர்களை வரவழைத்து விசாரணை செய்யவேண்டுமென்று ஐகோர்ட்டு ஜட்ஜிகள் ரிமார்க் செய்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டில் கவனிக்கப்படவேண்டிய இன்னொரு முக்கியமான விஷய மென்னவென்றால் 1914 ல் எத்தனை பேர்கள் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்களோ அவர்களில் 100 க்கு 60 வீதமான பேர்கள் நிரபராதிகள் என்று தீர்மானிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் இத்தனை பேர்கள் பேரில் பொய்க்கேஸ்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதில் இன்னொரு ஆச்சரியமென்னவென்றால் இந்தப் பொய்க்கேஸ்களில் பெரும்பான்மையான கேஸ்களுக்கு போலீசாரே பிரியாதிகளாக விருந்து வந்திருக்கிறார்கள். ஆதலால் பொய்க்கேஸ்கள் கொண்டுவரப்படுவதை மட்டுப்படுத்தும்படி கண்டிப்பான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று பிரஸ்தாப ரிப்போர்ட்டில் கவர்ன்மெண்டார் ரிமார்க்கு செய்திருக்கிறார்கள்.



ஆயினும் நீதி இலாக்கா, நிர்வாக இலாக்காவினின்று பிரிக்கப்படும் பரியந்தரம் இந்த அம்சத்தில் சீர்திருத்த முண்டாகமாட்டாது.

---

## VILLAGE COURTS

### கிராமக் கோர்ட்டுகள்.

கிராமக் கோர்ட்டுகள் ஒழுங்காக நடத்தப்பட்டு வரும்படியாக ஏற்பாடுசெய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள். என்ன ஏற்பாடு எப்படி செய்யலாமென்று ஆராய்ந்து ரிப்போர்ட்டு செய்யுமபடியாக ஒரு ஆபீசரையும் நியமித்திருக்கிறார்கள். ஆதலால் இந்த சமயத்தில் அதுவிஷயமாக சில யோசனைகள் சொல்லுவது தகுதியுடையதாயிருக்குமென்று எண்ணுகின்றோம். இப்போது கிராமக் கோர்ட்டுகளுக்கு இரண்டுவிதமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று சிவில் அதிகாரம். மற்றொன்று கிரிமினல் அதிகாரம்.

முதலில் இவ்விடத்தில் இவர்கள் பிரயோகித்துக்கொண்டுவரும் சிவில் அதிகாரத்தைப் பற்றிப் பேசுவோம். ரூபாய் 20 க்கும் இருபதிற்குக் கீழ்பட்ட வியாஜ்ஜியங்களைப் பிடித்து விசாரணை செய்ய இவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராம சிவில் கோர்ட்டுகளில் இரண்டுவிதமான கோர்ட்டுகளிருக்கின்றன. ஒன்று கி. மு. க் கோர்ட்டுகள். மற்றொன்று கிராம பெஞ்சுக் கோர்ட்டுகள். இந்த இரண்டு கோர்ட்டுகளுக்குள் ஜனங்கள் கிராமப் பெஞ்சுக் கோர்ட்டுகளை விரும்புகின்றார்கள் என்று 1914 ம் வருடத்திய நியாயபரிபாலன இலாக்கா ரிப்போர்ட்டால் நன்கு விளங்குகின்றது. கடந்த வருடத்தில் 1913 ம் வருடத்தை விட அதிகப்படியான சிவில் வியாஜ்ஜியங்கள் கிராம பெஞ்சுக் கோர்ட்டுகளில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லா டி. மு. க் கோர்ட்டுகளில் கிராமமுனிசீப்புகளால் விசாரணை செய்யப்படக் கூடிய 600 வியாஜ்ஜியங்கள் 1914 ல் குறைந்துபோயிருக்கின்றன. அந்த ஜில்லாவில் கிராமப் பெஞ்சுக் கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் கிராம ஜனங்கள் தங்களுடைய வழக்குகளைக் கிராமப் பெஞ்சுக் கோர்ட்டுகளில் தீர்த்துக்கொண்டிருப்பதால் டி. மு. க் கோர்ட்டுகளில் தாக்கல செய்யப்படவேண்டிய வியாஜ்ஜியங்களின் எண்ணிக்கைகுறைந்துபோயிருக்கிறதென்று எண்ணப் படுகிறது. சித்தூர் டி. மு. க கோர்ட்டுகளில் ரூபா 20 க் குட்பட்ட வியாஜ்ஜியங்கள் 1914 ல் அதிகப்படியாய் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் ஜனங்களுக்கு கிராம முனிசீப்பு கோர்ட்டுகளில் நம்பிக்கையில்லை என்று வட ஆற்காடு ஜில்லா ஜட்ஜி அபிப்பிராயப் படுகிறார்.

ஆனால் அதே ஜில்லாவில் திருப்பத்தூர் டி. மு. க் கோர்ட்டில் ரூபா 20 க் குட்பட்ட வியாஜ்ஜியங்கள் அதிகமாய் குறைந்துபோயிருப்பதால் கிராமஜனங்கள் தங்களுடைய வியாஜ்ஜியங்களை கிராமப் பெஞ்சுக்கோர்ட்டுகள் மூலியமாக பைசல்செய்துகொள்ளுகிறார்கள் என்று அவரே அபிப்பிராயப்பட்டு ஐகோர்ட்டாருக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார். தென் கன்னடம் ஜில்லா ஜட்ஜி ஐகோர்ட்டிற்கு அனுப்பியிருக்கும் ரிப்போர்ட்டில் ரூபாய் 20 க்கு உட்பட்ட வியாஜ்ஜியங்கள் டி. மு. க் கோர்ட்டுகளில் அதிகமாய் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறபடியால் ஜனங்கள் கிராம முனிசீப் கோர்ட்டுகளைப் பார்க்கிலும் டி. மு. க் கோர்ட்டுகளில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். கோதாவரி ஜில்லா டி. மு. க் கள் பேதப்பட்ட அபிப்பிராயங்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு டிஸ்டிரிக்ட் முனிசீப் கிராம முனிசீப்புகள் வியாஜ்ஜியங்களை அலக்ஷியமாக விசாரணை செய்து பைசல் செய்கிறார்கள் என்று அபிப்பிராயப்படுகின்றார். மற்றொரு டிஸ்டிரிக்ட் முனிசீப் கிராமக் கோர்ட்டுகள் விருத்தியாயிவந்துகொண்டிருக்கின்றன என்று அபிப்பிராயப்படுகின்றார். தென் மலையாளத்தில் ஒரு டி. மு. கிராம பெஞ்சுக் கோர்ட்டுகளைச் சிலாகித்துப் பேசியிருக்கின்றார். ஆகவே மேலே எடுத்துக் கூறப்பட்ட அபிப்பிராயங்களால் கிராம பெஞ்சுக் கோர்ட்டுகளை ஜனங்கள வர வர விரும்புகிறார்கள் என்று, உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகின்றது. இப்படிஜனங்கள் கிராமமுனிசீப்பினுடைய தீர்ப்பை பார்க்கிலும் பஞ்சாயத்தார் கூடிச் செய்யும் தீர்ப்பில் நம்பிக்கை வைத்து வருகிறபடியால் இந்த சமயத்தில் ராஜதானி முழுதிலும் கிராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபித்து அவைகளுக்கு அதிகப்படியான அதிகாரம் கொடுத்து கக்ஷிக்காரர்களை

டவுன்களுக்கு வரவிடாமல் அந்தப் பஞ்சாயத்து கோர்ட்டுகளிலேயே தாக்கல் செய்யும்படியாக கட்டாயப் படுத்துவதை விட்டுவிட்டு கிராமக் கோர்ட்டுகளையே பலப்படுத்தி நடத்துவதாக கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பது நமக்கு விந்தையாயிருக்கின்றது.

இறகு, கிராம கிரிமினல் கோர்ட்டுகளைப் பற்றி இவ்விடத்தில் சிறிது ஆராய்வோம். 1914 ம் வருடத்திய நீதி இலாக்கா ரிப்போர்ட்டின்படி 4526 கிராம மாஜிஸ்டிரேட்டுகள் கிரிமினல் அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களால் அனேக கேஸ்களும் பைசல் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இவர்கள் மட்டிலும் கிராமக் கோர்ட்டுகளை ஒழுங்காக நடத்திக்கொண்டு வந்தால் கிராமக் கக்ஷிக்காரர்கள் கட்டுச்சோரு கட்டிக்கொண்டு டவுன்களுக்கு வந்து பணச் செலவு செய்துகொண்டும் கனத்த அசௌகரியங்களுக் குள்ளாகியும் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் பிரியாது கொடுக்க சந்தர்ப்பம் ஏற்படமாட்டாது. கிராமங்களில் கிரிமினல் கேஸ்களை விசாரணை செய்ய கிராம மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும்போது கிராம ஜனங்கள் ஏன் டவுன்களிலிருக்கும் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளை நாடி வருகிறார்கள் என்பதற்கு சித்தூர் ஜில்லா ஜட்ஜி அடியிற்கண்ட காரணம் கூறியிருக்கிறார்:—(1) கிராம மாஜிஸ்டிரேட்டுகள் பெரும்பாலும் படிப் படையாதவர்கள் கேஸ்களை ஒழுங்காக விசாரணை செய்யும்படியான அவ்வளவு ஞானம் பொருந்தப் பெற்றவர்களல்ல. (2) கிராமங்களில் பெரும்பாலும் உண்டாகும் கக்ஷிகளில் கிராம முனிசீப்புகள் எதிலேயாவது சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். (3) கிராம மாஜிஸ்டிரேட்டுகள் விசாரணை செய்யக் கூடிய கேஸ்கள் அற்பக் கேஸ்களாகவிருக்கின்றன. அவைகளுக்கு அவர்கள் விதிக்கக் கூடிய தண்டனையும் அற்பமாயிருக்கிறது. ஆதலால் கக்ஷிக்காரர்கள் அந்தக் கேஸ்களைப் பெரிதாகச் செய்து சப் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளுக்கு கொண்டுபோய் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதித்துவைக்கிறார்கள். (4) பெரும்பாலான கேஸ்கள் பொய்சாக்ஷியத்தால் ஆதரிக்கப்படுகின்றன. ஆதலால் குற்றவாளிகளை சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் தண்டித்து வைப்பது கிராம மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளை விட சாத்தியமாயிருக்கிறது. ஏன் என்றால் கிராம மாஜிஸ்டிரேட்டுகளுக்கு கேசின் உண்மையும், பொய்யும் பெரும்பாலும தெரியும். (5) கிராம மாஜிஸ்டிரேட்டுகளுக்கு பெரும்பாலும் கக்ஷிக்காரர்களைத் தெரியும். (6) ஏதாவது ஒரு தரப்பிற்கு அவர்கள் சார்பாக விருப்பதாக எண்ணப்படுகிறது.

கிராமக் கோர்ட்டுகள் இதே நிலைமையிலிருந்தால் இன்னும் போகப்போக தேசத்தில் கல்வியும் நாகரீகமும் பரவப்பரவப் இந்த கிராமக் கோர்ட்டுகளை ஜனங்கள் ஒரு பொருட்டாக நினைப்பது சாத்தியமாயிருக்காது என்பது திண்ணம். முதலில் இந்தக் கிராமக் கோர்ட்டுகள் ஒழுங்காய் நடத்தப்பட வேண்டுமானால் கிராம முனிசீப் உத்தியோகங்களை கூடியவரையில் படிப் படைந்தவர்கள் அபேக்ஷைப்பட்டு வரும்படியாக அந்த உத்தியோகத்தின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும்.

---

## JURY SYSTEM IN THE PRESEDENCY.

### ராஜதானியில் ஜூரி ஏற்பாடு.

கவர்ன்மெண்டாரால் சென்ற மாதம் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கும் 1914 ம் வருடத்திய நியாய (கிரிமினல் தரப்பு) பரிபாலன ரிப்போர்ட் ஜூரி ஏற்பாடு சம்பந்தமான சில முக்கியமான விஷயங்களை அடக்கிக்கொண்டிருக்கிறது. இந்த ராஜதானியிலுள்ள சில செஷன் ஜட்ஜிகள் ஜூரி ஏற்பாட்டைச் சிலாகிக்கின்றார்கள். சிலர் அந்தஏற்பாட்டை சில காரணங்களை முன்னிட்டு வெறுக்கின்றார்கள். ராமநாதபுரம் செஷன் ஜட்ஜி தம்முடைய கோர்ட்டு அந்தஸ்துள்ளவர்களும், படிப்புள்ளவாகளும் வசித்துவரும் இடங்களுக்குத் தூரமாயிருக்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறபடியால் ஜூரி ஏற்பாட்டல் நன்மை உண்டாகிற தென்று தாம் அபிப்பிராயப்பட முடியவில்லை என்று விசனிக்கின்றார். செஷன் ஜட்ஜி கேசின் சாராம்சத்தை ஜூரிகளுக்கு எடுத்துச் சொல்லுவதை கிரகித்துக்கொள்ள அவர்கள் சக்தியற்றவர்களாக யிருக்கிறார்கள் என்றும் அப்படி ஒருகால் ஜட்ஜி ஜூரிகளுக்குக் கேசின் சாராம்சத்தை எடுத்துரைக்கும்போது அவர்கள் கவனித்தால் அதனால் கெடுதல் நேரிடுகிற தென்றும் வட ஆற்காடு ஜில்லா செஷன் ஜட்ஜி யாகிய மிஸ்டர் பூட்டி ( Mr. Boty ) அபிப்பிராயப்படுகின்றார். ஆனால் பிரஸ்தாப ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை ஊன்றிவாசிக்கின் அந்த செஷன் ஜட்ஜியின் அபிப்பிராயம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாயில்லை. ஏன் என்றால் 1914 ல் 1115 பேர்கள் ஜூரி முன் விசாரணை செய்யப்பட்டு வந்திருக்கிறார்கள். இவர்களில் 75 குற்றவாளிகள் சம்பந்தப்பட்டவரையில் மட்டிலும் ஜூரர்களுடைய அபிப்பிராயத்திலிருந்து ஜட்ஜிகள் பேதப்பட்டிருக்கிறார்கள். இன்னும் விபரமாக எடுத்துச் சொல்லப் போனால் சென்னை ஐகோர்ட்டில் 1914 ல் எந்தக் கேசினும் ஜூரிகளுக்கும் ஜட்ஜிக்கும் அபிப்பிராயபேத முண்டா



னதில்லை. ஆகையால் அனுபோகத்தில் ஜூரி ஏற்பாட்டால் நன்மை உண்டாகிற தென்று பிரஸ்தாப ரிப்போர்ட் ஸ்தாபிக்கின்றது. ஜட்ஜிகளும் ஜூரர்களும் அபிப்பிராயத்தில் பேதப்பட்டவும் மேலே சொல்லப்பட்டவுமான 75 கேஸ்களில் யாருடைய அபிப்பிராயத்தை ஐக்கோர்ட்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறாகள் என்று ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஜூரி எற்பாடு தேசத்திற்கு நூதனமானதல்ல. ஆதிகாலத்தில் நம் தேசத்தில் கிராமப் பஞ்சாயத்துக்கள் விபாஜ்ஜியங்களை விசாரணை செய்து பைசல் செய்துவந்திருக்கின்றன. ஜூரி ஏற்பாடு கிராமப்பஞ்சாயத்து ஏற்பாட்டைப் போலொத்த ஏற்பாடேயொழிய மற்றபடி வேறல்ல.

---

## 4-th CRIMINAL SESSIONS.

### நான்காவது கிரிமினல் செஷன்.

---

இகம் மாதம் சென்னை ஐக்கோர்ட்டில் நடந்த செஷன் விசாரணையில் அடிக்கடி தண்டனை பட்டு ஜெயிலுக்குப்போய் வரும் பழைய குற்றவாளிகள் சிலர் தீபாந்திர தண்டனை விதிக்கப்பட்டார்கள். ஆனால் 3 அணா திருடிய ஒரு பழைய குற்றவாளிக்கு 5 வருடம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்போது ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ், அடிக்கடி தண்டனைப்பட்டு மொத்தத்தில் 31 வருடம் ஜெயிலிலிருந்துவிட்டு திரும்பிவந்தவுடன் ரூபா 9 அடங்கிய ஒரு பணப்பையை திருடிய குறறவாளிக்கு 6 - மாதக் கடுங்காவல் தண்டனை வித்த்து அவன் ஜெயிலிலிருந்து வந்த வுடன் 5 வருடம் போலீஸ் பார்வையிலிருக்கும்படி தண்டித்திருப்பது விந்தையாயிருக்கிறது. ஜெயில் தண்டனையால் புத்திபெறாத குற்றவாளிகளை மறுபடியும் நீண்டகாலம் ஜெயிலில் வைப்பதைப் பார்க்கிலும் போலீஸ் பார்வையில் வைப்பதால் அவர்கள் சீர்படக் கூடுமென்று செஷன் ஜட்ஜி அபிப்பிராயப்பட்டிருப்பதாகயூகிக்கின்றோம். இப்பேர்ப்பட்ட குற்றவாளிகள் நீண்ட காலத்திற்கு மறுபடியும் தண்டிக்கப்பட்டு ரக்ஷண்ய சேனையைப் போலொத்தவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டால் அவர்கள் ஒருக்கால் சீதிருத்த மடையக்கூடுமென்று நம்புகின்றோம்.

---

## COONOOR ABDUCTION CASE.

### குன்னூர் நரச்சோரக் கேஸ்.

உதகமண்டலம் குன்னூர் ஜனங்களின் மன உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கும் நரச்சோரக் கேஸில் சம்பந்தப்பட்டிருக்கும் ரெங்கசாமிக் கவுண்டனும் மிஸ்டாஸ் நியுமான் என்னும் துரைசாணியும் 1916 ம் வருடம் பிப்ரவரி மாதம் நடக்கப்போகிற ஐக்கோர்ட்டு செஷன் விசாரணைக்குக் கமிட்செய்யப்பட்டிருக்கிறாகள்.

---

## TRANSFER PETITION.

### டிரான்ஸ்பர் மனு.

---

திருச்சினாப்பள்ளியில் தென் இந்தியா ரயில்வே கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் ஆர்மஸ்ஸை என்பவருடைய பைசக்கில் (Bicycle) சுங்கன் சாவடி வழியாக சுங்கம் செலுத்தாமல் போய் வந்துகொண்டிருந்தது. டோல்கேட் கண்டிராக்ட்டராகிய மிஸ்டர் சபாபதிபிள்ளை மிஸ்டர் ஆர்ம்ஸ்ஸைக்கு எழுதிக் கேட்டதில் அவர் தமக்கு பைசக்கில் இல்லை என்று பதில் எழுதிவிட்டார். சிலதினங்களுக்குப் பிறகு மிஸ்டர் ஆர்மஸ்ஸையின் சோக்கராப்பையன் ஒருவன் மேற்படி பைசிக்கலின்பேரில் ஏறிக்கொண்டு சுங்கன் வழியாகப் போக மேற்மடி கண்டிராக்ட்டருடைய ஏஜண்டு பைசிக்கிலை நிறுத்தி சுங்கன் வரி கேட்க சோக்கரா தன்னுடைய எஜமான் சுங்கன் வரி செலுத்துகிறதில்லை என்று பதில் சொல்ல, ஏஜண்டு கட்டாயப்படுத்த சோக்கரா பைசிக்கலை சுங்கன் சாவடியிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டான். அன்று இரவு திருச்சனாப்பள்ளி ஜில்லாக் கலெக்ட்டர் மிஸ்டர் வைபர்ட்டிற்கு (Mr. Vibert) மிஸ்டர் ஆர்மஸ்ஸைவீட்டில் இருந்து நடுஇராவில் மிஸ்டர் வைபர்ட் சுங்கன் சாவடிக்கு வந்து 6 தம்பிடி கொடுத்துவிட்டு பைசிக்கிலைவாங்கிக்கொண்டு போய்விட்டார். அடுத்தநாள் டோல்கேட் கண்டிராக்ட்டர் பேரிலும் அவருடைய ஏஜண்டுபேரிலும் திருச்சினாப்பள்ளி டிப்டி மாஜிஸ்ட்ரேட் முன்னில் பைசிக்கலைத் திருடிய குற்றஞ் சாட்டப்பட்டது. இந்தக் கேஸ் திருச்சி ஜனங்களின் மன உணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கிற கேசாயிருக்கிறபடியாலும் ஜில்லாக் கலெக்ட்டரே சுங்கன் சாவடிக்கிவந்து பைசிக்கலை கேட்டு வாங்கிக்கொண்டு போயிருக்கிறபடியாலும் அவருடைய அதிகாரத்திற்குட்பட்ட டிப்டி மாஜிஸ்டிரேட்டினுடைய விசாரணையில் தமக்கு நியாயமுண்டாகமாட்டாதென்றும் தம் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் கேசை சென்னை பிரசிடெண்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்காவது அல்லது திருச்சிக்கு வெளியே வேறெந்தக் கோர்ட்டிற்காவது மாற்றிவிட வேண்டுமென்று ஐகோர்ட்டில் மேற்படி கண்டிராகட்டர் மிஸ்டர் சபாபதிபிள்ளை மனு செய்

துக்கொண்டார். ஐகோர்ட்டார் மனுவை விசாரணை செய்வதற்கு முந்தி கண்டிராகட்டர் பேரில் கொண்டு வரப்பட்ட திருட்டுக்கேஸ் வாப்பீஸ பெற்றுக்கொள்ளப்பட்டுப் போய்விட்டபடியால் ஐக்கோர்ட்டார் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

---

## MISCELLANEOUS SUITS.

## நானாவிதமான வியாஜ்ஜியங்கள்.

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் அப்தலரஹிம்.
ஜட்ஜி மிஸ்டர் எய்லிங்.

---

### தொழுக்கட்டைத் தண்டனை கேஸ்

கிரிமினல் அப்பீல்.

கேசின் விவரம்:—திருநல்வேலி ஜில்லா நகரம் கிராமத்தில் ஒரு சாணுன் ஏதோ அற்பக் குற்றம் செய்துவிட்டதாக கிராம மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டான். 1816 ம் வருஷத்திய 10 வது ரெகுலேஷன் 10 வது பிரிவின்படி குற்றவாளிக்கி கிராம மாஜிஸ்டிரேட்டால் தொழுக்கட்டை தண்டனை விதிக்கப்பட்டது.

அந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளி இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்துகொண்டதில் கிராம மாஜிஸ்டிரேட் கோர்ட்டுத தண்டனை உறுதிப் படுத்தப்பட்டது.

ஆகவே குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள்:—கிராம மாஜிஸ்டிரேட் தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும். குற்றவாளி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் சேதுதாசும் ஆஜரானூர்கள்:

குற்றவாளியின் லாயர் பேசினது:—குற்றவாளி சாணுர ஜாதியைச் சேர்ந்தவன். 1816 ம் வருஷத்திய 10 வது ரெகுலேஷன் 10 வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தொழுக்கட்டை தண்டனை விதிக்கப்பட வேண்டியவர்கள் ஊழியஞ் செய்யும் ஜாதியார் சாணுர ஜாதியார் ஊழியஞ் செய்யும் ஜாதியாரைச் சேர்ந்தவர்களல்ல. ஆதலால் அந்த வகுப்பாரைச் சேர்ந்த குற்றவாளிக்குத் தொழுக்கட்டைத் தண்டனை விதிக்கப்பட்டது சட்ட விரோதமானசெய்கை என்று எடுத்துச் சொன்னூர்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—சாணுர ஜாதியார் ஊழியம் செய்யும் வகுப்பாரைச் சேர்ந்தவர்களல்ல. ஆதலால் அந்த வகுப்பைச் சேர்ந்த குற்றவாளிக்கி தொழுக்கட்டைத் தண்டனை விதித்தது சட்டவிரோதமென்று ஐக்கொர்ட்டார் தீர்மானித்து குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்து விட்டார்கள்.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் அப்தல்ரஹீம்
ஜட்ஜி மிஸ்டர் எய்லிங்.

---

### பிதாவைப் புத்திரன் கொலை செய்ததாகச் சொல்லப்படும் கேஸ்,

கிரிமினல் அப்பீல்.

கேசின் சுருக்கம்.—கோதாவரிஜில்லாவில் குடும்பச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொள்ளும் விஷயமாக பிதாவிற்கும் புத்திரனுக்கும் மனஸ்தாபம் உண்டாய் அடிக்கடி சச்சரவுகள் செய்துகொண்டு வந்தார்கள். புத்திரனின் மனைவியின் நகைகள் பிதாவினிடம் ஒப்பிவிக்கப்பட்டிருந்தன. இந்த நகைகளை தனக்கு வாப்பீஸ் செய்துவிடும்படியாக புத்திரன் பிதாவிற்குச் சொன்னுன். இதுவிஷயமாகவும இருவருக்கும் மனஸ்தாப முண்டாயிருந்தது. மேலும் புததிரன் தூரதேசததிற்குப் போயிருந்தபோது பிதா தன்னுடைய மருமகளுடன் கூட எத்தனித்ததாக புத்திரன் மனைவி அவளுடைய புருஷனுக்குக் கடிதம் எழுதினுள். இதனுலும் தகப்பன்பேரில் புத்திரனுக்குக் கோபம் உண்டாயிருந்தது ஆகவே ஒரு இரவு 8 மணிக்கி பிதா அவனுடைய வைப்பாட்டி வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தபோது அவனைப் புத்திரன் வழி மறித்தது அடித்துக் கொலை செய்துவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு கோதாவரி செஷன் கோர்ட்டிற்கு கமிட் செய்யப்பட்டிருந்தான்.

செஷன் கோர்ட்டார் தீர்ப்பு:—பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்லும் காரணங்களுடன் மனைவி புருஷனுக்கு எழுதிய கடிதத்தால் புத்திரனுக்குத் தகப்பன்பேரில் ஆத்திர முண்டாயிருக்கக் கூடுமென்றும் ஆதலால் புத்திரன்கொலைசெய்திருக்கக் கூடுமென்று செஷன் ஜட்ஜி தீர்மானித்தார். மேலும் கொலை நடந்ததற்கு அரைமணி நேரத்திற்கு முந்தி புததிரன் கொலை ஸ்தலத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட்டில் உட்கார்ந்திருந்து எழுந்திருந்து போனுனென்று அந்த வீட்டிலிருந்த ஸ்திரீகள் சொல்லிய சாக்ஷியத்தின் பேரில் செஷன் கோர்ட்டார் நம்பிக்கை வைத்தார்கள். ஆதலால் புத்திரன்பேரில் கொலைக் குற்றம் ஸ்தாபனை செய்யப்பட்டு குற்றவாளிக்கு ஜென்ம தீபாந்திர தண்டனை விதிக்கப்பட்டது.



இந்த தண்டனைக்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள்:—குற்றவாளி தரப்பிற்கு மிஸ்டர் P. நாராயணமூர்த்திக்கிப் பதிலாக மிஸ்டர் சோமையாவும், கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானூர்கள்.

குற்றவாளியின் லாயர் பேசியது:—செஷன் ஜட்ஜி எந்தக் கடிதங்களை நம்பி குற்ற ஸ்தாபனை செய்திருக்கிறாரோ அந்தக் கடிதத்தால் புத்திரனுக்கு பிதாவின்பேரில் ஆத்திர முண்டாயிருக்கு மென்று நினைப்பதற்குப் போதுமான காரணமில்லை. செஷன் ஜட்ஜி அவருடைய தீர்ப்பில் சொல்லியிருக்கும்மற்ற காரணங்களும் வலுவானவை யல்ல. மேலும் இந்தக் கேசில் கொலையைக் கண்ணுல் பார்த்ததாக சாக்ஷியமில்லை. ஆதலால் இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களுடைய கேசில் குற்றவாளி விடுவிக்கப்பட வேண்டும் என்று குற்றவாளியின் லாயர் எடுத்துப் பேசினூர்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:— கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினதையும் கேட்ட பின்பு குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்து குற்றவாளியை விடுவித்துவிடும்படி உத்திரவு செய்து தீர்ப்பு சொன்னூர்கள்.

## CURRENT MONTH'S DECISIONS.

## நிகழ்மாதத் தீர்ப்புகள்.

---

ஜட்ஜிகள்.—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர். முன்பாக.

---

அப்பீல் நெ. 47 of 1914.

லாப் பாயின்ட்:—ஹிந்து லா.

வியாச்சியச் சுருக்கம்:—பிதாவும் புத்திரனும் சேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஸ்தாவர சங்கம சொத்துகளில் சில சொத்துக்களை மட்டிலும் பாகப்பிரிவினை செய்துகொண்டதாக பாகப்பிரிவினை பத்திரத்தால் தெரிகிறது. இதனுல் ரூகிக்கப்படவேண்டிய தென்னவென்றுல் எல்லா சொத்துக்களையும் பாகப் பிரிவினை செய்துகொள்ள நினைத்திருக்கிறூர்கள் என்பதே என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜஸ்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்:—பூர்வகால ஹிந்துலாவிற்கு அறைகுறையான பாகப் பிரிவினை (Partial Partition) தெரியாது. இப்போது கோர்ட்டார்கள் ஜாரி செய்திருக்கும் தீர்ப்புகள் பிரகாரம் சொத்துக்களை அறை குறையாகப்பிரித்து கொள்ளப்பட்டன வென்றுல் அந்தப் பிரிவின் பிரிவினை செய்யப்பட்ட சொத்துககளுக்குத் தான் பொருந்தும். மற்றவைகளுககுப் பொருந்ாதென்று ககூதி சொல்லப்பட்டு ருஜுப் படுத்தப்பட வேண்டும்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெஸர்ஸ் T. ரெங்காச்சாரியாரும். K. V கிருஷ்ணசாமி அய்யரும். அப்பீல் பிரதிவாதிகளுக்தாக மெஸ்ஸர்ஸ் S. சீனிவாசம்யங்காரும், A. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானூர்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

---

அப்பீல் நெ. 94 of 1912.

லாப்பாயின்ட்:—ஹிநது லா.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவதாயிருந்தால் புருஷனுடைய அனுமதிக்குப் பதிலாக சபிந்தர்களுடைய (Sapindas) அனுமதியைப் பெறவேண்டும். ஆதலால் புருஷனுடைய சொத்திற்கு நேரே வார்சு பாத்திதை பாராட்டக் கூடிய எல்லா சபிந்தர்களுடன் அந்த விதவை கலந்து யோஜனைசெய்து அவர்களுடைய அனுமதியைப் பெற்றுககொள்ள

வேண்டும். ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனுடைய சபிந்தர்களில் பெரும்பாலானவர்களுடன் கலந்து யோஜனை செய்து அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டாள் ஆனால் புருஷனுடைய சொத்திற்கு சமீபத்தில் வார்சாக வரக்கூடிய சபிந்தர்களுடைய அனுமதியைப் பெறாமல் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள். இந்தஸ்வீகாரம்செலாவணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெஸர்ஸ் T. ரெங்காச்சாரியாரும், V. ரமதாசும் ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸர்ஸ் S. சீனிவாசய்யங்காரும். V. ரமேசனும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரிஅய்யர்

---

அப்பீல் நெ. 113 of 1910.

லாப்பாய்ன்ட்:—நீர்ப்பாய்ச்சல் செஸ் ஆக்ட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—ஒரு நதியிலிருந்து ஒரு வாய்கால் பிரிகிறது. இப்படி பிரிகிறவிடத்தில் நதியின் கரைகளும் படுகைகளும் ஒரு ஜெமீன்தாருக்குச் சொந்தமா யிருக்கின்றன. இந்த விடத்தில் ஓடும் ஜலம் கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமென்று சொல்ல முடியாது. அப்படி நதியிலிருந்து பிரிந்தவாய்க்காலின் வழியாக ஓடிவந்த ஜலம் பாய்ந்த நிலங்களுக்கு 1865 ம் வருடத்திய 7 வது ஆக்ட் 1 வது பிரிவின்படி (VII of 1865) செஸ் வரி விதிக்க கவர்ன்மெண்டார் பாத்தியமற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக கவான்மெண்டு பிளீடரும். அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் ரமேசனும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

---

இரண்டாவது அப்பீல் நெ. 2275 of 1914.

லாப்பாயின்ட்:—முகமதியச் சட்டம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு முகமதியன் உயில் எழுதிவைக்காமல் இறந்து போனானே யானால் அவனுடைய எஸ்டேட்டை அவனுடைய வார்சுகள் உடனே அடைந்து பொதுவாக அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். வார்சுகளில் ஒருவன் எஸ்டேட்டைச் சேர்ந்த ஸ்தாவரசங்கம சொத்துக்களில் தனக்கிருக்கும் பாகத்தைப பெற்றுக்கொள்ள வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் அந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதா அல்லவா என்று தீர்மானிக்க வேண்டுமானால் ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் லிமிடேஷன் ஆக்ட் 144 வது ஆர்ட்டிகிளின்படியும் சங்கம சொத்து சம்பந்தப்பட்டவரையில் மேற்படி ஆக்ட் 120 வது ஆர்ட்டிகிளின்படியும் தீர்மானிக்கப்பட வேண்டும். சங்கமசொத்தை அல்லது ஸ்தாவரசொத்துக்களைப் பற்றிய வியாஜ்ஜியமாகவிருந்தபோதிலும் வாதி அந்த சொத்துக்களை அனுபவிப்பதிலிருந்து புறப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து காலாவதி தோஷ காலம் ஆரம்பமாகிறது என்று தீர்மானிக்கப் பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் M. D. தேவதாசும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸ்ஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யரும், M. A. கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர், கௌர்ட்ஸ் டிராட்டர்.
ஜட்ஜி மிஸ்டர்சீனிவாசய்யங்கார்

---

அப்பீல் நெ. 302 of 1913.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—சொத்தை அடமானம் வைத்தவனுக்குப் பலபேர்கள் சேர்ந்து அந்தச் சொத்தை அடமானம் வைத்துக்கொண்டு பணம் கொடுத்ததாக அடமானப் பத்திரத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கடன்காரர்களில் ஒருவனிடம் அடமானத்தொகை செலுத்தப்பட்டால் எல்லோரிடமும் செலுத்தப்பட்டதற்குச் சமமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. முத்தய்யா முதலியாரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் A. கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் V. விஸ்வநாத சாஸ்திரியும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:— ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

---

இரண்டாவது அப்பீல் நெ. 90 of 1914.

லாப்பாயின்ட்:—லிமிடேஷன்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—1890 ம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட "குறி" என்று சொல்லப்படும் சீட்டு போடும் கம்பெனியின் பிரசிடெண்டு எழுதிக் கொடுத்த உடன்படிக்கையில் 'குறி' கம்பெனிதம்மாலாவது அல்லது தம்முடைய வார்சுகளாலாவது 1899 ம் வருடம் வரையில் தொடர்ந்தேர்த்தியாக நடத்தப்பட்டுவரவேண்டும் என்றும் மேலேகுறிப்பிடப்பட்ட காலம்வரையில் தொடர்ந்தேத்தியாக நடத்தப்பட்டு



வராததால் நேரிடக்கூடிய நஷ்டத்திற்கு தம்முடைய சொத்துகள் கட்டுப்படுத்தப்படும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. குறி கம்பெனி 1896ல்-நின்று போய்விட்டது. ஆதலால் ஷை கம்பெனி நிறுத்தப்பட்டுப் போனதால் தனக்கு உண்டாயிருக்கும் நஷ்டத்திற்காக ஷை கம்பெனியின் பிரசிடெண்டின் சொத்தைப்பாத்தியப்படுத்தும் பொருட்டு ஷை சீட்டு கம்பெனிக்குப் பணம் செலுத்திக்கொண்டு வந்த மெம்பர் ஒருவன் வியாஜ்ஜியம்கொண்டுவந்தான் அந்த வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜிய மூலம் கம்பெனி நடத்தப்படாமல் நின்றுபோன தேதியிலிருந்து உண்டாயிருக்கிறதே யொழிய கம்பெனி எந்தவருடம் வரையில் நடத்தப்பட வேண்டுமென்று உடன்படிக்கையில் சொல்லப்பட்டதோ அந்த 1899-ம் வருடத்திற்குப் பிறகு வியாஜ்ஜியமூலம் உண்டாகப் போகிறதாக நினைக்கப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஏன் என்றால் எந்தத்தேதியில் குறி கம்பெனி நின்று போய்விட்டதோ அந்தத் தேதியில் சீட்டுப்போடும் ஒப்பந்தம்நிறைவேற்றப் படக்கூடாததாகவிருந்தது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் B. சீத்தாராமராவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. Y. ஆதிகாவும் ஆஜரானார்கள்.

---

28—10—1915.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர். ஜான் வாலிஸ்.
ஜட்ஜிமிஸ்டர் சேஷகிரி அய்யர்.

அப்பீல் வியாஜ்ஜிய நெ 422 of 1914.

லாப்பாயின்ட்:—சட்டப்பிரகார முள்ள பிரதிநிதி.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு ஹிந்து மைனரின் கார்டியன் மைனருடைய சொத்தை 1880-ல் பராதீனம் செய்தான் ஷை மைனர் விபக்தமாகாத ஒருஸ்வீகாரப்புத்திரனை விட்டுவிட்டு மெஜாரட்டி அடைவதற்கு முந்தியே இறந்துபோய்விட்டான். அந்த ஸ்வீகார புத்திரனும் மைனராக யிருந்தான் அந்த மைனர் ஸ்வீகாரப்புத்திறன் மெஜாரட்டி அடைந்து மூன்று வருட காலத்திற்குள்ளாக அதாவது 1911-ல் கார்டியன் செய்த பராதீனத்தை ரத்துசெய்து வைக்க வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். லிமிடேஷன் ஆக்ட் 6-வது பிரிவு 3, 4, கிளாஸ்களின்படி அந்த வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை அந்த கிளாசுகளின் (Clauses) விபக்தமாகாத மைனர் புத்திரன் அவனுடைய மைனர் தகப்பனுக்கு சட்டபிரகார முள்ள பிரதிநிதியாக விருக்கிறான் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல்வாதிக்காக மிஸ்டர் T. R. ராமச்சந்திரய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மெசர்ஸ் S.T. சீனிவாசகோபாலாச்சாரியாரும், சத்தியமூர்த்தி அய்யரும் ஆஜரானார்கள்.

---

29-10-1915.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் எய்லிங்.

இரண்டாவது அப்பீல் நெ. 769 of 1911.

லாப் பாயின்ட்:—மதிராஸ் எஸ்டேட்டு லாண்டு ஆக்ட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு நில சுவான்தார் நிலத்தைவிட்டு குடியைக் கிளப்பிவிடும்படியாக குடியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். காரணம் என்னவென்றால் பிரதிவாதி வாதிக்குத் தீர்வையும் செலுத்தவில்லை வாதியிடமிருந்து பட்டா பெற்றுக் கொண்டு முச்சிலிக்கையும் எழுதி வாங்கிக் கொள்ளவில்லை என்பதே. அந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதி தான் வைத்துக்கொண்டிருக்கும் நிலம் இனும் நிலம் என்று சகூதி சொன்னான். ஆனால் வியாஜ்ஜிய விசாரணையில் தாவா நிலம் ஜிராயத்தி (Zeroyati) நிலமென்றும் ஆதியில் அந்த நிலத்தில் குடித்தன குடியாயிருந்த (Yearly Tenant) ஒரு குடியிடமிருந்து டிரான்சுபர் பெற்றுக் கொண்டிருக்கிறான் என்றும் அந்த ஆதிக் குடியின்பேரில் அவனை நிலத்தை விட்டு கிளப்பும்பொருட்டு சென்னைப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் அமுலுக்கு வந்ததற்குப் பிறகு ஒரு இஜக்ட் மெண்டு டிக்கிரி பிறப்பிக்கப் பட்டதென்றும் இப்படி டிக்கிரி பிறப்பிக்கப் பட்டபோது நிலம்பிரதிவாதியின் வசத்திலிருந்த தென்றும் புலப்பட்டது 1906 ஜூலைமீ வரையில் நிலம் ஆதி குடியின் வசததிலிருந்திருந்ததால்அவனிடமிருந்துடிரான்ஸ்பர்பெற்றுக்கொண்டவனும ஷை ஆக்ட் 6-வது பிரிவில்சொல்லப்படடிருக்கும் நன்மையை அடைய பாத்தியமுடைவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்: — அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் B. N. சர்மாவும் K. S. அராவமுது அய்யங்காரும் ஆஜரானார்கள்.

---

1-11-1915.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நெ. 329 of 1194.

லாப்பாயின்ட்:—அடமானம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—அடமானச் சொத்தை விற்பனை செய்யும்படியாக அடமானம் வைத்துக்கொண்டவனால் கொண்டுவரப்பட்ட வியாஜ்யத்தில் அடமானம் வைத்தவன் அடமானத் தொகையை டிக்கிரியில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் செலுத்தி சொத்தை வசப்படுத்திக்கொள்ள பாத்தியமுடையவன் என்று டிக்கிரி பிறப்பிக்கப்பட்டது. இதன்பிறகு அடமானத்தை மீட்டுக்கொள்ள அடமானம் வைத்தவனால் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் செல்லாவணியாக மாட்டாது. ஏன் என்றால் ரேஸ்ஜுடிகேட்டாவால் கட்டுப்பட்டிருக்கிறது. அதாவது முந்திய வியாஜ்ஜியத்தால் தடை படுத்தப்பட்டிருக்கிற தென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. M. கிருஷ்ணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் K. K. ரெங்கசாமி அய்யங்காரும் P. V. பரமேஸ்வரய்யரும் ஆஜரானார்கள்.

---

## MADRAS HIGH COURT.
## FOURTH CRIMINAL SESSIONS.
## நான்காவது கிரிமினல் செஷன்ஸ்.

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் பிலிப்ஸ்.

முதல்நாள்:—திங்கள்கிழமை. 1—11—1915.

### ROYAPURAM MURDER.
### ராயபுரம் கொலைக்கேஸ்.

குற்றம்:—மாணிக்கம் என்கிற வண்டிக்காரனை 13—10—1915 ல், சடையன் என்கிற வேறொரு வண்டிக்காரன் கொலை செய்துவிட்டதாகக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் செஷனுக்குக் கமிட்டி செய்யப்பட்டிருக்கிறான்.

கேசின் வரலாறு:—குற்றவாளியும் இறந்துபோனவனும் லக்ஷ்மய்யா என்கிற கண்டிராக்ட்டரும் வண்டி ஓட்டுகிறவர்கள். இந்தக் கண்டிராக்ட்டருக்கு ராயபுரத்தில் ஆடு வெட்டப்படும் விடத்திற்குச் சமீபத்தில் ஒரு கொட்டகை யிருக்கிறது. அந்தக் கொட்டகைக்கு 11-10-1915 ல் குற்றவாளியின் பெண்ஜாதியாகிய முனியம்மாள் குற்றவாளிக்குச் சாப்பாடு எடுத்துக்கொண்டு போனாள். குற்தவாளி அப்போது கொட்டகையி லில்லை. இறந்துபோன மாணிக்கம் கொட்டகையி லிருந்தான். இவன் முனியம்மாளைத் திட்டினதாக மறுநாள் அவள் அவளுடைய புருஷனிடம் சொன்னாள். இது காரணமாக குற்றவாளிக்கும் இறந்துபோனவனுக்கும் சண்டை நடந்து கடைசியில் உருவின கத்தியைக்கொண்டு மாணிக்கத்தின் இடது நெஞ்சில் குத்தினான். அதன் பிறகு குற்றவாளி மாணிக்கத்தை காலினால்இடரிவிட்டான். மாணிக்கம் கீழே விழுந்துவிட்டான். அதன்பேரில் குற்றவாளி மாணிக்கத்தின்பேரில் ஏறி உட்கார்ந்துகொண்டு மாணிக்கத்தைக் கத்தியால் 4 அல்லது 5 தடவை குத்தினான். மாணிக்கம் இறந்துபோய்விட்டான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் J F பாசட்(போர்மன்),மெஸ்ர்ஸ் P பாலசுப்பிரமணியசெட்டி, J F ஜோன்ஸ், W S ஹாட்வே. C கோபாலமேனன், E காட்பிரிட்ஜ், H N C காம்பல், H பீமேஸ்வர ராவ், D R பாலாஜிராவ்.

கேசின் நடவடிக்கை:—பிராசிக்கியூஷன் தரப்பில் அனேக சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் தனக்கும் இறந்துபோனவனுக்கும் நடந்த சண்டையில் தான் மிகவும் அடிபட்டதாகவும் சொன்னான்.

ஜூரர்களுடைய அபிப்பிராயம்:—ஜூரர்களால் 5 - பேர் குற்றவாளி கொலைக் குற்றத்தைச் செய்திருக்கிறான் என்றும், பாக்கி நான்கு பேர்கள் அவன் அந்த குற்றத்தைச் செய்யவில்லை என்றும் அபிப்பிராயம் கூறினார்கள்.

கோர்ட்டார் உத்திரவு:—குற்றவாளியின் பேரில் குற்றஸ்தாபனை செய்ய வேண்டுமானால் ஜூரர்களில் பலபேர் குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று அபிப்பிராயம் கூறி யிருக்கவேண்டும். இந்தக் கேசில் அப்படி அபிப்பிராயம் கூறப்படாததால் குற்றவாளி அடுத்த செஷனில் புனர் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று உத்திரவு செய்திருக்கிறார்கள்.

இரண்டாம்நாள்:—செவ்வாய்க்கிழமை.

2-11-1915.

### THEFT OF A PURSE.
### பணப்பை திருட்டு.

குற்றம்:—எழும்பூரில் சேஷய்யர் என்பவரிட மிருந்து ரூபா 9-14-1, அடங்கி யிருந்த ஒரு (Money Purse) என்று சொல்லும்படியான சிறு பணப்பையைத் திருடிவிட்டதாக கடந்த 1-8-1915 ல் கூட்டியான் என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டு கமிட் செய்யப்பட்டிருந்தான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் T ராகவேந்திரராவ் (போர்மன்) மெஸ்ஸர்ஸ் C T பொன்னம்பல முதலியார், G F சேல், J E டிவிட்ஸ், J R ராவல்ஸ், N ராமய்யா பந்துலு, J E சேல்ஸ், W ராமய்யா, C H டுலிக்—ஆகிய இவர்கள் இந்தக் கேசிற்கு ஜூரர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

கேசின் வரலாறு:—பிரியாதி சேஷய்யர் விழுப்புரத்தி லிருந்து வந்து எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி டிராம்வண்டியில் ஏறும்போது குற்றவாளி அவர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். சிறிது நிமிஷங்கள் சென்ற பிறகு பிரியாதி டிககட் வாங்க பணப்பையைத் தேடினபோது பையைக் காணோம். அப்போது குற்றவாளி ரோடின் வழியாகப் போக ஆரம்பித்தான். பிரியாதி சந்தேகப்பட்டு அவனைப் பின்தொடர்ந்துபோய் பிடித்தபோது அவனிடம் பணப்பை யிருந்தது.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் தன் பேரில் பொய்க்கேஸ் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொன்னான். குற்றவாளி வாயர் வைக்கவில்லை. ஜூரர்கள் குறறவாளி குற்றம் செப்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். குற்றவாளி இதற்குமுந்தி 9 தடவைகளில் ஜெயிலுக்குப் போய்வந்திருக்கிறான். முதல் தடவை தண்டனைபட்டது 1879 ல். கடைசிஇரண்டு தடவைகளில் ஒவ்வொரு தடவையும் 10 வருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

தீர்ப்பு:-கோர்ட்டார் குற்றவாளிக்கு 6-மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து அவன் ஜெயிலைவிட்டு வந்த வுடன் 5 வருடம் போலீசாருடைய பார்வையிலிருந்து வரவேண்டுமென்று உத்திரவு செய்தபோது இவன் கடந்த 35 வருடங்களுக் குள்ளாக 31 வருடம் ஜெயிலிலிருந்தும் அவன் புத்தி பெறாததால் போலீசார் பார்வையில் வைக்கப்பட்டால் அவனுக்குப புத்திவரும் என்று தாம் அபிப்பிராயப்படுவதாகச் சொன்னார்கள்.

### ANOTHER PICK POCKET.
### இன்னொரு முடிச்சவிழ்க்கி.

குற்றம்:—ஜியார்ஜடவுன் சென்ட் ஜாவியர் தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருந்த மதிராஸ் மெயில் ஆபீஸ்



டெலிவரிப் பியூன் ரத்தினமுதலியின் சட்டை ஜேபியிலிருந்து மூன்று அணா முடிச்சுபோடப்பட் டிருந்த ஒரு கைக்குட்டையைத் திருடிவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டான்.

ஜூரர்கள்:—முந்திய கேசிற்கு நியமிக்கப்பட்ட ஜூரர்களே இந்தக் கேசையும் விசாரணை செய்தார்கள்.

ஜூரர்களுடைய அபிப்பிராயம்:—குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி தனக்கு வாயர் வைக்கவில்லை. இதற்கு முந்தி 9 தடவை தண்டனைபட்டு ஜெயிலுக்குப் போய்வந்திருப்பதை குற்றவாளி ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளிக்கு 5 வருட கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.

### KIDNAPPING and THEFT.
### நரச்சோரமும் திருட்டும்.

மைலாப்பூரில் 8 வயதுடைய எல்லம்மாள் என்னும் பெண்ணை அவளுடைய பாட்டி சின்னம்மாளிட மிருந்து அடித்துக் கொண்டுபோய் அந்தப்பெண்மேல் போடப்பட்டிருந்த ரூ. 10 பொருமானமுள்ள நகைகளை 6-8-15 ல் திருடிவிட்டதாக கோவிந்தன் என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டு செஷனுக்குக் கம்மிட்செய்யப்பட்டிருந்தான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் E C வொர்மான் (போர்மன்) மெஸர்ஸ் W கன்னப்பா, A. கோதண்டசாமிநாயுடு, புலாபே தேவி T V நரசிங்கராவ், E பாரன்ஸ், C N ரத்னசாமி அய்யர், S A பார்த்தசாரதி முதலியார், A H மில்லர் ஆகியஇவர்கள் இந்தக் கேசிற்கு ஜூரர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை.:—எல்லம்மாள் உள்பட சிலர் பிராசிக்கியூஷன் தரப்பில் சாக்ஷி விசாரணை செப்யப்பட்டார்கள். ஜூரர்கள் குற்றவாளி குற்றம் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். குற்றவாளி இதற்கு முந்தி 5 தடவை ஜெயிலுக்குப் போய் வந்ததை ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு:—கோர்ட்டார் கடந்த 6 வருடகாலத்திற்குள் 5 வருடம் ஜெயிலிலிருந்தும் குற்றவாளிக்கு புத்திவாராதபடியால் அவனுக்கு 7 வருட தீபாந்திர தண்டனை விதிக்கப்படவேண்டுமென்று சொல்லி அப்படி விதித்தார்கள்

### THEFT IN A BUILDING.
### கட்டடத்தில் திருட்டு.

கடந்த செப்டம்பர் மாதம் 28 ந் தேதி அப்பாயிநாயுடு வீட்டில் புகுந்து சொம்பு திருடிபதாக பாலாஜி என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான்.

ஜூரர்கள்:—முந்தியகேஸ ஜூரர்களே இந்தக்கேஸையும் விசாரணை செய்தார்கள். குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று 8 பேர்களும், குற்றஞ் செய்யவில்லை என்று ஒருவரும் ஜூரர்கள் அபிப்பிராயம் கூறினார்கள்.

இந்த சமயத்தில் அன்றையதினம் கோர்ட்டு கலைந்தது

3-11-1915.

மூன்றாம்நாள் புதன்கிழமை.

இன்று காலை 11 மணிக்கு கோர்ட்டு கூடினவுடன் சொம்புதிருடிய பாலாஜி கைதிக் கூண்டில் நிறுத்தப்பட்டான் இவன் இதற்கு முந்தி 6 தடவை ஜெயிலுக்குப் போய்வந்திருப்பதை ஒப்புக்கொண்டான். இவனுக்குக் கோர்ட்டார் மூன்றுவருட கடினகாவல்தண்டனை விதித்து இவன் ஜெயிலை விட்டுவந்தது முதல் இன்னு மொரு மூன்றுவருடம் போலீசார் பார்வையி லிருந்துவர வேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்,

### RECEIVING STOLEN PROPERTY.
### திருட்டுச் சொத்தை வாங்கினது.

24-3-1915, 8-5-1915, 19-5-1915 ஆகிய இந்தத் தேதிகளில் அனந்த ஆள்வார் K V கிருஷ்ணய்யர், K அப்தல் மாகூப்—ஆகிய இவர்களுக்குச் சொந்தமான ரூபாய் 80 விலை மதிப்புள்ள பித்தளைப் பாத்திரம், வஸ்திரம் முதலிய திருட்டுச் சொத்துகளை போகவாகப்பாடு என்கிற முனிசாமி என்பவன் வாங்கி யிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் J ஹேவுட்(போர்மன்) மெஸ்ர்ஸ் ச. சிவாநந்தலிங்கம்பிள்ளை, C J வுல்லியம்சன், V S ஆஸ்வதய்யர், C M தம்புசாமி, F நாட்டன், A T S குப்புசாமி முதலியார், D R நம்மாள்வார்செட்டி, N குப்புசாமி அய்யங்கார் ஆகிய இவர்கள் இந்தக் கேசிற்கு ஜூரர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி குற்றம் செய்திருக்கிறான் என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். குற்றவாளி இதற்கு முந்தி மூன்று அல்லது நான்கு தடவை தண்டனை அடைந்து ஜெயிலுக்குப்போய் வந்திருப்பதை ஒப்புக்கொண்டான். ஆனால் ஒரு குறிப்பிட்ட தண்டனையை மறைத்துக் சொன்னான். இதன்பேரில் பெங்களூரிலிருந்து வந்திருந்த போலீஸ் கானிஸ்டேபில் அந்த தண்டனையை ருஜூப்படுத்தினான். அதன்பேரில் "குற்றவாளி சொல்லுகிறதையா அல்லது கான்ஸ்டேபில் சொல்லுகிறதையா" நீங்கள் நம்புகிறீர்கள் என்று ஜட்ஜி ஜூரர்களைப் பார்த்து கேட்டார். அதற்கு அவர்கள் கானிஸ்டேபில்சொல்லுவதை நம்புகிறோம் என்று பதில் சொன்னார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளிக்கு இதற்கு முந்தி அடைந்திருக்கும் தண்டனைகளை கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு தடவையும் ஜெயிலைவிட்டு வந்தவுடன் குற்றம் செய்திருக்கிறான் என்று சொல்லி அவனுக்கு 7 வருட தீபாந்தர தண்டனை விதித்தார்கள்.

### THEFT OF CURRENCY NOTES.

### கரன்சி நோட்டுகள் திருட்டு,.

குற்றம்:—1-10-1915 ல் ஜியார்ஜ்டவுனில் இந்திய சைனியத்தின் காப்டிஞகிய அப்தல் அஜிஸ்சாகேப் என்கிற பென்ஷன் ஆபீசருடைய சட்டை ஜெபியிலிருந்து ரூபா 155 உள்ள கரன்சி நோட்டுகளைத் திருடிவிட்டதாக தங்கவேலு என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டான்.

ஜூரர்கள்:—மிஸ்டர் W B K ஸ்மித், (போர்மன்) மெசர்ஸ் ச. வெங்கட்டருமய்யர், G T டெய்லர், R ஹரிராவ் ச. சௌரி சங்கர சர்மா, C பாஷ்கரராவ் நாயுடு, G பெர்டி ஞண்ட், R M ஜேம்ஸ், D G W இன்ஸ்;

கேசின் நடவடிக்கை:—குற்றவாளி தம்புச்செட்டிவீதியில் கைதி செய்யப்பட்டான்' ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் க்ஷாமராவ் உள்பட பல சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். ஜூரர்கள் குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். குற்றவாளிக்கித் தண்டனை விதிக்கப்படுவதற்கு முந்தி கோர்ட்டு கலைந்து போய்விட்டது.

---

### 4-11-1915.

நான்காம்நாள் வியாழக்கிழமை.

கரன்சி நோட்டுகள் திருடினதாகத் தீர்மானிக்கப்பட்ட தங்கவேலுக்கு இன்று காலை 11 மணிக்கு கோர்ட்டு கூடினவுடன் 7 வருட தீபாந்திர தண்டனை கோர்ட்டாரால் விதிக்கப்பட்டது.

---

### பெர்மனெண்ட் இன்வெஸ்ட்மெண்ட் சொசைட்டி கேஸ்.

பண்டு கணக்குப் புஸ்தகங்களைப் பிறட்டியதாக குற்றஞ் சாட்டப்பட் டிருக்கும் C. முருகேசம் செட்டியாரையும், M. சேவியல்பிள்ளையையும் ஸ்பெஷல்ஜூரி விசாரணைசெய்ய வேண்டுமென்று கிரவுன் பிராசிகியூட்டர் கோர்ட்டாரை வேண்டிக்கொண்டார் கோர்ட்டார் குற்றவாளிகள் தரப்பிற்கு ஆஜரான பாரிஸ்டர் மிஸ்டர் ஆர். என். அய்யங்கார் பேசினதைக்கேட்டுக்கொண்ட பின்பு அந்தக் கேஸ் ஸ்பெஷல் ஜூரியால் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

---

### HOUSE BREAKING AND THEFT.

### கன்னம்வைத்து திருடியது.

4-8-1915 ல் பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டில் முருகேசன் என்பவனுடைய வீட்டில் புகுந்து ரூ. 28-6 பெருமான முன்வபித்தளைப் பாத்திரத்தைத் திருடியதாக அக்கிசெட்டி பொட்டிகாடு என்பவன் குற்றஞ் சாட்டப்பட்டான்.

ஜூரர்கள் :— மிஸ்டர் J. E. சேல்ஸ் (போர்மன்) மெசர்ஸ் A.D. மிச்சல், N. ருமய்யர், C.H. லெக் A.H. ஹில்வர், E.C. வொர்மன், C. ஞானகிராம் முதலியார், F. ஹாரிஷ் J, A. R. நாக்ஸ்.

கேசின் நடவடிக்கை :— குற்றவாளி திருடும்போது கையும் களவுமாக பிடிப்பட்டு போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டான். இவன் பிடிபடும்போது இவன்தேகத்தில் யாதொரு வஸ்திரமுமில்லை. எண்ணெயையும்,. கருப்புமையையும் கலந்து தேகத்தில் பூசிக்கொண்டிருந்தான். இவன் ரக்ஷண்யசேனை கைதிகள் செட்டில்மெண்டில் கைதியாயிருந்துக்கொண்டு வருகிறான் என்று சாக்ஷிகளின் வாக்குமூலத்தால்தெரியவருகிறது குற்றவாளி குற்றத்தைச செய்திருக்கிறான் என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள். குற்றவாளி இதற்கு முந்தி 4, அல்லது 5 தடவை ஜேயிலுக்குப் போய் வந்திருப்பதை குற்றவாளி ஒப்புக்கொண்டான்.

தீர்ப்பு :— கோர்ட்டார் ஜூரிகூறிய அபிப்பிராயத்தை ஒத்துக்கொண்டு குற்றவாளிக்கி 7-வருட தீபாந்திர தண்டனை விதித்தார்கள்.

---

### FORGERY AND GHEATING.

### கள்ளக் கையெழுத்தும் ஏமாற்றலும்.

5-8-1914 ல் திருப்பதி நாருயணசாமி என்பவன் G. B. N. சொக்கநாதம் செட்டிக்கி அனுப்பியது போல ஒரு றசீதில் கையெழுத்துச் செய்து ஷை சொக்கநாதம்செட்டிக்கி அனுப்பி அவரை ரூபாய் 35 தன்னிடம் கொடுக்கும்படியாகத் தூண்டி அவரை மோசஞ் செய்திருப்பதாக குற்றஞ் சாட்டப்பட் டிருக்கும் கொண்டுரு வெங்கட்ருயடு குற்றத்தை ஒப்புக்கொண்டான். குற்றவாளிக்கி 18 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

---

### ROYAPETTA HOSPITAL CASE

### ருயப்பேட்டை ஆஸ்பத்திரி கேஸ்.

2-4-1915ல் ருயப்பேட்டை ஆஸ்பத்திரியின் லினன்(வஸ்திரம்) கணக்குகளைப் புறட்டி எழுதியதாக ஷை ஆஸ்பத்திரி குமாஸ்தா சீனிவாசய்யர் குற்றஞ்சாட்டப்பட்டு செஷன்கோர்ட்டிற்குக் கமிட் செய்யப்பட்டிருந்தார்.

ஜூரர்கள்:— முந்தியகேசிற்கிருந்தஜூரர்களே.

லாயர்கள்:—குற்றவாளி தரப்பிற்கு சொலிசிட்டர் மிஸ்டர் பாட்ரிஜ் உடன் பாரிஸ்டர் மிஸ்டர் பார்ட்டன் ஆஜரானர்.

கிரவுன் பிராஸிக்கியூட்டர் கேசின் வரலாற்றை ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னபிறகு அன்று கோர்ட்டு கலைந்து போயிற்று.

---

### 5-11-1915.

5-ம் நாள் வெள்ளிக்கிழமை.

ஜூரர்கள் அபிப்பிராயம்:—ஜூரர்கள் நீண்டநாழிகை யோசனை செய்து குற்றவாளி குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்து அபிப்பிராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளிக்கு இரண்டு வருடம் கடினகாவல் தண்டனை விதித்தார்கள்.



குற்றவாளிக்கி தண்டனை விதிக்கப்பட்டவுடன் திருவல்லிக்கேணி கோவாப்பரேட்டிவ் அர்பன் சொசைட்டிகேஸ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தக் கேஸ் விசாரணை செய்யப்பட்டு வரும்போது அன்றையத்தினத்திற்குக் கோர்ட்டு கலைந்துபோய்விட்டது.

---

### 8-11-1915.

6-ம் நாள் திங்கட்கிழமை.

### THE PERMANENT INVESTMENT SOCIETY CASE.

### பெர்மனன்ட் இன்வெஸ்ட்மெண்டு சொசைட்டி கேஸ்.

கோர்ட்டு இன்று கூடினவுடன் பெர்மனன்ட் இன்வெஸ்ட்மெண்டு சொசையட்டி கேசில் சம்பந்தப்பட்ட இரண்டாவது குற்றவாளியாகிய சேவியல் பிள்ளையை அப்ரூவராக எடுத்துக்கொள்ளும்படியாக கிரவுன் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் J C ஆடம் கோர்ட்டாரைஅனுமதிகேட்டார். கோர்ட்டார் அனுமதி கொடுத்து குற்றவாளிக்கி மன்னிப்புக் கொடுக்கும்படியாக குற்றவாளியையும் இந்தக் கேசின் தஸ்தாவேஜுகளையும் மாஜிஸ்டிரேட்டினிடம் அனுப்பிவைக்கும்படியாக உத்தரவு செய்தார்கள்.

---

### FORGERY BY A CLERK.

### குமஸ்தாவால் நடத்தப்பட்ட போர்ஜரி.

திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேட்டிவ் சங்கத்தின் ஏஜண்டாயிருந்த என். குப்புசாமி அய்யங்கார் ரசீதில் போர்ஜரி செய்து ரூபா 100 யை, சங்கத்திலிருந்துபெற்றுக்கொண்டிருப்பதாகவும் அப்படி போர்ஜரி செய்யப்பட்ட தஸ்தாவேஜை உண்மையான தஸ்தாவேசுபோல உபயோகப்படுத்தினதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்.

ஜூரர்கள்:—மெஸர்ஸ் R M ஜேம்ஸ், (போர்மன்) J V போர்கிரேட் G J வுல்லியம்சன், J ஹேவுட், C M தம்புசாமி C பாஸ்கராராவ், D R நம்மாள்வார் செட்டி, W D ஸ்மித்' D G W இன்ஸ்.

லாயர்கள்:—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் J C ஆடமும், குற்றவாளிக்கி ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் V விஸ்வநாத சாஸ்திரியும் ஆஜரானர்கள்.

கேசின் வரலாறு :—குற்றவாளி திருவல்லிக்கேணி கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கில் கணக்கப்பிள்ளை உத்தியோகத்தி லிருந்தார். இந்த உத்தியோக முறையில் சங்கத்தில் பணம் போடுகிறவர்களுடைய பணத்தையும் சாமான்களின் விற்பனையால் வருலான பணத்தையும் வாங்கி பிரதி தினமும் எட் ஆபீசுக்கு அனுப்பிக்கொண்டு வரவேண்டும். இந்த சொசைட்டியில் சீட்டு பண்டிற்காகப் பணம் கட்டுகிறவர்களுக்குள் ஆர். எஸ். குப்புசாமி அய்யங்கார் என்று பெயர் கொண்டவர் இருந்தார், இந்த ஆர். எஸ். குப்புசாமி அய்யங்கார் சொசைட்டியில் கட்டியிருந்த பணத்தில் ரூபா 100 தமக்குத் தேவையாக விருக்கிறதென்று கேட்டதுபோல ( With drawal Form ) என்று சொல்லும்படியான அச்சிட்ட பாரத்தில் குற்றவாளி அவருடைய கையெழுத்துபோல போர்ஜரி செய்து அதை ஆபீசில் காண்பிக்க ரூபா 100 மிஸ்டர் ஆர். எஸ். குப்புசாமி அய்யங்காருக்கு கொடுக்கப்படும்படியாக உத்திரவு செய்யப்பபட்டது. குற்றவாளி அந்தப் பணத்தை சொநத உபயோகப் படித்திக்கொண்டான். சமாசாரம் வெளிவந்த வுடன் குற்றவாளி ஓடிப்போய்விட்டான். கடைசியில் காஞ்சிபுரத்தில் அகப்பட்டான் எள்று கிரவுன் பிராசிக்கியூட்டர் மிஸ்டா J C ஆடம் ஜூரர்களுக்கு எடுத்துச் சொன்னர்.

கேசின் விசாரணை:—பிராசிக்கியூஷன் தாப்பில் மிஸ்டர் ஆர். எஸ். குப்புசாமி அய்யங்கரா: மிஸ்டர் சுப்பிரமணிய அய்யரும் சாக்ஷி விசாரணை செய்யப்பட்டார்கள்.

ஜூரர்களின் அபிப்பிராயம் :—ஜூரர்கள் எழுந்திருந்து ஆலோசனை அரைக்குக்கூட செல்லாமல் இருந்த விடத்திலிருந்தபடியே குற்றவாளி போர்ஜரிசெய்திருக்கிறான் என்று 8 பேர்களும் போர்ஜரி குற்றத்தைச் செய்யவில்லை என்று ஒருவரும குற்றவாளி நம்பிக்கை மோசக் குற்றத்தையும் மற்ற குற்றங்களையும் செய்திருக்கிறான் என்றும் ஜூரர்கள் ஏகோபித்த அபிப்பிராயமும் கூறினர்கள்.

தீர்ப்பு:—குற்றவாளி ஒரு பலமான பெரிய குற்றத்தைச் செய்திருபபதாக ஜூரர்கள் தீர்மானித் திருக்கிறார்கள். அவன்பேரில் நம்பிக்கைவைத்துப் பணம்ஒப்புவிக்கப்பட்டது. அந்த நம்பிக்கையை குற்றவாளி துர்வினியோகப் படுத்தியதில் அவனுடைய எஜமான்களை மோசம் செய்திருக்கிறான் என்று கோர்ட்டார் சொல்லி குற்றவாளிக்கி மூன்றுவருட கடினகாவல்தண்டனையும் ரூபா 200 அபராதமும் அபராதம் கட்டத் தவறினல் இன்னும் 6 மாத கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

கிரவுன் பிராசிக்கியூட்டர் இன்னும் இம்மாதிரியான இரண்டுகேஸ்கள் குற்றவாளியின்பேரிலிருப்பதாகவும் அதைத் தாம் வாப்பிஸ் வாங்கிகொள்ளத் தயாரா யிருப்பதாகவும் கோர்ட்டாருக்கு அறிவித்துக்கொண்டார். அந்த இரண்டு கேஸ்களிலும் குற்றவாளியைக் கோர்ட்டார் விடுவித்து விட்டார்கள்.

---

### 11-11-1915.

9 ம் நாள் வியாழக்கிழமை.

மேற்படி பெர்மனன்ட் இன்வெஸ்ட்மெண்டுசொசைட்டி கேசில் சம்பந்தப்பட்டிருக்கும் (1) முருகேச செட்டியார் ,(2) சேவியல்பிள்ளை ஆகிய இரண்டு குற்றவாளிகளுக்குள் சேவியல் பிள்ளை அப்புரூவராக எடுத்துக்கொள்ளப்பட்டான்என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் முருகேசன் செட்டி மட்டிலும் விசாரணை செய்யப்பட்டான். இவன் பேரில் பண்டு கணக்குப் புஸ்தகங்களில் புறட்டான பதிவுகள் செய்ய உடந்தையாயிருந்த மூன்று குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன.

ஜூரர்கள்:—மிஸ்டர் C L கார்டரயிட் (போர்மன்) மெஸர்ஸ் S D க்ஷுராப், D சேஷாச்சார்லு, H M டான், E R புருட் ஹேராம், சர் ஆர்தர் ஸ்காட், J F பாசட், C கோபாலமீனன், S E ரெங்கநாதம்.

லாயர்கள்:—கவர்ன்மெண்டுதரப்பிற்காக கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட வக்கீல் ராவ் சாகேப் வெங்கட்ட

---

N. B.—7 ம் நாளும், 8 ம் நாளும், அதாவது 9:11-1915 -லும், 10-11-1915 லும் திருவல்லிக்கேணி அர்பன் கோவாபரேட்டிவ் பாங்கிக்கேஸ் விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

ராமய்யா உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடமும், குற்றவாளி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாசும் ஆஜரானார்கள்.

கேசின் வரலாறு:—சென்னைப் பட்டணம் ஜியார்ஜ் டவுனில் பெர்மனன்ட் இன்வெஸ்ட்மெண்டு சேவிங் நிதி என்று பெயர்கொண்ட பண்டு ஆபீசு ஒன்றிருக்கிறது. இது 1883 ம் வருட்த்தில் ஸ்தாபிக்கப்பட்டது. குற்றவாளி இந்த நிதியில் ரூபா 2 ஆயிரம் ஜாமீன் கட்டி காஷ்கீப்பர் உத்தியோகத்திலிருந்தான். இதன் பிறகு அவன் பண்டாபீசுக்கு செக்கரட்டரியாக நியமிக்கப்பட்டான். இந்த உத்தியோகமுறையில் பண்டு ஆபீசின் கணக்குப் புஸ்தகங்களும் பணங்களும் குற்றவாளியிடம் ஒப்புவிக்கப்பட்டன. 30-4-1915 இரவில் ரூபாய் 30 ஆயிரம் பொருமானமுள்ள நகைகளும் ரொக்கமும் திருட்டுப்போய்விட்டதாக மேற்படி பண்டின் டைரக்ட்டர்களுக்கு ரிப்போர்ட் செய்தான். மிஸ்டர் டன்ஹில் ஒரு டைரக்டர். இவர் உடனே அந்தபண்டாபீசைப்போய் பார்வையிட்டதில் ரொக்கமும் நகைகளும்வைக்கப்பட்டிருந்த(Iron Safe) என்று சொல்லப்படும்படியான இரும்புப்பெட்டி திருடர்களால் உடைக்கப்பட்டிருப்பதற்கு சின்னங்கள் தோன்றாதபடியால், சந்தேகங்கொண்டு போலீசாரிடம் ரிப்போர்ட் செய்தார். அவர்களுடைய விசாரணையின் பயனாக குற்றவாளி கைதி செய்யப்பட்டான். பண்டு கணக்குகள் பப்ளிக் அக்கவுண்ட்டன்ட்டால் பரிசோதனை செய்யப்பட்டு ஒரு தடவை ரூபா 400, மற்றொரு தடவை ரூபா 500, இன்னுமொரு தடவை ரூபா 50. இப்படியாக பொய் பதிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது. அப்பூருவர் எழுதிவைத்திருக்கும் வாக்குமூலத்தைக் கொண்டு குற்றதாளி நீண்டகாலமாக பண்டாபீசில் அடமானம் வைக்கப்பட்டிருந்த நகைகளை தன்னுடைய சிநேகிதர்களிடம் கொடுத்து இதே பண்டாபீசில் அடமானம் வைக்கும்படிசெய்து அப்படி அந்த சிநேகிதர்கள் வாங்கிய பணத்தை தான் பெற்று உபயோகப்படுத்தி தனக்குப் பொருள் சேகரித்துக்கொண்டு வந்திருக்கிறான் என்று தெரியவருகிறது. இந்தப் பிரகாரம் கேசின் வரலாறு பப்ளிக் பிராசிக்கியூட்டர் மிஸ்டர் ஆடமால் ஜூரர்களுக்கு எடுத்து உரைக்கப்பட்டது.

கேசின் நடவடிக்கை:—ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் கிளர்க் மிஸ்டர் வைத்யநாதய்யரும், பப்ளிக் அக்கவுண்டன்ட் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யங்காரும் டைரக்ட்டர் மிஸ்டர் டன்ஹில்லும் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளாக விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளியின் பேரில் சாட்டப்பட்டிருந்த மூன்று குற்றங்களையும் குற்றவாளி செய்திருக்கிறான் என்று ஜூரர்கள் ஏகோபித்து அபிப்ராயம் கூறினார்கள்.

தீர்ப்பு:—குற்றவாளி நீண்ட காலமாக அவனுடைய எஜமான்களை மோசம்செய்து வந்திருக்கிறான் என்று கோர்ட்டார் சொல்லி அவனுக்கு 5 வருட கடினகாவல் தண்டனையும் ரூபா 2000 ம் அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் இன்னும் 6 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள்.

இத்துடன் செஷன் விசாரணை முடிந்துபோய்விட்டது.

---

## RULINGS ON CRIMINAL ENACTMENTS.

## கிரிமினல் சட்டங்கள் பேரில் ஜாரிசெய்யப்பட்ட தீர்ப்புகள்.

---

கிரிமினல் புரோசிஜர் கோட்.

### JURY VERDICT.

### ஜூரீ அபிப்பிராயம்.

ஜூரியினுடைய அபிப்பிராயம் சந்தேகமானதாயும் அல்லது அரை குறையுமானதாக விருந்தால் ஜட்ஜி அதைப்பற்றி கேள்வி கேட்கப் பாத்தியமுடையவர் என்றும் ஜூரியினுடைய அபிப்பிராயம் சந்தேக மற்றதாயும் விபரமானதாகவு மிருந்தால ஜட்ஜி ஜூரியைக கேள்விகேட்கக் கூடாதென்றும் ஜட்ஜி மிஸ்டர் பென்சன், ஜட்ஜி மிஸ்டர் ஏயிலிங் கூடிய கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது I. L. R. 36 Mad 585.

---

### DIFFERENCE BETWEEN JUDGE AND JURY.

### ஜட்ஜிக்கும் ஜூரிக்கும் வித்தியாசம்.

ஜட்ஜிக்கும் ஜூரிக்கும் அபிப்பிராய பேதமுண்டாகி கி.பு. கோ 304 பிரிவின்படி கேஸ் ஐகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டால் அவர்கள் முழுக்கேசையும் பரிசீலனை செய்வதுமல்லாமல் ஜூரியால் எந்தக் குற்றம் சம்பந்தப்பட்டவரையில் குற்றவாளி நிரபராதிஎன்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்களோ அந்தக் குற்றம்உள்பட எல்லா குற்றங்கள் சம்பந்தமாக வுள்ள சாக்ஷியங்களையும் பரிசீலனை செய்துபாாக்க வேண்டுமென்று மேற்படிகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது. I. L. R. 36 Mad 585

ஜூரியினுடைய அபிப்பிராயம் பிசகு என்று வெளிப்படையாகத்தெரியும்போது மட்டிலும் ஜட்ஜி கி. பு. கோ 3 7-வது பிரிவின்படிகேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பவேண்டுமேயொழிய சந்தேகப்பட்ட ஒவ்வொரு கேசையுமாவது அல்லது இருதரப்பாரும் அபிப்பிராயத்தில் பேதப்பட்ட ஒவ்வொரு கேசையுமாவது ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பக்கூடாது. ஜட்ஜி ஜூரியினுடைய அபிப்பிராயத்திலிருந்து பேதப்பட்டு கேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பவேண்டுமென்று எண்ணும்போது, ஜூரியினுடைய அபிப்பிராயத்திற்கு காரணங்கள் சொல்லும்படியாக ஜூரியைக் கேட்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.—19-C. L. J. 5o.

கி. பு. கோ. 307-வது பிரிவின்படி ஒரு கேஸ் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டால், அவர்கள் ஜட்ஜ் ஜூரி ஆகிய இருதரப்பாருடைய அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் ஆனால் ஜூரி ஏகோபித்துக்கூறிய அபிப்பிராயத்தை ஜட்ஜி ஏற்றுக்கொண்டிருக்கும் கேஸ்களில் ஜட்ஜி கேசின் சாரம்சத்தை ஜூரிக்கிச் சரியானபடி எடுத்துச் சொல்லாமலிருந்து அதை முன்னிட்டு நியாயமாவது உண்டாயிருந்தபோதிலும் ஐக்கோர்ட்டார் அந்தக் கேசில் பிரவேசிக்கக் கூடாது. ஜட்ஜ் கேசின் சாரம்சத்தை ஜூரிக்கு எடுத்துச் சொன்ன அம்சத்தில் ஏதேனும் தவறுதல் உண்டாயிருந்தால் லோக்கல் கவர்ன்மெண்டாருடைய அப்பீலின் பேரில் ஐக்கோர்ட்டார் அந்தப் பிசகைப்பற்றி கவனிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.— 22 I. C. 731.

---

### MUKTHAYAR.

### முக்தியார்.

கி. பு. கோ. 4-வது பிரிவு R. கிளாசின்படி ஒரு குற்றவாளி தன்னுடைய தரப்பில் பேச கோர்ட்டாருடைய சம்மதத்தைப்பெற்று ஒரு முக்த்தியாரையாவது அல்லது வேறேயாரையாவது நியமிக்கலாம். மாஜிஸ்டிரேட் சம்மதம் கொடுக்க மறுதலித்துவிட்டால் முக்த்தியாராவது அல்லது அந்த வேறொருவனாவது மாஜிஸ்டிரேட்டினுடையநடவடிக்கைகளைப் பரிசீலனை செய்ய அப்பீல் செய்துகொள்ளக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.—3 Cr. L. R. 131.

---

### POLICE LOCK-UP.

### டாணா.

குற்றவாளி டாணாவில் தண்டனை காலத்தைச் செலுத்திவர வேண்டுமென்று மாஜிஸ்டிரேட் செய்யும் உத்திரவு, சட்டவிரோதமான உத்திரவு. ஏனென்றால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி வாரண்டினுடன் ஜெயிலுக்கு அனுப்பப்பட வேண்டும். போலிஸ்டாணா ஜெயிலாக எண்ணப்படவேண்டுமென்று கி. பு. கோ. 541 - வதுபிரிவின்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருந்தாலொழிய போலிஸ்டாணா ஜெயிலாகமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. 22 I. C. 154.

---

### JUDGE'S SUMMING UP.

### ஜட்ஜி கேசின் சாராம்சத்தைச் சொல்லுவது.

பிராசிக்கியூஷன் சாக்ஷிகள் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடித்துச் சொல்லாமலிருந்தபோது குற்றவாளிகள் எல்லாம் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஜட்ஜி ஜூரிகளுக்குச் சொல்லி யிருந்தால் பிசகாகச் சொல்லியிருக்கிறார் என்று எண்ணப்படவேண்டும. இப்படி ஜட்ஜி ஜூரர்களுக்கு பிசகாக கேசின் சாராம்சத்தை எடுத்துச் சொன்ன கேஸ்களிலும் அரைகுறையாக எடுத்துச்சொன்ன கேஸ்களிலும் கேஸ் புனர் விசாரணை செய்யப்படும்படியாக ஐக்கோர்ட்டாரால் உத்திரவு செய்யப்படவேண்டும். 3 Cr L. R. 41.

---

### MAINTENANCE.

### ஜீவனாம்சம்.

தாயாருடைய நிலைமை எப்படியிருந்தபோதிலும் தகப்பன் குழந்தைக்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கட்டுப்பட்டவன் என்று தீர்மானிக்கப்பட்டது.—3 Cr L. R. 138.

---

### THE INDIAN EVIDENCE ACT.

### இந்தியா சாட்க்ஷிச் சட்டம்.

ஒரு சாக்ஷியின் வாக்கு மூலத்தில் ஒரு பாகம் நம்பப்படக்கூடாததாக விருப்பதை முன்னிட்டு முழு வாக்கு மூலத்தையும் தள்ளுபடி செய்யப்படக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. 22 I.C. 724

---

### THE INDIAN PENAL CODE.

### இந்தியன் பினல் கோட்.

---

#### Kidnapping.

#### நரச்சோரம்.

இ. பி. கோ. 365-வது பிரிவின்படி ஒருவன் பேரில் நரச்சோரக் குற்றம் ஸ்தாபனை செய்யவேண்டுமானால், குற்றவாளி, நரச்சோரம் செய்யும்போது நரச்சோரம் செய்யப்பட்ட பெண்ணை ரகசியமாகவும் அனியாயமாகவும் அடைத்து வைக்க எண்ணங்கொண்டிருந்தான் என்று ருஜுப்படுத்தப்படவேண்டும். 3 Cr. L. R. I6.

---

### HINDU LAW.

### ஹிந்து லா.

#### Exclusion from Inheretance.

#### வார்சுபாத்தியதையிலிருந்து விலக்கப்படுவதுகள்.

1. ஒருவனுக்கு ஐஸ்வரியம் உண்டாயிருந்தால் அது மத சம்பந்தமான ஹோமம், யாகம், ஸ்ரார்த்த முதலிய காரியங்களைச் செய்து முடிப்பதற்காகக் கடவுளால் அவனுக்கு அனுக்கிரகிக்கப்பட்டிருக்கிறதென்பது ஆதி கால பிராமணர்களுடைய சித்தாந்தம் அந்த ஐஸ்வரிய முடையவன் இறந்து போனால் அந்த ஐஸ்வரிய இறந்துபோனவனை நரகாவஸ்தையிலிருந்து நீக்கி வைப்பதற்காக

ஸ்ரார்த்த முதலிய மத சம்பந்தமான காரியங்களைச் செய்வதில் நேரிடும் செலவுகளுக்காக இறந்துபோனவனுடைய வார்சுக்கு வந்து சேருகிறதென்பதும் ஆதிகால பிராமணர்களுடைய சித்தாந்தம். ஆகையால் இந்த சிரார்த்தம், ஹோமம், யாகம் முதலிய காரியங்களைச் செய்ய அறுகற்றவன் அல்லது விருப்ப மற்றவன் அந்த ஐஸ்வரியத்தை வார்சு முறையில் அடைய யோக்கியதை யற்றவன் என்று எண்ணப்படுகிறது. பிதாவை நரகத்திலிருந்து நீக்கி வைக்காத புத்திரன், பால் கொடுக்காத மலட்டுப் பசுவிற்கு ஒப்பிட்டு விருகஸ்பத்தியால் (Vrihaspathi) ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பேர்பட்ட புத்திரன் பிதாவினுடைய சொத்திற்குப் பாத்தியம் பாராட்டக் கூடாது. புத்திரன் இப்படி அருகற்றவனா யிருந்தால் இறந்துபோன பிதாவினுடைய ஐஸ்வரியம அவனை நரகாவஸ்தையிலிருந்து விலக்கிவிடும் பொருட்டு சிரார்த்தம், ஹோமம் முதலியவைகளை நடத்தி அவிர்ப்பாகம் அல்லது பிண்டம் கொடுக்கக்கூடிய வைதீக சாஸ்திரீகளுக்குச் சேரவேண்டும் என்று எண்ணப்பட்டு வந்தது. அது காரணம்பற்றி பிறவிக் குருடனும், செவிடனும், பிறவி ஊமையனும், பிரவி மூடனும் வார்சாகவரும் பாத்தியதையிலிருந்து விலகப்பட்டவர்களாக எண்ணப்பட்டு வந்ததுமல்லாமல் தீராநோய் கொண்டவனும், பயித்தியம் கொண்டவனும், பலமான காரியங்களைச் செய்ய இயல்பற்றவனும், போக்கிரிகளும், பரிசுத்தமான ஞானம், தைரியம், தொழில், பக்தி, தருமம் புராதின வழக்கங்களை அனுஷ்டிக்கும் இயல்பு, ஆகிய இந்த குணாதிசயங்கள் அற்றவர்கள் ஆகிய இவர்களும் வார்ஸாகவரும் பாத்திதையிலிருந்து விலகப்பட்டவர்களாக எண்ணப்பட்டு வந்தார்கள்.

இவர்களைப்போலவே ஜாதி பிரஷ்டை செய்யப்பட்டவர்களும் வார்சு பாத்திதை யற்றவர்களாக எண்ணப்பட்டு வந்தார்கள் ஆனால் பால்யச் செய்கையால் செய்கிறவர்கள் வார்சுபாத்திதை யற்றவர்கள் அல்லஎன்று எண்ணப்பட்டபோதிலும் பாவங்களுக்குச் சாந்தி அல்லதுபிராயச்சித்தம்செய்யப்பட்டால் அவைகள் நீங்கிப்போய் விடுகின்றனஎன்று நினைக்கப்பட்டு வந்ததை முன்னிட்டு சாந்தி அல்லது பிராயச்சித்தம் செய்தவர்கள் பாவத்தினின்று நீங்கினவர்களாக தீர்மானிக்கப்பட்டு வார்சு பாத்திதைகள் கொடுக்கப்பட்டு வந்தன. ஆகவே முடிவில் நபும்சகத் தன்மை உடையவர்களும், ஜாதிபிரஷ்டர்களும், பிறவிக்குருடன், பிறவி ஊமை, பிறவி செவிடன், அங்கயீனமுடையவன்—ஆகிய இவர்கள் வார்சு பாத்திதையிலிருந்து விலக்கப்பட்டவர்களாக [illegible] எண்ணப்பட்டு வருகிறது. [illegible]

மிருதியில் சொஸ்தப் படுத்தப்படக் கூடாத நோய்கொண்டவனும் வார்ஸாகவரபாத்தியமற்றவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி ரணங்கொண்டு ஊன்நீர் வடிந்துகொண்டிருக்கும்படியான தீரா குஷ்டரோகத்தை உடையவன் வார்சு பாத்தியதை யற்றவன என்று இப்போது இந்தியாவில் ஐக்கோர்ட்டார்களால் தீர்ப்புகள் ஜாரி செய்யப்பட்டு வருகின்றன.

2. ஆனால் ஜாதி பிரஷ்டம் செய்யப்பட்டவர்களுடைய வார்சு பாத்திதை, 1850-ம் வருடத்திய 21-வது ஆக்ட் பாஸ் செய்விக்கப்பட்ட பிறகு, ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு உதாரணமாக இ. லா. ரி. 25 அல. 546-ம் (25 All. 546) ரிப்போர்ட்டில் செய்யப்பட்டிருக்கிற ஒரு கேசை இவ்விடத்தில் எடுத்துக் கூறுகின்றோம் :—ரத்ன சிங்கும் அவனுடைய குமாரனாகிய டவுலட் சிங்கும் 1845-ம் வருடம்வரையில் சேர்ந்த ஹிந்துகுடும்பத்தின் மெம்பர்களாகவசித்துவந்தார்கள். அப்போது ரத்னசிங்கு முகமதிய மதத்தில் சேர்ந்து கொண்டான். டவுலட் 1851-ல் இறந்து போகும் பரியந்தம் எஸ்டேட்டுகள் ; இருவராலும் சேர்ந்து அனுபவிக்கப்பட்டு மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வந்தன. டவுலட் இறந்துபோன சில மாதங்கள் சென்ற பிறகு அவனுடைய பிதாவும் இறந்து போய்விட்டான். டவுலட்டிற்கு ஒரு விதவையும் புத்திரியுமிருந்தார்கள். ரத்ன சிங்கிற்கு ஒரு விதவையும் புத்திரி மூலியமானக் கைராத்தி (Kairathi) என்று பெயர் கொண்ட பேரனும் இருந்தாகள். ரத்ன சிங்கினுடைய விதவையும் டவுலட்டினுடைய விதவையும்—ஆகிய இரு விதவைகளும் இறந்து போன பின்பு எஸ்டேட் யாருக்குச் சொந்த மென்பதைப்பற்றி கைராத்திக்கும் டவுலட் புத்திரிகளுக்கும் வாதமுண்டானது. கைராத்தி எஸ்டேட் தனக்கு சேரவேண்டுமென்று கக்ஷி சொன்னான். டவுலட் புத்திரிகள் தங்களுக்குச் சேரவெண்டுமென்று கக்ஷி சொன்னார்கள். ஆயினும் சிலபேர்கூடி இவர்களை சமாதானப்படுத்தி வைத்தார்கள்- அதன்பேரில் இருதரப்பாரும் ஒரு ராஜி உடன்படிக்கை செய்துகொண்டார்கள். மூழு எஸ்டேட்டில் பாதிக்குமேல் டவுலட்டின் புத்திரிகளுக்குக் கொடுக்கப்பட்டது. டவுலட்டினுடைய இரு புத்திரிகளில் ஒருவள் தன்னுடைய பாகத்தைப் பாராதீனம் செய்தாள். அதனின்று ஒரு வியாஜ்ஜியமுண்டானது அந்த வியாஜ்ஜியத்தில் ஒரு பிரஸ்னை உண்டானது அதாவதென்னவென்றால் அந்த புத்திரிக்கு அவளுடைய பாகத்திலிருக்கும் பாத்திதை அடமானம் விற்பனை முதலிய பாராதீனங்கள் செய்யும்படியான பாத்திதைஉள்ள சர்வ சுதந்திர பாத்திதையா அல்லது அவள் ஆயுள் உள்ளபரியந்தம் மட்டிலும் அனுபவிக்கும்படியானபாத்திதையா என்பதே. எஸ்டேட்டிற்குப் புத்திரிகளுக்குள்ள பாத்திதை மேற்படி சமாதான உடன்படிக்கை பிறந்தகாலமுதல் உண்டாயிருக்கிறபடியால் 1845-ம்வருடத்தில் ரத்னசிங் முகமதிய மதத்தில் சேர்ந்ததால் அவன் இறந்துபோய்விட்டவனுக்கு சமானமானவனாகப் போய்விட்டானு, மூழு எஸ்டேட்டிற்கும் உடனே டவுலட் சொந்தக்காரனாகப் போய்விட்டானு—ஆகிய இந்த இரண்டு பிரஸ்னைகளும் தீர்மானிக்கப்படவேண்டிய தவசியமில்லை. ஆயினும் கோர்ட்டார் மட்டிலும் முகமதிய மதத்தில் சேர்ந்துகொண்ட ரத்னசிங் இறந்துபோனவனாக எண்ணப்படவேண்டுமென்றும் முழு எஸ்டேட்டும் டவுலட்டுக்குச் சேர்ந்து போய்விட்டதென்று தீர்மானிக்கப்படவேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தார்கள். 1850-ம் வருஷத்திற்குப் பிறகுகூட, ஹிந்து லாப் பிரகாரம் எஸ்டேட்டைச்சேர்ந்து அநுபவிக்க ரத்ன சிங்குக்கு இருந்த பாத்திதை அவன் முகம்மதிய மதத்தில் சேர்ந்துகொண்டதை முன்னிட்டு முற்றுப் பெற்றுப் போய்விட்டதென்று தீர்மானித்தார்கள். ஆயினும் ரத்னசிங் முகமதிய மதத்தில் சேர்ந்து கொண்டது சட்டப்பிரகாரம்பாகப்பிரிவினை செய்துகொண்டதற்குச்சமமாய் போய்விட்டதென்றும் ஆதலால் பாதிஎஸ்டேட் டவுலட்டிற்குவந்துசேர்ந்திருக்கிறதென்றும் மேலே சொல்லப்பட்ட சமாதான உடன்படிக்கை புத்திரிகளை டவுலட்டின்புத்திரிகளாக பாவித்து அவர்களுடையபாத்திதைகளை ஒப்புக்கொண்டிருக்கிறதென்றும் ஆதலால் டவுலட்டின் புத்திரிகளுக்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டபாகங்களில் உண்டாயிருக்கும் பாத்திதை, விற்பனை அடமான முதலிய பாராதீனங்கள் செய்யக்கூடிய பாத்திதை யல்லவென்றும் ஆனல் ஆயுசுள்ளபரியந்தரம் அனுபவிக்குப்படியான பாத்தியம் என்றும் தீர்மானித்தார்கள்.

---

## COURT NEWS.

## கோர்ட்டு சமாச்சாரம்.

---

### ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் F. B. டையாப்ஜி.

சென்னை ஐக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகவிருந்து வரும் ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் அப்தல் ரகிம் ராயல் கமிஷனில் மெம்பராக நியமிக்கப்பட்டபோது அவர்களுக்குபதிலாக ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி ஆக்டிங் ஜட்ஜியாகநியமிக்கப்பட்டு 2-1-1913 ல் சென்னை ஐக்கோர்ட்டில் அவர்களுடைய உத்தியோகத்தை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் அந்த உத்தியோகத்திலிருந்த 2½ வருடகாலத்தில் சென்னையில் அனேகர்களைத் தம்முடைய சிநேகிதர்களாகச் செய்துகொண்டார்கள். மிகவும் பொருமையுடையவர். கூடியமட்டில் சரியான நியாயத்தைக் கக்ஷிக்காராகளுக்குச் செய்துவைக்கப் பிரயாசைப் படுகிறவர்கள். லாயர் வகுப்பார்களிடம் அன்பு வைத்து மறியாதையாக நடத்திக்கொண்டு வந்தார்கள். ஜட்ஜி மிஸ்டர் அப்தல்ரகிம் ராயல் கமிஷனிலிருந்து திரும்பி வந்து அவர்களுடைய உத்தியோகத்தை ஒப்புக்கொண்டவுடன் ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி இந்த ஊரைவிட்டுப்புறப்பட்டுப்போனார். அவர் புறப்படும்தினம் ஐக்கொர்டடில் வக்கீல் மிஸ்டர் T R ராமச்சந்திரய்யர் ஜட்ஜி அவர்களின் குணாதிசயங்களைப்பற்றி சிலாகித்துப்பேசி அவர்களை பிரயாணம் கூட்டி அனுப்பினார். அதற்கு ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி "எப்போதாவது நான் வக்கீல்களிடம கண்டிப்பா யிருந்திருப்பேனே யானல் கக்ஷிக்காரர்களுடைய நன்மையை உத்தேசித்து அப்படியிருந்திருக்கக் கூடும், நான் எப்போதாவது சொல்லப்படக் கூடாத கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருந்தால் அது மானிடற்கு இயற்கையான தவறுதலே யொழிய மற்றப்படி வேரல்ல. ஆதலால் அவைகள் அலக்ஷியப்படுத்தப்பட வேண்டும்" என்று பதில் சொன்னாகள்.

இவர்களிடம் காணப்பட்ட ஆச்சரியப்படும்படியான குணாதிசய மென்னவென்றால் பொருமையே ! இவர்சள் பம்பாய் ஐக்கோர்ட்டில் முந்தி ஜட்ஜியாகவிருந்து அதற்கு ஒரு திலகம்போல் விளங்கிக் கொண்டு வந்த காலஞ்சென்ற ஜட்ஜி மிஸ்டர் பட்ருடன், டையாப்ஜியினுடைய புத்திரர் என்பதை நாம் இவ்விடத்கில் எடுத்து எழுத மறந்துபோகக் கூடாது.

---

## OUR CLIENT'S PAGE.

## எங்களுடைய கக்ஷிக்காரர் பக்கம்.

1. ராமசாமிக் கவுண்டன்:—கிராம மாஜிஸ்டிரேட்டின் தண்டனைக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் தான் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னது யார் ? சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் அல்லது டிவிஷன்மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்து கொள்ளலாம்.

2. மாயவரம் பொன்னம்மாள் : —வியாஜ்ஜியம் முடிவடையும் பரியந்தரம் வியாஜ்ஜியத்தில் சம்பந்தப்பட்ட சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கக் கூடாது.

3. குன்னியூர் வெங்கடாச்சாரி:—தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. ஆனல் தாங்கள் அனுப்பி

யிருப்பதாகச் சொல்லி யிருக்கும் மணி ஆர்டர் ரூபாய் ஒன்று இன்னும் வந்து சேராததால்தாங்கள் அனுப்பி வைத்த தஸ்தாவேஜுக் கட்டு இன்னும் திறந்து பார்க்கப்படவில்லை.

4. குளித்தலை நீலாம்பாள்:—அடமானப் பத்திரத்தை வாசித்துப்பார். அடமானம் வைத்தவர்களுடைய பெயர்கள் அதில் எழுதப்பட்டிருக்கும். அவர்களுக்குள் யாரிடமாவது ஒருவரிடம் அடமானத் தொகை செலுத்தப்பட்டால் எல்லோரிடம் செலுத்தினதற்குச் சமமாகும்.

5. பாதாம்மா பீபீ:—நீர் புருஷனுடைய வீடு போய்ச் சேர்வதைத்தவிர வேறே பேச்சிகிடையாது. புருஷன் கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியத்திற்கு கட்டுபாடு செய்து பதில் சொல்லக் கூடும். அப்படிச் சொன்னால் எங்களுக்கும் தற்சமயம் லாபம் கிடைக்கும். ஆயினும் இந்திய சட்ட கெஜட்டாவது அல்லது அதைப் பதிப்பித்துக்கொண்டு வரும் கிருஷ்ணா அண்டு பிரதர்சாகிய நாங்களாவது கிரமவிரோதமான காரியங்களுக்குப் பக்கத் துணையாக விருக்கமாட்டோம்.

6. குருசாமி ரெட்டியார்:—டி. மு. க் கோர்ட்டில் வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்ட தொகை போக பாக்கித் தொகைக்கு டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டிலும் வியாஜ்ஜியம் கொண்டு வரலாம்.

7. மளிகை பெத்தபெருமாள் பிள்ளை:—தங்களுடைய தஸ்தாவேஜிகள் எங்களுடைய லாயர் கமிட்டியாரால் பார்வை யிடப்பட்டு வருகின்றன.

---

8. திருவாரூர் சுவாமிநாதப்பிள்ளை:-தாங்கள் கேட்ட மாதிரியே இன்னும் பல மிராசுதார்களும் "பண்ணையாள் கடன் பத்திரம்" எழுதும் விதம் தெரிவிக்கும்படி எழுதி இருக்கிறார்கள். சதா பழக்கத்தில் இருக்கக் கூடிய பாரம் (நமூனா) ஒன்று இங்குவரைந்திருக்கிறோம், அதாவது:—

எட்டுஅணா ஸ்டாம்பு கடிதத்தில் எழுதவேண்டியது.

(ரிஜிஸ்டர் செய்தால் உத்தமம்)

19......ஆம்........ ......மீ'.......உ...............

ஜில்லா .....................தாலூக்கா,............ ...கிராமத்தி லிருக்கும். ................ஜாதி.............ஜீவனம் ................குமாரர்.........க்கு, மேற்படி.............ஜில்லா, ..........தாலூக்கா.................கிராமத்திலிருக்கும்,..........ஜாதி..........ஜீவனம்.............மகன்,.................எழுதிக்கொடுத்த பண்ணையாள் எக்ரிமெண்டு என்ன வென்றால்:—

நான் நாளது தேதியில் என்னுடைய (இன்னா) செலவிற்காக ரூபா...........ம், நெல்லு கலம் ....க்கு கூடிய கிரயம் ரூபா ....ம், இந்த ஸ்டாம்பு கடிதம் கிரயம் அணா 8 ம், ஆக ரூபா (எழுத்தால் எழுதுக) நான் பெற்றுக்கொண்டபடியால் நான் என் பெண் சாதி பிள்ளைகளுடன் தங்கள் மனையில வாடகையின்றி குடியிருந்துகொண்டு தங்கள் பண்ணையில் மேற்படி தொகையின் வட்டிக்கீடாக வேலைசெய்து தங்கள் பண்ணை வழக்கம்போல வரும்படிகளைப் பெற்றுக்கொண்டு வருவேனாகவும். அப்படித் தவறினால் தவறின தேதிமுதல் பணம் பூராவும் செல்லாகிற தேதிவரையில் மாதம் 1 க்கு நூத்துக்கு வட்டி விதம் சேர்த்து கொடுப்பதோடும் கூட பிரீச் ஆப் கண்டிராக்ட் ஆக்ட்படி கிரிமினல் குற்றத்திற்கும் பாத்தியப்பட்டவனாவேன்.

இந்தப்படி என் மனராசியில் சம்மதித்து எழுதிக் கொடுத்த பண்ணையாள் எக்ரிமெண்டு.

சாக்ஷிகள்.

1. ☞ இக்கு கடன் பெற்
2. றுக் கொள்ளுகிறவனின் கையெழுத்து.

மேல்படியூர் மிராசு (இன்னா) குமாரன் (இன்னார்) கையெழுத்துள்ளபட அறிவேன்.

---

## இந்திய சட்ட கெஜட்

## விளம்பரம்.

இந்த கெஜட்டிற்கு 25 கையொப்பம் சேர்த்தனுப்புவோருக்கு முதலில் பத்து ரூபாய் மணியார்டர் செய்வதோடு போகாமல், அவர்களால் சேர்க்கப்பட்ட சந்தாதாரர்கள் இந்த கெஜட்டை எத்தனை வருடம் ஆதரித்து வருகிறார்களோ அத்தனை வருடங்களுக்கும் வருடத்திற் கொருமுறை அவர்க்குச் சேரவேண்டிய கமிஷனை அனுப்பிக்கொண்டிருப்போம்.

இந்த இலாபகரமான ஏற்பாட்டைப்போல் மற்ற யாரும் செய்து கொடுக்கவில்லை. ஆதலால் வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு நண்பரும் சட்ட ஞானத்தைப் பரவச்செய்யும், இந்த கெஜட் விஷயமாக பெரு முயற்சிசெய்து சந்தாதாரர்களைச் சேர்ப்பார்களானால் பென்ஷனைப்போல் வருடந்தோரும் பொருள் வருவா யடையலாம்.

சேர்த்துக்கொடுக்க இஷ்ட முடையவர்கள் நமக்கு எழுதிக்கொண்டால் அவர்களுக்குக் கையொப்பப்போஸ்ட் கார்டுகள் அனுப்புவோம். அவைகளில் சந்தாதாரர்களின் கையெழுத்தை வாங்கித் தபால் ஸ்டாம்பு ஒட்டாமலே நமக்கு அனுப்பிவிடலாம்.

கிருஷ்ணா அண்டு பிரதர்ஸ்,
ப்ரோப்ரைட்டர்ஸ்,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.





## THE MADRAS LEGISLATIVE COUNCIL

## சென்னை சட்ட நிருபண சபை.

---

சென்னை சட்டநிருபண சபையின் ஆனரபில் மெம்பர்கள் நவம்பர்மீ 23ந்தேதிசெவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு இந்நகர் செயின்ட் ஜியார்ஜ் கோட்டைக்குள்ளிருக்கும் கவுன்சில் சேம்பரில் கூடினார்கள். அடியிற்கண்ட ஆனரபில் மெம்பர்கள் விஜயம் செய்திருந்தார்கள். சபையின் வைஸ் பிரசிடெண்டாக விருக்கும் ஆனரபில் சர். ஹாரோல்ட் ஸ்டியூவர்ட் சேர்மனா விருந்தார்கள்:—மேன்மை தங்கிய கவர்னர், ஆனரபில் மிஸ்டர் ஜே. பி. பெட்போர்ட், ஆனரபில் சர் பி. எஸ். சிவசாமி அய்யர், ஆனரபில் கர்னல் W. M. எல்லிஸ், ஆனரபில்மிஸ்டர் S. B. மர்ரே, ஆனரபில் மிஸ்டர் J. H. ஸ்டோன் ஆனரபில் மிஸ்டர் B. V. நரசிம்மய்யர் ஆனரபில் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ் பந்தலு, ஆனரபில் ராவ்பகதூர் B. நரசிம்மேஸ்வர சர்மா, ஆனரபில் திவான்பகதூர் L. D. ஸ்வாமிக் கண்ணுப்பிள்ளை, ஆனரபில் மிஸ்டர் A. மீயூர்ஹெட். ஆனரபில் சர் ஹியூஜ்பிரேசர் ஆனரபில் E. F. பார்பர் ஆனரபில் டாக்டர் T. M. நாயர், ஆனரபில் மிஸ்டர் குமாரன் குமன் கவலப்பார முப்பில் நாயர், ஆனரபில் ராவ் பகதூர் எ. சுப்பராயலு ரெட்டியார், ஆனரபில் மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார், ஆனரபில் மிஸ்டர் எ. டி. ஜி. அகமட் தம்பி மரக்காயர், ஆனரபில் கேஷயிப்-ஆல் ஆபிடின் சாகேப்பகதூர் ஆனரபில் மிஸ்டர் கே. ஆர். வி. கிருஷ்ணராவ் பந்தலு, (பொல்லாவரம் ஜமின்தார்) ஆனரபில் ரெவரெண்டு ஜி. பிட்டன்டிரிச், ஆனரபில் மிஸ்டர் சி. வி. எஸ். நரசிம்மராஜா, ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். சீனிவாச சாஸ்திரி ஆனரபில் மிஸ்டர் பி. சி. சோமசுந்திர செட்டியார், ஆனரபில் மிஸ்டர் கே. பி. ராமன் மீனன், ஆனரபில் மிஸ்டர் டி. ரிச்மண்ட், ஆனரபில் மிஸ்டர் கே. ரமய்யங்கார, ஆனரபில் ராவ்பகதூர் பி. கேசவப்பிள்ளை, ஆனரபில் ராவ்பகதூர் எம். ராமசந்திரராவ் பந்தலு, ஆனரபில் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார், ஆனரபில் சர்ஜன் ஜெனரல் W. B. பானர்மான், ஆனரபில் மிஸ்டர் சி. ஆர். எம். ஸ்மிட், ஆனரபில் மிஸ்டர் எச். எஸ். பிராடி, ஆனரபில் மிஸ்டர் எச். எப். டப்ளியூ. ஜில்மான். ஆனரபில் மிஸ்டர் எல். இ. பக்லி, ஆனரபில் மிஸ்டர் ஆர். பி. கிளக், ஆனரபில் மிஸ்டர் சி. ஜி. டாட்டன்டடீர், ஆனரபில் மிஸ்டர் எஸ். டீ. லிடுசன். ஆனரபில் மிஸ்டர் எ. யட்டர் வொர்த். ஆனரபில் மிஸ்டர் எ. ஜி. கார்டியூ.

ஜனப்பிரதினிதி ஆனரபில் மெம்பர்கள் கவர்ன்மெண்டாரை ஏறக்குறைய 200-கேள்விகள் கேட்டார்கள் அவற்றுள் சில முக்கிய கேள்விகளையும் அவைகளுக்குக் கவர்ன்மெண்டு மெம்பர்கள் கூறிய ஜவாப்புகளையும் இவ்விடத்தில் பிரசுரித்திருக்கின்றோம்:—

---

## INTERPELLATIONS AND ANSWERS.

## கேள்விகளும் ஜவாப்புகளும்.

---

### ஆனரபில் மிஸ்டர் A. T. G. M. அகமத்தம்பி மரக்காயர்.

1. கேள்வி:—இந்தராஜதானியிலுள்ள முஸ்லிம்டிஸ்டிரிக்ட் முனிசிப்புகளுக்குள் எத்தனை பேர்கள் சப் ஜட்ஜி உத்தியோகத்திற்கு லாயக்குடையவர்களாக விருக்கிறார்கள் இந்த ராஜதானியில் முகமதிய சப்ஜட்ஜி எவரும் இல்லாதபடியால் ஒருவரையாவது முகமதிய சப்ஜட்ஜியாக நியமிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜவாப்பு:—இப்போது ஒரு முகம்மதிய டி. மு. ஆக்டிங் சப்ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2. கே:—21-4-1915ல் சில ஹிந்துக்கள் உத்தமபாளையத்தில் அவர்களுடைய கடவுளை ஊர்கோலம் விட்டுக்கொண்டுபோய் பள்ளிவாசலுக்கு எதிரில் ஆடுபலி கொடுத்து சில முகமதியர்களை அடித்தும் சில முகமதியர்களை கொன்றுவிட்டதும்வாஸ்தவமா? வாஸ்தவமாகவிருந்தால் கவர்ன்மெண்டார் அது விஷயமாக என்ன நடவடிக்கை நடத்தியிருக்கிறார்கள்?

ஜவாப்பு:—சில ஹிந்துக்களுக்கும் சில முகமதியர்களுக்கும் கலகம் நடந்து இரண்டுமுகமதியர்கள் கொல்லப்பட்டார்கள். அனேக ஹிந்துக்கள் காயப்பட்டார்கள். ஊர்கோலம் நிருத்தப்பட்டு கி. பு. கோ. 144-வது பிரிவின்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு அதன்பயனாக ஒரு ஹிந்துவின் பேரில் கொலை குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறான். ஆனால் அந்தகலகத்திற்குஆனரபில் மெம்பர் சொன்னது காரணம் என்று நினைக்க சாக்ஷியமில்லை.

6 கே:—ராமநாத புரத்திலிருந்து விருதுப்பட்டிக்கி இப்போட உத்தேசிக்கப்பட்டிருக்கும் இருப்புப் பாதை ராமநாதபுரம் ஜில்லா அபிராமம் கிராமத்தின் வழியாகப் போடப்படும்படியாக உத்திர

வுபிறப்பிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படு வார்களா?

ஜ:—அந்த இருப்புப்பாதை சர்வே செய்யப்பட்ட போது அபிராமகிராமத்தின்வழியாக கொண்டு போகப் படலாமென்றுதென் இந்தியாரயில்வே கம்பெனியாரால் யோஜனை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

8. கே:—தற்கொலை செய்துகொள்ளவேணுமென்கிற நோக்கத்துடன் அபின்சாப்பிட்டு நோயாயிருந்து இறந்துபோனஒருகோக்ஷாமுஸ்லிம் ஸ்திரீயின் பிரேதம் குன்னூர் அரவன் காடு போலீஸ்டேஷனுக்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டதும் அந்தப் பிரேதம்லேடி டாக்டரால பரிசோதனை செய்யப்படாமல் சப் அஸிஸ்டன்ட் சர் ஜனல் பரிசோதனை செய்யப்பட்டது வாஸ்தவமா?

ஜ:—சந்தேக மரணம் என்று எண்ணப்பட்டு பிரேதம் போலீஸ்டேஷனுக்கு கொண்டுபோகப்பட்டது வாஸ்தவம். உள்ளூர் லேடி டாக்டர் நோயா யிருந்தபடியாலும் கோயமுத்தூரிலிருந்து வேறொரு லேடி டாக்டரை வரவழைக்கப் போதுமான சாவகாசமில்லாதபடியாலும் பிரேதம் சப் அஸிஸ்டன்ட் சர் ஜனல் பரிசோதனை செய்யப்பட்டது.

ஆனரபில் மிஸ்டர் B. V. நரசிம்மய்யர்.

11. கே:—சட்ட சபை மெம்பர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நடத்தப்படும் எலக்ஷன்களில் வோட்டுக கொடுக்கவரும், வோட்டர்களுக்கு நேரிடும் வண்டிச் செலவுகளை காண்டிடேட்டுகள் கொடுக்கக் கூடாதென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும்விதி, முனிசிபாலிடி எலக்ஷன்களிலும் லோக்கல் போர்ட்டு எலக்ஷன் களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வரவேண்டுமென்று உத்திரவு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா.

ஜ:—கவர்ன்மெண்டார் அதைப்பற்றி யோஜனை செய்வார்கள்.

24. கே:—வியாபார பொருள் காலேஜ் ஒன்று சென்னையில் ஸ்தாபிக்கக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—கவர்ன்மெண்டாருடைய ஆலோஜனையிலிருந்து வருகின்றது.

25. கே:—ரூபா 50 முதல் ரூபா 100 வரையில் மதிப்புள்ள எத்தனை வியாஜ்ஜியங்கள் 1914 ல் டி. மு. க் கோர்ட்டுகளிலும், ரூபா 2500 முதல் ரூபா ૦ ஆயிரம் வரையில் எத்தனை வியாஜ்ஜியங்களும் சப் ஜட்ஜி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டுகளிலும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன?

ஜ:—டி. மு. க் கோர்ட்டுகளிள் 28023 வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன; ஜில்லா ஜட்ஜி சப் ஜட்ஜி கோர்ட்டுகளிள தாக்கல் செய்யப்பட்ட வியாஜ்ஜியங்களின்எண்ணிக்கை இன்னொரு சமயத்தில் ஆனரபில் மெம்பருக்கு அறிவிக்கப்படும்.

26. கே:—கவர்ன்மெண்டார் சிவில் கோர்ட்டு ஆக்ட்டை சீர்திருத்து வதற்கு முந்தி வெளியூர் சிவில் கோர்ட்டுகளின் அதிகார சம்பந்தமாக மிஸ்டர் பிலிப்ஸ் செய்திருக்கும் ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா ?

ஜ:—மிஸ்டர் பிலிப்ஸ்ரிப் போட்டிற்கும் சிவில் கோர்ட்டுகளின் சட்டத்தைச் சீர்திருத்துவதற்கும் யாதொரு சம்பந்தமில்லை. ஆதலால் அந்த ரிப்போர்ட்டை பயிரங்கப்படுத்த கவர்ன்மெண்டாருக்கு உத்தேசமில்லை.

28. கே:—யுத்தத்தை முன்னிட்டு சென்னை ராஜதானியில் மெடிக்கல் ஆபிசர்கள் அகப்படாததை முன்னிட்டு சேலம் ஜில்லாவில் எத்தனை ஆஸ்பத்திரிகள மூடப்பட்டிருக்கின்றன. மெடிக்கல் ஆபீசர்களை அதிகரிக்க கவர்ன்மெண்டார் என்ன. ஏற்பாடு செய்ய உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்கள்?

ஜ:—கவர்ன்மெண்டிற்குச் சமாச்சாரம் தெரியாது ஆனால் அறிந்துகொள்ள ஏற்பாடு செய்வார்கள்?

29. கே:—திருவல்லிக்கேணியி லிருக்கும் ஆயுர்வேத தரும வைத்தியசாலையைடாக்டர்எம். கிருஷ்ணசாமி அய்யர் ஆதரித்தாரென்றும் அதனிடம் அனுதாபம் பாராட்டிவருகிறார் என்றும் ஆதலால் அவர் மெடிக்கல் கவுன்சிலிலிருந்து நீக்கப்பட்டு தகாதநடத்தைக்காக அந்த கவுன்சிலால் விசாரணை செய்யப்பட்டுவருவது வாஸ்தவமா? அவர்பேரில் சாட்டப்பட்டிருக்கும் குற்றம் திருவல்லிக்கேணி ஆஸ்பத்திரியினிடம் அனுதாபம் பாராட்டி வந்தார் என்பதா அல்லது பொதுவாக ஆயுர்வேத வைத்தியர்களிடம் அனுதாபம் பாராட்டிவந்தார் என்பதா? மெடிக்கல்கவுன்சில் ஆயுர்வேத வைத்தியரிடம் வைத்துவரும்விரோதமான எண்ணத்தை முன்னிட்டு பொதுஜனங்களுடைய உணர்ச்சி கிளப்பப்பட்டிருக்கிறதென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? மெடிக்கல் ரெஜஸ்டிரேஷன் ஆக்டால் யுனானிவைத்தியமும்ஆயுர்வேத வைத்தியமும் பாதிக்கப்படமாட்டாதென்று ஜனங்களுக்கு நம்பிக்கையூட்ட கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்கள்?



ஜ:—பத்திரிகைகள் மூலமாக வெளியான சமாச்சாரங்களைத்தவிற கவர்ன்மெண்டுக்குவேறே சமாச்சாரம் தெரியாது. மெடிக்கல்கவுன்சிலால் செய்யப்பட்ட தீர்மானத்திற்கு விரோதமாக கவர்ன்மெண்டாரிடம் அப்பீல் செய்துகொள்ளப்படலாமென்று மெடிக்கல்ரெஜிஸ்டிரேஷன் ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இந்த சமயம் கவர்ன்மெண்டார் யாதொரு பதிலும் சொல்லுவது தகாததாகவிருக்கும்.

ஆனரபில் மிஸ்டர்
K.R. ।. கவலப்பார மூப்பில் நாயர்.

33. கே:—சிவில் கோர்ட்டுகளில் டிபாசிட் செய்யப்படும் பணங்களுக்கு டிபாசிடர் களுக்கு வட்டி கிடைக்கும்படியாக அவைகளை பிரசிடென்சி பாங்குகளில் டிபாசிட் செய்யும்படியாக உத்திரவு பிறப்பிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—ஆனரபில் மெம்பர் சொல்லும் இந்த யோஜனையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள சக்தியற்றவர்களாக யிருக்கிறார்கள்.

55. கே:—1915-16-ல் எத்தனை மசோதாக்கள் கவர்ன்மெண்டாருடைய ஆலோஜனைக்குக் கொண்டு வரப்படும்?

ஜ:—அடியிற்கண்ட மசோதாக்கள் கவர்ன்மெண்டாருடைய ஆலோஜனைக்குக் கொண்டுவரப்படும் (1)1885-ம் வருடத்திய மதிராஸ்வெளித்துறைமுகங்களின் ஏற்றுமதி எறக்குமதி ஆக்ட்டைச் சீர்திருத்தம் மசோதா (2) ஜில்லா முனிசிபாலிட்டி ஆக்டைச்சீர்திருத்தம் மசோதா (3) 1873 ம் வருடத்திய மதிராஸ் சிவில் கோர்ட்டு ஆக்டைச் சீர்திருத்தம் மசோதா.

74. கே:—சென்னை நகரத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்காக அடையாற்றில் பங்களாக்கள் கட்ட கவர்ன்மெண்டார் உத்தேசம் செய்து கொண்டிருப்பது வாஸ்தவமா? இந்தக் காரியத்திற்காக கவர்ன்மெண்டார் நிலம் பார்க்கப் போகிறது வாஸ்தவமா? அதற்குக் காரணங்கள் என்னவென்று கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப்படுவார்களா?

ஜ:—ஆம் மனைகளின் கிரையம் அதிகரித்துப் போகுமென்றும் இனிமேல் குடிக்கூலிக்காக ஆபீசர்களுக்கு அதிகப்படியான அலவன்சுகள் கொடுக்கும்படி நேரிடு மென்றும் ஆகையால் அதிகப்படியான பணம் செலவாகுவதைத் தடுக்கும்பொருட்டும் கவர்ன்மெண்டார் பங்களாக்கள் கட்ட உத்தேசித்துக்கொண் டிருக்கிறார்கள்.

ஆனரபில் மிஸ்டர் K P. ராமன் மீனன்.

97. கே:—மிஸ்டர் டிரஸ்லருக்கு கைத்தொழில் பரிக்ஷைகளில் என்ன பரிக்ஷையில் தேறியிருக்கிறார் எவ்வளவு அனுபோக முடையவர்? கைத்தொழில் இலாக்காவில் எந்த டிபார்ட்மெண்டு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது?

ஜ:—லண்டன் பி. எஸ். சி. பரிக்ஷையில் தேறியிருக்கிறார். எ. எம். ஐ. சி. யி என்கிற பட்டமும் பெற்றிருக்கிறார். இவர் கடந்த 7 வருடகாலமாக கைத்தொழில் இலாக்காவில் சம்பந்தம் உடைத்தாயிருக்கிறார். இப்போதுகைதொழில் இலாக்காவிற்கு டைரக்டராயிருக்கிறார்.

99. கே:—மேற்கு சமுத்திரக் கரையில் சோப்புசெய்யும் தொழிற்சாலை ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ:—இது விஷயமாக மீன் இலாக்கா கௌரவ டைரக்டர் மிஸடர் நிக்கல்ஸன் பரிக்ஷை செய்து கொண்டு வருகிறார் அதுவிஷயமாக பெரிய பரிக்ஷைகள் செய்து பார்க்ககவர்ன்மெண்டாரிடம் இப்போது பணமில்லை.

102. கே.—கடந்த 5 வருட காலத்திற்குள் ஐக்கோர்ட்டாரால் விசாரணைசெய்யப்பட்டுபைசல் செய்யப்பட்ட முதல் அப்பீல் இரண்டாவது அப்பீல்களில் எத்தனை கவர்ன்மெண்டாரால் செய்துகொள்ளப் பட்டனவை?

ஜ:—வருடம்—முதல்அப்பீல்—2-வது அப்பீல்

| வருடம் | முதல்அப்பீல் | 2-வது அப்பீல் |
|---|---|---|
| 1910 | 28 | 52 |
| 1911 | 3 | 44 |
| 1912 | 15 | 98 |
| 1913 | 6 | 40 |
| 1914 | 11 | 46 |

ஆனரபில் மிஸ்டர் ராமச்சந்திரராவ் பந்துலு.

60. கே:—இந்த ராஜதானியில் ஜெர்மன் பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்ட சாதாரணப் பள்ளிக்கூடங்கள், கைத்தொழில்பள்ளிக்கூடங்கள்

ஆஸ்பத்திரிகள் ஆகிய இவைகளுக்கு ஒரு ஜாப்பிதா தயார் செய்யப்பட்டு பயிரங்கப் படுத்தப்படியாக கவர்ன்மெண்டார் உத்திரவு செய்ய இஷ்டப்படுவார்களா? இந்த சாலைகளுக்கு இதற்கு முந்தி கவர்ன்மெண்டாரால் கொடுத்துவரப்பட்ட கிராண்டுகள் (Grants) அவைகள் சத்துரு தேச பிரஜைகளினுடையதாக விருப்பதை முன்னிட்டு நிறுத்தப்பட்டுப் போய்விட்டபடியால் அவைகள் தொடர்ந்தேர்த்தியாக நடத்தப்பட என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஐ:—ஆனரபில் மெம்பர் கேட்ட ஜாப்பிதா ஏற்கனவே பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது. ஜெர்மன் பாதிரிமார்களால் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடம் முதலான சாலைகள் தொடர்ந்தேர்த்தியாக நடத்தப்பட்டு வருவதற்காகச் செய்யப்பட வேண்டிய ஏற்பாடு இப்போது கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து கொண்டு வருகின்றது.

ஆனரபில் ராவ் பகதூர் நரசிம்மேஸ்வர சர்மா.

175. கே:—திருச்சினாப்பள்ளி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகள் தங்கள் பேரில் அந்தக் கோர்ட்டில் கொண்டுவரப்பட்ட கேஸை வேறொரு கோர்ட்டிற்கு மாற்றிவிடவேண்டுமென்று ஐக்கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவின் நடவடிக்கைகள் கவர்ன்மெண்டாருடைய கவனத்திற்கு எட்டினவா? கலெக்டரும் மிஸ்டர் ஆர்மஸ்ஸாம் சுங்கன் சாவடிக்குச் சென்று அந்தச் சாவடியிலிருந்தவனிடம் அணா 6 கொடுத்துவிட்டு பைசிக்கிலை வாங்கினதாக குற்றவாளியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே அது வாஸ்தவந்தானா? குற்றவாளியின் பேரில் சாட்டப்பட்ட குற்றம் அவன் பைசிக்கிலைத் திருடியதாகவா சாட்டப்பட்டது? அப்படியானால் அந்தக் கேஸில் பிரியாதியார்? ஜில்லாவிலிருந்த எல்லா மாஜிஸ்டிரேட்டுகளாலுமா குற்றவாளி ஜாமீன்பேரில் விடப்படவில்லை? குற்றவாளிகள் எத்தனைநாட்கள் ஜெயிலில் வைக்கப்பட்டார்கள்? குற்றவாளிகள் ஐக்கோர்ட்டாரால் ஜாமீன்பேரில் விடப்பட்டார்களா? குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் டிரான்ஸ்பர்மனு தாக்கல் செய்தவுடன் அதைப்பற்றி ஜில்லா மாஜிஸ்டிரேட் ரிப்போர்டு அனுப்பும்படியாக ஐக்கோர்ட்டார் உத்திரவு செய்தார்களா? சுங்கன் வரி வசூல் செய்யும் பாத்திகை மறுபடியும் ஏலம் போடப்பட்டது. டிரான்ஸ்பர் மனு ஐக்கோர்ட்டில் பைசல் செய்யப்படாமலிருந்த போது என்னகாரணங்களை முன்னிட்டு பைசிக்கிலைத் திருடியதாகச் செய்யப்பட்ட பிரியாது வாப்பீஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது. கவர்ன்மெண்டார் இது விஷயமாக விசாரணை நடத்தவும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டினிடமிருந்து ரிப்போர்ட் தருவிக்கவும் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஐ:—இது சம்பந்தமாக ரிப்போர்ட் தருவிக்க உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனரபில் மிஸ்டர் K. சிதம்பரநாத முதலியார்.

174. கே.—தென் இந்தியா இருப்புப்பாதையிலும் ஜில்லா போர்டு இருப்புப் பாதையிலும் ஆகிய இந்த இரண்டு ரயில்வே கம்பெனியிலுள்ள ஸ்டேஷன்களில் எத்தனை அரிசி மூட்டைகளும் நெல் மூட்டைகளும் ஏற்றப்படுவதற்கு வாக்கின் வண்டிகள் அகப்படாமல் பிளாட்பாரங்களில் சாமான் கூடாரங்களில் அடிக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. 1-7-1915 லிருந்து 31-10-1915 வரையில் எத்தனை மூட்டைகள் இப்படி அடிக்கி வைக்கப்பட்டிருந்தன?

ஐ:—ஆனரபில் மெம்பர் கேட்ட சமாசாரத்தைச் சப்ளைசெய்ய கவர்ன்மெண்டார் சக்தியற்றவர்களாக விருக்கிறார்கள்

ஆனரபில் ராவ் பகதூர் சுப்பராயலு ரெட்டியார்.

80. கே:—வேலூரில் ஜில்லாக் கோர்ட்டு ஸ்தாபிக்க ஐக்கோர்ட்டார் என்ன காரணங்களை முன்னிட்டு இஷ்டப்படுகிறதில்லை என்று கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப்படுவார்களா?

ஐ:—அடியிற்கண்டவை முக்கியமான காரணங்கள். (1) சித்தூரில்ஜில்லாக் கோர்ட்டு ஞாபகத்திற்கு எட்டாத காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டு அந்த ஊரிலேயே நாளதுவரை யிருந்துகொண்டு வருகிறது. (2) கவர்ன்மெண்டார் சித்தூரில் பெரிய தொகை செலவிட்டு ஒரு புதிய கோர்ட்டு கட்டடம் கட்டிவைத்திருக்கிறார்கள். (3) வேலூர் சித்தூருக்கு சமீபத்திலிருக்கிறது. பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சித்தூரில் ஜில்லாக் கோர்ட்டிருப்பதால் கக்ஷிக்காரர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் யாதொரு அசௌகரிய முண்டாகிறதில்லை.



82. கே:—கவர்ன்மெண்டார் வேலூரில் ஒரு சப் கோர்ட்டு ஸ்தாபிக்க இஷ்டப்படுவார்களா?

ஐ:—கவர்ன்மெண்டார் அது விஷயமாக யோசனை செய்ததில் அவ்வூரில் ஒரு சப் கோர்ட்டு ஸ்தாபிக்க அவசியமான காரணங்களில்லை என்று தீர்மானித்து திருப்தி அடைந்திருக்கிறார்கள்.

ஆனரபில் சோய்பா-அல்-மல்க் T. ஜேயின் அல்-அபிடின் சாகேப்.

104. கே :—மதிராசுக்கும் பல்லாவரத்திற்கும் இரண்டு இருப்புப்பாதைகள் (Double lines) போட்டு இந்த இரு ரயில் ஸ்டேஷன்களுக்குப் போகும் வரும் பிரயாணிகளுக்கு உண்டாகும் தாமதத்தை மட்டுப்படுத்திவைக்க கவர்ன்மெண்டார் இஷ்டப் படுவார்களா?

ஐ:—ஆனரபில் மெம்பர் கேட்ட கேள்வியின் நகல் ஒன்று தென் இந்தியா ரயில்வே கம்பெனியின் ஏஜண்டிற்கு அனுப்பப்படும்.

---

## IN THE SUB-MAGISTRATE'S COURT OF MUSSURI.

## முசிரி சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில்

---

முசிரித் தாலூக்கா காமலாபுரத்தில் நடந்த கொள்ளைக் குற்றத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் முசிரி சப் மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்கள். இந்தக் கேஸ் முசிரி சப் மாஜிஸ்டிரேட்டால் சுடந்த நவம்பர் மாதம் 25ந் தேதி மறுபடியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை ஆரம்ப மாவதற்கு முந்தி அந்தக் கேஸின் பிராஸிக்கியூஷன்தரப்பு வக்கீல்களில் ஒருவர் வழக்கப்பிரகாரம் கோர்ட்டிற்குள் வந்து வக்கீல்களுக் கென்று போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் ஒன்றில்உட்கார்ந்துகொண்டார். மாஜிஸ்டிரேட் சில சில்லரைக் கேஸ்களை விசாரணை செய்து பைசல் செய்த பின்பு தமது இதர உத்தியோக வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். இதற்குள்ளாக மணி 1 ஆய்விட்டது. ஆகவே சப் மாஜிஸ்டிரேட் டின் சாப்பிடுவதற்காக தம்முடைய பிரத்தியேகமான அரைக்குச் சென்றார். மாஜிஸ்டிரேட் அப்படி போகும்போது அந்த வக்கீலைப் பார்த்து கேட்டதாவது:—

மாஜிஸ்டிரேட்:—ஐயா, என்னகாரியமாக நீர் கோர்ட்டிற்கு வந்திருக்கிறீர்?

வக்கீல்:—காமலாபுரம் கொள்ளைக்கேஸ் விஷயமாக வந்திருக்கிறேன்.

மாஜி:—நீர் வீட்டிற்குப் போகலாம். அதில் உமக்கு யாதொரு சம்பந்தமுமில்லை.

வக்:—நான் இங்கேதானிருந்தா லென்ன?

[இப்படி வக்கீல் சொன்னதை மாஜிஸ்டிரேட் காதில் வாங்கிக்கொண்டு ஒன்றும் பதில்சொல்லாமல் டிபன் அரைக்குச் சென்றுவிட்டார். டிபன் சாப்பிட்டுவிட்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டிற்குள் நுழைந்து தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். அப்போதும் அந்தப்பிளீடர் தாமிருந்த ஆசனத்தைவிட்டு எழுந்திருந்து போகாமலிருந்ததை மாஜிஸ்டிரேட் ஜாடையாக கவனித்தார் அப்போது வக்கீல் "நான் இங்கே யிருந்தால் என்ன? எதற்காக என்னை வீட்டிற்குப் போகச் சொல்லவேணும்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தார். இந்த வார்த்தைகளைக் கேட்ட மாஜிஸ்டிரேட் அந்த வக்கீலை தம்முடைய அருகில் வரும்படி கூப்பிட்டு பேசினபோது அடியிற்கண்ட தடபுடலான சம்பாஷணை இருவருக்கும் நடந்தேறினது.]

மாஜி:—வேலை யிருந்தால் நீர் கோர்ட்டிற்கு வாரும்.

வக்:—வேலை யில்லாமல் கோர்ட்டிற்கு வந்தால் என்ன?

மாஜி:—நீர் இங்கு வர முடியாமல் ஏற்பாடு செய்வேன்.

வக்:—இது கோர்ட்டாக்கும். உம்முடைய வீடல்ல.

மாஜி:—உம்மை வெளியில் அனுப்பி விடுவேன்.

வக்:—(கோர்ட்டில் இப்போது யாருமில்லை) உமக்கு அவ்வளவு துணிச்ச லிருக்குமாகில் நீர் சொல்லுவதை ஒரு துண்டு காகிதத்தில் எழுதி என்னிடம் கொடுத்துவிட்டு உமதிஷ்டப்படி செய்யும்.

மாஜி:—உம்முடைய நடத்தை விரும்பத் தக்கதாயில்லை.

வக்:—என்னுடைய நடத்தையைப்பற்றி வேறொருவருடைய அபிப்பிராயத்தை நான் வேண்டவில்லை.

மாஜி:—பெஞ்ச் கிளார்க்கைப் பார்த்து காமலாபுரம் கக்ஷிக்காரர்களை கூப்பிடும்.

(கக்ஷிக்காரர்கள் கோட்டிற்குள் வந்து நின்றார்கள்.)

மாஜி:—ஐயா (வக்கீல்); இப்போது நீர் கேசிற்கு ஆர்குமெண்டு பேச ஆரம்பிக்கலாம்.

வக்:—ஆர்குமெண்டு வேண்டியதில்லை. எல்லாம்கேஸ் கட்டிற்குள் ளிருக்கிறது. அதைப்பார்த்துவிட்டு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள்.

மாஜி:—வககாலத்தை வாபீஸ் வாங்கிகொள்ளுங்கள்.

வக்:—முடியாது.

மாஜி:—ஆர்குமெண்டு செய்வதற்காகத்தானே உமக்கும் பீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது?

வக்:—கக்ஷிக்காரனுக்கு நான் செய்யவேண்டிய கடமைகள் எல்லாம் எனக்குத் தெரியும். கேஸ் நடத்துவதைப் பற்றி கோர்ட்டார் சொற்படி நடக்க நான் பாத்தியப்பட்டவனல்ல.

மாஜி:—கோர்ட்டாரை நீர் அவமதித்ததற்காக உம்மேல் கேஸ் கொண்டுவந்து உம்முடைய வக்கீல் சந்நதை உம்மிடமிருந்து நான் எடுத்து விடுவேன்.

வக்:—முடியாது.

இந்த தடபுடலான சம்பாஷணைக்கு மத்தியில் 6 குற்றவாளிகள் பேரில் மாஜிஸ்டிரேட் குற்றப் பத்திரிகை வாசித்து கேசை டிபன்ஸ்தரப்பு விசாரணைக்காக டிசம்பர் மாதம் 9ந் தேதிக்குத் தள்ளிவைத்தார். வக்கீலும் வீடுபோய்ச் சேர்ந்தார். (Hindu.)

## IMRORTANT RULINGS.

## முக்கியமான தீர்ப்புகள்.

கணக்கு புஸ்தகங்களைக் காண்பித்தால் மட்டிலும் கோர்ட்டார் பிரதிவாதியின்பேரில் டிக்கிரிகொடுக்க மாட்டார்கள் என்றும் அந்தக் கணக்கு புஸ்தகத்தில் எழுதி யிருக்கிறபடி பிரதிவாதிக்கு பணம் கொடுபட்டிருக்கிறதென்று ஒரு சாக்ஷியைக் கொண்டாகிலும் அல்லது கடன்கொடுத்தவனை ருஜூப்படுத்த சாக்ஷி சொல்லவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 5 மூர் இந்தியன் அப்பீல். 432.

வட்டிக்கு வட்டிபோட்டு கணக்கு தீர்ப்பது சட்ட விரோதமாகமாட்டாது. ஆனால் அப்படி போடப்பட்டது சாதாரண வட்டியாக யிருக்கவேண்டுமென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 34, கல். 150.

ஒரு கடையில் பத்துவரவு செய்துவந்தால் அந்தக் கடைக்காரன் வருஷத்திற்கு ஒருமுறை கூடுதலான வட்டியையும் அசலுடன் சேர்த்து அதற்கு வட்டி போட்டு வாங்குகிற வழக்கமாயிருந்தால் வாதி தன்னுடைய ஊரில் மற்ற கடைக்காரர்களும் இதே மாதிரியாக வட்டிபோட்டு வாங்குகிற வழக்கமென்று ருஜூப்படுத்த வேண்டுமென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 5. சென்னப்பட்டணம் ஐகோர்ட் ரிப்போர்ட் 135.

கண்டிராக்ட் ஆக்ட் சம்மந்தப்பட்ட ஒருகேசில் பொதுவான ஒரு வழக்கத்தை கோர்ட்டார் கவனிக்காமல் தீர்ப்புச்சொன்னால் அது ஒப்பந்த உடன்படிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு ஷரதத்தை நிராகரித்த தீர்ப்புச் சொன்னதற்கு சமமான அநியாயத் தீர்ப்பாக யிருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 9. பெங்காளம் லா ரிப்போர்ட் 1.

ஒரு பத்திரத்தில் வட்டி 6 மாதம் செலுத்தப்படாவிடில் 6 மாதமும் கூடுதலானவட்டி அசலுடன் சேர்க்கப்பட்டு இப்படி கூடுதலான தொகையின் பேரில் 100-க்கு வருஷத்திற்கு 12 மேணிக்கு வட்டி செலுத்தவேண்டுமென்று சொல்லியிருந்தால் அது சட்ட விரோதமாகமாட்டாதென்றும் அப்படியே பிரதிவாதி செலுத்தவேண்டுமென்று அலகபாத் ஐகோர்ட்டார் அடியிறகண்ட மூன்று கேஸ்களில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

2 All. 621. 2 All 639. 6 All. 63.

ஒருவனை ஒருவன் மற்றொருவனுக்குச் சிபார்சு செய்தால், சிபார்சு செய்யப்பட்டவனால் அவனை வைத்துக்கொண்டவனுக்கு நஷ்டம் நேரிட்டால் அந்த நஷ்டத்தை சிபார்சு செய்தவன் ஈடுபடுத்த வேண்டும் என்பது, இங்கிலாண்டு தேசத் தீர்ப்பு. A என்கிற ஒரு நியூஸ்பேப்பர் சொந்தக்காரன் வர்த்தகர்களுக்கு, கணக்கர்களும் தரகர்களும் வேண்டியதாயிருந்தால் தமக்கு எழுதினால் தகுந்தபேர்வழிகளைச் சிபார்சு செய்கிறதாக தமமுடைய பத்திரிகையில் விளம்பரம் பிரசுரித்திருந்தார். B என்கிற வர்த்தகன் தனக்கு ஒரு தரகனைச் சிபார்சு செய்யும்படியாக எழுதியிருந்தான். D. என்பவன் கோர்ட்டார் டிச்சார்ஜ் செய்யாத இன்சால்வென்ட். இவன் இந்நிலைமையி லிருக்கிறான் என்பதை A என்பவர் அறிந்துகொள்ளாமல் B என்பவருக்கு சிபார்சு செய்தார். B என்பவரிடம் D என்பவன் தாகனா யிருந்தபோது B என்பவருடைய பணத்தைக் கையாடிவிட்டான் தமக்கு நேரிட்ட நஷ்டத்தைப் பெறுவதற்காக B என்பவர் A என்பவர் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். யோக்கியமுடைய் தரகனைப்பார்த்து சிபார்சுசெய்திருக்கவேண்டியது A என்பவருடைய கடமை என்றும் இந்தக் கடமையை அவர் சரிவரச் செய்யாமல் இன்சால்மெண்டு பெறப்போகிற D என்பவனைச் சிபார்சு செய்தபடியாலும் அதனால் B என்பவருக்கு நஷ்ட முண்டானதாலும் அந்த நஷ்டத்தை ஈடுபடுத்த A என்பவர் கட்டுப்பட்டவரென்றும் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். I KB 483.

---



## Manager Notice.

## மானேஜர் விளம்பரம்.

இந்தியாவிலுள்ள நான்கு ஐக்கோர்ட்டுகளிலும் ஜாரிசெய்யப்படும் தீர்ப்புகளை அந்தந்த ராஜதானியிலும் பல லா ஜெர்னல்கள் அப்போதைக்கப்போது எடுத்துப் பிரசுரித்துக்கொண்டு வருகின்றன. உதாரணமாகநம்முடைய சென்னைராஜதானியில் ஐக்கோர்ட்டாரால் ஜாரிசெய்யப்பட்டுவரும் தீர்ப்புகள் "மதிராஸ் லா ஜெர்னல்," "மதிராஸ் லா டைம்ஸ்," "மதிராஸ் வீக்கிலி நோட்டீஸ்," "லா வீக்கிலி"—முதலிய லா ஜெர்னல்கள் அப்போதைக்கப்போதே எடுத்துப் பிரசுரித்துக்கொண்டு வருகின்றன. இவைகளன்றி கவர்ன்மெண்டாரும் இந்த நான்கு ஐக்கோர்ட்டாரால் ஜாரி செய்யப்பட்டுவரும் தீர்ப்புகளை, ஷை லா ஜெர்னல்கள் உற்பத்தியாகும் காலத்திற்கு முந்திமுதல் பிரசுரஞ்செய்துகொண்டு வருகிறார்கள். இந்த பிரசுரத்திற்குத்தான் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் (Indian Law Reports) என்று பெயர். ஒவ்வொரு மாகாணத்தின் லோக்கல் கவர்ன்மெண்டாரும் தங்கள் தங்கள் மாகாணத்திலுள்ள ஐக்கோர்ட்டின்தீர்ப்புகளைமாதம்ஒருமுறைஅச்சிட்டு பிரசுரித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் என்கிற பொதுப்பெயரில் நான்கு ஐக்கோர்ட்டு தீர்ப்புகளும் அடங்கியிருக்கின்றன. கவர்ன்மெண்டு சம்பந்தமற்ற ஜெர்னல்கள் தீர்ப்புகளை எவ்வளவு துரிதத்தில் எடுத்துப் பிரசுரித்து நல்ல கீர்த்திப்பெயர் எடுத்திருந்தபோதிலும் அவைகள்கோர்ட்டுகளில் பிரமாணமாகஎடுத்துக்காண்பிக்க அருகற்றனவாயிருக்கின்றன. இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் என்கிற பிரசுரம் கவர்ன்மெண்டின் சொந்தப் பிரசுரமானபடியால் ஐக்கோர்ட்டு ஜட்ஜி முதல் முனிசிப்தார் ஈராக உள்ள, எல்லா ஜட்ஜிகளும் இந்தியன் லா ரிப்போர்ட்டுகளில் கூறப்பட்டிருக்கும் தீர்ப்புகளையே மேற்கோளாக அங்கீகரித்து தீர்ப்பு செய்கிறார்கள். நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்திருப்பதுபோல கவர்ன்மெண்டாரால் பிரசுரஞ் செய்யப்பட்டுவருகிறதும் ஜட்ஜிகளால் பிரமாணமாகக் கொள்ளப்படுகிறதுமான இந்த இந்தியன் லா ரிப்போர்ட்டுகளுக்கு இதுகாலபரியந்தம் ஒருஊனமிருந்தது. அதாவது என்னவென்றால் நான்கு ஐக்கோர்ட்டுகளிலும் ஜாரி செய்யப்படும் தீர்ப்புகளை அந்தந்த மாகாணத்தில் வாராந்திர லா ஜெர்னல்களும், மாதாந்திர லா ஜெர்னல்களும் ஏற்பட்டு அந்தந்த மாத தீர்ப்புகளை அப்போதைக்கப்போதே உலகத்தார் அறிந்துகொள்ளும்படி பயிரங்கப்படுத்திக்கொண்டு வரும்போது, இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் என்கிற கவர்ன்மெண்டு பிரசுரம் அப்போதைக்கப்போது தீர்ப்புகளைப் பிரசுரிக்காமல் மிகுந்த தாமதமாகப் பிரசுரித்துக்கொண்டுவந்தது. உதாரணமாக சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் ஏற்கனவே ஒரு லாப்பாயின்ட் சம்பந்தமாக ஏற்படுத்தியிருந்த தீர்ப்பை நிகழ் ஜனவரி௴த்தில் முதல் வாரத்தில் ரத்துசெய்து புதியதீர்ப்பு செய்கிறார்கள் என்று எண்ணிக்கொள்ளுவோம். இந்த புதிய தீர்ப்பு அடுத்தவாரத்திலேயே லா ஜெர்னல்கள் மூலியமாக வெளிவந்து விடுகின்றது. இதே தீர்ப்பு இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்களில் 6-மாதங்களுக்குப் பிந்தி வெளிப்படும். இதன் மத்தியில் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டில் ஷை லாப்பாயின்ட் சம்பந்தமாக வேறொரு வியாஜ்ஜியம் விசாரணைக்கு வந்து அந்த வியாஜ்ஜியத்தில் அமர்ந்திருக்கும் லாயர்கள் மேலே சொல்லப்பட்டவும் கவர்ன்மெண்டு சம்பந்தமற்ற லா ஜெர்னல்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறவுமான ஜனவரி௴ தீர்ப்பை கோர்ட்டாருக்கு எடுத்துக் காட்டினால் கோர்ட்டார் அந்த லா ஜெர்னல்களில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. இப்படிக்கோர்ட்டார்கள் மற்ற ஜெர்னல்களை பிரமாணமாக ஏற்றுக்கொள்ளாத விஷயம் லோக்கல் சட்டசபை மூலியமாக கவர்ன்மெண்டாருடைய கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்பட கவர்ன்மெண்டார் இந்தியன் லா ரிப்போர்ட்டுகள் ஏற்கனவே தாமதமாக பிரசுரஞ் செய்யப்பட்டு வந்ததுபோல இனிதாமதத்துடன் பிரிசுரிக்கப்படக்கூடாதென்றும் அப்போதைகப்போது ஜாரி செய்யப்பட்டுவரும் தீர்ப்புகள் அப்போதைக்கப்போது பிரசுரிக்கப்பட்டு வரவேண்டுமென்றும் கண்டிப்பான உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

இதன்பேரில் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் ஆபீசில் விசேஷமான ரிப்போர்ட்டர்கள் நியமித்து ஐக்கோர்ட்டாரால் ஜாரி செய்யப்பட்டிருக்கிற தீர்ப்புகளில் இந்தியன் லா ரிப்போர்ட்டில் பிரசுரிக்கப்படாமல் நிலுவையிலிருந்த தீர்ப்புகளை எல்லாம் இப்போது விரைவில் பிரசுரித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் ஜனவரி௴ இந்தியன் லா ரிப்போர்ட் தாமதமாக வெளிவருகிற ஒழுங்கினம் மாறிப்போய் இனி அந்த அந்த மாதத்திய ரிப்போர்ட் அந்தந்த மாதத்திலேயே வெளிவந்துவிடும். நாம் நிகழ்௴ சட்டகெஜெட்டில் பிரசுரித்திருக்கும் கேஸ்கள் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்களில் 1914-ம் வருடத்திய நவம்பர்௴ சஞ்சிகையிலிருக்கும் கேஸ்கள். ஆகையால் நம்முடைய 1915-ம் வருடத்திய இந்தியன் லா கெஜெட் 1915-ம் வருடத்திய இந்தியன் லா ரிப்போர்ட்டில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கும் கேஸ்களை [illegible]க்கிக் கொண்டிருக்கும். வால்யூ[illegible]த்தைக்கா[illegible]செ[illegible]ல்ல வேண்டுமானால் இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் [illegible]



600 008.

னைப்பிரதி 38-வது வால்யமிலிருக்கும் கேஸ்கள் அனைத்தும் நம்முடைய இந்தியன் லா கேஜெட் 8-வது வால்யமிலிருக்கும். இன்னும் விபரமாகச் சொல்ல வேண்டுமானால் இ. லா. ரி. சென். 38-வது வால்யம் இந்தியன் லா கேஜெட் 8-வது வால்யமாக எண்ணப்படவேண்டும் நிற்க, இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்களில் ஐக்கோர்ட்டாரால் ஜாரி செய்யப்படும் எல்லா தீர்ப்புகளும் பிரசுரிக்கப்படுகிறதில்லை. இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்களில பிரசுரிக்கப்படும் கேஸ்களுக்கு ரிப்போர்டெட் கேஸ்கள் (Reported Cases) என்று பெயர். பிரசுரிக்கப்படாத கேஸ்களுக்கு அன்ரிப்போர்ட்டெட் கேஸ்கள் (Unreported Cases) என்று பெயர். இந்தியன் லா கெஜெட் இரண்டாவது பாகத்தில் எப்போதும் இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலிருக்கும் கேஸ்களையே பிரசுரிக்கவா தீர்மானித்திருக்கிறோம். இப்படி தீர்மானித்திருப்பதால் மற்ற லா ஜெர்னல்களில் பிரசுரிக்கப்படும் கேஸ்கள் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் வெளிவராது என்று எண்ணவேண்டாம். இந்திய சட்ட கெஜெட்டின் முதல் பாகத்தில் மதிராஸ் லா ஜெர்னல், மதிராஸ் வீக்கிலி நோட்ஸ், மதிராஸ் லா டைம்ஸ், இந்தியன் லா வீக்கிலி முதலிய கவர்ன்மெண்டு சம்பந்தமற்ற லா ஜெர்னல்களில் பிரசுரிக்கப்படும் கேஸ்கள் எல்லாம் ஒன்றுகூட தவறிப்போகாமல் பிரசுரிக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆகக்கூடி சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால ஜாரிசெய்யப்படும் தீர்ப்புகள் எல்லாம் ஒன்றுகூட விட்டுப்போகாமல் நம்முடைய கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டுவரும்.

மானேஜர்.

## ABBREVIATIONS USED IN THE GAZETTE.

| | | |
|---|---|---|
| I. L. R. | = | Indian Law Reports. |
| Cal. | = | Calcutta. |
| All. | = | Allahabad. |
| Bom. | = | Bombay. |
| M. H. C. R. | | Madras High Court Reports. |
| Mad. | = | Madras. |
| I. P. C. | = | Indian Penal Code. |
| W. R. | = | Weekly Reporter. |
| C. P. C. | = | Civil Procedure Code. |
| G. O. | = | Government Order. |
| Cr. P. C. | = | Criminal Procedure Code. |
| I. A. | = | Indian Appeals. |
| Q. B. | = | Queen's Bench. |
| M. I. A. | = | Moor's Indian Appeals. |
| I. Cr. L. J. | | Indian Criminal Law Journal. |
| M. W. N. | = | Madras Weekly Nctes. |
| L. I. C. | = | Lahore Indian Cases. |
| I. C. | = | Indian Cases. |
| M. L. J. | = | Madras Law Journal. |
| M. L. T. | = | Madras Law Times. |
| L. W. | = | Law Weekly. |

## இந்த கெஜட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் குறிப்புகள்.

| | | |
|---|---|---|
| இ. லா. ரி. | — | இந்தியன் லா ரிப்போர்ட்ஸ். |
| கல். | — | கல்கத்தா. |
| அல. | — | அலகாபாத். |
| பம். | — | பம்பாய். |
| ம. ஹை. ரி. | — | மதராஸ் ஹைகோர்ட் ரிபோர்ட்ஸ். |
| ம. / சென். | — | சென்னப்பட்டணம். |
| இ. பி. கோ. | — | இந்தியன் பினல் கோடு. |
| வீ. ரி. | — | வீக்லி ரிபோர்ட்டர். |
| சி. பு. கோ. | — | சிவில் புரொசீஜர் கோடு. |
| கி. பு. கோ. | — | கிரிமினல் புரொசீஜர் கோடு. |
| இ. அ. | — | இந்தியன் அப்பீல்ஸ். |
| கு. பெ. | — | குவீன்சு பெஞ்ச். |
| மூ. இ. அ. | — | மூர் இந்தியன் அப்பீல்ஸ். |
| இ. கி. லா. ஜ. | | இந்தியன் கிரிமினல் லா ஜர்னல் |
| ம. வீ. நோ. | — | மதருஸ் வீக்லி நோட்ஸ். |
| லா. இ. கே. | — | லாகூர் இந்தியன் கேசுகள். |
| இ. கே. | — | இந்தியன் கேஸ். |
| ம. லா. ஜெ. | — | மதருஸ் லா ஜெர்னல். |
| ம. லா. டை. | — | மதருஸ் லா டைம்ஸ். |
| லா. வீ. | — | லா வீக்கிலி. |



# Cases From The Indian Law Reports.

# இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்.

—:o:—

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

### சிவில் அப்பீல்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சுந்திரய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

1911-ம் வருடத்திய இரண்டாவது அப்பீல்
நெ. 842 of 1911.

P. மங்கம்மா—வாதி....அப்பீல்வாதி
P. ராமம்மா வகையரு—1-முதல் 3-பிரதிவாதிகள்....அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—எகிரிமென்டும் கிரய சாசனமும்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— கிருஷ்ண ஜில்லாவில் பெத்தாப்பூர் டி. மு. கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் ஒருகிராமத்தில் வசித்துவரும் பண்ணி அம்மண்ணுபுத்திரன் முனியா என்பவன் 25-4-1906-ல் அதே கிராமத்தில் வசித்துக்கொண்டுவரும் பிச்சி களாப்பாடு என்பவனுடைய பெண்சாதியாகிய மங்கம்மாவுக்கு அடியிற்கண்ட ஷரத்துகளடங்கிய ஒரு எகிரிமென்டு எழுதிக்கொண்டான்:—“19-3-1896-ல் என்னுடைய குடும்பச்செலவுகளுக்காக உன்னுடைய பெயரால் என்னாலும் எனக்கு கார்டியனாகவிருந்த மைத்துனன் லிங்கம்பள்ளி வெங்கடசாமியாலும் எழுதிக்கொடுக்கப்பட்ட சாதாரண அடமானத்திற்கு செலுத்தப்படவேண்டிய முதலும் வட்டியும் கூடிய தொகையில் ரூ. 500-க்கு கீழேகண்ட விபரப்படியுள்ள 3-ஏக்ரா 37-சென்ட்டுகள் உள்ளவும் எனக்குச் சொந்தமாயுள்ள நிலத்தை நான் உனக்குக் கிரையம் செய்து, உனக்கு நான் அதை ஸ்வாதீனப் படுத்தியிருக்கிறேன். இதற்கு வருஷவாரி கவர்ன்மெண்டிற்குச் செலுத்தப்படவேண்டிய கிஸ்தி ரூ. 12. இந்த ஸ்தாபர சொத்தும் அதின் பேரில் உள்ள பழமரங்களும் என்னுடைய பிதிரார்ஜ்ஜித சொத்துக்கள். சர்க்கார் புத்தகங்களில் இந்த நிலம் என்னுடைய பெயரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலத்தின்பேரில் ஏற்கனவே உனக்கு ஒரு அடமான ஆதரவு எழுதிக்கொடுத்திருக்கிறேன். ஆகையால் இந்த நிலம் உன்னுடைய புத்திரர் பௌத்திரர்கள் உள்பட நீ பாரம்பரியமாய் அடமானம் விற்கிரயம் தான முதலிய பாதீனங்கள் செய்யும் பாத்தியதைகளுடன் நீ தாராளமாய் ஆண்டு அநுபவித்துக்கொள்ளவேண்டுமென்று சம்மதித்து இந்த எகிரிமென்டை உனக்கு எழுதிக்கொடுத்திருக்கிறேன். ஆகையால் இன்றுமுதல் மூன்றுமாத காலங்களுக்குள்ளாக சரியான ஸ்டாம்பு கடுதாசியில் உனக்குக் கிரயசாசனம் எழுதிக்கொடுத்து ரெஜிஸ்டர் செய்து வைத்து அதை உனக்குக் கொடுக்கிறேன். கிரய சாசனம் சப் ரெஜிஸ்டர் ஆபீசில் ரெஜிஸ்டர் செய்யப்படும்போது இந்த நிலம் சர்க்கார் தஸ்தாவேஜியில் உன் பெயரால் பதிவு செய்யப்படவேண்டியதற்குத் தேவையான எகிரிமென்டை உன்னிடம் கொடுக்கிறேன். உன்னுடையபெயரால் கிரயசாசனம் என்னால் எழுதிக்கொடுக்கப்பட்ட பிறகு பிரஸ்தாப நிலத்தின் கிரயத்தொகை ரூ. 500-யை நான்உனக்கு ஏற்கனவே எழுதிக்கொடுத்திருக்கும் சாதாரண அடமானப்பத்திரத்தில் எண்டார்ஸ்மென்டு செய்து கொடுத்து பாக்கிப்படுகிற தொகைக்கு உனக்கு ஒரு ஆதரவு எழுதிக்கொடுக்கிறேன்.” இது என்னுடைய நிலத்தை கிரயசாசனம் செய்துகொடுப்பதாய் சம்மதித்து உனக்கு எழுதிக்கொடுத்த எகிரிமென்டு (குறி) பாமு. முனியா.

இந்த எகிரிமெண்டின்படி எகிரிமென்டை எழுதிக்கொடுத்த பூமு. முனியா என்பவன் கிரயசாசனம் எழுதிக்கொடுக்கவில்லை. ஆகவே மங்கம்மா ஒப்பந்தத்தை வார்ச்சிதப்படுத்த பெத்தாப்பூர் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள். (O. S. No 557 of 1908.)

டி. மு கோர்ட்டார் தீர்ப்பு:— வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி காக்கிநாடா சப் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். (A. S. No. 58 of 1910.)

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—(A. ரகுநாதராவ் பந்துலு சப் ஜட்ஜி:-நிலத்தைக் கிரயம்செய்வதற்குஎகிரிமென்டு என்று சொல்லப்படும் ஆதரவு ஒரு எகிரிமென்டாகாதென்றும் அதுவே கிரயசாசனம் என்றும் அது கட்டாயம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் அது ரெஜிஸ்டர் செய்யப்பட்டிராத முன்னிட்டு அதில் காணப்பட்டிருக்கும் நிலத்தை பாதிகக வலுவற்றதென்றும் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 17-வது பிரிவின்படி அந்த ஆதரவு சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக வாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டனள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் P. நாராயண மூர்த்தியும், 1, 2, அப்பீல் பிரதிவாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் R. நாகபூஷணமும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இந்த இரண்டாவது அப்பீலில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரஸ்னே கஷ்டத்திலிருந்து நீங்கினதல்ல. கவனிக்கப்பட வேண்டிய பிரஸ்னே என்னவென்ருல் எகிரிமெண்டு என்று சொல்லப்படும் தஸ்தாவேஜி ரெஜிஸ்டர் செய்யப்படாததை முன்னிட்டு சாக்ஷியமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடாதா என்பதே. இந்த வியாஜ்ஜியம் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆதரவு நிலத்தைக் கிரயம் செய்வதற்காக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த எகிரிமென்டுபோல தாற்பரியம் கொடுக்கின்றது. "சரியான ஸ்டாம்பு பேப்பரில் ஒரு கிரய சாசனம் நான் எழுதிக்கொடுக்கிறேன்" என்று எகிரிமெண்டு ஆதாரவில் எழுதப்பட்டிருக்கிறது. ஆதரவில் எழுதப்பட்டிருக்கும் மற்ற வாக்கியங்களைக்கொண்டு இது நிலத்தை விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட எகிரிமென்டல்லவென்றும் இதுவே கிரயசாசனம் என்றும் பிரதிவாதியின் லாயர் கூறி சொல்லுகிருர். A. தஸ்தாவேஜியில் கிரய ரூபாய் 500-க்கு விபரம் சொன்ன பிறகு "நான் நிலத்தை உனக்குக் கிரயம் செய்து உனக்கு ஸ்வாதீனப்படுத்தியிருக்கிறேன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொருவிடத்தில் "நீ இந்த நிலத்தைத் தானம் கிரயம் அடமானம் முதலிய பராதீனங்கள் செய்யும் பாத்திதைகளுடன் புத்திர பௌத்திரர்களுடன் பாரம்பரியமாய் நீ அனுபவித்துக்கொண்டு வரவேண்டுமென்று நான் சம்மதித்து இந்த எகிரிமென்டை எழுதிக்கொடுத்திருக்கிறேன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்குப் பின்னுல் கிரய சாசனம் எழுதிக்கொடுப்பதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஆதரவு எழுதப்பட்டிருக்கும் நடையை நாம் கவனித்துப் பார்த்ததில், இனிமேல் எழுதிக் கொடுக்கப்படப் போகிற கிரய சாசனத்தில் எழுதப்பட வேண்டிய ஷரத்துகள் எல்லாம் இந்த எகிரிமென்டிலேயே எழுதப்பட்டிருக்கின்றன என்றும் இது நிலத்தைக் கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த எகிரிமென்டே ஒழிய கிரய சாசனமல்லவென்கிற முடிவுக்குவந்திருக்கிறேம். ஆதரவின் ஆரம்பத்தில் "நான் உனக்கு கிரயம் செய்திருக்கிறேன்" என்கிற வாக்கியத்திற்கு "நான் உனக்குக் கிரயம் செய்ய கட்டுப்பட்டிருக்கிறேன் என்பது தாற்பரியம். "உனக்கு நிலம் ஸ்வாதீனம் செய்து கொடுக்கப்பட்டது" என்பதற்கு இனிமேல் எழுதிக் கொடுக்கப்போகிற கிரயசாசனப்படி உனக்கு நிலம் ஸ்வாதீனம்செய்து கொடுக்கப்படுமென்பது தாற்பரியம்.

ஆகையால் கக்ஷிக்காரர்களுடைய தாற்பரியப்படி இந்த ஆதரவு நிலத்தைக் கிரயம் செய்வதற்காகவும் கிரயம் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் எழுதிக் கொடுக்கப்பட்டவும் எழுதி வாங்கப்பட்ட எகிரிமென்டு உடன்படிக்கையாக விருக்கிறது. இந்த எகிரிமென்டு ஆதரவால், நிலம் விற்பவனிடமிருந்து கிரயம் பெற்றவனுக்குப் போய்விடவேண்டுமென்பது கக்ஷிக்காரர்களுடைய எண்ணமாயிருக்குமென்று நாம் நினைப்பதற்கு நியாயமில்லே. இந்த எகிரிமெண்டு ஆதரவு இனிமேல் பிறக்கப்போகிற கிரயசாசனத்தின் ஷரத்துக்களை அடக்கிக் கொண்டிருக்கிறதே ஒழிய மற்றப்படி வேறல்ல.

இப்படி நாம் அபிப்பிராயம் கொண்டிருக்கிறபடியால் எடுத்துக் கூறப்பட்டுள்ள பிரமாணங்களை நாம் ஆராயவேண்டிய அவசியமில்லே. நாம் பரிக்ஷிக்க வேண்டியது என்னவென்ருல் கக்ஷிக்காரர்களுடைய எண்ணப்படி பிரஸ்தாப எகிரிமென்டே கிரயசாசனமா அல்லது நிலத்தைக் கிரயம் செய்துகொடுக்க ஒரு உடன்படிக்கையா என்று பரிக்ஷித்துப் பார்க்க வேண்டும்.

இந்த ஆதரவு கிரயசாசனம் என்று எண்ணப்பட்ட போதிலும் ஒப்பந்தத்தை ஊர்ச்சிதப்படுத்துவதற்காக கொண்டுவரப்படும் ஒரு வியாஜ்ஜியத்தில் இந்த ஆதரவை சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளலாமென்று நாகப்பா v. தேவு (1) உபேந்திரநாத் பனர்ஜியா v. உமேஷ் சந்திரபனர்ஜியா (2) கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த ஆதரவை கீழ் அப்பீல் கோர்ட்டார் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளாமல் போனதில் தவறிப்போயிருக்கிருர்கள் என்று நாங்கள் தீர்மானித்து சப் ஜட்ஜியின் டிக்கிரியை மாற்றி அப்பீல் சட்டப்பிரகாரம் விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படும்படியாக கீழ் அப்பீல் கோர்ட்டாருக்கு அனுப்பப்படும்படியாக உத்திரவு செய்கிறேம் என்று தீர்ப்பு சொன்னர்கள். இ. லா. ரி. 37 சென். 480; P. Mangamma v. P. Ramamma, I. L. R. 37 M. 480.

## NOTES.

## குறிப்புகள்.

(1) இ. லா. ரி. 14 சென். 55. Nagappa v. Devu, I L. R. 14 M. 55.

(2) 15 கல். வீ. னோ. 375. Upendra Nath Banerjee v. Umeshchandra Banerjee, 15 C. W. N. 375.



புல்பெஞ்ச்:—சீப் ஜஸ்டிஸ் சர்சார்லஸ் ஆர்னல்ட் [வொயிட்

ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி

இரண்டாவது அப்பீல் நெ. 2003 of 1911.

P. பாலாம்பா—பிரதிவாதி...அப்பீல்வாதி

vs.

K. கிருஷ்ணய்யாவும் இன்னும் மூன்று பேர்களும் } வாதி—அப்பீல் பிரதிவாதி

லாப்பாயின்ட்:—விவாகமான ஸ்திரியின் சொத்தைப்பற்றிய ஆக்ட்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—கிருஷ்ணு ஜில்லா முசிலிப் பட்டணத்தில் வெங்கடரத்னம் என்பவர் தம்முடைய ஆயுளை ஓரியன்ட்டல் கவர்ன்மெண்டு செக்கியூரிட்டி லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியில் (Oriental Government Security Life Assurance & Company Ld.) ரூ. 2000க்கு இன்சூரன்ஸ் செய்து வைத்தார். பாலிசியில் (Policy) ஆயுள் இன்சூரன்ஸ் தம்முடைய பெண்சாதியினுடையவும் குழந்தைகளினுடைய நன்மையை உத்தேசித்து செய்யப்பட்டதென்றும் ஆனல் ரூ. 2000-யை இன்சூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் தம்மால் நியமிக்கப்படும் எக்ஸிகியூட்டர்கள், அட்மினிஸ் டிரேட்டர்களிடம் செலுத்த வேண்டுமென்று ஷை வெங்கடரத்னம் என்பவர் எழுதிவைத்திருந்தார். வாதி, வெங்கடரத்தனம் ஜீவதிசையிலிருக்கும்போது அவர் பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற்று அவர் இறந்துபோன பிறகு ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியார் கையிலிருக்கும் அவருடைய குடும்பத்தாருக்குச் சேரவேண்டிய பணத்தை ஜப்திசெய்தார். இந்த வியாஜ்ஜியத்தின் முதல் பிரதிவாதியாகிய வெங்கடரத்தனத்தின் புத்திரி தமக்கு ஷை தொகையில் ரூ. 400 சேரவேண்டுமென்று பாத்திதை மனு, கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். கோர்ட்டார் புத்திரியின் பாத்திதை மனுவை ஏற்றுக்கொண்டு புத்திரியின் பாத்திதை சம்பந்தப்பட்டவரையில் ஜப்தியை நீக்கி விட்டார்கள். ஆகவே வாதி, இன்சூரன்ஸ் கம்பெனியார் கையிலிருக்கும் ரூ. 2000யைத் தாம் அடையபாத்தியமுடையவர் என்று தம்முடைய பாத்திதையை ஸ்தாபிக்கும் பொருட்டு வெங்கடரத்தனத்தின் புத்திரியின்பேரிலும் இரண்டு புத்திரர்கள்பேரிலும் முசிலிப்பட்டணம் அடிஷனல் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். (அசல் வியாஜ்ஜியம் நெ. 315 of 1909.)

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் (Premiums) வெங்கடரத்தனம் தம்முடைய சொந்த சுயார்ஜ்ஜிதத்திலிருந்து செலுத்திக் கொண்டு வந்திருக்கிருர் என்றும் அவர் தம்முடைய பெண்சாதிபிள்ளைகளுடைய நன்மையைஉத்தேசித்து தம்முடைய ஆயுளை இன்சூரன்ஸ் செய்துவைத்திருக்கிருர் என்றும் இன்சூரன்ஸ் கம்பெனியார் வசமிருக்கும் தொகையில் வெங்கடரத்தனத்திற்கு யாதொரு பாத்திதையும் கிடையாதென்றும் வெங்கடரத்தனத்தின் பெண்சாதி பிள்ளைக்கு டிரஸ்ட்டி ஸ்தானத்தில் இன்சூரன்ஸ்கம்பெனியார் தொகையை உடைத்தாயிருக்கிருர்கள் என்றும் டி. மு. கோர்ட்டார் காரணங்கள் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஆதலால் வாதி கிருஷ்ணு ஜில்லாஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார் (அப்பீல் வியாஜ்ஜியம் நெ. 824 of 1910.)

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:--இன்சூரன்ஸ் கம்பெனியார் பெண்சாதி பிள்ளைகளுக்கு டிரஸ்டி ஸ்தானத்தில்தாவாத்தொகையை உடைத்தாயிருக்கவில்லே என்றும் விவாகமான ஸ்திரீகளின் சொத்து சம்பந்தமான ஆக்ட், புத்திரியும் வெங்கடரத்தனமும் ஹிந்துக்களாக விருப்பதை முன்னிட்டு, இந்தக்கேசிற்குப்பொருந்தாதென்றும்வெங்கடரத்தனம் தம்முடைய பிதிராஜ்ஜித ஐவேஜியிலிருந்து இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைச் செலுத்திக்கொண்டு வந்திருப்பதால் இன்சூரன்ஸ் கம்பெனியார் கையிலிருக்கும் தொகை இறந்துபோன வெங்கடரத்தனத்தின் எஸ்டேட்டைச்சேர்ந்ததாகப் போகிறதென்றும் தீர்மானித்து ஓரியன்டல் கவர்ன்மெண்டு செக்கியூரிட்டி லயிப் இன்சூரன்ஸ் லிமிடெட். v. வன்டேடு அம்மராஜு வியாஜ்ஜியத்தில் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் செய்திருக்கு தீர்ப்பைப் பின்பற்றி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் டி. மு. கோர்ட்டார் டிக்கிரியை மாற்றி வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக முதல் பிரதிவாதியாகிய புத்திரி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

இந்த இரண்டாவது அப்பீல் முதலில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் ஆகிய இந்த இரண்டு ஜட்ஜிகளும் கூடிய கோர்ட்டாருடைய விசாரணைக்கு வந்து இக்கோர்ட்டாரால் இக்கேஸ் புல்பென்ட்சாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது.

புல்பென்ச்சிற்கு அனுப்புவதற்கு காரணங்கள்:—முதல் பிரதிவாதியும், 2,3, பிரதிவாதிகளும் ரூ. 2000க்கு லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியில் ஆயுளை அசூரன்ஸ் செய்துவைத்த வெங்கடரத்தனத்தின்முறையே புத்திரியும் புத்திரர்களும்; வாதி வெங்கடரத்தனத்தின்பேரில் டிக்கிரிபெற்று இன்சூரன்ஸ்கம்பெனியார் கையிலிருக்கும் பணம் தமக்குச் சேரவேண்டுமென்று பாத்திதை பாராட்டுகிருர்.

இந்த வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய முதல் பிரஸ்னை என்னவென்றால் லயிப் அசூரன்ஸ் கம்பெனியார் கையிலிருக்கும் தொகை விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்ட்டின்படி (Married women's property Act.) வாதி அடைவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறதா, அல்லது ஷை தொகை இறந்துபோன வெங்கடரத்தனத்தைச் சேர்ந்ததா என்பதே. ஜில்லா ஜட்ஜி ஓரியண்டல் கவர்ன்மெண்டு செக்கியூரிட்டி லயிப் இன்சூரன்ஸ் லிமிடெட் v. வன்டேடு அம்மராஜு (1) கேசின் தீர்ப்பை பின்பற்றி விவாகமான ஸ்திரீயின் சொத்து ஆக்ட் இந்தக் கேசிற்குப்பொருந்தாது என்று தீர்மானித்திருக்கிறார். இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக இந்த அப்பீல் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தல்லவென்றும் விவாகமான ஸ்திரீயின் சொத்து ஆக்ட் இந்தக்கேசிற்குப் பொருந்துமென்று அப்பில் வாதி தரப்பில் கக்ஷி சொல்லப்படுகிறது. 1874-ம் வருடத்திய 3-வது ஆக்ட் 6-வது பிரிவு அடியிற்கண்டபடி கூறுகின்றது:—ஒரு மனிதன் தன்னுடைய பெண்சாதி பிள்ளைகளுடைய நன்மைக்காக தன்னுடைய ஆயுளை லயிப் அசூரன்ஸ் கம்பெனியில் தாக்கல் செய்துவைத்து கட்டணம் செலுத்திக்கொண்டு வந்தால் அந்தப்பணம் அவர்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் சொத்தாகும் புருஷனுக்காவது அல்லது அவனுடைய கடன்காரர்களுக்காவது அல்லது அவனுடைய எஸ்டேட்டிற்காவது அந்த சொத்து சேரமாட்டாது.

இந்த ஆக்ட் பிரிடிஷ் இந்தியா முழுதிலும் வியாபித்திருக்கும்; ஆகையால் இந்த ஆகட்டின்படி இறந்துபோன வெங்கடரத்தனம் லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியில் இன்சூரன்ஸ் செய்துவைத்த தொகை முதல் பிரதிவாதி முதலிய குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட்சொத்தாகப்போகின்றது. ஆனால் இன்சூரன்ஸ் செய்துவைத்த வெங்கடரத்தனமும் அவருடைய புத்திரியும் புத்திரிகளும் இந்துக்களாக விருக்கிறபடியால் இந்தப்பிரிவு அவர்களுக்குப் பொருந்தாதென்று அப்பீல் பிரதிவாதியின் தரப்பில் கக்ஷி சொல்லப்படுகிறது. எந்த கிளா (Clause) சின் ஆதாரத்தின்படி இப்படி சொல்லப்படுகிறதோ அந்தக்கிளாஸ் அடியிற்கண்டபடி கூறுகின்றது:—இந்த ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிற எந்த பிரிவும், ஸ்திரீ விவாகம் செய்த சமயத்தில் ஹிந்து, முகமதிய, பௌத்தவ, சிக், அல்லது ஜெயினிமதத்தை அனுஷ்டித்து வந்தாலும் அல்லது அவளுடைய புருஷன் ஷை மதங்களில் ஒன்றை அனுஷ்டித்து வந்தாலும் இந்த ஆக்ட் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த லாப்பாயிண்ட் சம்பந்தமாக ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர் அவர்களும் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் அவர்களும் விவாகமான ஸ்திரீயின் சொத்து ஆக்ட்டின் பல பிரிவுகளை ஆராய்ந்து மேலே சொல்லப்பட்ட 6-வது பிரிவு இந்த வியாஜ்ஜியத்திற்குப் பொருந்துமென்று தீர்மானித்தார்கள்.

மேலும் வெங்கடரத்தனம் தன்னுடைய சுயார்ஜ்ஜித ஐவேஜியைக்கொண்டு இன்சூரன்ஸ் கம்பெனிக்குச்செலுத்தப்படவேண்டிய கட்டணங்களை செலுத்திக்கொண்டு வந்திருக்கிறார் என்றும் தீர்மானித்தார்கள். வெங்கடரத்தனம் தம்முடைய பாகத்திற்கு ஏதோ ஒரு வீடு பெற்றுக்கொண்டதாகவும் அந்த வீட்டை விற்பனைசெய்ததைக்கொண்டு இன்சூரன்ஸ் கம்பெனிக்குப் பணம் செலுத்தியிருப்பதாகவும் ஜில்லா ஜட்ஜி யூகித்து இன்சூரன்ஸ் கம்பெனி கையிலிருக்கும் தொகை வெங்கடரத்தனத்தின் எஸ்டேட்டைச் சேர்ந்ததென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆனால் இன்சூரன்ஸ் கம்பெனியில் வெங்கடரத்தனம் ஆயுளை இன்சூர் செய்துவைத்தது 1888-ம் வருடத்தில் என்றும், வீடு விற்பனை செய்யப்பட்டது 1904-ம் வருடத்தில் என்றும் ஜில்லா ஜட்ஜிக்கு எடுத்துக் காண்பிக்கப்படவில்லை. மேலும் லயிப் இன்சூரன்ஸ் கம்பெனிக்குச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் ஒருமனிதனுடைய சொந்த ஐவேஜி; ஆகையால் லயிப் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட்ட கட்டணம் சேர்ந்தகுடும்பத்தைச் சேர்ந்தப் பணம் என்று ருஜுப்படுத்த வாதி தவறிப்போயிருக்கிறாரென்று நாங்கள் தீர்மானிக்கின்றோம்.

விவாகமான ஸ்திரீ சொத்து ஆக்ட் இந்தக் கேசிற்குப் பொருந்தாமற் போனபோதிலும் இன்சூரன்ஸ் கம்பெனி பாலிசியில் சொல்லப்பட்டிருக்கிற புத்திரியும் புத்திரர்களும் பாலிசியால் நன்மை அடையவேண்டியவர்கள் (Beneficiaries) என்று பாவிக்கப்பட்டு நடத்தப்படவேண்டுமென்று அப்பீல் வாதியின் தரப்பில் கக்ஷி சொல்லப்படுகிறது. நாராயணன் v. கிருஷ்ணன் கேசில் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பின்படி இறந்துபோன வெங்கடரத்தனம் போலொத்தவர்கள் லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியில் இன்சூரன்ஸ் செய்துவைப்பது அவர்களுடைய குடும்பத்தாருடைய நன்மைக்கென்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்று தீர்மானிக்கின்றோம்.

தென் இந்தியாவில் அனேகர் தங்களுடைய புத்திரிகளுடைய விவாகத்திற்காக இன்சூரன்ஸ் கம்பெனியில் இன்சூரன்ஸ் செய்துவைக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இன்சூரன்ஸ் கம்பெனியார் கையிலிருக்கும் தொகையை இன்சூரன்ஸ் கம்பெனியின் பாலிசியில் யாருடைய பெயர்கள்சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்களுடைய சொத்தாக எண்ணுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெண்சாதி பிள்ளை சம்மதமின்றி அந்த தானத்தை அல்லது ஏற்பாட்டை



ரத்துசெய்யமுடியாது. அதேமாதிரியாக இந்தக்கேசில் புத்திரிக்கு தானம் செய்யப்பட்டிருக்கிறது. வாதி புத்திரியினுடைய பாகத்திற்கு பாத்திதை பாராட்டக் கூடாது.

முதல் பிரதிவாதி இன்சூரன்ஸ் ஆபீஸ் பாலிசியால் நன்மை அடைய வேண்டியவளானபடியால் இன்சூரன்ஸ் கம்பெனியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து தொகையை வசூல் செய்துகொள்ள பாத்தியமுடையவள். அவள் இன்சூரன்ஸ் கம்பெனியின் பாலிசியால் நன்மை அடையவேண்டியவளாக விருந்தால், அவளுக்கு இன்சூரன்ஸ் கம்பெனியார், பிதா இறந்தபின்பேரில் தொகையை புத்திரியிடம் செலுத்தும்படி பாலிசியில் சொல்லப்பட்டிருந்தால் அவள் இன்சூரன்ஸ்கம்பெனியார்பேரில்வியாஜ்ஜியம்கொண்டுவர பாத்திதையற்றவள் என்று இங்கிலாண்டுகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குலாஜ்முக மத்கான் v. உசேனிபீகம் (3) கேசில் பிரிவுகவுன்சிலர் செய்த தீர்ப்பை முன்னிட்டு புத்திரி இன்சூரன்ஸ் கம்பெனியார்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவளா என்கிற பிரஸ்னையும் ஆலோசனை செய்யப்படவேண்டும். ஆயினும் இந்தப் பிரஸ்னை இந்தக்கேசில் ஆராயப்படவேண்டிய தவசியமில்லை. ஏன் என்றால் இன்சூரன்ஸ் கம்பெனி பாலிசியிலேயே தொகை புத்திரியிடம் கொடுக்கப்படக்கூடாது என்றும் அவர்களுக்காக வெங்கடரத்தனத்தால் நியமிக்கப்பட்ட எக்சிக்கியூடடர்களிடம் கொடுக்கப்படவேண்டுமென்றும் பாலிசியிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஓரியண்டல் கவர்ன்மெண்டு செக்கியூரிட்டி லயிப் அசூரன்ஸ் லிமிடெட் v. வன்டேடு அம்மராஜு கேசில் விவாகமான ஸ்திரீ சொத்து ஆக்ட் இந்துக்களுக்குப் பொருந்தாது என்கிற கொள்கையின்பேரில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்தக்கேசில் நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்திற்கு நேர் விரோதமாயிருக்கின்றது. ஆகையால் இந்தத் தீர்ப்பைப் பின்பற்றலாமா என்பது சந்தேகமாயிருக்கிறது. இந்தப் பிரஸ்னை முக்கியமான பிரஸ்னையாக விருக்கிறபடியால் இது புல்பெஞ்சாரால் தீர்மானிக்கப்படவேண்டுமென்று அடியிற்கண்ட கேள்விகளை புல்பெஞ்சாருக்கு அனுப்புகின்றோம்:—

(1) 1874ம் வருடத்திய மூன்றாவது ஆக்ட் விவாகமான ஹிந்து புருஷர்களுக்குப் பொருந்துமா?

(2) பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைப் போலிருக்கும் வியாஜ்ஜியங்களில் புத்திரி இன்சூரன்ஸ் கம்பெனியின்பேரிலாவது அல்லது கடன்காரன்பேரிலாவது வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவளா?

சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட் தீர்ப்பு:—விவாகமான ஸ்திரீ சொத்தின் ஆக்ட்டின் 2-வது பிரிவின்படி ஸ்திரீயாவது அவளுடைய புருஷனாவது விவாக சமயத்தில் இந்து மதத்தை அனுஷ்டித்துக் கொண்டு வந்தால் அவர்களுக்கு இந்த ஆக்ட் பொருந்தாது.

விவாக சமயத்தில் இந்துமதத்தை அனுஷ்டிக்கும் தம்பதிகளுக்கு 4, 5, 7, 8 பிரிவுகள் பொருந்தாதென்று நான் அபிப்பிராயப் படுகின்றேன். ஏன் என்றால் இந்தப்பிரிவுகளில் "விவாகமான ஸ்திரீ" என்கிற பதம் சம்பவித்திருக்கிறது. ஷை விவாகமான ஸ்திரீசொத்து ஆக்ட் 6-வதுபிரிவின் மொத்த தாற்பரியம் என்னவென்றால் ஒரு மனிதன் (இந்து புருஷனாக விருந்தபோதிலும்) தன்னுடைய பெண்சாதி மக்களுக்கு லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியின் மூலியமாக யாதொரு டிரஸ்ட் பத்திரமும் ஏற்படுத்தாமல் ஐவேஜி ஏற்படுத்துவதற்காக வசதி செய்யும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பாலிசியில் சொல்லப்பட்டிருக்கிற ஒப்பந்தப்படி ஒப்பந்தத்தை ஊர்ஜிதப்படுத்த பாத்தியமுடையவர்கள் சம்பந்தப்பட்டவரையில் அதாவது பாலிசியில் சொல்லப்பட்ட பிரகாரம் இன்சூரன்ஸ் கம்பெனியாரைப் பணம் கேட்க பாத்தியமுடையவர்கள் சம்பந்தப்பட்டவரையில் விவாகமான சொத்தின் ஆக்ட் 6-வது பிரிவு ஒப்பந்த சட்டத்தையாவது அல்லது டிரஸ்ட் சட்டத்தையாவது பாதிக்கமாட்டாது.

பாலிசியால் நன்மை அடையவேண்டிய புத்திரி முதலியவர்களுடைய பாத்திதையை ஊர்ஜிதப்படுத்த பாத்தியமுடையவர்கள் இந்தக் கேசில், ஒரு டிரஸ்டி நியமிக்கப்பட்டிருந்தால் அந்த டிரஸ்ட்டிப் பிரத்தியேகமாக ஒரு டிரஸ்டி நியமிக்கப்படாமற்போனால் பணம்யாரிடம் செலுத்தப்படவேண்டியதோ அப்பேர்ப்பட்ட சர்க்கார் டிரஸ்டியே ஒழிய மற்றப்படி பாலிசியால் நன்மை அடையவேண்டிய புத்திரியல்ல.

புத்திரி தனக்கிருக்கும் பாத்திதையைப்பாராட்டி இன்சூரன்ஸ் கம்பெனியார்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவர முடியாது. இறந்துபோனவனுடைய கடன்காரனைவிட தனக்கு அதிக பாத்திதையிருக்கிறதென்று ஸ்தாபிக்க கடன்காரன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரமுடியாது. இன்சூரன்ஸ் கம்பெனியார், இறந்துபோன வெங்கடரத்தனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி தொகையை அவரால் நியமிக்கப்பட்ட டிரஸ்டியினிடம் செலுத்தக் கட்டுப்பட்டவர்கள்.

ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்:—ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயருடைய அபிப்பிராயத்தை ஏற்கனவே எடுத்துக்கூறியிருக்கிறோம்.

ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி:--விவாகமான ஸ்திரீகளின் சொத்து ஆக்ட் 2-வது பிரிவு 6-வது பிரிவின் உத்தேசத்தைத் தடைபடுத்தமாட்டாது. ஏன் என்றால் ஷை 2-வது பிரிவு 6-வது பிரிவுகளின் தாற்பரியப்படி புத்திரி விவாகமான ஸ்திரீயல்ல.

புல்பேன்சுத் தீர்ப்பு:— விவாகமான ஸ்திரீ சொத்து ஆக்ட் 6-வது பிரிவு இந்தக் கேசிற்குப் பொருந்தும் இந்தப் பிரிவினால் இன்சூரன்ஸ் சம்பெனியார் கையிலிருக்கும் தொகை புத்திரிக்காக ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் சொத்தாகின்றது. இந்தத் தொகையின்பேரில் இன்சூரன்ஸ் செய்துவைத்த வெங்கடரத்தனத்தின் கடன்காரர்கள் போகக்கூடாது. இ. லா. ரி. 37 சென். 483, F. Balamba v. K. Krishnayya I. L. R. 37 M. 483.

## NOTES.

## குறிப்புகள்.

(1) இ. லா. ரி. 35 சென். 162, Oriental Goverment Security Life Assurance Ld. v. Vanteddu I. L. R. 35 M. 162.

(2) இ. லா. ரி. 8 சென். 214; Narayana v. Krishna 8 M. 214.

---

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் அபதர்ரகிம்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.

இரண்டாவது அப்பீல் நெ. 1416 of 1910.

அப்தர்மன்குட்டி வகையரு—அப்பீல் வாதிகள்.

*vs.*

சையத்ஆலி வகையரு—அப்பீல்....பிரதிவாதிகள்.

இரண்டாவது அப்பீல் நெ. 1639 of 1910

R. சிதம்பரம் பிள்ளை என்கிற சுப்ராயன் [பிள்ளை—அப்பீல் வாதி.

*vs.*

S. காதர்சா ராவுத்தர் வகையரு—அப்பீல்... [பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—முகமதியலா.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—இந்த இரண்டு அப்பீல்களிலும் மைனர் உண்மையில் யார் வசத்திலிருக்கிறானோ அப்பேர்க்கொற்ற கார்டியனுகிய தாயார் மைனருடைய சொத்தைப் பராதீனம் செய்திருக்கிறாள். இந்த இரண்டு அப்பீல்களிலும் உண்டான ஒரே பிரஸ்னை என்னவென்றால் இந்தப் பாராதீனம் செல்லுமா என்பதே. 1910-ம் வருடத்திய 1416-ம் நெ. இரண்டாவது அப்பீலின் அசல் வியாஜ்ஜியப் பிரியாதில், கார்டியன் தாயாரால் பராதீனம் செய்யப்பட்ட கடைகள், முனுசிபாலிட்டியார், அவைகளில் மச்சமும்மாம்சவிற்பனைசெய்யக்கூடாதென்று தடுத்து விட்டதின்பேரில் காலியாகவிருந்தனவென்றும், மேலும் கடைகள் கிலமாகவிருந்தனவென்றும் தாயாராகிய கார்டியன் அவைகளை ரிப்பேர் செய்ய சக்தியற்றவளாகவிருந்தாள் என்றும் இந்தக் கடைகளை விற்பனைசெய்த தொகையைக்கொண்டு மைனருடைய தங்கைக்கு விவாகம் செய்வதற்காக வாங்கப்பட்டிருந்த கடன்கள் தீர்க்கப்பட்டனவென்றும் இந்தக் காரணங்களை முன்னிட்டு கடைகள் விற்கிரையம் செய்யப்பட்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1910-ம் வருடத்திய 1639-ம் நெ. இரண்டாவது அப்பீலின் அசல் வியாஜ்ஜியம் பிரியாதில் மைனர் குடும்பத்தை அவனுடைய தாயார் மானேஜ்மெண்டுசெய்து கொண்டுவந்ததாகவும் குழந்தைகளை ஆதரித்துக்கொண்டு வந்ததாகவும் மைனருடைய சில அடமான பாத்திதைகளை கிரயம்செய்து குடும்ப கடன்களை தீர்த்துவைத்ததுமன்றி அவசியமான செலவுகளையும் செய்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பராதீனங்கள் செல்லாவணியாகமாட்டா என்று பாலக்காடு டி. மு. கோர்ட்டில் அசல் வியாஜ்ஜியங்கள் கொண்டுவரப்பட்டன.

அசல் வியாஜ்ஜியங்களில் பாலக்காடு டி. மு. கோர்ட்டாரும், அப்பீலில் தென் மலையாளம் சப் கோர்ட்டாரும் பத்துமாபாய் v. விட்டில் உமச்சிபேய் (1) துருகோஜிராவ் v. பக்கீர்சாகிப் அப்தல்காதர் (2) ஆகிய இந்தக் கேஸ்களை பின்பற்றி முகமதிய சட்டத்தின்படி இந்தப் பராதீனம் செலாவணியாகமாட்டாதென்று தீர்மானித்தார்கள். ஆகவே ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—முகமதிய சட்டத்தின்படி மைனர் உண்மையில் யாருடைய வசத்திலிருக்கிறானோ அப்பேர்பட்ட கார்டியன் மைனருடைய சொத்தைப் பராதீனம் செய்தால் அந்தப்பராதீனம் மைனரைக் கட்டுப்படுத்த மாட்டாதென்பது பொது விதி; ஆனால் இந்த விதிக்கு உள்படாதவும் செலாவணியாகக்கூடிய பராதீனங்களுமுண்டு.

மிகுந்த அவசியமான காரியத்தை முன்னிட்டும் பராதீனம் மைனருக்கு நன்மையைப் பயக்கக்கூடிய காரியங்களிலும் மைனர் உண்மையில் யார் வசத்திலிருக்கிறானோ அப்பேர்பட்ட கார்டியன் மைனருக்குச் சொந்தமான ஸ்தாபர சொத்தையும் சங்கம சொத்தையும் பராதீனம் செய்யலாம். முகமதிய சட்டத்தின்படி மைனருக்கு கார்டியனுகவிருக்க அதிகாரமற்ற ஒரு கார்டியன் மைனருடைய சொத்தைப் பராதீனம் செய்தால் அந்தப் பராதீனம் செலாவணியாகாதென்றும் அல்லது செலாவணியாகக்கூடியதல்லவென்றும் சொல்லமுடியாது. அந்தப் பராதீனம் செலாவணியாவதும் செலாவணியாகாததும் மைனர் மேஜர் அடைந்து அந்தப் பராதீனத்தை ஒப்புக்கொள்ளுவதையும் ஒப்புக்கொள்ளாததையும் பொருத்ததாயிருக்கிறது.

# The Indian Law Gazette.

PART II

# இந்திய சட்ட கெஜட்.

பாகம் II.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915ஆு ஜூலைமீ [நெ. 3

## Cases From The Indian Law Bsports.

## இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்.

---

சென்னப்பட்டணம் ஐக்கோர்டடு.
சிவில் அப்பீல்.

---

ஜட்ஜிகள்:—ஆக்டிங் சீப்ஜட்ஜி
சர் ரால்ப் பென்சன்
ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்.

அப்பீல் நெ. 5 of 1911.

வள்ளி அம்மாள்—வாதி, அப்பீல்வாதி.

VS.

சென்னைக் கார்பொரேஷன்—பிரதிவாதிகள், அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—நகர் முனிசிபாலிட்டி ஆக்ட்.

கேசின் விபரம்:—சென்னை முனிசிபாலிட்டி எல்லைக்குள் சிங்கன்னநாய்க்கன் தெருவு 36-ம் நெம்பர் வீடு வாதிக்குச் சொந்தமானது. வாதி ஷை வீட்டை ரிப்பேர் செய்ய அனுமதி கொடுக்க வேண்டுமென்று முனிசிபாலிட்டிக்கு ஒரு மனு 1909-ஆு ஏப்ரல்மீ எழுதிக்கொண்டனள். முனிசிபாலிட்டியார் அனுமதி கொடுத்தார்கள். கார்பொரேஷன் பிரசிடெண்டு வீட்டைப்போய் பார்வையிட்டார். வாதி வீட்டை ரிப்பேர்செய்வதற்கு அனுமதிபெற்றுக்கொண்டு வீட்டில் அனேக ஜன்னல் முதலியவைகளையும் இன்னும் சில நூதன வேலைகளையும் செய்திருப்பதாக பிரசிடெண்டு அபிப்பிராயப்பட்டு நகர் முனிசிபாலிட்டி ஆக்ட் (III of 1904) 287 - வதுபிரிவு 1-வது கிளாசின்படி வீட்டில் நூதனமாகச் செய்யப்பட்ட வேலைகளை எல்லாம் இடித்துப்போடும்படி வாதிக்கு நிபந்தனைக்குட்பட்ட ஒரு உத்திரவுபிறப்பித்தார். அந்த நிபந்தனைக்குட்பட்ட உத்திரவு பிரசிடெண்டால் பிறகு ஷை ஆக்ட் 287-வது பிரிவு 2-வது கிளாசால் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த உத்திரவிற்கு விரோதமாக வாதி முனிசிபாலிட்டி ஸ்டாண்டிங் கமிட்டிக்கு அப்பீல் செய்துகொண்டனள். வாதி சொன்ன கக்ஷி என்னவென்றால் பிரசிடெண்டு எந்த அறைகளை இடித்துப் போடும்படி உத்திரவு செய்திருகிறாரோ அந்த

அறைகள் கடந்த 20-வருஷமாக வீட்டில் இருந்துக் கொண்டிருக்கின்றன வென்றும் புதிய அறைகள் அல்லவென்றும் தான் வீட்டில் யாதொரு புதிய வேலைகளையும் நடத்தவில்லை என்றும் ஆதலால் பிரசிடெண்டாவது அல்லது கார்பொரேஷனாவது அவைகளை இடித்துவிடும்படி உத்திரவுசெய்ய பாத்தியமற்றவர்களென்பதே. ஆதலால் கார்பொரேஷன் அந்த அறைகளை இடித்துப்போடாமலிருக்கும்படியாக இன்ஜங்ஷன் உத்திரவு முனிசிபாலிட்டிக்குப் பிறப்பிக்கவேண்டுமென்று வாதி பிரார்த்தித்துக் கொண்டனள். ஸ்டாண்டிங் கமிட்டியார் (Standing Committee) பிரசிடெண்டுசெய்த உத்திரவில் பிரவேசிக்க முடியாதென்று சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஆகவே வாதி ஸ்டாண்டிங் கமிட்டியாருடைய உத்திரவிற்கு விரோதமாக சிட்டி சிவில் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டாள்.

பிரதிவாதியின் ஆக்ஷேபனை:—ஸ்டாண்டிங் கமிட்டியார் செய்த உத்திரவே முடிவான உத்திரவென்றும் அந்தத்தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளக் கூடாதென்றும் ஆகையால் கார்பொரேஷன்பேரில் கொண்டு வந்திருக்கும் வியாஜ்ஜியம் சிட்டி நகர் ஆக்ட் 287-வது பிரிவு 3-வது கிளாசின்படி செலாவணியாகக் கூடியதல்லவென்று கக்ஷி சொன்னார்கள்.

சிட்டி சிவில் கோர்ட்டார் தீர்ப்பு:—ஸ்டாண்டிங் கமிட்டியார்செய்த உத்திரவே முடிவான உத்திரவென்றும் அந்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளக் கூடாதென்று முனிசிபாலிட்டி சொல்லும் கக்ஷியை சிட்டி சிவில் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் பிரதிவாதிகளுக்கு இன்ஜங்ஷன் உத்திரவு பிறப்பிக்கும்பொருட்டு வியாஜ்ஜியம் சிட்டி சிவில் கோர்ட்டில் கொண்டுவரப்பட்டிருக்கக் கூடாதென்றும் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும் போலாராம் சவுத்திரி v. கல்கத்தாக் கார்பொரேஷன் (1) வியாஜ்ஜியத்தில் சொல்லப்பட்ட தீர்ப்பைப் பின்பற்றி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டனள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெசர்ஸ் T R. வெங்கடராம சாஸ்திரியார், K. நரசிம்ம அய்யர் ஆகிய இவர்களுக்காக வக்கீல் மிஸ்டர் V. ரமேசமும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் K. ஸ்ரீனிவாசய்யங்கார், P. துரைசாமி அய்யங்கார் ஆகிய இருவர்களுக்குப் பதிலாக மிஸ்டர் (இப்போது ஐக்கோர்ட்டு ஜட்ஜியாகவிருக்கும்) T. V. சேஷகிரி அய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—போலாராம் சவுத்திரி கேஸ் இந்த வியாஜ்ஜியத்திற்குப் பொருந்தாது. ஆயினும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக ஆஜராயிருக்கும் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் இரண்டுவிதமாக ஆர்குமெண்டு பேசுகின்றார். அவருடைய முதல் ஆக்ஷேபனை என்னவென்றால் வாதியின்வீட்டிலிருக்கும் அறைகளை இடித்துப்போடும்படியாக பிரசிடெண்டு செய்த உத்திரவை ஸ்டாண்டிங் கமிட்டியார் உறுதிப்படுத்திவிட்டபடியால், அந்த உறுதிஉத்திரவே நகர் முனிசிபாலிட்டி ஆக்ட் 287-வது பிரிவு 3-வது கிளாசின்படி முடிவான உத்திரவாகப் போய்விடுகிறதென்றும் அந்த உத்திரவிற்கு விரோதமாக கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்துகொள்ள முடியாதென்று சொல்லுகிறார். நகர் முனிசிபாலிட்டி ஆக்ட்டின் நிபந்தனைகளுக்கு விரோதமாக புதிதாக ஒரு வீடு கட்டப்பட்டிருக்கிறதென்று பிரசிடெண்டு அபிப்பிராயப்பட்டு அதை இடித்துப்போடும்படி உத்திரவு செய்திருந்து அந்த உத்திரவை முன்னிட்டு அந்த வீடு இடிக்கப்பட்டுப்போயிருந்து அந்த வீடு புதியவீடாய் இராமல் உண்மையில் பழைய வீடு என்று ருஜுப்பட்டால் உள்ளபடி வீட்டின் சொந்தக்காரனுக்கு நஷ்டம் நேரிட்டிருக்கிறதென்றும் அவனுக்குப்பரிகாரம் செய்யவேண்டிய தவசியமென்பது இருகக்ஷிக்காரர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஒரு பாத்திதையிருக்கிறதென்றும் அந்த பாத்திதை புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்று தெரியவந்தால், வியாஜ்ஜியமூலம் உண்டாகின்றது. இப்பேர்ப்பட்ட வியாஜ்ஜியத்தைப்பிடித்து விசாரணைசெய்வதை தடுக்கக்கூடிய வேறு காரணங்கள் இருந்தாலொழிய சாதாரணசிட்டிசிவில்கோர்ட்டார்கள்பிடித்து விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஸ்டாண்டிங்கமிட்டியார் செய்த உத்திரவிற்கு விரோதமாக கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளக்கூடாதென்று வெளிப்படையாக சட்டத்தில் சொல்லப்படவில்லை நகர் முனிசிபாலிட்டி ஆக்ட் 287-வது பிரிவு 3-வது கிளாசில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம்கூடி. ஸ்டாண்டிங் கமிட்டியாருடைய உத்திரவு முடிவான உத்திரவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அந்த உத்திரவிற்குமேல் அப்பீல் செய்துகொள்ளக்கூடாதென்று நாம் நினைத்துக்கொள்ளக்கூடியதாயிருக்கிறதேயொழிய ஸ்டாண்டிங் கமிட்டியாருடைய உத்திரவிற்கு விரோதமாக கோர்ட்டுகளில் அப்பீல் செய்துகொள்ளக் கூடாதென்று வெளிப்படையாக அந்தப் பிரிவில் சொல்லப்படவில்லை.

பிரசிடெண்டு செய்த உத்திரவைப் பரிசிலனை செய்து பரிகாரம் கொடுக்கப்பட்ட வேண்டிய கேஸ்களில் பரிகாரம் கொடுக்க ஒரு ஸ்பெஷல் கோர்ட்டு என்று சொல்லும்படியான ஸ்டாண்டிங் கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருப்பது சாதாரணக் கோர்ட்டுகளில் அந்தக்கமிட்டியார் உத்திரவிற்கு விரோதமாக வியாஜ்ஜியம் கொண்டுவரப்படுவதைத் தடுக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் முனிசிபாலிட்டியாரால் விதிக்கப்படும் வீட்டுவரி, வண்டிவரி, சுங்கன்வரி முதலானவரிகளுக்கு விரோதமாகவரும் புகார்மனுக்களை கார்பொரேஷன் பிரசிடெண்டும் இரண்டுகமிஷனர்களும்சேர்ந்து விசாரணை செய்து தீர்மானிக்கின்றார்கள். அந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக மாஜிஸ்டிரேட்டுகளிடம் அப்பீல் செய்து கொள்ளப்படுகிறது. மாஜிஸ்டிரேட்டுகளின் முன்னில கொண்டுவரப்படும் கேஸ்கள் சட்டப்பாயின்ட் உடையனவாகவிருந்தால்மாஜிஸ்டிரேட்டுகள் அப்பேர்ப்பட்ட கேஸ்களை ஐக்கோர்ட்டாருடையதீர்மானத்திற்குஅனுப்பிவிடுகிறார்கள். ஐக்கோர்ட்டார் எப்படி உத்திரவுசெய்கிறார்களோ அந்த உத்திரவின்படி அந்தக்கேஸ்களை பயில்செய்து விடுகிறார்கள். பிரசிடெண்டும் இரண்டு கமிஷனர்களும் செய்யும் தீர்மானத்திற்கு விரோதமாக செய்துக் கொள்ளப்படும் அப்பீல்களை மாஜிஸ்ரேட் விசாரணை செய்து பைசல் செய்வது ஸ்பெஷல்கோர்ட்டு என்று சொல்லப்படவேண்டும். முனிசிபாலிட்டி விஷயங்களைப்பற்றித் தீர்மானிக்க அந்தக்கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்யும் தீர்மானமும் முடிவான தீர்மானம் என்று அந்தக் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பைஷங்கா V. பம்பாய் முனிசிபல் கார்பொரேஷன் (2) ஆதலால் இப்போது நாம் தீர்மானிக்க வேண்டிய பிரஸ்னை என்னவென்றால் கார்பொரேஷன் ஸ்டாண்டிங்கமிட்டியார் ஸ்பெஷல் கோர்ட்டாரால் அந்த கமிட்டியார் செய்யும்தீர்மானம் முடிவான தீர்மானமா என்பதே. பிரசிடெண்டும் 8-கமிஷனர்களும் சேர்ந்த சபைக்கு ஸ்டாண்டிங்கமிட்டி என்றுபெயர். இந்த 8-மெம்பர்களும் கார்பொரேஷன் கமிஷனர்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் ஆக்ட்டின் பிரிவுகளில் விபரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. (நகர் முனிசிபாலிட்டி ஆக்ட் 17, 20, 28ம் பிரிவுகளைப் பார்க்கவும்.) அவர்கள் உள்ளபடி கார்பொரேஷனைச் சேர்ந்தவர்கள். ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் கார்பொரேஷனுடைய கடமைகளை அவர்கள் செய்கிறார்கள். அவர்கள்கூடிய சபை சுயேச்சையான சபையல்ல. ஆதலால் வரிசெலுத்துவோர்களுக்கும் கார்பொரேஷனுக்குமுண்டாகும் தகரார்களைப்பற்றி ஒரு முடிவான தீர்மானம் சொல்ல அதிகாரமுடையவர்களென்று எண்ணப்படக் கூடாது. ஆகையால் ஸ்டாண்டிங் கமிட்டி முனிசிபாலிட்டி விஷயங்களைக் குறித்து ஒரு முடிவான தீர்மானம் சொல்லும்படியான ஸ்பெஷல் கோர்ட்டு என்று எண்ணப்படக்கூடாது.



நகர் முனிசிபல் ஆக்ட் 287-வது பிரிவில் ஸ்டாண்டிங் கமிட்டியார் செய்யும் தீர்மானம் முடிவான தீர்மானம்என்று சொல்லப்பட்டிருப்பதால் ஸ்டாண்டிங் கமிட்டியார் செய்த உத்திரவிற்கு விரோதமாக முனிசிபல் கமிஷனர்கள் (General body) அப்பீல் செய்து கொள்ளக் கூடாதென்பது தாற்பரியமேயொழிய ஸ்டாண்டிங் கமிட்டியார் செய்த உத்திரவிற்கு விரோதமாக சாதாரண கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள கூடாதென்பது தாற்பரியமல்லவென்று நாங்கள் அபிப்பிராயப்படுகின்றோம். அப்பீல் பிரதிவாதிகள் இன்னொரு கக்ஷியும் சொல்லியிருக்கிறார்கள். அதாவது என்னவென்றால் வாதி கார்பொரேஷன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கக் கூடாதென்றும் அப்படி ஏதேனும் வியாஜ்ஜியமூலமிருந்து வியாஜ்ஜியம் செய்ய வேண்டுமானால் ஸ்டாண்டிங் கமிட்டியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்க வேண்டுமென்றும் கக்ஷி சொல்லி அந்தக் கக்ஷிக்கு ஆதாரமாக போலாராம் சவுத்திரி v. கல்கத்தா கார்பொரேஷன் கேசில் (3) சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பை அப்பீல் பிரதிவாதிகளின் லாயர்கள் நமக்கு எடுத்துக் காண்பிக்கிறார்கள். ஆனால் அந்தக் கேசிற்கும் பிரஸ்தாப கேசிற்கும் முழுதிலும் வித்தியாசமிருக்கிறது. போலாராம் சவுத்திரி கேசில் ஸ்டாண்டிங் கமிட்டியார் சட்டப்படி செய்ய வேண்டிய கடைமையை செய்யத்தவறிப் போனதற்காக காரபொரேஷன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டதென்றும் ஆதலால் ஸ்டாண்டிங் கமிட்டியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்படவேண்டுமென்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். இந்தக் கேசில் அப்படி தீர்மானம் செய்யமுடியாது. பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் கார்பொரேஷன் தரப்பில் பிரசிடெண்டு உத்திரவு செய்திருக்கிறார். ஆதலால் கீழ்க்கோர்ட்டு டிக்கிரியை ரத்து செய்து இந்த வியாஜ்ஜியத்தைப் பயலில் வைத்துக் கொண்டு சட்டப்படி விசாரணை செய்து பைசல் செய்யும்படியாக சிட்டி சிவில் கோர்ட்டாருக்கு உத்திரவு செய்கின்றோம். இந்த அப்பீல செலவை அப்பீல் வாதி அடைய பாத்திய முடையவள். கீழ்க்கோர்ட்டுச் செலவுகள் தொகை கீழ்க்கோர்ட்டாருடைய முடிவான டிக்கிரியைப் பொருத்தது. இ. லா. ரி. 38 சென். 41, Valli Ammal vs. The Corporation of Madras, I. L. R. 38 Mad. 41.

## NOTES.

### குறிப்புகள்.

(1) இ. லா ரி. 36 கல். 671. Bholeram Chowdry vs. Corqoration of Calcutia, I. L. R. 36 Cal 671.

(2) இ. லா. ரி. 31. பம். 604. Bhaishanker vs. Corporation of Bombay, I. L. R. 31 Bom. 604.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

1912-ம் வருடத்திய இரண்டாவது அப்பீல்
நே. 217 of 1912.

கமலாபாயி—வாதி—அப்பீல் வாதி
vs
பாகிரதிபாய்—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—ஹிந்துலா வியாஜ்ஜிய சங்கிரகம்:—தென்கன்னடம் ஜில்லாவில் சர்வோத்தமராவ் என்பவருக்கு அவருடைய முதல் மனைவி சிங்காரபாயி மூலியமாக சித்தா என்று ஒரு மைனர் புத்திரியிருந்தாள். இவளுடைய நன்மைக்காக சர்வோத்தமராவ் தன்னுடைய ஆயுளை கனடா சன் லயிப் இன்சூரன்ஸ் கம்பெனியில் ரூ. 3 ஆயிரத்திற்கு இன்சூரன்ஸ் செய்து வைத்திருந்தார். இந்தவியாஜ்ஜியத்தின் வாதி ஷை சிங்காரபாயின் தங்கை. சர்வோத்தமராவ் என்பவர் ஷை இன்சூரன்ஸ் கம்பெனிக்கு முதல் தவணை கட்டிவிட்டு 6—6—1902ல் இறந்துபோய் விட்டார். ஆகையால் ஷை இன்சூரன்ஸ் கம்பெனியார் ஷை சர்வோத்தமராவின் மைனர் புத்திரியாகிய சித்தாபாயிக்குக் கொடுக்கும்படி நேர்ந்துபோய் விட்டது. சித்தாபாயி 1903ம் வருடம் மார்ச்சுமீ ம் இறந்து போய் விட்டாள். பிரதிவாதியாகிய பாகிரதிபாய் என்பவள் சர்வோத்தமராவின் இரண்டாவது விதவை. அதாவது சித்தாபாயின் மாற்றான் தாயார். பிரதிவாதி சித்தாபாயிக்குத் தான் வாரிசென்றும் சித்தாபாயிக்குச் சேரவேண்டிய ரூ. 3 ஆயிரமும் தன்னைச் சேரவேண்டுமென்றும் ஆதலால் தனக்கு வார்சு செர்ட்டிபிக்கேட் கொடுக்கப்படவேண்டுமென்று தென்கன்னடம் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருக்கு மனு செய்து கொண்டனள். தென்கன்னடம் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் பிரதிவாதிக்கு வார்சு செர்ட்டிபிக்கேட் கொடுக்கப்படும்படியாக உத்திரவு செய்தார்கள். ஆனால் அந்த உத்திரவு ஒரு நிபந்தனைக்குட் படுத்தப்பட்டது. அதென்ன நிபந்தனை என்னவென்றால் பிரதிவாதியிடமிருந்து ரூபா மூவாயிரத்திற்கு ஜாமீன் வாங்கிக்கொண்டு வார்சு செர்ட்டிபிக்கேட் பிறப்பிக்கும்படியாக உத்திரவு செய்திருந்தார்கள். பிரதிவாதி ஜாமீன்கட்ட முடியவில்லை. ஆகவே ரூ. 3 ஆயிரம் இன்சூரன்ஸ் கம்பெனியாரால் கோர்ட்டில் கட்டப்பட்டது. ஆதலால் வாதி தான் இறந்துபோன சித்தாபாயிக்குச் சொந்தமென்றும் அவளுக்குத்தான்வார்சாக வரும்படியான பாத்தியதை உடையவள் என்று கோர்ட்டார் கூறும்படியாக தென்கன்னடம் சப் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தாள்.

சப் கோர்ட்டுத் தீர்ப்பு:—சப் கோர்ட்டார் வாதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள். இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக பிரதிவாதி ஜில்லா ஜட்ஜியிடம் அப்பீல் செய்து கொண்டனள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—சித்தாபாயிக்கு வார்சாகவருவதற்குப்பிரதிவாதியைவிட வாதிக்கு அதில் பாத்தியதை கிடையாதென்று ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானித்து வியாஜ்ஜியத்தை தள்ளும்படி செய்துவிட்டார்கள்.

ஆகவே வாதி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்மானத்திற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டனள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் B. சீத்தாராமராவும் அப்பீல் பிரதிவாதிக்காக எக்ன நாராயண ஆதிகாவும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—வாதி இறந்துபோன ஹிந்து குடும்ப கன்னிகையாகிய சித்தாபாயிக்கு தாய் வழி அத்தை உறவு உடையவள். பிரதிவாதி அவளுக்கு மாற்றான்தாய்த் தாயார். இந்தக் கேஸில் நாம் யோசனைசெய்து தீர்மானிக்க வேண்டிய ஒரே பிரஸ்னை என்னவென்றால் வாதி சித்தாபாயிக்கு வார்சாகவர பிரதிவாதியைவிட அதிகபாத்தியதையுடையளாஎன்பதே. ஒரு ஹிந்து குடும்ப கன்னிகையின் சொத்துக்கு வார்சாகவர அவளுடைய தாயாரும் தகப்பனும் இல்லாமற்போனால் அந்த கன்னிகையின்சொத்து அவளுடைய புருஷனுடைய சபிந்த பந்துக்களுக்குச் சேருமென்று துக்காராம் V. நாராயணராமச்சந்திரா (1) கேஸிலும் ஜல்குலாபாயி V. ஜீத்தர் அப்பாஜி (2) கேஸிலும் பம்பாய் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அபிப்பிராயத்தை துவாரக நாதருய் V. சாரட் சந்திர சிங்ருய் (3) கேஸில் கல்கத்தா ஐக்கோர்ட்டார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்கத்தாக் கேஸில் கன்னிகையின் தாய் வழி பந்துக்களுக்கும் தகப்பன் வழி பந்துக்களுக்கும் யாதொரு தகராருமில்லை. ஒரு ஹிந்து கன்னிகைக்குத்தாயும் தகப்பனும் இல்லாமற்போனால் அவளுக்கு யார் வார்சாகவர வேண்டிய தென்பதைப் பற்றி மிதாக்ஷரா சட்டத்தில் வெளிப்படையாக யாதொன்றும் சொல்லப்படவில்லை. பெற்றோர்கள் இறந்துபோனால் அவர்களுடைய சொத்துகளுக்கு இன்னார் வார்சுபாத்திதை உடையவர்கள் என்று ஷை சட்டம் கூறிவிட்டு அத்துடன் நிறுத்திவிட்டது. ஆனால் குழந்தை இல்லாத விதவை இறந்துபோனால் அவளுடைய சொத்துக்கு யார் வார்சாக வரவேண்டியது என்று மிதாக்ஷரா சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால் அவளுடைய சொத்துக்கள் அவளுடைய பெற்றோர்களுக்குப் போகவேண்டுமென்றும் அவர்களும் இல்லாமற் போனால் மிஸ்டர் சீத்தாராமராவ் கூறி சொல்லுவதுபோல அவர்களுடைய சபிந்த பந்துக்களுக்குப் போகவேண்டுமென்பதே. இந்து கன்னிகை இறந்து போனால் அவளுடைய சொத்திற்கு யார் வார்சாக வரவேண்டிய தென்பதைப் பற்றி வீரமித்திரோதயா உபநிடத்திலும் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் புத்திர வார்சு இல்லாமல் இறந்துபோகும் விவாகமான பெண்ணிற்கு யார் வார்சாக வரவேண்டிய தென்று மிதாக்ஷாரசட்டத்தைப் போலவே கூறியிருக்கின்றது. கன்னிகையின் தாயார் விவாகம் செய்து கொண்டபிறகு கன்னிகையின் தகப்பனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவளாகப் போய்விட்டபடியால் "தாய் தகப்பனுடைய சபிந்த பந்துகாள்" என்றால் எல்லாம் கூடி ஒரே ஜனங்கள் என்று பம்பாய் ஐக்கோர்ட்டாரால் செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடா தென்பதற்கு காரணத்தைக் காணோம். ஆனால் தகப்பனுடைய விதவை சபிந்த பந்துத்வம் பாராட்டி அவருடைய சொத்துக்களுக்கு வார்சாக வரக்கூடாதென்று அப்பீல் வாதிக்காக ஆஜராயிருக்கும் மிஸ்டர் சித்தாராமராவ் ஆக்ஷேபிக்கின்றார். Agnate பந்துக்கள் சபிந்த பந்துக்களாகவிருந்தால் அவர்கள் வார்சு பாத்தியதை பாராட்டி வரிசைக் கிரமமாக வார்சாக வருகிறபடியால் ஸ்திரி கோத்திரஜா சபிந்த பந்துக்கள் வார்சாக வருகிறதில்லை என்று அப்பீல் வாதியின் லாயர் கூறி சொல்லுகின்றார் இந்த அனுஷ்டாத்திலிருக்கிற தென்பதில் சந்தேகமில்லை ஆயினும் புருஷனுடைய சொத்துக்கு வார்சு பாத்தியம் பாராட்டும் விஷயத்தில்மட்டிலும் இந்த விதி அனுஷ்டிக் கப்பட்டு வருகிறது, பாலம்மா V. புல்லய்யா (4) கேஸிலும், தாயம்மாள் V. அண்ணாமலை முதலி (5) கேஸிலும் இந்த விதியை அனுஷ்டிக்கும் படியாகக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்திரிதன் சொத்திற்கு வார்சாகவர புத்திரி சபிந்த பந்துத்துவ முறையில் பாத்தியமுடையவள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மன்னுசப்பிள்ளை V. சிவபாக்கியத்தாச்சி (6) கேஸைப் பார்க்கவும் மனைவி சம்மந்தப்பட்ட கேஸிலும் அதே அபிப்பிராயம் நாம் கொள்ளக் கூடாதென்பதற்கு யாதொரு காரணத்தையும் காணோம், மேலும் இந்த அபிப்பிராயம் மிகவும் மிதாக்ஷராவால் ஆதரிக்கப்படுகிறது. பெண்ஜாதி புருஷனுடைய தேகத்தில் பாதி என்று எண்ணப்பட்டு வருகிறபடியால் அவள் சபிந்த பந்தத்தவம் பாராட்டி புருஷனுடைய சொத்திற்கு வார்சாக வந்து அடைகிறாள் என்று மிதாக்ஷரா சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.



ஆதலால் சித்தாபாயினுடைய சொத்திற்குவார்சாக வந்து பாத்தியம் பாராட்ட வாதிக்குப் பிரதிவாதியைவிட அதிக பாத்தியதை இல்லை என்று ஜில்லா ஜட்ஜி செய்திருக்கும் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டு இந்த இரண்டாவது அப்பீலை செலவு தொகையுடன் தள்ளும்படி செய்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். Kamala Bai V. vs. Bhagirathi Bai, I. L. R 38. Mad 45.

---

NOTES.
குறிப்புகள்.

(1) இ. லா. ரி. 36 பம். 339 Tukaram V. Narayana Ramachandra, I. L. R. 36 Bom 339.

(2) இ. லா. ரி. 32 பம். 409. Janglubai V. Jeetha Appaji, I. L. R. 32 Bom. 409.

(3) இ. லா. ரி. 39 கல். 319. Dwaraka Nath Roy V. Surat Chanbra Singh Roy, I. L. R. 39 Cal. 3.9.

(4) இ. லா. ரி. 18 சென். 168. Balamma V. Pullayya, 18 Mad. 168.

(5) இ. லா. ரி. 19 சென். 35. Thayammal V. Annamalai Mudali, I. L. R. 19 Mad. 35.

(6) 24 ம. லா. ஜெ. 851. Manja Pilaci V. Sivabagiathachi, 24 M. L. J. 851.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

சங்கரராமஅய்யர்-பிரதிவாதி-அப்பீல் வாதி.
Vs.
R. பத்மநாபய்யர்-வாதி-அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—ஸ்மால்காஸ் கோர்ட்டு அதிகாரம்.

வியாஜ்ஜியசங்கிரகம்:—சப்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் அசல் தரப்பு வியாஜ்ஜியமாக பாவிக்கப்பட்டு விசாரணை செய்யப்படும்படியாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாரால் டி. மு. கோர்ட்டாருக்கு முதலில் டிரான்ஸ்பர் செய்யப்பட்டது. இதன் பிறகு வேறொரு டி. மு. கோர்ட்டாருக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டது.

டி. மு கோர்ட்டாருடைய தீர்ப்பு:—டி. மு. கோர்ட்டார் இந்தக்கேசை விசாரணைசெய்து தீர்ப்பு சொன்னார்கள்.

டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்புக்கு விரோதமாக தூத்துக்குடி சப்க் கோர்ட்டில் அப்பீல் செய்துக் கொள்ளப்பட்டது.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—சப்கோர்ட்டார் இந்தக்கேசை பயலில் வைத்துக் கொண்டு விசாரணைசெய்து தீர்ப்புசொன்னார்கள்.

இந்தத்தீர்ப்புக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல்செய்து கொள்ளப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல்வாதிக்காக மிஸ்டர் T. R. ராமச்சந்திரய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. சீனிவாசய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—சி. பு. சோ. (Act v. 9. 1908) 24-வது பிரிவின்படி ஸ்மால்காஸ் கோர்ட்டு அதிகாரம் எந்தக் கோர்ட்டிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தக்கோர்ட்டு ஸ்மால்காஸ் கோர்ட்டு என்று எண்ணப்படவேண்டும். டிரான்ஸ்பர் செய்யப்பட்ட வியாஜ்ஜியம் நேரே ஸ்மால்காஸ் கோர்ட்டிலிருந்து டிரான்ஸ்பர் செய்யப்படாமற் போனபோதிலும் எந்தக்கோர்ட்டாருக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டதோ அந்தகோர்ட்டார் ஸ்மால்காஸ் கோர்ட்டார் என்று எண்ணப்படவேண்டும். ஆதலால் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து டி. மு. கோர்ட்டார் கொடுத்த டிக்கிரி ஸ்மால்காஸ் கோர்ட்டு டிக்கிரி. இந்த டிக்கிரிக்கு விரோதமாக ஜில்லா ஜட்ஜி அல்லது சப்ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38, சென் 25. Sankara Rama yer v. R. Padmanabha Iyer. I L. R 38 Mad 25.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சுந்திரய்யர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்

S. அப்பள நரசிம்மலு வகையரு வாதிகள்-அப்பீல் வாதிகள்.

VS.

M. சந்நியாசி வகையரு-பிரதிவாதிகள்-அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயிண்ட்:—இனம் தாரும் குடியும்.

வியாஜ்ஜியசங்கிரகம்:—பிரதிவாதிகள் தாவாவில் சம்பந்தப்பட்ட நிலங்களின் ரயத்துக்கள் அல்லது குடிகள். வாதிகள் தாவா நிலங்களுக்கு இனாம்தார்கள். பிரதிவாதிகள் செலுத்தவேண்டிய ரெவினியூபாக்கிக்காக வாதிகள் பிரதிவாதிகள் பேரில் பார்வதிபுரம் சப் கலெக்டர் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். தாவா நிலங்கள் சங்கம் வால்ஸர் ஜெமீனிலிருக்கின்றன. இந்நிலங்கள் 'தமிமில்லா இனாம்" (Darimilla) என்று சொல்லப்படுகிறது. அதாவது ஜெமீன் சாஸ்வத செட்டில் மெண்டு செய்யப்பட்ட பிறகு இந்த நிலங்கள் இனாமாக வாதிகளுக்கு விடப்பட்டன.

தாவா நிலங்கள் சென்னைப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் 3-வது பிரிவு 2-வது கிளாசின்படி எஸ்டேட்டாகமாட்டாதாதலால் ரெவினியூக்கோர்ட்டார் இந்தவியாஜ்ஜியத்தை பிடித்து விசாரணை செய்ய அதிகாரமுடையவர்களல்லவென்று சொல்லி சப் கலெக்டர் பிரியாதைத்திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக வாதிகள் விசாகப்பட்டணம் ஜில்லா ஜட்ஜிக் கோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டார்கள்.

ஜில்லா ஜட்ஜிக் கோர்ட்டார் தீர்ப்பு:—சப் கலெக்டர் அபிப்பிராயம் கொண்டதுபோலவே அபிப்பிராயப்பட்டு பிரியாதை வாதிகளிடம் வாப்பீஸ் செய்துவிட்டார்கள்.

ஆகவே வாதிகள் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் B. நரசிம்மேஸ்வரராவ் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் P. நாராயணமூர்த்தி ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டாருடைய தீர்ப்பு:—தாவா நிலங்கள் ஜெமீன் சாஸ்வத செட்டில்மெண்டு செய்யப்பட்ட பிறகு ஜெமீன்தாரால் வாதிகளுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டவை ஆதலால் சென்னைப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் 3-வது பிரிவு 5-வது கிளாசின்படி வாதி நில சுவான்தார்களாயிருக்கிறார்கள். ஷை ஆக்ட் ஷை பிரிவின்படி தாவாநிலங்கள் ஒரு எஸ்டேட் என்று சொல்லப்படக் கூடாதனவாயிருந்தபோதிலும் நில சுவான்தார்கள் என்று சொல்லப்படவேண்டும்.

இப்பேர்ப்பட்ட இனாம்தார் தம்முடைய தீர்வை பாக்கிக்காக தம்முடைய குடிகள்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் ஷை பூஸ்திதி ஆக்ட்டின்படி ரெவினியூக்கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டுப் பைசல் செய்யப்படவேண்டியது.

ரெவினியூ கோர்ட்டாருக்கு விசாரணைசெய்ய அதிகாரமிருக்கிறதா அல்லது இல்லையா என்று அறிந்து கொள்ள வாதிகள் நிலசுவான்தார்களா அல்லது இல்லையா என்கிற பிரஸ்னை ஆராயப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டும்

"நில சுவான்தார்" என்கிறபதம் "எஸ்டேட்டின் சொந்தக்காரன்" என்கிற பதங்களால் எவ்வளவு தாற்பரியம் விளங்குகின்றதோ அதைவிட அதிகமாக விளங்கக்கூடியதாயிருக்கிறது. ஒரு எஸ்டேட்டிலிருந்து பாதீனம் செய்யப்பட்ட நிலங்களின் குடிகளிடமிருந்து தீர்வை வசூல் செய்கிறவனுக்கும் நில சுவான்தார் என்று தான் பெயர் என்று தீர்மானிக்கப்பட்டது. இ. ல. ரி. 38-சென்-33- S Appalanarasimhulu v. M. Sanyasi I. L. R. 38 Mad 33.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் அப்தர்ரகீம்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்,

B. கோவிந்தப்பா—வாதி—அப்பீல் வாதி.

vs.

B. ஹனுமந்தப்பா—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—தீர்ப்புக் கடனாளி வியாஜ்ஜிய சங்கிரகம்:—இந்தவியாஜ்ஜியத்தின் வாதியாகிய கோவிந்தப்பா என்பவன் பசலா என்பவனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்திற்காக அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி பசலா பெயரில் ஒரு புரோநோட் எழுதிக்கொடுத்தான். பசலா கோவிந்தப்பாமேல் வியாஜ்ஜியம் கொண்டுவந்து (அசல்வியாஜ்ஜியம் நெ. 135-of-1915) கோவிந்தப்பாபேரில் டிக்கிரி பெற்றான்.



பசலா அந்த டிக்கிரியை பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் முதல் பிரதிவாதியாக விருக்கும் ஹனுமந்தப்பாவுக்கு டிரான்ஸ்பர் செய்தனன். டிக்கிரி டிரான்ஸ்பர் செய்யப்பட்ட பிறகு கோவிந்தப்பா அந்தடிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்துகொண்டான். அந்தஅப்பீல்வியாஜ்ஜியத்தில் டிக்கிரியை டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்ட ஹனுமந்தப்பா ஒரு கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்படவில்லை. இது இப்படியிருக்கும்போது ஹனுமந்தப்பா தான்டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்ட டிக்கிரியை நிறைவேற்றினான்கோவிந்தப்பா டிக்கிரித்தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டான். கோர்ட்டார் கோர்ட்டில் கட்டப்பட்டபணத்தொகையை ஜாமீன் கொடுத்துவிட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஹனுமந்தப்பாவுக்கு உத்திரவுபிறப்பித்தார்கள். ஹனுமந்தப்பா ஜாமீன் கொடுத்துவிட்டு டிக்கிரித்தொகையைக் கோர்ட்டிலிருந்து பெற்றுக்கொண்டான்.

கோவிந்தப்பா தன்பேரில் வாங்கப்பட்ட டிக்கிரிக்கு விரோதமாக செய்திருந்த அப்பீல் விசாரணை செய்யப்பட்டு கோவிந்தப்பாபேரில் கொடுக்கப்பட்டிருந்த டிக்கிரி ரத்து செய்யப்பட்டது.

கோவிந்தப்பா தன்னிடமிருந்து வசூல்செய்யப்பட்ட டிக்கிரித்தொகையை ஹனுமந்தப்பா தனக்கு வாப்பீஸ் செய்துவிடவேண்டுமென்று சி. பு. கோ. (Act xlv of 1882) அந்த டிக்கிரியை நிறைவேற்றப்பட்ட கோர்ட்டில் மனு செய்துகொண்டான். இந்த மனு ஹனுமந்தப்பாவால் ஆக்ஷேபிக்கப்படப்பட்டது. ஹனுமந்தப்பாவால்என்ன ஆக்ஷேபணைசொல்லப்பட்டதென்றால் கோவிந்தப்பா வசூல் செய்யப்பட்ட தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள தன்பேரில் புதிதாய் வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமேயொழிய மனுசெய்து கொள்ளக்கூடாதென்று ஆக்ஷேபணை சொன்னார். டிக்கிரியை நிறைவேற்றின கோர்ட்டார் ஹனுமந்தப்பா சொன்ன காரணத்தை ஏற்றுக்கொண்டு மனுவைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஆகவே கோவிந்தப்பா ஹாஸ்பட் டி. மு க். கோர்ட்டில் ஹனுமந்தப்பாவையும் அவனுக்கு ஜாமீன் கொடுத்தவனையும் 1, 2, பிரதிவாதிகளாகச் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டு வந்தான்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—டி. மு. கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்

இந்தடிக்கிரிக்கு விரோதமாக பிரதிவாதியால் சப்கோர்ட்டில் அப்பீல்செய்து கொள்ளப்பட்டது.

சப்கோர்ட்டார் தீர்ப்பு:—அசல் கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஆதலால் இந்தத்தீர்ப்புக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் வாதியால் செய்துகொள்ளப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் T. V. முத்துக்கிருஷ்ணய்யரும், அப்பீல்பிரதிவாதிக்காக ஆனரபில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—டிக்கிரி கடனாளி அந்த டிக்கிரிக்கு விரோதமாகச் செய்துகொள்ளப்பட்ட அப்பீலில் டிக்கிரியை மேடோவர் வாங்கினவன் கக்ஷிக்காரனாகச் சேர்த்துக் கொள்ளப்படாதபோதும் அப்பீலில் மேடோவர் செய்யப்பட்ட டிக்கிரி ரத்து செய்யப்பட்ட போதும் டிக்கிரி கடனாளி அந்த டிக்கிரிக்காகத்தான் செலுத்திய தொகையை மேடோவர்காரனிடமிருந்து வசூல் செய்துக் கொள்ளலாமா என்கிற பிரஸ்னை தான் இந்த வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரஸ்னை வாதி தான்செலுத்திய தொகையை வசூல் செய்துகொள்ளும்பொருட்டு டிக்கிரியை நிறைவேற்றின கோர்ட்டிற்கு மனு செய்துகொள்ளலாமா என்கிற பிரஸ்னை இப்போது ஆராயப்படவேண்டிய அவசியம். ஏன் என்றால் வாதி இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வருவதற்குமுந்தி அப்படி மனு செய்து கொண்டிருக்கிறான். பிரதிவாதி அந்த மனுவை ஆக்ஷேபித்திருக்கிறான். அந்த ஆக்ஷேபணையைக் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு வாதியின் மனுவைத் தள்ளுபடிசெய்திருக்கிறார்கள். ஆதலால் வாதி தான் செலுத்திய தொகையை வசூல்செய்யும்பொருட்டு சி. பு. கோ. (Act xlv of 1882 583-வது பிரிவின்படி மனு செய்துகொள்ள வேண்டுமென்றும் புதிய வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கக்கூடாதென்று கக்ஷி சொல்லிவிடப்படக்கூடாது.

சப் கோர்ட்டார் அசல்கோர்ட்டு டிக்கிரியை மேடோவர் பெற்ற ஹனுமந்தப்பா அப்பீலில் கோவிந்தப்பாவால் கக்ஷிக்காரனாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று காரணம் சொல்லி டி. மு. கோர்ட்டார் வாதிக்குக் கொடுத்த டிக்கிரியை ரத்துசெய்து விட்டார்கள். ஆதலால் அப்பீல் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரி ஹனுமந்தப்பாவைக் கட்டுப்படுத்தாதென்றும் கோவிந்தப்பாவும் பசவாவும் ஏதோ ரகசியமான ஏற்பாடுசெய்துகொண்டு அப்பீல் கோர்ட்டில் அசல் கோர்ட்டு டிக்கிரியை ரத்துசெய்து வைத்திருக்கக் கூடுமென்றும் அப்பீல் பிரதிவாதியான லாயர் கக்ஷிசொல்லுகின்றார். ஆனால் அப்பேர்ப்பட்ட மோசடியாதொன்றும் நடத்தப்பட்டிருப்பதாக இப்போது கக்ஷி சொல்லப்படவில்லை. அப்படி மோசடி நடப்பது சாத்தியமான காரியமேயொழிய சாத்தியமற்ற காரியமல்ல. அப்படி மோசடி நடத்தப்பட்டிருக்கிறதென்று ருஜுப்பட்டால் இந்தவியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருப்பது அதற்கு சரியான ஜவாப்பாயிருக்கும் அப்படி மோசடி நடந்திருப்பதாகத் தெரியாதபோது அப்பீல் கோர்ட்டு டிக்கிரி அசல் கோர்ட்டு டிக்கிரியை மேடோவர்வாங்கினவனை கட்டுப்படுத்தப்படாதென்று நினைக்கக் கூடாமலியிருக்கிறது. டிக்கிரி கடனாளி தன் பேரில் வாங்கப்பட்ட டிக்கிரிக்கு விரோதகாக அப்பீல் செய்துகொண்டால் இஷ்டப்பட்டால் அசல்கோர்ட்டு டிக்கிரியை மேடோவர் வாங்கினவனை கக்ஷிக்காரனாகச் சேர்த்துக்கொள்ளலாம் மேடோவர் வாங்கினவனை கக்ஷிக்காரனாக அவசியம் சேர்த்தேதீர டிக்கிரி கடனாளி கட்டுப்பட்டவன் என்று கக்ஷி சொல்லப்படவில்லை. அசல் கோர்ட்டு டிக்கிரி டிரான்ஸ்பர் செய்யப்பட்டதால் டிக்கிரி கடனாளிக்குள்ள அப்பீல் பாத்திதைகள் யாதொன்றும் பாதிக்கப்படவில்லை. மேடோவர்காரன் இஷ்டப்பட்டால் தன்னையும் அப்பீலில் ஒருகக்ஷிக்காரனாகச் சேர்த்துக்கொள்ளும்படியாக மனுசெய்து கொண்டு தன்னை அப்பீலில் சேர்த்துக் கொண்டிருக்கலாம் அப்படி அவன் அப்பீலில் சேர்த்து விசாரணை செய்யும்படியான பாத்திதையை விட்டு விடும்போது அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரியை ஆக்ஷேபிக்க அவனுக்குபாத்திதையிருக்கிறதென்று சொல்லுவது நியாயத்திற்குப் பொருத்தமில்லாத காரியம். அப்பீல் கோர்ட்டாருடைய டிக்கிரிதான் முடிவான டிக்கிரி அந்த டிக்கிரி பிறப்பதற்கு முந்தி அப்பீல் வியாஜ்ஜியம் அசல்கோர்ட்டு டிக்கிரியை மேடோவர் செய்வது டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டிக்கு விரோதமான காரியம். அப்பீல் ராக்கல் செய்யப்படுவதற்கு முந்தி அசல் கோர்ட்டு டிக்கிரி

மேடோவர் செய்யப்பட்டிருந்தபோதிலும் டிரான்ஸ்பர் ஆப்பாரபர்ட்டி ஆக்ட்டிற்கு விரோதமான காரியம் என்று செட்டப்ப கவுண்டன் V. முத்தய்யா கவுண்டன் (1) கேஸில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அந்த அசல் கோர்ட்டு டிக்கிரி மேடோவர் செய்யப்பட்டது அப்பீல் செய்து கொண்டிருக்கும் டிக்கிரி கடனாளிக்குத் தெரியுமென்று சொல்லப்பட்ட போதிலும் அப்பீல் கோர்ட்டார் முடிவான டிக்கிரி கொடுப்பதற்கு முந்தி டிக்கிரியை மேடோவர் செய்வது டிரான்ஸ்பர் ஆப்பராப்பர்டி என்னும் ஆக்ட்டிற்கு விரோதமான காரியமாகும்.

அப்பீல் பிரதிவாதியின் லாயர் தாம் சொல்லும் கக்ஷிக்கு ஆதாரமாக லாலாபிரசாத் V சாடிக் உசேன் கேஸில் சொல்லப்பட்ட தீர்ப்பை எடுத்துக் காண்பிக்கின்றார். அந்தத் தீர்ப்பு அப்பில் பிரதிவாதிக்கு அனுகூலமா யிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. அப்பீல் வாதியின் லாயர் அவர் சொல்லும் கக்ஷிக்கு டான்ஜி ஜோகி V ஹால் கேஸில் சொல்லப்பட்ட தீர்ப்பை ஆதாரமாக எடுத்துக் கூறுகின்றனர். லாலா பிரசாத் கேசை விசாரணை செய்து ஜட்ஜிகளுக்கு நாங்கள் மறியாதை காண்பிக்கக் கடமைப் பட்டவர்களாக யிருந்த போதிலும் அதில் அவர்கள் சொல்லி யிருக்கும் சட்ட பாயின்ட்டை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை என்று நினைத்து விசனிக்கின்றோம். தீர்ப்புக் கடனாளியே நேரில் டிக்கிரியை நிறைவேற்றி தீர்ப்புக் கடன்காரனிடமிருந்து டிக்கிரித் தொகையை வசூல் செய்து ஒரு மூன்றுவது மனிதனிடம் சேர்த்திருந்தால் அந்த மூன்றுவது மனிதன் கையிலிருக்கும்படியான பணத்தை அப்பீலில் வெற்றி பெற்ற டிக்கிரி கடனாளி வசூல் செய்ய முடியாதென்ற கோள்கையின் பேரில் மேலே சொல்லப்பட்ட லாலா பிரசாத் கேஸில் தீர்ப்பு சொல்லப்பட் டிருக்கிறது.

டிக்ரியை மேடோவர் பெற்றவனே டிக்கிரி கடனாளியிடமிருந்து டிக்கிரித்தொகையை வசூல் செய்திருந்தால் அந்த டிககிரி அப்பீலில் ரத்து செய்யப்பட்டபோதிலும் டிக்கிரி கடனாளி மேடோவர் பெற்றவன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்கு யாதொரு வியாஜ்ஜிய மூலமும் உண்டாகவில்லை என்று தீர்மானிக்கப்பட வேண்டும். மேலே சொல்லப்பட்ட ரெண்டு கேஸ்களும் ஒரே சட்ட ஆதாரத்தைப் பொறுத்திருக்கின்றன என்று நாங்கள் அபிப்பிராயப்படவில்லை. பணத்திற்குகாது குத்தப்பட்டிருக்க வில்லை. ஆதலால் டிக்கிரி பெற்றவனே டிக்கிரியை நிறைவேற்றி டிக்கிரி கடனாளியிடமிருந்து டிக்ரித்தொகையை வசூல் செய்திருந்தால் அந்தப் பணத்தை அப்பீலில் வெற்றி பெற்ற டிக்கிரி கடனாளி அந்த மூன்றுவது மனிதன் பேரின் வியாஜ்ஜியம் கொண்டுவந்து வசூல் செய்ய சட்ட ஆதாரமில்லை. ஆனால் மற்றொரு கேஸ் அப்படி சட்ட ஆதாரமற்றதல்ல. மற்றொரு கேஸில் அந்நியாயமான டிக்கிரியைக் கொண்டு டிக்கிரி. கடனாளியிடமிருந்து பணம் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. அப்பேர்ப் பட்ட பணம் எவனிடமிருந்து வசூல் செய்யப்பட்டதோ அவனுடைய நன்மைக்காக வசூல் செய்யப்பட்டதென்று எண்ணப்பட வேண்டும். ஆகையால் வாதி தான் டிககிரிக்காக செலுத்தியபணத்தை வசூல் செய்வது கொள்ள பாத்தியமுடையவரென்று நாம் அபிப்பிராயப் படுகிறோம். ஆகையால் ஸப் கோர்ட்டாருடைய டிக்கிரியை ரத்து செய்து டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்பை இந்த கோர்ட்டு கீழ் அப்பீல் கோர்ட்டு செலவுகளுடன் உறுதிப்படுத்துகின்றோம்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்:—மேலே சொல்லப்பட்ட தீர்ப்பிற்கு நான் சம்மதிக்கிறேன். நான் அந்தத் தீர்ப்புடன் சேர்க்கக்கூடிய வார்த்தைகள் யாதொன்று மில்லை. இ. லா. ரி. 38 சென் 36 B. Govindappa V. B. HanumanJappa I. L. R. Mad 36.

---

NOTES.

குறிப்புகள்

1. இ. லா. ரி. 31 சென். 268. Setappa gounden. V. Muthia gounden. I. L. R. 31. Mad 268.
2. இ. லா. ரி. 24 அல 288. Lalda Prasad V. Sadiq Hussan I: L. R. 31. Mad. 268.
3. இ. லா. ரி. 23. சென். 203. Tangi Joghi V. Hall I. L. R. 23. Mad. 203.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

பசவேஸ்வரஸ்வாமி—வாதி—அப்பீல் வாதி.

vs.

பெல்லாரி முனிசிபல் கவுன்ஸில் } அப்பீல்
இந்தியா காரியதரிசி } பிரதி வாதிகள்.

லாபாயின்ட்:—விரோதமாய் அனுபவித்தல்.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—இந்தியன் லிமிட்டேஷன் ஆக்ட் (15 fo 1877) 146 A. பாஸ் செய்வதற்கு முந்தி ஒரு மனிதன் முனிஸிபாலிடியாருக்குச் சொந்தமான தெருவிலிருக்கும் படியான சாக்கடையின் பேரில் கட்டப்பட்டிருககும் திண்ணையை முனிஸிபாலிட்டியாருக்கு விரோதமாக 12 வருடம் அனுபவித்துக் கொண்டுவந்தால் அவனுக்கு அந்த திண்ணை சொந்தமாகப் போகப் போய்விடக்கூடும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தெருக்களிலும்சாக்கடைகளிலும்முனிஸிபாலிட்டியாருக்குக் இருக்கும்படியான பாத்தியதை சாதாரண ஈஸ்மெண்டு பாத்தியதையல்ல ஆனால் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட ஸ்பெஷல் பாத்தியதை.

முனிஸிபாலிட்டியார் தங்களுடைய செய்கையால் பொது ஜனங்களுடைய பாத்தியதைகளை விட்டுவிட பாத்தியமுடையவர்களாக விருககாயல் இருப்பது பொது ஜனங்களுடைய பாத்தியதைக்கு விரோதமாக அனுபவித்துக் கொண்டுவரும் ஒருவனுககு உண்டாகக்கூடிய பாத்தியதையை பாதிக்கமாட்டாது.

ஒரு சொத்து அனுபவிக்கப்படுவது ஒருவனுககு விரோதமாக அனுபவிக்கப்பட்டு வருகிறதா அல்லவா என்கிற பிரஸ்னை அந்த சொத்து அவனுக்குத் தேவையா அல்லது அவசியமா என்பதைப் பொருத்ததாயில்லை. ஆனால் அந்த சொத்து எவனால் அனுபவிக்கப்பட்டு வருகிறதோ அந்த அனுபவத்தின் சுபாவத்தைப் பொருத்ததாயிருக்கிறது.

முனிஸிபாலிட்டியாருடைய பாத்திதைக்கு விரோதமாக வாதி திண்ணையை அனுபவித்துக் கொண்டு வந்ததால் வாதிக்கு பாத்தியமுண்டா யிருப்பது திண்ணைக்குக் கீழே யிருக்கும் சாக்கடையில் முனிஸிபாலிட்டியாருக்கும் பாத்தியதையை பாதிககமாட்டாது. ஆகையால் சாக்கடையின்பேரிலிருக்கும் திண்ணை இடைஞ்சலாயிருக்கிறது அல்லது எனக்ரோச் மெண்டாயிருக்கிற தென்று அதை இடித்துப் போட சென்னைப்பட்டணம் ஜில்லா முனிஸிபாலிடி ஆக்ட் 186-வது பிரிவின்படி முனிசிபாலிடியார் பாத்தியதை உடையவர்கள்.

ஆகையால் வாதிகேட்டுக்கொண்டிருக்கிற பிரகாரம் முனிசிபாலிட்டியின் பேரில் இன்சங்ஷன் உத்திரவு பிறப்பிக்கப்பட மாட்டாது என்று தீர்மானிகப்பட்டது.

லாயர்ஸ்:—முதல் அப்பீல் பிரதிவாதிக்காக ஆனரெபில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யர் அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடம் இரண்டாவது அப்பீல் பிரதிவாதிக்காக ஆனரெபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர். இ. லா. ரி. 38 சென். 16. Baswaswaraswami V. The Bellary Mnicipal council 38 Mad 6.

# The Indian Law Gazette.

PART .II

# இந்திய சட்ட கெஜட்.

பாகம் II.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915ளு ஆகஸ்டு [நெ. 4.

## Cases From The Indian Law Reports.

## இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்ட் வொயிட்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

அப்பீல் நெ. 108 of 1911.

K. கிருஷ்ணமாச்சாரியார்—வாதி—அப்பீல்வாதி.

vs.

V. கிருஷ்ணமாச்சாரி-பிரதிவாதி-அப்பீல் பிரதிவாதி

லாப் பாயின்ட்.—ஹிந்து-லா-மைனர்—உயில்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:--ஒரு ஹிந்து மைனர் ஹிந்து உயில் ஆக்ட் (Hindu Wills Act) அல்லது இந்தியன் வார்சு ஆக்ட் (Indian Succession Act) ஆகிய இந்த ஆக்டின்படி பரிபாலிக்கப் படாமற்போன போதிலும் உயில் எழுதி வைக்கக்கூடாது. மைனர் மேஜர் அடைந்தவுடன் எந்த வயதில் உயில் எழுதி வைக்க யோக்கியதை யுடையவனாக விருக்கிறான் என்பது இந்தியன் மெஜாரிட்டி ஆக்ட்டால் (Indian Majority Act) தீர்மானிக்கப்படுகிறது.

ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜியின் அபிப்பிராயம்:- உயில் எழுதி வைத்த உயில் கர்த்தா உயில் எழுதி வைக்கும்போது மைனராக விருந்த படியால் உயில் செலாவணியாக மாட்டாதென்று கக்ஷி சொல்லப்படும்போது உயில் கர்த்தா உயில் எழுதி வைத்த போது சட்டப்படி தகுதியான வயதை உடைத்தானவராக விருந்தார் என்று ருசுப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு உயில் செலாவணி யாகு மென்று கக்ஷி சொல்லுகிறவருடையது. ஜாதகத்தை எழுதினவனாவது அல்லது ஜாதகம் பார்க்கத் தெரிந்தவனாவது அது சரியான ஜாதகம் என்று சாக்ஷியம் சொல்லக் கூடாமலிருக்கும்போது அந்த ஜாதகத்தைச் சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

சீப்ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட் அபிப்பிராயம்:—சாக்ஷி வாக்கு மூலங்கள் எல்லாம் தாக்கல் செய்து கொள்ளப்பட்டபோது ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது தென்கிற பிரஸ்னை முக்கியமானதல்ல.

உயில் கர்த்தாவினுடைய தகப்பனுருடைய உயிலில் எழுதப்பட்டிருக்கும் உயில் கர்த்தாவினுடைய வயது உயில் கர்த்தா எத்தனையாவது வயதில் உயில் எழுதிவைத்தான் என்பதை ருஜுப்படுத்த இந்தியன் சாக்ஷிச் சட்டம் 32-வது பிரிவின்படி சாக்ஷியாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

1999-ம் வருடத்தில் சென்னப்பட்டணம் 3-வது ஆக்டின்படி வைத்துவரப்படும் ஜனன மரண ரெஜிஸ்டர் சர்க்கார் தஸ்தாவேஜி சர்ட்டிபிகேட் பெற்றுக் கொள்ளப்பட்ட அதனுடைய நகல் இந்தியன் சாக்ஷிச் சட்டம் 35, 82-வது பிரிவுகளின்படி சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.

ஒரு சாக்ஷியின் வார்கு மூலத்தை ஆக்ஷேபிக்க வேணுமென்கிற கருத்து கொண்ட ஒரு தஸ்தாவேஜு சாக்ஷிச் சட்டம் 145-வது பிரிவின்படி சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சாதாரண ஹிந்து லாப்பிரகாரம் மைனர் தான் ஜீவதிசையா யிருக்கும்போதே தன்னுடைய சொத்தைத் தானமுதலியவை செய்யக் கூடாது. ஆகையால் அவன் இறந்துபோனதற்குப் பிறகு நடவடிக்கைக் கக்ஷிக்குக் கொண்டுவரப்படக்கூடிய யாதொரு உயிலும் எழுதி வைக்கப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38. சென். 166 K. Krishnamachariar vs V. Krishnamachariar I. L. R. 38 Mad. 166.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜ் மிஸ்டர் பென்ஸன்,
ஜட்ஜ் மிஸ்டர் சுந்தரமய்யர்.

இரண்டாவது அப்பீல்கள் நெ. 158 & 174 of 1912
அச்சப்ப ராஜ—பிரதிவாதி—அப்பீல் வாதி.

vs.

ராஜ வேலுகோடி கோவிந்த கிருஷ்ணையசெந்திரலவாரு—வாதி—அப்பீல் பிரதிவாதி,

லாப் பாயிண்ட்:—சென்னப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட்.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு:—சென்னப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் ஊர்சிதத்திற்கு வருவதற்கு முந்தி செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட குத்தகை காலம் துக்கராய் போய்விட்ட தென்கிற காரணத்தை முன்னிட்டு பழைய தரிசு நிலத்தின் ரயத்து சென்னபட்டணம் பூஸ்திதி ஆக்ட் 153, 157-வது பிரிவுகளின்படி நிலத்தை விட்டு நீக்கிவிடப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென், 165. Atchapa Raja, Vs. Rajah Veligoti Govinda Krishnayya Chendralavaru I. L. R. 38 Mad. 165.

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜ் மிஸ்டர் பென்ஸன்
ஜட்ஜ் மிஸ்டர் சுந்திரமய்யர்.

M. வெங்கட்டராஜு—வாதி—அப்பீல்வாதி.

vs.

M. ராமன்னம்மா—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி

லாப்பாயிண்ட்:—இரண்டு இஷ்யூக்களின்பேரில் செய்யப்பட்ட முடிவுகளைக்கொண்டு ஒரு தீர்ப்பு எழுதப்பட்டிருக்கும்போது இரண்டு இஷ்யூக்கள் பேரிலும் செய்யப்பட்ட தீர்மானங்கள் ரெஸ் ஜுடிக்கேட்டாவைப் போல (ResJudicata) வலுவுடையதாகவிருக்கும் ஆனல் தீர்ப்பை ஆதரிக்க ஒரு இஷ்யூவின் தீர்மானம் போதுமானதென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென். 158. M. Vencata Raju vs M. Ramanamma I. L. R. 38 Mad. 158.

---

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1845 of 1911.

D. லிங்கய்யா—பிரதிவாதி—அப்பீல் வாதி.

Vs.

D. கனகம்மா—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப் பாயிண்ட்:—ஹிந்து லா.

வியாஜ்ஜிய சங்கிரகம்:-வாதிகனகம்மா ஹிந்து, சேர்ந்தகுடும்பத்தைச் சேர்ந்த விதவை. தனக்கு குடும்பச் சொத்திலிருந்து ஜீவனம்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று தன் புருஷனுடைய சகோதரன்பேரில் வியாஜ்ஜியம், முசிலிபட்டணம் அடிஷனல் டி.மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வந்தாள் (O. S. No. 451 of 1909).

---

டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்பு:—(மிஸ்டர் S. நீலகாந்தம் டி. மு.)—பிரதிவாதி வசம் வருடத்திற்கு ரூபாய் 100 வருமானமுடைய குடும்பச் சொத்திருப்பதாகவும் பிரதிவாதிக்கு வருடத்திற்கு ரூ. 40 அல்லது ரூ. 50 வருமானமுடைய சொந்த சொத்திருக்கிறதென்றும் தீர்மானித்து வாதிக்கிருக்கும் சொந்த வருமானம் அவளுடைய காலட்சேபத்திற்குப் போதாதென்று சொல்லி வருஷத்திற்கு ரூபாய் 20 ஜீவனம்சம் கொடுக்கப்பட்டு வரும்படியாக வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக வாதி முசிலிப்பட்டணம் சப் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டாள். A. S. No. 722 of 1910.

---

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—அடிஷனல் டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்பையே உறுதிப்படுத்தினர்கள்.

ஆகவே பிரதிவாதி சப் கோர்ட்டுத் தீர்ப்பிற்கு விரோதமாக ஐகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொண்டார்.

லாயர்கள்—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. ராமதாசுக்குப் பதிலாக மிஸ்டர் V. ராமேச ராவ். அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் P. நாகபூஷணமும் ஆஜரானர்கள்.



தீர்ப்பு—குடும்ப வருமானம் சொற்பமா யிருக்கிறபடியாலும் வாதிக்குப் பிரத்தியேகமாக சொந்த சொத்திருக்கிற படியாலும் அவளுடைய இறந்துபோன புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து ஜீவனம்சம் பெற்றுக்கொள்ளப் பாத்திதை யில்லை யென்று அப்பீல் வாதிக்கு ஆஜரா யிருக்கும் மிஸ்டர் V. ராமேசன் கக்ஷி சொல்லுகின்றார். அவருடைய கக்ஷியின் சாராம்சம் என்னவென்றால் ஒரு விதவை தனக்கிருக்கும் வேறே சொத்தைக் கொண்டு நிர்வகித்துக் கொள்ள சக்தி யுடையவளாக விருந்தால் புருஷனுடைய எஸ்டேட்டி லிருந்து ஏதேனும் ஜீவனம்சத்திற்காகப் பெற்றுக்கொள்ள பாத்திதை யற்றவள் என்பதே. எங்களுடைய அபிப்பிராயத்தில் இந்தக் கக்ஷி ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதென்று எண்ணுகின்றோம். வாதிக்கிருக்கும் பாத்திதையை உணராமல் அப்பீல் வாதி தரப்பில் இப்படி கக்ஷி சொல்லப்படுகிற தென்று நினைக்கின்றோம். குடும்பச் சொத்து பாகப்பிரிவினை செய்யப்படுகிற போது பாகஸ்தர்களுடைய மனைவிகள் ஆண் மெம்பர்களைப்போல சம பங்கிற்குப் பாத்தியதையுடையவர்களல்ல. அவர்களுடைய புருஷர்கள் இறந்து போனல் அவர்களுக்கு வார்சுகளாய் அவர்களுடைய சொத்தையும் அடைய பாத்திய முடையவர்களல்ல. அந்த பாத்தியதைகள் அவர்களுக்குக் இல்லாமலிருப்பதை முன்னிட்டு அவர்கள் அவர்களுடைய ஜீவதிசையிலுள்ள பரியந்தம் குடும்ப அந்தஸ்திற்குத் தகுந்தபடி சௌகரியமாகக் காலக்ஷேபம் செய்து வரும்பொருட்டு அவர்களுடைய புருஷர்களுடைய எஸ்டேட்டின் ஒரு பாகத்தை பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவர்களாய் யிருக்கிறார்கள். அந்த பாத்தியதை அவர்கள் குடும்பத்தின் மெம்பர்களாக விருப்பதை முன்னிட்டு அவர்களுக்குச் சகல சுதந்தர பாத்தியதையாக விருக்கின்றது. அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு வேறே ஜீவேஜியில்லாமலிருப்பதைப் பொருத்ததல்ல. புருஷன் தன்னுடைய சொத்தைப் பாகப் பிரிவினை செய்து தன்னுடைய புத்திரர்களுக்குக் கொடுத்த போது பெண்சாதியும் ஒரு காலத்தில் புத்திரர்களைப் போல சம பங்கு பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவளாக விருந்தாளென்று மிதாக்ஷரம் அத்தியாயங்கள் 1, 2-ல் யிருக்கும் 8, 9 சுலோகங்களால் நன்கு விளங்குகின்றது. தயாபாகக் கிரந்தத்தின் படி சேர்ந்த குடும்பத்திலிருக்கும் பாகப்பிரிவினை செய்யப்படாத புருஷனுடைய பாகம் அவன் இறந்து போன பிறகு அடியோடு அவனுடைய விதவைக்கு இறங்கிவிடுகின்றது. "காத்தியாபனு" கிரந்தத்தின் படி ஒரு விதவை தன்னுடைய ஜீவனம்சத்திற்காக எஸ்டேட்டின் ஒரு பாகத்திற்காவது அல்லது அலவன்சிற்காவது பாத்தியம் பாராட்டலாம். என்று "விருஹஸ்பதியிலும்" அதே அபிப்பிராயமேசொல்லப்பட்டிருக்கிறது (G. சர்க்கார் சாஸ்திரி வீரமித்திரோதயம் பக்கம் 173-யைப் பார்க்கவும்) அப்பீல் வாதியின் வக்கீல் வேறு வருமானத்தைக்கொண்டு காலக்ஷேபம் செய்யக்கூடிய ஒரு விதவை புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து ஜீவனம்சம் பெற்றுக் கொள்ள பாத்தியதை யற்றவள் என்று சொல்லும் கக்ஷிக்கு ஆதாரமாக ராமநாத் கோயர் vs. மான்ஜிலாரி கோயர் (1) வியாஜ்ஜியத்தில் சொல்லப்பட்ட தீர்ப்பை எடுத்துக் கூறுகின்றார். அந்தக் கேசில் சொல்லப்பட்ட தீர்ப்பு அவருடைய கக்ஷிக்கு ஆதாரமாக விருக்கிற தென்பதில் சந்தேகமில்லை. அந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து தீர்ப்புசெய்த, ஜட்ஜிகளிடம் நாங்கள் மறியாதை காட்ட விருப்பமுடையவர்களாக விருந்தபோதிலும் அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள எங்களால் சாத்தியப்படவில்லை என்று சொல்ல விசனிக்கின்றோம். அந்தத் தீர்ப்பில் எடுத்துச் சொல்லப்பட்ட பிரமாணங்கள் அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்ட அபிப்பிராயத்தை ஆதரிக்கவில்லை. விதவைக்கு எவ்வளவு ஜீவனம்சம் கொடுக்கப்படலா மென்பதை நிர்ணயிப்பதில் விதவைக் கிருக்கும் படியான மற்ற வருமானத்தையும் கவனித்து அதற்குத்தக்கபடி ஜீவனம்சம் விதிக்கப்பட வேண்டு மென்று மேயின்ஸ் ஹிந்து லாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்பீல்வாதியின் லாயரால் எடுத்துக் கூறப்படும் நாராயணுரவ் ராமச்சந்திர பண்ட் Vs. ராமாபாய் [2] கேசில் பிரிவி கவுன்ஸிலர்கள் சொல்லியிருக்கும் தீர்ப்பிற்கும்பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்கு யாதொரு சம்பந்தமில்லை. மிஸ்டர் சங்கர சாஸ்திரி தம்முடைய ஹிந்துலாவில் விதவை தன்னைசம்ரக்ஷித்துக் கொளள வேறே சொத்துடையவளாக விருப்பது புருஷனுடைய சொத்தில் அவளுக் கிருக்கும் ஜீவனம்ச பாத்தியதையை அடித்துப்போகு மென்று அபிப்பிராயம் கொள்ளவில்லை. ஆதலால் அவளுடைய புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து ஜீவனம்சம் பெற்றுக்கொள்ள பாத்திதை யுடையவள் என்று நாங்கள் தீர்மானிக்கின்றோம். அவளுக்கு கீழ்க்கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டிருக்கும் ஜீவனம்ச விகிதம் அதிகமானதா யிருக்கிறதென்று நாங்கள் சொல்லக் கூடாது. ஆதலால் இந்த இரண்டாவது அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா. ரி. 38 சென் 153 D. Lingayya vs. Kanakamma I. L. R. 38 Mad. 153.

---

## NOTES.
## குறிப்புகள்.

(1) 4 கல். லா. ஜெ. 74 Ramanati Koer V. Manji Lari Koer 4 C. L. J. 74..

(2) இ. லா. ரி. 3 பம். 415. Narayana Row Ramachandra Pant Vs. Ramabai I. L. R. 3 Bom. 415.

---

ஜட்ஜிகள்.—சீப் ஜஸ்டிஸ் சர் சார்லஸ் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கர நாயர்.
மிஸ்டர் ஜஸ்டஸ் சதாசிவய்யர்

இரண்டாவது அப்பீல் நெ. 144 of 1911.

துரைசாமி சேருமாந்தன்—அப்பீல் வாதி.

vs.

நொண்டிசாமி சள்ளுவன்—அப்பீல் பிரதிவாதி

லாப்பாயிண்ட் :—கால நிரணயச் சட்டம்.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு :—சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் மைனர்களாகயிருந்தபோது அவர்களுக்குக் கார்டியனிடமிருந்த சில சொத்துககளைப் பராதீனம் செய்துவிட்டார். மைனர்களில் மூத்த சகோதரன் மேஜர் அடைந்து மூன்று வருடத்திற்கு பிற்பட்டு பராதீனத்தை ரத்து செய்துவைக்க இரண்டு சகோதரர்களாலும் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. அந்த வியாஜ்ஜியம் லிமிட்டேஷன் ஆக்ட் 7-வது 8-வது பிரிவுகளின்படியும் 44-வது ஆர்ட்டிகிலின்படியும் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. மூத்த சகோதரனுடைய பங்கு சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று எண்ணப்படக்கூடாது. வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தி மூன்று வருடங்களுக்குள்ளாக இளைய சகோதரன் மேஜர் அடைந்திருந்த போதிலும் அவனுடைய பங்கு சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியமும் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. இ.லா. ரி. 38. சென். 118. Duraisawmi Sarumandan V. Nondisawmi Saluvan I. L. R. 38 Mad. 118.

---

ஜட்ஜிகள்.—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

இரண்டாவது அப்பீல் நெ. 1341 of 1911.

P. வராகசாமி—பிரதிவாதி—அப்பீல் வாதி.

vs

M. ராமச்சந்திர ராஜா—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப் பாயிண்ட்:—பராதீனச் சட்டம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு.—ஒரு ஏஜண்டு குடிக்கூலியை வசூல் செய்யத் தவறிப்போய் விட்டபடியால் ஏஜமானுக்கு நஷ்டம் நேரிட்டிருக்கிறது. அந்த நஷ்டத்தை ஏஜண்டினிடமிருந்து வசூல்செய்ய ஏஜமானனுக்கிருக்கும் பாத்திதை டிரான்ஸ்பர் செய்யப்படக் கூடாத பாத்திதை என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த பாத்திதை டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் Transfer of Property Act 6 (e) பிரிவின் தாத்பரியப்படி நஷ்டத்திற்கு வியாஜ்ஜியங் கொண்டுவரும்படியான பாத்திதைக்கு மேஸ்திகமான தல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. அப்பேர்ப்பட்ட பாத்திதை ஒப்பந்தத்திலிருந்து உண்டானதாயிருந்தால் அது டிரான்ஸ்பர் செய்யப்படக் கூடாததென்று தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 38 சென் 138. M. Varagaswami Vs. M. Ramachandra Raja I. L. R. ;8 Mad 138.

---

ஜட்ஜிகள்:-ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்.
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1834 of 1911.

திருச்சினப்பள்ளி கலெக்டர் மூலமாக இந்தியா மந்திரி—பிரதிவாதி.

vs

ரெகுநாத தாத்தாக்சாரியார்—வாதி

லாப்பாயிண்ட்:—இனும்.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு :—கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட இனும் ஆதரவில் இனும் பெற்றுக கொண்டவனுக்கு கிராமத்தில் புறம் போக்கைத் தவிற ஒரு குறிப்பிட்ட விடத்திற்குள்ள பாத்திதை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவனுக்கு அக் கிராமத்திலுள்ள படுகை நிலம் தரிசுநிலம் போலொத்த தீர்வை விதிக்கப்படாத எல்லா நிலங்களுக்கும் பாத்திதையிருக்கிறதென்றும் ஆனல் மட்டமான பூமிகளுசகும் தேவஸ்தானத்திற்கும் மனைகளுக்கும் அந்த ஆதாரவைக் கொண்டு பாத்திதை உண்டாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

திருச்சினப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களில் படுகைநிலம் என்றால் நதியின் பெரிய கரைக்கும் அயன் நதிக்கும் மத்தியி லிருக்கும்படியான நிலம். என்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென் 108. The Secretary of State for India in Council V. Raghuna;ha Thathachariar I.L.R. 38 Mad. 108.

---



ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சன்,
மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெம்பர் 1293 of 1911.

ராமகிருஷ்ண செட்டி—வாதி—அப்பீல் வாதி.

Vs

சுப்பராய அய்யர்—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

லாப்பாயிண்ட்—லிமிடேஷன் ஆக்ட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு—ஒரு இனாம்தார் நிலத்தீர்வைக்காக ஒரு உடன்படிக்கை குடியிடமிருந்து எழுதி வாங்கி ரெஜிஸ்டர் செய்து வைத்திருக்கிறார். சென்னபட்டணம் பூஸ்திதி ஆக்ட் அமுலுக்கு வருவதற்கு 7 வருடத்திற்கு முந்தியும் 6 வருடத்திற்குட்பட்டும் கூடுதலான தீர்வையை பாககிக்காக இனும்தார் கொண்டு வந்தவியாஜ்ஜியம். சென்னபட்டணம் பூஸ்திதி ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறபடி மூன்று வருட காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை என்றும் ஆனல் லிமிட்டேஷன் ஆக்ட் 116வது ஆர்ட்டிகலின்படி பரிபாலிக்கப் படுகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இ. லா. ரி. 38 சென். 101 W. I. Ramakrishna Chetty Vs. Subbaraya Iyer I. L. R. 38 Mad. 101.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜ் மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜ் மிஸ்டர் ஓயிட்பீல்ட்.

இரண்டாவது அப்பீல் நெ. 1266 of 1911

ராமசாமிநாயக்கர்—அப்பீல் வாதி.

vs.

ராஜாநாயக்கர்—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயிண்ட்:—இந்தியன் ஈஸ்மெண்டு ஆக்ட்.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு.—மேட்டு விவசாய பூமியை உடைய ஒருவன் அந்த நிலத்தின் ஜலத்தை கீழ் நிலத்தில் இயற்கையான வழியாக விட பாத்திதையுடையவன் என்றும் கீழ் நிலக்காரன் அந்த ஜல விஷயத்தைக் கோரும்பொருட்டு அவனுடைய நிலத்தில் அணை போட பாத்தியமற்றவன் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென். 149. Ramasawmy Naicker Vs. Rasi Naicker I. L. R. 38 சென். 149.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜ் மிஸ்டர் பென்ஸன்
ஜட்ஜ் மிஸ்டர் சுந்திரமய்யர்.

அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ் நெ. 2 of 1912.

P. K. மொய்தீன் குட்டி—வாதி—அப்பீல் வாதி.

vs.

C. போக்கர்—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி,

லாப்பாயிண்ட்:—ஒப்பந்தம்.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு—ஒரு முகமதிய பெண்ணுடைய தகப்பனும் ஒரு மைனர் பையனுடைய தகப்பனும் பெண்ணுக்கும் பையனுக்கும் விவாகம் செய்து வைப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பையன் தகப்பன் ஒப்பந்தப்படி நடக்கவில்லை. பெண் தகப்பனர் கலியாணத்திற்காக வாங்கின சாமான்கள் சேதப்பட்டுப் போய்விட்டதென்று பையன் தகப்பன் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார் இந்த வியாஜ்ஜியம் ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டாரால் பிடித்து விசாரணை செய்யப்படக் கூடிய வியாஜ்ஜியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38. சென். 274 P. K. Moideen Kutty Vs. C. Pocker I. L. R. 38 Mad. 2;4.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜ் மிஸ்டர் பென்சன்
ஜட்ஜ் மிஸ்டர் சுந்தரமய்யர்.

அப்பீல்கோர்ட் ஆர்டர் நெ. 56 of 1911 க்கு விரோதமாகச் செய்துக் கொள்ளப்பட்ட அப்பீல் நெ. 56 of 1911.

வெங்கட்ரமணய்யர்—அப்பீல் வாதி.

vs.

N. D. நரசிங்கராவ்—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயிண்ட்.—அதிகாரப் பத்திரம்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி வெங்கட்டரமணய்யர் நாமக்கல் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் (O. S. No. 442 of 1906) கொண்டுவந்து டிக்ரி பெற்றார். டிக்ரி கடன்தார் திருக்கோயிலூரி லிருந்தபடியால் டிக்கிரி திருக்கோயில்லூர் டி. மு. கோர்ட்டிற்குடிரான்ஸ்பர் செய்யப்பட்டு அந்தக் கோர்ட்டில் டிக்கிரி வாதியிடமிருந்து பவர் ஆப் அட்டர்னி என்று சொல்லும் படியான அதிகாரப்பத்திரம் பெற்றுக் கொண்டிருக்கும் ஏஜண்டு வெங்கட்ருவால் அந்தக் கோர்ட்டில் 16-6-1906 ல் நிறைவேற்றப்பட்டது. டிக்கிரி கடனளிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்ட பின்பு மனுதாரன் ஆஜராகாததை முன்னிட்டு அந்த மனு தள்ளுபடிசெய்யப்பட்டது.

8-3-1910-ல் வாதியின் இன்னொரு ஏஜண்டாகிய ருமாராவ் என்பவரால் டிக்கிரி நிறைவேறறப்பட்டது. திருக்கோயிலூர் டி. மு. கோர்ட்டார் அந்த மனுவையும்தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக ஏஜண்டு ராமாராவ் தென் ஆற்காடு ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பு:—(மிஸ்டர் H. மோபர்லி ஜில்லா ஜட்ஜி)—1882-ம்வருடத்திய சி. பு. கோ. 37-வது பிரிவின்படி வெங்கட்ராவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரம் ஜெனரல் அதிகாரப் பத்திரமா யில்லாம லிருக்கிறபடியால் அவரால் செய்யப்பட்ட நிறைவேற்று மனு சட்டப்படி செய்து கொள்ளப்பட்ட நிறைவேற்று மனுவாக மாட்டாதென்று சொல்லி அசல் கோர்ட்டு

உத்திரவை உறுதிப் படுத்தி விட்டார்கள். வெங்கட்ராவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரம் ஒரு ரூபாய் ஸ்டாம்பில் எழுதப்பட்டிருந்தது. அதில் அடியிற் கண்டபடி எழுதப்பட்டிருந்தது. என்னால் வாங்கப்பட்ட டிக்கிரிக்கு டிக்கிரித் தொகையும், செலவு தொகையும் கூடுதலான வட்டியும் வசூல் செய்யப்படாததால் நிறைவேற்று மனுக்கள் தாக்கல் செய்யப்படவும் ராஜிமனுக்கள் தாக்கல் செய்யவும் அந்த டிக்கிரிப் பணம் வசூல் செய்யப்பட்டால் அதைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுக்கவும் மனுக்களில் கையெழுத்து செய்யவும் நாம் உம்மை ஏஜண்டாக நியமித்திருக்கிறபடியால் உம்மால் எந்த நம்பர் நடத்தப்பட்ட நடவடிக்கைகள் யாவற்றும் என்னால் நடத்தப்பட்டவைபோல நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

தென ஆற்காடு ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் செய்த உத்திரவிற்கு விரோதமாக வாதி ஐகோர்ட்டில் அப்பீல் செய்துக் கொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. நரசிம்மையங்கார் ஆஜரானார். அப்பீல் பிரதிவாதிக்கு லாயர் ஆஜராகவில்லை,

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரே பிரஸ்னை என்னவென்றால் இரண்டாவது தடவை செய்து கொண்ட நிறைவேற்றுமனு காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டுப் போய்விட்டதா என்பதே ஏஜண்டு வெங்கட்ராவால் செய்து கொள்ளப்பட்ட நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடத்திற் குள்ளாக இரண்டாவது மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மனு டிக்கிரி பெற்றுக் கொண்டவருக்காக அவருடைய ஏஜண்டால் கையெழுத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரஸ்னை என்னவென்றால் அது சட்டப்பிரகாரம் செய்துகொள்ளப்பட்ட மனுவா என்பதே அந்தப் பிரஸ்னையைத் தீர்மானிப்பதற்கு அந்த ஏஜண்டு சி. பி. கோ. 37-வது பிரிவின்படி வாதிக்காக கையெழுத்து போடவும் மனு செய்து கொள்ளவும் அதிகாரமுடைய ஜெனரல் அதிகாரப் பத்திரம் பெற்ற ஏஜண்டா அல்லது அப்படிச் செய்வதற்கு அருகற்ற ஸ்பெஷல் அதிகாரப்பத்திரமுடைய ஏஜண்டா என்பதே. எஜெண்டிற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தில் டிக்கிரியை நிறைவேற்றுவதற்காகவும் மனு தாக்கல் செய்யவும் பணத்தை வசூல் செய்து கொள்ளவும், ராஜிபடுத்திக் கொள்ளவும், டிக்கிரியை நிறைவேற்றுவதற்குறித்தான சகல நடவடிக்கைகளையும் நடத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீழ்க்கோர்ட்டார் ஏஜெண்டிற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரம் ஸ்பெஷல் அதிகாரப்பத்திரமென்று தீர்மானித்திருக்கிறார்கள். பிரஸ்தாப அதிகாரப்பத்திரம் ஒரு ரூபாய் முத்திரைக் கடிதாசியில் எழுதப்பட்டிருகிறபடியால் கீழ்க்கோர்ட்டார் அந்த அதிகாரப் பத்திரத்தை ஸ்பெஷல் அதிகாரப் பத்திரம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஒரு தஸ்தாவேஜியின் சட்ட ஸ்வபாவம் அதில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டுமேயொழிய எழுதப்பட்டிருக்கும் முத்திரைக் கடுதாசியின் மதிப்பைப் பார்த்து தீர்மானிக்கப்படக் கூடாது. ஒரு ஆதரவு எந்த முத்திரைக் கடுதாசியில் எழுதப்பட வேண்டுமோ அந்தக்கடுதாசியில்எழுதப்படா விட்டால் எப்படி யிருந்தால் ஒருஅதிகாரபபத்திரம் ஜெனரல் அதிகாரப் பத்திரமாகு மென்றுஎந்தச் சட்டத்திலும் செய்யப்படவில்லை. அது சம்பந்தமாக யாதொரு தீர்ப்பும் ஜாரி செய்யப்பட்டிருக்கவில்லை. பிரசித்தமான லாயர்களுடைய அபிப்பிராயத்தின்படி பிரஸ்தாப கேசில் ஏஜண்டு பெற்றுக் கொண்டிருக்கும் அதிகாரப் பத்திரம் ஜெனரல் அதிகாரப் பத்திரம் என்று சொல்லப்பட வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஸ்டோரி என்பவரால் எழுதப்பட்டிருக்கும் "ஏஜென்சி" என்னும் சட்ட புஸ்தகம் 17-வது பிரிவில் அடியிற்கண்ட பிரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது, குறிப்பிட்ட பத்திரச்தை எழுதிக் கொடுக்கவும் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்கு கையெழுத்து செய்யவும் அல்லது குறிப்பிட்ட பார்சல் அல்லது வியாபாரத்தை வாங்கவும் அதிகாரம் பெற்றுக் கொண்டிருக்கும் ஏஜெண்டு ஸ்பெஷல் ஏஜெண்டு என்று சொல்லப்படுவான். ஆனால் ஒரு தொழில் அல்லது வியாபாரத்தில் அந்த வியாபாரம் அல்லது தொழில் சம்பந்தமான எல்லாப் பத்திரங்கள் முதலியவைகளில் கையெழுதது போடவும் அது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளும் நடத்த அதிகாரமுடைய ஏஜெண்டு அந்தத் தொழில் அல்லது வியாபாரம் சம்பந்தப்பட்ட வரையில் ஜெனரல் அதிகாரப் பத்திரம் பெற்ற யேஜண்டாவான்.



இந்தக் கொள்கையின்படி ஒரு டிக்கிரி நிறைவேற்றுவதில் நடத்தப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளையும் நடத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த அதிகாரம் ஜெனரல் அதிகாரமாகும். அதை நிறைவேற்று நடவடிக்கையில் ஒரே சட்ட விவகாரம் என்று சொல்லப்படக் கூடாத பலவிதமான காரியங்கள் செய்ய வேண்டியதா யிருக்கும். ஆனால் அந்தப் பிரஸ்னை இப்போது ஆராயப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஏன் என்றால் சி. பு. கோ. ஆர்டர் 3. ரூல் 2 ல் ஏஜண்டு என்கிற பதத்திற்கு விபரமாகத் தாத்பரியம்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஏஜண்டு வெங்கட்ராவால் செய்து கொள்ளப்பட்ட முதல் மனு சட்டப் பிரகாரம் செய்துக் கொள்ளப்பட்ட மனு என்று தீர்மானிக்கின்றோம். ஆகையால் இரண்டாவது மனு மூன்றுவருஷத்திற்குள் செய்துகொள்ளப்பட்டிருக்கிறபடியால் அந்த மனுக் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை. ஆகையால் கீழ்க்கோர்ட்டாருடைய உத்திரவை ரத்து செய்து மனு சட்டப்படி விசாரணை செய்யப்பட்டு பைசல் செய்யப்படும்படியாகக் கீழ்க் கோர்ட்டாருக்கு அனுப்புகின்றோம். அந்தக் கோர்ட்டு செலவுகளும் கீழ்க் கோர்ட்டு செலவுகளும் மனுவின் முடிவைப் பொருத்த வென்று இந்தப்பிரகாரம் தீர்ப்பு சொன்னார்கள் இ. லா. ரி. 38. சென். 134. Venkatramana Iyer Vs. W. G. Narasinga Row I. L. R. 38 Mad. 134.

---

ஜட்ஜிகள் :—ஜட்ஜ் மிஸ்டர் பென்சன்.
ஜடஜ் மிஸ்டர் சுந்திரமய்யர்.

அப்பீல் கோர்ட்டாருடைய உத்திரவு நெ. 158 of 1912-க்கு விரோதமாகச் செய்து கொள்ளப் பட்ட அப்பீல்.

ஸ்ரீ ராஜாபிரகாச ராயஙிம் காரு—அப்பீல் வாதி.

*vs.*

Y. V வெங்கடராவ்—அப்பீல் பிரதிவாதி.

லாப் பாயிண்ட்:—சாக்ஷிச்சட்டம்.

வியாஜ்ஜிய சங்கிரகம் :—ஒரு வியாஜ்ஜியம் முதலில் பெத்தாப்பூர் டி. மு. கோர்ட்டாருடைய கோர்ட்டில் கொண்டு வரப்பட்டு விசாரணைசொய்யப்பட்டு டிக்கிரி பிறப்பிக்கப்பட்டது. அந்த டிக்கிரிக்கி விரோதமாக ராஜமகேந்திரபுரம் சப்-கோர்ட்டில் அப்பீல் செய்துக் கொள்ளப்பட்டபோதுபெத்தாப்பூர் கோர்ட்டார் டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜிய பதிப்பு சம்மந்தப்பட்ட வரையில் அவர்களால் பிடித்து விசாரணை செய்யப்படக்கூடாத ஒரு வியாஜ்ஜியத்தைப் பிடித்து பைசல் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி அந்த வியாஜ்ஜியம் பிரியாது சரியான கோர்ட்டில் தாச்கல் செய்யப்படும்படியாக வாப்பீஸ் செய்யப்பட்டது. பெத்தாப்பூர் டி. மு. கோர்ட்டாருடைய டிக்ரியும் ரத்துசெய்யப்பட்டது. ஆகவே அந்த வியாஜ்ஜியத்தின் பிரியாது மறுபடியும் சப் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

வியாஜ்ஜிய நடவடிக்கை:—பெத்தாப்பூர் டி மு கோர்ட்டாரால் தாக்கல் செய்து கொள்ளப்பட்ட வாக்குமூலத்தையே இந்தக் கோர்ட்டில் தாக்கல் செய்துக்கொள்ளப்பட்ட வியாஜ்ஜியமாக வைத்துக் கொள்ளலாமென்று கூறி பிரதிகள் சம்மதித்து சப் கோர்ட்டில் ஒரு ஸ்டேட்மெண்டு (Statement) தாக்கல் செய்தார்கள். அதன்பேரில் சப் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை விசாரணை செய்தார்கள்.

ஸப் கோர்ட்டார் தீர்ப்பு —(மிஸ்டர் V. சுப்பிரமணிய பந்துலு சப் ஜட்ஜ்:—வாதிக்கி டிக்கிரிக் கொடுத்தார்கள்.)

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பு:—சப் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரியை ரத்துசெய்துவிட்டார்கள். காரணம் என்ன சொன்னார்கள் என்றால் பெத்தாப்பூர் டி. மு! கோர்ட்டார் தாங்கள் பிடித்து விசாரணைசெய்யக்கூடாத வியாஜ்ஜியத்தைவிசாரணை நடத்தினதில் தாக்கல் செய்யப்பட்ட சாக்ஷி வாக்குமூலத்தையே, கக்ஷிக்காரர்களுடைய சம்மதத்தின்பேரில் சப்-கோர்ட்டார் வைத்துக்கொண்டு அதாவது பிரத்தியேகமாக மறுபடியும் சாக்ஷிகளை விசாரணை செய்யாமல் வியாஜ்ஜியத்தை முடிவு செய்து வாதிக்கு டிக்கிரி கொடுத்தது நியாய விரோதமென்று காரணம் சொன்னார்கள்.

அந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக ஐகோர்ட்டில் அப்பீல் வாதியால் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

லாயர்கள் :—அப்பீல் வாதிக்காக வக்கீல்கள் மெஸர்ஸ் P. நாராயணமூர்த்தி P. சுந்திரம் ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் V. ராமேசன்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஜில்லா ஜட்ஜி சொல்லும் ஆக்ஷேபணை யெல்லாம் கூடி என்ன வென்றால் கீழ்க் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வியாஜ்ஜியத்தையே சப் கோர்ட்டாரும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். வேறே தனியே சாக்ஷிவிசாரணை செய்யவேண்டிய தனுவசியமென்று சாக்ஷிக்காரர்களை ஒப்புக்கொண்டிருந்ததால் சப் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு சாக்ஷி வாக்குமூலத்தையே தங்களுடைய கோர்ட்டில் உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கு யாதொரு ஆக்ஷேபணையில்லை. ஆனால் கீழ்க் கோர்ட் முடிவு தாக்கல் செய்து கொள்ளப்பட்டிருக்கும் சாக்ஷி வாக்குமூலம் சட்டப்படி கீழ் கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்ய அதிகாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் தாக்கல் செய்து கொள்ளப்பட்ட வாக்கு மூலமாயிருக்கிறபடியால் கக்ஷிக்காரர்கள் அந்த வாக்கு மூலத்தையே சப் கோர்ட்டிலும் உபயோகப்படுத்திக் கொள்ள சம்மதம் கொடுத்திருந்த போதிலும் சப் கோர்ட்டார் அந்த வாக்கு மூலத்தையே உபயோகப்படுத்திக்கொண்டு வியாஜ்ஜியத்தைப் பைசல் செய்தது சட்ட விரோதம் என்று ஜில்லா ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சப் கோர்ட்டார், டி. மு. கோர்ட்டினுடைய வாக்கு மூலத்தையே கக்ஷிக்காரர்களுடைய சம்மதத்தின் பேரில், தங்களுடைய கோர்ட்டிலும் உபயோகப்படுத்திக் கொண்டது நியாயமான நடவடிக்கை என்று சொல்லுவதற்கு அனேக தீர்ப்புப் பிரமாணங்களிருக்கின்றன. உதாரணமாக மகாராஜா சஜுகுந்தர்லாரி vs. டூன்தயாள்சட்டர்ஜி 1 லக்ஷ்மன் vs. அம்ரிட் 2, ஆகிய இந்தக் கேஸ்களில் கீழ்க் கோர்ட்டு சாக்ஷி வாக்கு மூலத்தையே கக்ஷிக்காரர்களுடைய சம்மதத்தின் பேரில் அப்பீல் கோர்ட்டாரும் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. ஆகையால் சப் கோர்ட்டாருடைய நடவடிக்கை நியாயமானதென்று தீர்மானித்து ஜில்லா ஜட்ஜியுடைய தீர்ப்பை ரத்துசெய்து அப்பீலை மறுபடியும் விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யும்படியாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருக்கு அனுப்புகின்றோமென்று தீர்ப்புசொன்னார்கள். இ. லா. ரி. 38. சென் 160 Sri. Rajah vs. Y. V. Venkat Row I. L. R. 38 Mad. 160.

---

NOTES.

குறிப்புகள்.

(1) இ. லா. ரி. 1. விக். ரிப்போர்ட்டர் 314 Sri Maharaja Vs. Dindyal I. W. R. 314.

(2) இ. லா. ரி. 24 பம். 591 Lakshman Vs. Amradi I. L. R. 24 Bom. 591.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜ் மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜ் ஸ்டர் சுந்தரமய்யர்.

L. சின்னையா—பிரதிவாதி—மனுதார்.

vs.

K. ராமணா—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயிண்ட்:—மோசம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—தீர்ப்புக்கடனாளி இல்லாத போது சில சாக்ஷி வாக்கு மூலத்தை மறைத்து மோசம் செய்து டிக்கிரி பெற்றவன். டிக்ரி பெற்றுக் கொண்டுவிட்டான் என்கிற காரணம்சொல்லி அந்த வியாஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரியை ரத்து செய்துவைக்க டிக்கிரி கடனாளி வியாஜ்ஜியம் கொண்டுவரக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஏன் என்றால் முந்திய வியாஜ்ஜியத்தில் விடவேண்டிய சாக்ஷியெல்லாம் விடவேண்டியகடமைத் தீர்ப்புக் கடனாளியினுடையது. முக்கியமான சாக்ஷியத்தை மறைத்துப் போடுவது மோசமாக மாட்டாது. தீர்வை ரத்து செய்து வைக்கக்கூடிய மோசம் எப்பேற்பட்டதா யிருக்கவேண்டு மென்றால் எந்த எந்த ஆதாரங்களைக்கொண்டு தீர்ப்பு கொடுக்கப்பட்டதோ அந்த ஆதாரங்கள் எல்லாம் மோச நடவடிக்கையால் உற்பத்தியா யிருந்திருக்க வண்டும்.

மோசம் நடத்தப்பட்டிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டுகோர்ட்டார் ஒருதீர்ப்பை ரத்து செய்துவைப்பதற்கு அவர்களுக்குள்ள அதிகாரம் அவர்களுடைய இஷ்டத்தைப் பொருத்த அதிகாரம். மனுதாரன் அந்த மோச நடவடிக்கையில் கலந்திருக்காமல் அதிலிருந்து நீங்கியிருக்கிறான் என்று கோர்ட்டாருக்குத் தெரியவந்த சந்தர்ப்பங்களில் மட்டிலும் அந்த அதிகாரம் அவர்களால்பிரயோகிக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி 38 சென். 203, L. Chinniah Vs. K. Ramana. I. L. R. 38 Mad. 203.

---


# The Indian Law Gazette.

PART II

# இந்திய சட்ட கெஜட்.

1906-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915௵ அக்டோபர்மீ [நெ. 5.


## Cases From The Indian Law Reports.

## இந்தியன் லா ரிபோர்ட்டு களிலுள்ள கேஸ்கள்.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

லெட்டர்ஸ் பேடண்ட் அப்பீல் நெ. 144 of 1909.

நடேசய்யர் வகையரா—அப்பீல் வாதிகள்.

VS

அப்பாவு படையாச்சி—அப்பீல் பிரதிவாதி.

---

வியாஜ்ஜிய சங்கிரகம்.—B என்பவனுக்கு ஒரு நில மிருந்தது. அந்த நிலத்தை ரூபா 41-ஆயிரத்திற்குகிரையம்பெற்றுக்கொள்ளுவதாக A என்பவன் 24-2-1903 ல் B என்பவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். ஒப்பந்தஷரத்துகளாவன அந்த கிரையத் தொகையில் ரூபாய் 4-ஆயிரம் அட்வான்சாகச் செலுத்தப்பட்டது. ரூபாய் 20-ஆயிரத்திற்கு அந்த நிலத்தின் பேரிலேயே அடமானம் எழுதிக்கொள்ளப் படவேண்டும். பாக்கி ரூபாய் 24-5-1903-க்கு முந்தி செலுத்தப்படவேண்டும். அந்த சமயத்தில் கிரயசாசனம் எழுதிகொடுக்கப் படவேண்டும். கிரையம்பெற்றுக்கொள்ள A என்பவன் தாமதப்பட்டால் அட்வான்சுத்தொகைரூபா 4-ஆயிரத்தை அவன் இழந்துவிடவேண்டும். கிரைய ஆதாரம் A என்பவனுக்காவது அல்லது A என்பவனால் குறிப்பிடப் படுகிறவனுடைய பெயருக்காவது B என்பவனால் எழுதிக்கொடுக்கப் படவேண்டும், ஆகவே இந்தப் பிரகாரம் A என்பவனும் B என்பவனும் ஒப்பந்தம் செய்துக் கொண்டார்கள். அந்த ஒப்பந்த ஷரத்துகளை நிறைவேற்றுவதின் ஒருபாகமாக 28-3-1903-ல் A என்பவனுடையபெயரால் நிலத்தின் ஒருபாகம் கிரையஞ் செய்யப்பட்டது. முழு கிரையத்தொகையும் ஒப்பந்த ஆதரவின்படி செலுத்தப்பட வேண்டிய காலத்திற்கு முந்தியதினம் B என்பவன் ஒப்பந்த ஆதரவில் குறிப்பிடப்பட்ட தேதிக்குள்ளாக பாக்கித்தொகையை A என்பவன் செலுத்தாவிட்டால் ஒப்பந்தம் ரத்துசெய்யப் படுமென்று A என்பவனுக்கு நோட்டீஸ் கொடுத்தான். A என்பவன் அந்தத் தேதிக்குள் ஒப்பந்தப்படி பாக்கிப்பணத்தைச் செலுத்தத் தவறிப்போய் விட்டான். அதன்பேரில்

B என்பவன் பிரஸ்தாப நிலத்தை மூன்றுவது மனுஷாளுக்குக் கிரையஞ்செய்து A என்பவனுக்கு விற்பனைசெய்வதாக ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைக்காட்டிலும் ரூபா 1500-அதிகமான தொகைக்குக் கிரையஞ்செய்து பணம் பெற்றுக்கொண்டான் B என்பவன் ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைக்கும்படியாவது அல்லது அட்வான்சுத்தொகை ரூபாய் 4-ஆயிரத்தைத் திருப்பிக்கொடுத்து விடும்படிபடியாக அவன்பேரில் A என்பவன் வியாஜ்ஜியம் (O. S. No 19 of 1900) கும்பகோணம் சப்கோர்ட்டில் கொண்டுவந்தான்.

சப்கோர்ட்டர் தீர்ப்பு:—மிஸ்டர் T. V. அனந்தய்யர் ஜட்ஜ்:—ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க B என்பவனுக்கு உத்திரவுசெய்யாமல் அவன் பெற்றுக்கொண்ட அட்வான்சுத்தொகை ரூபாய் 4-ஆயிரத்தை A என்பவனுக்கு வாப்பீஸ செய்யும்படியாக உத்திரவுசெய்து B என்பவன்பேரில் டிக்கிரி கொடுத்து தீர்ப்புசொன்னார்கள்.

அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக B என்பவன் ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

அந்த அப்பீல் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர், ஜட்ஜி மிஸ்டர் வாலிசால் விசாரணை செய்யப்பட்டு இரண்டு ஜட்ஜுகளும் பேதப்பட்ட அபிப்பிராயங் கொண்டு வெவ்வேறு தீர்ப்புகள் சொன்னார்கள்.

ஜட்ஜி சங்கரநாயர் தீர்ப்பு:—கும்பகோணம்சப்கோர்ட்டுத் தீர்ப்பை உறுதிப் படுத்தினார்கள்.

ஜட்ஜ் லாலிஸ் தீர்ப்பு:—அப்பீலை ஏற்றுக்கொண்டு சப்கோர்ட்டில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள் ஆகவே ஐகோர்ட்டு அப்பீலில் வாதிக்கு அனுகூலமான தீர்ப்பு கிடைத்தது. ஆதலால் பிரதிவாதி ஐகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல்கள் மெசர்ஸ் S. சீனிவாசய்யங்கார், T. S. ராஜகோபாலய்யர் ஆகிய இவர்களுக்கு பதிலாக மிஸ்டர், C. V. அனந்தகிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மெசர்ஸ், T. R. ராமச்சந்திரய்யரும் T. R. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—ஒப்பந்தத்தை மீறிநடந்தால் அட்வான்சுத் தொகையை இழந்து விடுவதாக ஒப்பந்த ஆதாரவில் எழுதப்பட்டிருப்பது அபராத ஷரத்தாகமாட்டாதென்றும் இந்தியன் ஒப்பந்தச் சட்டம் 64, 74-வது பிரிவுகள் இந்தக்கேசில் சம்பந்தப்பட்ட டிபாசிட்டிற்குப் பொருந்தாதென்றும், சொல்லி டிபாசிட்டு தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள A என்பவனுக்கு பாத்தியமில்லை என்றும் இந்தவிஷயத்தில் இங்கிலாண்டுச் சட்டம் இந்தியச் சட்டத்திலிருந்து பேதப்படவில்லை என்றும் ஒப்பந்தத்தை மீறினால் கிரையத்தொகையில் 100-க்கு 10 இழந்துபோகிறது என்று ஒப்பந்த ஆதாரவில் எழுதப்பட்டிருப்பது கிரமமற்ற அல்லது ஆச்சரியமான ஷரத்தல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜட்ஜி சர் ஆர்னல்ட் வோயிட்:—ஜூடிக்கேசர் ஆக்ட் ( Judicature Act ) என்கிற சட்டம் பாஸ் செய்விக்கப் பட்டதுமுதல் ஒப்பந்தத்தில் காலம் முக்கியமான விஷயமாயிருந்தபோதிலும் நியாயத்தை அனுசரித்து தீர்ப்பு சொல்லவேண்டும். கிரையம்பெற்றுக் கொள்ளுவதற்கு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதேதியில் கிரயம் பெற்றுக் கொள்ளுகிறவன் கிரையத்தொகையைச் செலுத்தி கிரையம் ஆதாரத்தை எழுதி வாங்கிக்கொள்ளாமற் போனபோதிலும் அந்தத் தேதிக்குப் பிறகும் கிரமமாக சிலகாலம் அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்.

ஜட்ஜி மிஸ்டர் மில்லர்:—இந்தக்கேசில் ஒப்பந்த ஆதாரவில் குறிப்பிடப்பட்ட காலம்தான் முக்கியம்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்:—இங்கிலீஷ் சட்டம் இந்தக் கேசிற்குப் பொருந்ாது. இந்தியன் ஒப்பந்தச் சட்டப்பிரகாரம் A என்பவன் டிபாசிட் தொகையைத் திருப்பிப் பெறுச்கொள்ள பாத்தியமுடையவன் என்று அபிப்பிராயப்பட்டார்.

கட்டின டிபாசிட் தொகையை இழந்துவிடுகிறதென்று ஒருவன் சம்மதிப்பது அபராத நிபந்தனையாகும்.

இந்தக் கேசில் ஆதாரவில் குறிப்பிடப்பட்ட காலந்தான் மிக முக்கியமான ஷரத்து என்று அபிப்பிராயப்பட்டார். இ. லா. ரி. 38 சென் 178 Nataas Iyer vs Appason Padayachi I. L. R. 38 Madras 178.

---

ஜட்ஜிகள்:—சர்சார்லஸ் ஆர்னல்ட வொயிட் சீப் ஜஸ்டிஸ்.
ஜட்ஜி மிஸ்டர் மில்லர்.
ஜட்ஜி மிஸ்டர் ஒல்ட் பீல்ட்.

லெட்டர்ஸ்பேட்டன்ட் அப்பீல் நெ. 147 of 1912.



முத்துகிருஷ்ணய்யர் வகையரு வாதிகள்
அப்பீல் வாதிகள்.
*vs.*
வீரராகவய்யர் வகையரு பிரதிவாதிகள்
அப்பீல் பிரதிவாதிகள்.

---

லாப்பாயின்ட்:—பிராமிசரி நோட்டை அடமானம் வைத்துக்கொண்டது.

வியாச்சியச் சுருக்கம்:—வாதிகள் தங்களுடைய தகப்பனருக்கு முதல் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட அடமானப்பத்திரத்திற்கண்ட தொகையை வசூல்செய்துக் கொள்ளும் பொருட்டு இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் அந்த அடமான விபரமென்ன வென்றால் (1) வீடு, (2) முதல் பிரதிவாதி பெயரால் எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டும் (3) இரண்டு சாதாரண அடமானப்பத்திரங்களும் ஆகிய மூன்று இனங்களும், வாதிகளின் தகப்பனரிடம் பிரதிவாதிகளால் அடமானம் வைக்கப்பட்டிருந்தன. பிராமிசரிநோட்டுமுதல் பிரதிவாதியால் வாதிகளின் பெயரால் எண்டார்ஸ்மெண்டு செய்துகொடுக்கப் படவில்லை. இந்த வியாஜ்ஜியம் வாதிகளால் மதுரை பிரின்ட்சிபல் டி. மு. கோர்ட்டில் (O. S. நெ. 715 of 1909) கொண்டுவரப்பட்டது.

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:—வாதிகள் பிராமிசரி நோட்டை அடமானம் வைத்துக்கொண்டதை முன்னிட்டு நோட்டை மேடோவர் பெற்றுக்கொண்டவர்களாகின்றார்கள் ஆதலால் பிராமிசரிநோட்டிற்குச் சொந்தக்காரர்களாகப் போய்விட்டார்கள். ஆகவே நோட்டுக காலாவதியாகப் போவதற்கு முந்தி வாதிகள் நோட்டின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து தொகையை வசூல்செய்திருக்கவேண்டும். அப்படிவசூல்செய்ய வாதி தவறிப்போய் விட்டபடியாலும்நோட்டு காலாவதியாகபோய்விட்டபடியாலும் பிராமிசரி நோட்டுத் தொகை வாதிக்கிச் சேரவேண்டிய அடமானத் தொகையிலிருந்து நீக்கப்படவேண்டுமென்றும் பிரதிவாதிகள் கூறி சொன்னார்கள்.

டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்பு:—பிரதி வாதிகள் சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு அடமானத் தொகையில் பிராமிசரி நோட்டு பணத்தைக் கழித்துக்கொண்டு பாக்கித் தொகைக்கு வகி டிக்கிரிதிக் கொடுத்தார்கள்

அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக ஜில்லா ஜட்ஜியிடம் அப்பீல் செய்துகொள்ளப் பட்டது. (A. S. நெ. 409 of 1910.)

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—அசல் கோர்ட்டுத்தீர்ப்பே உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவேவாதிகள் ஐகோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டார்கள்.

இந்த அப்பீலை ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யரும் ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரும் விசாரணை செய்தார்கள். ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர், பிராமசரி நோட்டை அடமானம் வைத்ததால் பிராமிசரிநோட் வாதிக்கி டிரான்ஸ்பர் செய்யப்பட்டதாகாது. அப்படி டிரான்ஸ்பர் செய்யப்பட்டதாக எண்ணப்பட்டபோதிலும் வாதிகள் பிராமிசரி நோட்டுத் தொகையை வசூல்செய்யக் கடமைப் பட்டவர்களல்லவென்றும் ஆதலால் அதன் தொகையை வாதிகள்பேரில் பத்து எழுதக்கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டார்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்புகளை உறுதிப்படுத்தினார்கள்.

ஆதலால் வாதிகள் ஐகோர்ட்டில் லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் தாக்கல்செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்கு மிஸ்டர், C. A. அனந்தகிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதி வாதிகளுக்கு மிஸ்டர் K. N. அய்யா அய்யரும், ஆஜரானார்கள்.

ஐகோர்ட்டார்தீர்ப்பு:—ஜட்ஜி மிஸ்டர் ஆர்னல்ட் வொயிட் தீர்ப்பு:—பிராமிசரி நோட்டில் பிரதிவாதிக்கிருந்த பாத்திதை வாதிக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டுப்போய் விட்டபடியால் பிராமிசரி நோட்டின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து தொகையை வசூல்செய்ய பாத்தியமுடையவர் வாதி அவர் வியாஜ்ஜியம் கொண்டுவந்து தொகையை வசூல் செய்யாமல் பிராமிசரி நோட்டு காலாவதியாகப் போகும்படி விட்டுவிட்டபடியால் வாதி நோட்டின் தொகைக்குப் பிரதி வாதிக்கு ஜவாப்பு சொல்லக் கடமைப்பட்டவர் என்று தீர்மானித்து அப்பீலைச் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஜட்ஜி மிஸ்டர் மில்லர் தீர்ப்பு:—பிரதி வாதிக்கிருந்த பாத்திதை டிரான்ஸ்பர் ஆப்பிராப்பர்ட்டி ஆக்ட் 130-வது பிரிவின்படி பிரதிவாதிகளுக்குப் போய் விட்டபடியால் வாதிகளே நோட்டின் தொகையை வசூல் செய்திருக்கவேண்டும். பிரதிவாதிகளுக்கிருந்த பாத்திதைகள் எல்லாம்கூடி அந்த அடமானத்தை மீட்டுக்கொள்ளும் பாத்திதையே! ஆகையால் இந்த அப்பீலை நான் செலவுதொகையுடன் தள்ளுபடிசெய்கிறேன் என்று தீர்ப்புசொன்னார்.

ஜட்ஜி மிஸ்டர் ஒல்ட்பீல்ட் தீர்ப்பு:—நான் புதிதாகச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. என்னுடைய சகோதர ஜட்ஜிகளுடைய தீர்ப்பிற்கு நான் சம்மத மளிக்கிறேன்.

ஆகவே செலவு தொகையுடன் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது இ. லா. ரி. 38 சென்னை 297 Muthu Krishnier vs. Veera Ragava Iyer I. L. R. 38 Madras. 297.

---

புல்பென்ச்:—சர் சார்லஸ் ஆர்னல்ட் வொயிட்.
ஜட்ஜி மிஸ்டர் மில்லர்.
ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்.

பேரிர் நிடவோல் எஸ்டேட்டுகளை ரிசிவர் வாதி.
அப்பீல் வாதி.

VS.

கே. சூரப்பராஜா பிரதிவாதி அப்பீல் பிரதிவாதி.

சிவில் அப்பீல்:—காலாவதி தோஷம்.

---

வியாச்சியச் சுருக்கம்: சென்னைப்பட்டணப் பூஸ்திதி ஆக்ட் (1 of 1908) டின் படி சம்மேரி வியாஜ்ஜியம்செய்ய வாதி பிரியாதை எழுதிக்கொண்டு நரசப்பூர் எட் அசிஸ்டன்ட் கலெக்டர் ஆபிசுக்குச் சென்றார். அந்தசமயம் எட் அசிஸ்டண்ட்கலெக்டர் ஊரில் இல்லை முகாமிலிருந்தார். அதன்பேரில் வாதி அந்தப் பிரியாதை எட் அசிஸ்டண்ட் கலெக்டர் ஆபிஸ் எட் கிளார்க்கிடம் ஆஜர் படுத்தினர். அவர் பிரியாதைவாங்கத் தமக்கு அதிகாரங்கொடுக்கப்படவில்லை என்றுசொல்லி அதைவாங்கிக்கொள்ளவில்லை. அதன்பேரில் எட் அசிஸ்டன் கலெக்டர் முகாமிலிருந்து திரும்பியபிறகு வாதிபிரியாதை அவரிடம் ஆஜர்படுத்தினர் (Summary Suit No. 4 of 1909.)

எட் அசிஸ்டன்ட் கலெக்ட்டர் தீர்ப்பு:—வாதி பிரியாதை தம்முடைய ஆபிஸ் எட் கிளார்க்கிடம் ஆஜர் படுத்தினபோது பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷமுண்டாகாம லிருந்தபோதிலும் தாம் முகாமிலிருந்து திரும்பிவந்தவுடன் தம்மிடம் ஆஜர்படுத்தின காலத்தையும் சேர்த்து கணக்குசெய்தால் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதென்று எட் அசிஸ்டன்ட் கலெக்டர் நியாயஞ்சொல்லி வாதிகொண்டுவந்த சம்மேரி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக வாதி கிருஷ்ணா ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். (A. S. No. 457 of 1910.)

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—அசல்கோர்ட்டுத் தீர்மானமே உருதிபடுத்தப்பட்டது.

ஆகவே வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

அந்த அப்பீல் முதலில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயரும் ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜியும் கூடிய கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு அடியிற்கண்ட காரணங்களை முன்னிட்டு புல்பென்சாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது.

பல்பென்ச்சிற்கு அனுப்பிவைக்க வேண்டிய காரணங்கள்:—பிரியாது எட் அசிஸ்டண்ட் கலெக்டரிடம் ஆஜர் படுத்தினதாக எண்ணப்பட்டால் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருப்பதாகத் தீர்மானிக்கப்படவேண்டியது, எட் கிளார்க்கிடம் ஆஜர் படுத்தப்பட்டதாக எண்ணப்பட்டால் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாகவில்லை என்று தீர்மானிக்கப் படவேண்டும். மேலும் எட் கிளார்க்கிடம் ஆஜர்படுத்தப்பட்டது சட்டப்படி செல்லுபடி யுள்ளதென்று தீர்மானிக்கப் படவேண்டும். இந்தக் கேஸ் முக்கியமான கேஸ் இதைப்பற்றி ஒரு முடிவான தீர்ப்பு ஜாரிசெய்யப் படவேண்டும். ஆதலால் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதா என்கிற கேள்வியை புல்பெஞ்சாருடைய தீர்மானத்திற்கு அனுப்பிவைக்கிறோம் என்று காரணங்கள் எடுத்துக்கூறி புல்பென்சாருடைய விசாரணைக்கு இந்தக் கேசை அனுப்பி வைத்தார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. நாகபூஷணமும், அப்பீல் பிரதி வாதிக்காக மிஸ்டர் V. ரமதாசும் ஆஜரானார்கள்.

புல் பென்சாருடைய அபிப்பிராயம் :—சென்னைப் பட்டணம் பூஸ்திதி ஆக்ட் சம்பந்தமாகக் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களுக்கும் உற்பத்தியாகும் அப்பீல்களுக்கும் சி. பு. கோ. நிபந்தனைகள் பொருந்துமென்று எஸ்டேட்டு லாண்டு ஆக்ட் 192-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா வியாஜ்ஜியங்களுக்கும் பிரியாது கொடுக்கப்பட வேண்டுமென்று சி. பு. கோ. 26-வதுபிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. சி. பு. கோ. ஆர்டர் I ரூல் 4-ல் பிரியாது கோர்ட்டாரால் அதற்கென்று நியமிக்கப்பட்ட ஆபீசரிடம் ஆஜர் படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆதலால் எஸ்டேட் லாண்டு ஆக்ட் சம்பந்தமான வியாஜ்ஜியங்களை சி. பு. கோ. நிபந்தனைகளை அனுசரித்துத் தாக்கல்செய்யவேண்டுமென்று முடிகின்றது. சி. பு. கோ ஆர்டர் 4-ரூல் I-ல் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ஆபீசரிடம் பிரியாதுகள் ஆஜர்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் எட் அசிஸ்டன்ட் கலெக்டருக்கு இஷ்டமிருந்தால் பிரியாதுகளைப் பெற்றுக்கொள்ள அவருடைய ஆபீசில் ஒரு ஆபீசரை நியமித்திருக்கலாம். ஆனால் எட் அசிஸ்டன்ட்



கலெக்ட்டர் அப்படிச் செய்யவில்லை. சிவில் ரூல்ஸ் ஆப்பிராக்ட்டிஸ் (Civil Rules of Practice) 14-வது விதி ரெவினியூ கோர்ட்டு நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது. லிமிட்டேஷன் ஆக்ட்டை அனுசரித்து சிவில் ரூல்ஸ் ஆப் பிராக்ட்டிசில் (Civil Rules of Praetice) கோர்ட்டு மூடியிருக்கும் தினம் வியாஜ்ஜியம் அல்லது மனுதாக்கல் செய்யப்படவேண்டிய காலம் அல்லது கெடு முடிந்துபோய்விட்டால் அது கோர்ட் திறந்திருக்கும் அடுத்ததினம் தாக்கல்செய்யப்படலாம் என்று சொலலப்பட்டிருக்கும்விதி ரெவினியூ கோர்ட்டு நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது.

ஆதலால் பிரஸ்தாப சம்மேரி வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதென்று தீர்மானிக்கின்றோம். இ. லா. ரி. 38. சென்னை 297 The Receiver of the Nidavole & Medur Estates vs K. Surappa Raju I. L. R. 38 Madras 297.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்.
ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

---

இரண்டாவது சிவில் அப்பீல் நெ. 811 of 1912.
முத்தய்யசெட்டி வகையரு வாதிகள்.
அப்பீல் வாதிகள்.

vs

சுப்பன் சேர்வே பிரதிவாதி அப்பீல் பிரதிவாதி.

வியாச்சியச் சுருக்கம்:—இந்த வியாஜ்ஜியத்தின் வாதிப் பிரதிவாதிகள் மதுரை டி. மு. கோர்ட்டின் அதிகார எல்லைக்குள் ளிருக்கிறார்கள். பிரதி வாதி களின் நிலங்களைக் கிறையம் பெற்றுக்கொண்டு பிரதி வாதிகள் பெயரால் கிறைய ஆதாரவு எழுதிக்கொடுத்திருந்தார். ஆனால் இந்தக்கிரய ஆதாரவு ரெஜிஸ்டர்செய்து வைக்கப்படவில்லை. ஆதலால் பிரதி வாதி அந்தக் கிறைய ஆதாரவை ரெஜிஸ்டர் செய்துவைக்கும்படியாக வாதிகளைக் கட்டாயப்படுத்த வாதிகளின்பேரில் வியாஜ்ஜியங் கொண்டுவந்தார் (O. S. No. 608 of 1909) அந்த வியாஜ்ஜியத்தில் பிரதி வாதிக்கு அனுகூலமாக 3-2-1910-ல் தீர்ப்பு சொல்லப்பட்டது. இப்படி 3-2-1910-ல் தீர்ப்பு சொல்லப்பட்டிருந்தபோதிலும் பிரதிவாதி கிரைய ஆதாரவை 15-4-1910 வரையில் ரெஜிஸ்டிரார் ஆபிசில் ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக ஆஜர் படுத்த வில்லை 15-4-1910-ல் பிரதிவாதி கிறைய ஆதாரவை ஆஜர்படுத்தினர். அந்த ஆதாரவு ரெஜிஸ்டிராரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரெஜிஸ்டர்செய்துவைக்கப்பட்டது.

1909-ம் வருடத்திய 608-ம் நெ. அசல் வியாஜ்ஜியத்தில் பிறந்த டிக்கிரித் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கிரமித்து பிரதிவாதி ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காக கிரய ஆதாரவை ரெஜிஸ்டர் ஆபீசில் ஆஜர்படுத்தி யிருக்கிறபடியால் அந்த ஆதாரவு ரெஜிஸ்டர் செய்துவைக்கப்பட்டது. சட்ட விரோதமென்றும் ஆதலால் இந்த கிரையசாசனம் செலாமணியாகமாட்டாதென்றும் கோர்ட்டார் கூறும்படியாக வாதிகள் பிரதி வாதியின்பேல் மதுரை பிரின்சிபல் டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியங் கொண்டுவந்தார். (O. S. No. 471 of 191 ) 1909 அசல் வியாஜ்ஜிய டிக்கிரிக்கி நகல் வாங்கிக்கொள்ள 9-2-1910-ல் பிரதி வாதியால் மனுசெய்து கொள்ளப்பட்டது ஆயினும் டிக்கிரி 3-2-1910-ல் பிறந்ததாக விருந்தபோதிலும் 17-3-1910 வரையில் டிக்கிரி தயார்செய்யப் படவுமில்லை கையெழுத்து செய்யப்படவுமில்லை. ஆதலால் டிக்கிரி தயார்செய்யப்படுவதற்கு முந்தியே டிக்கிரிபிறந்த தேதியிலிருந்து மூன்றுமாதம் சென்றுவிட்டது. டிக்கிரி பிறந்த மூன்றுமாத காலத்திற்குள் ஆதரவு ரெஜிஸ்டிரார் ஆபிசில் ஆஜர்படுத்தப்பட வேண்டுமென்று இந்தியன் ரெஜிஸ்டிரேஷன் ஆச்ட் 77-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதிவாதியின் கக்ஷி:—ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் 3-மாதம் டிக்கிரி ஜட்ஜியால் கையெழுத்தின் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டுமென்று பிரதிவாதியால் கக்ஷி சொல்லப்பட்டது.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—டிக்கிரி பிறந்த பிறகு மூன்றுமாதம் சென்று டிக்கிரியை ஆதாரவு ரெஜிஸ்டிரார் ஆபீசில் ஆஜா படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதாரவு ரெஜிஸ்டர் செய்யப்பட்டது செலாவணியாகக் கூடியதென்றும் அந்த மூன்றுமாத காலம் டிக்கிரி தயார்செய்யப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டகாலத்திலிருந்து கணக்கிடப்படவேண்டும் என்று சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன்பேரில் வாதி மதுரை ஜில்லா ஜட்ஜிகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். (A. S. No 317 of 1911.)

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—டி. மு. கோர்ட்டாருடையதீர்ப்பைஉருதிப்படுத்தப்பட்டது.

வாதியால் ஐகோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் R. குப்புசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—

ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி தீர்ப்பு:—இந்தியன் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 77-வது பிரிவின் காரியங்களுக்காக டிக்கிரி பிறந்த மூன்றுமாத காலத்திற்

குள்ளாக ஆதரவு ரெஜிஸ்டர் செய்துவைக்கப்படவேண்டுமென்று டிக்கிரியில் சொல்லப்பட்டிருந்தால் அந்த மூன்றுமாதகாலம் டிக்கிரிபிறந்த தேதியிலிருந்து கணக்குசெய்யப்படக்கூடாது. ஆனால் டிக்கிரி தயார்செய்யப்பட்டு ஜட்ஜியால் கையெழுத்து செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படவேண்டும். இப்பேர்ப்பட்ட சுபாபமுடைய டிக்கிரிகளில் ஜட்ஜி எந்தத்தேதியில் டிக்கிரியில் கையெழுத்து செய்கிறாரோ அந்தத் தேதியை சி.பு. கோ. ஆர்டர் 20 ரூல் 7 யின்படி டிக்கிரியில் போடுவது விரும்பத்தகுந்த காரியமாயிருக்கும் ஆகையால் இந்த அப்பீல் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று தீர்ப்பு செய்கிறோம்.

ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர்:—இந்தத்தீர்ப்பிற்கு நான் சம்மதிக்கின்றேன்.

ஆதலால் அப்பீல் செலவுதொகை இல்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டது. இ. லா. ரி. 38 சென். 291 Muthiah Chetty vs. Suppan Servai I. L. R. 38 Mad. 291.

---

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

கிரிமினல் அப்பீல்.

பத்திரெட்டி வகையரு—மனுதார்கள்.

vs.

சக்ரவர்த்தியார்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—சி. பு. கோ. 347-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டின்முன்னால் எழுதிவைக்கப்பட்ட வாக்குமூலத்தில் குற்றவாளிகளில் சிலர் குற்றத்தைச் செய்ததாக ஒத்துக்கொண்டு இன்னும் சில குற்றவாளிகளை குற்றத்தில் கலந்துவைத்து தங்கள்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களை ஒப்புக்கொண்டார்கள். இப்படி சில குற்றவாளிகள் ஒப்புக்கொண்டிருப்பது அவர்களால் இந்தக் குற்றத்தில் கலக்கப்பட்டிருக்கும் குற்றவாளிக்கு இந்தியன்சாக்ஷிசட்டம் 30-வது பிரிவின்படி விரோதமான சாக்ஷியமாக பிரயோகிக்கப்படுத்தப்படும் பொருட்டு புதிதாக கலக்கப்பட்டிருப்பவர்கள் பிரத்தியேகமாக விசாரணை செய்யப்படவேண்டிய தவசியமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென். 302 In the matter of Batti Reddi, I. L. R. Mad 302.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர், பென்சன்.

ஜட்ஜி மிஸ்டர் சுந்திர மய்யர்.

அப்பீல் நெ. 211 of 1911.

K. சீதம்மா முதல் பிரதிவாதி அப்பீல் வாதி

P. வெங்கட்ரமணய்யா வகையரு வாதிகள் அப்பீல் பிரதி வாதிகள்.

லாப்பாயின்ட்:—பராதீனச் சட்டம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—கடந்த நடைமுதல் லாபத்திற்குள்ள பாத்திதையை டிரான்ஸ்பர் செய்வது டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் (IV of 1882) 6-வது பிரிவு E க்ளாசின்படி செலாவாணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் H சீத்தாருமசாமியும் அப்பீல் பிரதி வாதிகளுக்காக மிஸ்டர் P. நாருயணமூர்த்தியும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென். 308. K. Seetamal vs. P. Venkataramanayya I. L. R. 38 Mad. 308.

---

ஜட்ஜி—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 149 of 1913.

K. வெங்கப்பா மனுதார்கள்.

Vs

சக்ரவர்த்தியார்.

லாப்பாய்ன்ட்:—இந்தியன் பினல்கோட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒருரோடில் வைக்கப்பட்ட ஒரு பல்லக்கால் வண்டிகள் அந்த ரோடின்வழியாக சிறிதேனும் போகக்கூடாமலிருக்கிறதென்றும் அந்தவழியாக நடந்து வருகிறவர்களும் அசௌகரியத்திற் குட்படாமல் நடக்கக்கூடியதாயில்லை என்றும் சாக்ஷி வாக்குமூலத்தால் ருஜுப்படுகிறது.

இதனால் ரூபிக்கப்படவேண்டிய தென்னவென்றால் அந்த ரோடின்வழியாகப் போகிறவர்களுக்கும் வருகிறவாகளுக்கும் அந்தப் பல்லக்கு இடஞ்சலாயிருந்ததென்பதே என்றும் ஒருகுறிப்பிட்ட மனிதன் அந்த ரோடின்வழியாகப் போவதற்கு அந்தப்பல்லக்குத் தடையா யிருந்ததென்று ருஜுப்படுத்த வேண்டியது அனுவசியமென்றும் தீர்மானிக்கப் பட்டது,

லாயர்கள்:—மனுதார்கள் தரப்பிற்கு மிஸ்டர் K B ரெங்கநாதஅய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்கும் பப்ளிக் பிராசிக் கியூட்டர் பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடமும் ஆஜரானார்கள் இ. லா. ரி. 38 சென் 305. Re. K. Venkappa I. L. R. 38 Mad. 305.

---

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

கிரிமினல ரிவிஷன் கேஸ் நெ. 155 of 1913.

சுப்பிரமணியஅய்யர் மனுதார்.

vs.

சக்ரவர்த்தியார.

லாப்பாயின்ட்:—பெஞ்ச் மாஜிஸ்டிரேட்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—4-மாஜிஸ்டிரேட் கூடியஒரு பெஞ்ச் அல்லது கோர்ட்டார் குற்றவாளியை விசாரணைசெய்ய ஆரம்பித்தார்கள். கேசை பாதிவரையில் விசாரணை செய்தார்கள். விசாரணை அந்த 4-மாஜிஸ்டிரேட்டுகள் முன்னில் தொடர்ந்தேர்த்தியாக நடந்தது. இப்படி நடந்துகொண் டிருக்கையில் பாதி



விசாரணை முடிந்துபோனபிறகு 5-வது மாஜிஸ்டிரேட் ஒருவர் அந்த நான்கு மாஜிஸ்டிரேட்டுகளுடன் சேர்ந்து விசாரணைசெய்து ஆக 5-மாஜிஸ்டிரேட்டுகளும் கூடி குற்றவாளியின் பேரில் குற்ற ஸ்தாபனை செய்து தீர்ப்புசொன்னார்கள்.

குற்றஸ்தாபனை கிரமமாகச் செய்யப்படவில்லை என்றும் கேஸ் புனர் விசாரணை செய்யப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் T. S. ருஜகோபாலய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டருக்குப் பதிலாக பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடமும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38 சென் 304 Re. Subramanya Iyer I. L. R. 38 Mad. 304.

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் மில்லர்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவஅய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1061 of 1912

நரசப்பய்யா வாதி அப்பீல்வாதி.

vs.

S. கணபதிராவ்பிரதிவாதிகள் அப்பீல்பிரதிவாதிகள்

லாப்பாயின்ட்:—ஈஸ்மெண்டு பாத்திதை.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 20-வருடமும் பூராய் யாதொரு இடஞ்சலுமின்றி அனுபவித் திருந்தாலொழிய ஈஸ்மெண்டுபாத்திதை உண்டாகமாட்டாது. இந்தக் காலத்திற்குக் குறைவாக எவ்வளவு நீண்டகாலம் அனுபவித்துக் கொண்டுவந்தாலும் அவனுக்கு ஈஸ்மெண்டு பாத்திதை உண்டாகமாட்டாது. இப்படி 20-வருடத்திற்குக் குறைவாக ஒருவன் அனுபவித்துக்கொண்டு வந்திருப்பது அந்த பாத்திதையில் ஆக்கிரமித்தவன் பேரில் ஈஸ்மண்டு பாத்திதை பாராட்டி அவன் வியாஜ்ஜியங்கொண்டுவர பாத்திதை கொடுக்காது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் B சீத்தாராம்ராவும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் ஏக்கிய நாருயண ஆதிராவும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38 சென். 280 N. Narasappiah vs. S. Ganapati Row, I. L. R. 38 Mad. 280.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் மில்லர்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

அப்பீல் நெ. 148 of 1910.

காளிபா மௌல்வீஜா முகமத் உசான்காதிரி ஆப்க்கன்சாகிப் வகைரா வாதிகள்-அப்பீல் வாதிகள்

vs.

சொரன்பிவி சேய்பா அம்மாள் வகையரு

பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிள்.

லாப்பாயின்ட்:—லிமிட்டேஷன்.

ஐகோர்ட்டு தீர்ப்பு :—பொது ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு டிரஸட் சொத்தின் டிரஸ்ட்டி அந்த டிரஸ்ட் சொத்திற்காகச் செலவுசெய்தான். இப்படி அவன் செலவுசெய்த சொந்தப்பணத்திற்கு டிரஸ்ட் சொத்துமுதல் அடமானமாக வைக்கப்பட்டிருப்பதுபோல எண்ணப்படவேண்டும் இந்தமாதிரியாக அவன் செலவுசெய்தபணத்தை வசூல்செய்துகொள்ளுவதற்காக அவன் கொண்டுவந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் நிர்ணயிக்க வேண்டுமானால் லிமிட்டேஷன் ஆக்ட் 120-வது ஆர்ட்டிகிலின்படி நிர்ணயிக்கவேண்டுமே யொழிய 132-வது ஆர்ட்டிகிலின்படி நிர்ணயிக்கக் கூடாது. அவன் கோர்ட்டாரால் சட்டப்பிரகாரமுள்ள டிரஸ்டியல்ல என்று கூறப்படுவதற்கு முந்தி அந்தப் பணத்திற்கு வியால்ஜியஞ்செய்ய அவனுக்குப் பாத்திதை உண்டாகவில்லை.

ஒருவன் நான் தான் டிரஸ்ட்டி என்றும், வேறொருவன் டிரஸ்ட்டியல்ல வென்று அந்த வேறொருவனுடைய பாத்திதையை ஆக்ஷேபிக்க வியாஜ்ஜியங்கொண்டுவந்து அபஜெயப்படுகிறான். அந்த வியாஜ்ஜியத்திறகாக அவன் செலவுசெய்த பணத்திற்கு டிரஸ்ட் சொத்து கட்டுப்படும்படியாக விடக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக ஆனரபில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரிஅய்யரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38 சென். 260 Kaliba Moulvija Muhammed Usan Kadiri Abkan Sahib vs. Soran Bivi Saiba Ammall, I. L. R. 38 Mad. 260.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சங்கரவ்நாயர்.

ஜட்ஜி மிஸ்டர் ஓயிட் பீல்ட்.

இரண்டாவது அப்பீல் நெ. 1994 of 1911.

சைபத் சிலேமான் சாயேப்—வாதி

அப்பீல் வாதி.

V

பெரன்ட்டாலா உசேன்

பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—முந்திய வியாஜ்ஜியம் பிந்திய வியாஜ்ஜியத்திற்குத் தடை.

வியாச்சியச் சுருக்கம்:—வாதி கர்நூல் (Knrnool). டி. மு. க் கோர்ட்டில் தம்முடை கிலங்க

ளுக்குப் பாத்திதையை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். நிலங்களை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள வாதிகளுக்குப் பாத்திதையிருக்கும்போது அவைகளை சுவாதினப்படுத்திக்கொள்ளவும் வியாஜ்ஜியம் கொண்டு வராமல் நிலங்களுக்குத் தங்களுந் கிருக்கும் பாத்திதையை மட்டிலும் ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவாதிருக்கிற படியால் இந்த வியாஜ்ஜியம் செலாவணியாகாது என்று டி. மு, கோர்ட்டார் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆதலால் இப்போது வாதி அதே கோர்டடில் நிலங்களுக்கு தங்களுக்கிருக்கும் பாத்திதையை ஸ்தாபிக்கவும் அவைகளை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளவும் வியாஜ்ஜியம் கொண்டுவந் திருக்கிறார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதி முந்தி கொண்டு வந்த வியாஜ்ஜயத்திலேயே நிலங்களை ஸ்வாதீனப்படுத்திக் கொடுக்கும்படி கேட்டிருக்கலாம் என்றும் அப்படி கேட்கத் தவறிப் போய்விட்டபடியால் முந்திய வியாஜ்ஜியம் அதே பாத்திதையை ஸ்தாபிக்கக் கொண்டுவரப்பட்ட பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாக யிருக்கிறதென்று டி. மு. க் கோர்ட்டார் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக கர்நூல் சப் ஜட்ஜி கோர்ட்டில் வாதியால் அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

சப் ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—ரெங்கசாமிப் பிள்ளை Vs கிருஷ்ணபிள்ளை (1) அய்பு Vs செட்டி விலம்பா (2) நாராயணக் கவிராயன், Vs. கந்தசாமிக் கவுண்டன் (3) ஆகிய இந்த மூன்று கேஸ்களிலும் ஜாரி செய்யப்பட்ட தீர்ப்புகளைப் பின்பற்றி அசல் கோர்டடுத் தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

ஆகவே வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யரும், T. R. கிருஷ்ணசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸர்ஸ் K. பார்த்தசாரதி அய்யங்காரும் V. C. சேஷாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

ஐகோர்ட்டா தீர்ப்பு:—இந்தக் கேசில் வாதி நிலங்களில் தமக் கிருக்கும் பாத்திதையை ஸ்தாபிக்கும் பொருட்டு டி. மு. க் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். விசாரணையில் அந்தநிலங்களையும் வசப்படுத்திக்கொள்ள வாதிக்குப் பாத்திதை யிருக்கிறதென்று புலப்பட்டது. இப்படி நிலங்களை வசப்படுத்திக்கொள்ள வாதிக் கிப்பாத்திதை யிருக்கும்போது அதற்காகவும் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டுவர வேண்டியதிருக்க பாத்திதையை மட்டிலும் ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவந் திருக்கிறார் என்றும் அது செலாவணி யற்றதென்றும் டி. மு. க் கோர்ட்டார்சொல்லி அந்த வியாஜ்ஜியத்தைத தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன் பிறகு வாதி அதே கோர்ட்டில் அதே நிலத்திற்குத் தமக்குள்ள பாத்திதையை ஸ்தாபிக்கும் பொருட்டும் அந்த நிலத்தை ஸ்வாதீனம் படுத்திக் கொள்ளும் பொருட்டும் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். அசலில் டி. மு.க் கோர்ட்டாரும் அப்பீலில் சப் ஜட்ஜி கோர்ட்டாரும் வாதியால் கொண்டுவரப்பட்ட முதல் வியாஜ்ஜியத்தில் நிலத்தை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளவும் வாதியால் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்க வேண்டுமென்றும் அப்படி வாதி கேட்டுக் கொள்ள தவறிப்போய் வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டுப் போயிருக்கிறபடியால் தள்ளுபடி செய்யப்பட்ட வியாஜ்ஜியம் அதே வாதியால் அதே பாத்திதையை ஸ்தாபிக்கக் கொண்டுவரப்பட்டிருக்கும் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கிறதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இதன்பேரில் வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார். முந்திய வியாஜ்ஜியத்தையும் பிரஸ்தாப வியாஜ்யத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். இரண்டு வியாஜ்ஜியங்களிலும் வாதி பிரதிவாதிகள் ஒருவரே. முந்திய வியாஜ்ஜியத்தில் பாத்திதையை மட்டிலும் ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. பிந்திய வியாஜ்ஜியம் பாத்திதையை ஸ்தாபித்து நிலத்தை வசப்படுத்திக்கொள்ளுவதற்காக ஆக இரண்டு காரியங்களுக்குக்காகக் கொண்டுவரப்பட் டிருக்கிறது. இரண்டு வியாஜ்ஜியங்களின் பிரியாதுகளை ஒப்பிட்டுப் பார்ப்போம். முந்திய வியாஜ்ஜிய பிரியாதில் வாதியின் சுவாதீனம் பாதிக்கப்பட் டிருப்பதாக சொல்லப்பட வில்லை. பிந்திய வியாஜ்ஜியத்தின் பிரியாதில்வாதியின் ஸ்வாதீனத்திலிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டுப் போயிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முந்திய வியாஜ்ஜியத்தில் நிலத்தின் பாத்திதையைப்பற்றி சந்தேகமும் உண்டாயிருக்கிறதென்றும் அந்த சந்தேகத்தை நீக்கிக் கொள்ள மட்டிலும் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய மற்றப்படி யாதொன்றும்சொல்லப்படவில்லை. அந்த வியாஜ்ஜியம் முந்திய வியாஜ்ஜியத்தால் தடைப்படுத்தப்பட் டிருக்கிறதா இரண்டு வியாஜ்ஜியங்களின் வியாஜ்ய மூலங்களும் ஒன்றுதானு என்கிற பிரஸ்னையைத் தீர்மானிக்கவேண்டுமானுல் முந்திய வியாஜ்ஜியத்தின் பிரியாதை பார்க்கவேண்டும் அல்லது முந்திய வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜியமூலம் உண்டாவதற்கு உள்ள காரியங்களை கவனித்துப் பார்க்கவேண்டும். அப்படி பார்த்தால் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலமும் முந்திய வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலமும் ஒன்று யிருக்கவில்லை. இரண்டு வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலங்களும் ஒன்று யிருந்தால் மட்டிலும் சி. பு. கோ ஆர்டர் 2, விதிகள் 1, 2. 3 ன் படி முந்தியவியாஜ்ஜியம் பிந்திய வியாஜ்ஜியத்தை தடைப்படுத்தும். (ரெள்ருடி கேட்டா) என்று அனேக தீர்ப்புகள் ஐக்கோர்ட்டாரால் ஜாரி செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் வாதி கொண்டு வந்த முந்திய வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தின் வியாஜ்ஜிய மூலத்திலிருந்து பேதப்பட்டிருக்கிறபடியால் முந்திய வியாஜ்ஜியம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைத் தடைப்படுத்த மாட்டாதென்று தீர்மானித்து அசல் கோர்ட்டு முதல் அப்பீல் கோர்ட்டுத்தீர்ப்புகளை ரத்துசெய்து பிரஸ்தாப வியாஜ்ஜியத்தை விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யும்படியாக டி. மு. க் கோர்ட்டாருக்கு அனுப்புகிறோமென்று தீர்ப்பு சொன்னார்கள். இ. லா: ரி. 38 சென் 247. Syed Silaman Sahib V. Bontala Hussain I. L. R. 38 M. 247.


# The Indian Law Gazette.

PART II.

# இந்திய சட்ட கெஜட்.

1906-ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

பாகம் II.

வால்யம். 8] சென்னப்பட்டணம், 1915ஞு டிசம்பர்மீ [நெ. 6.


## Cases From The Indian Law Reports.

## இந்தியன் லா ரிபோர்ட்டுகளிலுள்ள கேஸ்கள்.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் சர் சார்லஸ் ஆர்னுல்ட் வொயிட், சீப் ஜஸ்டிஸ். ஜட்ஜி மிஸ்டர் டயாப்ஜி.

சிவில் அப்பீல் நெ. 15 of 1911.

பாட்சா சாகெப்—முதல் பிரதி வாதி, அப்பீல் வாதி.

VS

அப்தல் கன்னி என்கிற அப்தல் கரீம் சாகெப் அப்பீல் பிரதிவாதி.

லாப்புரயின்ட்;—மத்தியஸ்தர் தீர்ப்பு.

ஐகோர்டு தீர்ப்பு:—மத்தியஸ்தா தீர்பபின் பிரகாரம் டிக்கிரி பிறப்பிக்கப்பட் டிருந்தால் அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாது. ஆனுல் அந்த டிக்கிரி மத்தியஸ்தரின் தீர்ப்பின் பிரகாரம் இல்லாமற் போனுலும் அல்லது அதற்கு மிஞ்சியதாயிருந்தாலும் 1908-ம் வருடத்திய சி. பு கோ. இரண்டாவது ஷெடியூல் 16 (2) கிளாசின்படி அப்பீல் செய்துகொள்ளலாம். 1882 ம் வருடத்திய சி.பு.கோ. விலும் இதேசட்டம்தான் சொல்லப்பட்டிருந்தது.

ஒரு மத்தியஸ்தர்செய்த தீர்ப்பை ரத்துசெய்து வைக்க மனு செய்துகொள்ளப்பட்டது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது மல்லாமல் அந்த மத்தியஸ்தர் தீர்ப்பின்பிரகார கோர்ட்டார் தீர்ப்புசொல்லியிருக்கிறார்கள். இப்படி சொல்லப்பட்ட தீர்ப்பு சி. பு கோ. இரண்டாவது ஷெடியூல் 16(2) கிளாசின்படி முடிவான தீர்ப்பாகும் என்று தீர்மானிக்கப்பட்டது.

---

மத்தியஸ்தர் தீர்ப்பை ரத்துசெய்துவைக்க ரிவிஷன் மனு தாக்கல் செய்வது அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளுவதைப் பார்க்கிலும் ஆக்ஷேபிக்கப்படக் கூடியது.

மத்தியஸ்தர் செய்த தீர்ப்பை ரத்துசெய்து வைக்கவேண்டுமானுல் தீர்ப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் மனு செய்துகொள்ளுப்

படவேண்டும். பத்து தினங்களுக்குப் பிறகு மனு செய்து கொள்ளப்பட்டால் கோர்ட்டார் மனுவைத் தள்ளுபடிசெய்துவிடலா மென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெஸர்ஸ் T. R. ராமச்சந்திரய்யரும், மெஸ்ர்ஸ் T. R கிருஷ்ண சாமி அய்யரும்—அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்தகிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

இ. லா. ரி. 38 சென். 256. Batcha Sahib Vs. Abdul Gunny I. L. R. 38 Madras 256.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர் சுந்திர மய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 695 of 1912.

காயாரோகணப்பத்தன்—வாதி—அப்பீல் வாதி.

vs

சுப்பராயத்தேவன்—பிரதிவாதி—அப்பீல்பிரதிவாதி.

லாப்பாயிண்ட்:—வார்சு பாத்திதை.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—வைத்தியர்களால் சொஸ்தப்படுத்தப்படக்கூடாதென்றெண்ணப்படும்குஷ்டரோகத்தால்வருந்தும் ஒருவன்ஹிந்துலாப்பிரகாரம் வார்சாகவரும் பாத்திதையிலிருந்து விலகப்பட்டவனாக மாட்டான் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அந்த குஷ்டரோகம் ரணம் கொண்டு அதினின்று ஊன் நீர் வடிந்துகொண்டிருந்தாலும் அப்பேர்ப்பட்ட மூர்க்கமான ரோகத்தால் அங்கசுணமாவது அல்லது சம்சாரக்கத்திற்கு அருகற்ற தன்மையாவது உண்டாயிருந்தாலும் அல்லது நோயின் சுபாவம் மனதிற்கு அருவெறுப்பைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் இப்பேர்ப்பட்ட குஷ்டரோகி வார்சு பாத்திதையிலிருந்து விலக்கப்பட்டவனாவான் என்றும் வார்சு பாத்திதையிலிருந்து விலக்குவதற்கு ஸ்மிருதிகளில் அனேக காரணங்கள் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவைகள் எல்லாம் கோர்ட்டாரால் வர்ஜிதப்படுத்தப்படுகிறதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38 சென் 250. Kaya Rohana Pathan Vs. Subbaraya Thevan I. L. R. 38 Mad 250.

---

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல்.

சுக்கின்கட்டும் சாஹிபா —வாதி.

vs

பீர்முகமது அப்துல் அஜீஸ்பாட்சாசாகெப்-பிரதிவாதி

லாப்பாயின்ட்:—விதாசாரப்பணம்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஒரே தீர்ப்புக் கடனாளியின்பேரில் அனேக டிக்ரிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தீர்ப்புக் கடன்காரர்கள் எல்லாம் தீர்ப்புக் கடனாளியின் ஒரே ரொக்க ஐவேஜ்ஜியிலிருந்து தங்களுக்குப் பணம் கொடுக்கப்படவேண்டுமென்று மனு செய்துகொண்டார்கள். இந்தத்தீர்ப்புக் கடன்காரர்களுக்குள் ஒருவன் மற்றொருவனுடைய டிக்கிரி மோசடியானதென்று ருஜுப்படுத்த பாத்தியமுடையவன். ஆனால் அவன் நிறைவேற்று நடவடிக்கையில் அப்படிச் செய்ய பாத்திய மற்றவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

சி. பு. கோ. 73 வது பிரிவின்படி பங்கு விதாச்சாரப்பணம் கிடைக்கவேண்டுமானல் டிக்கிரி கடன்காரன் எந்த ஐவேஜியிலிருந்து விதாசாரப்பணம் கேட்கிறானோ அந்த ஐவேஜி கோர்ட்டாரால் வசூல் செய்யப்பட்டு கோர்ட்டிற்கு கொண்டுவரப்படுவதற்கு முந்தி அந்த டிக்கிரி கடன்காரன் டிக்கிரியை நிறைவேற்ற சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி மனு செய்துக்கொண்டிருக்கவேண்டும். பல தீர்ப்புக் கடன்காரர்கள் டிக்கிரிக் கடனாளியினுடையவும் கோர்ட்டார் வசத்தி லிருக்கும்படியான ஐவேஜியை ஜப்திசெய்தால் சி. பு. கோ. ஆர்டர் 21, ரூல் 52-ன் படி அந்த தீர்ப்புக் கடன்காரர்களுடைய பாத்திதா பாத்திதைகளை விசாரணைசெய்து தீர்மானித்து அவர்களுக்கு பங்குவிதாச்சாரம் கொடுக்கப்படும்படியாக கோர்ட்டார் உத்திரவு செய்யவேண்டும். இப்போதுள்ள சட்டத்தின்படி முதலில் ஜப்திசெய்த தீர்ப்புக் கடன்காரனுக்கு முந்திய பாத்திதை உண்டாகமாட்டாதென்றும் முதலில் செய்யப்பட்ட ஜப்தி அந்த ஐவேஜி பராதீனம் செய்யப்படுவதைமட்டிலும் தடுக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்ப்புக் கடனாளியினுடைய ஐவேஜி ஒரு கோர்ட்டாருடைய வசத்தி லிருக்கிறதென்று எண்ணிக் கொள்ளுவோம். மற்ற கோர்ட்டுகளில் டிக்ரி பெற்றவர்கள் அந்தக் கோர்ட்டி லிருக்கும்படியான ஐவேஜியை அல்லது பணத்தை ஜப்தி செய்தால் அந்தக் கோர்ட்டார் உத்திரவின்படி விதாச்சாரப்பணம்பிரித்து பட்வாடா செய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் சி. பி. ருமசாமி அய்யரும், தீர்ப்புகடன்காரன்லக்ஷமிநாராயணடூக்கருக்காகமிஸ்டா எஸ். அளகுசிங்காச்சாரியாரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38 சென் 221. Sukkeenkatum Sahiba vs Peer mahomed Abdul Azez Badsha Saheb I. L. R. 38 Mad 221.

---



ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர்சுந்தரமய்யர்.

மொட்டயப்பன் என்கிற செல்லப்பக் கவுண்டன்—வாதி—அப்பீல்வாதி.

vs

பழனிக்கவுண்டன்—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி

லாப்பாயின்ட்:—இந்தியன் சாக்ஷிச் சட்டம்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஒரு ஆதரவு உண்மையில் நடவடிக்கைக்குக் கொண்டுவரப்படுமென்கிற நோக்கத்துடன் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆதரவை வாசித்துப் பார்த்தால் எவனுக்கு அது எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவன் சொத்தை உடனே அடையவேண்டுமென்று தாத்பரியம் விளங்குகின்றது. இப்பேர்ப்பட்ட ஆதரவை எழுதிக் கொடுத்தவன் அந்த ஆதரவில் செய்யப்பட்ட பராதீனம் சிலகாலம் சென்றுதான் அல்லது தான் இறந்து போனதற்குப்பிறகு தான் நடவடிக்கைக்கு கொண்டுவரப்படவேண்டுமென்கிற நோக்கத்துடன் ஆதரவு எழுதிக்கொடுக்கப்பட்டதென்று கக்ஷிசொல்லி ருஜுப்படுத்த பாத்தியமுடையவநல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெசர்ஸ், எஸ். சீனிவாசய்யங்காரும், ஏ. சுப்பராமய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் டி. நடேசய்யரும் ஆஜரானார்கள் இ. லா. ரி. 38 சென் 226. Mottayappan vs Palni Gavudan 38 Mad 226

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் மில்லர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

ஸ்ரீ. ஸ்ரீ. கஜபதிகிருஷ்ண சந்திரதியோகாரு—வாதி—அப்பீல்வாதி.

பி. சீனிவாசாச்சார்லு—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—ஒப்பந்தச்சட்டம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—வாதியின் தகப்பன் ஒரு கிராமத்தைப் பிரதிவாதிக்குத் தானம் செய்து அடியிற்கண்டபிரகாரம் தான ஆதரவு எழுதிக்கொடுத்திருந்தார்:—நாங்கள் (வாதியின் தகப்பன்) கிராமத்தைப்பிரித்து உங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்படி பிரித்துக் கொடுக்கப்பட்ட கிராமத்திற்கு நீங்கள் தீர்வை செலுத்திக்கொண்டு வரவேண்டும்.

கிராமப் பிரிவினை செய்துகொடுக்கப்பட்டது. முதல் பிரதிவாதி அதற்கு விதிக்கப்பட்டகிஸ்தியைச் செலுத்திக்கொண்டு வரவேண்டும் என்றும், கிராமப் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டபின்பு பிரதிவாதி அவன்பாகத்திற்குச் செலுத்திவரவேண்டிய கிஸ்தியை வாதியே செலுத்தியிருந்தால் அப்படி செலுத்தப்பட்ட தொகையை வாதி பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக பாரிஸ்டர் சி. எவ். நேப்பியரும், டாக்டர். எஸ். ஸ்வாமிநாதனும் அப்பீல் பிரதிவாதிகளுக்காகமிஸ்டர்சி. பி. ருமசாமி அய்யரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 31 சென் 236. Sri Sri Gazapathi vs P. Srinevasacharlu I. L. R. 31 Mad 236.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர், பென்சன்.
மிஸ்டர் ஜட்ஜி சதாசிவய்யர்

வைரவன் செட்டியார்—வாதி—அப்பீல்வாதி.

v.

அலிச்சா செட்டியார்—பிரதிவாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—ஒப்பந்தச் சட்டம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு:—ஒரு ஏஜண்டு தன்னுடைய எஜமானுடைய சரக்கை விற்பனை செய்ய பாத்தியமற்றவன். அப்படி யிருந்தும் ஏஜண்டு தனக்கு அதிகார மிருப்பதாகச் சொல்லி அந்தச் சரக்கை விற்பனை செய்ய வேறொருவனிடம் ஒப்பந்தம் செய்தான், அந்த ஒப்பந்தப்படி ஏஜண்டு சரக்கை விற்பனை செய்யத் தவறிப் போய்விட்டபடியால் வாதியால் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. இந்த வியாஜ்ஜியம் ஒப்பந்தத்தி லிருந்து உண்டான வியாஜ்ஜியமென்றும் லிமிட்டேஷன் ஆக்ட் 115 வது பிரிவின்படி அதற்கு காலாவதி தோஷம் நிர்ணயிக்கப்பட வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் கே. சீனிவாசய்யங்கார், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் எஸ். சீனிவாசய்யங்காரும், மிஸ்டர் கே, வி. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென். 276. Viravan Chettiar vs. Alicha Chettiar I. L. R. 38 Mad 276.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 158 of 1912.

அச்சப்பராஜு—பிரதிவாதி—அப்பீல்வாதி.

v.

ருஜாவேலுகோடிகோவிந்த கிருஷ்ணயச்சேந்தி ருலவாரு—வாதி—அப்பீல பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—மதிராஸ் பூஸ்திதி ஆக்ட்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—சென்னப் பட்டணம் பூஸ்திதி ஆக்ட் அமுலுக்கு வருவதற்கு முந்தி பிறந்த குத்தகை ஆதரவில் குறிப்பிடப்பட்டிருந்த குத்தகைகாலம் முடிந்துபோய்விட்டதென்கிற காரணத்தை முன்னிட்டு தரிசி நிலத்தின் ரயித் (Ryot) நிலத்திலிருந்து அப்புறப் படுத்தப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் வி. ராமநாசும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் எஸ். சுப்பிரமணிய அய்யருக்குப் பதிலாக மிஸ்டர் கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38, சென். 163. Achapa Raju vs Rajah VelugotiGovindah Krishnaya Chendru lavaru. 38 Mad, 163.

---

ஜட்ஜிகள்—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர் சுந்தரமய்யா.

A. பாலசுப்பிரமணிய செட்டி—அப்பீல் வாதி.

vs.

ஸ்வர்ணம்மாள்—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—டிக்கிரியை நிறைவேற்றுவது.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—டிக்கிரி பிறந்தபிறகும் கூடுதலான நடைமுதல் லாபத்திற்கும் சேர்த்து ஒரு டிக்கிரி பிரப்பிக்கப்பட்டது. இப்படி டிக்கிரி பிறப்பிக்கப்பட்டிருக்கும்போது டிக்கிரி பிறந்த பிறகு கூடுதலான நடைமுதல் லாபத்திற்காக ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டது. டிக்ரி பிறந்த பிறகு கூடுதலான நடைமுதல்லாபத்திற்கும் சேர்த்து ஏற்கனவே டிக்கிரி கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் இந்த வியாஜ்ஜியம் அனாவசியமானதென்று கோர்ட்டார் காரணம் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்படி வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது அந்த டிக்கிரியை நிறைவேற்றி அந்த குறிப்பிடப்பட்ட நடைமுதல் லாபத்தை வசூல் செய்வதற்குத் தடையாயிருக்காதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் எல். ஏ. கோவிந்தராகவய்யரும், அப்பீல்பிரதிவாதிக்காக மிஸ்டர் வி. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள். இ லா.ரி. 38. சென் 199. Balasubramanya Chetty Vs. Swarnammal I L R 38 M. 199.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1949 of 1911.

கொலத்து அய்யர்—பிரதிவாதி—அப்பீல் வாதி.

vs

ரெங்கவாத்தியார்—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்;—பராதீன பாத்திதை சம்பந்தமான ஒப்பந்தம்.

ஐகோர்ட்டு தீர்ப்பு—அம்மையப்பன் அம்மாள் தன்னுடைய நிலத்தை விற்பனை செய்வதாகயிருந்தால் முதலில் அப்பாவு வாத்தியார் வகையறுவுக்கு விற்பனை செய்யவேண்டும். அப்பாவு வாத்தியார் வகையறு தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டால் அவள் தன் இஷ்டப்படி இன்னும் வேறே யாருக்கேனும் விற்பனை செய்யலாம் என்று மேற்படி அம்மையப்பன் அம்மாள் அப்பாவு வாத்தியார் வகையறுவுக்கு ஒரு உடன்படிக்கை ஆதரவு எழுதிக்கொடுத்திருந்தாள். அம்மையப்பன் அம்மாள் இறந்துபோய்விட்டாள். அவளுடைய வார்சுகள் நிலத்தை வேறு சிலருக்கு விற்பனை செய்தார்கள். ஆகவே அப்பாவு வாத்தியார் வகையரா மேற்படி ஒப்பந்த உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டு மேற்படியாளுடைய வார்சுகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். அசல் கோர்ட்டாரும் முதல் அப்பீல் கோர்ட்டாரும் அந்தஉடன்படிக்கை அமுல் நடத்தப் படுத்தப்படக் கூடிய உடன்படிக்கை என்று சொல்லி வாதிகளுக்குப் பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி கொடுத்தார்கள். பிரதிவாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில், அந்த ஒப்பந்தத்தில் இன்ன காலத்திற்குள் நிலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்படவில்லை. இப்படி காலம் குறிப்பிடப்படாத ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க ஒப்பந்தம் செய்தவளின் வார்சுகளை கட்டாயப்படுத்தக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெஸர்ஸ் டி. ஆர். ராமச்சந்திரய்யரும், டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர்



டி. ரெங்காச்சாரியாரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென். 114. Kolathu Iyer vs. Rangha Vadyar. I. L. R. 38 Mad 114.

---

ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்.
ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1827 of 1911.

ஸ்ரீருஜகோபாலஸ்வாமி தேவஸ்தானம் டரஸ்டி ராமய்யங்கார் மூலியமாக—வாதி—அப்பீல் வாதி,

vs.

ஜெகநாத பாண்டியாஜியார்—பிரதிவாதி—அபபீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—நில ஸ்வான்தாரும் குடியும்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—இனும் செட்டில் மெண்டு காலத்திலும் அதற்குப் பிந்தியும் மேற்படி குடியின் நிலம் ஒரு தோப்பாக விருந்தது. அந்தத் தோப்பில் அனேக மரங்க ளிருக்கின்றன. அந்த மரங்களின் விலை மதிப்பில் ஒரு பாகத்தை அடைய மேல்வாரக்காரன் பாத்தியமுடையவன் என்றும் அந்த மரங்களை குடி வெட்டி அவனே ஏகாங்கியாய் உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாதென்றும் மேல்வாரக்காரன் அடையவேண்டிய பங்கு சாக்ஷிகள் மூலியமாக நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் எம். ஏ. திரு நாராயணாச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் M. D. தேவதாசும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென. 155. Sri Rajagopalasami Temple vs Jagannatha Pandiayagiar I. L. R. 38. Mad. 155.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட் ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

இட்டி சிவில்கோர்ட் அப்பீல் நெ. 12 of 1912.

பி. வெங்கய்யா—பிரதிவாதி—அப்பீல் வாதி.

vs.

எஸ். கிருஷ்ணமூர்த்தி—வாதி—அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்—ஆதரவு அமைப்பு.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஒருவீட்டின்கிரைய ஆதரவில் அடியிற்கண்டபடி எழுதப்பட்டிருந்தது. சகல ஈஸ்மெண்டு பாத்திதைகளுடனும் கிரையம் செய்யப்பட்டது. இப்படி எழுதப்பட்டிருந்தால் இப்போதுள்ள ஈஸ்மெண்டு பாத்திதைகளுடனும் அதற்கு முன்னிருந்தவும் ஆனால் சொற்பகாலம் வரையிலும் அனுபவிக்கப்படாத பாத்திதைகளுடனும் அந்த வீடு கிரையம் செய்யப்பட்டதாக எண்ணப்பட வேண்டுமென்றும் அந்த வீடு துண்டுதுண்டாகப் பிரித்து விற்பனை செய்யப்பட்டபோதிலும் இந்த பாத்திதைகள் வீட்டை வாங்கினவர்களிடம் சென்று விடுகின்றன என்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் டி. எத்திராஜுலு முதலியார், அப்பீல பிரதிவாதிக்காக மிஸ்டர் வி. வி. சீனிவாசய்யங்காரும் ஆஜரானார்கள். இ. லா.ரி. 38. சென்.141. P. Venkiya vs.S. Krishnamoorthy I. L. R. 38 Mad 141.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர், மில்லர்
ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

அப்பீல் நெ. 28 of 1909.

ருஜாராஜேஸ்வரி துரை என்கிற முத்து ராமலிங்க துரை அடுத்த சிநேகிதன் எம் வேலுசாமித் துரை மூலியமாக—வாதி—அப்பீல் வாதி.

vs.

ஏ. எல. ஏ. ஆர். ஆர். எம். அருணசலம்செட்டியார் வகையரா—பிரதிவாதிகள்—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—தகாத செல்வாக்கு.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—வாதியின் இறந்துபோன தகப்பனார் பிரதிவாதிகளின் இறந்துபோன தகப்பனுருக்கு 5-11-1889 லும், 2-6-1893 லும் இரண்டு தடவையில் தம்முடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு குத்தகை ஆதரவுகளும் எழுதிக்கொடுத்தார். பிரதிவாதிகளின் தகப்பனார் 1899 ல, இறந்துபோய்விட்டார். குத்தகைக்கு வாதியின் இறந்துபோன தகப்பனாரால் விடப்பட்ட நிலங்களை பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள 1904 ல் பிரதிவாதிகள் பேரில் வாதி வியாஜ்ஜியம்கொண்டுவந்தார். காரணம் என்னவென்றால் பிரதிவாதிகளின் தகப்பனார் வாதியின் தப்பனாரிடத்தில் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தி குத்தகை ஆதரவு எழுதி வாங்கிவிட்டார் கள் என்பதே. இந்த குத்தகை ஆதரவுகளை வாதி ரத்துசெய்து வைக்க வேண்டுமானால், பிரதிவாதிகளின் தகப்பனார் வாதியின் தகப்பனாரிடம் தகாத செல்வாக்கைப் பிரயோகப்படுத்தி குத்தகை ஆதரவு எழுதி

வாங்கிவிட்டார்கள் என்று எப்போது வாதிக்குத் தெரியவந்ததோ அதுமுதல் மூன்று வருடங்களுக்குள் வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கவேண்டும், அப்படி அந்தக் காலத்திற்குள் இந்த வியாஜ்ஜியம் வாதியால் கொண்டுவரப்படவில்லை. ஆதலால் வாதியால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த வியாஜ்ஜியம், லிமிட்டேஷன் ஆக்ட் 91-வது ஆர்ட்டிகிலின்படி, காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் கே. சீனிவாசய்யங்காரும் ஏ. கிருஷ்ணசாமி அய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக அட்வோகேட் ஜெனால் ஆனரபில் மிஸ்டர் F. H. M. கார்பட்டும், 1 3. 4. அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் எஸ். சீனிவாசய்யங்காரும், முதல் அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் எஸ். வரதாச்சாரியாரும், 3, 4, அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் எஸ், சௌந்திரராஜய்யங்காரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென் 321. Raja Rajeswara Dorai vs. A. L. A. R. R. M. Arunachellam Chettiar 38 Mad 321.

---

ஜட்ஜிகள்:-சீப் ஜஸ்டிஸ் சர் சார்லஸ் ஆர்னால்ட் வொயிட்.

ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர்.

ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி.

ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட கேஸ். நெ. 16 of 1911

உப்பள இலாகா செக்ரிட்டரி.

vs.

திருநெல்வேலி தென்னிந்தியா பாங்க் லிமிடெட்.

லாப்பாயின்ட்:— ஸ்டாம்பு ஆக்ட்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—இந்தக் கேஸ் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்காக ரெவினியூ போர்டாரால் அனுப்பப்பட்ட கேஸ். திருநல்வேலியிலிருக்கும் சவுத் இந்தியன் பாங்கு லிமிட்டெட்டில் பாங்கியாரால் வைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுவரும் ரகசிய ரெஜிஸ்டரில் செய்யப்படும் பதிவுகளுக்கு ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டுமா என்பது ரெவினியூ போர்ட்டாருடைய கேள்வி. பாங்கி ரகசிய ரெஜிஸ்டரில் அடியிற் கண்ட பதிவுகள் அடியிற் கண்ட சந்தர்ப்பங்களை முன்னிட்டு செய்யப்பட்டிருந்தன. பெரும்பாலும் அண்டிமாண்டு நோட்டின் பேரிலும் அல்லது இன்னும் மற்ற ஆதாரவுகளின் மூலியமாகவும் பாங்கு கடன் கொடுத்துக்கொண்டு வருகிறது, ஆனால் பாங்கு கடன் கொடுப்பதற்கு முந்தி கடன் வாங்கிக்கொள்ளுகிறவன் இதற்கென்று அச்சடித்து வைக்கப்பட்டிருக்கும் ரகசிய ரெஜிஸ்டரில் அவனுடைய ஐவேஜி சம்பந்தமான விபரங்களை பதிவு செய்து கையெழுதது செய்யவேண்டுமென்பது பாங்கியின் விதி. இந்தப் பதிவுகள் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றாவதென்னவென்றால் கடன் வாங்கினவனுடைய ஐவேஜி, கடன் விபரங்களைப் பதிவுசெய்து வைத்து கடன் வாங்கிக்கொள்ளுகிறவன் கையெழுத்துசெய்யவேண்டும். இரண்டாவது பாகம் என்னவென்றால் "இப்போது பாங்கியில் வாங்கிக்கொள்ளப்போகிற கடன் பைசல் செய்யப்படும்பரியந்தரம் இனிமேல தன்னுடைய சொத்துகளின்பேரில்கடன் வாங்குகிறதில்லை" என்று கடன் வாங்குகிறவன் ஒப்புக்கொண்டு பதிவு செய்துவைத்துக் கையெழுத்து செய்யவேண்டும். திருநல்வேலி ஜில்லாக் கலெக்டரால்நடத்தப்பட்ட வருமானவரி விசாரணையில் அந்த பாங்கியின் ரகசிய ரெஜிஸ்டர் ஆஜர்படுத்தப்பட்டது. இந்த ரெஜிஸ்டரில் செய்யப்பட்டிருக்கும் பதிவுகள் உடன்படிக்கை சூஷாத்துகள் போல காணப்படுகிறபடியால் இந்தப்பதிவுகளுக்கு இந்தியன் ஸ்டாம்பு ஆக்ட் 1 வது ஷெடியூல் 5-வது ஆர்ட்டிகிலின்படி ஸ்டாம்பு ஒட்டவேண்டுமென்று கலெக்டர் அபிப்பிராயப்பட்டு அந்த ரகசிய ரிஜிஸ்டரைப் பிடித்துக்கொண்டார். ரெவினியூ போர்டாரும் கலெகட்டருடைய அபிப்பிராயப்படியே அபிப்பிராயப்பட்டார்கள். ஆயினும் ரகசிய ரெஜிஸ்டர் பதிவுகள் ஒரு உடன்படிக்கையாகுமா என்று சந்தேகமுண்டாகி இந்தக் கேஸ் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு ரெவினியூ போர்டாரால ஸ்டாம்பு ஆக்ட் 50 வதுபிரிவின்படி அனுப்பப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக கவர்ன்மெண்டு பிளீடர் பாரிஸ்டர் மிஸ்டர் ஸி. எவ். நேப்பியர் எதிர் மனுதாருக்காக பாரிஸ்டர் மிஸ்டர் எம். டி தேவதாசும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ரகசிய ரெஜிஸ்டரில் செய்யப்பட்டிருக்கும் பதிவுகள் இந்தியன் ஸடாம்பு ஆக்ட் 1 வது ஷெடியூல் 5 வது ஆர்ட்டிகிலின்படி ஸ்டாம்பு ஒட்டப்பட வேண்டிய உடன்படிக்கை அல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா, ரி, 38 சென். 349. The Secretary to The Commissioner of Salt, Abkari and Separate Revenue vs The South Indian Bank Ltd. I L. R. 38 Mad 349.



ஜட்ஜிகள்.—ஜட்ஜி மிஸ்டர் மில்லர்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.

அப்பீல்கள் நெ. 185 & 186 of 1908.

முத்துசாமி அய்யர்—அப்பீல் வாதி.

vs.

ஸ்ரீலஸ்ரீ மேதநிதி சாமியார் அவர்கள்—அப்பீல் பிரதி வாதி.

லாப் பாயின்ட்:—மடாதிபதியால் பராதீனம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—மதுரை ஜில்லாவிலிருக்கும் ஓடப்பள்ளி முழுபாகமும்மடத்திற்கு சில இனும் நிலங்கள் விடப்பட்டிருந்தன. 1890 ம் வருடத்திற்கு முந்தி யிருந்த மடாதிபதி இந்த நிலங்களில் லவற்றை சாஸ்வதக் குத்தகை 1872 ல் விட்டு விட்டு 1890 ல் இறந்துபோய்விட்டார். இறந்துபோன மடாதிபதிக்குப் பின்பு மடத்திற்கு மடாதிபதியாக வந்தவர் குத்தகை எடுத்துக்கொண்டவர்கள் யாராரிடம் உள் குத்தகைவிட்டார்களோ அவர்களிட மிருந்து குத்தகைப் பணத்தை வாங்கி வந்து தம்முடைய ஜீவதிசை யுள்ள பரியந்தரம் அவர்களைத் தம்முடைய குடிகளாக பாவித்து நடத்திக்கொண்டு வந்தார். இந்தமடாதிபதி 1906ல் இறந்துபோய்விட்டார். இவருக்குப் பின்பு பட்டத்திற்கு வந்த மடாதிபதி 1872 ம் வருஷத்தி லிருந்த மடாதிபதியால் சாஸ்வத குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை உட் குத்தகைக்கு ஒப்புக்கொண்டிருக்கும் பிரதிவாதிகளிட மிருந்தும் குத்தகை விடப்பட்ட நிலங்களின் ஒரு பாகம் லோக்கல் போர்டாருக்குச் செலுத்தப்படவேண்டிய ரோட்செஸ் (Road Cess) பாக்கிக்காக ஏலம்போடப்பட்டபோது அதை ஏலத்தில் வாங்கியிருக்கும் 5 வது பிரதிவாதியிட மிருந்தும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 1908 ல் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். மதுரை சப்கோர்ட்டாரால் பிரதிவாதிகள் பேரில் வாதிக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது. ஆகவே பிரதிவாதிகள் ஐக்கோர்ட்டில் அப்பீல் தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:— 2, 3 அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் ஆர். குப்புசாமி அய்யங்காரும், 4 வது அப்பீல் வாதிக்காக மிஸ்டர் ஸி. வி. அனந்த கிருஷ்ணய்யரும், முதல் அப்பீல் பிரதிவாதிக்காக மெஸர்ஸ் கே. சீனிவாசய்யங்காரும், டி. சுப்பிரமணிய அய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு :—மடாதிபதியால் கொண்டுவரப்பட்டிருக்கும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை. ஆனால் 1902 ம் வருஷம் ரோட் செஸ் பாக்கிக்காக ஏலம் போடப்பட்ட நிலங்கள் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. நிலங்களை சாஸ்வதக் குத்தகைக்கு விடுவது மடாதிபதியின் அதிகாரங்களுககு மிஞ்சின செய்கை.

ஒரு மடாதிபதியால் செய்யப்பட்ட பராதீனம் அவர் ஜீவதிசையிலுள்ள பரியந்தரம் செலாவணியாகக் கூடியது.

ஒரு மடாதிபதி ஜீவதிசைவரையில் அனுபவிக்கக்கூடிய குடியல்ல. (Life Tenant) ஆனால் அனேக காரியங்களில் அப்பேர்ப்பட்ட குடியினுடைய அதிகாரங்கள் அவருக் கிருக்கின்றன.

ஒரு ஹிந்து விதவை எப்படி அவளுடைய விதவைப் பாததிதைக்கு மிஞ்சிச் செய்த பராதீனங்கள் அவளுக்குப் பின்பு அவளுடைய புருஷனுடைய எஸ்டேட்டிற்கு வார்சாக வரும அனந்தர வார்சுகளால் ரத்துசெய்து வைக்கப்படக் கூடியவைகளாகவிருக்கின்றனவோ அதுபோலவே ஒரு மடாதிபதியால் செய்யப்பட்டப்பராதீனம் அவருக்குவார்சாக வரும் மடாதிபதியால் ரத்துசெய்து வைககக்கூடியதென்று தீர்மானிக்கப்பட்டது.

முந்தி யிருந்த மடாதிபதியால் விடப்பட்ட குத்தகைக்கு தனக்குப் பிந்தி வரும் மடாதிபதிகளும் கட்டுப்படும்படியாக குத்தகைவிட்ட மடாதிபதிக்கு பிந்தி வார்சாகப் பட்டத்திற்கு வந்த மடாதிபதி அந்தக் குத்தகையை உறுதிப்படுத்தக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த மடாதிபதி தான் ஜீவதிசையிலுள்ளகாலத்தில் அந்த குத்தகை செலாவணியாகும்படியாகச் செய்யலாம் அல்லது அந்த குத்தகையை ரத்துசெய்துவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

சில பிரத்தியேகமான சந்தர்ப்பங்களைத் தவிர மற்றசந்தர்ப்பஙகளில் ஒரு மடத்தின் ஐவேஜி பராதீனம் செய்யப்படக்கூடியதல்ல; அந்த மடத்தின் வருமானம் மடத்தின் நிர்வாகச் செலவுகளுக் குட்பட்டு மடாதிபதியினுடைய சர்வ சுதந்தர அதிகாரத்தின் கீழ் யிருந்துகொண்டிருக்கிறது. என்று இ. லா. ரி. 27 சென் 435 ல், ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கும் வித்தியா பூரண தீர்த்தசாமி vs. வித்தியாநிதி தீர்த்தசாமி கேஸில் ஜாரி செய்யப்பட்டத் தீர்ப்பைப் பின்பற்றி தீர்மானிக்கப்பட்டது.

இனும் நிலத்தின் குடி ரோட் செஸ் செலுத்தத் தவரிப்போனதை முன்னிட்டு ரெவினியூ அதிகாரிகள் மேற்படி நிலங்களுடைய சொந்தக்காரராகிய மடாதிபதிக்கி நோட்டீஸ் கொடாமல் நிலத்தின்குடிக்கிமட்டிலும் நோட்டீஸ் கொடுத்து ஏலம்போட்டு விற்பனை செய்துவிட்டால் அந்த ஏல விற்பனை அதிகாரமில்லாமல் போடப்பட்ட ஏல நடவடிக்கைகளல்லவென்றும் ஆனால் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் என்றும் அந்த ஏல விற்பனை நடவடிக்கைகள் ரத்து செய்து வைக்கப்படக்கூடியவைகள் என்றும் அவைகளை ரத்துசெய்து வைக்க வியாஜ்ஜியம் கொண்டுவரப்படவேண்டுமானல் ரெவினியூ ரெக்கவரி ஆக்ட் 59-வதுபிரிவிலாவது அல்லது லிமிட்டேஷன் ஆக்ட் இரண்டாவதுஷெடியூல்12-வது ஆர்ட்டிகிலிலாவது சொல்லப்பட்டிருக்கும் காலத்திற்குள் கொண்டுவரப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இ. லா. ரி. 38. சென் 356. Muthusamier vs Sree La Sree Methanithi Swamiar 38 Mad 356.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் பென்சன்
ஜட்ஜி மிஸ்டர் சுந்திரமய்யர்.

இரண்டாவது அப்பீல் நெ. 1372 of 1911.

போடிஎன்கிற லக்ஷமக்கா—அப்பீல் வாதி.

vs.

வெங்கடசாமி நாயுடு—அப்பீல் பிரதிவாதி

லாப்பாயின்ட்:—உயில்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு ஹிந்து தன்னுடைய சொத்துக்களுக்கு உயில் எழுதிவைத்துவிட்டான். இப்படி உயில் எழுதியபிறகு அவனுக்கு ஒரு புத்திரன் பிறந்து உயில் கர்த்தாவிற்கு முந்தி இறந்து போய்விட்டான். இந்த உயில் சட்டத்தின் தாத்பரியப்படி ரத்து செய்யப்பட்ட உயிலாகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:— 1, 3, 4 அப்பீல் வாதிகளுக்காக ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யரும், மிஸ்டர் வி. பாஷியமய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெஸார்ஸ் டி. ஆர். ராமச்சந்திரய்யரும், டி. ஆர். கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38. சென். 369. Bodi alias Lakshmakka vs Venkatrsawmi Naidu. I. L. R. 38 Mad 369.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்.
ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்.

இரண்டாவது அப்பீல் நெ. 62 of 1912.

நாராயணய்யர்வகையரா—அப்பீல் வாதிகள்.

vs.

ராமய்யர் வகையரா—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—கால நிர்ணயச் சட்டம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு ஹிந்து விதவை, தாவாவில் சம்பந்தப்பட்டசொத்துக்களை 1881-லும் 1889 லும் விற்பனை செய்துவிட்டு 1899-ல் இறந்து போய்விட்டாள். அவளுடைய புத்திரி வாதியை 1903-ல் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள். ஸ்வீகாரப் புத்திரன் அவனுடைய ஸ்வீகாரத் தாயாருடைய ஜீவதிசை காலத்திலேயே மேலே சொல்லப்பட்ட விற்பனைகளை ரத்துசெய்துவைக்க திருநெல்வேலி அடிஷனல் டி. மு. க்கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தனர்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இந்த வியாஜ்ஜியத்தில் உண்டாயிருக்கும் பிரஸ்னை என்னவென்ருல் இந்த வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதா அல்லது அல்லவா என்பதே லிமிட்டேஷன் ஆக்ட் 1-வது ஷெடியூலில் வேறெந்த விடத்திலாவது காலாவதிகாலம் குறிப்பிடப்படாதவியாஜ்ஜியங்களுக்கு, வியாஜ்ஜியம்கொண்டுவரும்பாத்திதை உற்பத்தியானதுமுதல் 6 வருடத்திற்குள் வியாஜ்ஜியம்கொண்டுவரப்படவேண்டுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. லிமிட்டேஷன் ஆக்ட் 1வதுசெடியூல் 125-வது ஆர்ட்டிகிலில் ஒருஹிந்துஸ்திரியால்செய்யப்பட்டபராதீனத்தை அவளுடைய ஜீவதிசையிலுள்ள காலத்திலேயே ரத்துசெய்துவைக்க வியாஜ்ஜியம் கொண்டுவருகிறவன் பராதீனம் செய்யப்பட்டதேதியிலிருந்து 12 வருடத்திற்குள்ளாக வியாஜ்ஜியம் கொண்டுவரவேண்டுமென்று சொல்லபபட்டிருக்கிறது. ஆதலால் அந்த வியாஜ்ஜியத்திற்கு காலாவதி தோஷம் 120-வது ஆர்ட்டிகிலின்படி நிரணயிக்கப்படவேண்டும். வாதிக்கு வியாஜ்ஜியமூலம் அவன் ஸ்வீகார புத்திரனாக எடுத்துக்கொள்ளப்பட்ட 1903-ம் வருடத்தில்உற்பத்தியாயிருக்கிறது. ஆதலால் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை. இறந்துபோன விதவையால் இரண்டுதடவை பராதீனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. முதல் தடவையில் 1881-ல் செய்யப்பட்டிருக்கிறது. அப்போது அந்த பராதீனத்திற்கு புத்திரிகள் சம்மதம் கொடுத்திருக்கிறாகள். புத்திரிகளுக்குப் பிறகு எஸ்டேட்டை அடைய பாத்தியபபட்ட அனந்தரவாரசு அந்த கிரைய ஆதரவில் சாக்ஷிக் கையெழுத்து செய்திருக்கிறான். இரண்டாவது தடவைசெய்யப்பட்ட விற்பனைக்கும் புத்திரிகள் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள் அப்போதிருந்த அனந்தரவார்சும் அந்த பராதீனத்தை ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகையால் வாதி அனந்தரவா[illegible]த்தை பாராட்டி விதவையால் செய்யப்பட்ட பராதீனங்களை ஆக்ஷேபிக்கும்பாத்திதையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறான். இந்தவியாஜ்ஜியத்திற்குலிமிட்டேஷன் ஆக்ட் 1-வது ஷெடியூல் 125 வது ஆர்டிகலைப் பொருத்தவேண்டுமானல் பராதீனம்செய்தவள் ஜீவதிசையிலிருக்கும்போதே வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் டி. ஆர். ராமச்சந்திரய்யரும் அப்பீல்பிரதிவாதிக்காக மிஸ்டர் சி. வி. அனந்தகிருஷ்ண அய்யரும் ஆஜரானார்கள். இ. லா. ரி. 38 சென் 396, Narayana Iyer vs. Rama Iyer I. L. R. 38. Mad 396.

---

Z Bumnal
N0618
161193